


15 FEB 19

January 1919. Registered No. M. 163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XX ஜனுவரி மீ 1919

## நவவருட வந்தனம்

1919-ம் வருஷ ஆரம்பத்தில் இப்பத்திரிகையை வாசிக்கும் நண்பர் யாவருக்கும் நவவருட வந்தனம் கூறுகிறோம். இது இப்பத்திரிகையின் 20-வது வருடம். இப்பத்திரிகையின் ஆரம்ப சரித்திரம் வாசிப்போருக்கு எழுப்புதலுண்டாகக்கூடும் என்று நம்பி எழுதுகிறோம். ஏறக்குறைய 18 வருஷங்களுக்கு முன் ஆவிக்குரிய உன்னத சத்தியங்கள் இங்கிலாந்து தேசத்திலிருந்து கெஸ்விக் கன்வென்ஷனுக்குச் சம்பந்தப்பட்ட தேவஊழியக்காரரில் சிலருடைய விசேஷித்த மிஷன் பிரசங்கங்களாலும் விசேஷமாய் 'விசுவாச ஜீவியம்' (Life of Faith) என்னும் பத்திரிகையின் மூலமாயும் திருநெல்வேலிக்கு வந்தெட்டினது. ரக்ஷணிய சேனையாரின் பலத்த வேலைகளும் இவ்விடத்தில் ஆரம்பித்து காலேஜில் படித்த சில வாலிபருக்குள் ஜீவியமாறுதல் உண்டாயிற்று. சீர்மைதேசத்தில்போலவே தமிழ்நாட்டிலும் கன்வென்ஷன் கூட்டங்கள் வைக்கவேண்டுமென்ற வாஞ்சை சில தேவஊழியருக்குள் எழும்பிற்று. ஆகவே, வாலிபத்தில் குணப்பட்டு, ஆண்டவருக்கென்று ஊழியஞ்செய்யத் தங்களை ஒப்புக்கொடுத்து, திருநெல்வேலி சபை ஆவிக்குரிய விஷயத்தில் எழும்பிப் பிரகாசிக்கவேண்டுமென்று வாஞ்சித்துக்கொண்டிருந்த சகோதரர் சிலர் சேர்ந்து கிறிஸ்தவ சகோதர ஐக்யக் கூட்டம் ஒன்று ஏற்படுத்தினார்கள். அக்கூட்டத்தாருடைய விசேஷித்த முயற்சியால் இப்பத்திரிகையின் முதலாவது பிரசுரம் 1899-ம் வருஷம் ஏப்ரல் மாசம் ஆரம்பித்தது. தேவனுடைய அளவில்லாத தயவினால் இப்பத்திரிகை இதுவரைக்கும் தடைப்படாது நடந்துவரக் கிருபையளித்த பரமபிதாவுக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இடையில் பல காரணங்களால், விசேஷமாய்ப் பணக்கஷ்டத்தால், பத்திரிகை

நின்றுபோகக்கூடியதாயிருந்தாலும், அவைகளிலெல்லாம் ஆண்டவர் துணைவராயிருந்து இது இடையருது நடந்துவரக் கிருபையளித்திருக்கிருர். அவருக்கே ஸ்தோத்திரம். மேலும் பத்திரிகையை வாங்கி வாசிக்கும் நண்பரில் அநேகர் அதிக ஆவலோடும் வாஞ்சையோடும் வாசித்துவருகிருர்களென்றறிந்து அவர்களுக்கும் நன்றி சொல்லுகிறேம். ஒரு காரியத்தைமாத்திரம் நண்பர் மன்னிக்கும்படி கேட்கிறேம். பத்திரிகை ஒழுங்காய்த் தவருமல் மாசத்தின் ஆரம்பத்திலேயே அனுப்பத் தவறிப்போன குற்றத்தை மன்னிக்கக் கேட்கிறேம். தேவனுடைய கிருபையினுல் இப்பத்திரிகை ஒழுங்காய் நடைபெற்றுவரவும், நின்றுபோகக் காரணமாய் இருக்கும் பணக்கஷ்டம், முதலியவைகள் நீங்கவும், வாசிக்கிறவர்கள் யாவரும் தேவ ஆவியின் ஒத்தாசையினுல் இதன்மூலமாய் அனுப்பப்படும் செய்திகளைக் கவனத்தோடு வாசித்துப் பிரயோஜனமடையவும் வேண்டுமென்று ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

---

162002

## 'அதற்குப் பின்செல்லுங்கள்' யோசுவா 3. 3.

## நவவருடச் செய்தி

இஸ்ரவேல் ஜனங்கள் ஓர் புது தேசத்தில் குடியேறப்போகிருர்கள். தேவன் ஆணையிட்டுக் கொடுத்ததும் பாலும் தேனும் ஓடுகிறதுமான கானுன் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ள ஆயத்தமாயிருக்கிருர்கள். ஆனுலும் அந்தத் தேசத்தில் அரணுன பட்டணங்கள் உண்டு. நெடியரான அநேக ராட்சதர்களுமுண்டு. பற்பல வருத்தங்களும் சங்கடங்களும் உண்டு. தங்கள் சுயபெலனை நம்பித் துணிந்துபோவார்களானுல் மோசம் வரும். இடையராகிய இவர்கள் கானுன் தேசத்து வீரர்களை ஜெயிப்பது லேசான காரியமா? ஆகையால் யோர்தான் நதியின் கரையில் பாளையம் இறங்கி, மூன்று நாள் அங்கே தங்கி கர்த்தருடைய உத்தரவுக்குக் காத்திருக்கிருர்கள். அப்புறம் அவர்களுக்குத் தெளிவான கட்டளை பிறந்தது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கண்டு அதற்குப் பின்சென்று போகவேண்டுமாம். வழிகாட்டி அதுவே. நிச்சய அடையாளமும் அதுவே. முன்னணியும் அதுவே. பெலனும் வல்லமையும் அதுவே. வேறே ஒன்றும் செய்யவேண்டாம். அந்த உடன்படிக்கைப் பெட்டியை நோக்கிப்பார்த்து அதற்குப் பின்செல்லவேண்டும். மற்றதையெல்லாம் தேவன் பார்த்துக்கொள்வார். கட்டளையிடுவார். உடன்படிக்கைப் பெட்டியானது கர்த்தருடைய மகிமைக்கும் கிருபைக்கும் பிரசன்னத்துக்கும் அடையாளம். அதின்மீதில் கிருபாசனம் வைக்கப்பட்டிருந்தது. அங்கே பாவநிவாரண நாளிலே ரத்தம் தெளிக்கப்படும். அங்கே கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரிக்கும். அங்கே ஆண்டவருடைய மகிமை அக்கினி ஸ்தம்பம்போல் வந்து நிழலிடும். அங்கே

SL
[illegible handwriting]



தேவன் இறங்கி மனிதனுக்குத் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவார். ஆகையால் அந்தப் பெட்டியினுலே கர்த்தருடைய கிருபையும் வல்லமையும் பிரசன்னமும் இஸ்ரவேலருக்கு வெளிப்பட்டது என்று காண்கிறேம். வேறே ஒன்றுக்கும் கவலைப்படாமல் அதற்குப் பின்சென்று போகவேண்டும். அப்படியே பின்சென்று போனுர்கள். வழிநடத்தப்பட்டார்கள்- ஜெயம் பெற்றுர்கள். அந்தத் தேசத்தைக் கட்டி ஆண்டார்கள். அவர்களுடைய காரியமெல்லாம் க்ஷேமமாயும் அனுகூலமாயும் முடிந்தது.

என் பிரிய சகோதரரே, நம்முடைய உடன்படிக்கைப்பெட்டி கிறிஸ்துநாதரே. அவர் மூலமாய்த் தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிருர். அவர் மூலமாய் நம்மோடு பேசுகிருர். அவருடைய ரத்தத்தினுலே பாவப் பிராயச்சித்தம் செய்திருக்கிருர். அவராலே நம்முடைய நடுவில் பிரசன்னம் ஆகிருர். கர்த்தருடைய மகிமை அவரே, வல்லமை அவரே, கிருபை அவரே. உடன்படிக்கைப்பெட்டி அவரே, கிருபாசனம் அவரே. அக்கினிஸ்தம்பம் அவரே. நமக்கு அவசியமானவர் அவரே. இதோ, இந்தப் புதுவருஷத்தில் பிரவேசிக்கிருயா? போகவேண்டிய இடங்கள் நமக்குத் தெரியாது. நேரிடக்கூடிய வருத்தங்கள் தெரியாது. சம்பவிக்கப்போகிற காரியங்கள் தெரியாது. ஆனுலும் ஆண்டவருடைய உத்தரவு இன்றைக்கு நமக்குக் கிடைக்கிறது என்னவென்றுல், **'அவருக்குப் பின்செல்லுங்கள்'**. தனிமையாய்ப் போகாதேயுங்கள். சுய இஷ்டப்படி நடவாதிருங்கள். இயேசுவை நோக்கி, இயேசுவை நம்பி, அவருக்குப் பின்செல்லுங்கள். இந்த விசுவாச ஜீவியத்தின் சம்பந்தமாக 2 ஆயத்தங்களும் 4 ஆசீர்வாதங்களும் உண்டு.

**I. இரண்டு ஆயத்தங்கள்.** (1) பயபக்தியோடு கீழ்ப்படியவேண்டும் (வ. 4). தேவன் வழிநடத்தவேண்டுமானுல் அவர் முன்னுலே போகவும் நாம் பின்னுலே வரவும் சம்மதிக்கவேண்டும். 'உங்களுக்கும் அதற்கும் இடையிலே .... இடம் இருக்கவேண்டும்'. தேவன் நடத்த நாம் இடம் கொடுக்கவேண்டும். தேவன் மகா பரிசுத்தமுள்ளவர். அவருக்குப் பின்செல்லுகிறவர்கள் எல்லாரும் பக்தி விநயத்தோடும் கீழ்ப்படிதலோடும் பின்பற்றவேண்டும். இல்லாவிட்டால் வழிநடத்தவே மாட்டார். இஸ்ரவேல் ஜனங்கள் கானுன் தேசத்தில் பிரவேசிக்கும்போது அவர்களுக்கும் அந்தப் பெட்டிக்கும் இடையில் 5 பர்லாங் தூரம் இருந்தது. அதின் கருத்து என்னவென்றுல் அவர்கள் தேவனேடு ஐக்யப்படாமல் வெகுதூரத்தில் மாத்திரம் பின்செல்லவேண்டும் என்றல்ல. பயபக்தியோடு கர்த்தருடைய நடத்துதலை நன்றுய்க் கண்டறிந்து வழிதப்பிப் போகாமலும் சந்தேகமில்லாமலும் அவர் காட்டும் வழியிலெல்லாம் நடக்கவேண்டும் என்பதே. சகோதரரே, தேவன் நம்மை நடத்துகிறதற்கு நாம் இடம் கொடுக்கவேண்டும்.

அவருடைய சித்தம் நமக்கு நன்றாய்த் தெரியத்தக்கதாக, நாம் எந்நேரமும் அவரைப் பார்த்து அவர் முன்செல்லக் கண்டு இவ்விதமாகப் பின்பற்றவேண்டும். அநேகம்பேர் இப்படிச் செய்கிறதேயில்லை. அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள்; வழியைத் தெரிந்துகொள்கிறார்கள், தங்கள் மனம்போல நடந்துபோகிறார்கள். அப்புறம் சங்கடமுண்டாகும்போது மாத்திரம் ஜெபம் பண்ணி ஆண்டவருடைய ஆலோசனையைக் கேட்பார்கள். 'தப்பிதம்'

**திருஷ்டாந்தம்.** வாலிபன் ஒருவன் மலையில் ஏறினான். அம்மலையின் சிகரத்தில் பனிக்கட்டி மிகுதியாயிருந்தது. செங்குத்தாயிருந்ததால் மோசமும் அதிகம். ஓர் வழிகாட்டிக்குப் பின்சென்று போனான். உச்சிக்குச் சமீபமாய் வந்தஉடனே வழிகாட்டியைக் கீழே நிறுத்தி தான் முந்தி உச்சிக்குப் போகவேண்டுமென்று பெருமைகொண்டு வழிகாட்டிக்கு முன் ஓடிப்போனான். உச்சியில் போய் நின்றான். திடீரென்று கால் தவறி பெரிய பாதாளத்திலே விழுந்து சின்னாபின்னமானான். பார்த்தீர்களா? தேவனுடைய சமுகமில்லாமல் நாம் ஒரு நிமிஷமாவது எந்த இடத்திற்கும் போவது மோசமான காரியம். கலியாணத்துக்கு நாமே ஒழுங்குசெய்து, அப்புறம் தேவனிடம் ஆசீர்வாதம் பெற முயலுவது தவறுதல். பாவத்தைப் பிடித்துக்கொண்டு மழை பெய்யவேண்டும் என்று ஜெபிப்பது தேவதூஷணம். பின்செல்ல ஆயத்தமாயிருக்கிறீர்களா? எந்த இடத்துக்காகிலும் என்ன வந்தாலும்?

2. **பரிசுத்தத்தோடு பின்பற்றவேண்டும்.** தேவன் வழிநடத்தவேண்டும். கர்த்தர் கிரியை செய்யவேண்டும். அவர் அற்புதங்களைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். நாம் விரும்புவதிலும் கேட்பதிலும் அதிகமாய்ப் பலத்த காரியங்களைச் செய்யக் காத்திருக்கிறார். ஆனாலும் ஓர் நிபந்தனை உண்டு. உங்களைப் **பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்.** இஸ்ரவேலரே, 'கர்த்தருடைய ஜனங்களே' உங்கள் நடுவிலே அற்புதங்கள் நடக்கவேண்டுமோ? உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். எரிகோ பட்டணத்து மதில்கள் விழவேண்டுமோ? உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். நீங்கள் கடந்துபோக யோர்தான் நதியின் தண்ணீர் குவியலாய் நிற்கவேண்டுமோ? உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். நீங்கள் வெற்றி சிறந்து கெம்பீர கோலமாக விளங்கவேண்டுமோ? உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். பரிசுத்தமில்லை என்றால் அற்புதமுமில்லை, ஜெயமும் இல்லை, ஆசீர்வாதமும் இல்லை. தேவனுடைய பலத்த கிரியைகளைத் தடுக்கிறது என்ன? நம்முடைய அசுத்தங்களே.

**திருஷ்டாந்தம்.** புகைவண்டி எத்தனை விரைவாய் ஓடும்? அதின் சக்கரங்களுக்கு எண்ணெய் விடவேண்டும். இல்லாவிட்டால் அதிக சூடு உண்டாகி தீப்பற்றி எரியும். ஒருகாலத்தில் புகைவண்டி ஓடிக்கொண்டிருக்கும்



போது, சக்கரத்தில் எண்ணெயிருக்கிறதென்று கண்டு அநேக ஈக்கள் அங்கேவந்து மொய்த்தது. எண்ணெய் எல்லாவற்றையும் தின்றுவிட்டது. சக்கரங்களில் சூடுண்டாகி தீப்பற்றி எரிந்தது. அதினாலே அந்த வண்டித் தொடரை எல்லாம் நிறுத்தவேண்டியதிருந்தது. என்? அதில் வல்லமையில்லை. ஈக்கள் மொய்த்து மோசம் செய்ததினாலே அந்த நீராவியில் பிரயோஜனமில்லாமல்போயிற்று.

தேவனுக்கு வல்லமையில்லையா? பலத்த காரியங்களைச் செய்யவும், மோட்ச பாதையில் நம்மை நடத்தவும் சக்தி இல்லையா? உண்டு. ஆகிலும் அநேகருடைய இருதயங்களில் பரிசுத்த ஆவியின் கிருபையாகிய எண்ணெயைக் கெடுத்துப்போட பாவ ஈக்கள் மொய்த்துக்கொண்டே வருகிறது. உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்.

II. **நாலு ஆசீர்வாதங்கள்.** கர்த்தருடைய ஜனங்கள் உடன்படிக்கைப் பெட்டிக்குப் பின்சென்று போகவே, அவர்களுக்கு 4 பெரிய நன்மைகள் கிடைத்தன.

1. வழிகாட்டுவார். இதற்குமுன், நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோகவில்லை. வழி தெரியவேண்டுமோ? அவருக்குப் பின்செல்லுங்கள். இயேசுவைப் பார்த்து நடவுங்கள். வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணின இஸ்ரவேலர், மேக அக்கினி ஸ்தம்பங்களைப் பார்த்துப் பின்சென்றதுபோலும், கானான் தேசத்தில் பிரவேசிக்கையில் உடன்படிக்கைப் பெட்டியைப் பார்த்துப் பின்சென்றதுபோலும், அது தங்கும்போது தங்கினார்கள், போகும்போது போகிறார்கள்.

2. **விசுவாசத்தை ஸ்திரப்படுத்துவார்.** ஜீவனுள்ள தேவன் உங்கள் நடுவேயிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்துகொள்வதற்கு அடையாளம். இது சரியான பாதையோ? நம்முடைய காரியம் சித்திபெறுமோ? இந்த நல்ல சுதந்தரம் நமக்குச் சொந்தமாகுமோ என்று சந்தேகிக்கும்போதெல்லாம் உடன்படிக்கைப்பெட்டியைப் பார்த்தவுடனே அந்தச் சந்தேகமெல்லாம் நிவிர்த்தியாகும். அதே திவ்ய அடையாளம். சகோதரனே, நீ போகிற இடமெல்லாம் இந்த அடையாளம் உண்டா?

3. **வெற்றி சிறக்கப்பண்ணுவார்.** கானானியரையும் ஏத்தியர், எமோரியர் முதலிய ஜாதிகளை உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடுவார் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்வதற்கு அடையாளம். 'நீங்கள் அவர்களைத் துரத்திவிடுவீர்கள்' என்றில்லாமல் அவர் துரத்திவிடுவார் என்றிருக்கிறது.

4. **வருத்தங்களையெல்லாம் நீக்கிவிடுவார்.** வா. 15–17. யோர்தான் நதி, பெருவெள்ளம் கரைபுரண்டுபோம். பாலமுமில்லை, தோணி

களுமில்லை, எப்படிக் கடந்துபோவது? உடன்படிக்கைப்பெட்டி போனதினாலே தண்ணீர் பிரிந்தது. 'தண்ணீரற்ற உலர்ந்த தரை வழியாய்க் கடந்துபோனார்கள்'. தண்ணீர் தரையாயிற்று.

Rev. T. Walker.

---

## தேவ சத்தம்

தேவன் அரூபியாயிருந்தபோதிலும், மனுஷர் நம்மோடு பேசுகிற பிரகாரமாகவே, அவர் நம்மோடு ஒவ்வொரு நிமிஷமும் பேசுகிறார். அதை நாம் அலட்சியம் செய்கிறபடியால், நாம் தேவ சத்தத்தைக் கேட்கிறதில்லை.

**முதலாவது:** அவர் நம்முடைய இருதயங்களில் பேசுகிறார். 'ஆவியானவர்............சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'. நாம் ஒரு பாவத்தைச்செய்யப்போகும்பொழுது, பரிசுத்த ஆவியானவர்: 'அப்படிச் செய்யாதே, அது பாவம், நரகத்திற்கு உன்னை ஆளாக்காதே' என்று கண்டிக்கிறார். சில சமயங்களில், தேவ ஊழியம் செய்யப்போனால், 'அப்படிச் செய், அப்பொழுது ஆசீர்வாதம் பெறுவாய்' என்று வாக்களிக்கிறார். 'அப்படிச் செய்' என்றும், 'இப்படிச் செய்யாதே' என்றும்; 'இப்படிச் செய' என்றும், 'அப்படிச் செய்யாதே' என்றும், தமது உத்தியோக முறையாகவும், பலாத்காரமாகவும் நம்மோடு பேசுகிறார். அவர் பேசும்பொழுது, நாம் அவருக்கு இணங்கினால் ரக்ஷிக்கப்படுவோம். அவருக்குச் செவிகொடாவிட்டால், 'மகனே அதையும் போய்ப்பார்' என்று விட்டுவிட்டு, எப்பொழுது என் மகன் திரும்பிவருவான் என்று வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார். ஒரு திருடன், எப்பொழுது இருட்டாகும், எப்பொழுது கன்னக்கோல் கையில் எடுக்கலாம் என்று காத்துக்கொண்டிருக்கிறான். பொழுதடைகிறது, கன்னக்கோலையும் கையிலெடுக்கிறான். அந்தச் சமயத்திலும் தேவன் அவனை உணர்த்தாமலிருந்ததில்லை. களவு செய்வது பாவம் என்று அவனுக்குத் தெரியும். ஆனாலும், தன் பிழைப்புக்காக அப்படிச் செய்கிறான். அப்பொழுதுதான், தேவ சத்தம் தன் காதில் விழாதபடி தன் இருகரங்களாலும், தன் செவிகளை அடைத்துக் கொள்ளுகிறவனாயிருக்கிறான். இவ்வண்ணமாகவே, நம்மில் எத்தனைபேர் நமது செவிகளை அடைத்துக்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். தேவ சத்தத்தை அசட்டைசெய்கிறோமா? 'கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்'.

**இரண்டாவது:** தேவன் தமது பரி. ஆகமங்களின் மூலமாக நம்மோடு பேசுகிறார். வேதாகமம் மனிதருடைய சுயமாய் எழுதப்பட்டவைகளல்ல. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டபடியே எழுதினார்கள். இந்த தேவ சத்



தத்தையும் அசட்டைபண்ணுகிற மூன்று வகுப்பார்கள் நம்மிடத்திலேயும் இருக்கிறார்கள்.

**முதலாவது வகுப்பார்:** வேதாகமம் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல. விதத்திற்கொன்று. விலையுயர்ந்தது. தங்கமுலாம் பூசியது. தோல் பயிண்டு செய்யப்பட்டு, தங்களுடைய பெயர் பூ எழுத்துக்களால் வெகு அழகாக எழுதப்பட்டுள்ளது. வெளியே வைத்தால் அழுக்காய்ப்போகும். ஆகையால் பெட்டிக்குள்வைத்துப் பூட்டிவிடுகிறார்கள். வைத்தது தான் தெரியும். என்றைக்காவது, யாராவது வந்து, 'ஐயா, உங்களிடம் வேதாகமம் இருக்கிறதா?' என்றால், 'ஆகா இருக்கிற'தென்று சொல்லி, கொத்துச் சாவியைத்தேடி, பெட்டியைத் திறந்து, வெகு அழகாகக் கொண்டுவருகிறார்கள். அவசியம் முடிந்தவுடன், வேதாகமம் பெட்டிக்குள் பூட்டப்படுகிறது. இவ்விதமாக, தேவ சத்தத்தை பெட்டிக்குள்வைத்துப் பூட்டி மூச்சுப்பிடிக்க வைக்கிறார்கள்.

**இரண்டாவது வகுப்பார்:** வேதாகமம் இருக்கிறது. எவ்விடத்திலிருக்கிறதோ தெரியாது. புஸ்தகங்களுக் கிடையிலாவது, மூலைமுடக்குகளுக் கிடையிலாவது, தேடுவாரற்றுக் கிடக்கும். ஓய்வுநாளன்று தேடுவார்கள். நிறையத் தூசுபிடித்து, எண்ணெயும் தண்ணீரும்பட்டு வெகு கேவலமான கோலத்திலிருக்கும். இந்த வகுப்பார் முதல் வகுப்பாரைப் பார்க்கிலும் மகா பரிதாபமானவர்கள். தேவசத்தத்தைத் தேடுகிறார்கள்.

**மூன்றாவது வகுப்பார்:** வேதாகமத்தைத் தொட பயம். வாசிக்க பயம். ஏன்? பாவத்துக்கு தங்களை ஒப்புக்கொடுத்து ஜீவிக்கிறபடியால், எங்கே தேவ சத்தத்திற்கு செவிகொடுத்தால், பாவத்தையும், அவைகளின் இன்பங்களையும் விட்டுவிட்டு, தேவ கற்பனைகளைக் கைக்கொள்ளச் சொல்லுகிறதோ என்றும் பயம் அதிகமாகிறது. அல்லது பாவங்களுக்காக நம்மை சபிக்கிறதோ என்கிற அச்சம் மேலிடுகிறது. சகலமும் ஒன்றுசேர்ந்து காதை அடைத்துக்கொள்ளப் போதிக்கிறது. ஆம் சாபந்தான். தேவ கோபாக்கினைதான். யாருக்கு? தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கே. தேவ சத்தத்திற்கு செவிகொடாமல், தங்கள் மாம்ச இச்சைகளின்படியே நடக்க தங்களை ஒப்புக்கொடுத்தவர்களுக்கே.

'விபசாரம் . . . . . . . களியாட்டுகள் முதலான இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லை' (கலாத்தியர் 5: 19—21) என்று, உலகத்துக்கும், உலகப்பொருளுக்கும் தன்னை ஒப்புக்கொடுத்துவிட்டவன் வாசிக்கும்பொழுது, நரகம் தனக்காகவே திறந்துவைக்கப்பட்டிருக்கிறதாக அறிகிறான். 'ஆகா வேதாகமத்தைத் திறக்கும்பொழுதே, நரகம் எனக்காகத்தான் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறதாக சொல்லுகிறதே, இன்னும் வாசித்தால் என்னென்ன பயங்கரங்

கள் இருக்கிறதோ? என்று பயந்து, வேதாகமத்தை மூடுகிறான். ஏன்? தன் பாவ சுபாவத்தையும், அதின் சிற்றின்பங்களையும் விடுகிறதற்கு மனதில்லை. உடனே, தூர்க்குணத்தைவிட்டு தேவனை நோக்கினால், மோக்ஷம் இவனுக் காகத் திறந்துவைக்கப்பட்டிருக்காதோ? 'கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'.

**மூன்றாவது:** நம்முடைய வாழ்வில் நம்மோடு தேவன் பேசுகிறார். ஒரு வன் ஐசுவரியவானாயிருக்கிறான். பிள்ளைகளுக்குக் குறைவில்லை. வீடு, வாசல், சொத்து, சுகமிருக்கிறது. வேலைசெய்து சாப்பிடவேண்டியதில்லை. தன் சம்பத்திலிருந்து காலத்தை அதிசம்பிரமமாகக் கழிக்கிறான். அப்பொழுது தேவன்: 'மகனே, இவைகள் யாவும் என்னுடையதே, இவைகளை நான் உனக்குக் கொடுத்தேன், என்னைத் தேடு. பரலோகத்திலேயும், ஐசுவரியவானாகு' என்கிறார். ஆனாலோ, அவன்: 'இவைகள் என் ஆஸ்தி, நான் சம்பாதித்தவைகள், எனக்கென்ன குறைவு, நான் அதிர்ஷ்டசாலி' என்கிறான். 'மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியில் எடுத்துக்கொள்ளப்படும்; அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்'. (லூக். 12: 20). ஐசுவரியவானிடத்தில் மாத்திரமல்ல, ஏழையினிடத்திலும் பேசுகிறார். அவன் இயல்பாகவே ஏழை. ஆனால், அவனும் சந்தோஷத்தோடிருக்கவும், சந்தோஷம் கொண்டாடவும் சமயங்களும் உண்டு. தேவன் நம் ஒவ்வொருவரிடத்திலும் வந்து பேசும் நற்சமயங்களை இழந்துவிடாமல் ஜாக்கிரதையாக இருப்போமாக. 'கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'.

**நாலாவது:** துன்பங்களின் மூலமாக தேவன் நம்மோடு பேசுகிறார். ஒரு குடும்பத்தில் திடீரென்று யாராவதொருவருக்கு சுகவீனம் உண்டாகிறது. அநேக வைத்தியர்களுக்கு ஆள்களை அனுப்புகிறார்கள். பொருள்களைச் செலவழிக்கிறார்கள். ஒரு நிமிஷமாகிலும் ஒருவரும் அமைதலாயிருப்பதில்லை. சிலர் புலம்புவார்கள். அப்பொழுது தேவன், 'பிள்ளைகளே, என்னை நோக்கிக் கூப்பிடுங்கள், உதவிசெய்ய நான் காத்துநிற்கிறேன், என்னைத் தேடும்வரைக்கும், நான் உதவிசெய்யேன்' என்று நிச்சயமாகவே பேசுகிறார். தேவனுக்குத் தன்னை முற்றாய் ஒப்புக்கொடுத்தவன் பதறான். தேவனிடத்தில் மன்றாடுகிறான். அப்படியே உயிர்ச்சேதம் நேரிட்டாலும், சந்தோஷத்தோடு 'தேவன் கொடுத்தார், தேவன் எடுத்தார், தேவனுக்கு ஸ்தோத்திரம்' என்று தேவனைப் போற்றுகிறான். இவ்விதமாக துன்பங்களின் மூலமாகவும் தேவன் பேசுகிறார். 'கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'.

**ஐந்தாவது:** தற்காலத்தில் தேவன் நம்மோடு பேசுகிற ஒரு விசேஷித்த சம்பவம் உண்டு. இந்தப் பெரிய யுத்தத்தைக் கவனியுங்கள். இதின் மூலமாக அவர் நம்மோடு பேசவில்லையா? நமதருமை ரக்ஷகர் இதோ பெருமூச்சோடு நிற்கிறார். ஏன்? 'இனி காலம் செல்லாது, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கேற்றவைகளை நீ அறிந்தாயானால் நலமாயிருக்கும்'. (லூக். 19: 42). இதுதான் கடைசியான தேவசத்தம். 'மகனே, மகளே, இனி காலம் செல்லாது, இதோ வாசற்படியில் நிற்கிறேன். எல்லா தீர்க்கதரிசனங்களும் நிறைவேறிவிட்டன. எக்காளத் தொனியோடே நான் திரும்பவும் மேகத்தில் வந்து, உங்களைச் சேர்த்து நியாயத்தீர்ப்பு கொடுப்பதுதான் கடைசி தீர்க்கதரிசனம். கிருபையின் காலம் மாறி, தேவ கோபாக்கினை பற்றியெரியும் காலத்தின் ஓரத்திலிருக்கிறாய்' என்று வெகு பலத்தோடும், உணர்வோடும் பேசுகிறார். தாமதிக்கிறார் என்று எண்ண இடமில்லை. எவ்வளவு தாமதிக்கிறாரோ அவ்வளவுக்கு தமது கிருபையை விளங்கப்பண்ணுகிறார். மனதைக் கடினப்படுத்தின பார்வோன் அழிவைக்கண்டான். நாமும் அந்த நிலைமைக்கு வராதபடி எச்சரிக்கையாய் நடந்துகொள்ளுவோமாக.



## புதுவருஷக் கன்றுக்குட்டி

'ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது'. இந்தக்காலம் நமக்கு ஒரு விசேஷமான காலம். நாம் வருஷத்திற்கொருதரம் புதுவருஷத்தை கொண்டாடிவருகிறவர்களாயிருந்தாலும், இந்தப் புதுவருஷமானது நமக்கு ஒரு பெரிய சந்தோஷத்தையும் மனமகிழ்ச்சியையும் கொடுக்கக்கூடிய ஒரு விசேஷித்த வருஷமாயிருக்கிறது. மூன்றுவிதமாக நாம் இந்த வருஷத்தைக் கொண்டாட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

(1) நாம் வருஷாவருஷம் கொண்டாடிவருகிறதுபோல, தேவன் நம்மை இந்தப் புதுவருஷத்தையும் காணச்செய்ததற்காக ஒரு சந்தோஷத்தையும்;

(2) இந்த உலகம் முழுவதிலும் உண்டாயிருக்கிற இந்த பயங்கரமான காய்ச்சல் என்னும் கொள்ளைநோயிலிருந்து ஆச்சரியப்படத்தக்க விதமாக நம்மைக் காப்பாற்றினதற்காக மறு சந்தோஷத்தையும்;

(3) கடந்த நாலு வருஷங்களாக, கொடிய பஞ்சத்தையும், பயங்கரத்தையும், சோர்பையும், திகிலையும் உண்டாக்கின இந்த பயங்கரமான யுத்தம் ஒரு முடிவுக்கு வந்ததுமாத்திரமல்ல, தேவன் நமக்கு ஜெயத்தைக் கட்டளையிட்டிருப்பதற்காக இன்னொரு சந்தோஷத்தையும் கொண்டாடப்போகிறோம்.

ஆம், சந்தோஷந்தான்! பெரிய சந்தோஷந்தான்!! ஆனால், நாம் இந்த சந்தோஷ தினத்தை எப்படிக்கொண்டாடுவதென்பதைப்பற்றி சற்று தியானிப்போம்.

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் தமது பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும் ஆச்சரியப்படத்தக்க விதமாக எகிப்தின் அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படப்பண்ணினார். பகலில் மேகஸ்தம்பத்தினாலும, இரவில் அக்கினிஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார். இவர்களை எதிர்த்து சண்டை செய்த ராஜாக்களையும் அழித்தார். இவர்களைத் தம்முடைய ஜனமாகத் தெரிந்துகொண்டார். (யாத். 32: 1—10). இதோ, மோசே பத்துக்கற்பனைகளை வாங்கிவர சீனாய் மலைக்கு ஏறி தேவனிடத்தில்ச் சென்றபொழுது, இந்த இஸ்ரவேலர் கன்றுக்குட்டியை தங்களுக்கு உண்டாக்கி, எகிப்தின் அடிமைத்தன வீட்டிலிருந்து மீட்டுவந்த தெய்வம் இதுவே என்றார்கள். பலிகள் செலுத்தினார்கள். புசித்துக் குடித்தார்கள். விளையாடவும் எழுந்தார்கள்.

இஸ்ரவேலர் செய்தது ஒரு நல்ல நோக்கமாகவேயிருந்தது. அதாவது: தங்களை வழிநடத்திக்கொண்டு வந்தவர் ஒருவர் இருக்கிறார் என்றும்; இன்னும் தங்களை வழிநடத்தக்கொள்ள தங்களுக்குத்திராணி போதாதென்றும், அப்படி தங்களை வழிநடத்துவதற்கு ஒருவர் வேணுமென்பதாகவும் ஆரம்பித்தார்கள். நோக்கம் நல்லதாகவேயிருந்தது. இதுவரைக்கும் வழிநடத்தினவர் தேவன் ஒருவரே! இன்னமும் வழிநடத்துகிறவரும் அவரே! ஆனால், நோக்கம் நல்லதாயிருந்தபோதிலும், செய்கை கூடாததாயிருந்தது. தங்களை இதுவரை வழிநடத்தினவரை மறந்தார்கள். அவருக்குப் பதிலாக பொன்னினால் கன்றுக்குட்டியை உண்டாக்கினார்கள்.

சகோதரரே! நம்மில் அநேகர் மூன்று விசேஷமான காரியங்களுக்காக ஜெபித்துவந்திருக்கிறோம். அதாவது: (1) நம்மை சுகபத்திரமாய்க் காப்பாற்றவேண்டுமென்றும்; (2) இந்த விஷக்காய்ச்சலிலிருந்து தற்காக்கவேண்டுமென்றும்; (3) யுத்தம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்றும் ஜெபித்துவந்தோம். அப்படியே பெற்றுமிருக்கிறோம். மற்ற அநேக ஆசீர்வாதங்களோடும் இந்த மூன்று ஆசீர்வாதங்களையும் பெற்ற என் சகோதரரே!

பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட நாம், இஸ்ரவேலரைப்போல நமக்கு கன்றுக்குட்டியை உண்டாக்கிக்கொண்டோமோ? நாம் நமது மனைவிமக்களுடைய ஆபரணங்களை வாங்கி பொன் கன்றுக்குட்டி வார்ப்பிக்கிறதுமில்லை, அவைகளை வணங்குகிறதுமில்லை, அல்லது பலிகளிடுகிறதுமில்லை. ஆனால்:

**(1) உல்லாசமாய் பொழுதுபோக்குவதற்காக குடிவெறி உபயோகிப்பது ஒரு கன்றுக்குட்டியாகாதோ?** கன்றுக்குட்டியை வணங்குகிறதற்காகவா, தேவன் இஸ்ரவேலரை எகிப்தின் சிறையிருப்பிலிருந்து மீட்டுவந்தார்? அதற்காகவா நன்மைகள் செய்துவந்தார்? இல்லையே! இஸ்ரவேலர் தம்முடைய ஜனங்களாயிருக்கவும் ஒரே ஜாதியாயிருக்கவும், சமாதானத்தோடு ஜீவிக்கவும், தம்மை வணங்கவுமல்லவோ அழைத்துச் செல்லுகிறார். ஆகையால், குடிக்கவும், வெறிக்கவும் இந்த நாளை நாம் உபயோகப்படுத்தாமல், குடிவெறி என்னும் கன்றுக்குட்டியை நமது பாளயத்துக்குப் புறம்பே தள்ளி, அதன்மேல் கற்குவியலைக் குவிப்போமாக.

**2. ஆகாத விளையாட்டுகள் ஒரு கன்றுக்குட்டியாகாதோ?** வேடிக்கைகள், கூத்துகள், கண்காக்ஷிகள் பார்த்து தங்கள் ஜீவியத்தைக் கெடுத்துக்கொள்ளுகிற வாலிபர் எத்தனை! தங்கள் பிள்ளைகளை இந்த கெட்ட வழக்கத்தில் பழக்குகிற பெற்றோர் எத்தனை! கேட்டின் பாதையில் நடத்துகிற சிநேகிதர் எத்தனை! ஐயோ, கணக்கிலடங்குமோ? ஏட்டிலடங்குமோ? நமது திருச்சபையிலும் இப்பேர்ப்பட்ட கன்றுக்குட்டியை வணங்குகிறவர்கள் இல்லையோ? இந்தக் கன்றுக்குட்டியையும் பாளயத்திற்குப் புறம்பாக்குவோமாக.

(3) பெருந்தீனி ஒரு கன்றுக்குட்டியாகாதோ?

(4) ஆகாத சம்பாஷணை ஒரு கன்றுக்குட்டியாகாதோ?

(5) சகல அக்கிரம சிந்தைகளும், ஆகாத பேச்சுகளும், கெட்ட நடத்தைகளும் ஒவ்வொரு கன்றுக்குட்டிகளாகாதோ? இஸ்ரவேலர் ஒரு கன்றுக்குட்டியை வணங்குகிறார்களானால் நாம் எத்தனை கன்றுக்குட்டிகளை வணங்குவது? ஏனென்றால் இவைகளைச் செய்யும்பொழுதெல்லாம் தேவனையே மறந்துவிட்டுச் செய்கிறோமல்லவா? இஸ்ரவேலரும் இப்படியே, தங்களை நடத்திவந்த தேவனை மறந்துவிட்டு, தங்களுக்காக ஒரு கன்றுக்குட்டியை உண்டாக்கிக்கொண்டார்களல்லவா? அவர்களைப்பார்த்து தேவன் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம். இந்த ஜனங்களைப்பார்த்தேன்; இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால், என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு' என்று மோசேயோடு தேவன் பேசுகிறார். நாமும் கன்றுக்குட்டிகளை நமக்காக உண்டாக்கும்பொழுது நம்மைக்குறித்தும் தேவன் இவ்விதமாகப் பேசமாட்டாரோ?

## இஸ்ரவேலர் பலி செலுத்துகிறார்கள்.

இவர்கள் செய்த விஷயம் நல்லதே. ஆனால், தங்களைப் பராமரித்துவரும் தேவனை மறந்து, அவருக்குச் செலுத்தவேண்டிய பலிகளையும், ஸ்தோத்திரங்களையும் கன்றுக்குட்டிக்குச் செலுத்தினார்கள். தேவன் நமக்குச்செய்துவரும் நன்மைகளுக்காகவும், பெரிய அதிசயங்களுக்காகவும் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவரில் அதிகதிகமாய் அன்புகூரவேண்டி

யிருக்க, நம்மில் எத்தனையோபேர் தேவனைமறந்து, சிருஷ்டிகளைத்தொழுது சேவியாமல், சிருஷ்டியாகிய உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூறுகிறோம். தேவ நன்மைகளையும், தேவ ஆசீர்வாதங்களையும் நாம் பெறும்பொழுது, அக்கிரமங்கள் நம்மில் பெருக தேவன் காண்பாரானால், அவருடைய கோபம் பற்றியெறியாதோ? அழித்துப்போடுவேன் என்று சொல்லுகிறார்.

சகோதரரே! இந்த வருஷம் நமக்கு ஆசீர்வாதமான வருஷம். ஆசீர்வதிக்கும்படியாக, நாம் இந்த வருஷத்தை ஸ்தோத்திர வருஷமாகக் கொண்டாடுவோமாக.

## சந்தா வரவு—1918

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| Mr. Y. Peter | 0 | 7 | 0 |
| ,, Isaac Manikam | 0 | 7 | 0 |
| Miss Pakiathbai Samuel | 0 | 7 | 0 |
| ,, S. R. Howland | 15 | 2 | 0 |
| Mr. A. V. Arumay | 1 | 0 | 0 |
| Miss Lazenguist | 0 | 11 | 0 |
| Rev. M. Zechariah | 0 | 8 | 0 |
| ,, G. P. George | 0 | 14 | 0 |
| ,, S. Samuel | 0 | 7 | 0 |
| Mr. S. R. Venkoba | 0 | 7 | 0 |
| ,, M. C. Abraham | 0 | 8 | 0 |
| ,, G. Jeyamoni | 0 | 8 | 0 |
| Rev. G. W. Hardie | 2 | 10 | 0 |
| Mr. G. Manuel | 0 | 14 | 0 |
| Miss C. Sornam | 0 | 15 | 0 |
| Major Gnanadesigar | 0 | 8 | 0 |
| Mr. Daniel Vedanayagam | 0 | 14 | 0 |
| ,, J. A. Devasigamoni | 0 | 7 | 0 |
| ,, F. K. Vanath | 0 | 8 | 0 |
| ,, E. P. Stephen | 1 | 0 | 0 |
| ,, J. B. David | 0 | 14 | 0 |
| Mr. G. S. Nathaniel | 1 | 2 | 0 |
| Miss Daniels | 4 | 12 | 0 |
| Mr. J. Noah | 1 | 2 | 0 |
| Miss Grover | 1 | 14 | 0 |
| Mr. J. Sundaram | 0 | 7 | 0 |
| ,, Z. Paul | 0 | 7 | 0 |
| ,, P. V. Thommai | 1 | 5 | 0 |
| ,, M David | 2 | 5 | 0 |
| ,, M. Jivanandam | 1 | 2 | 0 |
| ,, M. Vedanayagam | 0 | 7 | 0 |
| Rev. O. D. Velupillai | 0 | 14 | 0 |
| Mr. J. Seenivasagam | 0 | 14 | 0 |
| ,, V. James | 2 | 6 | 0 |
| Rev. M. D. Gnanadikam | 0 | 14 | 0 |
| Mr. R. Vethamuthu | 0 | 7 | 0 |
| ,, T. E. Matthan | 0 | 7 | 0 |
| ,, S. Asirvatham | 0 | 7 | 0 |
| ,, J. Y. Paul | 0 | 7 | 0 |
| Rev. J. D. Gnanakan | 1 | 0 | 0 |
| Mr. S. Masillamoni | 1 | 0 | 0 |
| ,, Sargunam J. Solomon | 0 | 14 | 0 |
| Rev. Arul Manikam | 1 | 0 | 0 |
| Mr. D. Pakyanadan | 1 | 0 | 6 |
| ,, Y. Jacob | 0 | 7 | 0 |
| ,, Matthew Antony | 0 | 7 | 0 |
| Miss E. Dunhill | 1 | 0 | 0 |
| Rev. Samuel Joseph | 3 | 1 | 0 |
| ,, C. E. Simpson | 0 | 15 | 0 |

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.



என்ன?" என்றது. கொஞ்ச நேரத்தில் முட்டையும் வெடித்தது. தாய் சொன்னபடியே, சகலத்தையும் கண்ட ஆனந்தத்தோடு, தாயையும் கண்டு ஆனந்தித்தது.

அதுபோலவே, அநேக கிறிஸ்தவர்களிடத்தில், மேலான இரகசியங்களையும், மோக்ஷ மகிமையையும்பற்றி சொல்லும்பொழுது, 'மோக்ஷத்தைக் கண்டது யார்? அதற்கு ரூபகாரமென்ன? மோக்ஷம் எப்படியிருக்கும்' என்று கேள்வி கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். மேலும், அந்தக் குஞ்சு, முட்டைக்குள்ளிருக்கும்போதே, அதற்கு கால்களும், சிறகுகளும் முளைத்தாலும், அவைகள் அந்தச் சமயத்தில் உபயோகப்படாது. ஆனால், அது உலகத்தில் பிரவேசிக்கிறபொழுது, அந்தச் சிறகுகளும், கால்களும் உபயோகத்திற்காகவே உண்டாக்கப்பட்டிருக்கிறது. அப்படி கால், சிறகு, முளைக்காவிட்டால், அந்த முட்டை கெட்டுப்போனதாயிருக்கவேண்டும். குஞ்சும் செத்திருக்கவேண்டும். அதுபோலவே, நாம் இந்த உலகமாகிய முட்டைக்குள்ளிருக்கும்பொழுதே, இனி நாம் எதிர்பார்க்கும் சந்தோஷத்தில் பிரவேசிக்க ஆயத்தப்படவேண்டும். ஆவிக்குரிய விஷயத்தில் வளரவெண்டும். அப்படி வளராதபக்ஷத்தில் ஆத்துமா செத்திருக்கவேண்டும். ஆத்துமா செத்திருக்குமானால் மோக்ஷமும் அடையமுடியாது. அந்த சந்தோஷத்தை இவ்வுலகத்திலேயே நாம் அனுபவிக்கவேண்டும் அதற்கு என்ன செய்வது?

(4) ஒரு பிரபுவுக்கு மூன்று சிநேகிதர்கள் இருந்தார்கள். முதல் சிநேகிதன் மகா ஏழை, ஆகையால் அந்தப் பிரபு அவனுக்குத் தன் ஆஸ்திகளாலும், மற்றும் பலவிதமாக உதவிசெய்து அவனை முன்னுக்குக் கொண்டுவந்தான். இரண்டாவது, சிநேகிதன் ஏழையுமல்ல, பணக்காரனுமல்ல. ஆனாலும், அவனுக்கும் சாதாரணமாக உதவிபுரிந்துவந்தான். மூன்றாவது சிநேகிதனுக்கோ, இந்தப் பிரபு யாதொரு விதமான உதவியும் செய்யவில்லை. கண்ட நேரங்களில் மாத்திரம் சந்தோஷமாய்ப் பேசுவதேயொழிய, மற்றப்படி அவனைக் கவனிக்கிறதேயில்லை. இப்படியிருக்கும்பொழுது, அந்தப் பிரபுவுக்கு கோர்ட்டு விஷயமாக ஒரு பெரிய தொந்தரவு வந்து, அவர் கோர்ட்டில் ஆஜராகும்படி நேரிட்டது. அவருக்கு உதவிசெய்ய ஒருவருமில்லை. ஆகையால், அவர் தன் முதல் சிநேகிதனிடத்தில்ச் சென்று, தனக்கு கோர்ட்டு விஷயமாக உதவி செய்யவேண்டுமென்று கேட்டார். அதற்கவன், தன்னால் கோர்ட்டுக்குள் வரமுடியாதென்றும், கோர்ட்டுக்கு வெளியே என்ன செய்யவேண்டுமென்றாலும் செய்வதாகவும் சொன்னான். இந்தப் பிரபுவுக்கோ, கோர்ட்டுக்குள்ளேதான் உதவி தேவையாயிருப்பதால், மனம் நொந்தவராக, தன் இரண்டாவது சிநேகிதரிடத்தில் முறையிட்டார். இதற்கவன், தான் வந்து, ஒரு வாக்குமூலம் கொடுத்துவிட்டு திரும்பிவந்துவிடுவதாகவும், ஆனால், நியாயாதிபதியினிடத்தில் சிபார்சுபண்ண தன்னால் முடியாதென்றும் சொல்லிவிட்டான். இந்த இரண்டு சிநேகிதர்களும் அந்தப்பிரபு

வைக் கைவிட்டபடியால், அந்தப் பிரபு மனநோவோடு சற்று யோசித்து, தன் மூன்றாவது சிநேகிதனிடத்திலாவது உதவிபெறலாமென்று எண்ணினபோதிலும், தன்னால் யாதொருவிதயான உபகாரமும் பெறாத அவனிடத்தில் எப்படி உதவியை எதிர்பார்ப்பதென்று கலங்கினான். ஆனாலும், ஊக்கத்தைக் கைவிடாமல், தன் மூன்றாம் சிநேகிதனைச் சந்தித்து, தன் விருத்தாந்தத்தை வெளியிட்டபோதோ, அந்த மூன்றாம் சிநேகிதன், தன் கண்கள் கலங்கக், கண்ணீர் சிந்தி, தன் உயிரையும் கொடுத்தாகிலும் அந்தப் பிரபுவைத் தப்புவிப்பதாகச் சொன்னார்.

அந்தப் பிரபு யாரென்றால், இந்த உலகத்தின் **மனிதரே.** அவருடைய முதல் சிநேகிதன் யாரென்றால், இந்த **உலகப்பொருளே.** உலகப் பொருளைச் சேர்க்க மனிதர் படும் பாடு கொஞ்சமல்ல. ஆனால், அவைகள் ஆத்தும ரக்ஷிப்புக்கு ஏதுவாயிராது. அவைகள் நம்மை ஜீவகரையில்ச் சேர்க்க எவ்விதத்திலும் உதவாது. இரண்டாவது சிநேகிதன் யாரென்றால், இந்த உலகத்தின் மனிதரே. அவர்கள் நமக்கு உதவிசெய்ய வரமாட்டார்கள். நாம் மரிக்கும்காலத்தில் கல்லறைத்தோட்டம் வரைக்குந்தான் வரக்கூடும். ஒருகாலத்தில் அவர்களும் மரணமடைந்து, மறுமைக்குள் வரும்பொழுது, அவர்கள் நமது பரம நியாயாதிபதியினிடத்தில் வந்து, நமக்காக சிபார்சுசெய்கிறவர்களாயிருக்கமாட்டார்கள். மூன்றாவது சிநேகிதனோ, **இயேசுவானவர்.** நாம் உலகப்பொருள்களையும், மனிதர்களையும், நேசிக்கிறவிதமாக நமதருமை ரக்ஷகரை நேசிக்கிறதில்லை. முழுமனதோடே அவரில் அன்பு கூருகிறதில்லை.

ஆனால், அவருடைய உதவியைத் தேடினாலோ, அவர் பரலோகத்திலும் நமக்காக பரிந்துபேசுகிறவராகயிருக்கிறார். நியாயாசனத்தில் வீற்றிருக்கிறவரும் அவரே. அவரே நம்மை மீட்கும்பொருட்டாக தமதருமை உயிரைக் கொடுத்தார். இவர் நமக்கு பரலோகத்தில் மட்டுமல்ல, இவ்வுலகத்திலும் உதவிசெய்கிறவராயிருக்கிறார். நாம் நமது இருதயத்தை அவருக்கு ஒப்புக்கொடுக்கும்போதும், உலகத்தின் ஆசாபாசங்களுக்கு விலகி ஜீவிக்கும்பொழுதும், அவரையும், அவருடைய மகிமையையும் இந்த உலகத்திலேயே காண்கிறோம். குஞ்சு, தன் முட்டைக்குள்ளிருந்து வெளிப்பட்டபிறகு, உலகத்தையும், தன் தாயையும் காண்கிறது எவ்வளவு நிச்சயமோ, அப்படியே நாமும் நமது சிருஷ்டிகரையும் அவருடைய மகிமையையும் இந்த உலகத்திலேயே கண்டு ஆனந்திக்கிறவர்களாயிருப்போம். அப்போதுதான் ஆறுதல். அந்த சந்தோஷத்தை நாம் இப்பொழுதே அனுபவிக்கிறது நிச்சயமானால், நாம் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாயிருப்போம்.

(5) திபேத்து நாட்டில் ஒருவர் சுவிசேஷ வேலை செய்துவந்தார். கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்கக்கூடாதென்று அந்த நாட்டரசன்



அவரை அதிகதிகமாய்த் துன்பப்படுத்தினபோதிலும், அவர் மென்மேலும் கிறிஸ்துவின் நாமத்தை யாவருக்கும் அறிவித்துவந்தார். ஆகையால், அந்த ஜனங்கள் அவரைப் பிடித்து, இரத்தம் வடிய அடித்தார்கள். உடம்பெல்லாம் பெரும் பெரும் காயங்கள் உண்டானது. ஆனாலும், அவரோ மென்மேலும் பிரசங்கித்தவண்ணமாகவேயிருந்தார். கடைசியில் ஈயத்தைக் காய்ச்சி அவருடைய காதில் ஊற்றினார்கள். அப்பொழுது அவர் 'நீங்கள் என் வாயை மூடினாலும், என் உடம்பிலுள்ள இந்தக் காயங்களே பேசும். எனக்கு வாய் ஒன்றுமட்டுமல்ல, அநேகமிருக்கிறது. அவைகளே கிறிஸ்துவை மகிமைப்படுத்தும். கிறிஸ்துவானவர் சாகவில்லை. என்னில் உயிரோடிருக்கிறார். நீங்கள் என்னை எப்படி வேதனைப் படுத்தவேண்டுமென்று எண்ணினாலும்; அவைகள் யாவும் இன்பமாயிருக்கிறது. நீங்கள் இப்பொழுது என்னைக் கொன்றுபோடும் பக்ஷத்தில், மறு நிமிஷத்திலேயே இந்த சரீரமாகிய அழிவுள்ள திரையைக் களைந்துவிட்டு புதிதான மகிமையின் சரீரத்தைத் தரித்துக்கொள்வேன்.' என்றார். இவருடைய மரணத்தினாலே, அநேகருடைய குணப்படுதலுக்கு ஏதுவாயிற்று. நாம் நம்முடைய நம்பிக்கையை இவ்வுலகத்திலல்ல, மேலானவைகளில் வைக்கும்பொழுதுதான், அந்த ரத்தச்சாக்ஷியைப்போல, துன்பத்திலும், இன்பத்தை அனுபவிக்கலாம். மறுமையிலும் மேலான சந்தோஷத்தை அனுபவிக்கிறவர்களாயிருப்போம். கிறிஸ்துவானவரை நமது ஜீவியத்தில் கண்டு ஜீவிக்கவேண்டும். 'பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்'.

**சாது சுந்தர் சிங்**

---

## மேசியா

'அந்திரேயா முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு, மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம். பின்பு அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டு வந்தான்'. (பரி. யோவா. 1: 41, 42).

யூதர்கள் வேதாகமத்தில் தேறினவர்களாயிருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் 12 வயதுக்குள் பழைய ஏற்பாட்டை படித்துத் தீரவேண்டுமென்பதாய் ஒரு வழக்கமிருந்தது. ஆகையால், மேசியாவைக்குறித்து அறியாதவர்கள் யூதர்களில் ஒருவராகிலுமிருந்திருக்கமாட்டார்கள் என்றே சொல்லத்தகும். சமாரியா ஸ்திரீகூட மேசியாவைக்குறித்து அறிந்தவளாயிருந்தாள் என்பதாக பார்க்கிறோம். மேசியா ஒரு கன்னிகையின் வயிற்றில் பிறப்பார் என்பதும் அவர்களால் அறியப்பட்ட சத்தியமே. ஆகையால், யூதர்களில் கன்னிகைகளான அநேகர் விவாகம் செய்துகொள்ளாமல் மேசியா

தங்கள் வயிற்றில் பிறக்கமாட்டாராவென்று பிரார்த்திக்கொண்டிருந்தார்கள் என்பதாய் நாம் சரித்திரங்களின் மூலமாக அறிகிறோம்.

மேலே குறிக்கப்பட்ட வேதவாக்கியத்தின் சம்பந்தமாக, அந்திரேயாவும் மேசியாவைப்பற்றி அறியாமலிருந்தவரல்ல. மேசியாவைக் காண வாஞ்சையோடு காத்திருந்தவர்களில் இவர் ஒருவராயிருக்கலாம். மேசியா வந்துவிட்டார் என்பதையும் திடீரென்று கேள்விப்பட்டார். ஆனாலோ, இன்னும் அவரைக் காணவில்லை. சமயமும் சீக்கிரத்தில் வாய்த்தது. இவருடைய குருவாகிய யோவான்ஸ்நானகனோடு இவர் நின்றுகொண்டிருக்கையில், மேசியா அந்தப் பக்கமாய் கடந்துபோனார். அவரைக் கண்ட யோவான்ஸ்நானகன் அவரைக்குறித்து சாட்சியிட்டதைக் கண்டு, அந்திரேயா இயேசுவின் பின்சென்று, அவரோடு இராத்தங்கினார். பின்பு அந்திரேயா தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு, 'மேசியாவைக் கண்டோம் என்று சொல்லி, அவரை இயேசுவானவரிடத்தில் அழைத்துவந்தார் என்று' வாசிக்கிறோம். அந்திரேயாவினுடைய சரித்திரத்திலிருந்து நாம் நாலு குறிப்புகளை கற்றுக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்.

(1) அந்திரேயாவின் கேள்வி அறிவு. மேசியாவைக் குறித்து வேதாகமத்தில் வாசித்திருந்தார். பெற்றோர் மூலமாகவும், முன்னோர்கள் மூலமாகவும் அறிந்திருந்தார். அது மாத்திரமல்ல, மேசியா வந்துவிட்டார் என்பதாகவும் அறியாமலிருந்தவரல்ல. ஆனாலோ, அவரை இன்னும் காணவில்லை. பார்க்கவேண்டும் என்கிற ஆவலும் இருந்திருக்கலாம்.

(2) அந்திரேயாவின் அனுபவ அறிவு. அவருடைய கேள்வி அறிவானது அனுபவ அறிவுக்கு வந்துவிட்டது. மேசியாவை முகமுகமாய்க் கண்டார். அவரோடு தங்கினார். அதிகமாக அவரோடு சம்பாஷித்ததாக நாம் வாசிக்கிறதில்லை. ஆனால், வரப்போகிற மேசியா இவர்தான் என்பதை மாத்திரம் அதிக நிச்சயமாக அறிந்துகொண்டார்.

(3) அந்திரேயாவின் சாட்சி. மேசியாவைக் கண்டதினால் உண்டான சந்தோஷத்தை தன் மனதில் அடக்கிக்கொள்ள முடியாதவராய், ஓடி தன் சகோதரனுக்கு அறிவித்தார்.

(4) அந்திரேயாவின் அழைப்பு. அந்த சந்தோஷ செய்தியை தன் சகோதரனுக்கு அறிவித்ததோடே விடவில்லை. இயேசுநாதரிடத்தில் அழைத்துவந்தார்.

(1) கிறிஸ்தவர்களின் கேள்வி அறிவு. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் பற்றி அதிக அறிவுள்ளவர்களாயிருககிறார்கள். வேதாகமத்தை அதிகமாய் கற்றறிந்திருக்கிறார்கள். 'பாவிகளை ரக்ஷிக்க கிறிஸ்தேசு உலகத்தில் வந்தார்' என்று கிளிப்பிள்ளைப் பாடமாய்ச் சொல்லுவார்கள். ரொம்ப சந்தோஷம். கிறிஸ்து உலகத்திற்கு வந்தார் என்பது எப்படித் தெரியும் என்று



கேட்டால், வேதாகமத்தில் எழுதியிருக்கிறதென்றும், தாய் தகப்பன்மார் அல்லது உபாத்தியாயர் சொல்லித்தந்தார்கள் என்றும் சொல்ல வெட்கமற்றிருக்கிறார்கள். அந்திரேயாவும் முதலாவது கிறிஸ்துவை வேதாகமத்தில் அறிந்தவராகவேயிருந்தார். அதோடே நின்றுவிடவில்லை.

(2, கிறிஸ்தவர்களின் அனுபவ அறிவு. 'நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம் (1 கொரி 3: 16, 17). நாம் அவருடைய ஆலயமாயிருந்தால் நாம் அவரைக் காணாதிருப்பதெப்படி? கவர்னருடைய மெய்க்காவலாளர் (Body guards) கவர்னரைக் காணாதிருப்பதெப்படி? கவர்னருடைய மெய்க்காவலாளர் என்றழைக்கப்படுவதினாலே, கவர்னர் அருகிலேயே நிற்பவர்களாகையால், கவர்னரை அறிந்திருப்பது நிச்சயமாயிற்றே! கிறிஸ்தவன் என்பதற்குப்பொருள் கிறிஸ்துவை உடையவன் என்பதே! கிறிஸ்துவை உடையவன் என்று பெயர் வைத்துக்கொண்டு கிறிஸ்துவை அறியவில்லையென்று சொல்லத்தகுமா?

3. கிறிஸ்தவர்களின் சாட்சி. மெய்யாக, ஒரு கிறிஸ்தவனிடத்தில் தேவன் வாசமாயிருந்தால், அந்த சந்தோஷத்தை அவனால் அடக்கி வைக்க முடியாது. கிறிஸ்துவை தன்னிடத்தில் உயிருள்ளவராகக் கண்டவன் மௌனமாயிருக்கமுடியாது. உடனே சாட்சியிடுகிறான். அந்திரேயா மேசியாவைக் கண்டார். ஆனால், அவரிடத்தில் அவர் அதிககாலம் தங்கினவரல்ல, ஒன்றைமாத்திரம் அதிக நுட்பமாகக் கண்டுகொண்டார். தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்ட மேசியா இவர்தான் என்பதே. சந்தோஷத்தைத் தனக்குள் அடக்கி வைத்துக்கொள்ளமுடியாமல், ஓடி, தன் சகோதரனிடத்தில் 'மேசியாவைக் கண்டோம்' என்று மாத்திரம் சொன்னார். இதே சாட்சிதான் ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் தேவை. அந்திரேயா இந்த சாட்சி கொடுத்தபிறகே, கிறிஸ்துவினிடத்தில் 3½ வருஷம் வேதசாஸ்திரம் படித்ததாகக் காண்கிறோம். ஆகையால், சாட்சி கொடுக்க நமக்கு வேத அறிவுதான் வேண்டுமென்பதில்லை. இருக்க இருக்க வேதம் கற்றுக்கொள்ளலாம். நீ பெற்றுக்கொண்ட ரக்ஷிப்பைப்பற்றி சாட்சி கொடு. வேத அறிவு இல்லையே, எப்படி தேவ ஊழியம் செய்வோம் என்று சொல்லுகிற சோம்பேறிக் கிறிஸ்தவர்களுக்கு அந்திரேயா என்பவர் ஒரு திருஷ்டாந்தமாயிருக்கிறார். ஒரு கிறிஸ்தவன் பாவ மன்னிப்படைந்தது மெய்யானால், இரக்ஷிப்படைந்தது மெய்யானால், கிறிஸ்துவை உயிருள்ளவராகக் கண்டு ஜீவிக்கிறது மெய்யானால் கடைசியாய்ச் சொல்லுமிடத்து, மெய்க்கிறிஸ்தவன் என்பது மெய்யானால் கிறிஸ்துவைக் குறித்து சாக்ஷி கொடுக்கிறான். அந்

திரேயாவின் சாட்சிதான் பேதுரு அப்போஸ்தலனை கிறிஸ்துநாதரிடத்தில் வழி நடத்தினது. அவர் மூலமாய் அநேகர் கிறிஸ்துவின் மந்தையில் கூட்டிச் சேர்க்கப்பட்டார்கள். 'பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியானவரே உங்களோடு பேசுகிறார்'. சாட்சியிடுகிறவர்கள் நாமல்ல, நமக்குள் வாசமாயிருக்கிறவரே சாட்சி கொடுக்கிறவர். ஆகையால் நாம் செய்யவேண்டியதென்ன? அவர் வந்து நம் இருதயத்தில் வசிக்கும்படி இடம் கொடுப்பதே! விளக்கு எரிகிறது, திரியில் நெருப்பிருந்தால பிரகாசிக்கவேண்டியது அதின் கடமை. கிறிஸ்துவானவர் நம் இருதயத்தில் வாசமாயிருந்தால் அடக்கமாயிருப்பவரல்ல. உயிருள்ளவராக ரூபிக்கிறார்.

'நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்பதே கிறிஸ்துவானவரின் கட்டளை. நாம் பிரசங்கம் செய்தவுடன் கேட்கிறவர்கள் குணப்பட்டுவிடுவார்களோவென்பது நமக்கடுத்ததல்ல, 'நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், விளையச்செய்கிறவர் தேவன்' என்று பரி. பவுல் சொல்லுகிறார். உனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நீ செய். உனக்குக் கொடுக்கப்பட்ட தாலந்தை நீ உபயோகி. தேவனுக்கடுத்ததை தேவனிடத்தில் விட்டுவிடு. 'பிள்ளையே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட தாலந்தை எங்கே? என்ன செய்தாய்? என்று அவர் கேட்கும்பொழுது, 'ஆண்டவரே, உம்முடைய வசனம் முத்துக்களைப்பார்க்கிலும் விலையேறப்பெற்றது. ஆகையால், பத்திரமாய் சீலையில்ச் சுற்றி பெட்டியின் அடியில் வைத்திருக்கிறேன்' என்று சொல்லத் தகுமோ? 'என்னுடையதை என்னிடத்தில்த் தந்துவிட்டு. உன் பங்கை நீ அனுபவி' என்பதே சரியான மறுமொழியாகும்.

(4) கிறிஸ்தவர்களின் அழைப்பு. அந்திரேயா பேதுருவை கிறிஸ்துநாதரிடத்தில் அழைத்துவந்தார். ஒருவன் இருட்டில் நடந்துபோகிறான். சற்று தூரத்தில் ஒரு பெரிய குழியிருக்கிறது. அந்த மனிதன் இன்னும் சில அடிகள் எடுத்து வைப்பானானால் அந்தக் குழியில் விழுந்து மரிப்பது நிச்சயமென்று நீ அறிந்திருந்தும், அவனுக்கு அந்த மோசத்தை அறிவியாதிருப்பாயானால் நீ பெரும்பாதகனன்றோ? அப்படி அறிவிப்பதோடு சும்மாயிருக்கமாட்டாய். உன் வீட்டிலுள்ள விளக்கைக் கொண்டுவந்து, சரியான பாதையைக் காண்பிப்பாயல்லவா?

ஐயோ! கிறிஸ்துவானவரின் நாமத்தையும், அவருடைய ரக்ஷிப்பையும் அறியாத கோடாகோடி ஜனம், புத்திபுகட்டுவாரற்று, இருளடைந்த பயங்கரமான பாதையில்ச் செல்லுகிறார்களே! ஒரு நிமிஷத்துக்குள் எத்தனையோ ஆயிரம் ஜனங்கள் கிறிஸ்துவின் நாமத்தை அறியாமல் சாகிறார்களே! அப்பேர்ப்பட்ட பாதையின் பயங்கரத்தைக் காண்பிக்க நம்மிலுள்ள ஜீவ ஒளியை பிரயோகிப்பதே, ரக்ஷிப்படைந்த கிறிஸ்தவர்களின் லக்ஷணம்! 'மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது' (மத். 6: 16).



S. R. D.

## என்னிடத்தில் வாருங்கள்

'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' என்று தேவாதி தேவன் சொல்லுகிறார். இவரே நம்மை உண்டாக்கினவர். இவருடைய கையிலே நமது ஜீவன் இருக்கிறது. இவர் மனிதர்மேல் சொல்லிமுடியாத அன்புள்ளவர். மனிதன் இந்த உலகத்தில் இளைப்பாறுதலைக் காணாவிட்டால் மறு உலகத்திலும் அதைக் கண்டுகொள்ளமாட்டான் என்று அவர் நன்றாய் அறிவார். ஆகையால் மிகவும் கவலையோடும் அன்போடும் மனிதரை அவரண்டை அழைக்கிறார். சாதாரணமாக அவருடைய அன்பான சத்தத்திற்கு முரட்டாட்டமுள்ள மனுஷ ஜாதி செவிகொடுக்கிறதில்லை. அப்போது அவர் அவர்களைத் தள்ளிவிடாமல், இரட்சிக்கவேண்டுமென்னும் ஆவலினால், துன்பங்களின் மூலம் அவர்களை தம்மண்டை சேர்க்கப் பிரயாசப்படுகிறார். இந்த இரண்டாவது வழி அவர் எடுக்க விரும்பாவிட்டாலும் அதின் மூலமாகவே அநேகர் அவரண்டை வருகிறதினால் அதையே அவர் அடிக்கடி கையாடவேண்டியதாயிருக்கிறது. ஆனால் அவ்விதமும் அவரண்டை போகாதவர்களை அவர் குடுமியைப் பிடித்து இழுக்கிறதில்லை.

'ஒரு தகப்பன் தன் குமாரனுக்குச் சில ஆடுகளைக் கொடுத்தான். அந்த மகன் அவ்வாடுகளை நேசித்து மிகவும் அருமை பெருமையாய் வைத்திருந்தான். ஒருநாள் சத்துரு வந்து ஆடுகளைத் திருடிக்கொண்டு போய்விட்டான். அப்போது தகப்பன் ஒரு [1] வேலைக்காரனை அனுப்பி ஆடுகளைப் பார்த்துவரச் சொன்னான். அவன் போய், ஆடுகள் ஒரு தோட்டத்தினுள்ளே நிற்கிறதைக் கண்டு அழைத்தான். தோட்டத்தைச் சுற்றிலும் பலமான வேலி இருந்ததால் ஆடுகள் வெளியே வரக் கூடாமலிருந்தன. வேலைக்காரனும் அவைகளுக்கு ஒரு உதவியும் செய்யக்கூடாதவனாய் திரும்பிப் போய் தன் எஜமானுக்குக் காரியத்தைத் தெரிவித்தான். மகன் அதை அறிந்தவுடன் தான் எப்படியாவது போய் தன் ஆடுகளை மீட்டுக்கொள்ள வேண்டுமென்று தகப்பனிடம் விடைபெற்றுப் புறப்பட்டான். அவன் வந்து, கூர்மையான முள்ளுள்ள செடிகளும் மரங்களும் தோட்டத்தைச் சுற்றிலும் நிற்பதையும், தோட்டம் யாதொரு முள்ளும் குருக்கும் இல்லாமல் தான் நேர்த்தியாக வைத்திருந்த தன் சொந்தத் தோட்டமே என்பதையும்

1. நியாயப்பிரமாணம்

கண்டான். சத்துரு ஆடுகளைக் களவு செய்ததுமல்லாமல் தன் தோட்டத்தையும் கெடுத்திருப்பதைக் கண்ட மகன் தோட்டத்தைச் சுற்றிலும் நெருப்பு வைத்து முட்செடிகளையும் முள் மரங்களையும் சத்துருவையும் அழிக்க யோசித்தான். ஆனால் சத்துருவோடு தன் ஆடுகளும் மாண்டு போகுமே என்று துக்கித்து ஆடுகளை இரட்சிக்க வழி தேடினான். வேலியை வெட்டித் திறப்பதில் ஒருவேளை தனக்கு மோசம் நேரிடும் என்று அவன் உணர்ந்தும் ஆடுகளை அதிகமாய் நேசித்ததால் வேலியை வெட்டத் தொடங்கினான். அப்போது அவன் தேகமெல்லாம் முட்களால் கீறப்பட்டு இரத்தம் பாய்ந்தோடினது. என்றாலும் அவன் பின்வாங்காமல் ஒரு வழியை உண்டாக்கி தன் ஆடுகளைக் கூப்பிட்டான். சில ஆடுகள் வெளியே வந்தன. மற்ற ஆடுகளையும் இவைகளைக்கொண்டே வெளியே கொண்டுவர இந்த ஆடுகளை நன்றாய்ப் பழக்குவித்து அவைகளை ஒரு [2] மேய்ப்பன் வசத்தில் விட்டு தன் வீட்டுக்குப் போனான். அந்த ஆடுகள் இன்னும் அனேக ஆடுகளை வெளியே கொண்டுவந்தன. பிந்தி வெளியே வந்த ஆடுகளையும் முந்தின ஆடுகளைப்போல மேய்ப்பன் பழக்கினான். இவ்விதம், வரும் ஆடுகளையெல்லாம் பழக்கித் திரும்ப தோட்டத்தினுள்ளே அனுப்பிக்கொண்டேயிருந்தான்.

அநேக நாட்கள் சென்றபின்பு, தன் தோட்டத்தைச் சுத்தம்செய்து, சத்துருவையும் அழித்து, பழக்குவிக்கப்பட்ட ஆடுகளை அந்த தோட்டத்திலேயே வைத்து, தானே அவைகளை மேய்க்கவேண்டுமென்று மகன் திரும்பிவந்தான். ஆனால் இன்னும் அநேக ஆடுகள் உள்ளே நித்திரை செய்கிறதைக் கண்டு தான் யோசித்தபடி தோட்டத்தை உடனே சுத்திகரிக்க விருப்பமில்லாதிருந்தான். அங்கே இருக்கிற ஆடுகளை மீட்டுக்கொள்ள அவனும் மேய்ப்பனுமாக அவைகளை அழைத்தார்கள். ஆடுகளோ அவர்கள் சத்தத்திற்கு சற்றேனும் செவிகொடுக்கவில்லை. ஆடுகள் அவ்வளவு நிர்விசாரமாய் இருக்கக் காரணம் என்ன என்று அவர்கள் பார்த்து, அவைகள் சுகமாகப் படுத்து நித்திரைசெய்ய ஏற்ற நிழலைக் கொடுக்கிற மரங்களே என்று கண்டுபிடித்தார்கள். அப்போது மகன் வேலைக்காரரை அனுப்பி அந்த மரங்களை வெட்டச்சொன்னான். அம்மரங்களில் விசேஷமாக மூன்று இனங்களின் பெயரை இங்கே சொல்லுகிறேன்—தானியமென்ற ஒரு படர்ந்த மரம், தேச சமாதானம் என்னும் ஓங்கி வளர்ந்த ஒரு மரம், சுகம் என்னும் ஒரு அழகிய மரம். அவைகள் வெட்டப்பட்டபோது சில ஆடுகள் வெயிலின் அகோரத்தைச் சகிக்கக்கூடாமல் அங்குமிங்கும் ஓடின. அவைகள் ஓடும்போது பயிற்றப்பட்ட ஆடுகள் முன்னே ஓடும். அப்போது மற்ற ஆடுகளும் பின்னாலே ஓடும். இவ்விதமாக அநேக ஆடுகள் வெளியே வந்தன. ஆனால் மீதியானவைகள் வெட்டப்பட்ட மரக்கிளைகளின்கீழ் படுத்துக்கொண்டு அந்த சொற்ப நிழலிலே நித்திரைசெய்தன. பழகின

2. பரிசுத்த ஆவி



ஆடுகள் அவைகளை மெதுவாய் எழுப்ப முயற்சித்தபோது அவைகள் அசையாமல் தூங்குகிறதைக் கண்டு அவ்வாடுகளை பலமாய் முட்டின. அப்போது, தூங்கின ஆடுகள் கோபாவேசத்துடன் எழும்பி பயிற்றப்பட்ட ஆடுகளில் சிலவற்றைக் காயப்படுத்தினது, சிலவற்றைக் கொன்றது.

ஒருநாள் திடீரென மகன் தோட்டத்தினுள்ளே ஓடிவந்து பழக்கப்பட்ட ஆடுகளையெல்லாம் கூட்டிக்கொண்டு வெளியே போய்விட்டான். கொஞ்சநேரத்திற்குள்ளாக தோட்டத்தைச் சுற்றிலும் நெருப்புப் பற்றி எரிந்தது. அப்போது உள்ளே நின்ற மற்ற ஆடுகள் நெருப்பு தங்கள் பக்கமாக நெருங்கி வருவதைக் கண்டு வெளியே ஓடப் பிரயாசப்பட்டன. வழியோ காணப்படவில்லை. எல்லாம் ஏகமாய் நெருப்பாயிருந்தது. சத்துருவும் மாண்டான் அவனோடிருந்த ஆடுகளும் அழிந்தன.

சிநேகிதனே! இந்த உவமையில் மகன் தன் ஆடுகளை தன் வசமாக்கிக் கொள்ளவேண்டும் என்னும் ஆவலினால் அம்மரங்களை வெட்டினான் என்று பார்க்கிறோம். அதுபோலவே தேவன் உன் மத்தியில் தானியக்குறைவையோ, யுத்தத்தையோ, வியாதியையோ அனுப்பும்போது வரப்போகிற அழிவினின்று உன்னை இரட்சிக்க அவர் ஆவலாயிருக்கிறதினால் அவ்விதம் செய்கிறார் என்பதை அறிந்துகொள். நீ இதுவரையும் சுகமாகப் படுத்திருக்க நிழலைக்கொடுத்த மரங்கள் வெட்டப்பட்டுப் போயிற்றென்று நீ உணருகிறாயானால் உன்னை மீட்பர் அழைக்கிறார் என்று அறிவாயாக. எனக்கு இளைப்பாறுதலைத் தந்த என் மீட்பர் மெய்யாவே உனக்கும் அதைக் கொடுப்பார்.

இப்படிக்கு,

சுகம் என்கிற மரம் வெட்டப்பட்டதினால் நிழலைக்காணாமல் திகைக்கும்போது சுவிசேஷ பாதை வழியாய் வெளியே ஓடின

ஒரு சகோதரன்

## நாங்கள் உம்முடையவர்கள்,
## உமது பட்சமாயிருப்போம். 1 நாளா. 12:-18.

தாவீது அரசன் தேவனால் அபிஷேகம்பெற்ற ராஜா, ராஜபட்டம் அவனுக்கே யுரியது, ராஜ மேன்மை அவனுக்கே பாத்திபமானது. ஆனாலும் பரதேசியாய் அலைந்து திரிகிறான். எதிராளி சவுல் என்பவன் அவனை விரோதித்துப் பகைத்து கொன்றுபோட வகைபார்க்கிறான். மிகுதியான ஜனங்களின் பார்வையில் தாவீது அல்ல சவுலே ராஜாவாயிருக்கிறான். அவனே ராஜரீகம் செய்கிறதாய்த் தோன்றுகிறது. சவுல் அல்லவா அரண்மனையில் உட்கார்ந்து ஆளுகை செய்கிறான். சவுல் அல்லவா வெற்றி சிறக்கிறவனாக காணப்படுகிறான்.

தாவீதோ ஓடிப்போகிறான் ஒளித்துக்கொள்கிறான். வனாந்தரத்தில் வாசம் செய்கிறான். சுயதேசத்தில் தங்க இடங் காணாமல் பெலிஸ்தருடைய தேசத்தில், சிக்லாக் என்னும் பட்டணத்தில் அரதேசியும், பரதேசியுமாய் சஞ்சரிக்கிறான். தன் ராஜ்ஜியம் பெற்றுக்கொள்ளுமட்டும் அங்கே பொறுமையோடு காத்திருக்கிறான். ஆனால் வெளித் தோற்றமான காரியங்களைப் பார்த்து மயங்கிப்போகவேண்டாம். மனிதனுடைய கண்களுக்கு எப்படித் தோன்றினாலும் பரவாயில்லை, தேவனுடைய தீர்மானத்தின் படியே காரியம் நடக்கும். சவுல் ராஜாவைத் தேவன் தள்ளிப்போட்டார். தாவீதைத் தெரிந்துகொண்டு பட்டாபிஷேகம் செய்தார்.

ஆ 'மெய்யான ராஜா யார் என்று நினைக்கிறீர்கள்',! இயேசுகிறிஸ்துவே மெய்யான ராஜா.' பிசாசானவன் தன்னை ராஜாவென்று காட்டுகிறான். இந்தப் பூலோக ராஜ்ஜியங்களெல்லாம் தனக்கே உரியது என்று பெருமை பாராட்டுகிறான். பலவித சிற்றின்பங்களினாலே ஜனங்களை மயக்கி ஏமாற்றிவருகிறான். பரத்தை நோக்காமல் பூமியை நோக்க அவர்களைத் தூண்டிவிடுகிறான். மிகுதியான ஜனங்கள் அவன் பட்சத்தில்தான் நிற்கிறார்கள். எங்கே பார்த்தாலும் பக்திமான்களுடைய கூட்டம் சிறு கூட்டம். கிறிஸ்தவர்களின் தொகை சிறிது. தாவீது அந்தக் காலத்தில் மறைவாய் இருந்தானும். அப்படிப்போல இயேசு மகாராஜாவும், அநேகருடைய கண்களுக்கு மறைவாய் இருக்கிறார். மனிதர் உலக ஆடம்பரங்களைப் பார்க்கிறார்கள். சிற்றின்பங்களைப் பின்பற்றுகிறார்கள். போஜனப்பிரியராயிருக்கிறார்கள், பானப்பிரியராயிருக்கிறார்கள். யேசுவையோ, தங்கள் ராஜாவாக எற்றுக்கொள்ள மனமில்லை. மோசம்போகாதீர்கள். கிறிஸ்துவே மெய்யான ராஜா. பிதாவாகிய தேவன் அவரைக் கிரீடதாரியாக்கி 'நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணிவைத்தேன்' என்று விளம்பரம்பண்ணியிருக்கிறார். (சங். 2. 6).

**திருஷ்டாந்தம்.** டில்லி ராஜா இங்கிலீஷ்காரர் முதல் முதல் வரும்போது மகிமை அதிகம். டம்பம் அதிகம். பின்பு அவன் பட்டணத்தைப் போய்ப் பிடித்துப் பார்க்கும்போது அவன் மகிமை எங்கே?

2, 3 பேர் பீத்தல் வஸ்திரம் தரித்துக்கொண்டு பரிவாரமாய் நின்றார்கள். ராஜ வஸ்திரமெல்லாம் கேவலப்பட்டுப்போயிற்று. பசும்பொன் செங்கோலுக்குப் பதிலாக அவன் கையில் மரக்கோல் மாத்திரமிருந்தது.

இயேசுவே ராஜா. அவர் மேன்மையும், மகிமையும் தற்காலத்தில் மறைவாயிருந்தபோதிலும் பின்பு, பிரத்தியட்சமாய்க் காணப்படும். 'இனி தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்.

ஜனங்களே உங்களுக்கு யார் ராஜா! சவுல் பட்சத்திலிருக்கிறீர்களா தாவீதின் பட்சத்திலா? பாவத்தை நேசிக்கிறீர்களா, யேசுவை நேசிக்கிறீர்களா? இதோ தாவீதின் பட்சத்தில் சிலர் வந்திருக்கிறார்கள். அவர்களைச் சற்று கவனிப்போம். (இன்னும் வரும்).

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

March 1919. Registered No. M 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ. அவன் உள்ளத்திலிருந்து, ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XX மார்ச்சுமீ

23 Jun 1919 ... MADRAS.

## திருநெல்வேலி இந்திய கிறிஸ்தவர்களின் 21-வது கன்வென்ஷன் கூட்டங்கள்–1919.

### 1919 மேமீ 12—15உ முடிய (சித்திரை 30உ வைகாசி 2உ)

கர்த்தருக்குச் சித்தமானால் இவ்வருஷத்துக் கன்வென்ஷன் கூட்டங்கள் மேலேகாட்டிய தெய்திகளில் **பாளையங்கோட்டையில்** கனம் கார் ஐயரவாகளுடைய பங்களாவில் நடத்தும்படி தீர்மானித்திருக்கிறது. முதலாவது கன்வென்ஷன் கூட்டம் இவ்விடத்திலேயே வைத்து நடத்தப்பட்டது. தெலுங்கு நாட்டுக்குப் போயிருக்கும் முதல் மிஷனெரியாகிய கனம் சாமுவேல் பாக்கியநாதன் ஐயரவர்கள் இம்முதல் கன்வென்ஷன் கூட்டத்திலேயே தன்னை மிஷனெரி ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்தார்கள். திருநெல்வேலி சபையானது அடுத்த வருஷத்தில் நூற்றாண்டுற்சவம் கொண்டாடப்போகிறது. விசேஷித்த முயற்சிகள் நமது நாட்டுச் சபைகளில் நடந்துகொண்டிருக்கின்றன. விசேஷித்த பலன்கள் கிடைக்குமென்று நம்பிக்கொண்டிருக்கிறோம். சுவிசேஷ ஊழியத்தை எவ்வாறு பயன்படச் செய்யலாம் என்பது நமது தற்கால பிரயத்தனமாயிருக்கிறது. அதற்கென்று இவ்வருஷத்தில் நாம் கர்த்தருடைய சமுகத்தில் கூடி அவரிடத்திலிருந்து செய்தி பெற்றுக்கொள்ளக்கூடி வருவோமாக. அவரே தமது ஆவியினால் நமக்குப்போதித்து நம்மைப் பெலப்படுத்தி உபயோகப்படுத்துவாராக. கூட்டங்களுக்கு வருகிற சகோதரர் முன்னமே தங்கள் பெயர்களை அடியிற் கண்ட விலாசத்துக்கு எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

கன்வென்ஷன் நடத்தும் சகோதரருக்காக.

R. V. Asirvadam.

Rev. R. V. Asirvadam,
Bishopstowe,
Palamcottah.

## "ஆகையால் நான் என்னை அருவருத்துத் தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான்.

பொருளடக்கம். லெந்தென்னும் உபவாசநாட்களில் முந்தினகாலங்களில் சபையார் தங்கள் பாவத்தை உணர்ந்து தங்கள் மெய்மனஸ்தாபத்தைக் காட்டுகிறதற்கு தூளிலும் சாம்பலிலும் கிடந்து புலம்புவது வழக்கமாம். இப்படிப்பட்ட பாவ உணர்வு-ஆவிக்குரிய துக்கம்-மெய் மனஸ்தாபம்—பட்சாதாபம் மெத்த அவசியம். உன் அறையில் போய்க் கதவைப் பூட்டிச் சாப்பிடாமலும் வெளியேறாமலிருந்ததும் நீங்கள் எப்போதாவது பாவத்தினிமித்தம் துக்கப்பட்டதும உண்டா? சாம்பலில் உட்கார்ந்து மனஸ்தாபப்பட்ட சில ஜனங்களைப் பார்ப்போம்.

I **யோபு என்பவன்.** மிகவும் துன்பப்பட்டான். பணம் போய்விட்டது; சுகம்போய்விட்டது; வாழ்வுபோய்விட்டது; பிள்ளைகள் எல்லாரும் செத்துப்போனார்கள்; வேலைக்காரர் எல்லாரும் மாண்டுபோனார்கள்; ஆடு மாடுகள் ஒட்டகங்கள் எல்லாம் இல்லாமற்போயின. அவனுக்குக் கொடிய வியாதி உண்டாயிற்று. உள்ளங்கால் தொடங்கி அவன் "உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால்" வாதிக்கப்பட்டான். நீச நிலைமை! பரிதாபம்! மனைவி வந்து "தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும்" என்று தூண்டிவிட்டாள். ஆனால் அதிகப் பொறுமையோடு சகித்துவந்தான். தேவனைத் தூஷிக்கவுமில்லை. ஆண்டவரை மறுதலிக்கவுமில்லை. அவ்வளவு கொடிய துன்பத்தைப் பொறுமையோடு சகித்துவந்தான். மனைவியும் அவனை இகழ்ந்தாள். சிநேகிதரும் அவனை அசட்டை பண்ணினார்கள். அவன் பொறுமை அதிகம் என்றாலும் அவனுக்குக் குறைவு இருந்தது. தன் சுயநீதியைப் பாராட்டினான். தான் மெத்த நல்லவன் என்று எண்ணினான் "**தன் பார்வைக்கு நீதிமானாயிருந்தான்" "தேவனைப்பார்க்கிலும் தன்னைத்தான் நீதிமானாக்கினான்."** (32: 1-2). "**என் நீதியைக் கெட்டியாய்ப் பிடித்திருக்கிறேன்; அதை நான் விட்டுவிடேன்"** என்றான் (29: 6). நீச மனிதன்; பருக்களால் நிறைந்தவன்; மண்ணிலும் தூசியிலும் உட்கார்ந்தவன்; தன்னை மகா யோக்கியன் என்று நினைத்துக்கொள்ளுகிறான். அவன் இஷ்டர்கள் வந்து அதைத் தப்பிதம் என்று காட்டும்படி அநேக நியாயங்களைப்பேசி பலப்பிரசங்கங்களையும் செய்தார்கள். பிரயோஜனமில்லை. கடைசியில் தேவன் தாமே வந்து தம்மை வெளிப்படுத்தினார், தம்முடைய வல்லமையைக் காண்பித்தார்; தம்முடைய பரிசுத்தத்தையும் காண்பித்தார்; தாம் பயங்கரமானவர் என்பதையும் காண்பித்தார். ஆ! தேவனுடைய மகிமையையும் வல்லமையையும் அவர் கண்டவுடனே யோபு என்பவன் அதைப் பொறுக்கமாட்டாமல்-"தூளிலும் சாம்பலிலும் இருந்து" தன்னை வெறுத்து மனஸ்தாபப்பட்டான். "**என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன், இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது ஆகையால்" etc.** அவனைப் பாருங்கள்; சாம்பலில்கிடந்துத் துக்கங்கொண்டாடுகிறான். நீங்கள் என் பாவத்தைவெறுக்கிறதில்லை? தேவனைக் காணாததினாலேயே.



சீட்டுவிளையாட்டுச் செய்கையில் கிறிஸ்துவின் காரியங்களைத் திடீரென்றுகண்டு சீட்டுகளைக் கீழேபோட்டுவிட்டுத் தூசியிலே விழுந்து குணப்பட்டான். (பவுல் அப்போஸ்தலனைப்போல) மூட்டி யுத்தம்செய்து எதிரியில் ரத்தம்பீரிட்டு ஓட அவனை அடித்ததில் அந்த ரத்தத்தைக் கண்டவுடனே கிறிஸ்துவின் திருரத்தத்தை நினைத்துக் குணப்பட்டான்.

II **தானியேல் என்பவன்** பெரிய பிரபு. பாபிலோன் தேசத்தில் ராஜா ஒருவனைத் தவிர எல்லாருக்கும் மேலானவன். அந்தப் பெரிய ராஜ்ஜியத்தை அவனே நடத்திவந்தான். கெர்வமில்லையா? உண்டு அரண்மனையில்லையா? உண்டு. உலக விஷயமாய் ஒரு குறைவுமில்லை என்றாலும் அவனைப் பாருங்கள்-வேத புஸ்தகம் வாசிக்கிறான். அதினாலே-தன் பாவத்தையும் யூத சபையின் சகல பாவங்களையுங் கண்டு உணருகிறான். எருசலேமின் பாழான நிலைமையை அறிகிறான். ஆகையால் "உபவாசம்பண்ணி இரட்டிலும், சாம்பலிலும் உட்கார்ந்து தேவனாகிய ஆண்டவரைச் ஜெபத்தினாலும் விண்ணப்பத்தினாலும் தேடத் தன் முகத்தை அவருக்கு நோக்கி மன்றாடுகிறான். 9: 3.

இன்னொருவிசை 3 வாரம் சரியான சாப்பாடில்லாமல் பாவத்தை அறிக்கையிட்டு துக்கங்கொண்டாடினான். 10:2-3. அவன் மகா பக்திமான் என்றாலும் தன்னைப் பெரிய பாவியென்று அருவருக்கிறான். அதோடுகூட சபைக்காகப் பரிதாபப்பட்டுக் கண்ணீர்விடுகிறான்.

யூதசபையில் சில விசேஷித்த பாவங்களிருந்தது. ஓய்வுநாளை மீறுதல், விக்கிரகாராதனை முதலானவைகள். இந்தச் சபையில் பாவங்களில்லையா? **ஓய்வு நாளை மீறுதல்,** குடிவெறி, கெட்டவார்த்தை பேசுதல்.

ஐயோ, கறைப்பட்டது, அசுத்தமானது, உயிரற்றது, நம்மைத் தாழ்த்த வேண்டாமா?

III. **நினிவே ராஜா** அதோ இன்னொருவன், சாம்பலில் உட்கார்ந்து கூக்குரலிட்டு, அழுகிறான். அரசன் தன் ராஜவஸ்திரங்களையும் ரததாம்பர உடுப்புகளையும் களற்றிவிட்டு இரட்டை உடுத்திக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்திருக்கிறான். யோனா 3. 6. சிங்காசனத்தின்மேல் அல்ல, சாம்பலில் உட்காருகிறான். அவன் மாத்திரமல்ல அவன் குடிகளும் அப்படியே இரட்டு உடுத்திச் சாம்பலிலும் தூசியிலும் உடகார்ந்து புலம்புகிறார்கள். என்ன விசேஷம் யோனாத் தீர்க்கதரிசி ஒருநாள்மாத்திரம் நினிவே பட்டணத்தில் வந்து பிரசங்கம் பண்ணினான். வரப்போகிற தண்டனையைக்குறித்து அறிவித்தான்.

இன்னும் 40 நாள் உண்டு. அப்போது நினிவே கவிழ்க்கப்பட்டுப் போம் என்று கூறினன். (3: 4).

40 நாள் தவணை. பொல்லாத பட்டணம். கொடுமை நிறைந்த பட்டணம் (3. 8) அநியாயம் செய்வதும் ஒருவரையொருவர் ஒடுக்கிக் கொல்வதும் அவர்கள் வழக்கம். அங்கே அன்புமில்லை ஐக்கியமுமில்லை. தாழ்மையுமில்லை பரிசுத்தமுமில்லை. அதின் கூக்குரல் வானபரியந்தம் எட்டினது. அதை அடிக்க தேவன் நின்றார். தம்முடைய பட்டயத்தை உருவி ஓங்கி வீசினர். தேவதண்டனைக்குப் பயந்து சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பினர்கள். தேவன் இரக்கம் செய்தார், ஆ! குணப்படாத பாவிகள்மேல் தேவதண்டனை வரும். நிச்சயமாய் வரும். **உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்.**

---

## திருஷ்டாந்தங்கள்.

மிஷனெரி கன்வென்ஷன் நடந்த ஓரிடத்துக்கு விபரீதமான உடை உடுத்திருந்த வயதுசென்ற ஓர் பெண் தற்செயலாய்ப் போனாள். மிஷனெரி சங்கங்கள்' அவைகள் நடத்துகிற வேலை இன்னதென்பது சற்றேனிலும் அவளுக்குத் தெரியாது. ஆனால் கூட்டத்தில் பேசப்பட்டவைகள் அவளுக்குப் பிரியமாயிருக்கவே, முழுநேரமும் அவ்விடத்தில் தரித்திருந்து பேசப்பட்ட சகல வார்த்தைகளையும் ஆவலோடு கேட்டாள். கூட்டம் முடியும் சமையத்தில் பேசினவர் கூடிவந்திருந்தவர்களைப் பார்த்து 'நீங்கள் வீடுகளுக்குப்போய் கிறிஸ்துவின் ராஜ்யம் வரும்படி முன்னிலும் அதிக ஊக்கமாய் உழைக்கவேண்டும் என்றார். திடீரென இந்தக் கிழவி கூட்டத்தில் எழுந்து நின்று, பலத்த சத்தமாய் 'கிறிஸ்துவின் ராஜ்யம் என் வீட்டில் வரும்படி நான் பலமாய்ப் பிரயாசப்படப்போகிறேன்' என்று சொல்லவே கூடியிருந்தவர்களுக்குள் அசைவு உண்டாயிற்று. மெய்தான், நாம் நமது சொந்தக் குடும்பத்திலே, நமது அன்றாடகக் கடமைகளின் மத்தியில் கிறிஸ்துவின் சிந்தையாகிய அன்பு, பட்சம், அனுதாபம் இவைகளைக் காண்பிக்காவிட்டால் வீட்டுக்கு வெளியே நாம் எவ்வாறு கிறிஸ்துவுக்காக வேலை செய்யக்கூடும்!

சிறந்த பக்தனை ஒருவனைப்பற்றிய கதை ஒன்றுண்டு. அதாவது, தேவ தூதர்கள் இப்பக்தனை அதிகமாய் நேசித்தபடியால் அவர்களே தேவனிடத்தில் சேர்ந்து, அவனுக்கு ஓர் நூதன வல்லமை, அல்லது புதிதான ஓர் வரம், அல்லது அவன் முன்னிலும் அதிகப் பிரயோஜனமாயிருக்கத்தக்கதாக ஓர் ஈவு அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். தேவன் அவர்களைப்பார்த்து அவனுக்குப் பிரியமானது என்னதென்று கேட்டு வந்து சொல்லுங்கள் என்றார். அவன் மாறுத்தரமாக, நான் மனுஷருக்குள்



மிகுதியான நன்மைகளைச் செய்யப் பெலனும், அந்த நன்மைகளை நானே செய்தேன் என்று அறியாதிருக்கும் வரமும் வேண்டும் என்று கேட்டான். இது யேசுநாதருடைய சிந்தை. அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார். நாமும் செய்கிற பட்சமான செய்கைகளை இவ்விதமாய்ச் செய்வோமாக.

போஸ்ற்றன் பட்டணத்தில் ஓர் துரைசானி விரைவாய் நடந்துபோகும்போது 9 வயதுள்ள ஓர் பையன் அம்மாளைச் சந்தித்து, 'அம்மா, எனக்குச் சாப்பிட ஒன்றுமில்லை. எனக்குக் கொஞ்சம் பணம் தாருங்கள்' என்று கேட்டான். துரைசானி பிரதியுத்தரமாக, நீ சாப்பிடுகிறதற்குப் பணம் தரமாட்டேன் ஆனால் நீ என்னுடைய குடையைத் திரும்ப ஆபீசுக்குக் கொண்டுபோ. நான் 20 சதம் தருவேன். நீ அந்தப் பணத்துக்குக் காகிதம் வாங்கி வியாபாரம் செய்து என் பணத்தைத் திரும்பத் தந்துவிடுவேன் என்று வாக்குக்கொடு' என்றார்கள். பையன் அதற்குச் சம்மதித்து, அரை மணி நேரத்துக்குள் பணத்தோடு திரும்பி வந்தான். மறு நாளில் கடனில் பாதியைக் கொடுத்துவிட்டான். சீக்கிரத்துக்குள் அந்தப் பட்டணத்திலுள்ள காரிய சித்தியுள்ள வியாபாரிகளில் ஒருவனானன். இவ்விதமாய் ஒருவன் தன்னைச் சார்ந்திருக்கும்படியான பட்சமான ஓர் கிரியைசெய்வது மிகுந்த நன்மை பயக்கும்.

பூர்வத்தில் பிரபுக்களுடைய வீடுகளுக்கிடையில் ஓர் சுவர் மாத்திரம் இருக்கும். அந்தச் சுவர் கல்லினாலும் செங்கலினாலும் கட்டப்பட்டு சீக்கிரத்திற்குள் ஈரமும் உவறும் அதைக்கெடுக்கும். அதற்குமேல் வீட்டுக்காரர் அலங்காரமான துணிகளை அடித்து மறைத்திருப்பார்கள். இதுபோல்தான் சில வேளைகளில் சிலர் பாவத்தை மறைக்கும்படியாக மனஸ்தாபம் காட்டுகிறதுண்டு. ஓர் நாளில் ஓர் ஊரிலுள்ள சபையாரில் சிலர் தங்கள் சபையைச் சேர்ந்த சிலருடைய காரியங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் அபிப்பிராயம் வித்தியாசப்பட்டது. கடைசியாக அவர்களில் ஒருவன் தப்பிதம் கண்டு பிடித்த சபையாருக்குப் பின்வருமாறு தந்தியடித்தான் 'எல்லாம் வெளியாகிவிட்டது. உடனே ஓடிப்போ' என்பதே மறுநாளில் தந்தி யடித்தவனையும் காணமற் போய்விட்டது. அவன் ஓடிப்போன செய்கை தன் பாவத்தை மறைக்கும்படியான செய்கையாகவே இருந்தது.

ஐசுவரியவானான ஒருவர் ஓர்பிரசங்கத்தைக்கேட்டுக் குணப்பட்டார் இவர் ஓர் பெரிய யந்திரசாலை வைத்து நடத்தினவர். அதில் நாடாக்கள் செய்து வியாபாரிகளுக்கு அனுப்புவார். 5 கெஜம் நீளமுள்ள நாடாவைச் சுற்றுகிறதற்காக ஓர் யந்திரம் இருந்தது. ஆனால் அந்த யந்திரம் கால் கெஜம் குறைவானது. சுற்றின நாடாவோ 'ஐந்து கெஜ நீளம்' என்று அச்சிட்டிருக்கும். இபபடிக் கால் கெஜம் குறைத்துச் சுற்றுவதால் அவருக்கு வருஷத்

த்துக்கு மிச்சமான லாபம் கிடைத்து. தான் குணப்பட்ட மறு நாள் யந்திர சாலைக்குப்போய் 5 கெஜ நாடா சுற்றும் யந்திரத்தை எடுத்து குறைந்திருந்த கால் கெஜத்தையும் அகலப்படுத்தி அதுமுதல் $4\frac{3}{4}$ கெஜமல்ல, யதார்த்தமாய். 5 கெஜமே சுற்றும்படி செய்தார். வேலைக்காரரில் ஒருவன் இதைக் கவனித்து, 'துரை மெய்யாகவே குணப்பட்டிருக்கிறார் 'என்றார், நம்முடைய மன மாறுதல் செய்கையில் விளங்குவதாக.

---

## இருதயம் நொறுங்குண்டவர்கள் சங்கீதம் 147: 3.

இருதயம் நொறுங்குண்டவர்கள் தேவ ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள். இருதயக் கடினத்தைக்குறித்து உணர்ந்து துக்கப்படுகிறவர்கள். தேவ ஆவியினால் உணர்த்தப்பட்டு, பாவம் டளிச்சென்று தெரிந்து தங்களுடைய குறைகளை குற்றங்களையும், கடவுளிடத்தில் அறிக்கைசெய்கிறவர்கள். இவர்கள் போராட்டச் சேனையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பாவத்தின் கசப்பை அறிந்து பயம் எழும்பி, அதிகமான வியாகுலம் அடைந்து பெருமூச்சோடு ஜெபம் செய்கிறவர்கள், பாவமன்னிப்படைந்து ஆனந்தக்கண்ணீர் சொரிகிறவர்கள். மனச்சாட்சியில் சமாதானம் பெற்றவர்கள் இரட்சகருடைய இரத்தமாகிய தைலத்தை இருதயத்தில் ஊற்றப்பெற்றவர்கள். இவர்களுக்கு இயேசுவானவர் ஆத்துமநாயகராய் விளங்குகிறார்.

'கர்த்தாவே என் பாவத்திற்காக
நான் துக்கித்தழுவேனாக
துயரப்படுவோர் யாரும்
பாக்யம் அடைவார் பாரும்.'

"1. கர்த்தர் ஆவியில் நொறுங்குண்டவர்களை நோக்கிப் பார்க்கிறார் ஏசாயா. 66: 2. எவர்களை? ஆவியில் நொறுங்குண்டு தேவ வசனத்துக்கு நடுங்குகிறவர்களை, தங்கள் பாவங்களையும் தவறுதல்களையும் நினைத்துப் பிரலாபிக்கிறவர்களை. கர்த்தர் நம்மைக் கண்ணோக்குகிறது ஆஸ்தியைவிட, மேன்மையைவிட அதிக அருமையானது. அவருடைய பார்வை ஆரோக்கியமும், பாக்கியமும் நிறைந்தது. சேனாபதியாகக் கட்டளைகொடுக்கவும் எஜமானாக நம்மை நடத்தவும், பிதாவாக நம்மை சவரட்சணைச் செய்யவும், தேவனாக நம்மைக் காக்கவும், அவர் நம்மை நோக்குகிறார். அவருடைய நாமம் பலத்த அரண். நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருக்கிறான். நாமும் அவரை நோக்கவேண்டும். நாம் இயேசுவை நோக்குவோமானால் இலட்சாதிலட்சம் கண்ணிகளுக்குத் தப்புவோம். கிறிஸ்துவைப்போல சகிக்க ஆயத்தப்படுவோம். ஜெயவீரனைப்போல மேற்கொள்ளுவோம். தேவையானயாவையும் பெற்றுக்கொள்ள, நாம் பயப்படுகிற யாவுக்கும் தப்பிக்கொள்ள நம்முடைய விருத்திக்குத் தடையாயிருக்கிற யாவையும் நீக்க கிறிஸ்து



இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர அவரையே நோக்குவோமாக. மூன்று தரம் மறுதலித்த பேதுருவை உருக்க இரக்கத்தோடு நோக்கிப் பார்த்தார் அவன் மனங்கசந்து அழுதான். பாவமன்னிப்படைந்தான்: விசேஷித்த அப்போஸ்தலன் ஆனான். மூவாயிரம்பேரை ஒரே சமயத்தில் குணப்படுத்தும்படியான வல்லமையான பிரசங்கஞ் செய்தான். இது தேவ பார்வையின் கிருபையே. இயேசுவைப்பார்க்க பேராவல்கொண்ட சுள்ளனை மரத்தின்மேல் இருக்கக்கண்டு நோக்கிப்பார்த்து இரட்சிப்பின் சமாதானம் அருளிச்செய்தார். தேவ பார்வையின் கிரியை நமமில் நடந்தேறியிருக்கிறதா? அது நடந்தேறுவது அத்தியந்த அவசியம் இயேசுவின் கண்கள் நம்மை நோக்கிப் பார்க்கும் நல்ல தருணத்தை அலட்சியம் செய்யாமல் அதை ஆதாயம் பண்ணிக்கொள்ளவேண்டும்.

'கர்த்தாவே இரங்குமேன்,
கடைக் கண்ணால் பாருமேன்,
பாவப் பேயைத் தொலைத்திடும்,
உம்மைக்கிட்டச் செய்திடும்.'

2. நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயமுடையவர்களைக கர்த்தர் புறக்கணிக்கிறதில்லை. சங். 51: 17. ஆனால் பிரியப்படுகிறார். என்ன! தேவனுடைய மட்டற்ற அன்பு நித்திய காலமாய் நமதுமேல் வைக்கப்பட்டிருக்கிறது. அவர் நம்மை நேசித்தபடியினால் தம்முடைய ஒரே பேரான குமாரனை நமக்காக மரிக்கும்படி அனுப்பினார். தம்முடைய பரிசுத்த ஆவியை நம்முடைய இருதயங்களில் ஊற்றினார். கிருபையின் மூலமாய் நல்ல நம்பிக்கையும் தந்தார். தேவனே இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களிலே மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார், என்னைப்பற்றின அவருடைய நினைவுகள் இனிமையானவைகள் சங்கீதக்காரன் சொல்லுகிறதாவது 'நீர் என்மேல் பிரியமாயிருக்கிறீர் என்று அறிவேன்' கர்த்தராகிய இயேசுசுவாமி அழைக்கிறார். 'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது'. பாவியான ஸ்திரீயை ஏற்று இனிப்பாவஞ்செய்யாதே என்றார். பரிசேயராலும், அதிகாரிகளாலும், பெரிய பாவி, நீசன் என்று தள்ளப்பட்ட ஆயக்காரனை இயேசு சுவாமி ஏற்றுக்கொண்டு அவனுக்குப் பாவத்திலிருந்து விடுதலை கொடுத்தார். யூதர்களால் தீட்டாய் எண்ணப்பட்ட

சமாரிய ஸ்திரீயை அங்கீகரித்தார். தன் பாவத்தை உணர்ந்து கண்ணீரால் அவர் திருப்பாதத்தைக் கழுவின ஸ்திரீயை இரட்சித்தார். சாந்தகுணம் உள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிக்கிறார். 'கர்த்தர் உங்களைத் தமது ஜனமாக்கிக்கொள்ளப் பிரியமானபடியினாலே, தம்முடைய மகத்துவமான நாமத்திற்காக தமது ஜனத்தைக் கைவிடமாட்டார்'.

கர்த்தருக்கே மகிமை
எனக்கா காது பெருமை,
அவர் பாதம் தாழ்ந்து பணிவேன்,
கிருபைக்கே துதி என்பேன்.'

3. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருக்கிறார் சங். 34: 18. 'அவர் உன்னைவிட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை' 'அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே' அவர் சமீபமாயிருக்கிற கடவுள். தீர்த்த யாத்திரை செய்யவேண்டுவதில்லை மலைகளுக்கும், கெபிகளுக்கும், போய் அருந்தவம்செய்து சந்நியாசி வேடம் பூண்டுதான் கடவுளோடு ஐக்கியமாகவேண்டும் என்பதும் அல்ல. ஆனால் அவர் வாசமாயிருக்க விரும்பும் இருதயம் பெருமையில்லாத இருதயமாயிருக்கவேண்டும் 'பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்' என்று பார்க்கிறோம். நம்முடைய இருதயத்தின் தோற்றமெல்லாம் அவருக்குத் தெரியும். தேவன் நமக்குச் சமீபமாயிருக்கிறார் என்கிற இந்த அறிவு நம்மைப் பரிசுத்த வழிக்கே நடத்துகிறது. அவருக்குள் நாம் ஜீவிக்கிறோம், அசைகிறோம், பிழைக்கிறோம் மெய்த் தேவபக்தியினிமித்தம் பகைக்கப்பட்டு சிங்கக்கெபியில் தள்ளப்பட்டுக் காக்கப்பட்ட பக்திமானாகிய தானியேல் என்ன சொல்லுகிறார். கர்த்தர் சமீபமாகவேயிருந்து நமது துன்பத்தில் நம்மைக் காத்து அவருடைய திருநாமத்தை மகிமைப்படுத்துகிறார் என்பது தானே. கர்த்தர் சமீபமாயிருந்து இரட்சிப்பருளும் அதிசயத்தை, அருஞ்சோதனையில் அகப்பட்டு நரகாக்கினிக்குத் தப்பின யோசேப்பென்னும் வாலிபன் அறிவிக்கிறானல்லவா! இப்பக்தர்கள் நொறுங்குண்ட இருதயமும் நருங்குண்ட ஆவியுமுள்ளவர்களே. நம்முடைய இருதயத்தை ஆண்டவரின் வசனமாகிய கண்ணாடியை வைத்து நன்றாய்ப் பரிசோதனை செய்வோமாக.

"என் பெருமை அகற்றும்
என்னைப் பார்க்கச் செய்திடும்
யாரிலும் நான் கடையேன்
பாவிகளில் சிறந்தோன்
என்பதைக்கண்டு நான்
வெட்கப்படச் செய்திடும்"



4. இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலைக் கூறுகிறார். ஏசாயா. 51: 1.

பெலவீனங்கள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. அறிவீனராயும் பெலவீனராயும் இருக்கிறோம். தீமையை எதிர்க்கப் பெலவீனர், நன்மை செய்யப்பெலவீனர், நன்மைபெறப் பெலவீனர். நம்முடைய பெலவீனங்களில் அநேகம் நம்மிடத்திலிருந்தே உண்டாகிறது. நம்முடைய குணங்களிலிருந்து உண்டாகிறது. சரீர வியாதியினின்று உண்டாகிறது. நம்முடைய திறமைக் குறைவினின்று உண்டாகிறது. இப்படிப் பெலவீனராயிருந்தாலும் இயேசு நம்மோடு சகதாபப்படுகிறார். நமக்குப் பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார். நமக்குத் தேவையானதை அவர் போதிக்கிறார். அருமையான வாக்குத்தத்தங்களண்டைக்கு நம்மை நடத்துகிறார். பலத்த ஜெபவாஞ்சையை உண்டுபண்ணி போராடப் பெலனைத்தந்து, ஜெபம் செய்யும்போது பரிசுத்த வாஞ்சையாகிய அனலை மூட்டுகிறார். நமக்கு வேண்டியதின்னதென்று நன்றாய் உணரச்செய்து பெருமூச்சுக்கள் எழும்பப்பண்ணுகிறார். நம்முடைய மனோவாக்குக் காயங்களில், பரிசுத்தத்தில் நித்தமும் தேற ஆவியின் பெலனைத் தேடுவோமாக. இயேசுவானவர் சாமர்த்தியனான வைத்தியர். அவர் தம்முடைய ஜனங்களுடைய விழுதல், நொறுங்குதல், முறிவுகள் முதலியவைகளைச் சுகப்படுத்துகிறார். இருதயத்திற்குச் சுகம் அளிக்கிறார். விசுவாசியே உன் இருதயம் கடினப்பட்டு அலைக்கழிந்து அவிசுவாசங்கொண்டு காயப்பட்டிருக்கிறதா? இயேசு அதைச் சுகப்படுத்துவார். ஆயாசப்பட்டதையும் சாகக்கிடக்கிறதையும், செத்துப் போனதையும் அவர் உயிர்ப்பிக்கிறார். பணமுமின்றி காசுமின்றி சுகப்படுத்துகிறார். ஆனால் நம்மை முற்றிலும் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் மற்றெல்லா மருந்துகளையும் தள்ளவேண்டும் அவர் கொடுப்பதையெல்லாம் கசப்பானாலும் தித்திப்பானாலும் சாப்பிடவேண்டும். அவரைத்தொடு, அவரை நம்பு, பாக்கியவானாயிரு: சுகமடைந்ததற்கு நன்றியறிந்தவனாயிருந்து மற்றவர்களை அவரிடத்தில் கொண்டுவருகிறதினால் உன் நன்றியறிதலைக் காட்டு. இந்த நல்ல வைத்தியனைக் குறித்து மற்றவர்களிடத்தில் புகழ்ந்து பேசு. அவர் கேட்ட கேள்வியை மறவாதே. சுத்தமானவர்கள் பத்துப் பேரல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? அன்பர்களே இயேசுவிடம் வந்து குணமாகுங்கள். இயேசுவானவர் உரைத்த நல்ல சமாரித்தன் உவமையைக் குறித்துத் தியானியுங்கள்.

'நம்பிக் கெட்டவனில்லையே
நம்பாதவனுக்குத் தொல்லையே
கிறிஸ்தோர் துக்கிப்பதேன்?
சந்தோஷிக்க வேண்டுமே
குறைகள் உண்டாவதேன்?
சொந்த ரட்சகர் உண்டே

ரத்தம் சிந்தி மீட்டார்
அவர் விண்ணப்பம் கேட்டார்,'

5. நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறார். ஏசா. 57: 15. நீர் எங்களுடனே தங்கியிரும் என்று இயேசுவைப் பார்த்துச் சொல்வோமாக. தம்முடைய வசனத்தை நமக்குத் திறந்து காட்டி நமது உள்ளத்தில் தமது அன்பென்னும் அனல் மூட்டி சொல்லி முடியாத நன்றியறிதலாலும், மகிழ்ச்சியாலும், நம்மை நிரப்பவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்வோமாக. அவர் நம்மோடு இருக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறதிலும், நாம் அவரோடிருக்கவேண்டுமென்று அவர் அதிகமாய் விரும்புகிறார். நாம் கர்த்தரோடிருக்கையில் அவ நம்மோடிருக்கிறார். நாம் இரட்சகருடைய சமுகத்தை அனுபவித்தது . ா, அனுபவியாவிட்டால் சந்தோஷம் இல்லை. அவர் சமுகந்தான் மோட்ச ின் இன்பம். அவர் சமுகம் நம்முடைய சகா துக்கத்தையும் போக்கு சஞ்சீவி பூமியிற் நமக்கு நேரிடும் சகல துன்பத்தையும் இன்பமாக்குகிற அமிர்தம் துன்பத்துக்குத் தாய் பாவம். தேவனை விட்டுப்போகிறது தான் எல்லாத் துன்பத்திற்கும் மூலம். மீறுதல் தான் அதற்குக் காரணம். ஆனால் தேவன் நம்மோடு தங்கியிருக்கிற சமயங்களில் துன்பம் உண்டா? அது நீதியினிமித்தம் வருகிற துன்பம். அவருடைய வசனத்தில் கண்டிருக்கும் எந்தக் கடமையை நிறைவேற்றுதலிலும், பரதேசியாய் நாம் நடக்கும்பாதையில் நேரிடும் எந்த மோசத்திலும். அன்னிய நாடாகிய இந்த உலகத்தில் உண்டாகும் எந்தத் துன்பத்திலும் நம்மோடிருப்பேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிறார் அவருடைய தங்குதல், சமுகம் நம்மைத் தைரியப்படுத்தும் நல்ல காரியத்துக்கு நம்மை எழுப்பி ஏவும் தேவன் நம்மோடிருந்தால் அவருடைய கிருபையின் மிகுந்த ஐசுவரியத்தில் நமக்கிருக்கும் அநுபவத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவோம். இவர் நமக்குள் வாசஞ்செய்கிறதை.

"நம்பி நீ இளைப்பாறு
அவர் வழிகாட்டுவார்
அவர் உண்மையில் தேறு
உன் குறைவை நீக்குவார்
அவர் உண்மையைப் படி
பின்செல் அவர்காலடி"

இதை வாசிக்கிறவர்களே உங்கள் இருதயம் செம்மையாகயிருக்கிறதா?
அது நொறுங்குண்டு நருங்குண்டிருக்கிறதா?
பாவத்தை விரோதிக்கிறதா?
பரிசுத்தம் பெற்றுச் சமாதானம் அடைந்திருக்கிறதா?



## நாங்கள் உம்முடையவர்கள், உமது பட்சத்தில் இருப்போம். 1 நாளா. 12: 18. (தொடர்ச்சி)

1. **மனமாறி வந்து நின்றார்கள்.** அவர்கள் யாரென்று கவனித்துப் பாருங்கள். அவர்களில் சிலர் பென்யமீன் புத்திரர். பென்யமீன் கோத்திரம் சவுலின் கோத்திரம். அப்படியானால் இப்போது வந்தவர்களிலனேகர் சத்துருவின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். முன்னே, தாவீதை விரோதித்தார்கள். இப்பொழுதோ மனமாறி மெய்யான ராஜாவைச் சேவிக்க தீர்மானித்தாகள். நாங்கள் உம்முடையவர்கள் என்று சொன்னார்கள். அப்புறம் காத்தியரில் பராக்கிரமசாலிகள் சிலரும் தாவீது பட்சமாயும் சேர்ந்தார்கள். முந்தி எதிர்பட்சத்தில் நின்றவர்கள் அங்கே பராக்கிரம கிரியைகளைச் செய்தவர்கள்.

பவுல் அப்போஸ்தலன் எப்படி எதிர் பட்சத்தில் நின்று மகா பராக்கிரமசாலியாய் போராடி கிறிஸ்து மார்க்கத்தை அழிக்க தன்னால் இயன்ற மட்டும், பிரயாசப்பட்டானோ அப்படியே இவர்களும் சவுல் ராஜா பட்சத்தில் தாவீதுக்கு விரோதமாய்ப் பலமாய் யுத்தம் செய்திருக்கலாம். இப்பொழுதோ மனமாறி தாங்கள் துரோகம் செய்வது சரியல்ல என்று வந்து 'நாங்கள் உம்முடையவர்களென்று அறிக்கையிட்டார்கள்'.

இன்னும், அதைவிட பெரிய மாறுதல் என்னவென்றால் சவுலின் சகோதரரில் 3000 பேர் வந்து சேர்ந்தார்கள். அதுவரைக்கும் அவர்களில் மிச்சமானவர்கள் சவுலின் குடும்பத்தைக் காப்பாற்றப் பாாத்தார்கள். சவுலின் காரியத்தை ஸ்திரப்படுத்தவும், தாவீதின் காரியத்தை அழித்துப் போடவும, பலத்த பிரயத்தனங்களைச் செய்தவர்கள் தாவீதின் பகைவர் இப்போதோ பிரிந்துவந்து மறு பட்சத்தை சேர வந்திருக்கிறார்கள். நாங்கள் உம்முடையவர்கள். வந்த மற்றெல்லாரும், இதுமட்டும் தாவீதின் பட்சத்தில் தைரியமாய் நில்லாதவர்கள் மனமாறி வந்திருக்கிறார்கள். 'ஆ ஜனங்களே நீங்கள் பிசாசை சேவித்தது போதாதா. உலகத்தை நேசித்தது போதாதா. மாம்சத்தைப் பேணிக்கொண்டது போதாதா. நீங்கள் மறுபட்சத்தில் நிற்பது மோசம் என்று தெரியாதா?

2. **மனோதைரியமாய் வந்து நின்றார்கள்.** பயமேயில்லை, நிசம் தான். சவுலின் பட்சத்தில் நிற்கிறவர்கள் அநேகர், தாவீதின் பட்சத்தில் நிற்கிறவர்களோ சிலர். என்றாலும் தாவீது அரசனே மெய்யான ராஜாவென்றும், அவனுடைய பட்சத்தில்தான் ஜெயம் கிடைக்கும் என்றும், உணர்ந்து தைரியமாய் வந்து நின்றார்கள். பெரிய கூட்டத்தை விட்டுப் பிரிந்து சிறுகூட்டத்தில் வந்து நின்றார்கள். வீட்டையும் நாட்டையும் விட்டு வனாந்தரத்திற்கு வந்தார்கள். சுகபோகங்களைவிட்டு கஷ்டம் அனுப

விக்க வந்தார்கள். ஏனென்றால் வரப்போகிற ஜெயத்தையும் மகிமையையும் நம்பி விசுவாசித்தார்கள். மோசேயினுடைய தீர்மானம் தெரியுமா?

எபிரே. 33: 25—26. '**அநித்தியமான பாவச்சந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்.**

தாவீதோடு பாடுபட்டால் தாவீதோடு மரிப்போம் என்று அறிந்தார்கள். ஆகையால் பயப்படாமலும் அஞ்சாமலும் வந்து முற்றிகை செய்தார்கள். பயங்காளிகளல்ல, பராக்கிரமசாலிகளே. பராக்கிரமம் என்கிற வார்த்தை இங்கே திரும்பத் திரும்ப வருகிறது பயம் என்கிறது ஒருவிசையாவது வரவில்லை. யேசுவின் பட்சத்தில் நிற்கிறவர்களுக்கு தைரியம் வேண்டும். ஏன் பயப்படவேண்டும்?

3. **உத்தம இருதயத்தோடு வந்து நின்றார்கள்.** இந்த ஜனங்கள் வருகிறதைக் கண்டு தாவீது அவர்களை உடனே நம்பவில்லை. அவர்கள் உண்மையைச் சோதித்துப் பார்த்தான். இதுமட்டும் எதிரியின் பட்சத்தை சேர்ந்தவர்கள் என்றறிந்து சந்தேகப்பட்டான். ஆகையால் அவர்களுக்கு எதிர்கொண்டுபோய் '**நீங்கள் எனக்கு உதவிசெய்ய சமாதானமாய் வந்தீர்களானால் என் இருதயம் உங்களோடு இசைந்திருக்கும். என்னை என் சத்துருக்களுக்குக் காட்டிக்கொடுக்க வந்தீர்களேயாகில் தேவன் அதைப் பார்த்து கண்டிப்பாராக என்றான்**' உண்மை என்றால் தேவதயவு, இல்லையெனறால் தேவதண்டனை. உண்மையுள்ளவர்கள் என்று அறிந்தபின்பு மாத்திரம் சேர்த்துக்கொண்டான். சிநேகிதரே! உங்கள் உண்மை கர்த்தருக்குத் தெரியும் வஞ்சகமும் அவருக்குத் தெரியும். இயேசுநாதருக்குத் துரோகம் செய்யாதேயுங்கள். **உண்மையுள்ளவர்கள்** என்று கோவிலில் காட்டி பின்பு உண்மையில்லாதவர்களாய்க் காணப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். **உண்மைத் தப்பு** தேவனுக்கு அருவருப்பு. உண்மையில்லாமல் வந்து தன்னைப் பிரதிஷ்டை செய்வதுபோலப் பாசாங்கு காட்டிய அனனியா சப்பீராளுடைய சரித்திரத்தை நினைத்துக்கொள்ளுங்கள்.

ஆலயத்தில் பாவ அறிக்கைசெய்து அப்புறம் ஜனங்களை அடிக்கப் போனவன். கர்த்தருடைய விஷயத்தில் கபடமாய் நடப்பது மகா மோசம். உண்மையோடே வாருங்கள். இயேசு மகா ராஜாவின் பட்சத்தில் நின்று கொள்ளுங்கள்.

---

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.



April 1919. Registered No. M. 163

23 JUN 1919 ... MADRAS

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XX ஏப்ரில் 1919

## The Easter Message

### உயிரோடிருக்கிறேன் வெளி. 1: 18.

யாக்கோபு என்பவன் விருத்தாப்பியனானபோது அவனுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. தன் நேசமகனாகிய யோசேப்பு காட்டு மிருகங்களால் பீறப்பட்டு இறந்து போனான் என்று நினைத்திருந்தான். துன்பத்தின் மேல் துன்பம் அவனுக்கு நேரிட்டது. 'காரியங்கள் எல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது என் நரைமயிரை சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள் என்று முறையிட்டான். மரணம் எப்போது வரும்? எப்போது வரும்? என்று வேறே கதியில்லாதவனாய்க் காத்திருந்தான். அப்படிப்பட்ட சமயத்தில் அவன் காது குளிரவும், மனம் மகிழவும் தக்கதாக நல்ல செய்தி அவனுக்கு அறிவிக்கப்பட்டது. **யோசேப்பு உயிரோடிருக்கிறான். அவன் எகிப்து தேசத்துக்கெல்லாம் அதிபதியாயிருக்கிறான்** (ஆதி. 45: 26) இறந்துபோனான் என்று தான் முந்தி நினைத்த அந்த நேசகுமாரன் இன்னும் உயிரோடிருக்கிறான். அது மாத்திரமல்லாமல், வயது சென்ற அந்தத் தகப்பனை ஆதரிக்கவும், போஷிப்பிக்கவும் தக்கதாக, பெரிய தேசாதிபதியாயிருக்கிறான். நல்ல சமாச்சாரமல்லவா? யாக்கோபு இதைக் கேட்டவுடனே முதலில் நம்பாதிருந்தபோதிலும், பின்பு யோசேப்பு அனுப்பின வண்டிகளைப் பார்த்து வாஸ்தவம் என்று அறிந்து, ஆவி உயிர்த்தவன் போல சந்தோஷமடைந்து **என் குமாரனாகிய யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறான் இப்போதும் என்று ஆனந்த சாகரத்தில் மூழ்கினான்.** (ஆதி. 45: 28).

இதோ! இந்தப் பண்டிகை நாளில் அப்படிப்பட்ட நல்ல செய்தி நமக்கு அறிவிக்கப்படுகிறது. சிலுவை அண்டையில் நின்று நம்முடைய

ஆண்டவர் பாடுபடவும் ஜீவனைவிடவும் பார்த்தோம். அப்புறம் கல்லறையிடத்தில்போய் உயிரற்ற அவருடைய திருச் சரீரத்தை அடக்கம்பண்ணவும் கண்டோம். மரித்துப்போனார், போய்விட்டார். இனி ஒன்றுமில்லை என்று துக்கித்தோமா? இதோ, அந்தப் பரம நேசருடைய சத்தம் இன்றைக்கும் நமமுடைய காதில் தொனிக்கிறது. **பயப்படாதே, மரித்தேன் (நிகழ்) ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்.** என்றும் திருவுளம்பற்றுகிறார். ஜனங்களே, இந்தப் பண்டிகை விளம்பரத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள். **'இயேசு ரட்சகர் உயிரோடிருக்கிறார் அவர் விண்ணத்துக்கும் பூமிக்கும் அதிபதியாயிருக்கிறார்'.** தம்முடைய ஜனங்களை ரக்ஷிக்கவும், ஆதரிக்கவும், முடிவுபரியந்தம் காப்பாற்றவும் உயிரோடிருக்கிறார். ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்! இந்தச் செய்தியைக் கேட்கும்போது, நம்முடைய ஆவி உயிர்க்கிறது! இல்லையா? என் ரக்ஷகராகிய இயேசு இன்னும் உயிரோடிருக்கிறார். இதுபோதும், எனக்கு வேறொன்றும் வேண்டாம். நான் ஒன்றுக்கும் பயப்படேன் என்று நாம் களிகூரவேண்டாமா?

**'உயிரோடிருக்கிறேன்'** தெலுங்கு நாட்டில் ஒரு போதகர் சுவிசேஷத்தை அறிவித்து வந்தார். ஒரு நாள் அந்தச் சுவிசேஷத்தை முற்றிலும் அறியாத ஜனங்களுடைய நடுவில்போய் ராக்காலத்தில் துப்பட்டியை விரித்து ஒளிச் சித்திரப்படங்களைக்காட்டி [Magic Lantern] அருமை ரக்ஷகருடைய ஜீவிய சரித்திரத்தை அறிவித்தார். அந்தப் படங்களில் ஆண்டவருடைய ஜெனனம், அற்புதம், உவமைகள் முதலான விசேஷங்களை விவரித்து பின்பு அவர் பாடுபட்ட சங்கதியையும் விளக்கிக்காட்டினார். அவ்வளவு நல்ல ரக்ஷகரைச் சிலுவையில் அறைந்த கொடுமையைப் பார்க்கும்போது அந்த ஊர் ஜனங்கள் பெருமூச்சுவிட்டார்கள். எல்லாம் முடிந்தது என்று நினைத்தார்கள். அப்போது அந்தப் போதகர் 'ரக்ஷா பெருமானுடைய சரித்திரம இன்றும் முடியவில்லை. நாளைச் சாயந்திரம் நீங்கள் திரும்பவும் வந்து கூடினால் மீதியான பாகத்தை அறிவிக்கிறேன்' என்றார். ஊரார் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.' மரித்துப் போனாரே இயேசு ரக்ஷகர், இனி மீதிச் சரித்திரம் ஏது, எந்த மனுஷனும் மரித்த பின்பு ஒன்றுமில்லையே' என்று அதிசயத்தோடு போய்விட்டார்கள். மறுநாள் அந்த ஊரெங்கும் பேச்சு அதுதான். ஒரு பெரியவர் மரித்துப்போனாராம், இன்னமும் அவர் ஜீவிய சரித்திரம் முடியவில்லையாம். இதென்ன புதுமை! என்று பேசிக்கொண்டார்கள். சாயந்தர நேரத்தில் ஊரார் எல்லாரும் ஆசையோடு கூடிவந்தார்கள். அந்தப் போதகர் கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்த படத்தைக்காட்டி, அவர் உயிரோடெழுந்தருளின சரித்திரத்தையும் பரத்துக்கு ஏறின மகத்துவத்தையும், பரிசுத்த ஆவியை அனுப்பின விசேஷத்தையும், அவர் இப்போது கிரியை செய்துவருகிற விதத்தையும் அவர்



இனி வரப்போகிற விருத்தாந்தத்தையும் விவரமாய்க் கூறி அறிவித்தார். அந்த ஜனங்கள் வியப்படைந்து இப்படிப்பட்ட அதிசயத்தை நாம் இதுமட்டும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஒருவர் மரித்தும் இன்றும் உயிரோடிருக்கிறாராம், இன்னமும் சரீரத்தோடிருக்கிறாராம். என்று பிரமித்தார்கள். ஆம், சிநேகிதர்களே! பெரிய அதிசயந்தான். ஆனாலும் வாஸ்தவமான சங்கதி கிறிஸ்துநாதர் பேசுகிறார். **'மரித்தேன், ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்'.** இப்போது ஆண்டவருடைய உயிர்த்தெழுதலினாலே உண்டான மூன்று பெரிய நன்மைகளைச் சிந்தித்துக்கொள்ளுவோம். இறந்த காலத்தில் ஒரு நன்மையாகவும், நிகழ்காலத்தில் ஒரு நன்மையாகவும், வருங்காலத்தில் ஒரு நன்மையாகவும் இவைகளை விவரித்துப் பார்ப்போம். இந்த நன்மைகள் மெய்விசுவாசிகளுக்கு மாத்திரம் உரியது. குணப்படாதவர்களுக்கு ஒன்றுமில்லை. கிறிஸ்து நாதர் உயிரோடிருக்கிறது. குணப்படாத பாவிகளுக்குப் பயங்கரமான காரியம். அதினாலே அவர்களுக்குக் கிடைக்கப்போகிற பங்கு ஆக்கினைத் தீர்ப்பு ஒன்றேயல்லாமல் வேறல்ல.

**உயிரோடிருக்கிறார்** ஆகையால் மெய் விசுவாசி.

I. **நீதிமானாக்கப்பட்டான்.** வெளி. 4: 25. அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டுமிருக்கிறார்.

சிலர் நினைக்கிறார்கள். சிலுவை மரத்திலே ஆண்டவர் பாவங்களைச் சுமந்து தீர்த்தார், என் பாவங்களை முற்றிலும் தம்முடைய ரத்தத்தினாலே தொலைத்துப்போட்டார், ஆகையால் அவருடைய மரணப் புண்ணியத்தை நம்பவேண்டுமேயல்லாது அவருடைய உயிர்த்தெழுதலினால் அவ்வளவு பிரயோஜனமில்லை என்று நினைக்கிறார்கள். அப்படியல்ல, கிறிஸ்துநாதர் மரித்தது நிஜம், அவர் நமக்காக ரத்தம் சிந்தி பாவ நிவாரண பலியைச் செலுத்தினதும் நிஜம், என்றாலும் அந்தப் பலியைத் தேவன் ஏற்றுக்கொண்டாரென்று எப்படித் தெரியும். அது பலிதமாகும் என்று எப்படித்தெரியும். அங்கே பாடுபட்ட நாதர் வெறும் மனுஷனானால் அவருடைய மரணத்தினால் நமக்குப் பிரயோஜனமில்லை. அவர் வெறும் மனுஷனாயிராமல் மெய்த் தேவனாயிருந்தார் என்று எப்படித் தெரியும்? அவர் உயிர்த்தெழுதலினால் தெரியும்.

**ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்.** ஒரு காலத்தில் யூதஜாதியார் எல்லாரும் பெரிய மோசத்துக்குட்பட்டார்களாம். அவர்களைக் கொன்றுபோடவும் சங்காரம்பண்ணவும் ராஜ உத்தரவு பிறந்தது. அப்போது எஸ்தர் என்பவள் அவர்கள் பட்சத்தில் ஏற்பட்டு அவர்கள் உயிரைக் காக்கும்படி ராஜாவின் சந்நிதானத்தில்போய்ப் பரிந்து பேசச் சம்மதித்தாள். அப்படி ராஜ சந்நிதானத்தில் துணிந்துபோவது மோசமான காரியம். அப்படித்

துணிந்து போவுவர்களுக்கு ராஜா தன் பொற்செங்கோலை நீட்டினாலொழிய அவர்கள் போகமாட்டார்கள். என்றாலும் எஸ்தர் என்பவள் தன் ஜனங்கள்பேரில் பரிதாபங்கொண்டு 'நான் செத்தாலும் சாகிறேன்' என்று சொல்லி ராஜ சந்நிதானத்தில் பிரவேசிக்கிறாள். நடக்கிற காரியத்தைப் பாருங்கள். ராஜா தன் செங்கோலை நீட்டாவிட்டால் எஸ்தர் சாவாள் யூதர் எல்லாரும் சாவார்கள். என்றாலும் எஸ்தரைக் கண்டவுடனே ராஜாவானவன் அவள்பேரில் பிரியம்கொண்டு தன் கையிலிருந்த பொற் செங்கோலை அவளிடம் நீட்டினான். அவளும் பிழைத்தாள். அவள் ஜனங்களும் பிழைத்தார்கள். அதோ! கிறிஸ்துநாதர் பாவிகளுக்காகப் பரிதபித்து லோக மீட்பராக எற்பட்டு தம்முடைய ரத்தமாகிய காணிக்கையைக் கொண்டு போய் நீதியுள்ள தேவனுடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கிறார். பரிசுத்த பிதாவானவர் தம்முடைய செங்கோலை நீட்டுவாரா? அழிவைக் காண அந்த நேச ரக்ஷகரைப் பாதாளத்தில் விடுவாரா? அல்ல! அல்ல! இதோ அவருடைய விளம்பரத்தைக் கேட்கிறோம். **கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றார்.** சங். 110: 1.

அவரண்டையில் செங்கோலை நீட்டினதுமல்லாமல் உயிரோடிருக்கிறவராகத் தம்முடைய சிங்காசனத்தில் உட்கார வைத்திருக்கிறார். ஆகையால் கிறிஸ்துவின் பலி எற்றுக்கொள்ளப்பட்டது. அவருடைய மரணப் புண்ணியம் பலிதமானது என்று நமக்குத் தெரியும். [Illus பெரிய பாவ நிவாரண நாளிலே பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்ததும், பிராயச்சித்தம் செய்ததும், உயிரோடே வெளியே வந்ததும்.] **நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டிருக்கிறார்.** அநேக வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். அவைகளை நிறைவேற்றக்கூடியவரோ? ஆம் உயிரோடிருக்கிறவராகவும் சர்வ அதிகாரியாகவும் வந்து விளங்குகிறார்.

II. **ரக்ஷிக்கப்படுகிறேன்.** ரோமர் 5: 10. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால் ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரக்ஷிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.

**உயிரோடிருக்கிறார்.** என்? தம்முடைய ஜனங்களை ரக்ஷிக்கவும், காக்கவும் வழுவாதபடி அவர்களைத் தாங்கவும் உயிரோடிருக்கிறார். முன் பார்த்தோமே, யோசேப்பு உயிரோடிருந்ததினால் யாக்கோபு ஆறுதல் அடைந்தான். அது மாத்திரமல்ல, அவன் தேசாதிபதியாயிருக்க அவனுடைய தகப்பன் சகோதரருக்குப் பட்டினி இருக்குமா? இல்லை. சொல்லுகிறான்! **தேவன் என்னை எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிபதியாக வைத்தார், என்னிடத்தில் வாரும், தாமதிக்கவேண்டாம் உம்மைப் பராமரிப்பேன் என்**



றான். அப்படியே ஜீவகாலமெல்லாம் தம் வம்சத்தாரைப் போஷிப்பித்துக் காப்பாற்றிப் பராமரித்துவந்தான்

எனக்காகச் சிலுவையில் மரித்த நாதர் மகிமையோடே உயர்த்தப்பட்டிருக்கிறார். சிங்காசனத்தில் எறி ராஜரீகம் செய்கிறார். என்னை மறந்துபோனாரோ? அல்ல தம்முடைய ஜீவனைக் கொடுத்த அவர் வேறெதைக் கொடாமலிருப்பார். தம்முடைய ரத்தத்தினாலே என்னைக் கழுவின ஆண்டவர் தம்முடைய வல்லமையினாலே என்னைச் சுத்தமுள்ளவனாகக் காக்கமாட்டாரா? காப்பார். நிமிஷந்தோறும் இடைவிடாமல் தம்முடைய வல்லகரத்தினாலே என்னைத் தாங்கி பாவம் செய்யாதபடி என்னைக் காத்து இவ்விதமாகத் தம்முடைய ஜீவனாலே என்னைப் பராமரித்துவருகிறார்.

**நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்** என்கிறார். ஆனால் இந்த வசனத்தில் இன்னொரு கருத்துமுண்டு கிறிஸ்துவின் ஜீவன் மகா வல்லமையுள்ளது. எப்படியென்றால் அப். 2: 24ல் '**தேவன் அவருடைய மரணஉபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை எழுப்பினார், அவர் மரணத்தினாலே கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது.** கிறிஸ்துவையும் அவர் ஜீவனையும் மரணக் கட்டுகளினால் கட்டிப்போடப் பார்த்தார்கள். கூடுமோ? அதோ யூதா மனுஷர் சிம்சோனை இரண்டு புதுக் கயிறுகளாலே கட்டிப் பெலிஸ்தருடைய கையில் ஒப்புக்கொடுக்கப்போனார்கள். பலத்த கயிறுகள் தான்; என்றாலும் என்ன? கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால் அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல் போலாகி அவன் கட்டுகள் அவன் கைகளைவிட்டு அறுந்துபோயிற்று. அந்தக் கயிறுகளின் பெலன் தேவாவியின் வல்லமைக்கு எம்மாத்திரம்? அப்படிப்போல ஆண்டவரை மரணத்தின் கயிறுகளினாலே ஒன்றாய்க் கட்டிப் போட்டார்கள். தப்பமாட்டார் என்று நினைத்துக்கொண்டார்கள். முடியுமா? அவர் மரணத்தினாலே கட்டப்படக்கூடாதிருந்தது. அவருக்குள்ளிருந்த ஜீவன்—நித்திய ஜீவன்—வல்ல ஜீவன் அந்த மரணக் கட்டுகளை அறுத்துப் போட்டது. அவைகள் நெருப்புப்பட்ட நூல்போலாயிற்று. ஆ! இந்த அருமையான உபதேசத்தைப் பாருங்கள். உயிரோடிருக்கிற ரக்ஷகர் தம்முடைய ஆவியை எனக்கும் கொடுக்கிறார். தம்முடைய ஜீவனை எனக்கும் கொடுக்கிறார். மரணக் கயிறுகளை வெகு லேசாய் அறுத்துப்போட்ட—அந்த ஜீவனை என் இருதயத்தில் கொடுக்கிறார். **இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.** அவருடைய ஜீவனாலே ரக்ஷிக்கப்பட்டுவருகிறேன். அவருடைய ஜீவனைத் தன்னிருதயத்தில் பெற்றுக்கொண்ட விசுவாசி பாவத்தினாலே கட்டப்பட்டிருக்கக்கூடுமோ? கூடாதே. பாவத்தின் வல்லமை பெரிதா? அந்த ஜீவனின் வல்லமை பெரிதா? Illus. புகை வண்டி விரைவாய் ஓடிக்கொண்டிருக்கிறது. நீங்கள் அதின் பின்பக்கத்தைப் பிடித்துக்கொண்டு உங்கள் தேக பெலனாலே அதை நிறுத்தமுடி

*யுமா? அது முடியாது. உங்கள் பெலனைப் பார்க்கிலும் அதை ஓடச்செய்
கிற நீராவியின் பெலன் எத்தனை மடங்கு அதிகம். உங்கள பாவக்கட்டுகள்
அறுந்துபோகவும் ஓர் நிமிஷமாவது பாவத்தால் கட்டப்படாமல் எந்நேரமும்
ரக்ஷிக்கப்படவும் விரும்புகிறீர்களா? உயிரோடிருக்கிற ரக்ஷகர் உங்கள் இரு
தயத்தில் வாசஞ்செய்ய இடங்கொடுங்கள். அப்பொது தம்முடைய உயிர்த்
தெழுதலின் ஜீவனாலே உங்களை முற்றுமுடிய ரக்ஷித்தருளுவார்.*

III. **மகிமை அடைவான்.** *நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்
படும்போது நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.*
**கொலோ. 3: 4.** Illus. Bonaparte *முதலில் எளிய மனுஷன். அவன்
பந்துக்கள் எலலாரும் எண்ணிக்கையில்லாதவர்கள். அந்தக் குடும்பத்தை
ஒருவரும் மதிக்கமாட்டார்கள். ஆனால் அவன் போர்செய்து, சத்துருக்களை
ஜெயித்து பெரிய கீர்த்திமானானன். அவனால் அவன் பந்துக்களுக்கும்
கீர்த்தியும் கனமும் உண்டாயிற்று. கடைசியில் பெரிய சக்ரவர்த்தியானன்.
அவன் சகோதரரும் ராஜாக்களானார்கள். அவன் ராஜ்யத்திலும் வல்லமை
யிலும் இனத்தார்க்கும் பங்கு கிடைத்தது.*

*ஆ! கிறிஸ்து என் ஜீவனானல் எனக்குக் கிடைக்கப்போகிற மகிமை
யும், மேன்மையும் இவ்வளவென்றல்ல. இது உலகத்தாருக்குத் தெரியாது.
குணப்படாத கிறிஸ்தவர்களுக்கும் தெரியாது.*

*உயிர்த்தெழுதலில் சிலாக்கியம் கிடைக்கும்.* 1 *கொரி.* **15: 20, 22.**
,, *சரீரம்* ,, **44.**
,, *சுத்தாங்கம்* ,,
,, *(வெற்றி) சிறப்பு* ,, *கொலோ.* **3: 4.**

*இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை.
ஆனாலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம்
அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கி
றோம்.*

Rev. T. Walker.

## கர்த்தருடைய வசனம்

*தேவன் தமது பிள்ளைகளுக்கு அருளியிருக்கும் விசேஷித்த ஈவாகிய
வேதாகமம் விலை மதித்தற்கரிய பூஷணமாகவும், தேவ சித்தத்தை மனுஷ
ருக்கு வெளிப்படுத்தும் விசேஷித்த கருவியாகவுமிருக்கிறது. தேவனு
டைய ராஜ்ஜியத்தின் பிரஜைகள் கைக்கொண்டொழுகவேண்டிய நீதிநூற்
களடங்கிய சட்டப்புஸ்தகம் அதுவே. இந்த அருமையான தேவ வசனம்
வேதாகமத்தின் பற்பல இடங்களில் பற்பல இனிய நாமங்களால் அழைக்
கப்படுகிறது. அவை ஒவ்வொன்றும் கர்த்தருடைய வசனத்தின் தன்மை
யை விளக்கிக்காட்டி விசுவாசிகள் அதை ஏற்றுக்கொள்ளும் விதமென்ன*



*வென்று தெளிவுறக்காண்பிக்கிறது. அவ்வருமையான நாமங்கள், யாதெ
னில்:—*

1. **ஆத்தும ஆகாரம்.** *நமது ஆத்தும ஜீவியத்தின் வளர்ச்சிக்கு
ஏதுவாக நாம் உட்கொள்ளவேண்டிய அருமையான ஆகாரமாக கர்த்தரு
டைய வசனம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தாபரவர்க்கங்கள்
தண்ணீர் இல்லாவிட்டால் வாடி வதங்கிக் கருகிப்போவதுபோல், விசுவாசி
கர்த்தருடைய வசனத்தை நாள்தோறும் ஒழுங்காய் வாசித்துத் தியானித்து
அதைத் தனக்கு ஆத்தும ஆகாரமாக உட்கொள்ளாதபட்சத்தில் அவனு
டைய ஆத்தும ஜீவியம் குன்றி சாத்தானோடு போராடப்பெலனற்று ஜீவி
யத்தில் தோல்வியடைவான் என்பதற்குச் சந்தேகமில்லை. பரிசுத்த பேதுரு
அப்போஸ்தலன் தமது நிருபத்தில் சொல்லுகிறபடி "நீங்கள் வளரும்படி
புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத
ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்." சங்கீதக்காரனைப்போல இந்த
அருமையான ஞானகாரத்தின்பேரில் நமக்கு வாஞ்சை உண்டா? அவன்
அதை எத்தனை அருமையாய் வாஞ்சிக்கிறனென்று பாருங்கள். "அவைகள்
பொன்னிலும் மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனி
லும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்
கிறது." "திரளான செல்வத்தில் களிகூறுவதுபோல நான் உமது சாட்சி
களின் வழியில் களிகூறுகிறேன்." உமது வேதத்தில் மனமகிழ்ச்சியா
யிருக்கிறேன்.' 'உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின.' 'அநேக
ஆயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு
நலம்.' 'உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி.' 'உமது வேதத்தில்
நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். . நாள்முழுதும் அது என் தியானம்.'
'உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள்.
என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்.' 'நான் பொன்னி
லும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படு
கிறேன்.' கருத்தருடைய வசனத்தின்பேரில் இவ்வித வாஞ்சையும் கவன
மும் நமக்கு உண்டா? இல்லையானால் நமது ஜீவியத்தை ஆராய்ந்து பார்ப்
பது அவசியம். வியாதியஸ்தனுக்கு இனிமையான ஆகாரம் முதலாய் ருசி
யற்றுக் காணப்படுவதுபோல் நமது ஜீவியத்தில் கேடுபாடு நிறைந்திருக்கும்
போது கர்த்தருடைய வசனம் நமக்கு இனிமையற்றுப்போவது இயல்பு
'இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்ய கவனமாயிருக்கும்
படி இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக.' யோசுவா*
**1: 8.**

2. **அழிவில்லாத வித்து.** *'என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவ
னுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும்
ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.'* 1 *பேதுரு* **1: 23.** *'வித்துக்கள் பலன்*

கொடுக்கவேண்டுமானால் பக்குவப்படுத்தப்பட்ட நல்ல நிலத்தில் விதைக்கப்படவேண்டியது அவசியம். அதுபோல அழிவில்லாத நித்திய வித்தாகிய கர்த்தருடைய வசனம் நமது ஜீவியத்தில் பலன் கொடுக்கவேண்டுமானால் பரிசுத்த ஆவியானவரால் பண்படுத்தப்பட்ட நிலமாகிய நமது இருதயத்தில் பக்குவப்படுத்தப்படவேண்டும். அப்பொழுது மாத்திரம் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் முதலிய ஆவியின் கனி நம்மில் சிறந்து விளங்கும். கர்த்தருடைய வசனம் நமது மூளையிலல்ல நமது இருதயத்தில் காக்கப்படுவதாக. 'நான் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதபடி உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன். சங் 119: 11.

3. **ஆவியின் பட்டயம்.** 'தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையுமுள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது'. எபிரெயர் 4: 12. நமது ஆத்தும சத்துருக்களோடு போராடும்போது நாம் உபயோகிக்கவேண்டிய ஆயுதமாக கர்த்தருடைய வசனம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. வனாந்தரத்தில் பிசாசினால் சோதிக்கப்படும்போது, அருமை ரட்சகர் சாத்தானுக்கு விரோதமாய் உபயோகித்த ஆயுதம் அதுவே. கிறிஸ்துவின் போர்ச்சேவகன் ஒவ்வொருவனும் எப்பொழுதும் அணிந்துகொள்ளவேண்டிய ஆயுதமும் அதுவே. 'நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்'. எபே 6: 11, 17.

4. **வெளிச்சம்.** 'உமது வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'. சங் 119: 105. பாவ இருளும் அந்தகாரமும் நிறைந்த இவ்வுலகத்தில் தேவனுடைய பிள்ளைகள் இடறி விழுந்துவிடாதபடி கர்த்தருடைய வசனம் வழிகாட்டும் வெளிச்சமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ ஜீவியப் பிரயாணத்தில் நேரிடக்கூடிய பற்பலவிதமான மோசங்கள், இடறல்கள், சோதனைகள் முதலியவற்றைப் பிரத்தியட்சமாகக் காட்டி, அவைகளினின்று விலகும்படி நம்மை எச்சரிக்கிறது. தீபஸ்தம்பத்தைக் கவனித்துச் செல்லாத கப்பல் பாறைகளில் மோதி நாசமடைவதுபோல கர்த்தருடைய வசனத்தைக் கவனித்துத் தீமையைவிட்டு விலகாதவன் ஜீவியத்தில் நாசமடைவான். 'அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில்



பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்'. 2 பேதுரு 1: 19.

5. **கண்ணாடி.** நமது முகத்தின் சரியான தன்மையைக் கண்ணாடி காட்டுகிற பிரகாரம் கர்த்தருடைய வசனம் நமது இயல்பான சுபாவத்தைப் பிரத்தியட்சமாக நமக்குக் காண்பிக்கிறது. கர்த்தருடைய வசனத்தோடு நமது ஜீவியத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மாத்திரம் தேவனுடைய பரிசுத்தத்தின் அளவு இவ்வளவு என்பதையும், அவர் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறதும், விரும்புகிறதுமான தெய்வீக லக்ஷணங்கள் என்னவென்றும் நாம் எவ்வளவு தூரம் குறைவுள்ளவர்களாயிருக்கிறோமென்றும் திரு வசனமாகிய கண்ணாடி நமக்குக் காட்டுகிறது. அவ்விதம் நமது குறைவுகளை நாம் கண்டறியும்போது, நம்மைத் தாழ்த்திப் பரிசுத்த லக்ஷணங்கள் நம்மிடத்தில் காணப்படும்படி வாஞ்சிக்கவும், ஜெபிக்கவும் ஏவப்படுகிறோம். அவ்வசனத்திற்குக் கீழ்ப்படிவது நமது கடமை. 'நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திரு வசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயுமிருங்கள். என்னத்தினாலெனில் ஒருவன் திரு வசனத்தைக் கேட்டும், அதின்படி செய்யாதவனானால் கண்ணாடியில் தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்'. யாக். 1: 22, 23.

6. **நித்திய சுதந்தரம்.** மரணத்தருவாயிலிருக்கும் ஒரு தகப்பன், தன் ஆஸ்திகளைத் தன் பிள்ளைகளுக்கு எழுதிவைக்கும் வண்ணம், கர்த்தருடைய வசனம் தமது பிள்ளைகளுக்குத் தேவன் கொடுத்திருக்கும் சுதந்தரமாயிருக்கிறது. 'உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக்கொண்டிருக்கிறேன். அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி' என்பது சங்கீதக்காரனின் அனுபவம். கர்த்தருடைய வசனத்திலடங்கியிருக்கிற ஏராளமான அருமையான வாக்குத்தத்தங்கள் யாவும் நமது சுதந்தரமே. ஆயினும், நாம் சொந்தம் பாராட்டி, அவைகளை நமக்குரியதாக எடுத்துக்கொள்ளாதபட்சத்தில் அவைகளால் நமக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை. 'மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழுவதுபோல நான் உமது வார்த்தையின்பேரில் மகிழுகிறேன்'. சங். 119: 162.

7. **ஆலோசனைக்காரன்.** நமது துன்பதுயர சமயங்களிலும், சோர்பு சந்தேகங்களுக்கு இடங்கொடுத்து மனந் தடுமாறும் வேளைகளிலும் கர்த்தருடைய வசனம் சமயத்திற்கேற்ற ஆலோசனைசொல்லி நம்மை ஆற்றித் தேற்றி தைரியப்படுத்தும் சிறந்த ஆலோசனைக்காரனாக இருக்கிறது. 'உமது சாட்சிகள் எனக்கு இன்பமும் என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது'. சங். 119: 24 கர்த்தருடைய வசனத்தை நம்பி, அதில் சொல்லப்பட்டிருக்கிற ஆலோசனைகளுக்கு இணங்கி, நமது வழிகளைச் சீர்ப்படுத்திக்கொள்ளும் பட்சத்தில், நமது ஜீவியத்தில் சந்தோஷம் நிலைகொண்டிருக்குமென்பதற்கு ஐயமில்லை. சங்கீதக்காரனைப்போல ஆண்டவரை நோக்கி,

'உமது அடியேனை உமது கிருபையின்படியே நடத்தி உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்'. என்று ஜெபித்துவருவோமாக.

---

## நான் உம்மை விடுகிறதில்லை 2 இராஜா 5: 30

**உயிர்ப்பிக்கப்படும் வரையில் நான் உம்மை விடுகிறதில்லை.** செத்த பிள்ளையை உயிர்ப்பிக்கும் வரையில் பாவத்துக்கு மரிக்கவேண்டியவர்களாகிய நாம் (ஞானஸ்நானத்தின்படி) பாவத்திலே நிலைத்திருந்தோமானால் செத்திருந்தோமானால் மேட்டிமை, பொறாமை, பகை, சண்டை, துற்குணம், அசுத்த ஜீவியம் முதலிய பாவங்களினால் நிறைந்து வெளிச்சிறப்புக்காக உல்லாச உடைகளை உடுத்தியிருந்தோமானால் நாம் செத்த பிரேதங்களாய் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டவர்கள். நம்முடைய ஜீவியம் மாறவிடாப்பிடியாய்ப் பிடிப்போமாக. நம்முடைய பெற்றோர் சிநேகிதர் நமக்காக அழுது ஜெபித்துக் கண்ணீர் விடுவார்களாக. நம்முடைய குடும்பம் சபை நாடு தேசம் உயிர்ப்பிக்கப்பட ஊக்கமாய் ஜெபிப்போமாக. அவிசுவாசம் வேண்டாம். முன்காலத்தில் நமது சபை நல்ல ஸ்திதியிலிருந்தது. இனிமேல் அப்படியிராது என்று சந்தேகிக்கவேண்டாம். உயிர்ப்பிக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார். நமக்காக நமது நாட்டுக்காக நமது சபைக்காக நமது சிநேகிதருக்காக கெஞ்சி ஊக்கமாய் ஜெபிக்கிறவர்கள் எத்தனைபேர்?

2. **வரம் பெறும்வரையில் நான் உம்மை விடுகிறதில்லை.** 2 இரா. 2: 6. [எலியாவின் வரம் எலிசாவுக்குக் கிடைக்கும்வரை யாக்போக்கு ஆற்றின் கரையில் யாக்கோபு.] 'பரமபிதவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தாவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? உமது பரிசுத்தாவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும் என்று ஜெபிப்போமாக. நமக்கு நாலுதிசைகளுண்டு. வடக்கிலிருந்து வாடைக் காற்று வீசுகிறது. வடக்குத் திசையை நோக்கிப்பார்த்து உலகமுழுவதும் இப்படியேயிருக்கிறதென்றெண்ணி ஆத்துமாவில் குளிர்ந்த ஜீவியம் செய்யாதிருப்போமாக. நம்முடைய பாவம் மன்னிக்கப்பட்டிருக்கும் என்று நினைக்கலாம். ஆனால் குளிர்ந்த ஜீவியத்திற்கு எச்சரிக்கையாயிருப்போமாக. பெந்தேகோஸ்தேயின் ஆவியைப்பெற்று அவருக்காக வேலைசெய்வோமாக. தெற்கை நோக்கிப் பார்த்தும் வெயில், தாங்கமுடியாத களைப்பு, சோம்பேறித்தனம் மேலிடுகிறது இனிமேல் அவருக்காக கிரியை நடப்பிக்க முடியாது என்று எண்ணவேண்டாம். மேற்கை நோக்கிப்பார்த்து சூரியன் அஸ்தமிக்கிறது. வேலைசெய்யமுடியாது. எல்லாம் முடிந்து விட்டது என்று நினைக்கவேண்டாம். பகற்காலமிருக்குமட்டும் நம்மை ஆட்கொண்ட கர்த்தரின் நாமத்தைப் பிரஸ்தாப்படுத்துவோமாக கூறி அறிவிப்போமாக. சுவிசேஷப் பண்டிகையில் அஞ்ஞானிகளான சிநேகிதர் சிநேகிதிகள் இனத்தார் அக்



கம் பக்கத்திலுள்ளவர்களுக்கு. அதுவே ஆவியின் வரத்தைப் பெற்றதற்கு அத்தாட்சி. ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்தான். 365 வருஷம் உயிரோடிருந்தான். 365 நாள் ஒருவருஷம். சூரியனைப் பூமி சுற்றுகிறது. ஒரு நாள், ஒருவாரம், ஒருமாதம், ஒருவருஷம், சிலவருஷங்கள் குளிர்ந்த ஜீவியம்பண்ணினோமா? இடைவிடாது பரிசுத்தாவியால் நிரப்பப்படும்படி ஊக்கமாய் ஜெபிப்போமாக.

3. **மரணபரியந்தம் நான் உம்மை விடுகிறதில்லை.** ரூத், 14: 16. ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப் போனாள். சொந்த இனஜனம் நாட்டின் நேசம் ஒருபக்கம் மாமியின்மேல் நேசம் மறுபக்கம். எது அதிகப்பட்டது? மாமியின் நேசம் வெளிப்படையானதே. சொற்ப நேரத்திற்கே. உலகநேசம் ஒருபக்கம். கிறிஸ்துவின்மேல் நேசம் மறுபக்கம். எது அதிகப்படுகிறது? எது நிஜமானது? ஜெபக்கூட்டங்கள் ஆராதனைக்கும் ஆசைக்காட்டிக்கொள்ளுகிறது. பரிகாசக் கூட்டங்கள், கெட்ட தோழர்கள் சகவாசத்தையும் விரும்புதல். ஒன்றைவிடவேண்டியதிருக்கும், மற்றொன்றைப் பிடிக்கவேண்டியதிருக்கும். எதை நோக்குகிறாய்? கர்த்தர் வாக்குப்பண்ணினகானானையா? அஞ்ஞானிகளின் நாடான மோவாபையா? கிழக்குத்திசையாகிய சூரியன் உதிக்கும் திசையைப்பார். நீதியின் சூரியனாகிய இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பார். அவரையே நோக்கிப்பார். நீ அவருக்குக் கீழ்ப்படி. காப்பாற்றப்படுவாய் ஆசீர்வதிக்கப்படுவாய். பிரகாசமடைவாய், மகிமையடைவாய் அவரைப்போல் மறு ரூபமாக்கப்பட்டு அவரைத் தரிசிப்போம். அவரோடிருப்போம்.

---

## திராக்ஷ தோட்டத்தின் வேலை

மூன்று சுயாதீனப் பிரசங்கிகள் இருந்தார்கள். அவர்களில் ஒருவருக்கு சுகவீனமாய்ப் போனதால், மற்ற இருவர் மாத்திரம் ஊழியம் செய்து வந்தார்கள். ஒரு நாள் இந்த இரு தேவ ஊழியர்களும் மற்றொரு கிறிஸ்தவ வாலிபனைக் கண்டு தங்களோடு உதவியாக வரும்படி கேட்டதற்கு, 'முடியாது, முடியாது' என்று சொல்லிவிட்டான் காரணமென்னவென்றால்: கிறிஸ்துவை அறிக்கையிடவும், அவருக்கு சாட்சியாக நிற்கவும் வெட்கப்பட்டான். கடைசியில், அந்த தேவ ஊழியர் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியத்தைச்செய்யப் போய்விட்டார்கள். அந்த வாலிபன் வீட்டில் தனிமையாயிருக்கும்பொழுது, ஒரு சிறு பையன் வேதாகமத்தைத் திறந்து வாசித்துக் கொண்டிருந்தான் அதில்: "நீங்களும் திராக்ஷத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலிகொடுப்பேன்' (மத். 20: 4) என்கிற வசனத்தை அதிக பெலத்தோடே வாசித்தான் இதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த வாலிபன் திடீரென்று எழுந்து, அந்தப் பையனிடத்தில் சென்று, 'அப்பா, நீ இதை உன் சுயமாக வாசிக்கவில்லை என்று எனக்குத் தெரியும். உன் மூலமாக தேவன் என்னோடு பேசுகிறார்' என்று சொல்லிவிட்டு, அந்த ஊழியர்களின் வரவை எதிர்பார்த்திருந்தான். அவர்கள் வந்தவுடன் தன் வரலாற்றைச் சொல்லி, அவர்களோடு தேவ ஊழியத்தில் புகுந்தான். 'என்னைக் குறித்தும், என் வார்த்தைகளைக் குறித்தும், எவன் வெட்கப்படுகிறானோ அவனைக் குறித்தும் மனுஷ குமாரனும தம்

முடைய மகிமையோடும், பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்.' (லூக். 9: 26).

### வேலை யாருடையது?

**சாது சுந்தர் சிங்.** 'ஒரு நாள் ஒரு பையன் தன் தகப்பனுடைய வயலின் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது, காட்டு மிருகங்களும்' துஷ்ட மிருகங்களும் அந்த வயலுக்குட்சென்று பயிரை யெல்லாம் நாசப்படுத்திக்கொண்டிருந்தது. ஆனால், அந்தப் பையனோ, தன் தகப்பனுடைய பயிரெல்லாம் பாழாகிறதைக்கண்டும், அந்த மிருகங்களை விரட்டாமலும், பயிரைக் கவனியாமலுமிருந்தான். இவ்வினோதத்தைக் கண்ட ஒரு வழிப்போக்கன் அவனைப் பார்த்து: 'தம்பி, நீ என் கவலையீனமாயிருக்கிறாய்? உன் தகப்பனுடைய பயிரெல்லாம் அழிகிறது உனக்குத் தெரியவில்லையா?' என்றான். அதற்கவன்: 'ஆம், உண்மைதான். ஆனாலும், என் தகப்பன், தன் வயலைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளும்படி என்னிடம் சொல்லவில்லையே!' என்றான். பின்னும், வழிப்போக்கன்: 'என்ன ஆச்சரியமாயிருக்கிறது! உன் தகப்பனுடைய உடைமை உன்னுடையதல்லவா? நீயல்லவோ சுதந்தரவாளி. உன் பொருளை நீயல்லவோ காப்பாற்றவேண்டும் இதை உன் தகப்பனார் உன்னிடம் சொல்லவேண்டுமோ? புத்தியாய் நடந்துகொண்டால் நீ சுதந்தர வாளியாவாய்' என்று விடையகர்ந்தான்.

### இயேசுவுக்காக நாம் எல்லாரும் எழும்புவோம்.

'சுயாதீனப் பிரசங்கிகள் தேவை'

### வேலை எப்படிச் செய்வது?

இந்தியாவிலிருந்து மலையாள ஜனங்கள் ஏராளமாக இலங்கைக்குவந்து கூலி வேலைசெய்து வருகிறார்கள். அவர்களுள், கிறிஸ்தவர்கள் மிகச் சொற்பம். அவர்களுக்கென்று ஒரு ஆலயம் இல்லாததால் அவர்கள் தமிழ் ஆலயத்திற்கே போய்வருகிறார்கள். சில வருஷங்களுக்குமுன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்து, தற்சமயம் ஒரு கம்பெனியில் ஹெட் கிளார்க் உத்தியோகத்தில் ஒருவர் இருக்கிறார். அவர் இந்த மலையாள ஜனங்களின்பேரில் அதிக சிரத்தையெடுத்து அவர்களை தேவனோடு நெருங்கிவாசம்பண்ண அநேக எதுக்களைச் செய்தார். அவருக்கு ஆபீஸ் வேலை அதிகமாயிருந்தபோதிலும், ஆவிக்குரிய விஷயங்களில் அதிகமான நேரத்தைச் செல வழித்து, இந்த மலையாள ஜனங்களுடைய வீடுகள் ஒவ்வொன்றிற்கும்போய், அவர்களை உற்சாகப்படுத்தி, ஜெபக்கூட்டங்கள் நடத்தி, இவ்விதமாக அந்த ஜனங்களை முன்னுக்குக்கொண்டு வந்திருக்கிறார். இந்த யாழ்ப்பாணத்துச் சிநேகிதர் இந்த ஜனங்களை இவ்வளவு காலமும் ஆவிக்குரிய விஷயத்தில் விர்த்திபண்ணிக்கொண்டே வந்து, தற்சமயம் அவர்களையும் தேவ ஊழியத்தில் நுழைத்துவிட்டிருக்கிறார். இவர்கள் மாதத்தில் ஒரு வாரத்தை நியமித்துக்கொண்டு அதைச் சுவிசேஷ படைமுயற்சி வாரமாகவும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை சாயந்தரங்களிலும் கிறிஸ்துவின் ரக்ஷிப்பை அறிவித்தும் வருகிறார்கள்.

'இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.

S. R. D.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.



23 JUN 1919

May 1919. Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ. அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XX மேய் 1919

## சாது சுந்தர்சிங்

'. . . . தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக் கடவன்' வெளி. 22: 17.

இங்கே இலவசமான தண்ணீர் கொடுக்கப்படுகிறது. யார் யார் தாகமாயிருக்கிறார்களோ அவர்கள் வந்து தாகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம். ஒருவனுடைய தாகத்தைத் தணிப்பது தண்ணீர்தான். ஆனால், திரும்பவும் திரும்பவும் தாகமுண்டாகும். கிறிஸ்துமார்க்கத்தில் கொடுக்கப்படுகிற தண்ணீரை அருந்தினாலோ இனி ஒருக்காலமும் தாகமுண்டாகாது. அந்தத் தண்ணீர் தான் நமது அருள்நாதரிடத்திலிருந்து புறப்பட்டு வருகிற ரக்ஷிப்பு, அந்தத் தண்ணீரைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் தாகந் தீராது, அப்படித் தாகம் அதிகப்படுமானால் கடைசியில் மரணந்தான்.

**அநுபவம்:** (1) நான் ஒரு வனாந்தரத்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். அப்பொழுது அதிகத் தாகம் உண்டானது. தண்ணீருக்காகத் தேடி அலைந்தேன். எங்கும் கிடைக்கவில்லை. ஆனால், ஒரு திசையை நோக்கின பொழுதோ, அங்கே ஒரு குளமிருக்கிறதாகத் தென்பட்டது. அந்தக் குளத்துக்கு நேரே செல்லச் செல்ல அதினிடத்தில் என்னால் சேரமுடியவில்லை. ஏனென்றால், அது குளமல்ல, வெயிலின் அகோரத்தால் கண்ணுக்குக் காணப்படும் கானல். மேலும் தண்ணீர் குடிப்பதினால் ஒரு பொழுதும் திருப்தியில்லை. ஏனென்றால், தாகமெடுக்கிறபொழுது தண்ணீர் குடிக்கிறோம். சிறிது நேரம் கழித்துத் திரும்

பவும் தாகமெடுக்கிறது. ஆனால் தேவன் அளிக்கும் தண்ணீரினால் ஒருக்காலமும் தாகம் உண்டாகாது. நாம் மனந்திரும்பி, நமது இருதயத்தை தேவனிடத்தில் திறந்து வைக்கும் பொழுதுதான், தாகத்தை உண்டு பண்ணின தேவன் பூரணமாய்த் தாகத்தைத் தீர்க்கிறார். அப்படி நாம் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளாவிட்டால் நாம் அழிந்துபோக வேண்டியது தான் அதின் முடிவு. இந்த இலவசமான இரக்ஷிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி தேவன் இந்தச் சமயத்திலும் உங்களை அழைக்கிறார். இந்தத் தாகத்தைப் பூமியிலுள்ளவைகளால்த் தீர்த்துக்கொள்ளப் பார்க்கும்பொழுது தான் அழிந்து போகக்கூடியவர்களாயிருக்கிறோம்.

**உதாரணமாக:** (2) திபேத்து நாட்டிலே நானும் இன்னும் சிலரும் பிரயாணம் செய்தோம். அவர்களில் ஒருவனுக்கு அதிக தாகமெடுத்தது. அப்பொழுது, ஒரு உளையான இடம் (marshy place) காணப்பட்டது. அதின் மத்தியில் கொஞ்சம் தண்ணீரிருந்தது. உடனே அந்த தாகமெடுத்த மனிதன் அவ்விடத்திற்குப் போகப்புறப்பட்டான் போகவேண்டாமென்று கூடியமட்டும் தடுத்தோம். ஏனென்றால், அந்த உளையான இடத்திற்குப் போகிறவர்கள் எல்லாரும் சேற்றில் மூழ்கி இறந்துபோகிறார்கள என்று சொன்னோம். ஆனால் அவனோ எங்கள் பேச்சைக் கேட்காமல் தாகத்தைத் தணித்துக் கொள்ளும்படியாக அவ்விடத்திற்குச் சென்றான். கடைசியில், அவன் தண்ணீரண்டை சென்று, தண்ணீர் குடிக்க ஆரம்பித்தான். தண்ணீரைக் குடிக்கக் குடிக்க கொஞ்சங் கொஞ்சமாக சேற்றுக்குள் அமிழ்ந்தினான். இவ்விதமாக, கழுத்துவரைக்கும் அமிழ்ந்திவிட்டான். அப்பொழுது, நாங்கள்: சிநேகிதனே, நீயே உன்னைக் கொல்லுகிறாய, என்று சொன்னோம்: பின்பு முழுவதும் அமிழ்ந்தி மாண்டான். இவ்விதமாகத்தான், நாம் உலகத்திலுள்ளவைகளால்த் திருப்தி செய்துகொள்ளப் பார்க்கும்பொழுது, அமிழ்ந்திப் போகிறவர்களாயிருக்கிறோம். அவன், தண்ணீரைக் குடிக்கக் குடிக்க அமிழ்ந்தினான். அதுபோல, நாம் உலகத்தால் திருப்திசெய்து கொள்ளுகிறபொழுது நம்மை நாமே அழிவுக்கு வழிநடத்தி கடைசியில் அமிழ்கிறோம். ஆனால், சாகுந்தருணத்திலிருக்கும்பொழுதுகூட உங்களை ரக்ஷிக்க ஒருகாரணமிருக்கிறது. மனந்திரும்புகிறபொழுதே அந்தச் சேற்றிலிருந்து உங்களைப்பிடுங்கி ரக்ஷிக்க ஒருவர் பக்கத்தில் நிற்கிறார். ஆணிகளால் கடாவப்பட்ட அவருடைய திருக்கரமானது உங்களை அந்த மரணத்திலிருந்து ரக்ஷிக்கத் தயாராயிருக்கிறது. அவர் தமது கரத்தை நீட்டி உங்களை அந்தப் பாவச் சேற்றிலிருந்து தூக்கியெடுக்கும்பொழுது பூமியிலுள்ள எதாகிலும் உங்களைத் திரும்ப இழுத்துக்கொள்ளமுடியாது.

எலியாவைப் போஷித்ததும் அந்தக் கரமே. எலியாவிடமிருந்ததும் அந்தக் கரமே. உங்களுக்கு உதவி கிடைக்கவேண்டுமானால் இதுதான் சமயம்.



வேறு சமயம் கிடையாது. ஆகையால், தருணம் கிடைத்த சமயத்திலேயே அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

**உதாரணமாக:** (3) நானும் ஒருகாலத்தில் இதே நிலமையிலிருந்தேன். உளையான சேற்றில் அகப்பட்டுக்கொண்டேன். கொஞ்சங் கொஞ்சமாக அமிழ்ந்திக்கொண்டேபோனேன். அதிலிருந்து என்னைத் தூக்கி ரக்ஷிக்க ஒருவரிருந்தார். அவர்தான் எனக்குச் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அளித்தவர். அவரே அவைகளை என்னிருதயத்திலே உருவாக்கினவர். எனக்கு மாத்திரமல்ல, நம்மில் அநேகருக்கு இப்படிப்பட்ட நன்மைகளைச் செய்திருக்கிறார். ஆகையால் அவரைவிட்டு உலகத்தை நோக்கினால் அழிந்து போவோம்.

**சம்பவம்:** (4) ஒரு சிறு பிள்ளை வெண்காயத்தை (onion) எடுத்து கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தது. அது ஒரு பெட்டியைப்போலிருந்தது. ஆகையால், உள்ளே எதாவது இருக்குமென்று அதை உரிக்க ஆரம்பித்தது. உரிக்க உரிக்கக் கடைசியில் உள்ளே ஒன்றுமில்லை. இவ்விதமாகத்தான் உலகமிருக்கிறது. உலகத்தில் இன்பமிருக்கிறது என்று நினைத்து அதில் நம்முடைய ஆசையை வைப்போமானால் அதுவே மோசம். கடைசியில் ஒன்றுமிராது. உலகத்திலுள்ள கல்வி, ஞானம் இந்த வெண்காயத்திற்கு ஒப்பாகவேயிருக்கிறது. ஒருவன் எவ்வளவு ஞானியாயிருந்தபோதிலும் கடைசியில் ஒன்றுமில்லை. இதோ ஜீவதண்ணீர் தருகிறார். நாம் பூரணமாய்த் தாகந் தீர்க்கப்படுகிறோமோ இல்லையோ என்பதைப் பார்க்கவேண்டும். ஒரு புது உயிர் நம்மில் உண்டாகும்.

**அநுபவம்:** (5) நல்ல செய்கைகளாலும், நற்கிரியைகளாலும் நான் இந்தச் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், அடைந்துகொள்ளலாம் என்று நினைத்தேன். கடைசியில், நான் ஜென்மப் பகையாய்ப் பகைத்த அந்த ஒருவராலேயே நான் அந்தப் பாக்கியத்தை அடைந்தேன். ஒரு காலத்தில் நான் அவருக்குத் துரோகியாயிருந்தேன். விரோதியாயிருந்தேன். ஒருகாலத்தில் சுவிசேஷகர்மேல் சாணத்தை எறிந்தேன். கிறிஸ்தவப் பத்திரிகைகளையும், வேதாகமங்களையும் சேர்த்து எண்ணெயை விட்டுச்சுட்டெரித்தேன். என் தகப்பனார் என்னைக் கோபித்தார். நான் கிறிஸ்துவுக்கு அப்பேர்ப்பட்ட விரோதியாயிருந்தேன் நான் வெகு பரிதாபமான நிலமையிலிருந்தேன். ஆறுதலற்றிருந்தேன். ஆகையால், ஒரு தீர்மானஞ்செய்துகொண்டேன். அதாவது: ஒரு நாள் நான் படுத்துக்கொண்டு சிந்திக்கும்பொழுது, பொழுதுவிடிகிறதற்குள் நான் மனச்சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் தற்கொலை செய்துகொள்வதென்று தீர்மானம்பண்ணிக்கொண்டேன். அதிகாலையில், ஸ்நானம் செய்துவிட்டு, 6 மணி வரைக்கும் ஜெபம் செய்தேன். திடீரென்று ஒருவர் காணப்பட்டு: 'நீ என்னை எவ்வளவு காலம் துன்படுத்துவாய்?' என்றார்.

கிறிஸ்து செத்தவரல்ல, என்றும் உயிரோடிருக்கிறார் என்று இப்பொழுதுதான் பிரத்தியக்ஷமானது. இந்தக் காக்ஷியைக் கண்டவுடனே, சகலத்தையும் என் தகப்பனாரிடத்தில் அறிவித்தேன்.

அநேகர் பிறப்புக் கிறிஸ்தவர்களாயிருந்தபோதிலும், கவலையீனமுள்ளவர்களாயிருக்கிறார்கள். விழித்து, எழுந்து, ஜீவதண்ணீரை இலவசமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய காலம் இதுவே. கிறிஸ்தவப் பத்திரிகைகளையும் (Christian literature) வேதாகமங்களையும் சுட்டெரித்த என்னை அவர் ரக்ஷிக்கக்கூடுமானால், உங்களையும் ரக்ஷிக்க வல்லவரல்லவோ? உண்மையாக மனந்திரும்பும்பொழுதுதான் நாம் தாகந்தீர்க்கப்படுவோம். அவர் அதற்குமேல் ஒன்றையும் கேட்கவில்லை. நாம் நம்முடைய இருதயமாகிய பாத்திரத்தை அவரிடத்தில் கொடுக்கும்பொழுதுதான் அவர் அதில் ஜீவதண்ணீர் நிறப்புவார். நாம் ஒருதடவை அவரைப்பெற்றுக்கொண்டோமானால், உலகப்பொருள்களின்மேல் நமது ஆசையை வைக்கமாட்டோம். நமது இருதயம் பூராவும் அவராயிருப்பார். நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும்பொழுது, அவர் நம்மிலிருக்கிறார். அவருக்குள்ளிருப்பவைகள்யாவும் நம்முடையதாகும், ஆகையால், பாவத்தினின்று நமது இருதயத்தைத் திருப்பி தேவனுடைய பாதத்தில் வைக்கும்பொழுதுதான், மெய்யான ரக்ஷிப்பு அடைகிறோம்; தாகந் தீர்க்கப்படுகிறோம். அந்த ஒருவராலேயே சகலமும் அளிக்கப்பட்டுவருகிறது. ஜீவதண்ணீரானது அவரில் புறப்பட்டு நம்மில்ப் பாய்ந்து உலகத்தில்ச் செல்லுகிறது. சாத்தானால் உண்டான பாவக்கறைகள் யாவையும் அழிக்கிறது. இப்பொழுதே கிறிஸ்துவானவரிடத்திலிருந்து இந்த அழைப்புக் கூறப்படுகிறது. தாகந் தீரவேண்டுமா? அவரண்டை வாருங்கள். நாம் அவரிடத்தில் நெருங்கிச்சேர தேவன் கிருபைசெய்வாராக.

## நான்கு சாட்சிகள்— பரி. யோவான் 9: 1—8

இதோ ஒரு பிறவிக் குருடன். அவன் பிறக்கும்பொழுதே குருடனாகப் பிறந்தான்: இதோ தாய் சத்தத்தைக் கேட்கிறான். தகப்பன் சத்தத்தைக் கேட்கிறான். ஆனால் அவர்களைக் கண்குளிரக் காணவோ கூடாதவனாயிருக்கிறான். புஷ்பங்களின் வாசனையை முகருகிறான். அதன் அழகையோ காணக்கூடாத கபோதியாயிருக்கிறான். சூரிய உஷ்ணம் உடம்பில்ப்படுகிறது. அதின் பிரகாசத்தையும் அதின் மகிமையையும் காணக்கூடாதவனாகவும், இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசம் தெரியாதவனாகவுமிருக்கிறான். எல்லாம் இருள், எல்லாம் அந்தகாரம். இவன் பெரியவனானபோதோ தாயும் தகப்பனும் அவனைக் கைவிட்டார்கள் அவனுக்கு ஆகாரங்கூடக் கொடுக்கவில்லை. வீட்டிலிருந்து வெளியே துரத்தப்பட்டான். கடைசியில் வீதியின் ஓரத்தில் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருக்கிறான். தன்



ஜீவியம் தனக்கே கசப்பாயிற்று. சாகும் வரைக்கும் குருடனாகத்தானிருக்கவேண்டும் என்றறியும்பொழுது அவனுடைய அங்கலாய்ப்பு கொஞ்சமா? சாகும்வரைக்கும் பிச்சையெடுத்துத்தான் தன் வயிற்றை நிறப்பவேண்டும் என்பதை நினைக்கும்பொழுது அவனுடைய மனது எவ்வளவாக கலங்கியிருக்கும். அவனுடைய நிலைமை மிகப் பரிதாபமாயிருந்தது. தினமும் அதிகாலையில் அந்த இடத்தில் வந்து உட்காருவான். இராவில் மரத்தினடியிலாவது குடிசையிலாவது படுத்துக்கொள்வான். இப்படி ஒருநாள் இவன் பிச்சை கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது அற்புதநாதர் அவ்வழியாக நடந்துபோகிறார். இந்த அற்புதநாதரைப்பற்றி இவன் கேள்விப்பட்டிருந்ததாக நாம் நினைக்க இடமில்லை. ஏனென்றால், இவ்விஷயமாக இவனும் இந்த அற்புதநாதரும் சம்பாஷணை செய்ததாக நாம் அறிகிறதில்லை. இதோ நமதருமை ரக்ஷகர் தமது சீஷர்கள் புடைசூழ வருகிறார். இரைச்சல் கேட்கிறது. பெரும் இரைச்சலைக்கேட்ட இந்தக் குருடன் தன் இரு கைகளையும் ஏந்துகிறான். ஜனங்கள் அதிகமாக வருகிறபடியால் பணமும் அதிகமாய் கிடைக்கும் என்பதாக நினைத்து தன் கையை ஏந்தினவண்ணமாகவும், தடவித்தடவிப் பார்க்கிறவண்ணமாகவுமிருந்தான். இப்படியாக வெகுநேரம் காத்திருந்தும் பிச்சையிடுவோரைக் காணோம். ஆனால் சம்பாஷணை அதிகமாகக் கேட்கிறது.

கடைசியில் அற்புதநாதர் தரையில் துப்பி, சேறுண்டாக்கி அவனுடைய கண்களில் தடவினார். சாதாரணமாக யாராவது குருடர்மேலே தண்ணீரைத் தெளித்தால் அவர்கள் படுகிறபாடு கொஞ்சமல்ல. ஆனால் தன் கண்களைத் திறக்கப்போகிறார் என்றும் இந்தக் குருடன் அறிந்தவனல்ல. ஆனாலும், அவன் கண்களில் சேற்றைப் பூசினபோதிலும் மௌனமாயிருந்தான். சாதாரண சேருமல்ல. எச்சிலினால் உண்டாக்கின சேர். இவ்விதமாக நமதருமை ரக்ஷகர் அவனுடைய பொறுமையை ஒருவாறு சோதித்தார். பொறுமைசாலி என்று கண்டு, அதோடு விட்டுவிடவில்லை. அவனுக்கிருந்த அந்தப் பொறுமைக்குணத்தைப் பலப்படுத்தும்படியாக அவனைப் புறப்பட்டு சீலோவாம் குளத்துக்குப்போய் கண்களை கழுவச் சொல்லுகிறார். நான் குருடனாயிருக்கிறேனே, எப்படி அவ்வளவு தூரம் நடந்துபோவேன் என்றும் கேட்கவில்லை. அல்லது சீலோவாம் குளத்திலிருக்கிற தண்ணீரைப் பார்க்கிலும் என் பெற்றோர் வீட்டிலிருக்கிற தண்ணீர் அதிக சுத்தமுள்ளது அதில் என் கண்களைக் கழுவிக்கொள்வேன் என்றும் சொல்லவில்லை, அல்லது, அத்தர் பன்னீரினால் என் கண்களைக் கழுவுவேன் என்றும் சொல்லவில்லை அப்படி சொல்லியிருப்பானேயாகில் அவனுடைய ஜீவகாலமெல்லாம், என்ன நேரும் என்றறியாதவனாயிருந்தும் அற்புதநாதருக்குக் கீழ்ப்படிந்தான். சீலோவாம் குளத்திற்குப்போனான். தன் கண்களை அந்தக் குளத்தில்க் கழுவினான். பார்வையடைந்தான். பெரிய மாறுதல்! சாகும்

வரைக்கும் குருடன்தான் என்று நினைத்தவன் இப்பொழுது காண்கிறான். முன்னே எல்லாம் இருள். இப்பொழுது வெளிச்சம்! முன்னே எல்லாம் அந்தகாரம், இப்பொழுது எல்லாம் மகிமை! அதிசயிக்கிறான். ஜனக்கூட்டத்திற்கு வருகிறான். ஜனங்களும் அதிசயிக்கிறார்கள். இவன் பிச்சை கேட்டுக்கொண்டிருந்த குருடனல்லவா? இவன் இப்பொழுது பார்வையடைந்திருக்கிறானே என்கிறார்கள். அதோடு நிறுத்திவிடவில்லை. அவனுடைய பெற்றோரை விசாரிக்கிறார்கள். அவர்களும் அதிசயித்து, இவன் எங்களுடைய மகன்தான். குருடனாக இவனைப் பெற்று வளர்த்தோம். இப்பொழுது காண்கிறான் என்றார்கள். அந்தக் குருடனோ '**நான் தான் அவன்**' என்றான்.

கடைசியில், நமது அற்புதமூர்த்தி தாமே அவனுக்கு எதிர்ப்பட்டு 'நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா?' என்றார். இந்தச் சரித்திர முடிவிலே அவன் தேவகுமாரனிடத்தில் விசுவாசியானான் என்பதை அறிகிறோம். அந்தக் குருடனிடத்தில் மூன்று விஷயத்தைக் காண்கிறோம் (1) அவன் சீலோவாம் குளத்துக்குப் போகும்படி இயேசுவானவர் அவனிடத்தில் சொல்லும்பொழுது அதற்கு அச்சாரமாகவும் அறிகுறியாகவும் அவன் கண்களில் சேற்றைப் பூசினார். அந்த அடையாளத்தை ஒரு ஸ்திரமாக வைத்துக்கொண்டு குளத்தண்டை சென்றான். (2) கழுவினான். (3) காண்கிறான். நமது ஜீவியமும் அப்படியே நமக்கு நிச்சயமுண்டாக அச்சாரமாகிய வேதாகமத்தை நமது கைகளில் அளித்து, கல்வாரிமலையிலிருந்து வழிந்தோடுகிற திரு ரத்தமாகிய அந்தக் குளத்தில் நமது இருதயங்களைக் கழுவக் கட்டளையிட்டிருக்கிறார். யார் யார் அவ்விடம்போனது? யார் யார் தங்கள் இருதயங்களைக் கழுவினது? சகோதரரே, கழுவினதுண்டானால் அந்தகாரம் நீங்கியிருக்குமே? எல்லாம் வெளிச்சமாயிருக்குமே? அந்தக் குருடன் குருட்டாட்டத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதுபோல பாவக் குருட்டாட்டத்திலிருந்து நாம் விடுதலையாக்கப்பட்டிருக்கவேணுமே? பாவக்கடலிலிருந்து விடுதலையடைந்திருக்கிறோமா? ஒருவேளை வேதாகமம் நமது கையிலிருக்கலாம். கல்வாரி மலையண்டை சென்றோமா? கல்வாரி மலையண்டை போயிருக்கலாம். இருதயங்களைக் கழுவினோமா? இருதயங் கழுவியிருந்தால் பாவத்திலிருந்தும் அந்தகாரத்திலிருந்தும் விடுதலையடைந்திருக்கவேணுமே! ஆம், அப்படி விடுதலையடைந்திருந்தால் நான்கு சாட்சிகள் உண்டா?

**(1) இந்தக் குருடன் தான் பார்வையடைந்ததை தன்னில் உணர்ந்தான்.** நம்மில், எத்தனைபேர் நான் ரக்ஷிக்கப்பட்டேன் என்று சொல்லக்கூடும். இருளில் இருந்தேன். இப்பொழுது ஒளியிலிருக்கிறேன் என்று சொல்லக்கூடுமோ? சீனி என்று சொன்னால் வாய் இனிப்பாயிராது. சகோதரரே, பாவமன்னிப்பையும், ரக்ஷிப்பின் சந்தோஷத்தையும், பெறாதவன் ரக்ஷிப்



படைந்தவனல்ல. நான் ரக்ஷிக்கப்பட்டேன் என்று சொல்லியும் ரக்ஷிப்படையாவிட்டால் ஐயோ! இப்படியாக தான் அறியாத இரக்ஷிப்பு இல்லை.

**(2) அவனைச் சூழ்ந்துநின்ற ஜனங்கள் இவன் பார்வையடைந்திருக்கிறதைக் கண்டார்கள்.** இவன் தன் கண்களைத் தன் விரல்களினால் திறந்துகொண்டு, நான் இப்பொழுது காண்கிறேன் என்று பிரசங்கிக்கவில்லை. இயல்பாகவே, இவனைக் கண்டவர்கள்யாவரும், இவன் காண்கிறான் என்றார்கள். அப்படியே நாமும் ரக்ஷிப்படைந்தது மெய்யானால் சூழ்ந்து நிற்கிறவர்கள் அறியக்கூடியதாயிருக்கும். நான் ரக்ஷிக்கப்பட்டேன் என்று சொல்வது அவசியமில்லை. சொல்லும் முன்னதாகவே இவன் ரக்ஷிக்கப்பட்டவன் என்று சாட்சி பெறக்கூடியவனாயிருக்கிறான். முன்னே குருடனாயிருந்தான். இப்பொழுது காண்கிறான் என்று ஜனங்கள் சொன்னதுபோல, இவனையும் பார்த்து முன்னே இவன் குடிகாரன், விபசாரக்காரன், கலகக்காரன், பிடிவாதக்காரன், அக்கிரமக்காரன், இப்பொழுதோ அப்படியல்ல, உத்தமன், கடவுளுக்குப் பயந்தவன், நீதியுள்ளவன் என்று பலராலும் சாட்சி பெறுகிறான். சகோதரரே உங்கள் சிநேகிதருடைய சாட்சிகள் உண்டா? பந்து ஜனங்களுடைய சாட்சிகள் உண்டா? உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கிறதா? இருள் நீங்கிற்றா? வெளிச்சம் உள்பிரவேசித்ததா? இவ்விதமாக மற்றவர்கள் அறியாத ரக்ஷிப்புமில்லை.

**(3) பெற்றோரும் வந்து தங்களுடைய மகன் பார்வையடைந்திருக்கிறதாகக் கண்டார்கள்.** சகோதரரே, நாம் ஒருகாலத்தில் பாவ அந்தகாரத்திலிருந்தோம். அந்தகாரத்தின் பெற்றோராகிய சாத்தானும், அவனுடைய கூட்டத்தாரும் நம்மை ஆத்துமக் கபோதிகளாக நம்மைப் பெற்றார்கள் சாத்தானுடைய டாப்பிலே நம்முடைய பெயர் எழுதப்பட்டிருந்தது. நாம் பார்வையடைந்தது மெய்யானால் நாம் வெளிச்சத்தைக்கண்டது மெய்யானால் சாத்தானுக்குத் தெரியாமலிருக்குமோ? தன் கூட்டத்திலிருந்து இழந்துவிட்டவனை மறந்துபோவானோ? அவனுடைய புஸ்தகத்திலிருந்து கிருக்கப்பட்ட பெயரை அவன் மறந்துபோவானோ? ஒருகாலத்திலும் மறந்துபோகவேமாட்டான். நீ ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது மெய்யானால் சாத்தானுக்கு அது தெரியும். நீ ரக்ஷிப்படைந்ததற்கு சாத்தானும் ஒரு சாட்சி. சாத்தான் அறியாத ரக்ஷிப்புமில்லை.

**(1) கிறிஸ்துவானவர் குருடனைச் சந்தித்தார்.** பார்வைகொடுத்தது அவரல்லவா? அவன் பார்வையடைந்ததை அவர் அறியாமலிருப்பாரா? சகோதரரே, நாம் ரக்ஷிப்பட்டது கிறிஸ்துவானவருக்குத் தெரியுமா? அவரிடத்திலிருந்து நாம் ரக்ஷிப்புப் பெற்றுக்கொண்டோமானால், அதை அவர் அறியாமலிருப்பாரோ? அவர் அறியாத ரக்ஷிப்புமில்லை. ரக்ஷிப்பு அவர் மூலமாய்த்

தான் கிடைக்கிறது. ஜீவபுஸ்தகத்தில் நம் பெயரிருக்கிறதா? ஜீவ புஸ்தகத்தில் நமக்கும் ஒரு நம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையானால் ஐயோ! சகோதர சகோதரிகளே திரும்பவும் சொல்லுகிறேன். (1) நீ ரக்ஷிக்கப்பட்டது உனக்குத் தெரியுமா? (2) மற்றவர்களுக்குத் தெரியுமா? (3) சாத்தானுக்குத் தெரியுமா? (4) தேவனுக்குத் தெரியுமா? இந்த நான்கு சாட்சிகளுமில்லையானால், பெற்றுக்கொள்ளத் தடையென்ன? வீட்டுக்குள் போய், கதவைப்பூட்டி, முழங்காற்படியிட்டு, 'ரக்ஷகா!! கல்வாரியில் வழிந்தோடிய உமது திரு ரத்தத்தில் என் இருதயத்தைக் கழுவுமையா என்று கெஞ்சும்பொழுது, உன் அங்கலாய்ப்பின் சத்தத்தைக் கேட்டு, ரத்தாம்பரச் சிவப்பாயிருக்கிற உன் இருதயத்தை வெண் பஞ்சைப்போல் வெண்மையாக்குவாரல்லவோ நமது அற்புதநாதர்.

S. R. D.

# The Great Trumpet

## எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும்.

லேவி. 25: 9.

யூபிலி ஆண்டு யூதருக்குள் எவ்வளவு விசேஷித்த வருஷம்! தரித்திரன் அந்த வருஷத்தில் ஐசுவரியம் பெறுவான். அடிமையானவன் சுயாதீனனுவான். பரதேசியானவன் வீட்டுக்குத் திரும்ப வருவான். கானான் தேசமெங்கும் அது ஓய்வு வருஷம்,—மீட்பு வருஷம்,—ஆனந்தவருஷம். கர்த்தருடைய ஜனங்கள் குடும்பம் குடும்பமாக சந்தோஷம் கொண்டாடுவார்கள். வருத்தங்கள் நீங்கி ஆறுதல் அடைவார்கள். வேலை ஓய்ந்து இளைப்பாறி, புதுப்பெலனையும் ஆசீர்வாதத்தையும் பெறுவார்கள். 50 வருஷங்களுக்கு ஒருவிசை மாத்திரம் அந்த மகிழ்ச்சி காணப்படும். ஒருவனுடைய ஆயுசு காலத்தில் பெரும்பாலும் ஒருதரம் மாத்திரம் யூபிலி ஆண்டு வரும். ஆகையால் அது வரும்போது இஸ்ரவேலர் எல்லாரும் சொல்லிமுடியாத சந்தோஷமடைந்து வெகு சிறப்போடும், உவப்போடும் அதை ஆசரித்து வந்தார்கள். எக்காளம் ஊதப்படும், எக்காளம் ஊதினவுடனே அந்த மீட்பும் மகிழ்ச்சியும் ஆரம்பமாகும். எக்காள சத்தம் கேட்டமாத்திரத்தில் யூதருடைய வருத்தங்கள் நீங்கலாயிற்று. அவர்கள் வறுமை தீர்ந்தது; அவர்கள் வேலை உழைப்பு எல்லாம் ஓய்ந்துவிட்டது. அப்படியானால் அந்த எக்காள சத்தம் யூதருடைய காதுக்கு எவ்வளவோ இன்பமாக இருக்கும்! மற்றெல்லா சப்தங்களைப்பார்க்கிலும் யூபிலி எக்காள சத்தம் மகா இனிமையானது என்று சொல்வார்கள் அல்லவா?

நம்முடைய ராஜ்யமெங்கும் விக்ற்றோரியா ராணியவர்களுக்கு ரத்ன யூபிலிகொண்டாடின வருஷம் ஒரு விசேஷித்த வருஷம். எளியவர்கள்



அநேகர் போஷிக்கப்பட்டார்கள். கைதிகள் அநேகர் சாலையைவிட்டு விடுதலையானார்கள். ராணியவர்கள் ஊழியக்காரரில் அநேகர் உயர்ந்த அந்தஸ்தும் பிரபுத்துவமும் பெற்றுக்கொண்டார்கள். அந்த வருஷம் இங்கிலாந்து தேசத்தில் நடந்தேறிய உற்சவத்தைப்போல, அதற்கு முன் இந்த உலகத்தில் நடந்ததேயில்லை என்று ஏக வழக்கமாய்ச் சொல்லுகிறார்கள். ஆனாலும் அந்த உலக ஆடம்பரத்தை விசேஷித்துக்கொள்ள அவசியமில்லை, இன்னொரு யூபிலி ஆண்டு உண்டு அதோ! நாசரேத்து ஊர் ஜெப ஆலயத்தில் கிறிஸ்துநாதர் எழுந்துநின்று வேத வசனத்தை வாசித்துப்போதிக்கிறார். எக்காளம் உதினாற்போல விளம்பரம் செய்து நற்செய்தியை அறிவிக்கிறார். 'கர்த்தருடைய ஆவியானவர் என்னோடிருக்கிறார். . . . கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்த என்னை அனுப்பினார்.' 'யூபிலி ஆண்டுவந்தது! மீட்பின் வருஷம் வந்துவிட்டது! இதோ? இப்பொழுதே அநுக்கிரக காலம்? இப்பொழுதே ரட்சண்யநாள் என்பதுபோல கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்த என்னை அனுப்பினார் என்று சுவிசேஷத்தின் எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்தார், பிரியமான சகோதரரே, இந்த எக்காள சத்தத்தை நாம் கேட்டு குணப்படுவோமாக. இந்த சுவிசேஷவசனத்தை நாம் பிரீதியோடு ஏற்றுக்கொண்டு அதினாலே சீரடைந்து நடப்போமாக. பவுல் அப்போஸ்தலன் பிரசங்கித்துவந்த சுவிசேஷமும் இதுவே. தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு விரும்புகிறேன். என்றார் அருமையான சுவிசேஷம்! தேவனுடைய கிருபையின் சுவிசேஷம்! ராஜ்யத்தின் சுவிசேஷம்; நித்திய சுவிசேஷம்; சமாதானத்தின் சுவிசேஷம்; உங்கள் ரட்சிப்பின் சுவிசேஷம்; நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷம்: பிரியமான சிநேகிதரே! நாங்களாவது வானத்திலிருந்து வந்த ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். என் சகோதரரே, நீங்கள் ஆவியானவருடைய சுவிசேஷம் முதலில் பெற்று அப்புறம்போய் இந்தக் கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார் என்று முதலாவது நீங்களடைந்து அப்புறம்போய் கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்துங்கள். சுவிசேஷ எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்யுங்கள்.

**I. எக்காள சத்தம் தொனித்தகாலம்.** 7-ம் மாதம் 10-ம் தேதி பாவநிவாரண நாளில். கர்த்தருடைய நினைவுகள் நம்முடைய நினைவுகள் அல்ல. அவருடைய வழிகள் நம்முடைய வழிகளல்ல. அவருடைய வருஷங்கள் நம்முடைய வருஷங்களல்ல. யூபிலி ஆண்டின் மகிழ்ச்சி 1-ம் தேதியில் துவக்காமல் 7-ம் மாதம் 10-ம் தேதியில் மாத்திரம் துவக்கினது. அது மட்டும் எக்காளச் சத்தமுமில்லை. மீட்பின் சந்தோஷமுமில்லை, கா

ணம் என்ன? பாவநிவாரணம் உண்டாகவேண்டும். பாவநிவாரண நாளிலே பிரதான ஆசாரியன் பலிசெலுத்தி கிருபாசனத்தின்மேல் ரத்தம் தெளித்து பிராயச்சித்தம் செய்யவேண்டும். அதன் பின்பு போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக்கடாவின் தலையின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமங்களையும் அறிக்கையிட்டு அவைகளை அதின் தலையின்மேல் சுமத்தி ஆள்வசமாக அதை வனாந்தரத்திற்கு அனுப்பிவிடவேண்டும். பாவம் தீர்ந்த பின்பு பாவநிவாரணமான பின்பு மாத்திரம் எக்காளச் சத்தம் தொனிக்கும். மீட்பும் விடுதலையும் கூறப்படும்.

பிரியமானவர்களே, ரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது. ரத்தஞ் சிந்துதலில்லாமல் மீட்பும் மகிழ்ச்சியுமுண்டாகாது. கெம்பீர சத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள்: கர்த்தாவே அவர்கள் உம்முடைய முகத்தின் வெளிச்சத்தில் நடப்பார்கள். (சங். 89: 15) நிசந்தான். ஆனால் கெம்பீர சத்தத்தை அறியவேண்டுமானால் அதினால் குறிக்கப்பட்ட யூபிலி எக்காள சத்தத்தைக் கேட்கவேண்டுமென்றால் சிலுவை மரத்தின் அண்டை நாம் வந்து நிற்கவேண்டும். அங்கே சிந்தின ரத்தம் நம்முடைய இருதயத்தில் தெளிக்கப்படவேண்டும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியானவருடைய தலையின் மேலே நம்முடைய சகல அங்கிரமங்களையும் அறிக்கைசெய்து அவைகளை அங்கே சுமத்திவைத்துவிடவேண்டும். சகோதரரே, பிசாசின் கையிலிருந்து உனக்கு மீட்பும் விடுதலையும் வேண்டுமோ? இயேசுவின் திரு ரத்தத்தைப் பார்த்து நம்பிக்கேள். அதினாலே மாத்திரம் மீட்புண்டு. இவருடைய ரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாய் இருக்கிறது. (எபேசி. 1: 7). அந்த மகா பாவ நிவாரண நாளிலே சிந்தப்பட்ட மாசற்ற ரத்தத்தினாலேயன்றி நமக்கு மீட்புமில்லை மன்னிப்பும் இல்லை. சிநேகிதனே உனக்கு மகிழ்ச்சி வேண்டுமா? கிறிஸ்து செய்த பிராயச்சித்தத்தை ஏற்றுக்கொள். அதினாலேமட்டும் மகிழ்ச்சியுண்டு. இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றி மேன்மை பாராட்டுகிறோம் (ரோமர் 5: 11). ரட்சகரால் உண்டான பிராயச்சித்தம் ஒப்புரவாகுதலை ஏற்றுக்கொண்டால் மாத்திரம் இப்படி மேன்மைபாராட்டவும் ஆனந்தங்கொண்டாடவும் கூடும். சகோதரனே, சகோதரியே, எக்காள சத்ததை உன் இருதயத்தில் அறிந்திருக்கிறாயா? உன்னுடைய காதில் தொனிக்கிறதாக்கும். உன் இருதயத்தில் கேட்கிறதா? ஆத்தும விசாரியான ஒருவன் பாவ நிவாரண நாளில் நடந்த விசேஷங்களை வாசிக்கும்போது யூதருக்குப் பிராயச்சித்தப்பலி இருந்தது போல எனக்கும் பிராயச்சித்தம் செய்யப்பட்டது நிசந்தானா? அவர்கள் அந்த ஆட்டின் தலையின்மேல் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு சுமத்தினதுபோல் நானும் ரட்சகருடைய தலையின்மேல் என் அக்கிரமங்களை அறிக்



கைசெய்து வைத்துவிடலாமா? அப்படியானால் இனி ஒரு நிமிஷமாவது தாமதம்பண்ணாமல் என் பாவங்களை அவர்மேல் செலுத்திவிடுவேன் என்று சொல்லி சுவிசேஷத்தை நம்பி விசுவாசியானேன்.

II. **எக்காளச் சத்தம் தொனித்த நோக்கம்.** தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்.. அதிலே உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் காணியாட்சிக்கும் தன் தன் குடும்பத்துக்கும் திரும்பிப் போகக்கடவன் (வா. 10). எக்காளம் ஏன் ஊதப்பட்டது? அதின் சத்தமானது மீட்சிக்கும் விடுதலைக்கும் அடையாளம். தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள். சிறியோரும் பெரியோரும் அதின் சந்தோஷ சத்தம் கேட்கவேண்டும். வறியோரும் அந்த நல்ல செய்தியை அறிந்து ஆனந்தமடையவேண்டும். ஆகையால் எக்காள சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும். மூலபாஷையில் காட்டியிருக்கிறபடி எக்காளத்தை எங்கும் அனுப்பவேண்டும். அந்தப்பிரகாரம் தேவனுடைய பணிவிடைக்காரர் தேசமெங்கும் எக்காளம் ஊதி குடிகளுக்கெல்லாம் விடுதலை கூறிவந்தார்கள். பட்டணங்களிலும் ஊதினார்கள். கிராமங்களிலும் ஊதினார்கள். அந்த எக்காளச் சத்தம் எங்கெங்கே கேட்கப்பட்டதோ அங்கே எல்லாம் விடுதலை உண்டாயிற்று. யூபிலி ஆண்டின் நல்ல செய்தி இதுவே,— விடுதலை, விடுதலை, விடுதலை இந்த வார்த்தை இந்த அதிகாரத்தில் திரும்பத் திரும்ப வருகிறதைப் பார்க்கலாம். ஏற்றிவைக்கப்பட்ட காணியாட்சி நிலங்களோ? "யூபிலி வருஷத்தில் விடுதலையாகும்" (28) கடன் நிமித்தம் விற்பனையான வீடுகளோ? "யூபிலி வருஷத்தில் அவைகள் விடுதலையாகும்" (31-33) ஐவேசில்லாமையினாலே தன்னை அடிமையாக விற்றுப்போட்ட எளியவனோ? "இவனும் இவனோடேகூட இவன் பிள்ளைகளும் யூபிலி வருஷத்தில் விடுதலையாவார்கள்." என் பிரிய சகோதரரே, "நீங்கள் சுயாதீனத்திற்கு (விடுதலைக்கு) அழைக்கப்பட்டீர்கள் (கலாத் 5: 13) தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் இந்த வாக்கியத்தில் வெகு தெளிவாக விளங்கியிருக்கிறது. "உலகமெங்கும் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலை பெறக் கடவீர்கள்." "சபை எங்கும் அதின் ஜனங்களுக்கெல்லாம் விடுதலை கூறக்கடவீர்கள்."

a. பிசாசின் கையிலிருந்து விடுதலை யுண்டா? அவன் மகா பலவான். நான் எத்தனைவிசை தப்பப்பார்த்தாலும் அவன் என்னைப் பிடித்தும், அடைத்தும், சிறையாக்கியும் வருகிறான். ஏசாயா 49. 24, 25.

b. பாவத்தின் வல்லமையினின்று விடுதலையுண்டா? "நான் எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டுப் போராடினாலும் பாவத்துக்குத் தோற்று திரும்பத் திரும்ப இடறி தவறியிருக்கிறேன். நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன். இதற்குப் போக்கில்லையா? உண்டு.

c. பலத்த சோதனையிலிருந்து விடுதலையுண்டா? நான் பக்தியாய் நடக்க விரும்பினாலும், சோதனைக்காரன் என்னை வந்து வருத்தப்படுத்துகிறான். அசுத்தமான எண்ணங்கள் என்னில் எழும்பச் செய்கிறான். பகலிலும் சோதனை— இரவிலும் சோதனை— வீட்டிலும் சோதனை— கோவிலிலும் சோதனை. நான் என்ன செய்வேன்."

உடனே விடுதலை. இதை அநேகம்பேர் நம்பமாட்டார்கள், கடைசி மட்டும் பிசாசு அதிகாரம் செலுத்துவான் பாவம் ஆண்டுகொள்ளும். கிறிஸ்துநாதர் சில பாவக் கட்டுகளை அவிழ்த்துவிட்டார். ஆனாலும் மற்றக்கட்டுகளை அவரால் அவிழ்க்கக்கூடாதென்று சொல்லுகிறார்கள். தப்பிதம், தப்பிதம். 'யூபிலி வருஷத்தில் புதுவிடுதலையாகும்.' (நம்பினால் ரக்ஷிப்பார் இந்த நேரத்தில்) யூபிலி வருஷத்தில் விடுதலை மாத்திரமல்ல மீட்சியும் கூறப்பட்டது. இந்த அதிகாரத்தில் ஒரு வார்த்தை அடிக்கடி வருகிறது என்னவென்றால் "அவனவன் தன் தன் காணியாட்சிக்குத் திரும்பிப் போகக்கடவன்." என்பது. அடிமைத்தனத்திலின்று விடுதலையாகிப்போவது மாத்திரமல்ல சொந்த வீட்டுக்குத் திரும்பிப்போய் இழந்த சுதந்தரப்படி பெற்றுக்கொள்வதும் அந்த வருஷத்தில் கிடைத்த பெரிய சிலாக்கியம்.

ஆ, சகோதரரே நம்முடைய பாவத்தினாலே போக்கடித்த திவ்ய சாயலையும் பரிசுத்த நிலைமையையும் மோட்ச சுதந்தரத்தையும் நாம் திரும்பப் பெற்று அனுபவிக்கலாம். தேவனுடைய குடும்பத்தில் திரும்ப வந்து சேரலாம். தன் ராஜ்ஜியத்தை இழந்துபோன ஒரு இங்கிலீஷ்காரன் பிற்பாடு வெற்றி சிறந்து சுயராஜ்ஜியத்துக்குத் திரும்பிவரும்போது குடிகள் எல்லாரும் சந்தோஷத்தோடு அவனை ஏற்றுக்கொண்டு வாழ்த்திப் பணிந்துகொண்டார்கள். தன்னை ஏற்றுக்கொள்வார்களோ என்று சந்தேகத்தினாலே அதுமட்டும் அங்கே திரும்பி வர தாமதித்திருந்த ராஜன் பிரஜைகளுடைய சந்தோஷத்தைக் கண்டவுடன் நான் முந்தி இங்கே வாராதது என் புத்தியீனம் என்று சொன்னாராம். அப்படிப்போல பாவி, நீ தகப்பனுடைய வீட்டுக்குத் திரும்பவராமல் தூரதேசத்தில் இன்னும் தங்கி பாடுபடுவது உன் புத்தியீனம் அல்லவா? யூபிலி வருஷத்தில் அவனவன் தன் தன் காணியாட்சிக்குத் திரும்பப் போகக்கடவன்.

(இன்னும் வரும்)

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

June 1919. Registered No. M- 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

2 AUG 1919 MADRAS

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XX ஜூன்மீ 1919

## பஸ்கா நியமுகம். யாத். 12: 1—14

பஸ்கா நியமுகம் பஞ்சாகமத்தில் மிச்சமான பாகத்தில் வருகிறது. கிறிஸ்துவின் மரண சரித்திரம் சுவிசேஷங்களில் மூன்றில் இரண்டு பாகத்தை அடக்குகிறது. இவ்விரண்டு சரித்திரமும் பின் சந்ததியாருக்கு ஞாபகமாயிருக்கும்படி விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இவ்விரண்டையும் சோதித்துப் பார்த்தால், இரண்டும் ஒரே காரியத்தைக் குறிக்கிறதென்று அறியலாம். பின்வரும் மூன்று குறிப்புகளைக்கொண்டு இவ்விரண்டின் ஒற்றுமையைக் கவனிப்போம்.

1. **நியாயத்தீர்ப்பு.** முந்தின வாதைகள் பார்வோனுடைய கேள்விக்கு ('கர்த்தர் யார்'?) உத்தரவாக அளிக்கப்படுகின்றன. மேலும் யேகோவாவே தேவாதி தேவனும் கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறார் என்பதை தமது ஜனத்துக்கு உணர்த்தும் நோக்கமாகவும் அவ்வாதைகள் வந்தன. ஆனால் கடைசி வாதையோ தேவனுடைய பயங்கரமான நியாயத்தீர்ப்பையும் தண்டனையையும் குறிக்கிறது. இஸ்ரவேலின் முதற்பிறப்பைச் சங்கரித்து அவனை ஒடுக்கின பாவத்துக்காக எகிப்து தண்டிக்கப்படவேண்டியது நியாயமே. பார்வோனும் அவன் ஊழியக்காரரும் தங்கள் இருதயங்களை கடினப்படுத்தினார்கள்.. எகிப்து ஜாதியார் முழுவதும் குற்றவாளிகளானார்கள். ஆகையால் அவர்கள் மொத்தமாய்ச் சேர்ந்து இஸ்ரவேலைச் சிறைப்படுத்தி அவர்கள் ஒடுக்கின குற்றத்தை உணர்ந்து ஒத்துக்கொள்ளவேண்டியது அவசியம். பார்வோனும் அவனுடைய ஜனமும் தேவனுடைய கட்டளையை மதிக்கவில்லை. தேவனையும் அவருடைய அதிகாரத்தையும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் அவர்கள் அழிவுக்கு நியமிக்கப்படவேண்டும் அல்லது மனந்திரும்பித் தங்களுக்கு நியாயமாய் வரும் தண்டனையைவிலக்க

வேண்டும். பாவியானவன் பார்வோனைப்போல் துணிகரமாய் நடந்தால் நொறுக்கப்படுவான். யோனாவின் காலத்திலுள்ள நினிவேயரைப்போல் மனந்திரும்பினால் மன்னிப்புப் பெறுவார்கள். உலகத்தின் ஜாதிகள் எப்போதும் தேவனுடைய நியாயாசனத்துக்குமுன் நிற்கிறார்கள். மனுஷ குமாரன் நியாயந்தீர்க்கிறவராய் விளங்குகிறார் அவர் வெள்ளாடுகளையும் ஆடுகளையும் வெவ்வேறாய் பிரிக்கிறார். சோதோம், கொமோரா பட்டணங்களை அவர்களுடைய அசுத்த பாவங்களினிமித்தமும், பாபிலோன் ராஜ்யத்தை அவர்கள் குரூரத்தினிமித்தமும், எருசலேமியரை அவர்களுக்காக வந்த தேவ ரக்ஷகரைத் தள்ளிவிட்டதினிமித்தமும், நெப்போலியன் வம்சத்தை அவர்கள் அகோரத்தினிமித்தமும், ஜெர்மானியரை உலகத்தின் சமாதானத்தைக் கெடுத்ததினிமித்தமும் நியாயந்தீர்த்தார். நீதியாய் ஆளுகை செய்கிறவர் யார்? [தானி. 4: 25—27]. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட இரவு நினைவுகூரத்தக்கது. அன்றிரவு எகிப்தியருக்கு மாத்திரமல்ல, இஸ்ரவேலருக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் இரவுதான். எகிப்தியருடைய தலைச்சன்கள் சங்காரமாயின. ஆனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாகிய இஸ்ரவேலர் வீடுகளிலோ, அவர்கள் செய்த அநேக பாவங்களினிமித்தம் அவர்கள் முதற்பிறப்பு சாகாமல், ஒவ்வொரு குடும்பமும் தங்கள் ரட்சிப்புக்கென்று தெரிந்துகொண்ட ஆட்டுக்குட்டியின்மேல் தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது. உலகத்தாருடைய பாவமும் அவர்களுடைய முதற்பிறப்பாகிய இயேசுவின்மேல் சுமத்தப்பட்டு ஆட்டுக்குட்டியின் ரத்தத்தால் நாம் ரட்சிக்கப்படுகிறோம். அவரே முதற்பேறானவரும் தேவாட்டுக்குட்டியுமாயிருக்கிறார்.

II. பதில் ஆள் [Substitute] ஒவ்வோர் குடும்பத்துக்கு ஒரு ஆட்டுக்குட்டி. ஆபீப்மாதம் பத்தாம் தேதி இதுமுதல் அவர்களுக்கு வருஷத்தின் முதல் தேதி. அன்றையத்தினம் ஒவ்வொரு குடும்பமும் ஒரு வெள்ளாட்டுக்குட்டி அல்லது செம்மறியாட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும். அது ஆணும் குற்றமற்றதும் ஒரு வயதுள்ளதுமாயிருக்கவேண்டும். இரண்டு சிறு குடும்பங்கள் ஒன்றாய்ச் சேர்ந்துகொள்ளலாம். மறுநாளைக்குப்பின் சூரியன் அஸ்தமிக்கிறதற்கும் நக்ஷத்திரங்கள் காணப்படுகிறதற்கும் இடையிலுள்ள நேரத்தில் இஸ்ரவேல் சபையாரெல்லாரும் தங்கள் பிள்ளைகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தெரிந்துகொண்ட ஆட்டுக்குட்டியைக் கொல்லவேண்டும் அதின் ரத்தத்தை ஈசோப்புத் தண்டினால் வெளிவாசலின் நிலையில் தடவிவைத்து அதின் மாம்சத்தை வீட்டாரெல்லாரும் சாப்பிட்டு இவ்விதமாய் சங்காரத்துக்குத் தப்பித்துக்கொள்வார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் இளவயதுள்ளவராய் இருந்தார். அவரிடத்தில் யாதொரு குற்றமில்லை. தீமையான எந்த நினைவும்

விருப்பமும் அவருடைய இருதயத்தைக் கறைப்படுத்தினதில்லை. உலகத் தோற்றத்துக்கு முன்னமே தெரிந்துகொள்ளப்பட்டார். காலம் நிறை வேறினபோது தம்மூலமாய்த் தேவனை விசுவாசிக்கிற நமக்காக வெளிப்பட் டார். அவர் தேவ ஆட்டுக்குட்டி, அவர் நமது பாவங்களைத் தமது சரீரத் தில் சிலுவையின்மேல் சுமந்தார். பாவத்தால் உலகத்துக்குண்டான சாபத் தைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு அதை நிவிர்த்தி செய்தார். நமக்காக அவர் காயப்பட்டு நொறுக்கப்பட்டார். நம்மேல் விழவேண்டிய அடிகள் அவர் மேல் விழுந்தன. நாம் குணமாகிறோம். இவ்வுலகத்தின் அதிபதி சிலுவை யில் நியாயந்தீர்க்கப்பட்டுத் தள்ளப்பட்டான். கிறிஸ்துவின் மரணத்தில் பாவம் முற்றிலும் நிவாரணமடைந்தது. நாம் பூரண சமாதானத்தோடும் அமைதலோடும் அவருடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய ரத்தத்தைப் பானம்பண்ணலாம்.

பஸ்கா ஆசரிப்பில் இன்னோர் நியமமுமுண்டு. புளிப்பில்லா அப்பம் ஏழு நாளளவும் புசிக்கப்பட்டது. இது நியமமாயிற்று. இஸ்ரவேலர் தங்கள் ஆகாரத்தை ஏற்றவிதமாய் ஆயத்தப்படுத்தக்கூடாதபடி அவ்வளவு தீவிர மாய் எகிப்தைவிட்டு புறப்பட நேரிட்டதை ஞாபகப்படுத்தும்படி இப் படி நேரிட்டது. மா புளிக்குமுன் அவர்கள் அதைச் சட்டியோடு துணி களில் கட்டி தங்கள் தோள்களில் போட்டுக்கொண்டு போனார்கள். கசப் பான கீரை இஸ்ரவேலர் எகிப்தில் அனுபவித்த கொடிய வேலைக் கஷ் டத்தை ஞாபகப்படுத்தினதுபோல புளிப்பில்லா அப்பம் அவர்கள் மிகுந்த ஆத்திரத்தோடு செய்த பிரயாணத்தை ஞாபகப்படுத்தினது. அப்போஸ் தலன் இதை உவமானமாகவைத்து, 'பழைய புளித்தமாவை புறம்பே கழித்துப்போடுங்கள். நமது பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப் பட்டிருக்கிறார். ஆகையால் பழைய புளித்தமாவோடு அல்லாமல் பண்டி கையை ஆசரிக்கக்கடவோம் என்கிறார்' [1 கொரி. 5: 7, 8]. பஸ்காவின் ஆரம்பத்தில் யூதர் தங்களை எவ்விதத்திலும் தீட்டுப்படுத்திக்கொள்ளாதபடி பிலாத்துவின் அரண்மனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள். நாம் உள்ளான பாவத்தை மாத்திரமல்ல, புறம்பான எத்தீங்கையும் நாம் தள்ளவேண்டும். பெருமை, அதிகாரப்பிரியம் இவைகளைப் புளித்தமாவாக எண்ணி அகற்ற வேண்டும். இயற்கையாக நாம் சுயநம்பிக்கையும், சுய பிரியமும் சுய அபிப்பி ராயங்களுமுள்ளவர்கள். சுயநயம் நம்மை அடிக்கடி மேற்கொள்ளுகிறது. 'நான்' என்பதைச் சுற்றியே நமது நினைவுகள், கிரியைகள் ஆடுகிறது. நமது ஜீவியத்தின் நோக்கமும் வாஞ்சையும் கிறிஸ்துவாகவேயிருக்கும்படி நாம் நம்மைக் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையவேண்டும்.

நடுச்சாமத்தின் அமைதியான நேரத்தில் சங்காரம் நடந்தது. யாரும் எதிர்பாக்கவில்லை. மோசே முன்னமே எச்சரித்திருந்தபோதிலும் அது உடனே நேரிடாமல் தாமதித்தபடியால் ஜாக்ரதையில்லாமலிருந்தார்கள்.

திடீரென்று, எச்சரிப்பன்னியில் மாணம் எல்லர் வீடுகளிலும் நேர்ந்தது. ஒருவேளை மரணவேதனை, மரணபோராட்டம், மரண கூக்குரல் இல்லாமல் திடீரென்று மரணமே நேர்ந்திருக்கலாம். மரணதூதன் அமரிக்கையாய்த் தேசமுழுவதிலும் நடந்து அரண்மனையிலுள்ள தலைப்பிள்ளை முதல் குடிசையிலுள்ள தலைபிள்ளைவரைக்கும், மிருகங்களின் தலையீற்றனைத்தையும் சங்கரித்தான். மரணம் நேரிடாத எகிப்தியர் வீடு இல்லாதபடியால் தேச முழுவதிலும் கூக்குரல் உண்டாயிற்று. எகிப்தியரின் துக்கம் மகா கொடியது. அவர்கள் துக்கத்தில் மூழ்கித் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணுவதில் கவனமாயிருந்தபடியால் இஸ்ரவேலர் யாதொரு தொல்லையின்றிப் புறப்பட்டார்கள்.

III. ஐசுவரியம். நானூறு வருஷங்களுக்குள் முன் தேவன் பின் சம்பவிக்கப்போகிறதை ஆபிரகாமுக்கு அறிவித்தார். 'இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன். பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டுவருவார்கள்.' ஆதி. 15: 14. இந்தக் காரியத்தைக் குறித்துத் தேவன் மோசேக்கு அறிவித்தார். யாத். 3: 21, 22. இஸ்ரவேலர் புறப்படும் சமயத்திலும் தேவன் மோசேக்கு அதை ஞாபகப்படுத்துகிறார். யாத். 11: 2, யாத். 12: 35, 36-ம் வசனங்களில் இஸ்ரவேலர் அப்படியே செய்தார்களென்று பார்க்கிறோம். இந்தச் சங்கதியைக் குறித்து சங்கீதக்காரன் சங். 105: 37-ல் பாடுகிறார். இவைகளெல்லாம் எகிப்தியர் மனதாரக் கொடுத்த ஈவுகள். எபிரேயர் கேட்டார்கள், கர்த்தர் எகிப்தியருடைய கண்களில் தயை கிடைக்கச் செய்தார். எபிரேயரை அநேக வருஷக் காலம் கொடுமையாய் வேலை வாங்கிச் சம்பளமில்லாமல் அவர்களை ஒடுக்கின காலத்துக்குரிய முழுச்சம்பளமும் இப்போது கிடைத்தது. பார்வோனின் கொடுமையும், அடிமைகளான இஸ்ரவேலருடைய நம்பிக்கை நிறைவேறத் தாமதித்ததும், வாதைகளால் உண்டான பயங்கரமும் எகிப்தியர் இஸ்ரவேலருக்குத் தாராளமாய்க் கொடுக்கும்படி செய்தது. எகிப்தியர் இஸ்ரவேலருக்குப் பயந்தபடியால் இஸ்ரவேலர் புறப்படுவது அவர்களுக்குச் சந்தோஷமாயிருந்தது. சங். 105: 38. தேவாலயக் கூடாரம் கட்டுவதற்கு இந்த எகிப்தியரின் கொள்ளையுடைமைகள் பிரயோஜனமாயிருந்தது.

இஸ்ரவேலர் அனைவரும் பஸ்கா ஆசரிக்கப்படுகையில் கால்களில் பாதரட்சையைமாட்டி, கைகளில் கோல்பிடித்து, அரையில் கச்சைகட்டிக் கொண்டவர்களாயிருந்தார்கள். நடுச்சாமத்தில் திடீரென்று கூக்குரல் கேட்கவே, எபிரேயர் தங்கள் வீடுகளிலிருந்து புறப்பட்டுத் தெருக்களில் கூடி பூரணசந்திரன் பிரகாசிக்கையில் தாங்கள் அனைவரும் கூடவேண்டிய இடத்தில் போய்ச் சேர்ந்தார்கள். சிறுவரும் கிழவரும் கழுதைகளின்மேல் ஏறிக்கொள்ள, புருஷர் தங்கள் ஆடுமாடுகளை ஓட்ட, ஸ்திரிகள் தங்கள் மாத் தொட்டிகளைச் சுமந்துகொண்டுபோக இவ்விதமாய்ப் புறப்பட்டார்கள்.



இவ்விதமாய் தேவனுடைய முதற்பேறான இஸ்ரவேலர், யோசேப்பின் எலும்புகளைச் சுமந்துகொண்டு, அக்கினி ஸ்தம்பத்தால் வழி நடத்தப்பட்டு மகிமையோடு புறப்பட்டுப் போனார்கள்.

## திருஷ்டாந்தங்கள்

ஓர் கப்பல் ஐயர்லாந்து தேசத்துக்கருகில் உடைந்துபோய்விட்டது. அதை நடத்தின மாலுமி மிகவும் வீரதீரனானபடியால் அது உடைந்து போனதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். அந்தக் கப்பலைச் சமுத்திரத்திலிருந்து தூக்கிப் பரிசோதனைசெய்தபோது அதிலுள்ள திசை காட்டும் கருவியின் உட்பாகத்திலுள்ள ஒரு ஊசி கோணிப்போயிருந்ததாகக் கண்டார்கள். அதுவே அக்கப்பலின் மோசத்துக்குக் காரணம் என்றறிந்தார்கள். இதே பிரகாரம் ஒருவருடைய ஆவிக்குரிய ஜீவனுக்கு அவர்கள் உபயோகிக்கிற வாசிப்புப் புஸ்தகங்களின் தன்மை காரணமாகும். பெயிக்கன் என்பவர் 'சில புஸ்தகங்களை ருசிபார்க்கவேண்டும், சிலவற்றை விழுங்கவேண்டும், சிலவற்றை நன்றாய்ச் சவைக்கவேண்டும், சிலவற்றையோ தொடவே கூடாது' என்று சொல்லுகிறார். பாம்பின் விஷம் சரீரத்துக்கு எப்படி மோசமுள்ளதோ, அப்படியே ஆத்துமாவுக்கு மோசமுண்டாக்கத்தக்க காரியங்கள் சில புஸ்தகங்களிலுண்டு.

பிரசிடென்ற் உவில்சல் சொன்னதாவது, 'வேதாகமத்தைத் தினம் தோறும் வாசிக்காதவர்களுக்காக நான் துக்கப்படுகிறேன். அதினாலுண்டாகும் பெலனையும் சந்தோஷத்தையும் அநேகர் ஏன் இழந்துபோகிறார்களென்று ஆச்சரியப்படுகிறேன். உலகத்திலுள்ள எல்லாப்புஸ்தகங்களுக்கும் அது மேலானது. ஏனென்றால் அதை வாசிக்கும் ஒவ்வொரு சமயத்திலும் எத்தனையோ தடவை முன் வாசித்த வாக்கியமாயிருந்தாலும் அது நமக்குப் புதுக் கருத்தைக்கொடுத்து நமது மனதைப் பிரகாசிக்கிறது. இவ்விதமாய்ச் சொல்லத்தக்க புஸ்தகம் வேறொன்றுமில்லை யென்பது என்னுடைய அனுபவம். இப்புஸ்தகத்தில் தனக்கு ஆலோசனைவேண்டும் என்று தேடுகிற யாவருக்கும் அவரவருக்கேற்ற ஆலோசனையைக் கொடுக்கிற இப்புஸ்தகத்தைப்போல் வேறு புஸ்தகம் நான் பார்க்கவேயில்லை' என்பதே

பெருத்த வியாபாரி யொருவர்தான் கிறிஸ்தவனல்லாதிருந்தும் அவ்விடத்துக் குருவானவர் ஒருவரைக் கூட்பிட்டு தம்முடைய கடையில் வேலை பார்க்கிறவர்களில் யார் ஜெபக்கூட்டங்களுக்கு ஒழுங்காய்ப் போய்த் தங்கள் கிறிஸ்தவ கடமைகளை உண்மையாய் நிறைவேற்றுகிறார்கள் என்று கேட்டார். குருவானவர் அவ்விடத்தில் வேலை செய்த ஓர் வாலிபனைச் சுட்டிக் காட்டினார். மறுநாட் காலையில் எஜமானன வியாபாரி அவனை ஓர் விசேஷித்த செய்தி கொண்டுபோகும்படி அனுப்பினார். அவ்வாலிபன் தன் கடமையை நன்றாய்ச் செய்துமுடித்தான். எஜமான் சந்தோஷமடைந்து

அவன் சட்டளத்தை நான்குமடங்கு அதிகப்படுத்தி இன்னொரு கிராமத்தில் தான் நடத்திவந்த கடையை மேல்பார்க்கும் உத்தியோகம் கொடுத்து அனுப்பினான். நமது கிறிஸ்தவ கடமைகளை உண்மையோடு நிறைவேற்றவோமானால் அதுவே நாம் அதிகக் கடமைகளைப் பொறுப்பாய் ஏற்றுக்கொள்ள ஆதாரமாகும்.

டாக்ட்டர் ஒருவருடைய மனைவி தன் புருஷனுக்கு அவருடைய வேலையில் தான் உதவிசெய்யவேண்டுமென்ற ஆவலுள்ளவளாயிருந்தாள். அவருக்கு ரணவைத்தியம்தான் வேலை. ஆகையால் அவர் உபயோகிக்கும் ஆயுதங்களின் பேரைப் படிக்கவும், அவைகளின் உபயோகம் இன்னதென்றறியவுமாக ஆரம்பித்து தன் கணவன் ஒவ்வோர் ஆயுதத்தையும் உபயோகித்து முடிந்ததும் திரும்ப அதை அதின் அறைக்குள் அதற்குரிய இடத்தில் வைப்பதில் உதவிசெய்து வந்தாள். இப்படிச் செய்துவரும் நாளில் அந்த அம்மாள் தன் மனதில் நினைத்ததாவது, 'இந்த ஆயுதங்கள் தன் கணவன் வைக்கவேண்டிய அதனதன் இடங்களைவிட்டு ஓர் அணுவளவு தன்னிஷ்டப்படி மாறுமானால் ரணவைத்தியம் செய்யும் சமயத்தில் எவ்வளவு குளப்பமாகும்? மெய்தான், டாக்ட்டர் அவ்வித ஆயுதத்தை ஒருக்காலும் உபயோகிக்கமாட்டார். அவைகள் காரியத்துக்குதவாது' என்பதே. கிறிஸ்தவ ஊழியனும் இவ்விதமாகவேயிருக்கிறான்.

லூரே என்னுமிடத்தில் அலங்காரமான நிலவறைகள் உண்டு. அவைகளைப் பார்க்கும்படி பலர் போவதுமுண்டு. வழிகாட்டியோடுதான் போகவேண்டும். அவன் ஆரம்பத்தில் ஒரு மெழுகுவர்த்திமாத்திரம் கொண்டுபோவான். பின் செல்லும் ஜனங்கள் இருட்டாயிருப்பதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு முறுமுறுப்பார்கள். ஓரிடத்திற்கு வந்தவுடன் வழிகாட்டி எல்லாரையும் நிற்கச்சொல்லி நாடாச்சுற்றியிருக்கும் ஓர் சக்கரத்தைத் தளரச்செய்து மெழுகுவர்த்தியால் பொருத்துவான். திடீரென்று பிரகாசம் உண்டாக, பிரயாணிகள் ஆச்சரியத்தோடு பிரமிப்பார்கள். இது ஓர் நல்ல திருஷ்டாந்தம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு மெழுகுவர்த்திபோன்ற விசுவாசப் பிரமாணங்கள், உடன்படிக்கைகள், வாக்குத்தத்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார். இவைகளின் உதவியால் நமது ஜீவியம் பொருத்தப்படுமானால் நமது ஜீவியத்திலேயே தேவனுடைய கிருபை, இரக்கம் இவைகளின் ஐசுவரியங்கள் விளங்கும்.

---

## இஸ்ரவேலின் தலைவனான மோசே. யாத். 3: 1—12.

**I. மோசேயின் ஆரம்ப பயிற்சி.** மோசே படிப்படியாய் பயிற்றுவிக்கப்பட்டான். தன் பிதாக்களின் தேவனைப்பற்றும் விசுவாசத்தை அவனுடைய தாய் சிறு பிராயத்தில் கற்றுக்கொடுத்தாள். ராஜகுமாரத்தி அவன் காலத்தில் கிடைக்கக்கூடிய சகல சாஸ்திரங்களையும் அவனுக்குக்



கற்றுக்கொடுத்தாள். இவ்விரண்டும் அவனுடைய முதல் 40 வருஷங்களில் அவனுக்குக் கிடைத்தது. இரண்டாவது 40 வருஷத்தில் எத்திரோவின் ஆடுகளை வனாந்தரத்தில் மேய்க்கும் காலத்தில் தனித்த ஜீவியம், அமைதியான ஜீவியத்தின் பயிற்சி கிடைத்தது. ஜீவன், மரணம், தேவன் இவற்றைப்பற்றிய நினைவுகள் தனித்த ஜீவியத்தில் அவனுக்கு உதவியாயிருந்தன. சிறைப்பட்டவர்களில் ஒருவனாகிய இவனுக்கு அவ்வித ஜீவியத்தின் நினைவுகளும் அவன் மனதில் அடிக்கடி உண்டாயிருக்கும். அதோடு மோசே தனிவாசம்செய்த இந்தச் சீனாய் வனாந்தரம் ஓர்காலத்தில் எகிப்தியர் குடியிருந்த இடம். அநேகம் சுரங்கங்கள் அவ்விடத்தில் உண்டு. அவைகளில் வேலைசெய்தவர்கள் (இஸ்ரவேலர்) தங்கள் கைப்பட அச்சுரங்கங்களில் எழுத்துக்கள் எழுதியிருக்கலாம். இவைகளை வாசிக்க வாசிக்க மோசேக்குத் தன் ஜனங்களின் உபத்திரவமும் தான் அவர்களுக்கு உதவிசெய்யக்கூடாதிருக்கிற நிலைமையும் அவன் மனதை வருத்தப்படுத்தியிருக்கலாம். ஆகையால் அவர்களுடைய விடுதலைக்காக அவன் அழுகையோடும் கண்ணீரோடும் ஜெபம் செய்திருக்கலாம். இவ்வித பயிற்சியடைந்தவன்தான் தேவன் வல்லமையோடு உபயோகிக்கும் கருவியாவான் (1 கொரி. 1: 26, 29). கழுதையின் தாடையெலும்பு, சவுக்கு, கவணும் கூளாங்கல்லும், ஐந்து வாற்கோதுமை அப்பமும், இரண்டு சிறு மீன்களும் இப்படிப்பட்டவைகள் எஜமான் ஜெயங்கொண்டு ஆசீர்வதிக்கும் கருவிகள்.

**II. எரிகிற முட்செடியின் அடையாளம்.** முட்செடியினால் இச்சம்பவம் நடந்த இடம் எப்படிப்பட்டதென்று தெரிகிறது. இரவாயிருக்கவேண்டும். மற்றப்படி முட்செடி எரிகிறதை மோசே காணக்கூடாதிருக்கலாம். ஆடுகள் படுத்திருக்கின்றன. மோசே தனிமையாய் மந்தையைக் காத்துக்கொண்டிருக்கிறான். அக்கினியானது வேறொரு பொருளைக்கொண்டு எரியாமல் (முட்செடி வேகவில்லை) தானாகவே எரிந்துகொண்டிருக்கிறது. காடுகளில் நெருப்புப்பற்றினால் அல்லது மின்சாரத்தில் நெருப்புண்டானால் காட்டிலுள்ள புல், பூண்டுகள் எரியும். திடீரென்று அக்கினியுண்டாகி, திடீரென்று அணைந்தும்போம். ஆனால் மோசேகண்ட முட்செடி எரிந்தும், இலைகள் காய்ந்து சுருங்கவில்லை. கொப்புகள் கரியாகவில்லை. செடி எரிந்துபோகவுமில்லை. இந்தக் காட்சி எகிப்தில் இஸ்ரவேலர் அனுபவிக்கும் அடிமைத்தனத்தையும் உபத்திரவத்தையும் குறிக்கிறது என்று சாதாரணமாய்ச் சொல்லுவார்கள். அப்படியானால் மோசே தன் பாதரட்சைகளைக் கழற்றவேண்டியதில்லை.

வேத முழுவதிலும் அக்கினி தேவனுக்கு அடையாளம் இந்தக் காட்சியிலும் தேவனுடைய சுத்த பரிசுத்த தன்மையையும் பிரசன்னத்தையும் காட்டுகிறது. 'நமது தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார்' செடி நெருப்புப்பற்றி எரிந்ததென்று சொல்லாமல் நெருப்பு செடியிலிருந்ததாகச்

சொல்லியிருக்கிறது. ஆகையால் புறக்கணிக்கப்பட்டு உபத்திரவமடைந்த தமது ஜனத்தின் மத்தியில் தேவன் பிரசன்னமாயிருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. அவர்களுடைய சகல உபத்திரவத்திலும் அவரும் உபத்திரவப்பட்டார். அவர்கள் ஓர் முட்செடியாயிருந்தாலும் (நியாயாதி. 9: 14) அதில் தாம் வாசம்பண்ணவும் அதை நிரப்பவும் இறங்கிவந்தார். தேவன் இவ்விதமாகக் கிருபை கூர்ந்தால், மோசே, தாழ்த்தப்பட்ட மோசே திவ்ய ஆவியினாலும் பிரசன்னத்தினாலும் உயிரடையமாட்டானா? அவனுடைய பெலவீன நிலைமையும் தேவனுடைய வல்லமையும் சேர்ந்தால் பெரிய கிரியை நடைபெறாதா? இக்கிரியையை நிறைவேற்றத் தேவன் அவனைத் தமது பிரதிநிதியாகவல்ல, தமது கருவியாக அழைக்கிறார். ஊற்றாகவல்ல, வாய்க்காலாயிருக்கும்படி அழைக்கிறார். அவன் தன்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க மாத்திரம் செய்யவேண்டும். அப்போது சர்வ வல்லவர் அவனிலும் அவன் மூலமாயும் பலத்த கிரியை செய்வார். ஒருகாலத்தில் ஓரிடத்தில் நடக்கும் பஜனையைக் கேட்கும்படி திரள் ஜனங்கள் கூடிவந்தார்கள். அதற்காக மிகுதியானபேர் முதல்வகுப்பு டிக்கட் எடுத்து மிகுந்த பணத்தைச் செலவழித்தார்கள். பஜனை நடத்துகிற மனுஷன் தன் பிடில் வாத்தியத்திலுள்ள ஒரு நரம்புதவிர மற்றெல்லா நரம்புகளையும் வேண்டுமென்று அற்றுப்போட்டான். அப்புறம் பிடிலைக் கையில் பிடித்துக்கொண்டு கெம்பீரமாய் ஜனங்களை நோக்கி "ஒரு நரம்புப் பஜனை" என்று சத்தமிட்டான். இதே பிரகாரம் தேவன் தமக்கு முற்றிலும் ஒப்புவிக்கப்பட்ட ஒருவனை நிரப்புவாரானால் எவ்வளவு பலத்த கிரியைகள் நடக்கும்?

III. **திவ்ய நாமம்.** பூர்வ உலகத்தில் பேரானது குணத்தைக் காட்டுகிறதாயிருந்தது பூசாரிகள் தங்கள் தெய்வங்களை, எந்தக் குணத்தைக் காட்ட வேண்டியதோ அந்தப் பேரால் அவைகளை அழைத்தார்கள். அம்மோன் என்றால் மறைவு; ப்த்தா என்றால் வெளிப்படுத்தல். ரா என்றால் விரைவு. இதுவரையும் தேவனுக்கு எல் என்றும் (உயர்ந்தவர்) ஷடாய் என்றும் (வல்லவர்), யெகோவா என்றும் (தானாய் இருப்பவர்) பேர் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்தச் சமயத்தில் தமக்குரிய பேரை வற்புறுத்துகிறார். யெகோவா என்ற பேர் எபிரேயருக்கு மிகுந்த பயபக்திக்குரிய பேராயிற்று.

இந்த நாமத்தின் கருத்து தெளிவாயிருக்கிறது: **முதல் கருத்து தேவன் ஒரு ஆள்.** அவர் ஒரு தன்மையும் லக்ஷணமுமாத்திரமல்ல அல்லது ஒரு ஆவி மாத்திரமல்ல—ஒரு ஆள்—மற்றெல்லா வஸ்துக்களைவிட வித்தியாசமானவரான ஓர் ஆள். அது என்று சொல்லாமல் 'நான்' என்று தம்மைக் குறித்துச் சொல்லத்தக்கதாக அவர் ஒரு ஆள் (எபேசி. 4: 6, வெளி. 1: 4, 8). **இரண்டாவது கருத்து: தேவன் மாறாதவர்.** அவர் நித்தியர் மாத்திரமல்ல, காலம் மாறுதல் இவைகளுக்குச் சம்பந்தப்பட்டவருமல்ல. யுகாயுகங்கள் அவரை எவ்விதத்திலும் மாற்றாது. அவருக்கு இறந்தகாலமும் எதிர்கால



முமில்லை. அவர் எப்போதுமிருக்கிறவர். அவர் பரிபூரணவஸ்துவும் மாறுதல்களுள்ள சிருஷ்டிகளின் நடுவில் மாறாதவருமாயிருக்கிறார். (எபி. 1: 10-12). **மூன்றாவது கருத்து: தேவன் ஏகமகத்துவர்.** அவரைத் தவிர வேறே யாரும் அவருக்கு நிகரல்லர்: தேவன் தேவனாகவேயிருக்கிறார். ஏசாயா 40: 18, 25). கிறிஸ்துவும் இரண்டொரு சமயங்களில் இந்த மகத்துவ நாமத்தால் தம்மை யழைக்கிறார். தேவனுக்குச் சமமாயிருப்பதை அவர் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை. (பிலி. 2: 6). 'நானே அவர்'. 'ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்' (யோ. 8: 28, 58) உன்னுடனே பேசுகிற நானே அவர்' (யோ. 4: 26). தமது ஊழியத்தின் காலத்தில் மனுஷஜாதியின் அவசியத்துக்குத்தக்கதாக 'நானே ஜீவ அப்பம், நானே வாசல், நானே மெய்யான திராட்சச்செடி' இவை முதலான பெயர்களால் தம்மை அழைக்கிறார்.

IV. **மோசேக்குக் கொடுத்த அடையாளங்கள்.** அவனுடைய ஊழியத்தின் தன்மையைக் காட்டும்படி இந்த அடையாளங்கள் கொடுக்கப்பட்டன. (1) கோல். அவனுடைய திக்கற்ற நிலைமைக்கும் தாழ்மைக்கும் இது ஏற்ற திருஷ்டாந்தம். சாரமும், ஜீவனும், பெலனுமில்லாத காய்ந்த கம்பு தான் தகுதியற்றவன், பேச்சுச் சாமர்த்தியமில்லாதவன், அதிகாரமில்லாதவன், சித்திபெற லாயக்கற்றவன் என்று தன்னைத் தாழ்த்தினான். தேவனோ உன் கையிலிருக்கிறது என்ன என்று கேட்டார். தேவனுடைய சித்தத்திற்கு அமைந்து மனப்பூர்வமாய் அவருக்கு இணங்குகிற சிந்தைதான் தேவை. அப்டடி நடந்தால் சர்ப்பத்துக்கு அடையாளமான எகிப்தையும் மோசே தேவனுடைய கோலாக உபயோகிக்கக்கூடும். (2) குஷ்டரோகமுள்ள கை சுகமானது. தேவனுடைய வேலை சுத்தமான கைகளால் செய்யப்படவேண்டும். சுத்திகரிக்கிறவர் தேவனே. (3) தண்ணீர் ரத்தமாதல். இது எகிப்து தேசத்துக்கு நேரிடும் துன்பங்களைக் காட்டும் அடையாளம். தேவனுடைய தீர்மானம் நிறைவேறாமல் போவதைப் பார்க்கிலும், எகிப்து வாதிக்கப்படுவதே நல்லது.

## எக்காளச் சத்தம் தொனிக்கும்படி செய்யவேண்டும்

லேவி. 25; 9. (தொடர்ச்சி)

III. **எக்காளச் சத்தம் மாற்றின ஜீவியம்.** அதாவது 50-ம்வருஷத்தில் மாத்திரம் எக்காளச்சத்தம் தொனித்து அப்புறம் நின்றுபோனது. மற்ற 49 வருஷங்களில் ஒன்றும் இல்லை என்றல்ல, அந்தக் கெம்பீர சத்தத்தைக் கேட்டு விடுதலையான யூதன் அந்த விடுதலை வருஷத்தை மறக்காமல் சகல காரியங்களிலேயும் அதற்கேற்றபடி நடக்கக் கடமைப்பட்டவனாய் இருந்தான். யூபிலி வருஷத்துக்குப் பின் வரும் வருஷங்களின் தொகைக்

கேற்க கொடுக்கல் வாங்கல் விஷயங்களை அவன் நடத்தவேண்டும். யூபிலி வருஷத்தை அளவுகோலாகப் பாவித்து அதற்கு முன் வரும் வருஷங்களின் தொகையையும் பின்வரும் வருஷங்களின் தொகையையும் கணக்கிட்டு அந்தக் கணக்கின்படியே நிலத்தின் கிரயத்தையும் வீட்டின் கிரயத்தையும் ஏற்படுத்தவேண்டும். மேலும் நாம் இங்கே விபரமாய் வாசிக்கிறபிரகாரம். யூபிலி சிலாக்கியங்களைப் பெற்ற ஜாதியார் தரித்திரரை ஒடுக்கக்கூடாது அநியாயம் செய்யக்கூடாது. அந்நியரை உபசரிக்கவேண்டும். வேலைக்காரரைப் பட்சமாய் நடத்தவேண்டும். இவ்விதமாக எக்காள சத்தம் கேட்ட யூதர்கள் பரிசுத்தமாயும் தேவபக்தியாயும் பரோபகார சிந்தையோடும் நடந்துகொள்ளவேண்டும். பிரியமான சிநேகிதரே, எக்காள சத்தங் கேட்டிருக்கிறீர்களா? தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை நம்புகிறீர்களா? அப்படியானால் தேவ கிருபையானது இவ்வுலகத்தில் தோன்றின நோக்கத்தைப் பாருங்கள். நம்முடைய சபையில் தேவ அறிவுமுண்டு, மார்க்க வைராக்கியமுமுண்டு. பரிசுத்த ஜீவியம் வேண்டாமா? சீமை தேசத்தில் ஒரு வாலிபன் எனக்குத் தெரியும். எங்கள் சபையைச் சேர்ந்தவன். தேவ கிருபையால் எக்காள சத்தத்தைக் கேட்டுக் குணப்பட்டு விசுவாசியானான். அவன் ஒரு பெரிய ஷாப்பிலே வேலை செய்துவந்தவன். ஒரு காலத்தில் எஜமானுக்குத் தெரியாமல் கொஞ்சம் பணத்தைத் திருடிக்கொண்டுபோனான். குணப்பட்டபின்பு அவன் நேரே போய் எஜமானுக்குத் தன் பாவத்தை அறிக்கையிட்டு பணத்தைத் திரும்ப ஒப்புவித்து மன்னிப்பைக் கேட்டுப் பெற்றுக்கொண்டான். ஏன் அப்படிச் செய்தான்? தேவகிருபை அவன் மனதில் வந்து தோன்றினதால் அவபக்தியை வெறுத்து பரிசுத்தமாய் ஜீவியம்பண்ண அவன் மனதை ஏவினதால் அல்லவா? ஆ! ஜனங்களே பாவங்களைப் பேணிக்கொண்டு பாவத்தில் நிலைத்திருந்து தேவபக்தியாய் நடந்துகொள்வது கூடாத காரியம்.

Rev, T. Walker.

---

## சாது சுந்தர் சிங்

பரி. லூக்கா 21: 36.

'ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்' என்றார். மனுஷகுமாரனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படுவதற்கு ஜெபம் அவசியம். தேவபிரசன்னத்தையும், தேவ ஐக்கியத்தையும், தேவசமாதானத்தையும் ஜீவியத்தில் உணருகிறவர்கள், அவர் தோன்றும்பொழுது அவர் முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு விழித்திருக்கவேண்டும். நாம் ஒருவரோடு சிநேகமாயிருந்தால், அவருடைய குணமும் அவருடைய பழக்கமும், அவருடைய பேச்சும் நம்மிடத்தில் படிந்துபோகிறது போல, நாம் ஜெபத்தினால் தேவனோடு ஐக்யப்படும்பொழுது, அவருடைய குணங்களும், அவருடைய லக்ஷணங்களும் நமக்குக் கிடைக்கிறது. அவரோடு சகவாசம் செய்துவிட்டாலோ அதன்பின் பயமிராது. மேன்மேலும், சந்தோஷம் உண்டாகும். அவரோடு சகவாசம் செய்யாதவர்கள் அவர் வரும்போது அலறுவார்கள். ஜெபத்தினால் நாம் தேவனோடு ஐக்யப்படுகிறோம். அந்த ஐக்யத்தால் இங்கேயும் சந்தோஷம், அங்கேயும் (மறுமையிலும்) சந்தோஷம். ஜெபத்தால் இவ்வுலகத்திலும் காக்கப்படுகிறோம். மறு உலகத்துக்கும் ஆயத்தப்படுகிறோம். கிறிஸ்தவர்களுக்கோ ஜெபத்தின் அருமையே தெரியாது. ஏதாவது ஒரு அவசர உதவிக்காகவும், ஒரு மோசத்திலிருந்து காப்பாற்றப்படுவதற்காகவும் ஜெபிப்பார்கள். அது பிச்சை கேட்பதேயொழிய, ஜெபமல்ல. இந்தக் கிறிஸ்தவர்கள் ஆத்திரத்திலும் அவசரத்திலும் ஜெபித்துவிட்டு, ஆத்திரம் அவசரம் முடிந்தவுடன் தேவனை மறந்துவிடுகிறார்கள். இவர்களைப் பிச்சைக்காரக் கிறிஸ்தவர்கள் என்று அழைப்பதே தகுதி. ஜெபமென்பது தேவனோடு ஐக்யமாயிருந்து பரிசுத்தமாக்கப்படுவதே ஜெபம். அதாவது: ஜெபத்தினால் ஐக்யமும், ஐக்யத்தினால் பரிசுத்தமாக்கப்படுத்தலுமே ஜெபம்.



**திருஷ்டாந்தமாக:** (1) ஒரு பெரிய குடிகாரனிருந்தான். தன் ஆஸ்தியையெல்லாம் குடியில் அழித்தான். சாப்பிடுகிறதற்குக் கையில் காசில்லை. அந்த ஊரில் ஒரு நல்ல மனுஷனுமிருந்தான். அவனிடத்தில் உதவி பெறும்படியாக இந்தக் குடிகாரன் அவனிடத்தில்ச் சென்றான். இப்படியாக, அவனுக்கு ஒரு உத்தியோகமும் கிடைத்தது. ஆனால், தினந்தோறும் அரைமணிநேரம் மாத்திரம் தன்னோடு பேசிவிட்டுப் போகவேணுமென்பதாய் அவனுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. ஆகையால், அந்தக் குடிகாரன் தன் எஜமானிடத்தில் தினந்தோறும் அரைமணிநேரம் சம்பாஷித்து வந்தான். நடந்ததென்ன? 'பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெற்றது' என்பதுபோல, நாள்ச்செல்ல நாள்ச்செல்ல, அந்த எஜமானுடைய நற்குணங்கள் கொஞ்சங் கொஞ்சமாக அந்தக் குடிகாரனிடத்தில் படிந்தது. அந்த அரைமணிநேர சம்பாஷணையால் குடிகாரனுடைய ஜீவியமும் மாறினது. கடைசியில் உத்தம கிறிஸ்தவனானான். குடியை ஜென்மப்பகையாய்ப் பகைத்தான். அவனுக்குக் குடியினால் கிடைத்த சந்தோஷத்தைப் பார்க்கிலும், குடியை விட்டதினால் பதின்மடங்கு சந்தோஷமுண்டானது. மனிதரோடு சம்பாஷிப்பதினால் இப்பேர்ப்பட்ட பெரிய மாறுதல் உண்டாகுமானால், தேவனோடு சஞ்சரித்தால் இதிலும் பெரிய மாறுதல் உண்டாகாதோ? அவரோடு பழகினால் அவருடைய மகிமை நம்மில்க் காணப்படாதோ?

**பின்னை ஏன் நாம் ஜெபத்தில்க் கேட்பதைப் பெற்றுக்கொள்ளுகிறதில்லை?** (1) நன்றி கெட்டுப்போகிறபடியால்த்தான் பெற்றுக்கொள்ளுகிற

தில்லை. அவசர சமயத்தில் ஜெபிக்கிறோம். நன்மையைப் பெற்றுக் கொண்ட பிறகு தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கூட மறந்து போகிறோம். நாம் ஜெபிக்க ஆரம்பிக்கும்பொழுதே புதிய ஜீவனுக்காகத்தான் ஜெபிக்கவேண்டும். ஜெபமில்லாத கிறிஸ்தவன் செத்தபிணம்! ஒரு மார்க்கத்தைவிட்டு இன்னொரு மார்க்கத்துக்குப் போய்விட்டான். அல்லது கிறிஸ்தவனாயிருந்து அஞ்ஞானியாய்ப் போய்விட்டான் என்று நான் கேள்விப்படுகிறபொழுது ஆச்சரியப்படவேயில்லை ஏனென்றால், நான் அதை அனுபவத்தில்க்கண்டேன். புதிய ஜீவனடைந்த ஒரு கிறிஸ்தவன் தன் ஜீவன் போனாலும் தன் மார்க்கத்தை விடமாட்டான். நான் என் அருமை ரக்ஷகரை என் அநுபவத்திலும் கண்டேன் என் அநுபவமாக்கியுங் கொண்டேன். அவர் எனக்குத் தரிசனமாகி தேவசமாதானத்தை அளித்தார். இது ஒரு மனோபாவனையல்ல. இது ஒரு தரிசனை. இந்த ரக்ஷகரினிமித்தமாக, துக்கத்திலும்; துன்பத்திலும், வருத்தத்திலும், சந்தோஷத்தை அடைந்தேன். திபேத்து நாட்டில் என்னை ஒரு பாழ்ங்கிணற்றில் போட்டபொழுது, அவ்விடத்தில் நானடைந்த சந்தோஷத்தை என் வீட்டிலு மடைந்ததில்லை. நான் கிறிஸ்தவனாகுமுன் யோகஅப்பியாசத்தால் சந்தோஷத்தை அடைந்து கொள்ளலாமென்று யோசித்தேன். அதிலும், கிடைக்கவில்லை. ஆனால், என் ரக்ஷகரண்டை சென்று ஜெபிக்கும்பொழுதோ மோக்ஷம் போலிருக்கிறது. மெய்விசுவாசத்தால் ஜெபம் செய். உன் உள்ளமே மோக்ஷமாகிறது. இயேசுவானவர் நம்மில் உயிரோடிருக்கிறார். நாம் சுதந்தரவாளிகளாகிறோம். ஜெபமில்லாததால்த்தான் வேதாகமத்தைத் தர்க்கிக்க ஆரம்பிக்கிறார்கள். அநுபவமில்லாதவர்கள் வேதாகமத்தை ஒரு கதைப் புஸ்தகம் என்று நினைக்கிறார்கள். (இன்னும் வரும்)

---

நாம் எவ்வளவாய் நமது நேரத்தையும் இருதயத்தையும் ஜெபததில் பின்னிடுகிறோமோ, அவ்வளவாய்க் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சாயலுக் கொப்பாய் வளருவோம். ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் நமக்காகக் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாய் அளிக்கப்பட்டிருக்கிறது. தேவன் இவ்விதமாய் வாக்களித்துவைத்திருக்கிறதை அநேகர் அடையாமற்போகிறார்கள்.

---

நிலைத்திருக்கிற வேலை யெதுவென்றால் கிறிஸ்துவின் நாமத்திலும் அன்பினால் எவப்பட்டும் செய்கிற வேலையே. 'நமக்காக நாம் நடப்பிக்கும் கிரியைகள் நிலையா. அவைகள் எவ்வளவு நேர்த்தியாய் அழகாய் இருந்தாலும் அழிந்துபோம். தான் செய்த வேலையில் தன் பேரை நாட்டுகிறவன் மெய்யாகவே வெட்கத்துக்கும் நிந்தைக்கும் உள்ளாவான். ஆனால் கிறிஸ்துவின் அன்பினாலும் மற்ற மனுஷர்பேரிலுள்ள அன்பினாலும் எவப்பட்டுச் செய்யும் யாவும் நிலைநிற்கும்.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

July 1919. Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XX ஜூலை 1919

2 AUG 1919 MADRAS

## சாது சுந்தர் சிங்

பரி. லூக்கா 21: 36 (தொடர்ச்சி)

உதாரணமாக (2) கல்லாத ஒருவனை அழைத்து ஒரு இந்தியப் படத்தை (Map) க்காண்பித்து இதுதான் இந்தியா என்றும், இதோ வரிவரியாயிருப்பது மலைகளென்றும், அந்த மலைகள் அதிக உயரமாயிருக்குமென்றும், அதிலிருந்து ஆறுகள் ஓடிவரும் என்றும் சொன்னேன், அவனோ 'என்ன ஐயா, இரண்டும் ஒரே சமமாகத்தானேயிருக்கிறது. அது எப்படி உயரமாகும், எப்படி அதிலிருந்து தண்ணீர் ஓடும்?' என்றான். ஆனால், அனுபவத்தில் மலையைப் போய்ப்பார்த்தால் அது உயரமென்பதும், அதிலிருந்து ஆறுகள் ஓடிவருமென்பதும் தெளிவாய்த் தெரியும். இதேவிதமாகத்தான், நன்மைகளும், ஆசீர்வாதங்களும் மேலிருந்து வருமென்று சொல்லும்பொழுது ஆச்சரியமாகத்தோன்றும். என்ன ஐயா, தலைகீழாய்ப் பேசுகிறீர்களே என்றும் சொல்லலாம். ஆனால், அனுபவத்தில் நன்மைகளையும், ஆசிர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும்பொழுதுதான், அவைகள் மேலிருந்து வருகிறதென்று தெரியும். பின்னும் சூரியனிடத்தில் நெருங்க நெருங்க குளிர்ச்சியாயிருக்கும் என்றும் சொன்னேன். தண்ணீர்மேல் தண்ணீர்ப் பாலத்தின்மேல் ஏறி அக்கரைக்குப் போனேன் என்றும் சொன்னேன். அதற்கவன்: 'என்ன ஐயா நீங்கள் பேசுகிறதெல்லாம் நீதிக்கு விரோதமாயிருக்கிறதே' என்றான். இவைகள் இயற்கைக்கு விரோதமென்றும் சொல்லலாம். ஆனால், சாஸ்திரத்தின்படி சூரியனிடத்தில் நெருங்க நெருங்க உஷ்ணமிராது. அல்லாமலும், குளிர்ச்சியான தேசங்களில் குளங்களும், ஆறுகளும், உறைந்து பனிக்கட்டியாயிருக்கும். அடியில் தண்ணீரும், அதற்குமேல் தண்ணீரால் உண்டான பனிக்கட்டிகள் பாலமாக நிற்

கும். அதில் ஏறி அக்கரைக்குப் போனேன். இவைகளை அனுபவத்தில் காணும்பொழுதுதான் தெளிவாகும். இதேவிதமாக நாம் தேவனிடத்தில் நெருங்கும்பொழுதுதான் ஜீவ ஊற்றுகளைக் காணலாம். அப்பொழுது அது நமக்கு ஆச்சரியமாயிராது. ஜெப பர்வதத்தில் ஏறினவர்களுக்கு இவைகளெல்லாம் ஒரு ஆச்சரியத்தையும் கொடுக்காது. ஏனென்றால், இவைகளை அனுபவத்தில் கண்டு சாதாரணமாகிவிடுகிறது. ஏறாதவர்களுக்குத்தான் ஆச்சரியமும் அதிசயமுமாயிருக்கும். ஜெப பர்வதத்தில் ஏறிவிட்டாலோ தேவ மகிமையையும் வெளிப்படையாய்க் காண்கிறோம். மேன்மையான பொருட்களையும் நமக்கு அளிப்பார்.

பெலுக்கிஸ்தானில் (Baluchistan) பொக்கிஷமிருக்கிறதென்று ஒருவன் தரையைத் தோண்டச் சொன்னான். தோண்டத் தோண்ட ஒன்றுமில்லை. தாகம் அதிகரித்தது. குடிக்கவும் தண்ணீரில்லை. மேன்மேலும் தோண்டச் சொன்னான். தோண்டினபொழுதோ திடீரென்று ஒரு ஊற்றுக்கண் திறந்தது. அதிலிருந்து வந்த தண்ணீரால் தாகமும் தீர்ந்தது. தோண்டச்சொன்னது தண்ணீருக்காகத்தான். பொக்கிஷத்துக்காகவல்ல என்பதாகக் கடைசியில் சொல்லி முடித்தான். இந்தச் செய்கையால் இரண்டு பிரயோஜனத்தைக் காண்கிறோம். முதலாவது, தேக அப்பியாசமும்; இரண்டாவது, தண்ணீர் ஊற்றும். தோண்டினதினாலே தேகமும் பலப்பட்டது அது மாத்திரமல்ல, அதிலிருந்தே தண்ணீரும் கிடைத்திராதிருந்தால், மரித்திருப்பான். இவ்விதமாகத்தான் ஆத்தும விஷயமும். ஜெபம் செய்யச்செய்ய நமது ஆத்துமம் பலப்படுகிறது. ஆத்துமா பலப்படுகிறதால் நாம் எந்தச் சோதனையையும் ஜெயிக்க வல்லவர்களாகிறோம். அது மாத்திரமல்ல, தேவ சமாதானத்தையும், தேவ சந்தோஷத்தையும் அடைகிறோம் சத்திய வேதத்திலுள்ளவைகள் யாவையும் அனுபவத்தில் அறிகிறோம்.

**உதாரணமாக:** மாற்கு 16: 18. '. . . . சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது . . . . .' இதை நான் என் அனுபவத்தில் கண்டேன். நான் கிறிஸ்தவனானபோது என் இனத்தார் எனக்கு விஷம் கொடுத்துவிட்டார்கள். நான் பிரயாணமாய்ப்போய் ஒரு கிறிஸ்தவசாலையில் சேர்ந்தபொழுது அந்த விஷம் சரீரத்தில் பரம்பினபடியால் மயக்கமுண்டானது. வைத்தியருக்கு ஆள் அனுப்பினார்கள். அவர் வந்து பார்த்துவிட்டு ஒன்றும் செய்யமுடியாது. யாரோ விஷம் கொடுத்திருக்கிறார்கள். இன்னுங் கொஞ்ச நேரத்தில் இரத்தம் கக்கி இறந்துவிடுவதாக அறிவித்தார். அப்பொழுது, எனக்குச் சிநேகிதனாயிருந்த ஒரு ஹிந்து என்னைவந்து பார்த்துவிட்டு, வைராக்கியமுள்ள ஒரு ஹிந்து கிறிஸ்துவை விசுவாசிப்பதனால் இதுதான் முடிவு. முதலாவது:



மார்க்கமும் போனது, ஜாதியும் போனது, இனமும் போனது, இப்பொழுது உயிரும்போகப் போகிறது என்று இகழ்ந்தான். வைத்தியர் சொன்னபடியே இரத்தமும் வந்தது. இரத்தத்தோடு விஷமும் வெளியேறினது. அப்பொழுது: 'நான் உம்முடைய ஊழியத்தைச்செய்ய உமக்குச் சித்தமானால் எனக்கு உயிர் கொடும்' என்று ஜெபித்தேன். அதிசீக்கிரத்தில், பூரணசுகம் கிடைத்தது. நான் செத்துப்போயிருப்பேன் என்று என்னைப் பார்க்கவந்த என் ஹிந்து சிநேகிதன், நான் உயிரோடிருப்பதைக் கண்டவுடன் ஒன்றும்பேசாதபடி வெட்கத்தோடு திரும்பிவிட்டான். இவரும் கிறிஸ்துவுக்குப் பெரிய விரோதியாயிருந்தான். இப்பொழுது பாமாவிலிருக்கிறார். அவரிடமிருந்து ஒரு கடிதம்வந்தது. அதில்: 'சந்தோஷ செய்தி, வேதவாக்கியம் நிறைவேறினது, உன்ஜெபத்தால்தான் நீ பிழைத்தாய், அன்றையத்தினத்திலிருந்து நான் வேதம் வாசித்து வருகிறேன். நானும் நீ அடைந்த சந்தோஷத்தைப் பெற்றேன். பரிசுத்த ஆவியானவரையும் பெற்றேன்' என்று எழுதினார். ஆம், அன்று என் ஜெபத்தைத் தேவன் கேட்காமலிருந்திருப்பாரானால், இங்கே இப்பொழுது உங்களோடு நான் பேசமுடியாது. அல்லது, கிணற்றில் நாறுவேன். அவசியம் என்று காணும்பொழுது ஜெபத்தைக்கேட்கிற தேவன் உதவி செய்யாமலிருக்கமாட்டார்.

ஒரு குருடனுக்கு மருந்து கொடுத்தார்கள். அவன் அதைச் சாப்பிட்டால் பார்வையடைவான். ஆனாலோ, அந்த மருந்தைக் கண்ணால் பார்க்குமுன் வாயில் போடமாட்டேனென்றால் பார்வையடைய முடியாது. ஆனால், பார்வையடைந்த பிறகு மருந்தை லேசாகப் பார்க்கலாம். சிலர், கிறிஸ்து உயிரோடிருந்தால் அவரைக் காண்பியுங்கள் என்கிறார்கள். நாம் அவரைக் கண்ணால் பார்க்கமுடியாது. ஆனால் நமது இருதயத்தில் வசிக்க நாம் இடங்கொடுப்போமானால, ஒரு காலத்தில் நாம் அவரைத் தரிசிக்கலாம். ஜெபத்தால் புதிய வல்லமையும் புதிய ஜீவனும் கிடைக்கிறது. ஒரு ரத்தச் சாட்சியைப் பிடித்து கிறிஸ்துவை மறுதலிக்கச் சொன்னார்கள். அவர்களோ புத்தமார்க்கத்தார்கள். அந்த மார்க்கத்தில் எதையும் கொல்லக்கூடாது. ஆனாலோ, இந்த ரத்தசாட்சியின் உடுப்பைக் கழற்றி இரத்தம் வடிய அடித்து மிளகாய்த்தூளை உடம்பில் செலுத்தினார்கள். அதன் பிறகு அவருடைய தோலை உறிக்கையில், தன் ஜீவன் பிரியும்வரைக்கும் தன் சுயபுத்தி மாறாமலிருக்கும்படி ஜெபித்துவிட்டு, 'இந்தப் பழைய சட்டையாகிய சரீரத்தை எடுத்துப்போடுங்கள், புதிய உடுப்பை நான் அணிந்துகொள்வேன்' என்று அவர்களை வேண்டினார். கடைசியில் அக்கினியில் போட்டார்கள். அதிக சந்தோஷத்தோடு மரித்தார். இந்தச் சந்தோஷமும், தைரியமும் எங்கிருந்து வந்தது? இவைகள் தேவ ஐக்கியத்தால் கிடைத்ததல்லவா? கிறிஸ்துவல்லவோ கொடுத்தார். ஆம், அவரே வல்லமை கொடுக்கிறார். அவர் தமது மகிமையோடு வரும்போது, இந்த ரத்தசாக்ஷிகளுக்கு

என்ன சந்தோஷம்! தாங்கள் சாக்ஷிகொடுத்த அந்த ரக்ஷகரையே காண்கிறோம் என்பார்கள். நமது நிலைமை யென்ன? ஐந்து நிமிஷத்து ஜெபத்தில் களைத்துப்போனால், அங்கே எப்படி நிலைநிற்பான்? இங்கேயும் வெட்கம்: அங்கேயும் வெட்கம்தான். ஜெபத்தால் நாம் வல்லமை பெற்றுக்கொள்ளுகிறோம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டால், சாக்ஷிகொடாமலிருக்க முடியாது. இம்மையில் அவரோடு ஜெபத்தில் ஜீவிப்பவர்களே அங்கேயும் ஜீவன் பெறுகிறார்கள். வேதத்தை வாசியாமலும், ஜெபம் செய்யாமலும் இருப்பவர்கள் செத்தவர்களே. நாம் ஜெபஜீவிகளாயிருக்க தேவன் கிருபை செய்வாராக.

S. R. D.

## நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள். *பிரசங்கி. 5: 1.*

சென்னப்பட்டணத்துக் கவர்னரவர்கள் பாளையங்கோட்டைக்கு வந்தால் அவர்களைக் கண்டுபேசவும் கனம்பண்ணவும் அநேக துரைமாரும் அநேக உத்தியோகஸ்தரும் கலெக்டருடைய பங்களாவில் கூடுவார்கள். ஆனால் தகுந்த மரியாதையோடு அவர்களுடைய சன்னிதானத்துக்குப் போகவேண்டுமாம். அந்தச் சமயத்தில் தங்கள் நடை உடை பாவனைகளை எல்லாம் ஒழுங்குப்படுத்தவேண்டும். அங்கே அழைக்கப்படுகிறவர்களுக்கு அழைப்புப் பத்திரம் ஒன்று கிடைக்கும். அதிலே செய்யவேண்டிய மரியாதையும் உடுத்தவேண்டிய வஸ்திரமும் வெகு திட்டமாகக் காட்டப்பட்டிருக்கும். மனம்போல உடுப்புகளைப் போட்டுக்கொள்ளக்கூடாது. இன்னின்ன வகையாய் மாத்திரம் உடுப்புப் போட்டுக்கொண்டுபோகலாம் என்றும், இன்னின்ன விதமாய் அவர்கள் சந்நிதானத்தில் நடக்கவேண்டும் என்றும் அதிலே சொல்லியிருக்கும். நம்மை ஆளுகிற அதிபதி. ஆகையினாலே அவர்களுடைய அந்தஸ்துக்கு ஏற்றபடி மரியாதை காட்டவேண்டியது நியாயம். அப்படியானால் ராஜாதி ராஜாவும் சர்வ மகிமையுள்ளவருமாகிய தேவனுடைய சந்நிதியில் வரும்போதெல்லாம் அதிக மரியாதையோடும் அத்தியந்த பணிவோடும் வருவது அதிக நியாயமும் அவசியமுமான காரியம் என்பதற்குச் சந்தேகம் உண்டா? அநேக சபையாரோ இதை மறந்துபோகிறார்கள். கோவிலுக்கு வரும்போது தேவனுடைய சந்நிதானம் என்று உணருகிறதே இல்லை. ஆண்டவருடைய திருமனசு நோகும்படி செய்கிறார்கள். தேவனை அவமானப்படுத்துகிறார்கள். அவருடைய கிருபையை அசட்டை செய்கிறார்கள். அவருடைய பரிசுத்தத்தை நினையாமற்போகிறார்கள். மோசமான காரியம். 'நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்'. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை



சந்திக்கப் போகிறபொழுது இரண்டு நாள் தங்களைச் சுத்திகரிக்கவும், அதற்கு அப்பால் மாத்திரம் அவருடைய சந்நிதியில் வரவேண்டியிருந்தது. நம்மில் அநேகரோ யாதொரு ஆயத்தமுமின்றி ஏனோ தானோ என்று தேவாலயத்துக்குவந்து ஆராதனை செய்கிறோம். இந்த விஷயத்தில் நான் உங்களில் காணப்படுகிற குறைகளை எடுத்துக்காட்டி சீர்திருத்தக் கேட்கிறேன். அன்போடு கேட்டு இருதயத்தில் உணர்ந்து தேவ கிருபையினாலே இந்த ஒழுங்கீனங்களை விட்டுவிடப் பாருங்கள்.

I. **நீ தேவாலயத்துக்கு வரும்போது மணிச்சத்தத்தைக் கவனித்துக்கேள்.** எத்தனையோ ஜனங்கள் தேவாலயத்துக்கும் பிந்திவருகிறார்கள். பிந்திவருகிறது தப்பிதம் என்று அவர்கள் நினைக்கிறதுமில்லை. நிசந்தான் உங்களில் தூரத்திலிருந்துவரவேண்டியது. ஆனால் உங்களுக்குச் சரியான ஆசை உணர்வு அபிமானம் இருக்குமானால் பிந்திவரவேமாட்டீர்கள். நான் சிறுபையனாயிருக்கும்போது நானும் என் சகோதரரும் காலைதோறும் மூன்று மைல் தூரம் நடந்து பள்ளிக்கூடத்துக்குப் போவோம். ஆனால் குறிக்கப்பட்ட நேரம் தப்பி நாங்கள் ஒருவிசையாவது பிந்திப்போனவர்களல்ல. அந்த ஊர்ப் பிள்ளைகளுக்கு முந்தி தூரத்திலிருந்துவந்த நாங்கள் அங்கே போய்ச்சேருவோம். படிப்பின் பேரில் அவ்வளவு ஆசை இருக்குமானால் தேவனை ஆராதிக்கவும் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறவும் நாம் ஓடிவரவேண்டாமா?

ஐந்து கன்னியா ஸ்திரீகள் பிந்திவந்ததினாலே உண்டான மோசம் தெரியாதா? கதவு அடைக்கப்பட்டது. உங்களை அறியேன் என்று மணவாளன் சொன்னாரே. ஏசா என்பவன் தகப்பனிடத்தில் பிந்திவந்ததால் நேரிட்ட நஷ்டமும் தெரியுமே. அவன் சகோதரன் முந்திக்கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு போய்விட்டான். இவனோ பிற்பாடு கண்ணீர்விட்டு கவலையோடு தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான். ஐயோ எத்தனை எத்தனை கிறிஸ்தவர்கள் கோவிலுக்குப் பிந்திவருவதால் தேவாசீர்வாதத்தைப் பெறாமற்போகிறார்கள். நம்முடைய ஜெப முறைமை எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது. பாவ அறிக்கை செய்கிறோம். அப்புறம் பாவ விமோசன ஜெபம் சொல்லப்படுகிறது. அப்பாலே தேவனைத் துதிக்கிறோம். நமக்குத் தேவையான நன்மைகளை அறிவிக்கிறோம். கடைசியில் பிரசங்கம் நடக்கிறது. உங்களில் அநேகரோ முந்தின பாகத்தை அசட்டைபண்ணி பிரசங்கத்துக்கு மாத்திரம் வருகிறார்கள். உங்கள் பாவங்களை அறிக்கைசெய்ய வருகிறதில்லை. பாவ மன்னிப்புக் கூறப்பட அதைப் பெற்றுக்கொள்ள வருகிறதுமில்லை. நம்மை உண்டாக்கிக் காப்பாற்றி ரட்சிக்கிற தேவனைப் புகழ்ந்து போற்றவும் வருகிறதில்லை. பரிதாபமான காரியம். அதினாலே உங்களுக்கு நஷ்டமும் தேவனுக்கு அவமானமும் உண்டாகிறது. ஒரு சிறு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். நம்

ருடைய சிநேகிதரில் ஒருவர் நல்ல விருந்தை ஆயத்தம்செய்து அங்கே வரும்படி நம்மை அழைத்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். கறி, சோறு, பாயாசம், ரசம், மாம்பழம் எல்லாவற்றையும் தயார்செய்து விருந்துண்ண நம்மை அழைக்கிறார். நாம் வர வெகு நேரம் காத்திருக்கிறார். சிலர் மாத்திரம் வந்திருக்கிறார்கள். கடைசியில் இனி காத்திருக்கமாட்டாமல் போஜனத்தைப் படைக்கச்சொல்லுகிறார். கறி சோறு படைத்தாயிற்று. வந்தவர்கள் அதைச் சாப்பிட்டாயிற்று. அப்புறம் பாயாசம் படைத்தாயிற்று. அதைச் சாப்பிடும் சமயத்தில் அநேகம்பேர் பிந்தி வந்தவர்கள் வந்து சேருகிறார்கள். மரியாதையா. அவர்களுக்குக் கறி, சோறு ஒன்றும் இல்லை. கொஞ்சம் பாயாசம் மாத்திரம் கிடைக்கிறது. அப்புறம் வாழைப்பழம், மாம்பழம் கொடுக்கிறார். அந்தட்சணமே இன்னும் அநேகர் வந்து சேருகிறார்கள். அவர்களுக்கும் கறி, சோறு, இல்லை பாயாசமும் இல்லை. கொஞ்சம் மாம்பழம் மாத்திரம் கிடைக்கிறது. ஒழுங்கா? மரியாதையா? கோவிலுக்குப் பிந்திவருகிறவர்களே நீங்கள் செய்கிறது அப்படித்தானிருக்கிறது. பாவ அறிக்கைசெய்ய வரவில்லை. பாவ மன்னிப்புப்பெற வரவில்லை. தேவனை ஸ்தோத்திரிக்க வரவில்லை. கொஞ்சம் பிரசங்கம் மாத்திரம் உங்களுக்குக் கிடைக்கிறது. ஐயோ பரம விருந்தை ஆயத்தப்படுத்தும் தேவனை இப்படி அவமானப்படுத்துவது பெரிய தப்பிதம் அல்லவா? மணி அடிக்கிறோம். ஏன்? நீங்கள் முதல் மணியைக் கேட்டவுடன் புறப்பட்டு வரத்தக்கதாக அல்லவா? கொர்நேலியுவின் வீட்டில் ஜனங்கள் எல்லாரும் ஆசையோடு வந்து காத்திருந்தார்கள் அல்லவா? பெரிய ஆசீர்வாதம் இறங்கினது. பரம ராஜா உங்களை ஆசீர்வதிக்கக் காத்திருக்கையில் அவருடைய சந்நிதானத்தில் பிந்திவராதிருங்கள்.

(இன்னும் வரும்)

## கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம்

'விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால், தன்னில்தானே செத்ததாயிருக்கும்' (யாக். 2: 17).

நாம் எந்தக் கிறிஸ்தவர்களிடத்திலும் போய்: 'நீங்கள் யாரை விசுவாசிக்கிறீர்கள்?; யார் உங்கள் இரக்ஷகர்?' என்று கேட்ட மாத்திரத்தில், உடனே முன் பின் யோசிக்காமல்: 'இயேசுக் கிறிஸ்துநாதரை விசுவாசிக்கிறோம்' என்றும், 'அவரே எங்கள் இரக்ஷகர்' என்றும் சொல்வார்கள். தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆனால், அப்பேர்ப்பட்ட 'விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால், தன்னில்தானே செத்ததாயிருக்கிறது' என்று பரி. யாக்கோபு அப்போஸ்தலன் எழுதுகிறார்.

நான் ஒரு கிறிஸ்தவ சிநேகிதரை அறிவேன். கோவிலுக்கு ஒழுங்காய்ப் போவார். பரி. நற்கருணையில் ஒழுங்காய்ப் பங்குபெறுவார். கிறிஸ்து



மார்க்கத்தைப்பற்றி அதிக பக்தி வைராக்கியமுள்ளவர். சங்கப்பணங்களை ஒழுங்காகக் கொடுப்பார். ஒருநாள் இரவு கோவிலுக்கு வந்திருந்தார். கோவில் முடிந்தவுடன் அவரைக் காணவில்லை. நான் வீட்டுக்குத் திரும்பும்போது, பாதையில் ஒரு சாராயக்கடையிருக்கிறது. அதை நான் எதிரிட்டுப் பார்த்தபொழுது, ஒருவர் அதிக பயத்தோடே ஒளிந்து ஒளிந்து நடக்கிறதாகக் காணப்பட்டார். அவருடைய கையில் ஒரு பாட்டில் இருந்தது. என்னைக் கண்டவுடன், தலை கவிழ்ந்தவராக வெகு துரிதமாய் வெளியில் சென்று நடந்துவிட்டார். என்னைக் கண்டும், என்னோடு பேசவில்லை. சகோதரரே, இந்தச் சிநேகிதர் கிறிஸ்தவர்தான். கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்தான். ஆனால், இதை **செத்த விசுவாசம்** என்று பரி. யாக்கோபு அழைக்கிறார். கிறிஸ்துவை விசுவாசித்தால், கிறிஸ்துவானவருடைய சிந்தை எங்கே? இந்த சிநேகிதரோ கோவில் முடியும்வரைக்கும் சாராயக் கடையையல்லவோ சிந்தித்துக்கொண்டிருந்திருப்பார்! கிறிஸ்துவை விசுவாசித்தால் கிறிஸ்துவானவருடைய பேச்செங்கே? இந்தச் சிநேகிதருடைய சம்பாஷணையும், பேச்சும் சாராயக் கடைக்காரனோடல்லவோ யிருந்திருக்கும்! கிறிஸ்துவை விசுவாசித்தால், கிறிஸ்துவின் ஆவியெங்கே? இந்தச் சிநேகிதரோ, கண்கள் இரண்டும் இரத்தங் கலங்க வெறித்துக்கொண்டல்லவோ வழி நடந்திருப்பார்! கிறிஸ்துவை விசுவாசித்தால் கிறிஸ்துவின் அதிகாரப் போதனையெங்கே? இந்தச் சிநேகிதரோ என்னைக் கண்டல்லவோ ஒளித்தார்! பாதையில் என்ன கோலப்பட்டிருப்பாரோ! சகோதரரே, கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயும் அவருக்குள் கனி கொடுக்கிறவர்களாயுமிருக்கிறார்கள். 'நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயுமிருங்கள்' (யாக். 1: 22). கிறிஸ்தவர்கள் யாவரும் விசுவாசிகள்தான், தங்களில் கிரியைகள் காணப்படாவிட்டால் அவர்கள் **செத்த விசுவாசிகள்**. இதற்காகவே, பரி. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்பொழுது: 'நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு' (1 தீமோ. 4: 12) என்று எழுதுகிறார். செத்த விசுவாசத்ினாலேயே அநேக கிறிஸ்தவர்கள் பயங்கரமான நிலமைக்குள்ளாகிறார்கள். முடிவும் பயங்கரமாயிருக்கிறது. அநேக கிறிஸ்தவர்களுடைய எண்ணம் என்னவென்றால்: 'நாங்கள் கிறிஸ்தவர்கள், நாங்கள் நிச்சயமாக மோக்ஷம் சேருவோம், எங்களுக்காகத்தான் கிறிஸ்துவானவர் 'ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப் போயிருக்கிறார்' (யோவா. 14: 2) என்று நினைத்துத் தங்களைத் தாங்களே வஞ்சித்து, கடைசியில் பயங்கரமான முடிவுக்கு வருகிறார்கள்.

ஒரு கிறிஸ்தவ வாலிபன் இருந்தான். அவனும், தான் மோக்ஷம் போவதாக நினைத்துக்கொண்டு, தன் மனம்போன போக்கெல்லாம் ஜீவித்தான்.

கடைசியில், ஒரு பெரிய வியாதிவந்து, மரணப் படுக்கையிலிருந்தான். அப்பொழுது, ஒரு டாக்டர் வந்து பார்த்துவிட்டு, சில நிமிஷங்களுக்குள் அவன் மரித்துப்போவதாக அறிவித்தார். இதைக் கேட்டவுடனே, மரணப் படுக்கையிலிருந்து ஒரு பயங்கரமான சத்தம் உண்டானது. எல்லாரும் திகைத்து, அந்த வாலிபனை உற்றுப்பார்த்தபொழுது, அவன்தான்: 'இழந்துவிட்டேனே! இழந்துவிட்டேனே!!' என்று அலறினன். அந்த டாக்டர் தேவபக்தியுள்ள ஒரு கிறிஸ்தவரானபடியால், அவனிடத்தில் அன்பாய்ப் பேசி: 'சகோதரனே, அது என்ன? எதை இழந்துவிட்டாய்?' என்று மெதுவாய்க் கேட்டார். அவன் மறுமொழி ஒன்றும் சொல்லாமல் வெகுநேரம் அப்படியே சத்தம் போட்டுவிட்டு, டாக்டரைப் பார்த்து: 'ஐயா, இழந்துவிட்டேன். எனக்கு இலவசமாய்க் கொடுக்கப்பட்ட இரக்ஷிப்பை இழந்துவிட்டேன். இதோ என் பங்காகிய துன்பத்தை அனுபவிக்கப்போகிறேன்' என்று சொல்லிவிட்டுத் திரும்பவும் அலறினன். அந்த டாக்டர் திரும்பவும் அவனைப் பார்த்து: 'சிநேகிதனே, இன்னும் நேரமிருக்கிறது! அதற்குள் நீ இரக்ஷிப்படையலாம். திராக்ஷத்தோட்டத்துக்குப் பதினோராம் மணி நேரத்தில் வந்தவனுக்கும் வேலை கொடுக்கப்பட்டதே! அவனும் மற்றவர்களைப்போலத் தன் கூலியைப் பெற்றானே, நீ ஏன் இந்தச் சமயத்தில் இரக்ஷகரண்டை செல்லக்கூடாது? கிறிஸ்துவானவரோடு வலதுபுறத்தில் சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்ளன் பெரும்பாதகனாயிற்றே! தன் ஜீவிய காலத்தில் எத்தனையோ களவுகளையும், கொலைகளையும் செய்தவனாயிற்றே! அப்படியிருந்தும், தன் ஜீவன் பிரியுந் தருணத்தில் கிறிஸ்துவின் பாதம் சேர்ந்தானே! நீ ஏன் இந்தச் சமயத்தில் சேரக்கூடாது? இன்னும் நேரமிருக்கிறது. சீக்கிரம்! சீக்கிரம்!!' என்று அவனைத் தேற்றினர். அதற்கு அந்த வாலிபன்: 'ஐயா, என் நிலைமை அதிகப் பரிதாபம்! நான் உலகத்தில் இன்பங்களை அநுபவிக்கையில் இரக்ஷகர் என்னண்டை வந்தார். என்னோடு பேசினர். அப்பொழுது நான்: 'உம் வழியே போம்' (Go Thy way)' என்று சொல்லி வழியனுப்பிவிட்டேன். இப்பொழுதோ, அதோ தூரத்தில் நிற்கிறார். நான் அவரண்டை செல்லமுடியாது. பதினோராம் மணி நேரத்தையும் இழந்துவிட்டேன். வலது பாரிசத்துக் கள்ளனுடைய நேரத்தையும் கடந்துவிட்டேன். இப்பொழுதோ: 'உன் வழியே போ (Go your way)' என்று சொல்லி பயங்கரமான இடத்தைக் காட்டுகிறார்' என்று முடித்தவுடன், 'இழந்துவிட்டேனே, இழந்துவிட்டேனே' என்று அலறி, பயங்கரமாய் விழித்து, தன் ஜீவனை விட்டான். அருகிலிருந்தவர்களெல்லாரும் அவனுடைய பரிதாபத்தைக் கண்டு கண்ணீர் சொரிந்தார்கள். அருமையான சகோதரரே, நம் நிலைமையென்ன? பதினோராம் மணி வேளைக்காகக் காத்திருக்கவேண்டுமோ? வலதுபாரிசக் கள்ளனுடைய நேரத்துக்காகக் காத்திருக்கவேண்டுமோ? இப்படி, மரண நேரத்தில் இரக்ஷகரோடு சேர்ந்



துகொள்ளலாம் என்று நினைத்த அநேகர் அலறி ஜீவனை விட்டிருக்கிறார்கள். 'என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனம் என்ன? அந்த விசுவாசம் அவனை இரக்ஷிக்குமா?' (யாக். 2: 14). 'நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்' (எபி. 10: 39).

'இயேசுவின் நாமம் எத்தனை
இன்பமாய்த் தொனிக்கும்
நீக்கும் விஸ்வாசி துக்கத்தை
நெஞ்சையுந் தேற்றிடும்.'

S. R. D.

## அன்பே பெரியது

'இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது. (1 கொரி. 13: 13).

(1) **விசுவாசம்.** விசுவாசத்தைப்பற்றி நாம் வேதாகமத்தில் அநேக இடங்களில் வாசிக்கிறோம். 'விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (ரோம. 1: 17) என்றும், 'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்' (யோவா. 1: 12) என்றும், எபிரேயர் 11 அதிகாரம் முழுவதிலும் விசுவாசிகளுடைய பெயர்களும், அவர்களுடைய கிரியைகளும் சொல்லப்பட்டிருக்கிறதோடு, இன்னும் அநேக திருஷ்டாந்தங்களோடு ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்னும் ஒரு பெயர் பெறுகிறார். நமது அருமை ரக்ஷகருடைய திருவசனங்களையும் பார்ப்போமானால், விசுவாசத்தைப்பற்றியேயிருக்கும், சிலருடைய விசுவாசத்தைக் கண்டு சுகம் கொடுத்தார்; சிலருடைய விசுவாசத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டார், சிலருடைய விசுவாசத்தை சோதித்தார் ஆகையால், விசுவாசம் எவ்வளவு முக்கியம் என்பதை அறிகிறோம். மேலும், இரக்ஷிப்பு, விசுவாசத்தின் மூலமாகத்தான் வருகிறது. 'கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரக்ஷிக்கப்படுவீர்கள்' (அப். 16: 31). இரக்ஷிப்படைய விசுவாசம் அத்தியந்த அவசியமானாலும், 'என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரக்ஷிக்குமா? (யாக். 2: 14) நம்முடைய அருமை இரக்ஷகர் விசுவாசத்தைக் கண்ட இடத்தில் கிரியையையுங் கண்டார். கிரியையுள்ள இடத்திலே சரீர சுகம் மாத்திரமல்ல, ஆத்தும இரக்ஷிப்பும் கிடைத்தது. மேலே

சொல்லப்பட்ட விசுவாசக் கூட்டத்தாரிடத்திலும் நாம் விசேஷமாய்க் காண்கிறது கிரியைகளே. உதாரணமாக: இங்கிலாந்து தேசத்திலே ஒரு போதகர் தெருவழியே போய்க்கொண்டிருக்கும்பொழுது, ஒரு குடிகாரன் அதிகமாய்க் குடித்துவிட்டு, தெருவில் விழுந்து புரண்டுகொண்டிருந்தான். அந்தப் போதகர் அவனை உற்றுப் பார்த்து, அவன் தன் சபையானென்று கண்டு: 'சிநேகிதனே, ஏன் இப்படிச் செய்கிறாய்? ஏன் இந்தக் கோலம்?' என்று வினவினார். உடனே, அந்தக் குடிகாரன், தள்ளாடித் தள்ளாடி எழுந்திருந்து: 'ஐயா நீரும் ஒரு கிறிஸ்தவர், நானும் ஒரு கிறிஸ்தவர், நீரும் கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர், நானும் அவரைத்தான் விசுவாசிக்கிறேன், நீரும் கோவிலுக்குப் போகிறீர், நானும் கோவிலுக்குப் போகிறேன்; இனி என்ன வேண்டும்? என்று சொல்லிவிட்டு திரும்பவும் கீழே விழுந்து புரண்டான். 'அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில் தானே செத்ததாயிருக்கும்' (யாக். 2: 17). அந்தக் குடிகாரன் கிறிஸ்துவை விசுவாசித்ததும் மெய்தான். வாரந்தோறும் விசுவாசப் பிரமாணத்தை அறிக்கையிடவும் தவறான். ஆனால், கிரியைகளிலோ கிறிஸ்துவின் கிரியைகள் காணப்படவில்லையே! கிறிஸ்துவின் சிந்தை காணப்படவில்லையே! அவன் கிறிஸ்தவனாயிருந்தபோதிலும், கிறிஸ்துவை உடையவன் என்று அழைக்கப்பட்டபோதிலும், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்கவில்லையே! 'அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது' (யாக். 2: 26).

**(2) நம்பிக்கை.** நம்பிக்கை என்பதும் விசுவாசம் என்பதும் ஏறக்குறைய ஒரே அர்த்தத்தையுடையதாயிருந்தாலும், இரண்டும் தனித்தனியே பெரிய வித்தியாசத்தையுடையது. விசுவாசமென்பது: 'பாவிகளை ரக்ஷிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்' (1 தீமோ. 1: 15) என்று விசுவாசிக்கிறதை மட்டும் காட்டுகிறது. ஆனால் நம்பிக்கையோ, அப்படி அவரை ரக்ஷகரென்று விசுவாசிப்பதனால், 'முடிவோ நித்திய ஜீவன்' (ரோம. 6: 22) என்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைக் காட்டுகிறது. ஒருவன் கிறிஸ்துவை விசுவாசித்தும்; தனக்கு மறுமையில் ஒரு சந்தோஷத்தின் பங்கு உண்டென்று இந்த உலகத்திலிருக்கும்போதே நிச்சயமுள்ளவனாயிராவிட்டால அவன் நித்திய ஜீவனில் பங்கு பெறுவது கூடாத காரியம். அவ்வித நிச்சயமுள்ளவன், இந்த உலகத்திலிருக்கும்போதே மோக்ஷானந்தத்தை அனுபவிக்கிறவனாயிருக்கிறான். உதாரணமாக: தற்காலத்தில், பலவிடங்களிலும் தேவ ஊழியம்செய்துவருகிற சாது சுந்தர் சிங் அவர்களைக் கவனித்துப் பார்ப்போமானால், சகலமும் தெளிவாகும். அவர் செய்த அநேக பிரசங்கங்களில், தான் இந்த உலகில், கஷ்டத்திலும், துன்பத்திலும், துக்கத்திலும், தேவ சமாதானத்தையும், தேவ சந்தோஷத்தையும் அனுபவிக்கிறதாகச் சொல்லுகிறார். சொல்லுகிறது மாத்திரமல்ல, அவரைக் கண்ட யாவரும்; அவருடைய முகத்திலிருந்தும, அவருடைய பார்வையிலிருந்தும் தெளிவாய் அறிந்துகொள்ளலாம். இவருக்கு இந்த உலகத்தில் ஒன்றுமில்லை. இவருடைய முழுநம்பிக்கையும் மேலோகத்திலிருக்கிறது; நம்மிடத்தில் விசுவாசமிருந்தாலும், நம்பிக்கை மேலோகத்திலிருக்கிறதா?

**அன்பு.** விசுவாசத்தைப்பற்றியும், நம்பிக்கையைப்பற்றியும் நாம் இதுவரைக்கும் சிந்தித்தோம். இவைகள் இரண்டும் அத்தியந்த அவசிய



மென்றும் அறிந்துகொண்டோம். ஆனால்: 'இவைகளில் அன்பே பெரியது' என்று பரி. பவுல் வெகு தெளிவாகச் சொல்லுகிறார். வேறு எப்பேர்ப்பட்ட லக்ஷணம் உடையவர்களாய் இருந்தபோதிலும், வேறு எந்த நற்குணங்கள் பொருந்தினவர்களாயிருந்தபோதிலும், அன்பு இராவிட்டால் நான் ஒன்றுமில்லை என்பதாக 1 கொரி. 13 அதிகாரம் முழுவதிலும் வாசிக்கிறோம்.

**விசுவாசம் என்பது ஆகாரத்துக்கு ஒத்திருக்கிறது.** சரீரம் பிழைத்திருக்கவேண்டுமானால், ஆகாரம் எவ்வளவு அத்தியந்த அவசியமோ, அப்படியே ஆத்துமா பிழைத்திருக்கவேண்டுமானால் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமும் அவசியம். ஆகாரமில்லாவிட்டால் சாவது எவ்வளவு நிச்சயமோ, அப்படியே கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைக்காத கிறிஸ்தவன் செத்த கிறிஸ்தவன்தான்.

**நம்பிக்கை என்பது தண்ணீருக்கு ஒத்திருக்கிறது.** ஆகாரமில்லாமல் சில நாட்களாகப் பிழைத்திருக்கலாம். ஆனால், தண்ணீரோ, ஆகாரத்திலும் விசேஷமானது. யோசித்துப் பார்ப்போமானால், தண்ணீரில்லாமல் சமையலும் செய்யமுடியாது. ஒருவேளை, பழவர்க்கங்களைச் சாப்பிட்டாலும், தண்ணீரில்லாமல் தீராது. ஆகாரமில்லாமல் 5 நாளில் சாக நேரிடுமானால், தண்ணீரில்லாமல் அதிசீக்கிரத்தில் சாகநேரிடும். அவ்விதமாகவே, ஒருவன் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்தபோதிலும், தனக்குக் கிடைக்கப்போகும் நித்திய சந்தோஷத்தைக் குறித்து **நம்பிக்கை**யற்றவனாக ஜீவிப்பானேயாகில் அவனுக்கு ஐயோ! அதிசீக்கிரத்தில் அவனுடைய ஆத்துமா உலர்ந்து சாகிறது.

**அன்போ ஆகாயத்திற்குச் சமமாயிருக்கிறது.** ஆம், தண்ணீரில்லாமல், ஒருவேளை இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஜீவித்திருக்கலாம். ஆனால், ஆகாயமில்லாமல் வெகு நேரமிருக்கமுடியாது. சுவாசிக்க ஆகாயமில்லாவிட்டால் சில நிமிஷங்களுக்குள் சாகவேண்டியதுதான்! உண்ண ஆகாரமிருந்தாலும், ஆகாயமில்லாவிட்டால் மரணம். பானம்பண்ண தண்ணீரிருந்தாலும், ஆகாயமில்லாவிட்டால் மரணந்தான். அதுபோலவே, கிறிஸ்துவை இரக்ஷகரென்று விசுவாசிக்கலாம். ஆனால், அவரை நேசியாவிட்டால் ஒன்றுமில்லை. நிலமையோ அதிகப் பரிதாபம், கிறிஸ்துவையும் விசுவாசிக்கலாம்; அவர் மூலமாய் தனக்கு நித்திய ஜீவன் உண்டென்றும் நிச்சயமாக நம்பலாம். ஆனால், கிறிஸ்துவினிடத்தில் அன்பில்லாதவன் செத்த கிறிஸ்தவன். 'நான் மலைகளைப் பெயர்க்கத்தக்க சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை' (1 கொரி. 13: 2) என்று புலம்பவேண்டியவர்களாயிருக்கிறோம். சகோதரரே, அன்புண்டோ? கிறிஸ்துவினிடத்தில் அன்புண்டோ? 'என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்' (நீதி. 8: 17) என்கிறாரே. நாம் அவரைச் சிநேகித்தால் அவருடைய கிரியைகள் நம்மில் காணப்படவேண்டுமே! 'என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு' (பிலி. 4: 13) என்று சொல்லக்கூடியவர்களாயிருப்போமல்லவா?

**நாம் கிறிஸ்துவினிடத்தில் வைக்கும் அன்பினாலே உலகத்தில் ஜெயம் பெறுகிறோம்.** அன்பு ஜெயத்தைக்கொண்டுவருகிறது. இனி பயமில்லை.

பாவத்தின்மேல் ஜெயம்! உலகத்தின்மேல் ஜெயம்! மாம்சத்தின்மேல் ஜெயம்! பிசாசின்மேல் ஜெயம்! ஜெயம் என்கிற வார்த்தை அதிக முக்கியமானது. யுத்தத்தைப்பற்றி எல்லாரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இரு கக்ஷியாரில் ஒருபக்கம் ஜெயம் பெறுவது அதிக நிச்சயம். ஜெயம்பெற்ற கக்ஷியாருக்குள் உண்டாகும் சந்தோஷத்திற்கும் ஒரு அளவுண்டா? பெருங்கொண்டாட்டம்! இதுவே கிறிஸ்துவின் பிள்ளைகளிடத்தில் காணப்படும் லக்ஷணம். உலகத்தில் கிறிஸ்துவின் பிள்ளைகளுக்கும் சாத்தானுக்கும் பெரிய யுத்தம் நடக்கிறது. ஆனால், கிறிஸ்துவை நேசிக்கிறவர்கள் மாத்திரம் உலகத்தில் ஜெயம் பெறுகிறார்கள். 'உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ, இவையெல்லாவற்றிலேயும், நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்.' (ரோம. 8: 36, 37)

**ஜெயம் சுதந்தரத்தைக் கொண்டுவருகிறது.** வெற்றியடைந்த கக்ஷியார் சகலத்தையும் விட்டுவிட்டு, தங்கள் இருப்பிடம் போய்விடமாட்டார்கள். வெற்றியடைந்த தேசத்தையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்வார்கள். இஸ்ரவேலர் கானான் தேசத்திலே தாங்கள் ஜெயித்த நாடுகளையெல்லாம் சுதந்தரித்துக்கொண்டார்கள். 'கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடி இஸ்ரவேல் புத்திரர் செய்து, தேசத்தை பங்கிட்டார்கள்' (யோசுவா. 14: 5). ஆம் சகோதரரே, இவ்வுலகத்தில் போராடி ஜெயங்கொள்ளுகிற கிறிஸ்துவின் பிள்ளைகளுக்கும் சுதந்தரம் உண்டு. அழிவுள்ளவைகளாகிய இவ்வுலகத்திலுள்ள சுதந்தரமல்ல. என்றும் அழியாத நித்திய சுதந்தரத்தைப் பெறுவார்கள். 'ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்.' (வெளி. 21: 7). சகோதரரே, சுவிசேஷத்தின் உபதேசம் நமக்கு ஒரு சங்கிலித்தொடர் போலிருக்கிறது ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கமுடியாது. ஒரு கிளிக்கூடு சங்கிலியினால் கட்டப்பட்டு தொங்கிக்கொண்டிருந்தது. திடீரென்று அந்தக் கூடு விழுந்துவிடவே, அது என்ன காரணத்தினால் விழுந்ததென்று பார்க்கச் சமீபத்தில் சென்றபொழுது, பாதிச் சங்கிலி மேலே தொங்கிக்கொண்டும், பாதிச் சங்கிலி கூட்டோடு கட்டப்பட்டுமிருந்தது. அந்த இரண்டு பாதி சங்கிலிக்கும் இடையில் இருந்த ஒருவளையம துருப்பிடித்து ஒடிந்துவிட்டபடியால், கூடு கீழே விழுந்ததென்று தெரியவந்தது. அதன் பின்பு, புது வளையம் ஒன்றுகூட்டி ஒன்றோடொன்று சேர்த்தபிறகே திரும்பவும் அந்தச் சங்கிலி உதவிற்று. இவ்விதமாகவே, விசுவாசத்தினால் நம்பிக்கையும், நம்பிக்கையினால் கிறிஸ்துவினிடத்தில் அன்பும், அன்பினால் ஜெயமும், ஜெயத்தினால் சுதந்தரவாளிகளுமாகிறோம்.

'அன்பின் ஊற்றும் இயேசு ஸ்வாமி,
எந்தன் நெஞ்சில் ஊற்றிடும்
அன்பினால் என் உள்ளம் பொங்க
அனல் கொண்டகம் உருக
அருளைக் கடாட்சியும்.

S. R D.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Chistian Brotherhood Association, Tinnevelly

832

2 SEP 1919 MADRAS

August 1919. Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ. அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XX ஆகஸ்ற்று 1919

## சாது சுந்தர் சிங்

2 கொரி. 6: 17, 18

'ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.'

நாம் இந்த உலகத்தில் அக்கினியிலிருப்பதுபோல் ஜீவிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஐசுவரியம், தன்னில்தானே தீங்குள்ளதல்ல. ஆனால், ஐசுவரியத்தின் மூலமாக அநேக தீமையான காரியங்கள் உண்டாகக்கூடும். ஒரு ஐசுவரியவான் இருந்தான் அவன் உலகததை நம்பி ஜீவித்தான். நித்தியத்தைப்பற்றி அவன் சற்றாகிலும் சிந்தித்தவனல்ல. அவனுடைய இருதயமுழுவதும் ஐசுவரியத்தின்மேலும், சிற்றின்பத்தின்மேலும் சாய்ந்தது. அவனுடைய மரணம் அதிக பயங்கரமாயிருந்தது.

நான் இமயமலைப் பக்கமாய் பிரயாணம் செய்துகொண்டிருக்கும் பொழுது, ஒரு நதியோரத்தில் ஒரு அழகான விருக்ஷமிருந்தது. சாயந்தரத்தில் திரும்பவும் அங்கே வந்து பார்த்தபொழுதோ, அந்த மரம் அவ்விடத்திலில்லை. அது இருந்த இடத்தையும் அறிவது அரிதாகிவிட்டது. காரணமென்னவென்றால்: அன்றையத்தினம் ஒரு பெருமழை பெய்து, நதியில் வெள்ளம் புரண்டோடினபடியால், அந்த மரத்தையும் அடியோடே சமுத்திரத்தில் தள்ளிவிட்டது. இதே விதமாகத்தான் உலகமுமிருக்கிறது. உலகமும், உலகத்திலுள்ள யாவும் அழிந்துபோகும். தங்களுடைய இருதயங்களை உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் செலுத்துகிறவர்கள்,

உலகத்தோடே வாரிக்கொள்ளப்படுகிறார்கள். நமதருமை ரக்ஷகர் எருசலேமுக்குப் பவனிபோகிறார். தெருக்களிலும், வீதிகளிலும் வஸ்திரங்கள் விரிக்கப்பட்டன. ஆனால், இயேசுவானவர் அதின்மேல் நடந்துபோகவில்லை. அவர் ஏறியிருந்த கழுதையே அந்த வஸ்திரங்களின்மேல் நடந்தது. ஆகையால் நாம் உலகத்திலிருந்தபோதிலும், உலகத்தாரல்லாதவர்களாகவே ஜீவிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஏனென்றால், அவர் பவனிபோகும்பொழுது, 'ஓசன்னா! ஓசன்னா!!' என்று ஆர்ப்பரித்தார்கள். நாலு நாளைக்குப் பிறகு, 'சிலுவையிலறையும்! சிலுவையிலறையும்!!' என்று கூக்குரலிடுகிறார்கள். இன்றைக்குச் சிநேகிதராயிருக்கிறவர்கள், நாளைக்கு விரோதிகளாயிருக்கலாம். பெரிய மாறுதல்!

அழகும் அழிவுள்ளது. ஒரு அம்மாள் இருந்தார்கள். அவர்களிடம் நான் சென்று: 'அம்மா, எவ்வளவு நேரம் நீங்கள் ஜெபம் செய்கிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்கவர்கள்: 'ஏன்! நான் தினந்தோறும் கோவிலுக்குப் போகிறேன்' என்றார்கள். 'இல்லை, இல்லை, நான் அதைக் கேட்கவில்லை. ஒரு நாளில் எவ்வளவு நேரம் ஜெபத்தில் செலவிடுகிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்கவர்கள்: 'எதையா, காலையில் எழும்பினால், தலையைச் சீவவும், நகைகளைப் போட்டுக்கொள்ளவுந்தான சரியாயிருக்கிறது. இது காரணத்தால் அடிக்கடி கோவிலுக்குப் பிந்தி வரும்படி நேரிடுகிறதே! கோவிலில்தான் எல்லாரோடுஞ் சேர்ந்து ஜெபம் செய்வேன்' என்றார்கள். பாருங்கள், இந்த அம்மாள் தங்களை அலங்கரிக்கிறதிலும், உலக ஆடம்பரத்திலுமே தங்கள் நேரத்தைச் செலவழித்தபடியால் பரம பிதாவண்டையில் சேரக்கூடாத நிலைமையிலிருந்தார்கள். சிறிதுநாள் கழித்து, பெரிய வைசூரி என்னும் வியாதி வந்து அவர்களுடைய அழகைக் கொள்ளை கொண்டுபோய்விட்டது. இனிமேல், கண்ணாடியைப் பார்க்கவும் வெட்கம். தங்களை அலங்கரித்துக்கொள்வதையும் விட்டுவிட்டார்கள். குணப்பட்டு, தங்களுடைய ஆத்துமாவை அலங்கரிக்கத் துவங்கி, தங்கள் இருதயத்தை தேவனிடத்தில் ஊற்றிவிட்டார்கள். இவ்விதமாகவே, தேவன் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் இழுத்துச் சுத்திகரிக்க ஆசையாயிருக்கிறார். ஆனால், நாமோ அசுத்தமாயிருக்கவே பிரியப்படுகிறோம். நாம் சுத்தமும் மாசற்றவர்களாகவுமிருக்கவேண்டும். அவர் நம்மைப் பரிசுத்தமாயிருக்க விரும்புகிறார். நாமோ உலகத்தால் இழுப்புண்டுபோகிறோம். ஆனால், ஒரு காரியம்; துக்கமும், சஞ்சலமும், அவமானமும் வரும்பொழுதுதான், உணருகிறோம். அப்பொழுதுதான், தேவன் நமக்கு ஒரு செய்தி அனுப்பியிருக்கிறதாக நினைக்கிறோம். அப்பொழுதுதான் அவரிடத்திற்குச் செல்லுகிறோம்.

இமயமலையின்மேல் ஒரு பாறையில் நான் உட்கார்ந்திருந்தேன். ஒரு பறவை அங்குமிங்கும் பறந்து கடைசியில், என் மார்பின்மேல் வந்து விழுந்தது. சாதாரணமாக, பழக்கப்படாத பறவைகள் மனிதாண்டை வருகிற



தில்லை. ஆகையால், இந்தப் பறவை, என்மேல் வந்து விழுந்தது இயற்கைக்கு விரோதமாயிருக்கிறதேயென்று நான் கவனித்தபோது, மேலே ஒரு வயிறி பறந்து இந்த ஏழைப் பறவையைப் பிடிக்கும்படி வட்டம்போட்டுக்கொண்டிருந்தது. இந்தப் பறவை அங்குமிங்கும் ஓடியும் தப்பித்துக்கொள்ள வழியில்லாதிருந்ததினால், கடைசியில் தஞ்சமென்று என் மார்பில் விழுந்தது. இவ்விதமாகவே, துன்பங்களின் மூலமாகவும், துக்கங்களின் மூலமாகவும், தேவன் நம்மைத் தேடுகிறார். துன்பமும், துக்கமும் உலகத்தில் இல்லாவிட்டால் நாம் அவரிடத்தில் போகவேமாட்டோம். இப்பேர்ப்பட்ட காலங்களிலாவது நாம் அவரிடத்தில் தஞ்சமென்று போனால், அவர் தமது மார்பில் நம்மை அணைத்துக்கொள்ளமாட்டாரோ? இவ்விதமாக, அவர் துன்பங்களின் மூலமாகவும், துக்கங்களின் மூலமாகவும் நம்மை இழுக்கிறார். ஆனால், நாமோ சந்தேகத்திலிருக்கிறோம். சந்தேகமே ஒரு வியாதியாயிருக்கிறது. ஒரு வியாதியை நாம் எப்படிச் சுகப்படுத்திக்கொள்ளப் பார்க்கிறோமோ, அப்படியே, சந்தேகத்தையும் நம்மைவிட்டு அகற்றிவிடவேண்டும். கை எலும்பு ஒடிந்துபோனால், வேதனை உண்டாகிறது. அவ்விதமாகவே, சந்தேகமும் சஞ்சலத்தையுண்டாக்குகிறது. சஞ்சலம் நீங்கவேண்டுமானால், சந்தேகம் நீங்கவேண்டும். சந்தேகம் தீரவேண்டுமானால், அவரிடம் செல்லவேண்டும். ஒருவனுக்குக் கை முறிந்துபோனபடியால் வேதனை அதிகரித்தது. வேதனையால் அலறினான். கை எலும்புகளைச் சரியாய் வைத்துக் கட்டினால் வேதனை நீங்கும் என்று டாக்டர் சொன்னார். அதற்கவன்: 'முதலாவது வேதனையை நீக்குங்கள். அதன் பின்பு, எலும்புகளைச் சரியாய் வைத்துக் கட்டலாம்' என்று சொன்னான். சந்தேகத்தைத் தீர்த்துவிட்டால், பிறகு தேவனிடத்தில் போவேன் என்று சொல்வது பிசகு. தேவனிடத்தில் போனபிறகே சந்தேகமுந் தீரும். எலும்புகள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட பிறகே வேதனை தீருகிறதுபோல, தேவனோடு ஐக்கியப்பட்ட பிறகே சகல சந்தேகங்களும் நீங்குகிறது. ஒருகாலத்தில், எனக்கும் சந்தேகங்களும் பயங்கரங்களும் இருந்தது. மனச் சமாதானமற்றிருந்தேன். நான் அவரோடு ஐக்கியப்பட்ட பிறகு சகல சந்தேகங்களும் பறந்துவிட்டன. எல்லா எலும்புகளும் சரியாய் வைத்துக் கட்டப்பட்ட பிறகே உயிரடைகிறோம். கேள்விகள் கேட்டுக்கொண்டிருக்க இது காலமல்ல. ஏனென்றால், நாமெல்லாரும் பாவத்தில் செத்திருக்கிறோம். செத்த சரீரத்தில் சுரணையில்லாதிருப்பது போல நமது இருதயமும் சுரணையற்றிருக்கிறது. நமக்கும் தேவனுக்குமுள்ள சம்பந்தம் முறிந்திருக்கிறது. நாம் உத்தம மனஸ்தாபப்பட்டு தேவனோடு ஒப்புரவாகும்பொழுது எல்லாச் சந்தேகங்களும், தொல்லைகளும் அடியோடே நம்மைவிட்டு எடுபட்டுப்போகிறது. தேவனைவிட்டுப் பிரிந்திருக்கிற ஜனங்களுக்கு அநுபவமே கிடையாது அவர்கள் தேவனோடு ஒப்புரவாகும்போதுதான் சகலத்தையும் அநுபவத்தில் காண்கிறார்கள்.

**உதாரணமாக:** நான் வசித்த இடங்களில் பூமி பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தது. ஆனால், ஒரு பக்கத்தில் சூடான தண்ணீர் (Hot Spring) ஓடிக்கொண்டிருந்தது. இது குளிர்ச்சியான தேசங்களில் எங்கும் காணப்படும். இதைப்பற்றி நான் ஒரு சிநேகிதனுக்குச் சொன்னபோது அவன் நம்பவேயில்லை. குளிர்ச்சியான தேசத்தில் தண்ணீரெல்லாம் பனிக்கட்டியாய் உறைந்திருக்கும்பொழுது சூடான தண்ணீர் ஏது? இதை எப்படி நம்புவது? என் 'கண்ணால் கண்டாலொழிய நம்பமாட்டேன்' என்று சொல்லிவிட்டு, என்னோடு வந்து அந்தத் தண்ணீரில் தான் கையைவிட்டுப் பார்த்தபிறகே நம்பினான். இவ்விதமாக, தேவ ரகஸ்யங்களை நமது அறிவினால் கிரகிப்பது கூடாத காரியம். அநுபவத்தினாலும், தேவஞானத்தை அறியமுடியாது.

அறிவானது தேவஞானத்தை வெளிப்படுத்தாது. அறிவாளிகள் கிறிஸ்துவானவரிடத்தில் வாராமல், தங்களுடைய அறிவினாலேயே அவரைக் கண்டுபிடிக்கப் பிரயாசப்படுகிறபொழுது, துன்பத்தையும், துக்கத்தையும் அநுபவிக்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவானவரிடத்தில் சென்று அவரோடு ஐக்கியப்பட்டாலோ சந்தோஷமும் சமாதானமும் அநுபவிக்கிறவர்களாயிருக்கிறோம். அவரண்டை வாருங்கள்: வேலைக்காரராய் அல்லது கைதிகளாய் அல்ல, தேவபுத்திரராயும், புத்திரிகளாயும் அவரண்டை வரலாம். அவருடைய கையிலிருந்து ஒருவனும், உங்களைப் பிடுங்கிக்கொள்ள மாட்டான். நாம எதையாகிலும், ஆகாயத்தில் எறிந்தால், அது திரும்பவும் பூமிக்கே வருகிறது. அதாவது, பூமியிலுள்ள கவர்ச்சியானது (Gravity) அதை இழுக்கிறது. ஆனால், என் கையிலிருக்கிற புஸ்தகத்தை அந்தக் கவர்ச்சி இழுக்கிறதில்லை. ஏனென்றால், என் கையில் உயிர் இருக்கிறது. ஆனால், பூமியில் உயிரில்லை. உலகத்திலுள்ளவைகள் எவையானாலும் நம தருமை ரக்ஷகருடைய கையிலிருந்து இழுத்துக்கொள்ளமுடியாது. அவர் தம்மண்டை வரும்படியாக நம்மை அழைக்கிறார். அவரிடத்தில் ஜீவனிருக்கிறது. ஒரு பறவை ஆகாயத்தில் பறக்கும்பொழுது, பூமியிலுள்ள கவர்ச்சியானது அந்தப் பறவையை இழுத்துக்கொள்ளமாட்டாது. ஏனென்றால், அதற்குச் சிறகுகள் இருக்கிறது; சிறகுகளை வெட்டிவிட்டாலோ பூமியின் கவர்ச்சியானது அந்தப் பறவையை இழுத்துக்கொள்ளும். இவ்விதமாகவே, கிறிஸ்தவர்களுடைய சிறகுகள் வெட்டப்பட்டிருக்கிறது. அந்தச் சிறகுகள் எவை? ஜெபமே! ஜெபஜீவிகள் உலகஆசாபாசங்களை விட்டு மேலானவைகளை நோக்கிப் பறக்கக்கூடியவர்களாயிருக்கிறார்கள். உலகத்திலுள்ள எவ்விதமான ஆசாபாசங்களும் அவர்களை இழுத்துக்கொள்ள மாட்டாது. மேலேமேலே பறந்து கடைசியில் அவரிடத்தில் சேருகிறவர்களாயிருக்கிறார்கள். மேலே பறந்துவிட்டாலோ மோசமில்லை. ஒருதரம் நான மலையின் உன்னதமான சிகரத்திலிருந்தேன் மேகங்களெல்லாம்



எனக்குக் கீழே யிருந்தது. அப்பொழுது, மின்னல் உண்டாகி பெரிய இடி ஒன்று இடித்தது. முதலில் நான் பயந்தேன். அதன்பின்பு, தைரியங்கொண்டு, ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால், மின்னலும, எனக்குக் கீழேதான் உண்டானது என்றும், இடியும் எனக்குக் கீழேதான் இடித்தது என்றும் அறிந்தேன். ஆகையால், மேலேயிருக்கிற எனக்கு எவ்விதமான மோசமும் கிடையாது. இவ்விதமாக, ஜெபமாகிய சிறகினால் நாம் பறந்து மேலே சென்றுவிட்டால் சாத்தான் நம்மிடத்தில் வரவும், தீங்குசெய்யவும் முடியாது. நாம் நம்முடைய ஜெபமாகிய சிறகுகள் கத்தரிக்கப்பட்டு தாழ்விடங்களில் இருக்கும்பொழுதுதான் மோசம்! விழுங்கிவிடுவான், நிச்சயம்! நாம் உலகத்தின் ஆசாபாசங்களைவிட்டு பிரிந்திருக்கும்பொழுதுதான், தேவன் நம்மைக் கூப்பிடுகிற நிமிஷத்திலேயே அவர் சமுகத்தில் நிற்கப் பாத்திரவான்களாயிருப்போம்.

இன்றைக்கு இரண்டு ஹிந்துக்கள் என்னிடம் வந்து, என் கையினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படியாகக் கேட்டார்கள். அதற்கு நான், 'இதோ கிறிஸ்துவானவரண்டை போங்கள். அவருடைய தழும்புள்ள கைகளைப் பாருங்கள். அவருடைய கையினால் ஞானஸ்நானம் பெறுங்கள். அவர் உங்களை ஏற்றுக்கொள்வார்' என்றேன். ஒரு மனிதன் ஒரு பெரிய பாவத்தில் நிலைத்திருந்தான். ஆகையால், அவனை வீட்டை விட்டும்; ஊரை விட்டும் எல்லாரும் துரத்திவிட்டார்கள். 'ஐயோ! ஒரு இடத்திலும் ஆறுதவில்லையே! சாத்தானுங்கூட இந்தச் சமயத்தில் என்னைக் கைவிட்டிருக்கும்பொழுது கடவுள் என்னைக் கைவிட்டது ஒரு ஆச்சரியமில்லையே!' என்று புலம்பினான். இப்பொழுது வெகு அநுசாரணையாகக் காணப்படுகிற உலகமே நம்மைக் கைவிட்டுவிடும். நாம் மனந்திரும்பும்பொழுது, நம்முடைய இருதயம் தேவ சந்தோஷத்தையும் பெறுகிறது. நாம் உலகத்திலிருக்கும்போதே உலகத்தாரல்லாதவர்களாக ஜீவிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அசுத்தமானவைகளைத் தொடாமல் பரிசுத்த ஜீவிகளாயிருப்போமானால் அவர் நம்மைப் புத்திரரும், புத்திரிகளுமாய் ஏற்றுக்கொள்வார். அந்தப் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் தாமே நமக்குக் கிருபை செய்வாராக.

S. R. D.

## யோபின் ஆகமம்

இது பரிசுத்த வேதாகமத்திலுள்ள சங்கீத ஆகமங்களில் முதலாவதானது. இப்புஸ்தகம் போதனைசிக்ஷையின் (Discipline) புஸ்தகம் என்று அழைக்கப்படுகிறது. இதிலடங்கிய சரித்திரம் சிலர் நினைக்கிறபடி ஒரு கட்டுக்கதையல்ல. உத்தம தேவஊழியனாய் ஜீவித்து, அதிகமான துன்பத்தை

அனுபவித்த பக்தனுடைய ஜீவிய விருத்தாந்தம். தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. எசேக். 14: 14, 20; யாக்கோபு—5: 11.

**ஆக்கியோன்.** இப்புஸ்தக ஆக்கியோனைப்பற்றிப் பற்பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. சிலர் மோசே மீதியான் தேசத்தில் சஞ்சரித்த காலத்தில் எழுதியிருக்கலாமென்றும், வேறு சிலர் சாலோமோன் அல்லது எஸ்ரூவும் எலிகூவும் எழுதியிருக்கலாமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

**எழுதப்பட்ட காலம்.** இப்புஸ்தகம் எழுதப்பட்ட காலத்தைப்பற்றியும் திட்டமான குறிப்பு கிடையாது. யோபு கிட்டத்தட்ட ஆபிரகாமின் காலத்தில் வசித்ததாக அறிகிறோம். இப்புஸ்தகத்தில் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப்பற்றியாவது, வாதைகளைப்பற்றியாவது ஒன்றும் சொல்லப்படவில்லை. இங்கு சொல்லப்பட்டிருக்கிற விக்கிரக வணக்கம் (31: 21–28) பூர்வகாலத்திலுள்ளது. ஆகவே ஆதியாகமம் 11-ம், 12-ம் அதிகாரங்களுக்கு இடையிலுள்ள காலத்தின் சரித்திரம் எழுதப்பட்டிருக்கலாம்.

**பிரிவுகள்.** இப்புஸ்தகத்தை முக்கியமாய் 4 பிரிவுகளாக வகுக்கலாம்:— (1) சரித்திர முகவுரை. அதி. 1—2. (2) யோபுக்கும் அவன் சிநேகிதருக்கும் நடந்த தர்க்கம். அதி. 3—31. (3) எலிகூவின் நியாயங்கள். அதி. 32—37. (4) எகோவாவின் மாறுத்தரம். அதி. 38—42.

**I. சரித்திர முகவுரை.** அதி. 1—2. யோபின் உத்தமம் தெளிவாய் விளங்குகிறது. அவன் உத்தமத்தைப்பற்றி தேவனே கொடுக்கும் சாட்சி விசேஷித்தது. 1: 8 பார்க்க. (2) சாத்தானின் தன்மை, குணம், வேலை, வல்லமையின் அளவு முதலியவை காட்டப்படுகிறது. பரிசுத்தவான்களைக் குற்றப்படுத்துவதில் சாத்தான் மிகவும் சுறுசுறுப்புள்ளவன். தேவ உத்தரவின்றி அவருடைய பிள்ளைகள் விஷயத்தில் கெடுதியொன்றும் செய்ய வல்லமையற்றவன் என்பது விளங்குகிறது. (3) யோபின் சோதனை மூன்று விதமாம்: [a] பொருள் நஷ்டம், [b] உயிர் நஷ்டம், [c] சுக நஷ்டம்.

**II. யோபுக்கும் அவன் சிநேகிதருக்கும் நடந்த தர்க்கம்.** அதி. 3—31. யோபுக்கு நேரிட்ட உபத்திரவத்தில் அவனை ஆறுதல்படுத்த வந்திருந்த 3 சிநேகிதரின் காட்சி. அவனுடைய இருதயத்தில் இம்மட்டும் மறைந்திருந்த உணர்ச்சியை எழுப்பிவிடுவதற்கே காரணமாயிருந்தது. எல்லா நஷ்டங்களையும் பொறுமையோடு சகித்து, மனைவியின் துராலோசனையை அவமதித்த அவன், சிநேகிதரைப் பார்த்ததும் மிகுந்த மனக்கசப்புடன் புலம்புகிறான். 3-ம் அதிகாரம் முழுவதும் அவனுடைய புலம்பல் அடங்கியிருக்கிறது. அந்தப் புலம்பலின் பலனாகவே தர்க்கம் ஆரம்பித்தது. எலிப்பாசும், பில்தாத்தும் மும்முறையும், சோப்பார் இருமுறையும் பேசுகிறார்கள். யோபு அவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரதியுத்தரம் சொல்லுகிறான்.



இதை 3 பாகமாக வகுக்கலாம்.

**முதலாம் பாகம்.** அதி. 4—14.

அதி. 4, 5. யோபு செய்த பாவங்களினிமித்தம் தேவன் அவனைத் தண்டிப்பதாக எலிப்பாஸ் கண்டிக்கிறான். அதி. 6, 7. யோபின் மறுமொழி. தன் நேர்மையை எடுத்துக்காட்டி, தன் சிநேகிதர் தன்னை நடத்துவதையிட்டுப் புலம்பி தேவன்பேரில் குறைகூறுகிறான். அதி. 8. பில்தாத் யோபைக் கடிந்துகொண்டு துன்மார்க்கரின்முடிவை எடுத்துக் காண்பிக்கிறான். அதி. 9, 10. யோபு தான் குற்றமற்றவனென்றும், தேவன் தன்னைக் கொடூரமாய் நடத்துகிறாரென்றும் சொல்லுகிறான். அதி. 11. சோப்பார், யோபு குற்றவாளியென்று ரூபித்து அவன் மனந்திரும்பும்படி ஏவுகிறான். அதி. 12—14. மறுமொழியாக யோபு தன் சிநேகிதர் ஞானத்திலும் நீதியிலும் குறைவுள்ளவர்கள் என்று சொல்லித் தன் குற்றமின்மையைப் பாராட்டுகிறான்.

**இரண்டாம் பாகம்.** அதி. 15—21. இதில் யோபின் சிநேகிதர், அவன் தான் குற்றமற்றவன் என்று சாதிப்பது தப்பிதம் என்று கடிந்துகொண்டு, பயபக்தியற்றவர்களின் முடிவை நினைப்பூட்டுகிறார்கள். யோபு அவர்களைக் கடிந்துகொண்டு, தேவனுக்குப் பயப்படுகிறவர்களுக்கு மேன்மையும் உபத்திரவமும் உண்டென்று சொல்லுவதோடு தேவன் தன் மீட்பரென்றும் தனக்கு நியாயஞ் செய்கிறவரென்றும் அறிக்கையிட்டு தன் சிநேகிதர் தன்னை அன்பற்ற விதமாய் நடத்தினதற்காகக் கடிந்துகொள்ளுகிறான்.

**மூன்றாம் பாகம்.** அதி. 22—31. இந்த பாகத்தில் எலிப்பாஸ் என்பவன் யோபுடனே மிகவும் கொடூரமாய்ப் பேசி, அவன் பெரிய பாவங்கள் செய்ததாகக் குற்றஞ்சாட்டி, மனந்திரும்பும்படி எச்சரிக்கிறான். யோபு மிகுந்த மனக்கசப்புடன் தான் தேவனுக்கு முன்பாக தன் நியாயத்தைப் பேசினால் நீதி விளங்குமென்று சொல்லி தேவனுக்கு முன்பாகக் காணப்பட வாஞ்சிக்கிறான். பில்தாத் என்பவன் யோபினுடைய பெருமையையும் சுயநீதியையும் கடிந்துகொள்ளுகிறான். பின் சோப்பார் என்பவன் தன்னுடைய நியாயங்களையெல்லாம் முன்னமே சொல்லிவிட்டபடியால் அமைதியாயிருக்கிறான். இவைகளுக்கு மறுமொழியாக 27—31 அதிகாரங்களில் யோபு அதிக வசனிப்புடன் தன் உத்தமத்தை விளக்கிக்காட்டுகிறான். தன் சிநேகிதரோடு வாதாடினது அவனுக்கு யாதொரு நன்மையும் செய்யவில்லை. முன்னிலும் அதிகமாய் மனங்கலங்கினவனானான். யோபு இன்னும் தன் இருதயத்தின் அந்தரங்கத்தை அறியாதவனாயிருந்தான். 'என்னில் நன்மையான யாதொன்றும் இல்லை' என்று இன்னமும் யோபு சொல்லப் படிக்கவில்லை. முக்கியமாய் 29-ம் அதிகாரத்தைப் பார்க்கும்போது எவ்வளவு பல

மாய் யோபின் இருதயத்தில் தற்புகழ்ச்சி வேர்கொண்டிருந்தது என்பதை அறியலாம். முற்காலத்திலுள்ள தன் மேன்மையை நினைத்துப் பலம்புகிறான். நொறுங்குண்ட இருதயத்திற்கு அடையாளமான யாதொரு குறிப்பையும் காணோம் தன் பெலவீனத்தை மனதார அறிக்கையிடுகிற ஒரு வார்த்தையுமில்லை. இந்த அதிகாரம் முழுவதிலும் யோபு தன்னைப்பற்றி 40 தடவைக்கு மேலாகப் பேசுகிறான். ஆனால் தேவனைப்பற்றியோ 5 தடவை மாத்திரம் வருகிறது.

III. **எலிகூவின் நியாயங்கள்.** *அதி.* 32—37. இந்த பாகத்தில் எலிகூ ஒரு மத்தியஸ்தன்போல விளங்குகிறான். யோபுக்கும் அவன் சிநேகிதருக்கும், யோபுக்கும் தேவனுக்கும் உள்ள விகற்பங்களை நியாயதோரணையாய்த் தீர்க்கிறவன்போல காணப்படுகிறான். யோபின் சிநேகிதர் சந்தேகித்த பிரகாரம் யோபு பொல்லாதவனாய் இராதிருந்தும் ஏன் இவ்விதம் உபத்திரவப்படவேண்டுமென்பதற்கு நியாயங்கள் சொல்லுகிறான். தேவனுக்குப் பயந்தவர்களுக்கு ஏன் உபத்திரவங்கள் அனுப்பப்படுகிறதென்றும், அவைகள் என்ன கிரியை செய்கிறதென்றும் காட்டுகிறான். 33: 17, 30; 34: 31, 32 பார்க்க. எலிகூ கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தினான் என்று சொல்லலாம். யோபு யாதொரு மாறுத்தரமும் சொல்லவில்லை.

IV. **எகோவாவின் மாறுத்தரம்.** *அதி.* 38—42.

எகோவாவின் நியாயங்கள்—1-ம் பகுதி. 38—40: 2.

யோபின் மறுமொழி. 40: 3-5.

எகோவாவின் நியாயங்கள்—2-ம் பகுதி. 40: 6—42.

யோபின் மறுமொழி. 42: 1-6.

எகோவா எலிப்பாசோடு பேசினது. 42: 7, 8.

யோபின் பின்னிலைமை. 42: 9-17.

எலிகூ பேசி முடிந்ததும், தேவன் தாமே தமது ஊழியக்காரனோடு பேசுகிறார். இவ்வதிகாரங்களை வாசித்துப்பார்க்கவும். இப்பொழுது யோபின் இருதயத்தில் உண்டான மாறுதல் எவ்வளவு ஆச்சரியம்! 42: 1-9 பார்க்க. எவ்வளவுதூரம் பாவஅறிக்கை, தன்னை உணர்தல், தாழ்த்துதல், இருதய உடைவு காணப்படுகிறது! அவனுடைய கடைசி வார்த்தைகளைக் கவனியுங்கள்:— 'நான் என்னை அருவருக்கிறேன்'. வா. 6.

யோபு தேவனோடு ஒப்புரவானபொழுது, தன் சிநேகிதரோடும் ஒப்புரவானான். அவர்களுக்காக ஜெபிக்கக் கற்றுக்கொண்டான். 42: 10. யோபும் அவன் சிநேகிதரும் கர்த்தருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்துகிறார்கள். மனந்திரும்பிக் கண்ணீர் சிந்துகிறார்கள், சர்வாங்க தகன பலிகள் இடப்படுகின்றன. யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன்



பின்னிலைமை இரண்டத்தனையாய் ஆசீர்வதிக்கப்படுகிறது. இவ்வித வாழ்வு, சந்தோஷத்தின் மத்தியில் யோபு பூரண வயதுள்ளவனாய் மரணமடைந்தான்.

## அவர் உங்களை ஆராய்ந்து பார்த்தால் அது உங்களுக்கு நலமாயிருக்குமோ? யோபு. 13: 9.

அப்போஸ்தலன்மார் கூட்டத்தில் ஒருவன் பிசாசாயிருந்தான். உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று ஆண்டவர் சொல்லும்பொழுது—அவர்கள்—ஆண்டவரே! நானோ? நானோ? என்று ஒவ்வொருவராய் கேட்கத் தொடங்கினார்கள் (மத். 26: 21, 22). அப்படிப்போல நாம் சிலருடைய சரித்திரத்தை எடுத்துத் தியானிக்கையில் ஆண்டவரே நாமோ? நாமோ? என்று நாம் ஒவ்வொருவராய்க் கேட்போமாக.

**தேவனுடைய பணிவிடைக்காரரில் அபாத்திரராய்க் காணப்பட்ட சிலர்:**

1. அந்நிய அக்கினியைக் கொண்டுவந்த ஊழியக்காரர் (லேவி. 10: 1, 2). நாதாபும் அபியூவும். கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பரிசுத்த அக்னி அவியாமல் எரிந்துகொண்டேவந்தது (லேவி. 6: 12). வானத்திலிருந்து இறங்கின பரிசுத்த அக்னி (லேவி. 9: 24). ஆம் தேவனுடைய அக்னி. மனுஷனுடைய அக்னி உதவாது. பூமியின் அக்னி உதவாது. மேலும் அந்நிய தூபமும் வேண்டாம் (யாத். 30: 9). தேவ கட்டளைப்படி செய்த பரிசுத்த தூபத்தை மாத்திரம் கொண்டுவரலாம். இவர்களோ துணிகரமாய் தங்கள் கலசங்களில் அந்நிய தூபத்தையும் அந்நிய அக்னியையும் போட்டு கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். மோசம். அக்னி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு அவர்களைப் பட்சித்தது. அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெந்தார்கள். தேவ ஊழியம் செய்கிறோம். அநேகர் அந்நிய அக்னியைக் கொண்டுவருகிறார்கள். வானத்திலிருந்து தேவாவியின் அக்னியைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இருதயமாகிய பலிபீடத்தின்மேல் அந்த பரிசுத்த அக்னி அவியாமல் எரிந்துகொண்டிருப்பது கிடையாது. வைராக்கியம் இருக்கலாம். ஆனால் அது உலக அக்னி. மாம்ச அக்னி. வானத்திலிருந்து இறங்கி பலிபீடத்தின்மேல் எரிந்துகொண்டிருக்கிற பரிசுத்த அக்னியை மாத்திரம் உபயோகப்படுத்தலாம். பிரசங்கத்தைப் பாருங்கள். தேவனிடத்தில்வந்து பேசவேண்டிய வார்த்தைகளைப்பெற்று அவரைச் சார்ந்து போதிக்காமல், வாயில் வந்தபடி போதிக்கிறது. அறிவைப் பாராட்டுவது.

2. **சுய பிரயோஜனத்தை நாடின ஊழியக்காரர்** [1 சாமு. 2: 12-17]. எலியின் குமாரர், ஆசாரியர், ஓப்னியும் பினெகாசும் பேலியாளின் மக்களாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஐயோ தேவ பணி

விடைக்காரர் கர்த்தரை அறியவில்லை. பிழைப்புக்காக மாத்திரம் ஊழியஞ் செய்தார்கள். அவர்கள் பலியிடும்போது வேலைக்காரரைவிட்டு மூன்று கூறுள்ள ஆயுதத்தைக்கொண்டு முதல் தரமான இறைச்சியைத் தங்களுக்கென்று எடுத்துக்கொள்வது. அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்வான். தேவனுடைய பாகத்தைக்குறித்தும் மகிமையைக் குறித்தும் கவையில்லை. சுயலாபத்தை மாத்திரம் நாடுவது. நமக்குள்ளே இந்தக் குறிப்பு இல்லையா? சில இடங்களில் கலியாணம் நடத்த வேண்டுமென்றால் ஐயரவர்களுக்குக் கோழி வேண்டும், பணம் வேண்டும். சபையாருக்கு உதவி செய்யவேண்டுமானால் அவர்கள் ஆசாமிகளுக்கு இதைக் கொடுக்கவேண்டும். சில இடங்களில் வாத்திமார் சொந்தத்திற்காக என்று வாங்கி பிள்ளைகளுக்குப் படிப்பிப்பது; நிலங்களை வாங்குவது, ஆத்துமாக்களை மாத்திரம் சம்பாதிப்பதில்லை. ஜனங்கள் அவர்களைக் கனம்பண்ண வேண்டும். ஐயோ சுய பிரயோஜனத்தை நாடுவது எவ்வளவு. அவர்கள் முடிவையும் கவனியுங்கள். தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டது ஓப்னியும் பினெகாசும் மாண்டார்கள் [1 சாமு. 4: 11]. தேவனுடைய காரியத்துக்கு அவமானம். அவர்களுக்கு மரணம்.

3. கர்த்தருடைய சபையைத் தீட்டுப்படுத்தின ஊழியக்காரர். நெகே. 13. ஆசாரியனாகிய எலியாகிப் அஞ்ஞானிகளோடு சம்பந்தம்பண்ணி, பரிசுத்த தேவாலயத்தில் முதலாய் அவர்களுக்கு இடங்கொடுத்தார்கள். ஒரு அறையில் வைக்கப்பட்ட பரிசுத்த வஸ்துக்களை அப்புறப்படுத்தி அங்கே அவபக்தரான தன் பந்துக்கள்வந்து உட்கார ஏற்பாடு செய்தான். தேவனுடைய காரியங்களை அலட்சியம்பண்ணி உலக காரியங்களைக் கொண்டுவந்தான். அவனும் அவன் மகனும் ஆசாரிய ஊழியத்தையும் ஆசாரிய ஊழியத்துக்கும் லேவியருக்கும் இருக்கிற உடன்படிக்கையையும் தீட்டுப்படுத்தினார்கள். பரிசுத்தம் கிடையாது. நம்முடைய சபையின் குறைகளுக்கு ஆசாமிகளுடைய உலக சிந்தையும் நடக்கையும் காரணம் என்று அநேகர்சொல்லுகிறார்கள். நம்முடைய இருதயமாகிய தேவாலயத்தில் அசுத்தத்திற்கும் உலகத்துக்கும் இடங்கொடுத்திருக்கிறோமோ? நம்முடைய நடக்கையினாலே சபையைத் தீட்டுப்படுத்துகிறோமா? எலியாகிப் பிசாசை கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டுவந்து வைத்தான். அப்படிப்போல் ஒன்று கிறிஸ்துநாதரைக்கொண்டுவந்து நிறுத்துகிறோம் அல்லவென்றால் பிசாசைக்கொண்டுவந்து வைக்கிறோம். அவனை என்னைவிட்டு துரத்துவேன் என்று நெகேமியா சொல்லுகிறான். மிஷன் ஆசாமிகள் சிலருடைய விஷயத்தில் அப்படி கிறிஸ்துநாதர் சொல்லவேண்டியதாய்வரும். அதினாலே சபையில் உண்டான தீட்டைப் பாருங்கள். தேவனுடைய ஜனங்களோ? அஞ்ஞானிகளோ? புதியேற்பாட்டிலிருந்து திருஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டலாம். [யூதாஸ்; தேமா] முதலானவர்கள். இதோடு நிறுத்துகிறேன். ஆண்டவரோநானோ நானோ.



## ஜாதி என்னும் வியாதி

ஒரு பெரியவர் பாதை நெடுகப் போய்க்கொண்டிருக்கையில், தன்னை உயர்ந்த ஜாதியென்று எண்ணிக்கொண்ட ஒரு பெண் எதிர்ப்பட்டாள். அவள் தூரத்திலிருந்து வரும்பொழுதே ஒதுங்கி ஒதுங்கி பாதையோரமாய் நடந்தாள். ஏனென்றால், அந்தப் பெரியவர் தாழ்ந்த ஜாதியைச்சேர்ந்தவரென்று அவள் எண்ணினபடியால் அவரைத் தொடக்கூடாது, தொட்டால் தோஷம் உண்டாகுமென்பது அந்தப் பெண்ணினுடைய எண்ணம். இதைக் கவனித்த பெரியவர், அவள் ஒதுங்கின விதத்தைப் பார்க்கிலும் அதிகமாக ஒதுங்கிக்கொண்டு 'அம்மா, அம்மா, ஒதுங்கிப்போங்கள். என்னைத் தொட்டு விடாதேயுங்கள். நான் ஒரு கிறிஸ்தவன்!' என்று சத்தமிட்டார். இதைக் கேட்ட அந்தப் பெண் வெட்கப்பட்டு, ஒதுங்கி நடந்ததை நிறுத்தி சாதாரணமாய் நடந்தாள். இதென்ன விசேஷம என்று நான் அந்தப் பெரியவரை வினவினபொழுது, அவர்: 'அந்த மனிதர்கள் தங்களை உயர்ந்த ஜாதியென்றும் மற்றவர்களெல்லாரும் தாழ்ந்த ஜாதியென்றும் நினைத்துக் கொள்ளுகிறார்கள்: ஆனால் கிறிஸ்தவர்கள்தான் உயர்ந்த ஜாதியென்பதை விளக்கும்படியாக நான் அப்படி நடந்துகொண்டேன்' என்றார். இந்தப் பெரியவர், தான் ஒரு கிறிஸ்தவர் என்று சொல்ல முந்திக்கொண்டது மாத்திரமல்ல, தான் ஒரு நித்திய ராஜாவுடைய சந்ததி என்பதை அதிகத் தெளிவாக ரூபிக்கிறார்.

இந்த ஜாதி யென்னும் வியாதியானது கிறிஸ்தவர்களையும் பற்றிப் பிடித்து, அவர்களைப் பரிதாபமான நிலைமைக்குக் கொண்டுவருகிறது. ஜாதிப் பெருமை கொள்ளும் கிறிஸ்தவர்களால் கிறிஸ்துவானவருடைய நாமம் எவ்வளவாய் தூஷிக்கப்படுகிறது என்பதைச் சற்று உணருவார்களானால் ஜாதியென்னும் வியாதியானது இன்றைக்கே கிறிஸ்தவர்களைவிட்டுப் பறந்துவிடுமல்லவா? எந்தக் கிறிஸ்தவனிடத்திலும், அவனுடைய ஜாதியைப்பற்றி விசாரிக்கும்பொழுது, தான் ஒரு கிறிஸ்தவன் என்று சொல்வதை மறைத்து, தன் ஜாதியைச் சொல்லவே பிரயாசப்படுவான். ஏனென்றால், தான் ஒரு கிறிஸ்தவன் என்று அழைக்கப்படுவதும் தன்னை ஒரு கிறிஸ்தவனென்று மற்றவர்களிடத்தில் சொல்வதும் அவ்வளவு அருவருப்பாகிவிட்டது.

இந்தியாவிலுள்ள எல்லாச் சபைகளையும் ஒரே ஐக்கியச் சபையாக்கப் பிரயாசப்படுகிற இந்த விசேஷித்த காலத்தில் ஜாதியென்னும் இந்தக் கொள்கையானது ஒரு பெரிய இடையூறாயிருக்கிறது. இந்த இடையூறு நீக்கப்படுமானால் எல்லாச் சபைகளும் எடுத்துக்கொள்ளும் பிரயாசை ஒருவாறு அதிசீக்கிரத்தில் கைகூடும் என்று எதிர்பார்க்க ஏதுவுண்டு. அப்படியானால் இந்த ஜாதிபேதத்தை நீக்குவதெப்படி? முதலாவது, ஜாதி வித்தியாசம் போதகர்மாரிடத்திலிருந்து நீக்கப்படவேண்டும். அவர்கள் அச்சிடும் சபை ரிப்போர்ட்டில் (Church Report) இழிவான ஜாதிப் பட்டங்களை முற்றிலும் தவிர்க்கவேண்டும். போதகர்மாருக்குள் ஜாதி வைராக்கியம் எவ்வளவோ துர்நாற்றத்தைக் கொடுக்கிறது.

ஒரு போதகர் தன் மகளுக்குக் கலியாணம் ஒழுங்குசெய்துகொண்டிருந்தார். அந்தப் பெண்ணுக்குத் தன் நிலமைக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ற ஒரு வாலிபனை பேசினார். அந்த வாலிபனும், அந்தப் பெண்ணும், உலகவழக்கத்தின்படி ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால், அந்தப் போதகர், தன் மகளுக்காகப் பேசப்பட்ட வாலிபனைப்பற்றி அறிந்துகொள்ளும்படியாக சில இடங்களுக்குச் சென்று, விசாரித்ததினபேரில், தன் மகளை அந்த வாலிபனுக்குக் கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டார். ஏனென்று கேட்டதற்கு: அந்த வாலிபனுடைய ஒரு சகோதரன் கலியாணம் செய்திருந்த பெண்ணின் தகப்பனுடைய பெற்றோர் தன் ஜாதியைச் சேர்ந்தவர்கள் அல்லாததால் தன் மகளை அந்த வாலிபனுக்குக் கொடுக்கமாட்டேனென்று மறுத்துவிட்டு வேறே இடத்தில் கலியாணம் செய்துகொடுத்தார். ஆகையால், ஜாதி வித்தியாசம், முதலாவது போதகர்மார் வீடுகளிலிருந்து நீங்கவேண்டியதிருக்கிறது. அப்பொழுதுதான், அவர்களும் தங்கள் சபையாருக்கு அந்தப்படிப் போதிக்கக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.

ஜாதி என்னும் கொள்கையை கொண்டிருக்கிற கிறிஸ்தவர்கள் மகாப் பரிதாபமான நிலமையிலிருக்கிறதை உணருவார்களானால் நன்மையாயிருக்கும். அவர்கள் கிறிஸ்துவானவருடைய அன்பைக் கிஞ்சித்தேனும் அறிந்தவர்களாகவேயிருக்கமாட்டார்களென்பது நிச்சயம். ஏனென்றால், கிறிஸ்துவானவர் ஆயக்காரர் பாவிகளுடைய வீட்டில் போஜனம்பண்ணினார். சமாரிய ஸ்திரீயினிடத்தில் தண்ணீர் கேட்டார் சமாரியரிடத்தில் சில நாட்கள் தங்கினார்: பாவியான ஸ்திரீ தமது பாதங்களைத் தழுவிக்கொண்டபோது அவளைக் கடிந்துகொள்ளவில்லை. பெரும்பாடுள்ள ஸ்திரீ தம்மைத் தொட்டபொழுது பயமுறுத்தவில்லை. குஷ்டரோகியைத் தொட்டார். பாவிகளைத் தேடிச் சென்றார். நாம் மெய்க்கிறிஸ்தவர்களானால், கிறிஸ்துவானவருடைய அச்சடையாளங்களை நாமும் தரித்துக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோமல்லவா? தமது சாயலுக்கொப்பாய்ச் சிருஷ்டிக்கப்பட்டவர்களை. (கொலோ. 3: 10) நாம் தாழ்ந்தவர்களாக நினைப்பதே தேவனுக்கு விரோதமான பாவமல்லவா? கிறிஸ்துவானவர் மனுஷ ஜாதியை அருவருக்கவில்லையே? ஒவ்வொரு ஆத்துமாவும் எவ்வளவு விலையேறப்பெற்றது என்பதை புத்திகெட்ட ஐசுவரியவான் என்ற உவமை விளக்குகிறதல்லவா? நீங்கள் கிறிஸ்துவானவருடைய சந்ததியில் ஒவ்வொரு அங்கங்களாக எண்ணப்படப் பிரியமானால், இன்றையத்தினத்திலிருந்து ஜாதியென்னும் பேர் முதலாய் உங்களில் சொல்லப்படாமலிருக்கக்கடவது. கிறிஸ்துவானவர் எவ்விதமாக ஜனங்களோடு ஜீவித்தாரோ அவ்விதமாகவே நாமும் ஜீவிக்கப் பிரயாசப்படுவோமாக. இல்லையானால், மெய்யாகவே நமக்கு அவரிடத்தில் பங்கில்லையென்பது திண்ணம். 'நம்மில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக, ஆமென்' (வெளி. 1: 6).

S. R. D.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly

21

September 1919. Registered No. M. 168

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38

OFFICE OF THE REGISTRAR OF ... 14 OCT 1919 MADRAS

Vol. XX செப்ற்றெம்பர் 1919

## 'சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா?' யோவா. 5:6.

பொருளடக்கம். பெதஸ்தா குளம்—இரக்கத்தின் வீடு—ரட்சணியக் குளம். அங்கே ஐந்து மண்டபங்கள். (1) ஞானஸ்நானம், (2) திடப்படுத்தல், (3) ராப்போஜனம், (4) ஜெபக்கூட்டம், (5) வேதவாசிப்பு அல்லது பிரசங்கம். அந்த மண்டபங்களில் பெரிய கூட்டம். சபைக் கூட்டம். ஐயோ! வியாதிக்காருடைய கூட்டம். குருடர்; சப்பாணிகள்; சூம்பின உறுப்புடையவர்கள், பார்க்க ஏலாது; நடக்க ஏலாது; வேலைசெய்ய ஏலாது; அங்கே படுத்தும்கொண்டார்கள். காத்தும்கொண்டார்கள். அந்த மண்டபங்களில் சுகம் கிடையாது. குளக்கரையிலுள்ள மண்டபங்கள்:— ஆனாலும் மண்டபம் வேறே, குளம் வேறே, சுகம் வேண்டுமானால் குளத்திலே இறங்கவேண்டும். 'யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.

'சில சமயங்களில் தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி தண்ணீரைக் கலக்குவான்.' விசேஷித்த கூட்டங்களை வைக்கும் இந்தக் கிருபையின் காலம் ரட்சணியக் குளம் கலக்கப்படுகிறதென்று சொல்லலாம். தேவாவியானவர் இறங்கும்போது தேவனுடைய வல்லமை காணப்படுகிறது. குளத்தில் இறங்கத்தக்க நல்ல காலம். நல்ல காலத்தை அசட்டை செய்வது மோசம். திருஷ். விசேஷித்த ஆராதனைக்கு வரமாட்டேன் என்று சாதித்தவன் செத்துப்போனது.

I. பாவியின் பரிதாபமான நிலைமை. 1. வெகுநாள் வியாதியஸ்தன் 'முப்பத்தெட்டு வருஷம் வியாதிகொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான்.' 'இயேசு அவனைக் கண்டு, அவன் வெகுகாலம்

வியாதியஸ்தன் என்று அறிந்தார்.' அதிகநாள் வியாதி, கொடிய வியாதி துவக்கத்தில் மருந்து கொடுத்துப்பார்த்தால் ஒருவேளை சுகப்படலாம்.' 38 வருஷத்திற்குப் பிற்பாடோ வருத்தம். நாளுக்குநாள் அதிகப்பட்டு வந்தது.

30 வருஷம் பொய்பேசின நாவு, தூஷணம் பேசின வாய், இச்சைகளைப் பேணிக்கொண்ட இருதயம். குணமாகுமா? வருத்தம். மனுஷனால் இது கூடாததுதான்; தேவனால் இது கூடாததல்ல தேவனாலே எல்லாம் கூடும்.'

கேள்வி ஒன்றே. 'விரும்புகிறாயா'? பாவத்தில் உசங்கொண்டு இருக்கிற மனுஷனே! 'விரும்புகிறாயா'?

II. உதவி ஆள் இல்லாதவன். 'என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை.'

அங்கே இருந்தவர்கள் எல்லாரும் வியாதிக்காரர்தானே! குருடன் குருடனுக்கு எப்படி வழிகாட்டக்கூடும்? சப்பாணிக்குச் சப்பாணி எப்படி உதவிசெய்யக்கூடும்? பாவியைப் பாவி எப்படி ரட்சிக்கக்கூடும்? ரட்சணியக்குளத்தில் உங்களைக் கொண்டுபோய் விடுவது மனுஷனால் முடியும் என்றால் இன்று ராத்திரி உங்கள் எல்லாரையும் கொண்டுபோய் ரட்சிப்போம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் முடியாது. நீங்களே இறங்க வேண்டும். மனுஷன் போதிக்கலாம், வழிகாட்டலாம், குளத்தைக் காட்டலாம்; அவ்வளவுதான்.

மனுஷனை நம்பவேண்டாம் ஒருவர் பக்கத்தில் நிற்கிறார். அவர் ஒருவரே போதும். 'சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா' என்று கேட்கிறார்.

III. நம்பிக்கையற்றவன். 'நான் போகிறதற்கு முன்னே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்.'

'மற்றவர்கள் சுகப்படுகிறார்கள், எனக்கோ நம்பிக்கையில்லை.' 'இறங்க முடியாது, சுகப்படுவேன் என்ற நம்பிக்கையுமில்லை.' கடைசிமட்டும் இப்படியே வியாதியோடு கிடக்கவேண்டும். நீங்கள் சொல்வதும் அப்படி. 'குணப்படுவேன் என்று தீர்மானம் பண்ணினாலும் அதை நிறைவேற்ற எனக்குச் சக்தியில்லை.' நிசம்! ஆகையால் ரட்சகர் நின்று கேட்கிறார். 'விரும்புகிறாயா'?

செய்யவேண்டியது என்ன? 1. நிர்ப்பந்தமான நிலைமையை ஒப்புக்கொள்ளவேண்டும். 2. இயேசு ரட்சகரை நம்பி அவருக்கு ஒப்புவிக்கவேண்டும். 3. ஆண்டவருக்குக் கீழ்ப்படியவேண்டும்.

Rev. T. Walker



14 OCT 1918

## உத்தம தேசாபிமானியாகிய நெகேமியா

'நாங்கள் அலங்கத்தைக் கட்டிவந்தோம்.' நெகே. 4: 6.

ஆவியானவரது திவ்விய அருள்மாரி பொழியப்பெற்ற [illegible] ஆவலோடு அரிய முயற்சி செய்து நடப்பித்துவரும் சுவிசேஷ ஊழியத்தால், தற்காலம் சுவிசேஷ பிரபல்ய வாஞ்சை அதிகரித்தும், பல மிஷன் சங்கங்கள் விழிப்புடன் வேலைசெய்தும், சுவிசேஷப் படை முயற்சிக்கேற்ற சேனை ஆயத்தமாகி ஊழியம் விர்த்தியாகி வருகிறதையும் நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம். இன்பத்தொனியாகிய சுவிசேஷ எக்காளம் ஊதப்படும் இக்காலத்தில் நமது அருமை ரட்சகருக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண முயற்சி செய்துவருவது நம் கடமையன்றோ?

நற்கிரியை செய்து தன் நாட்டுக்கு நன்மை தோன்றும்படி முயற்சித்துச் சித்திபெற்ற தேசாபிமானியாய் விளங்கின நெகேமியாவின் முன்மாதிரியைப் பின்பற்றி அன்புடன் ஊழியஞ்செய்து ஆத்துமாக்களுக்காக உழைத்துவர நம்மை ஒப்புக்கொடுத்து உன்னதபரனின் உதவியைப் பெற்றுக்கொள்வோமாக.

நெகேமியா என்ற சிரேஷ்ட பக்தனது காதேயத்தின் 4. எழுத்துகளைக்கொண்டு துவக்கும் 4 பிரிவுகளின் மூலமாய் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதற்கு இருக்கவேண்டிய சில குறிப்புகளை இங்கு ஆராய்ந்து பார்ப்பது நன்மையாயிருக்கும்.

1. நெஞ்சில் பாரமான துக்கமடைந்த நெகேமியா. வேதபுருஷராகிய தேசாபிமானிகளில் நெகேமியா சிறந்து விளங்கின சீர்திருத்த சிகாமணியாயிருந்தார். யூதருடைய பாவத்தினிமித்தம் பாழாக்கப்பட்டிருந்த எருசலேமின் பரிதாப நிலைமையை அறிந்து தன் தேசத்துக்காகவும் ஜனங்களுக்காகவும் கவலைகொண்டு எருசலேமின் அலங்கத்தைக் கட்டும்படி ஆவல்கொள்ளுகிறார். (நெகே. 2: 3). யூதர்களில் அநேகர் நிர்விசாரிகள்போலிருந்தாலும், பானபாத்திரக்காரனாகிய நெகேமியாவின் வைராக்கியம் எத்தனை மகத்தான காரியங்களைச் செய்தது என்று பார்க்கலாம்.

அபிமானம் அல்லது வைராக்கியம் நம்மொவ்வொருவருக்கும் தீராத அவசரமென்பதை அறிந்துகொள்வோமாக. அவ்விதமே நம்முடைய தேசமும் சாத்தானின் பாழ்க்கடிப்பினுள்ளடைந்திருக்கும் பரிதாப நிலைமையையும் ஆத்துமாக்களின் விலையையும் நாம் சீர்தூக்கிப் பார்ப்போமாக.

'கண்மணிகளில் கணக்கற்றபேர்கள்
கல்வியாது மறியார் பலர்
விண்ணொளியற்று வீணபக்தியினில்
விழுந்து கிடக்கின்றாரே! ஐயோ!!

எந்தன் நிர்ப்பந்தம் பாரும் என் மக்களே!' என்றோலமிடும் இந்திய மாதவின் துயரக் குரலைக் கவனிப்போமாக. எரேமியா தன் தேசத்துக்காகப் புலம்புகிறார். தானியேல் எவ்வளவுதூரம் தாழ்த்தி ஜெபிக்கிறார். 'நாமும் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு சிருஷ்.........செய்கையாயிருக்கிறோம்' (தீத்து 2: 14). ஆண்டவரால் விலையேறப்பெற்ற ஆத்துமாக்களை ஆதாயம்செய்து கிறிஸ்துவுக்கேற்ற அலங்கமும் மாளிகையும் கட்டும் அதிமகத்தான ஊழியத்தை நமது அன்றாடக ஜீவியத்தில் சிறந்து விளங்கச்செய்வோமாக. 'என் சகோதரனுக்கு நான் காவலாளியோ' என்ற மூத்தோனாகிய காயீனின் மாதிரியைப் பின்பற்றாமலும் என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவருமில்லையே? என்ற பரிதாப குரலுக்கு நமது செவியை அடைத்துக்கொள்ளாமலுமிருப்போமாக.

2. **நேட்ட விஷயத்தில் கிருபையை அடைந்த நேகேமியா.** 'முதலாவது தேவனுடைய ராஜ்ய ...... கூட்டக் கொடுக்கப்படும் [மத். 6: 33]. என்ற திருவாசகப்படி, முதலாவது தேவனிடத்தில் ஜெபித்துப் பின்னால் அர்தசஷ்டா ராஜாவினிடத்தில் மனுச்செய்கிறார் [2: 5-8]. கேட்டவிஷயம் சித்திபெற தேவன் கிருபைசெய்தார் [2: 8]. ஜெபமே ஜெயம் என்றறிந்து ஜெபித்தார், முதலிலும் ஜெபம் [1: 11]. ஊழியமத்தியிலும் ஜெபம் [4: 9]. கடைசியிலும் ஜெபம் [12: 43]. தடைகளை நீக்கிப்போடுகிறவர் நமக்கு முன்னே போகிறார் என்ற தைரியத்துடன் ஜெபத்தின்மூலமாய்க் கிருபாசனத்தண்டை ஆத்துமாக்களை நினைத்துப் பிரார்த்தித்து கிருபையைப் பெற்று ஊழியஞ்செய்ய ஆத்திரப்படுவோமாக.

'ஜெபமே ஜெயமென நினையேன், உந்தன்
ஜீவ நாயகரிடம் ஜெபிக்கும் விண்ணப்பத்தில்'

3. **மிகுந்த முயற்சியெடுத்துக்கொண்ட நேகேமியா.** கவலைகொள்வதும் ஜெபிப்பதும் மாத்திரம் போதாது, இவைகளோடு முயற்சியும் வேண்டும் என்றுணர்ந்து அரிய முயற்சியை ஆரம்பித்துப் பெரிய காரியத்தை எதிர்பார்த்துவந்தார். சங்கடங்கள் நேரிட்டாலும் சட்டைபண்ணவில்லை.

[a] சத்துருக்களின் பரியாசத்தால் சஞ்சலமடையவில்லை [4: 1-3].

[b] கொடிய தடைகள் நேரிட்டாலும் கொஞ்சமேனும் அஞ்சவில்லை [4: 7, 8].

[c] சிநேகிதரின் அவநம்பிக்கை மொழிகளும் தீர்மானத்தை மாற்றவில்லை [4: 10-12]

[d] சத்துருக்களின் சதி சர்ப்பனைகளும் தைரியத்தைக் குலைக்கவில்லை 6: 2-9].



[e] கைக்கூலி வாங்கினோரின் தீர்க்கதரிசனமும் காற்றிலே பறந்து போயிற்று [6: 10-13]. எந்த நல் வேலைக்கும் தடை யேற்படுவது சகஜமானதினால் நாம் அதைச் சற்றும் கவனிக்கலாகாது. யுத்தம் கர்த்தருடையது, ஊழியத்தைத் தந்த நம் தளகர்த்தர் முன்செல்லுகிறார் என்று தைரியங்கொண்டு போராடுவோமாக.

'வீரர்கள் குறைகள் யாவும் தீர்த்திடும் வல்லவரே
யுத்தத்தில் முன்செல்ல ஏவும் சேனைத் தளகர்த்தரே'.

4. **யாவையுஞ் செவ்வையாய்ச் செய்து ஜெயமடைந்த நேகேமியா.** 'கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்' (நீதி: 30. 25) என்ற திருமறைப்படி அமரிக்கையும் நம்பிக்கையும் அதிக ஜெயத்தைக் கொடுத்தது. நெகேமியா செய்த வேலையின் விபரம் நமக்குச் சிறந்த மாதிரி யென்பதையும் சற்று கவனிப்போம். நெகேமியா தான் வேலைசெய்ததோடு மற்றவர்களையும் சம்பந்தப்படுத்தி 'நாங்கள் அலங்கத்தைக் கட்டிவந்தோம்' என்கிறார். (a). குடும்பம் குடும்பமாக நிறுத்தி வேலையை நடத்தினார் (4: 13, 14). [b] யுத்த சன்னத்தராய் உடுப்பணிந்து வேலை செய்ய ஏவினார் (4: 16, 17). [c] எக்காள சத்தத்தை அடையாளமாக்கினார் (4: 19, 20). [d] கண்ணுறக்கமற்று வேலை செய்யும்படி ஏற்பாடு செய்தார் [4: 21]. [e] சுயவெறுப்போடு வேலையை நடத்தினார் [4: 22; 5: 16]. அலங்கம் ஆர்ப்பரிப்பான ஜெயத்தொனியுடன் பிரதிஷ்டை பண்ணப்பட்டது (7: 15, 16; 12: 27). தேவனுடைய இரட்சிப்பில் பங்குபெற்ற தேவ சேனையின் வீரர்களே! தேவ திருக்குமாரனுடைய சிலுவைக்கொடியின் கீழ் நின்று யுத்தஞ்செய்யும் சலாக்கியம் பெற்றவர்களே! இவ்வித சிறந்த இலட்சணமும் திவ்ய வைராக்கியமும் நம்மிலும் விளங்கினால் மெய்யாகவே நாமும் ஜெயம்பெறுவோம், எஜமானுக்கு மகிமையுண்டாகும் ஆத்தும ஆதாயஞ்செய்தோரின் பாக்கியமும் நம்முடையதாகும். இப்பிரசங்கத்தின் பொருளையடக்கிய பின்வரும் கீர்த்தனையை 'கள்ளமுறுங் கடையேனும்' என்ற தேவார இராகமாய்ப் பாடலாம்.

இராகம்—ஆரபி

பல்லவி

சுவிசேஷ வேலைசெய்வோம் சுகிர்தமுடன் சுபமிகுமோர்
கவிகீதம் பாடியே நம் கர்த்தன் திருப்பதம் பணிவோம்.

1. நெஞ்சில்மா கவலைகொண்ட **நேகேமியா** பக்தனைப்போல்
வஞ்சப் பேய்தனை ஜெயிக்க வல்லபரன் அருள் பெறுவோம்—சுவி.

2. கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும் என்றவர் எவ்
வேளையிலும் இனிதாக வேண்டிய மாதயை தருவார் —சுவி.

3. மிகு முயற்சி செய்திடில் நாம் மேலான பலன் காண்போம்
மிகுந்திடும் தீவினைகள் நம்மை மேற்கொண்டிட மாட்டாது—சுவி.

16200 2

4. யாவுமதி சீருடன் நல் நாதனவர் கிருபையினால்
யாண்டும் செய்து ஜெயம் பெறுவோம் யாழுடன் பண் பாடிடு
[வோம்—சுவி.

J. P.

## மாறாத அன்பு

நான் ஒரு சிநேகிதரோடு பேசிக்கொண்டிருந்தபோது பின்வருமாறு என்னோடு சம்பாஷித்தார்:

'உலகத்தில் அன்பு என்பது குறைந்துபோயிற்று. பெற்றோருக்குப் பிள்ளைகளின்பேரில் ஆசையில்லை. பிள்ளைகளுக்குப் பெற்றோரின்பேரில் ஆசையில்லை. இதே விதமாகத்தான் சகோதரர் சகோதரிகளிடத்திலும் நடக்கிறது. நாம் அவர்களைத் தேடிப்போனாலும், அவர்கள் நம்மை அந்நியர்கள்போலத்தான் நடத்துகிறார்கள். அவர்கள் நம்மிடத்தில் வந்தாலும் அப்படியேதான் நடக்கிறது. உதாரணமாக: எனக்குப் பிள்ளைகளிருக்கிறார்கள். நாலு ஐந்து வயதுவரைக்கும் தூக்கிக் கொஞ்சுகிறேன். அவைகளும் என்மேல் அதிகப் பாசமாயிருக்கிறது. வரவர அன்பு தணிகிறதாகக் காண்கிறேன். அதற்குப் பிறகு பிள்ளைகள் என்கிற ஆசையை விட்டுவிடத்தான் நேரிடுகிறது. அவர்களும் தங்கள் குடும்பம் என்கிற எண்ணமும் ஆசையும் உடையவர்களாகிவிடுகிறார்கள். இதுவே கிறிஸ்துவானவருடைய வருகைக்கு அடையாளமாயிருந்தாலுமிருக்கலாம் (மத். 24: 12). ஆனால், ஒன்று நிச்சயம்! என்னுடைய பிள்ளைகளில் யார்யார் கிறிஸ்துவானவரை நேசிக்கிறார்களோ அவரவர்களுடைய அன்பு மாத்திரம் மாறாது. அவர்கள் என்னோடிருந்தாலும், வேறே தனியாயிருந்தாலும், உண்மையாக கிறிஸ்துவானவரை நேசிக்கிறவர்களானால், என்னையும் நேசிப்பார்கள் அந்த ஒன்றுதான் எனக்கு ஆறுதல்' என்றார்.

ஆம் சகோதரரே, நாம் உலகத்தில் பார்க்கிறபடி பெற்றோரிடத்தில் வைக்கிற அன்பும் அதிசீக்கிரத்தில் மாறிப்போம். அப்படியே, இனபந்துக்கள், சிநேகிதர் இவர்களிடத்தில் வைக்கிற அன்பும் மாறிப்போகக்கூடியவைகள். எத்தனை சிநேகிதர்களில் ஜென்மவிரோதிகளாய் மாறிவிட்டவர்களுமுண்டு. எத்தனை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கொலை செய்தவர்களுமுண்டு. எத்தனை பிள்ளைகள் தங்கள் பெற்றோரைத் தூஷிக்கிறார்கள். வீட்டைவிட்டுத் துரத்திவிடுகிறார்கள். தாயாரை வீட்டில் மகா இழிவாக நடத்துகிறார்கள். அந்தப் பெற்றோரைத்தானே ஒரு காலத்தில், 'அருமைத் தகப்பனே, அருமைத்தாயே' என்று கூப்பிட்டவர்களுமுண்டு, மாறிவிட்டதே!

மனுஷரிடத்தில் மூன்று விதமான அன்பைக் காணலாம்.



முதலாவது, மிருகச் சுபாவமான அன்பு. தன்னை நேசிக்கிறவர்களைப் பகைப்பதே மிருகச் சுபாவம். மிருகச் சுபாவத்தையுடையவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். அவர்களோடு பழகுவதைப் பார்க்கிலும் காட்டிலுள்ள வேங்கையோடு பழகுவதே மேன்மையானது.

இரண்டாவது, மனுஷ சுபாவமான அன்பு. தங்களை நேசிக்கிறவர்களையே நேசிப்பது மனுஷ சுபாவம். ஆனால், சடுதியில் மாறக்கூடியது. சமாதான காலத்தில் சந்தோஷத்தையும் பிரிவினை காலத்தில் விரோதத்தையும் பேணிவைக்கக்கூடியது. இந்த விதமான அன்பிலும் நம்பிக்கையில்லை

மூன்றாவது, தேவசுபாவமான அன்பு. சிநேகிதனையும் சத்துருக்களையும் சிநேகிப்பதே தேவ சுபாவம். 'உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்' [லூக். 6: 27] என்பதே கிறிஸ்துவானவருடைய போதனை. தமது மரணவேளையிலும் 'சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய்?' [மத் 26: 50] என்று தம்மைக் காட்டிக்கொடுத்த யூதாசோடு பேசின சற்குருவும் இவரே. தாம் உயிர்விடும் சமயத்திலும் தமது சத்துருக்களுக்காக பரிந்து விண்ணப்பம்செய்த அன்பின் சொரூபியும் இவரே. ஆகையால், இந்த அன்பைத் தரித்துக்கொண்டவர்களிடத்தில் பெற்றோருக்கும் நம்பிக்கையுண்டு. பெற்றோரிடத்தில் பிள்ளைகளுக்கும் ஆறுதல் உண்டு. சகோதர சகோதரிகளிடத்திலும், இனபந்துக்களிடத்திலும், சிநேகிதரிடத்திலும், ஏழைகளிடத்திலும், ஊனர், சப்பாணிகள், கைம்பெண்கள் இவர்களிடத்திலும், அனுதாபமும், அன்பும் பொங்கும். கிறிஸ்துவானவரிடத்தில் காணப்படுகிற மாறாத அன்பை இவர்களிடத்தில் கண்டு களிகூறலாம்.

சகோதரரே, இந்த மூன்று வகுப்பில் நீங்கள் எதைச் சேர்ந்தவர்கள்?

நீரே, நெஞ்சை நெஞ்சுடன்,
சேர்த்து, நேசத்தின் பலம்,
வாழ்வு, தாழ்வு, காலத்தும்,
வாய்க்கும்படி செய்திடும்.

S. R. D.

## ஏசாயாவின் அழைப்பு

உசியா ராஜாவின் காலத்தில் 50 வருஷம் தொடர்ச்சியான செழிப்புண்டாயிருந்தபடியால் இஸ்ரவேலின் மார்க்க பக்தி குறைந்துபோயிற்று. ஜனங்களின் சீர்கெட்ட நிலைமையைத் தடுக்க ஓர் தீர்க்கதரிசி எழும்பவேண்டியதாயிருந்தது. இஸ்ரவேலரின் ஆரம்ப சரித்திர காலத்தில் அவர்கள் பெலவீனராய், சொற்ப ஜனங்களாயிருந்தார்கள். தேவன் தம்மை அவர்களுக்குச் 'சர்வ வல்லவர்' என்னும் நாமத்தால் தம்மை வெளிப்படுத்தினர். அதன்

பின் எகிப்து தேசத்தில் தாங்கள் நிலைபெற்றிருக்கலாம் என்னும் எண்ணம் அவர்களுக்குள் உண்டானபோது, தாம் மாறாதவர் என்றர்த்தங்கொள்ளும், 'எகோவா' என்னும் நாமத்தால் தம்மை வெளிப்படுத்தினார். அதன்பின் மற்ற ஜாதிகளால் அவர்கள் நெருக்கமடைந்த காலத்தில் 'சேனைகளின் கர்த்தர்' என்னும் நாமத்தால் தம்மை வெளிப்படுத்தினார். ஆனால் இப்போது அவர்களுக்குள் பாவம் பெருகியிருந்த இக்காலத்தில், அவருடைய பரிசுத்தத்தின் மேன்மையே தீர்க்கதரிசிக்கு முன்பாகக் காட்டப்பட்டது.

1. **தரிசனம்.** அந்திப்பலி செலுத்தும் நேரமான சாயங்காலமாயிருக்கலாம். ஏசாயா தேவாலயத்தில் தொழுதுகொள்ள வரும் கூட்டத்தோடு ஆலயத்தின் அலங்கார வாசல்வழியாய் வருகிறான். அவனுக்கு எதிரே, பெரிய வெண்கலப் பலிபீடமும், ஆசாரியர் தங்களைக் கழுவிக்கொள்ளும் கடற்றொட்டியும் இருந்தன. இவைகளைக் கடந்துபோனால் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும் கேதுரு மரப் பலகைகளுள்ள கதவுகளிருந்தன. ஜனங்கள் வெளியே காத்திருக்கையில், உட்பிரவேசித்துத் தூபம் காட்டப்போகும் ஆசாரியனுக்கு இவைகள் முன்னால் காணப்படும். வெண்ணங்கி தரித்த லேவியரின் கூட்டம் இரு பக்கங்களிலும் நின்று கீதம் பாடிக்கொண்டிருக்க தூபம் ஆகாயத்தில் எழும்பும். இது ஓர் மாட்சிமையான காட்சி! ஆனால் தீர்க்கதரிசிக்கு இன்னோர் காட்சி வெளிப்பட்டது. கண்ணுக்குத் தெரிந்த இந்த ஆலயத்திற்குப் பதிலாகக் காணக்கூடாத நித்திய ஆலயம் அவனுக்குப் புலப்பட்டது. பலிபீடம், உடன்படிக்கைப்பெட்டியாகிய இவைகளுக்குப் பதிலாகப் பரலோகத்தில் வைக்கப்பட்ட தேவனுடைய சிங்காசனம் காணப்பட்டது. தூபத்திற்குப் பதிலாக ஆகாயத்தின் மகிமையும் லேவியரின் கீதத்துக்குப் பதிலாகச் சேராபீன் கூட்டத்தாருடைய கீதமும் அவன் காட்சிக்குத் தென்பட்டது.

சேராபீன்களின் கூட்டத்தார் பாடின பாட்டானது திரியேக தெய்வத்தை அவர்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள் என்று காட்டிற்று. ஆனால் இவைகளின் கருத்து அவர்களுக்குத் தெரிந்ததைப் பார்க்கிலும் நமக்கு நன்றாய்த் தெரியவேண்டும். என்றாலும் அவர்களுக்குத் தெரியாத ரகசியங்கள் அவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியவைதான். தேவனாகிய பிதாவின் பரிசுத்தம் மனுஷருக்குப் பயத்தையும் எச்சரிக்கையையும் கொடுக்கக்கூடியது. சீனாய் மலையில் விளங்கின மேகம், மின்னல், இடிமுழக்கம் இவைகள் இஸ்ரவேலருக்குத் திகிலையுண்டாக்கிற்று. தேவனாகிய பரிசுத்தாவியின் பரிசுத்தம் மனிதராகிய நமக்குப் புலப்படக்கூடாததுதான். ஆனால் தேவனாகிய குமாரனுடைய பரிசுத்தமோ மனிதராகிய நாம் காணத்தக்கதாக மனித ரூபத்தில் வெளிப்பட்டது. சேராபீன் கூட்டத்தாருடைய ஸ்தோத்திரங்களை ஏற்றுக்கொண்ட அவரே, சுவிசேஷங்களில் சிறுவரைத் தம் மடியில் சேர்த்து அணைத்துக்கொள்ளவும், கெட்டுப்போனவர்கள் தமது



பாதத்தைத் தொட்டுக் கழுவவும், தீட்டாயெண்ணப்பட்டவர்களோடு பழகிச் சம்பாஷிக்கவும் இடங்கொடுத்தார். இதுதான் நமது புத்திக்கு விளங்கக்கூடிய பரிசுத்தம். இவருடைய பரிசுத்தத்தை நாமும் சுதந்தரிக்க வாஞ்சிக்கும்போதுதான் அவர்தாமே நம்மைப் பார்த்து, 'நான் பரிசுத்தர், நீங்களும் பரிசுத்தராயிருங்கள்' என்றழைக்கிறார். பரிசுத்தராகிய அவர்தாமே நம்மில் வாசம்பண்ணினால் மாத்திரம் நாமும் பரிசுத்தத்தை அடையலாம். பட்சிக்கிற அக்கினியாயிருக்கிற அவர்தாமே தமது குமாரனின் மூலமாய் நம்மில் வாசம்பண்ணும்போது நாமும் பரிசுத்தாவியின் வல்லமையால் மற்றவர்களைப் பரிசுத்தம்பண்ணுகிற அக்கினிகள் ஆகலாம்.

2. **அறிக்கை.** ஐயோ! அதமானேன். சேராபீன்கள் கர்த்தரைத் தங்களுடைய உதடுகளால் போற்றுகிறதையும் தான் தன் உதடுகளை உபயோகிக்கிற வகையையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது தன்னுடைய அசுத்தத்தை உணருகிறார். அவர்கள் தங்கள் உதடுகளால் தேவனை, 'பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்று போற்றுகிறார்கள். தானோ தன் உதடுகளால் கேவலமான, தீமையான வார்த்தைகளைப் பேசித் தன் பொல்லாத இருதயத்திலிருந்து இவைகளெல்லாம் புறப்படுகிறதே என்று தன்னைத் தாழ்த்துகிறார். தன் வார்த்தைகளாலேயே தான் நியாயந்தீர்க்கப்படுவேன் என்றும், தான் பேசின வார்த்தைகளுக்காகக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்றும் அறிந்தான். இவ்விதமாய்த் தன்னை அசுத்தன், அபாத்திரன் என்று அறிக்கை செய்த அதே நேரத்தில், ரத்தமும் நெருப்பும் அவனைச் சுத்திகரிக்கும்படி அருளப்பட்டது. நெருப்புத்தழலில் ரத்தம் இருந்தது. எப்படியென்றால், பலி மாம்சத்தின் ரத்தம் தழலில் வடிந்து அந்தத் தழல் ரத்தம் சேர்ந்ததாயிருக்கவேண்டும். ஆகையினால்தான் சேராபீன் அவனைப் பார்த்து, உன் பாவம் நிவிர்த்தியானது என்கிறான். தழலில் எரிந்துகொண்டிருந்த நெருப்பும் இருந்தது. தீர்க்கதரிசியின் உதடுகளைத் தழலால் தொடும்போது அக்கினித் தழலாகத்தான் இருந்தது. நம்மையும் சுத்திகரிக்கக் கல்வாரியும் பெந்தெகொஸ்தும் தேவை. நமக்குப் பாவமன்னிப்பும் அக்கினி அபிஷேகமும் தேவை. தேவதூதன் உன் பக்கத்தில் பறந்துவருவதை நீ காணமாட்டாய் மெய்தான். என்றாலும் மெய்மனஸ்தாபமும் பாவஅறிக்கையும் உன்னிலிருந்து புறப்பட்ட அதே நிமிஷத்தில், பரலோகத்தில் அதன் பலன் உடனே புறப்படுகிறது என்பதை நிச்சயமாய் நம்பு.

3. **கட்டளை.** தீர்க்கதரிசி நிறைவேற்றும்படி அழைக்கப்பட்ட ஊழியம் அவனுக்குப் பிரியமானதல்ல. அவனுடைய பிரசங்கத்தின் பலன் ஒன்றுமிராதென்றும் அவனுக்கே அது கெடுதியாயிருக்குமென்றும் அறிவிக்கப்பட்டது. எவ்வளவுக் கதிகமாய்க் கேட்கிறார்களோ, அவ்வளவுக் கதிகமாய் அவர்கள் இருதயம் கடினப்படும். அவர்கள் வெளிச்சத்தை வெறுப்பார்கள். முன்னிலும் அதிகமான குருட்டாட்டத்துக்கும் இருதயக்

கடினத்துக்கும் ஆளாவார்கள். அவர்களுக்குச் சொல்லப்படும் வசனம் மரணத்துக்கேதுவான மரண வாசனையாயிருக்கும். கடலோரங்களில் காணப்படும் பல காலுள்ள பூச்சிகளைத் தொட்ட மாத்திரத்தில் அவைகள் தங்கள் கால்களை மடக்கிக்கொண்டு சிப்பிக்குள் ஒளித்துக்கொள்ளும். அப்புறம் அவைகளைக் காணமுடியாது. வெளியே வரப்பண்ணவும் நம்மால் ஏலாது. தேவனை மறுக்கிற அல்லது தேவன்பேரில் பிரியமில்லாத ஆத்துமாக்கள் இந்தப் பூச்சிகளைப்போலவே யிருக்கிறார்கள். எவ்வளவுக் கதிகமாய் அவைகளை நெருங்கப் பார்க்கிறோமோ அவ்வளவுக் கதிகமாய் அவைகள் ஒளித்துக்கொள்ளும். பார்வோனின் இருதயமும் இதே பிரகாரம் அவன் மறுத்த ஒவ்வொரு சமயத்திலும் முன்னிலும் அதிகக் கடின நிலைமைக்குட்பட்டான்.

சேராபீன்களின் ஊழியத்தைக் கவனித்த ஒருவன் அவர்களைப்போலத் தானும் தேவனுக்கு ஊழியம் செய்ய விரும்புவானானால், அவனுக்குக் கஷ்டம் நேரிடும். ஏனென்றால் அவனுடைய ஊழியத்துக்குப் பல தடைகள் நேரிடும். ஜனங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தேவனுடைய செய்தியை அவமதிப்பார்கள். அப்போதுதான் ஊழியன் திகைக்கிறான். ஆனாலும் அவாகள் கொஞ்சக் காலம் மட்டும் அப்படி எதிர்ப்பார்கள். பிற்பாடு நம்பிக்கையும் தைரியமும் உண்டு. ஆகையால் தற்காலத்தில் நேரிடும் இடையூறுகளால் இளக்கரித்துப் பேசக்கூடாது. ஏனென்றால் நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர். நமக்குக் கட்டளை கொடுக்கிறவரே நம்மைப் பெலப்படுத்துவார். தீர்க்கதரிசிக்கும் தற்காலத்தில் அதைரியம் உண்டானபோதிலும், தற்கால நியாயத்தீர்ப்பு தேசத்தையும் பட்டணங்களையும் நிர்மூலமாக்கினபோதிலும், மரத்தின் இலைகள் உதிர்ந்து சிதறப்பட்டபோதிலும் நம்பிக்கையுள்ள வசந்தகாலம் வரும், இஸ்ரவேலரிலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மீதியாயிருப்பார்கள். அவர்கள் உயிரடைந்து செழித்தோங்குவார்கள். எஸ்றா, நெகேமியாவின் காலங்களில் இது ஒருவாறு நிறைவேறிற்று. பூரண நிறைவேறுதல் இனிமேல் வெளிப்படும் [ரோமர் 11: 5, 23-29].

---

## திருஷ்டாந்தங்கள்

அமெரிக்காவிலுள்ள ஓர் காட்டாற்றைக் கடக்கப்போன இருவர் குதிரையின்மேல் போனார்கள். அவர்களில் ஒருவன் வெள்ளமானது மோதியடித்துக்கொண்டு போகிறதைப் பார்த்துப் பார்த்துத் தன் சேணத்தில் பயத்தினால் புரண்டான். சீக்கிரத்தில் தவறிவிழும் நிலைமையிலிருக்கும்போது அவன் தோழன் கண்டு அவனைப் பலமாய்த் தாடையில் ஓரடி அடித்து, 'மேலே பார்' என்றான். இதே பிரகாரம் மோக்ஷ பிரயாணம் பண்ணும் விசுவாசிகள், தங்கள் குறைகள், துன்பங்கள், கஷ்டங்கள் இவைகளைப் பார்த்து மனம் சோர்ந்து இளக்கரித்துப்போகாமல், இவைகளெல்லாவற்றையும் ஜெயித்து வெற்றி சிறந்து நமக்கு முன் சென்றுபோயிருக்கும் சேனாபதியாகிய யேசுவையே நோக்கிப் பார்க்கவேண்டும்.



---

13 வயதுள்ள ஓர் குழந்தை வியாதியாயிருந்தது. வைத்தியன் அந்தப் பிள்ளையைப் பரிசோதித்து அவளைப் பார்த்து, அம்மா, நீ இன்னும் இரண்டு வருஷத்துக்குக் குறையாமல் உன் படுக்கையிலேயே மல்லாக்கப் படுத்திருக்கவேண்டும். அப்படிச் செய்வாயானால் சுகமுண்டாக வழி ஏற்படும் என்றார். பிள்ளை அவரைப் பார்த்து, 'ஐயா, தேவனோடு துன்பத்தையனுபவிக்க இடம் கிடைக்கிறது ஓர் மேன்மையான சலாக்கியம் அல்லவா? என்றது. இவ்விதமாய் நாம் அவரோடேகூட பாடுபடுவோமானால் அவரோடேகூட அரசாளவும் கூடும் (ரோமர் 8: 16-18).

---

## நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள், பிரசங்கி 5: 1 [தொடர்ச்சி].

2. **நீ தேவாலயத்துக்கு வரும்போது உன் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்.** இங்கே ஆராதனை நடக்கும்போது சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஓடவிடுகிறதும் விளையாட விடுகிறதும் இங்கும் அங்கும் அலைந்துதிரிய விடுகிறதும்; வஸ்திரம் கழற்றிப்போடவும் அதைப் போட்டுக் கொள்ளவும் இடங்கொடுக்கிறதும் பெரிய தப்பிதம். சிறு பிள்ளைகள், பிள்ளை புத்திதானே என்று நினைக்கவேண்டாம். உங்களாலே அல்லவா அவர்களுக்குப் புத்தி வரவேண்டும். நீங்கள் அவர்களைப் பார்த்துக்கொள்ளாததால் அல்லவா அந்தப்பிள்ளைகள் அப்படிச் செய்கிறார்கள். ஐயோ பரிசுத்த கடவுளுடைய சந்நிதானத்தில் பிள்ளைகள் விளையாடுவது ஓடித்திரிகிறது தப்பிதம் அல்ல என்று நினைக்கிறீர்களா? உபா. 31: 11-13ஐ வாசித்துப் பாருங்கள். பிள்ளைகளும் கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறதே, மெய்தான் சில சமயங்களில் கைக்குழந்தைகளை அமர்த்த ஏதுவில்லாமல் அவர்களை வெளியே கொண்டுபோக வேண்டியதாய் வரும். ஆனாலும் நமமுடைய பிள்ளைகள் ஒழுங்காய் உட்காராமலும் தேவனுடைய சந்நிதானம் என்று உணராமலும் இஷ்டம்போல விளையாடுவதும் ஓடித்திரிவதும் பெற்றோருடைய தப்பிதம் என்பது நிசம். பிள்ளை பாசத்தினிமித்தம் தேவனுக்கு விசனம் மூட்டுவது மோசமான காரியம். தேவாலயத்தில் நீங்கள் விளையாட விடுகிற பிள்ளைகள் பிற்பாடு உங்களுக்குக் கீழ்ப்படியாமல் பாவ வழிகளில் அலைந்து திரிந்து கெட்டுப்போனால் ஆச்சரியமா? சிறுபிராயத்தில் தேவனைக் கனம்

பண்ணும்படி அவர்களுக்குப் படிப்பிக்காவிட்டால் பின்பு உங்களைக் கனம் பண்ணாமற்போனால் அதிசயமா? சிறு பிள்ளைகளை கோவிலில் ஒழுங்காய் உட்காரவும் தேவனுடைய வீடு இது என்று உணரவும் வளர்ப்பது கூடாத காரியமல்ல. அப்படிப்பட்ட அநேக பிள்ளைகள் உண்டு. பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.

தோட்டத்திலே நல்ல மாமரங்கள் உண்டாகவேண்டுமென்று விரும்பி சில ஒட்டுமாமரங்களை வைத்து வளர்க்கிறோம் என்றால் அது களவாய்ப் போகாதபடிக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆடு மாடுகள் அதைக் கெடுத்துப்போடாதபடிக்குக் காபந்து பண்ணவேண்டும். நன்றாய் வேரூன்றி வளர்ந்தபின்பு பெரிய மரமானபின் தன்னாலே நிற்கும். மழை அதின்மேல் பெய்ய காய் காய்த்துப் பலனைத் தரும். அப்படிப்போல சிறு பிள்ளைகளை தேவபக்தியோடு வளர்த்தால் அவருடைய மகிமைக்கென்று வளரும். மனம்போலக் கோவிலில் விளையாடவும் பொல்லாப்புச் செய்யவும் விடுவோமானால் காய உத்தரவாதம் பண்ணவேண்டியதாய் வரும். பிரபல துஷ்டன் ஒருவன் தூக்குமரத்திலே போடப்பட்டான். போடப்படும்போது தன் தாய் தகப்பன்மாரைக் குற்றப்படுத்தினானாம். நான் சிறுபிள்ளையாயிருக்கும்போது மனம்போன போக்கிலே என்னை விட்டுவிட்டார்கள். தேவனைப்பற்றி எனக்குச் சொல்லவில்லை. என் ஆத்தும ரட்சிப்பை அவர்கள் கருதவுமில்லை. நான் கெட்டுப்போனது அவர்களாலே என்று சொன்னானாம். ஆ! நரகத்தீயில் போடப்பட்ட எத்தனை பிள்ளைகள் தங்கள் பெற்றோரைக் குற்றப்படுத்தப் போகிறார்கள். கோவிலில் விளையாடினேன், என்னைக் கண்டிக்கவில்லை. கெட்ட வார்த்தைகளைப் பேசினேன், என்னை மெச்சினார்கள். நான் நரகத்திலே போடப்பட்டது அவர்களாலே என்று சொல்லவேண்டியதாய் வரும். உங்களுக்குப் பயம் இல்லையா? கோவில் தேவனுடைய வீடு என்றும் அங்கே போவது மெத்த இன்பம் என்றும், அங்கே போகும்போதெல்லாம் பரமராஜா சந்திக்கவும் ஆசீர்வதிக்கவும் வருகிறார் என்றும் ஆகையால் அவருடைய சந்நிதானத்தில் தாழ்மையோடும் சந்தோஷத்தோடும் நாம் வரவேண்டும் என்றும் உங்கள் பிள்ளைகளுக்குப் போதியுங்கள். ஆண்டவரே இதோ நானும் நீர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்று சொல்லத்தக்கதாக உங்கள் பக்கத்தில் அவர்களை உட்காரவையுங்கள். அவர்கள் பயபக்தியோடு உட்காரப் பார்த்துக்கொள்ளுங்கள்.

(இன்னும் வரும்)

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly

312

16 FEB 1920

December 1919. Registered No. M. 136

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XX டிசம்பர்மீ 1919

## கிறிஸ்மஸ் செய்தி

### வெளிச்சம், மகிழ்ச்சி, விடுதலை. ஏசாயா 9: 2–5.

நம்முடைய அருமை ரக்ஷகர் இவ்வுலகத்தில் பிறந்ததினாலே மூன்று பெரிய நன்மைகள் உண்டானதாக இங்கே வாசிக்கிறோம், (1) பெரிய வெளிச்சம், (2) பெரிய மகிழ்ச்சி, (3) பெரிய விடுதலை. இந்தப் பண்டிகை நாளின் விசேஷத்தை அறிவிக்கும்படிக்கு பல இடங்களில் வித வித நாதங்களுள்ள பல மணிகளை ஒன்றாய்த் தொங்கவைத்து சந்தோஷ மணி தொனிக்கச் செய்யும் வண்ணம், தீர்க்கதரிசியானவன் இந்த விசேஷித்த சத்தங்கள் முழங்கப்பண்ணுகிறான். ஒளி, களிப்பு, ஜோதி, சந்தோஷம், சுவாதீனம், வெளிச்சம், மகிழ்ச்சி விடுதலை முதலிய இவை நல்ல தொனியாகும்.

1. **பெரிய வெளிச்சம்.** 'இருளில் நடக்கிற ஜனங்.........கண்டார்கள் &c'. அர்மீனியா தேசத்தில் ஒரு பெரிய கெபி. அத்தனை பிரமாண்டமான கெபி வேறெங்குமில்லை. அதைப் பார்க்கும்படி ஏராளமான ஜனங்கள் போவார்கள். போகும்போது முதலாவது சுரங்கத்தில் இறங்குவதுபோல ஒரு பெரிய குழியில் இறங்கவேண்டும். கீழே இறங்கி இறங்கி அப்புறம் கீழ் பூமியில் ஒரு பாதையின் வழியாக நடந்துபோகவேண்டும். அது பூமியின் கீழே நிலவறையைப்போலிருக்கிறதினாலே அங்கே யாதொரு வெளிச்சம் கிடையாது. வழிகாட்டுகிற மனுஷன் மாத்திரம் கையிலே ஒரு லாந்தரைப் பிடித்துக்கொண்டு மற்றவர்களுக்கு கொஞ்சம் வெளிச்சம் காட்டுகிறான். இப்படி அதிக தூரம் போனபின்பு அந்தப் பெரிய கெபியில் வந்து சேருவார்கள். வந்து சேரவே வழிகாட்டியானவன் திடீரென்று போய்விடுவான். மற்றவர்களுக்குக் கொஞ்சமாவது வெளிச்சம் இல்லை. அங்கே பயந்து நிற்

பார்கள். ஒவென்ற இருளாயிருக்கிறது. ஒன்றும் தெரியாது. பக்கத்தில் ஒரு அருவி (தண்ணீர்) இரைச்சலோடு ஒரு பெரிய பாதாளத்தில் விழுகிற சத்தம் இடிமுழக்கம்போலக் கேட்கிறது. ஆனால் ஒன்றும் தெரிகிறதில்லை. பயத்தோடு நிற்கிறார்கள். ஐயோ! செத்தோமே, என்று நினைக்கிறார்கள். அப்படி இருக்கும் சமயத்தில், சடுதியில் மேலே ஓர் சிறு வெளிச்சம் தோன்றுகிறது. வர வர வர அது பெருகிக்கொண்டே வருகிறது. கடைசியில் பெரிய வெளிச்சமாகி இருளை எல்லாம் நீக்கி, அந்தப் பிரமாண்டமான கெபியை எல்லாம் பிரகாசிப்பித்து, அங்குள்ள அதிசய காட்சிகளை எல்லாம் காட்டுகிறது. மேல் கூரையிலும் சுவரிலும் இருக்கிற தண்ணீர் துளிகள் ஆயிரமாயிரமான வைரரத்னங்களைப்போலவே ஜொலித்துக்கொண்டே இருக்கிறதாகத் தெரியும். அந்த வெளிச்சம் எப்படி உண்டானது. வழிகாட்டியான மனிதன் போய்விட்டான் என்று சொன்னேனே. அவன் பக்கத்து வழியாய்ச் சென்று மேலே ஒரு கற்பாறையின்மேல் ஏறிச் சில தீபங்களைக் கொளுத்தி அப்படி வெளிச்சம் உதிக்கச் செய்தான் பார்த்தீர்களா? இங்கே சொல்லப்பட்ட காரியம் அப்படிப்போலவே இருக்கிறது. பாவ இருள் எத்தனை பயங்கரமானது. பக்கத்தில் ஒரு பெரிய பாதாளம். நரக பாதாளம். பாவியானவன் அதிலே விழத்தக்கதான நிலைமையிலிருக்கிறான். அவன் குடியிருக்கிற இடத்துக்கு 'மரண இருளின் தேசம்' என்று பெயர். சொல்லவேண்டுமானால் அந்தக் குகையின் இருளைப் பார்க்கிலும் பாவ இருள் மெத்த மோசமானது. ஏனென்றால் கெபியிலிருக்கிற ஜனங்களுக்கு மோசமும் தெரியும் பயமும் உண்டாகும். பாவிக்கோ மோசமும் தெரியாது, பயமும் தோன்றாது. இதோ! மோசமும் பயமும் நீங்க, பெரிய வெளிச்சம் பிரகாசிக்கிறது. நீதியின் சூரியனாகிய இயேசுவானவர் உதயமானார். உங்கள் இருதயங்களில் இந்த வெளிச்சம் பிரகாசிக்கிறதா? இன்னமும் பாவ இருளில் நடக்கிறீர்களா? பண்டிகையை ஆசரிக்க ஆசையாயிருக்கிறீர்கள். ஏன்? நீங்கள் குணப்பட இல்லையென்றால் பாவ இருளில் இன்னும் நடக்கிறீர்களானால் உங்களுக்குப் பண்டிகை ஏது? கிறிஸ்துவின் ஜெனனம் ஏது? நம்மைச் சூழ்ந்திருக்கிற புறமதஸ்தரைப்பற்றி உங்களுக்குக் கவலையில்லையா? அஞ்ஞான இருள் எத்தனை பயங்கரம், மோட்ச பாதை தெரியவில்லை. தேவ அன்பும் தெரியவில்லை. ரக்ஷிப்பின் இனிமையும் தெரியவில்லை. உங்களுக்கு இரக்கமில்லையோ? அஞ்ஞான இருளின் பயங்கரம் உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் நம்பிக்கையில்லாமல் கெட்டுப்போகையில் நாம் சும்மா இருந்து களிகூருவது தர்மமா?

2. பெரிய வெளிச்சம் 'அந்த ஜாதியைத் திர....பெருகப்பண்ணினீர் &c.' ஆம் கிறிஸ்துநாதருடைய பிறப்பினாலே இந்தப் பூலோகத்திலே அதிக சந்தோஷம் உண்டானது நிசம். நாமும் இந்தப் பண்டிகை கொண்டாடி களிகூரவேண்டியது நியாயம். ஆனாலும் எப்பேர்ப்பட்ட சந்தோ



ஷம் அது இங்கே விவரமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. அநேக குறிப்புகள் சொல்லப்பட்டு இருக்கிறது. விருத்தியின் சந்தோஷம் என்றும் அறுப்பின் சந்தோஷம் என்றும் ஜெயத்தின் சந்தோஷம் என்றும் வாசிக்கிறோம். கிறிஸ்தவர்களாயிருந்து மார்க்கத்தைவிட்டுப் பின்வாங்கினவர் அநேகரென்றும், மிச்சமானவர்கள் உலக சிந்தையுள்ளவர்களாய்ப் பிசாசின் தந்திரத்தில் அகப்பட்டிருக்கிறார்களென்றும் பார்க்கும்போது விருத்தியின் சந்தோஷம் எங்கே? துக்கித்துப் புலம்பவேண்டியதேயன்றி ஆனந்தம் கொண்டாட எதுவே இல்லை. ஆகிலும் இந்தச் சமயத்தில் அதை விட்டுவிட்டு ஒரு காரியத்தை மாத்திரம் கவனிப்போம். நம்முடைய சந்தோஷம் பரிசுத்த சந்தோஷமாய் இருக்கவேண்டும்.

'உமக்கு முன்பாக மகிழுகிறார்கள்'. ஆ! நீங்கள் உங்கள் வீடுகளை நன்றாய்ச் சுத்தம்பண்ணி அலங்காரம் செய்து கிடாய்களை அறுத்து விருந்தைச் சாப்பிட்டு இவ்விதமாக மகிழ நினைக்கிறீர்களா? இருக்கட்டும் தேவனுக்கு முன்பாக மகிழப்போகிறீர்களா?

இயேசு ரக்ஷகரை உங்கள் விருந்துக்கு அழைத்திருக்கிறீர்களா? இன்றைக்கு உங்கள் எண்ணம், பேச்சு, செய்கை எல்லாம் அவருக்குப் பிரியமாயிருக்குமா? ஓ சகோதரனே! என் இரட்சகர் உன் வீட்டில் வந்து உன்னையும் உன் சகல காரியங்களையும் பரிசுத்தமாக்கவேண்டும் என்று அவரை அழைத்திருக்கிறாயா? தேவனுக்குள் மகிழ்ச்சி கொண்டாடப் போகிறாயா? இல்லையென்றால் இந்தப் பண்டிகை உனக்கு ஆசீர்வாதமாயிராதே.

திருஷ். இங்கிலாந்தில் பூர்வீக காலத்தில் ஓர் இடையனிருந்தான். அவனுக்குப் படிப்பும் இல்லை. நாகரீகமும் இல்லை. மகா எளியவன். அவன் ஊரில் பண்டிகை நடந்தது. அவன் தோழர் சிநேகிதர் எல்லாரும் கூடி விருந்தாடிச் சந்தோஷப்பட்டார்கள். அப்படியிருந்த சமயத்தில் கூடின ஆட்கள் எல்லாரும் வீணையை வாசித்துக் கீதம் பாடும்படி உடன்பட்டார்கள். மற்றவர்கள் எல்லாரும் வெகு நேர்த்தியாய்ப் பாடினார்கள். இவனுக்கோ பாடத்தெரியாது. ஆகையால் வெட்கம் அடைந்து திடீரென்று எழுந்திருந்து விருந்துசாலையைவிட்டு ஓடிப்போனான். ஓடிப்போய் மாட்டுத்தொழுவத்தில் சென்று தரையில் முகங்குப்புற விழுந்து தன் அறியாமையை உணர்ந்து அழுதுகொண்டான். கொஞ்ச நேரத்தில் அவனுக்குத் தூக்கம் வந்தது. தூங்குகையில் ஒரு சொப்பனம் கண்டானும். அந்தச் சொப்பனத்தில் இயேசுநாதர் பக்கத்தில்வந்து துக்கத்தோடு நிற்கிறதாகவும் 'என் அப்பா எனக்காக நீ பாடமாட்டாயா'? என்று கேட்கிறதாகவும் கண்டான். அதற்கு, தான் 'சுவாமி எனக்குப் பாடச் சுத்தமாய்த் தெரியாது. அதினாலேதான் விருந்துசாலையைவிட்டு ஓடிவந்தேன்' என்றான். அதற்கு ரக்ஷகர் 'மனுஷனே! என் மகிமைக்கென்று பாடமாட்டாயா'? என்று திரும

பவும் கேட்டாராம். அப்போது அவன் பயம் அடைந்து 'ஆண்டவரே! நான் எதைப் பாட' என்று கேட்கும்போது 'உலக சிருஷ்டிப்பின்பேரில் பாட்டுப்பாடு' என்று உத்தரவு அருளி மறைந்துபோனார். நித்திரை தெளிந்தபோது அவனுக்குப் பாமவரம் கொடுக்கப்பட்டிருந்ததாம். அந்நாள் முதல் ஆண்டவருடைய மகிமைக்கென்று உலக சிருஷ்டிப்பைக்குறித்து மாத்திரமல்ல, கிறிஸ்துவின் பிறப்பு, போதனை, பாடுகள், உயிர்த்தெழுதல், பரமேறுதல் முதலான விசேஷங்களைக் கொண்டாட நேர்த்தியான காவியங்களை உண்டாக்கினானாம். சரித்திரக்காரன் அவனைப்பற்றித் தெரிவிக்கிற சங்கதி என்னவென்றால் அவன் வாயிலிருந்து ஒருபோதும் உலகப்பாட்டுகளும் விநோதமான கவிகளும் புறப்படவேயில்லை. அவன் பாடினது அவ்வளவும் பரிசுத்தமாயும் ரக்ஷகருடைய மகிமைக்கு ஏதுவாயுமிருந்ததாம்.

ஆ! உன் ஆண்டவர் இன்றைக்கு உன் பக்கத்தில் வந்து நின்று அப்படியே கேட்கிறார். 'பாவி உன்னை மீட்டுக்கொள்ள வந்தேன், என் மகிமைக்கென்று நீ பாடமாட்டாயா? உன் நெஞ்சு, வாய் சகலத்தையும் எனக்குக் கொடுக்கமாட்டாயா? உலக சந்தோஷங்களை வெறுத்து என் முன்பாகக் களிக்கமாட்டாயா?' என்று கேட்கிறார். இன்றைக்கு வேதம் வாசித்துச் சந்தோஷப்படுகிறவர்களார்? தனிஜெபத்தில் மகிழப்போகிறவர்களார்?

3. **பெரிய விடுதலை.** அவர்கள் சுமந்த ........ முறித்துப்போட்டீர்'. பிறப்பின் பண்டிகையின் முக்கியமான ஆசீர்வாதம் இதுவே. பிசாசின் வல்லமையை அழிக்கவும் பாவிகளை விடுதலையாக்கவும் கிறிஸ்துநாதர் பிறந்தார்.

திருஷ். அர்மீனியா தேசத்தில் அடிமைகள் விடுதலையாக்கப்பட்டபோது ஆயிரமாயிரமான ஜனங்கள் சுவாதீனம் அடைந்தார்கள். விடுதலையாகி சந்தோஷத்தின் மிகுதியாலே தரையில் விழுந்து பூமியை முத்தமிட்டார்கள். ஆளோட்டியின் வல்லமை இல்லாமற்போயிற்று இனி அவர்களை ஒடுக்க ஒருவராலுமுடியாது. அப்படிப்போல பெரிய ஆளோட்டியாகிய பிசாசின் கோலையும் நாம் சுமந்த நுகத்தடியையும் முறித்துப்போட ஆண்டவர் வந்தார். ஆனாலும் ஐயோ! சபையாருடைய காரியத்தைப் பார்க்கும்போது அவர்கள் தோளின்மேல் நுகத்தடி இன்னமுமிருக்கிறது. பிசாசானவன் இன்னும் தன் கோலைச் செலுத்திக் கிறிஸ்தவர்களை ஒடுக்கி ஆளுகிறான். தூஷணம் நுகத்தடி அல்லவா? சண்டை நுகத்தடி அல்லவா? பொருளாசை நுகத்தடி அல்லவா? ஐயோ! பிசாசின் அடிமைகள். சுவிசேஷம் இன்னதென்று சுத்தமாய்த் தெரியாது. கிறிஸ்து பிறந்த முகாந்தரம் கொஞ்சமாவது தெரியவில்லை. நமக்கு வேண்டிய ஆசீர்வாதம் இதுவே. விடுதலை! விடுதலை!! விடுதலை!!! எப்படி ஆகும்? 'மீதியானியரின் நாளில் நடந்ததுபோல'. அந்த நாளில் நடந்த காரியம் என்ன?



[a] எக்காளம் ஊதப்பட்டது.
[b] பானை உடைக்கப்பட்டது.
[c] தீவட்டி காட்டப்பட்டது. நியா. 7: 20, 21.
[d] கர்த்தருடைய பட்டயத்தை நம்பினது.

Rev. T. Walker

## அனலுள்ள கிறிஸ்தவ ஜீவியம்

### ஆவியிலே அனலாயிருங்கள். ரோமர் 12: 11.

ஒரு மனுஷனுடைய சரீரம் கொஞ்சமாவது அனலுள்ளதாயிராவிட்டால் அவ்வுடம்பு செத்துப்போனதென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. அப்படியே ஆவிக்குரிய விஷயத்திலேயும் நாம் அனலுள்ள கிறிஸ்தவர்களாயிராவிட்டால் நம்மில் உயிரில்லை யென்று அறிந்துகொள்ளவேண்டியது. அப்பேர்ப்பட்ட ஆத்துமா ஒன்றையுங்குறித்துக் கவலைப்படாத நிர்விசாரியாயிருக்கிறது. நிர்விசாரம் மகா நிர்ப்பந்தமான நிலமை. அப்பேர்ப்பட்டவர்களை நடைப்பிணங்களென்று அழைக்கலாம். அவ்வாத்துமாவுக்கு கிறிஸ்துவின் பேரிலாவது, வேதவசனங்களின் பேரிலாவது கர்த்தருடைய வீட்டின் பேரிலாவது, ஜெபத்தின் பேரிலாவது, போதகங்களின் பேரிலாவது தாகங்கிடையாது. தாகமுள்ளவன்போல பாவித்துச் செய்தாலும் அவ்வாராதனைகளும், பாடல்களும், ஜெபங்களும், உயிரற்றதாகவேயிருக்கும். ஏனென்றால் அங்கே அனலில்லை இவ்வித நிலமையில் இருக்கும்படி ஆண்டவர் நம்மை வைக்கவில்லை.

அனலுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்ய நம்மை நடத்துகிற சில காரியங்கள் உண்டு. அவைகளைப்பற்றிப் பார்ப்போம்.

1. **நம்மை முழுவதும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.** நான் ஒன்றுமில்லை வெறு மண் பாத்ரம் என்று அவர் பாதத்தில் விழும்போது அவர் நம்மை உயிர்ப்பித்து அனல் மூட்டுகிறார். அப்புறந்தான் நமக்கு அவர் பேரில் தாகமுண்டாகி சங்கீதக்காரனைப்போல 'மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது' (சங். 42: 1) என்று சொல்லக்கூடியவர்களாகிறோம்.

**அவருடைய வசனத்தின் பேரில் தாகம்.** அனலுள்ள கிறிஸ்தவனுக்கு அவருடைய வசனத்தின்பேரில் தாகமுண்டாகிறது. கர்த்தருடைய நியாயப்பிரமாணங்கள் ஒரு கண்ணாடியைப்போலிருக்கிறது. கண்ணாடிக்குமுன் வந்து நம்முடைய முகத்தைப் பார்க்கும்போதுதான் நம்முடைய முகத்திலுள்ள அழுக்குகளெல்லாம் தெரியவருகிறது. அப்புறம் அதைச் சுத்தம்

பண்ணப் பிரயாசப்படுகிறோம். கண்ணாடியண்டை வாராதிருக்குமட்டும் நம்முடைய முகத்திலுள்ள அழுக்கு நமக்குத் தெரியவராது. அதுபோலவே வேதவசனங்களைப் பாராமலும் கேளாமலுமிருக்கும்வரைக்கும் நம்முடைய பாவங்கள் நமக்குத் தெரியவராது. அதை கவனமாக வாசிக்க ஏவப்படும்போது நம்முடைய குற்றங்குறைகளெல்லாம் எடுத்துக் காட்டப்படுகிறது. நம்முடைய ஜீவியத்தை அக்கண்ணாடி காட்டுகிறது. அப்போதுதான் நம்முடைய நிர்ப்பந்த நிலைமையை உணர்ந்து 'நிர்ப்பந்தமான மனுஷன் நான் இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்கக்கூடும்' என்று அறிக்கையிட ஏவப்படுகிறோம். கர்த்தர் தமது வசனத்தின் மூலமாய் நம்மோடு பேசுகிறார். பரிசுத்தாவியானவர் பாவங்களைக் கண்டித்துணர்த்துகிறார். இந்த உணர்த்துதலுக்குக் கீழ்ப்படிகிறோமா?

2. **அவரில் நிலைத்திருக்கவேண்டும்.** 'என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்' (யோவா. 15: 4) என்று இயேசுரட்சகர் சொல்கிறார். இதன் மூலமாய்த்தான் கிறிஸ்துவுக்கும் நமக்கும் ஐக்யம் அதிகப்படுகிறது. அவரில் நிலைத்திருக்கும்போதுதான் அவருடைய சாயல் நமக்குண்டாகிறது. அடுப்புக்கரி கறுப்பு நிறமுள்ளதாயிருந்தாலும் நெருப்புக்குள்ளிருக்கும்போது அதின் சாயலையடைகிறதுபோல, நாமும் அவரோடு ஐக்யமாயிருக்கும்போது அவருடைய சாயல் நமக்குண்டாகிறது. நம்முடைய பழைய சுபாவங்கள் ஒழிந்து அவரைப்போலாகிவிடுகிறோம் மற்றவர்கள் இவன் கிறிஸ்துவைப்போலிருக்கிறான், அவருடைய இலக்ஷணங்கள் இவனில் அமைந்திருக்கின்றன என்பார்கள். இரகசியமென்ன? கிறிஸ்துவுடன் நெருங்கின ஜீவியமல்லவா! சாது சுந்தர் சிங் என்பவரையும் தற்காலத்தில் அவரைப் பார்க்கிறவர்கள் கிறிஸ்துவைப்போலிருக்கிறார் என்கிறார்களே. ஒரு ஐரோப்பிய மிஷனெரிதானும் அப்படிச் சொன்னார். நம்முடைய ஜீவியம் அப்படியிருக்கிறதா? அப்படிச் சொல்லப்படக் கூடியவர்களிருந்தால் எத்தனை ஆசீர்வாதம். இயேசுசுவாமி 'நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்' என்று சொன்னார்.

இவ்விதமாய்க் கிறிஸ்துவில் ஐக்யப்பட்டிருக்கும்போது, நம்மில் அனலும் வெளிச்சமுமுண்டாகிறது. மற்றவர்களுக்கு நாம் வெளிச்சங்கொடுக்கவேண்டும். கிறிஸ்து தம்மைப்பற்றி 'நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்' என்றார். யோவான் ஸ்நானகனைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது? 'அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்' என்று வாசிக்கிறோம் (யோவா 5: 35). மோசே மலையிலிருந்தபோது கர்த்தருடைய பிரசன்னத்தைப் பார்க்கக்கூடாதபடி தன் முகத்தை மூடிக்கொண்டான், ஆனால் அவன் ஜனங்களிடம் வந்தபோதோ ஜனங்கள் மோசேயின் முகத்தைப் பார்க்கக்கூடாதபடி அவ்வளவு பிரகாசமாயிருந்தது.



காரணமென்ன? கர்த்தரோடு தரித்திருந்ததினால் அல்லவா? நம்முடைய ஜீவியமும் இவ்விதப் பிரகாசம் பொருந்தியதாயிருக்கத்தக்கதாக நாம் கிறிஸ்துவோடு தரித்திருக்கிறோமா?

'என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான்' என்று நமது ரட்சகர் சொன்ன வசனங்களை நினைத்துப் பார்ப்போமானால், நாம் அவரோடிருக்கவேண்டுமென்பது எவ்வளவு அவசியம். அவருக்கே விரோதியாயிருப்போமானால் நமது சிநேகிதர் யார்? இன்னும் நாம் மற்றவர்களை அவரண்டை சேர்க்கவேண்டும். அப்படிச் சேர்க்காவிட்டால் கிறிஸ்துவைவிட்டு அவர்களைச் சிதறடிக்கிறோம். நமது ஜீவியத்தில் ஒன்று நாம் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கவேண்டும் அல்லது மற்றவர்களுக்கு இடறலாயிருக்கவேண்டும். இரண்டில் ஒன்று செய்யாமலிருக்க முடியாது. என் மட்டிலே நான் பக்தியாயிருக்கிறேன் அல்லது கெட்டவனாயிருக்கிறேன் என்று சொல்லமுடியாது. நாம் அனலும் வெளிச்சமுமுடையவர்களாயிருந்தால்தானே அவ்வித தன்மையை மற்றவர்கள் அடையக்கூடும் கிறிஸ்துவண்டை சேர்க்கிறவர்களாயிருப்போம். இத்தெய்வீக தன்மை நம்மில் உண்டாக ஜெபமும் வேதவசன தியானமும் நம்மில் இருக்கவேண்டியது எவ்வளவு அவசியம் இதுவே நமது ஆவியை உயிர்ப்பிப்பது. கர்த்தருடைய வசனத்தில் ஆண்டவர் நம்மோடு பேசுகிறார், ஜெபத்தில் நாம் அவரோடு பேசுகிறோம் ஆனால் இப்பேர்ப்பட்ட ஐக்யம் நம்மில் குறைவுபட்டவுடனே நம்மில் குளிர்ச்சி காணப்படுகிறது. இதைப்பற்றி நாம் கேட்கிற பயங்கரமான வசனமென்ன? 'நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால், உன்னை என் வாயிலிருந்து வாந்திபண்ணிப்போடுவேன்' (வெளி. 3. 16). அரோசிக்கப்படத்தக்கவர்கள் ஆவோம். இப்பேர்ப்பட்ட ஜீவியமுடைய கிறிஸ்தவர்களுமுண்டு. அவர்களுடைய நிலைமை இன்னும் எப்பேர்ப்பட்டதென்று ஆண்டவர் பிந்தின வசனத்தில் சொல்லுகிறார் (வெளி. 3: 17). இப்பேர்ப்பட்ட குளிர்ச்சிக்குக் காரணம் அவருடைய ஐக்யத்தை விட்டு விலகுவதே. பிசாசானவன் நம்முடைய ஆவியை அவித்துப்போட அநேக முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறான் என்பதையும் நாம் மறந்துபோகக்கூடாது.

பரதேசியின் மோக்ஷபிரயாணத்தில் கிறிஸ்தியான் எரிந்துகொண்டிருந்த ஒரு பெரிய நெருப்பண்டை போய்ப்பார்த்தான் அங்கே ஒரு மனுஷன் அந்த நெருப்பின்பேரில் தண்ணீர் வார்த்துக்கொண்டேயிருந்தான். அப்படியிருந்தும் அது நன்றாயெரிந்துகொண்டேயிருந்ததைப் பார்த்து ஆச்சரியமுற்று கிறிஸ்தியான் தன்னை நடத்திக்கொண்டுவந்த மனுஷனைப் பார்த்து தண்ணீர் ஊற்றிக்கொண்டேயிருந்தாலும் ஏன் இந்நெருப்பு அவிந்துபோகவில்லையென்று கேட்டான். அப்போது அம்மனிதன் கிறிஸ்தி

யானை நெருப்பின் அந்தப்பக்கமாய்க் கூட்டிக்கொண்டு போய்க் காட்டினான். அங்கே ஒருவர் அந்நெருப்பின்பேரில் எண்ணெய் வார்த்துக்கொண்டிருந்ததைப் பார்த்தான். இந்நெருப்பு அணையாமலிருப்பதற்கு இதுதான் காரணமென்று கிறிஸ்தியானுக்குச் சொல்லப்பட்டது. இதுபோலவே பிசாசானவனும் நம்முடைய ஆவியை அவித்துப்போட வேண்டிய பிரயத்தனங்கள் செய்துகொண்டிருக்கும்போது, தேற்றரவாளனாகிய பரிசுத்தாவியானவர் தமது பரிசுத்த எண்ணெயால் நம்மை அனல் மூட்டுகிறார்.

3 **சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும்.** மேல் கண்ட திருஷ்டாந்தத்திலிருந்து நம்முடைய ஜீவியம் போராட்ட ஜீவியமென்று அறிந்துகொள்கிறோம். பிசாசு, மாம்சம், உலகம் ஆகிய இம்மூச் சத்துருக்களோடு நாம் போராடி ஜெயம் பெறவேண்டும். இந்த யுத்தத்துக்குவேண்டிய போராயுதங்கள் வேதாகமத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமக்கு ஓய்வு இங்கேயில்லை நாம் ஓய்ந்திருக்கவேண்டிய இடம் வேறே. 'சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரைகளில் கட்டினவர்களாயும், நீதி யென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்துக்குறிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்தரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்' எபே. 6: 14-17. நமது சேனாதிபதியாகிய இயேசு ரட்சகரும் சாத்தானை ஜெயிக்க ஆவியின் பட்டயமாகிய தேவ வசனத்தைப் பிரயோகித்தார். இப்பட்டயத்தை நாமும் உபயோகிக்காவிட்டால் நம்மை அவன் ஜெயித்துப்போடுவான். அப்பட்டயத்தை நாம் தகுந்த விதமாயும் உபயோகிக்க அறிந்திருக்கவேண்டும் அப்பட்டயத்தைக் கொண்டு நம்மையே திருப்பினாலும் திருப்புவான்.

ஒருவர் சொல்லுகிறபடி 'உன்னிலுள்ள கிளைகளையே கோடரிப் பிடியாக வைத்து சாத்தான் உன்னை வெட்டிப்போடாதபடி எச்சரிக்கையாயிரு' கோலியாத்தின் வாளை யுருவியல்லவா தாவீது அவன் தலையை வெட்டினான். இதைப்போல நாமும் சாத்தானால் ஜெயிக்கப்படாதபடி நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும். கடைசியாகப் பரிசுத்த பவுல் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைச் சொல்லி முடிக்கிறேன். நல்லபோராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன், எனக்காக நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது.

விண் கிரீடம் பெறப்போருக்கு
கிறிஸ்தேசு செல்கின்றார்;
அவரின் வெற்றிக்கொடிக்கு
கீழாகப்போவோன் யார்?

---



# நீதிமொழிகள்

இப்புஸ்தகத்தின் பெயர் இதன் ஆரம்ப வசனங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் வருகிற நீதிமொழிகள் அல்லது பழமொழிகள் 10-ம் அதிகாரத்திற்கப்புறம் வருகின்றன. ஆதித திருச்சபையார் இதை சகலவித குணசீலமடங்கிய புஸ்தகம் என்று அழைத்தார்கள். இதை ஞானத்தின் புஸ்தகம் (The book of wisdom) என்று அழைக்கலாம்.

**ஆக்கியோன்.** நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டுகள் ஆகிய மூன்று புஸ்தகங்களும் சாலமோனால் எழுதப்பட்டதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. சாலொமோன் தன் வாலிபப் பிராயத்தில் உன்னதப்பாட்டையும், முதிர்ந்த காலத்தில் நீதிமொழிகளையும், தன் வயோதிப காலத்தில பிரசங்கிகளின் புஸ்தகத்தையும் எழுதினதாக யூத சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். சாலொமோன் வசனித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிற மூவாயிரம் நீதிமொழிகளில் சிறந்த நீதிமொழிகள் இப்புஸ்தகத்திலடங்கியிருக்கின்றன. இருபத்தைந்தாம் முப்பதாம் அதிகாரங்களுக்கிடையில் வருகிற நீதிமொழிகள் எசேக்கியாவின் மனிதரால் தெரிந்தெடுக்கப்பட்டவைகளாகத் தோன்றுகிறது. முப்பதாம் அதிகாரத்தில் ஆகூரின் ஞானமுள்ள கடிந்துகொள்ளுதல் சொல்லப்பட்டிருக்கிறது. முப்பத்தோராம் அதிகாரத்தில் லேமுவேலின் தாய தன் மகனுக்குச் சொன்ன புத்திமதிகள் அடங்கியிருக்கின்றன.

**எழுதப்பட்ட நோக்கம்.** தேவன்பேரில் அதிகமான பயபக்தியும் அவருடைய நியாயத்தீர்ப்புகளுக்குப் பயப்படும் பயமும் ஞானம் நற்குணம் முதலியவற்றின்பேரில் அதிக நாட்டமும் உண்டுபண்ணுவதே இப்புஸ்தகத்தின் நோக்கம்.

**திறவுகோல் வசனம்.** கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்'. 9: 10.

**பிரிவுகள்.** இப்புஸ்தகத்தின் பொருளடக்கத்தை முக்கியமான 3 பிரிவுகளாக வகுக்கலாம்.

**1. ஞானத்தைப்பற்றிய கவனிப்புகள். அதி. 1—9.**

1-ம் அதிகாரத்தின் முதல் ஏழு வசனங்களும் இப்புஸ்தகத்திற்கு முகவுரை. இப்புஸ்தகத்தின் நோக்கமும் கருத்தும் அடங்கியிருக்கிறது. 7-ம் வசனத்தில் முகவுரையின் மொத்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

1: 8—9-ம் அதி. இருவகையான வழிகளும் இருவகையான சத்தங்களும்.

இந்த அதிகாரங்கள் முழுவதிலும் 'என் மகனே' என்னும் பதம் அடிக்கடி திருப்பிச் சொல்லப்படுவதைக் கவனிக்கும்போது இப்பாகம் பழமொழி

களை எடுத்துரைக்கும் வசனங்களல்ல மிகவும் அருமையான புத்திமதிகளைப் போதிக்கும் வசனங்கள் என்று நன்கு விளங்குகிறது. சிறுவருக்கும் வாலிபருக்கும் மாத்திரமல்ல யாவருக்கும் மிகவும் பிரயோஜனமான புத்திமதிகளடங்கிய பொன் மணிமாலை என்று சொல்லலாம் விசேஷமாய். வாலிபப் பிராயத்தின் மோசங்களையும், அவைகளுக்கு விலகி ஜீவிக்கும் வழியையும் ரகசியத்தையும் நன்கு விளக்குகிறது மேலும் இவ்வசனங்களில் சாலோமோன் தன் அனுபவ திருஷ்டாந்தமாய், தான் சிக்குண்ட பாவங்கள் சிற்றின்பங்களை உணர்ந்து, அவைகளின் மோசத்தை அறிந்தவராய் அனுபவ சாட்சி பகருகிறார் ஆகவே இவைகள் யாவரும் கைக்கொண்டொழுகவேண்டிய சிறந்த புத்திமதிகள் என்பதற்கையமில்லை.

8-ம் அதிகாரம் ஞானம் ஆள் ரூபகாரப்படுத்திக் காட்டப்படுவது கிறிஸ்துவையே குறிக்கிறது. யோவான் 1: 1-3ஐயும், கொலோ. 1: 17ஐயும் நீதிமொழிகள் 8: 22-36 ஓடு ஒப்பிட்டுப்பார்க்கவும்.

**2. நீதிமொழிகள்.** அதி. 10-29

(a) சாலொமோனால் உரைக்கப்பட்டவை. 10—22: 16. நீதிமொழிகள் 10-ம் அதிகாரத்தில்தான் ஆரம்பிக்கின்றன. அமைப்பில் அவைகள் யாவும் ஒன்றுபோலிருக்கின்றன. ஒவ்வொரு வசனமும் தனித்தனியே பொருள்பட நிற்கிறது. ஞானமும் மதிகேடும் அவைகளில் பலாபலன்களும் மிகத்தெளிவாய் ஒப்பிடப்படுகின்றன. இவ்வசனங்களில் மிச்சமான பாகம் நாடோடிய அனுபவ ஜீவியத்தை அடுத்தவை. ஞானவானின் லக்ஷணம் கவனிக்கவும். 11: 30.

(b) ஞானிகளின் வார்த்தைகள். 22: 17—24-ம் அதி. முடிய.

22: 17—21 முகவுரை. இதில் 3 வகையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. (a) ஏவி எழுப்புதல், (b) பற்பலவிதமான சன்மார்க்க விதிகள், (c) முக்கியமான எச்சரிப்புகள். இந்தப் பாகத்தில் மதுபானத்திற்கு விரோதமாய் தேவவசனம் கூறும் சாட்சி அடங்கியிருக்கிறது. 23: 29-35.

(c) சாலொமோனுடைய நீதிமொழிகள் அதி. 25-29. இதிலடங்கிய சாலொமோனின் நீதி மொழிகள் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் மனுஷர் ஒழுங்குப்படுத்திப் பெயர்த்தெழுதினார்கள். இதில் அநேக விதமான சன்மார்க்கப் போதனைகளும், மார்க்க விதிகளும் அடங்கியிருக்கின்றன.

**3. வாக்கியங்கள்.** அதி. 30-31. இவைகள் இப்புஸ்தகத்தின் அனுபந்தங்கள் என்று சொல்லலாம்.

(1) ஆகூரின் உபதேச வாக்கியங்கள். அதி. 30. இந்த அதிகாரம் ஈத்தியேலுக்கும், ஊகாலுக்கும் வசனிக்கப்பட்டவை. இவர்கள் யார் என்பது அறியப்படவில்லை. 4, 19, 24-28, 30, 31 முதலிய வசனங்கள் யோபின் புஸ்தகத்திலுள்ள வாசகங்களுக்கு ஒத்தவை.



(2) ராஜாவாகிய லேமுவேலுக்கு அவன் தாய் உபதேசித்த வசனங்கள். 31: 1-9. இவைகள் முக்கியமான கட்டுக்கொள்ளுதல்கள்.

(3) குணசாலியான ஸ்திரீகளைப்பற்றிய வாக்கியங்கள். 31:10-31. N.P இந்த வாக்கியங்கள் எபிரேய பாஷையின் எழுத்துக்களின்படி ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன.

இப்புஸ்தகத்தின் 31 அதிகாரங்களையும் நாளொன்றுக்கு ஒவ்வொரு அதிகாரமாக அதிகாலையில் வாசிப்பது உசிதம்.

## திருஷ்டாந்தங்கள்

அமெரிக்காவிலுள்ள துரை ஒருவர் லண்டன் பட்டணத்தில் வசித்து வந்தார். ஓர்நாள் அவருடைய சகோதரன் தன் வீட்டிற்கு வருவதாகக் கடிதம் வந்தது. வரும் நாள் திட்டமாய் எழுதவில்லை. ஓர்நாள் லண்டன் பட்டணத்திலுள்ள சகோதரன் பட்டணத்துக் கடைகள் வழியாய் விரைந்து செல்லுகையில் தன் சகோதரனை கடையொன்றில் நிற்கிறதைத் தான் கண்டதாக நினைத்தார். தான் பார்த்தபோது தன் சகோதரன் பார்வைக்கு அழகானவர் என்றாலும் முன்போலப் பெருமைக்காரனாகக் காணப்பட்டதாக நினைத்தார். அப்படி நினைத்துக்கொண்டு தான் அவரைப் பார்த்த கடைக்குப் போனபோது அங்கிருந்த நிலைக்கண்ணாடியில் தான் விரைந்து செல்லுகையில் தன் நிழலையே கண்டதாக அறிந்தார். இப்படித்தான் நமது ஜீவியத்திலும் நடக்கிறது. நமது சொந்தத் தப்பிதங்கள், குறைகள், பெலவீனங்களை நாம் உணராமல் இவைகள் மற்றவர்களிடத்தில்தான் அதிகமாய்க் காணப்படுகிறதாக நாம் எண்ணி அவர்களைக் குற்றப்படுத்துகிறோம்.

யோப்பாவிலிருந்து புறப்பட்ட கப்பல் ஒன்றில் பிரயாணம்பண்ணின பிரயாணி ஒருவர் தன் அறையிலுள்ள படுக்கையின் அடியில் கப்பலில் ஓர் துவாரம் உண்டாக்கினார். காவற்காரன் இவர் செய்கிறதைக் கண்டு 'என்ன செய்கிறாய்?' என்று கோபத்தோடு கேட்டான். பிரயாணி அவனைப் பார்த்து, 'உனக்கென்ன? நான் என் படுக்கையின் கீழ்த்தானே துவாரம் உண்டாக்குகிறேன்' என்றார். இது எவ்வளவு மதியீனம்! இப்படியே நாம் பேசும் வார்த்தைகள், நமது செய்கைகள், நமக்கிருக்கும் சலாக்கியங்கள் எல்லாம் நம்முடையவைகள். நமது இஷ்டப்படி செய்ய நமக்குச் சுயாதீனம் உண்டு என்று எண்ணுகிறோம். இது பயங்கரமான காரியம்! இதினாலுண்டாகும் பலன் என்னவென்றால், தேவன் நமக்குத் தந்திருக்கும் இந்த இலவசமான ஈவுகளை நாம் அற்பமாய் எண்ணி அவமதித்தால், நாம் அவைகளை இழந்துபோவது மாத்திரமல்ல, இழந்தபின் திரும்பப் பெற்றுக்கொள்வதும் கூடாத காரியம்.

## நோட்டீஸ்

1913-ம் வருஷம் ஆகஸ்ற் மாதம் முதல் பத்திரிகைக்கு மானேஜராக என்னை நியமித்தார்கள். பத்திரிகையை நான் ஒப்புக்கொள்ளும்போது அச்சுக்கூடத்துக்குச் செல்லவேண்டிய கடன் பாக்கி ரூ. 277—11—0. இதோடு முந்தின மானேஜரவர்களுக்கும் செல்லவேண்டிய பாக்கி இருந்தது. 1914-ம் வருஷம் முடிவுக்குள்ளாக சில சகோதரருடைய உதாரத்துவத்தினாலும் சந்தா ஒழுங்காய்ச் செலுத்துகிறவர்களுக்கு மட்டும் பத்திரிகை அனுப்பிச் செலவைக் குறைத்ததாலும், அநேக வருஷங்களாய்ச் செலுத்தப்படாதிருந்த சில பாக்கிகளைப் பிரித்ததினாலும் அச்சுக்கூடத்துப் பழைய கடன் ஒழுங்காகிவிட்டது. பழைய மானேஜரவர்களுக்குச் செல்லவேண்டியதிலும் ரூ. 125 கொடுத்தாயிற்று. யுத்தம் ஆரம்பித்துச் சில காலத்துக்குள்ளாகக் காகிதக் கிரயம் ஜாஸ்திப்பட்டதினால் பத்திரிகை நடத்த முடியுமோவென்ற சந்தேகம் உண்டாயிற்று. ஆகிலும் 16 பக்கமாக அடித்துவந்ததைப் பன்னிரண்டு பக்கமாகக் குறைத்து இதுவரை நடத்திவருகிறோம். அப்படியிருந்தும் 1918-ம் வருஷத்துக் கணக்கைப் பார்த்தபோது பத்திரிகையொன்று 5¼ பைசா விலை வருகிறது. ஆனால் தற்காலத்தில் 4 பைசாவாக கொடுக்கிறோம். ஏறக்குறைய 4 வருஷங்களாக இப்படிக் குறைந்த விலைக்குக் கொடுத்ததால் பத்திரிகைக்கு மறுபடியும் கடன் ஏற்பட்டிருக்கிறது. சந்தாக் கொடுக்கிறவர்களுக்கே பத்திரிகை அனுப்புகிறோம். சந்தாக்களும் ஒழுங்காய்ச் செலுத்தப்பட்டு வருகின்றன. தற்சமயம் உள்ள கடன் பூராவும் அச்சுக்கூடத்துக்குக் கொடுக்கவேண்டியதே. மாதந்தோறும் 1200 முதல் 1500 பத்திரிகைவரை வெளியே போகிறது. பத்திரிகையொன்றில் மாசம் 1¼ பைசா நஷ்டமாகும்போது 1200 பத்திரிகைகள்மேல் உத்தேசம் ரூ. 8 மாதந்தோறும் நஷ்டமாகிறது. வருஷத்துக்கு உத்தேசம் ரூ. 96. காகித விலை அதிகப்பட்ட 4 வருஷங்களிலும் உத்தேசம் ரூ. 384 நஷ்டமாகிறது. தற்சமயம் அச்சுக்கூடத்துக்குச் செல்லாகவேண்டியது ரூ. 310. நாளது தேதியில் என் கைவசம் இருப்பு ரூ. 18. ஏறக்குறைய ரூ. **300** நாளது வருஷம் டிசம்பர் முடியும்போது பத்திரிகையின் கடனாகிறது. சந்தாதாரரான நண்பர்கள் இதைச் சற்றுக் கவனிக்கும்படியாகக் கேட்கிறேன். கடந்த நாலு வருஷங்களிலும் மாசம் 1¼ பைசாக் கூட்டிக்கொடுக்கிறதானால் ஒரு பத்திரிகைக்கு வருஷம் 1¼ அணாவாகும். நாலு வருஷத்துக்கு 5 அணாவாகும். பத்திரிகை வாங்குகிற நண்பர் ஒவ்வொருவரும் பத்திரிகை ஒன்றுக்குக் கடந்த 4 வருஷங்களுக்கும் 5 அணா கொடுத்துவிடுவார்களானால் கடன் நிவிர்த்தியாகும். அடுத்த வருஷமுதல் பத்திரிகையின் கிரயத்தை 6 அணாவாக்கினால் மட்டும் நடத்த முடியும்போல் தோன்றுகிறது. இதைக் குறித்த திட்டமான நோட்டீஸ் ஜனுவரி சஞ்சிகையில் தெரிவிப்போம். கிறிஸ்தவ சகோதரரான சந்தாதாரரான நண்பர்கள் இப்பத்திரிகையின் பிரயோஜனத்தை யறிந்து டி கடன் நிவிர்த்தியாவதற்காக உதாரத்துவமாய் உதவிபுரியக் கேட்கிறோம்.

R. V. ASIRVADAM,
Manager, Water of Life.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

13

January 1920 Registered No. M· 136

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

16 FEB 1920 MADRAS.

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI ஜனுவரிமீ 1920

## கெட்ட குமாரன்—1. அவன் செய்த பெரிய பாவம்

லூக். 15: 12, 13.

கெட்ட குமாரனுடைய உவமை எல்லாருக்கும் தெரியும். அதைக் கேட்கும்போது நம்முடைய இருதயம் உருகி இளகிப்போகத்தக்க உவமை. தகப்பனுடைய அன்பு எவ்வளவு? மகனுடைய நன்றிகேடு எவ்வளவு? தகப்பனுடைய இரக்கச்சிந்தை என்ன? மகனுடைய இருதயக் கடினம் என்ன? தகப்பன் மனதுக்குண்டான வேதனை எத்தனை பெரிது? மகன் பட்ட பாடு எவ்வளவு ஏராளம்? ஆனாலும் கதைச் சரித்திரம் அநேகருக்குத் தெரிந்தபோதிலும் அதில் அடங்கின சுவிசேஷ போதனையும் சிறந்த உபதேசங்களும் பலருக்குத் தெரியாது. ஒவ்வொரு வார்த்தையிலும் ரட்சண்ய உபதேசம் அடங்கியிருக்கிறது என்று சொல்லலாம். ஆகையால் பழைய சங்கதி என்று நினைக்கவேண்டாம். தெரிந்த விஷயம் என்று அசட்டை செய்யவேண்டாம்.

**கெட்ட குமாரன் செய்த பெரிய பாவம்.** ஆ! அவன் செய்த பாவங்கள் ஏராளம். தலைரோமத்திலும் அதிகம். கடல்மணலிலும் மிகுதி. அப்படிப்போல நாம் செய்த பாவங்களுக்குக் கணக்கில்லை. 'எண்ணிக்கைக்கு அடங்காத தீமைகள் என்னைச் சூழ்ந்துகொண்டது, என் அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்து பிடித்தது. நான் நிமிர்ந்து பார்க்கக்கூடாதிருக்கிறது. அவைகள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறது. என் இருதயம் சோர்ந்துபோகிறது (சங். 40: 12).

1. **பெருமைகொண்டவன்.** இளைய மகன்! ஆனாலும் பெருமைக்காரன். சின்ன வாலிபன் என்றாலும் அகந்தையில் முதிர்ந்தவன். வயசு கொஞ்சம், கர்வமோ அதிகம். 'இளையவன் தகப்பனை நோக்கி தகப்பனே

**ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான்.’** ஆ! தகப்பனுடைய வீட்டிலே அவனுக்கு என்ன குறைவு? பால் சாப்பிட்டு வளர்ந்த பிள்ளை. பொன் ஒரு தட்டில் பூ ஒரு தட்டில் வளர்க்கப்பட்ட அருமை குமாரன் சம்பிரமமாய்ச் சாப்பிட்டான். சுகமாய் வாழ்ந்தான். வேலைக்காரர் எத்தனை! நல்ல ஒழுங்குகள் எத்தனை! சுகவாழ்வு எவ்வளவு, பவுசு எவ்வளவு? ஆனாலும் தகப்பனுக்குக் கீழ் அடங்க இவனுக்குப் பிரியமில்லை. சுயசித்தமாய் நடக்கவேண்டுமாம். சுயேச்சையாய் ஜீவிக்க வேண்டுமாம் சுயாதீனமாய் வாழவேண்டுமாம். மனம்போன போக்கிலே போகவேண்டுமாம். வீட்டிலே இருக்குமட்டும் தகப்பனுக்குக் கீழ்ப் படியவேண்டும். மூத்த சகோதரன் சொற்படியும் நடக்கவேண்டும். பிரியமில்லை. பாகம் பிரிக்கக் கட்டாயமாய்க் கேட்டான். என் பங்கை எனக்குத் தரவேண்டும் என்று தொந்தரித்தான். ஏன்? பெருமை. **‘எனக்கு எனக்கு’** என்று கேட்டான். தகப்பனைக் குறித்துக் கவையில்லை; குடும்ப வாழ்வைப்பற்றி யோசனையில்லை. ‘தான் வாழவேண்டும், தனக்குக் கிடைக்கவேண்டும். தான் இஷ்டம்போல நடக்கவேண்டும் என்று மாத்திரம் விரும்பினான்.

2. **தனக்கென்று ஜீவித்தான். ‘எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான்.’** அப்படியே கொடுக்கப்பட்டது. ‘சில நாளைக்குப் பின்பு இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டான்.’ தனக்கென்று பெற்றுக்கொண்டான். தனக்கென்று சேர்த்துக்கொண்டான். எல்லாம் சுயகனம், சுயமகிமை, சுயவாழ்வு, தற்பொழிவு. வீட்டிலே இருக்கும்போது தகப்பனுடைய சித்தம் எதுவோ அதையே செய்ய வேண்டும். இப்பொழுதோ தனக்கென்று மாத்திரம் பிழைக்கிறது. தனக்குத் தானே எஜமான். சுய ஆளுகை! சுய சித்தம்! நிலங்களைச் சேர்த்துக்கொண்டான். தனக்கென்று மரங்களைச் சேர்த்துக்கொண்டான். தனக்கென்று பணங்களைச் சேர்த்துக்கொண்டான். தனக்கென்று வஸ்திரங்களைச் சேர்த்துக்கொண்டான். தனக்கென்று தகப்பன் கொடுத்த சகலத்தையும் சேர்த்துக்கொண்டான். தனக்கென்று சொந்த சுகத்தைப் பார்க்கிறது. சுயமகிமையை நாடுகிறது. சுய இஷ்டத்தின்படி நடக்கிறது. ஆ! இந்தப் பாவம் உங்களுக்கும் இல்லையா? யாருடைய மகிமைக்கென்று ஜீவிக்கிறீர்கள். யாருடைய சித்தத்தின்படி நடக்கிறீர்கள். பணச்சம்பாத்தியம் தனக்கென்று, வீடு வாசல்" தனக்கென்று, எல்லாம் தனக்கென்று. பாவத்தில் பெரிய பாவமிது. விபசாரம், களவு, குடிவெறி, பொய் ஆணை இவைகளில் ஒன்றும் செய்யவில்லை என்று வைத்துக்கொள்வோம். மோட்சம் கிடைக்குமா? இல்லை. தேவனுக்கென்று ஜீவிக்காமல் உங்களுக்கென்று ஜீவித்தது கொடிய பாவம். பாபிலோன் ராஜாவின் சரித்திரம் தெரியாதா? (தானி. 5: 23). **‘தம்முடைய கையில் உமது சுவா**



**சத்தை வைத்திருக்கிறவரும் உமது வழிகளுக்கு அதிகாரியுமாகிய தேவனை நீர் மகிமைப்படுத்தாமலிருந்தீர்’.** கிறிஸ்துநாதர் சொல்வது ‘பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்’ (யோ. 17: 4). ஐயோ! பாவி நீ சொல்லவேண்டியது ‘பூமியிலே நான் உம்மை அவமானப்படுத்தினேன்’. உன் நடக்கையைச் சோதித்துப்பார். தேவனுக்கென்று செய்யாத எந்தச் செய்கையும் பாவமே. ‘விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே (ரோமர் 14: 23).

3. **தூரமாய் விலகிப்போனான்.** தூர தேசத்துக்குப் புறப்பட்டுப் போனான். தகப்பனண்டை இருக்க மனமில்லை. அவரோடே பேச இஷ்டமில்லை. அவரால் கண்டிக்கப்பட பிரியமில்லை. ஆகையால் வெகு தூரத்தில் போய்விட்டான். தகப்பனுக்கும் தனக்கும் இனி யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதுபோல வெகு தொலை தூரத்தில் நீங்கிப்போய்விட்டான். தூரதேசத்துக்குப் போய்விட்டால் தகப்பன் தன் காரியத்தை அறியமாட்டார். தன் கெட்ட நடத்தையைப் பார்க்கமாட்டார் என்று நினைத்து ஓடிப்போய்விட்டான்.

ஆ! பாவி நீ பரமபிதாவுக்கு தூரமாய் விலகிப்போய்விட்டாய். சபையான் என்றாலும் தேவனைவிட்டு தூரமானவன். ‘இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது’ (மத். 15: 8). தேவன் கேட்கிறார் ‘என்னைவிட்டு தூரப்பட்டு மாயையைப் பின்பற்றி வீணராய்ப் போகிறதற்கு என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டார்கள்’. [மாற். 2: 6]. உனக்கும் தேவனுக்கும் வெகுதூரம்! நீ அவரை நினைக்கிறதுமிலலை, நேசிக்கிறதுமில்லை. பரமபிதாவோ உன்னை மறக்கவில்லை. உன்னைச் சமீபமாக்கும்படி வகைசெய்திருக்கிறார்.

4. **துன்மார்க்கமாய் நடந்தான்** ‘அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணினான்’. மூலபாஷையின் வார்த்தைக்கு வேறே அர்த்தம் சொல்லலாம். அதின் முதல் கருத்து என்னவென்றால் தன்னை ரக்ஷித்துக் காப்பாற்றாமல் இஷ்டம்போல் நடந்தான். ரக்ஷிப்பை நினையாமல் நிர்விசாரியாய் உலகப்பிரியனாய், டம்பமாய் ஜீவித்துவந்தான். அதோடுகூட நம்முடைய தமிழ் திருப்புதலில் காட்டியபடி அவன் சிற்றின்பங்களில் சிக்கிக்கொண்டு துன்மார்க்க ஜீவியமும் செய்திருக்கலாம். நிச்சயமாய்த் தெரியாது. ஒரு காரியம் மாத்திரம் தெரியும். அவன் தன் நித்திய வாழ்வைக் கொஞ்சமாகிலும் விரும்பாமல் மனம்போனபோக்கிலே நடந்துவந்தான். மாம்சத்தின்படி ஜீவித்தான். உலக இன்பமே இன்பம் என்றிருந்தான். ‘நான் விபசாரக்காரனல்ல ஆகையால் நான் கெட்ட குமாரனைப்போல கெட்டவனல்ல’ என்று நினைக்கவேண்டாம். ரக்ஷிக்கப்படாமல் இருந்தால் ஐயோ!

5. **தன் ஆஸ்தியை எல்லாம் அழித்துப்போட்டான்.** தகப்பனுர் எத்தனை பிரயாசத்தோடு சேர்த்து, எத்தனை கிருபையாய்த் தந்த ஆஸ்தி! சொல்லவேண்டுமானுல் தந்தையினுடைய ஆஸ்தி போய்விட்டது. ஒன்றுமில்லாத நீசனுய்ப் போய்விட்டான். ஆ! பரமபிதா உனக்குத் தந்த ஆஸ்தி எங்கே? சுகத்லைதக் கெடுத்துப்போடுகிருய்-தேகத்தைக் கெடுத்துப்போட்டாய்-ஆத்துமாவையும் கெடுத்துப்போட்டாய், தன்னையும் நஷ்டப்படுத்தினுன். கடைசியில் ஒன்றுமில்லை. பாவத்தினுலே வருகிறதெல்லாம் கேடுதி.

ஆ! விசேஷமாய் அந்த அருமை ஆத்துமாவைக் கெடுத்துப்போடுவதே பெரிய பாவம்.

## புது வருஷ செய்தி

'ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்' (பரி. லூக்கா 13: 8).
'Lord let it alone this year also'

நமதருமை ரக்ஷகர் அநேக சத்தியங்களையும், தேவனுடைய பெரிதான இரக்கங்களையும் பலவிதமான உவமைகளாலே நமக்கு விளக்கிக் காண்பித்திருக்கிறுர். ஒருவன் தன் திராக்ஷத்தோட்டத்தில் அத்திமரத்தை நடுவதின் நோக்கம் என்னவென்றுல்: அதிலுண்டாகும் கனிகளை தான் அநுபவிப்பதற்காகவே. அதினுல் அவனுக்குப் பிரயோஜனமில்லையென்று கண்டால், கனிகொடாத அத்திமரத்தை வெட்டிப்போட்டு, அந்த நிலத்திலே வேறு மரங்களை நாட்டுவது அதிக நிச்சயமல்லவா? அப்படியே, மூன்று வருஷம் கனி கொடாத ஒரு அத்திமரத்தை திராக்ஷத்தோட்டத்தின் எஜமான் வெட்டிப்போட நினைத்தபொழுது; தோட்டக்காரன் எஜமானை நோக்கி: 'ஐயா இது இந்த வருஷமும் இருக்கட்டும், நான் இதைச் சுற்றிலும் எருப்போடுவேன். கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்றுன்' (பரி. லூக்கா 13: 8-9). இவ்விதமாக, அந்த அத்திமரத்திற்கு இன்னெரு வருஷத் தவணை இரக்கமாக கொடுக்கப்பட்டது என்று நாமறிவோம். இந்த உவமையைக்கொண்டு, தேவன் நமக்குப் பாராட்டிவரும் பெரிதான இரக்கங்களை சற்று சிந்திப்போமாக.

சென்ற வருஷத்தில் நம்மோடிருந்த அநேகர் மறுமைக்குள்ச் சென்றுர்கள். பெற்றேரை இழந்தவர்கள் எத்தனை பேர்! சகோதரர் சகோதரிகளை இழந்தவர்கள் எத்தனை பேர்! மக்களை, இனத்தாரை, சிநேகிதரை இழந்தவர்கள் எத்தனை பேர்! தற்கால கொடிய பஞ்சத்தில் பசி, பட்டினியினுலும் உயிர் இழந்தவர்கள் எத்தனை பேர்! தற்கால விஷ ஜுரத்தால் மரித்தவர்கள் எத்தனை பேர்! இப்பேர்ப்பட்ட பயங்கரமான காலத்தில், தேவன் நம்மை எவ்வளவு அன்போடும் இரக்கத்தோடும் இரக்ஷித்துக் காப்பாற்றி இந்தப் புது



வருஷத்தைக்காணச் செய்திருக்கிறுர் என்பதை நாம் சற்று தியானிப்போமானுல், நாம் எவ்வளவாய் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி அவருக்கு நன்றியுள்ளவர்களாயிருப்போம்! நாம் நீதிமான்களாயிருந்ததினுலுமல்ல; தானதர்மங்களைச் செய்ததினுலுமல்ல; கோவிலுக்கு ஒழுங்காய்ப் போனதினுலுமல்ல; சங்கப் பணங்களை ஒழுகாய்ச் செலுத்தினதினுலுமல்ல; தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாக நடந்து வந்ததினுலுமல்ல; ஆனல், தேவன் தமது இரக்கத்தின் ஐசுவரியத்தின்படியே நமக்குத் தவணை கொடுத்திருக்கிறுர். போன வருஷத்தில், கடைசித் தவணை கொடுக்கப்பட்டவர்கள் இவ்வுலகத்தை விட்டு பிரிந்துபோனுர்கள். நம்மில் அநேகருக்கு இந்த வருஷம் கடைசித் தவணையாயிருக்கலாம். ஆகையால், 'மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்காதிருங்கள். தேவன் இந்தக் கல்லுகளினுலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறுர். இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேரருகே வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (பரி. லூக்கா 3: 8-9). தேவன் இந்தப் புது வருஷத்தில் ஒவ்வொருவரிடத்திலும் வருகிறுர் கனிகளைத் தேடுகிறுர். கனியற்ற மரங்களாயிருப்போமானுல், ஐயோ! எத்தனை எத்தனை மரங்களை வெட்டும்படி தீர்ப்புக்கொடுத்திருக்கிறுரோ? நாமறியோம் எத்தனை பேரிடத்தில் கனிகளைக் காணுது விசனப்பட்டுக்கொண்டிருக்கிறுரோ? நாமறியோம். இந்நாள் பரியந்தம் நமக்கொன்றும் நேரிடாதிருப்பதினுலே, தேவன் நம்மைக் கண் சாடையாய் விட்டுவைத்திருக்கிறுர் என்று எண்ணுவதற்கு இடமில்லை. ஏனென்றுல், நம் ஒவ்வொருவருக்காகவும் பரிந்துபேசுகிற திராக்ஷத்தோட்டக்காரராகிய இயேசு பெருமான், தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறுர். 'பிதாவே இவர்கள்மேல் இரக்கமாயிரும் நான் உலகத்திலிருந்த காலத்தின் கஷ்டங்களையும், துன்பங்களையும் மறவாதிரும். நான் சிந்திய இரத்தத்தைக் கண்ணேக்கிப் பாரும். என் பிரயாசத்தின் பலனுக இவர்கள் கனி கொடாமலிருப்பதையிட்டு இரக்கமாயிரும். இவர்களில் கனியுண்டாகும்படியாக நான் இன்னும் பிரயாசப்படுகிறேன். ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும். கனி கொடுத்தால் சரி; கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம்' என்று நமக்காக பரிந்து பேசுகிறவராயிருக்கிறுர். நமதருமை ரக்ஷகர் மூலமாகவே, தேவன் நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து, தமது இரக்கத்தை விளங்கப்பண்ணுகிறுர். ஆகையால், இப்புது வருஷத்தில் நம்மை நாமே சோதித்தறியக்கடவோம். நம்மில் கனியுண்டானுல் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்தான். இல்லையானுல், ஐயோ! நமக்கு இரக்கமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற கிருபையின் தவணையைச் சற்று உணருவோமாக.

இன்னும் அந்த அத்திமரத்தைப்பற்றி கவனிப்போம்: (1) அது தன்னை தோட்டத்தில் வைத்துக் காப்பாற்றிவருகிற தோட்டத்து எஜமானுக்கு மனவருத்தத்தையும், விசனத்தையும் கொடுத்தது. (2) அம்மரம் எவ்வித பிரயோஜனமுமற்றிருந்தது. (3) நிலத்தையுங்கெடுத்தது. (4) ஆகையால், வெட்டுண்டு அக்கினியில் போடப்படவேண்டிய தவசியம். இவ்விதமாக, (1) நம்மைச் சிருஷ்டித்து, காப்பாற்றி நமது கையின் கிரியைகளை ஆசீர்வதித்து, தமது ராஜ்ஜியத்தின் பிள்ளைகளாக நம்மை ஏற்றுக்கொண்ட தேவனுக்கு நாம் துக்கத்தையும், மனநோவையும் உண்டாக்குவோமானால் நமக்கு ஐயோ! அவர் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே. (2) நாம் நமது சிருஷ்டி கர்த்தாவுடைய சித்தத்தை நிறைவேற்றாதிருப்போமானால் நாம் எவ்விதத்திலும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கமாட்டோம். ஒருவேளை நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கவேண்டுமென்று ஆசித்தாலும், கனியற்றிருப்பதால் அவர்களுடைய குறைவில் உதவிசெய்ய நாம் சக்தியற்றவர்களாயிருக்கிறோம். (3) அது மாத்திரமல்ல நாம் உலகத்தைக் கெடுக்கிறவர்களாயுமிருக்கிறோம். 'என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான். என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான்' என்பதற்கிணங்க, நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிராவிட்டால் அவர்களுக்குச் சாபமாயிருப்போமல்லவா? (4) இவ்விதமாய், நம்மை நாமே கெடுத்து, மற்றவர்களும் கெட நாம் ஏதுவாயிருப்போமானால், சிருஷ்டி கர்த்தாவானவர் நம்மை, தமது ராஜ்ஜியத்தைவிட்டு அப்புறப்படுத்தி அவியாத அக்கினியில் சுட்டெரிப்பார்.

இப்பொழுது நாம் சிந்தித்த கனியற்ற அத்திமரத்தையன்னியில், கனிகள் நிறைந்த அநேக அத்திமரங்களும் இருந்திருக்கலாம். அவைகள் [1] தங்களுடைய எஜமானுக்கு சந்தோஷத்தையும் மனமகிழ்ச்சியையும் கொடுத்தன. [2] மற்றவர்களுடைய குறைவில் திருப்திசெய்தன. [3] தங்களின் எஜமானுடைய தோட்டத்தில் எந்நாளும் இருக்க அநுமதியும் பெற்றன. இம்மரங்கள், தங்களுடைய எஜமானுக்கு உகந்த கனிகளைத் தந்து, அவருக்கு சந்தோஷத்தையும் மனமகிழ்ச்சியையும் கொடுத்ததுபோல நம்மைச் சிருஷ்டித்து, காப்பாற்றி, இப்புது வருஷத்தைக் காணச்செய்த தேவனுக்கு நாம் கொடுக்கும் கனிகளினால் சந்தோஷத்தையும், மனமகிழ்ச்சியையும் அளிக்கிறோமா? சென்ற வருஷத்தில் பசியாயிருந்த எத்தனை ஆத்துமாக்களுக்கு ஞானபோஜனம் அளித்தோம்? எத்தனை ஆத்துமாக்களை கிறிஸ்துநாதருடைய பாதத்தில் சேர்த்தோம். எத்தனை பேரை தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு நேராக வழிநடத்தினோம்? எத்தனை ஆத்துமாக்களுக்கு நாம் முன் மாதிரியாயிருந்தோம்? திரும்பவும் சொல்லுகிறேன் சகோதரரே, நமக்குக் கிருபையாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தத் தவணையின் காலத்தை ஆதாயப்படுத்திக்கொள்வோமாக. இல்லையானால், ராஜ்ஜியத்திற்குப் புறம்பேயிருந்து, ஐயோ!



' ஆத்மா ஒன்றும் ரக்ஷிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா!
வெறுங்கையனாக, உம்மைக்
கண்டுகொள்ளல் ஆகுமா?'

என்று புலம்பவேண்டியவர்களாயிருப்போம்.

S. R. D.

---

## 'மனத்தாழ்மையில் கிறிஸ்துவைப்போல்'

மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்.........தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.............பிலி. 2: 3—8.

மேற்கண்ட ஆச்சரியமான வசனங்களில், ஆசீர்வதிக்கப்பட்ட தேவகுமாரனைச் சுற்றிலும் தொங்கிக்கொண்டிருக்கிற எல்லா அருமையான சத்தியங்களும் அடங்கியிருக்கின்றன.

முதலாவது அவருடைய மகத்தத்துவம் பொருந்திய தெய்வீகம், 'தேவனுடைய ரூபம்', 'தேவனுக்குச் சமம்', அப்புறம் அவருடைய திரு அவதாரத்தின் மாட்சிமை வருகிறது; 'தம்மைத் தாமே வெறுமையாக்கி! இவ்வசனங்களில் ஆழ்ந்ததும் வற்றாததுமான கருத்து அடங்கியிருக்கிறது.

அப்புறம் அவருடைய தாழ்மை, கீழ்ப்படிதல், பாடுகள், மரணம் ஆகிய இவைகளினாலடைந்த பிராய்ச்சித்தத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 'மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்! 'தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார்'. அவர் மகிமையாய் உயர்த்தப்பட்டதினால் எல்லாம் அவருக்கு முடி சூட்டப்பட்டது. கிறிஸ்து தேவனாகவும், தாழ்மையின் மனிதனாகவும், நம்து ரக்ஷிப்பை நிறைவேற்றி மகிமையில் எல்லாவற்றிற்கும் ஆண்டவராயிருக்கிறார் என்ற சத்தியங்களே, இப்பாகத்திலடங்கிய ஞானதிரவியங்கள்.

இந்த பாகத்திலுள்ள சில வசனங்களின் பேரில் அநேக புஸ்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன; என்றாலும் பரிசுத்தாவியானவர் ஈய்கிற இந்த ஒப்பற்ற போதனையில் போதுமான கவனம் எப்பொழுதும் செலுத்தப்படவில்லை. இவ்வசனங்கள் எழுதப்பட்டது குற்றங்களைக் கண்டிப்பதற்கென்றல்ல. இதின் நோக்கம் வேறு; அதாவது பிலிப்பியருக்குள்ளே இன்னும்

பெருமையும், அன்புத்தாழ்ச்சியுமிருந்தது; அவர்கள் மத்தியில் கிறிஸ்துவின் முன் மாதிரியை தெளிவாகக் காட்டவும், அவர் தம்மைத் தாழ்த்தினது போல அச்சபையாரும் தங்களைத் தாழ்த்தும்படி போதிக்கவுமே இவ்வனசங்கள் எழுதப்பட்டன: 'மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்', 'கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக்கடவது', என்ற தேவவசனங்களை யார் யார் கிறிஸ்துவைப்போல நான் தாழ்மையாக வேண்டுமென்ற ஆசையோடு வாசிக்கவில்லையோ அவர்கள் தேவனுடைய சித்தத்தின்படி இவ்வசனங்களை தியானிக்கவில்லை. கிறிஸ்து தேவாசனத்திலிருந்து இறங்கி, மனுஷனாக சிலுவைமட்டும் தம்மைத் தாழ்த்தினதினால் மறுபடியும் அம்மேன்மையான சிம்மாசனத்தையடைந்தது,' நாமும் அவ்விதமடைய வழியாயிருக்கிறது. அவருடைய மீட்பை நாம் ஏற்றுக்கொள்வதோடு, அவருடைய முன் மாதிரியையும் நமக்கு மாதிரியாக்கிக்கொள்வதே, அவரிடம் நாம் வைக்கும் உண்மையான நம்பிக்கைக்கடையாளம். அவரை உண்மையாய்ச் சார்ந்திருக்கிற ஒவ்வொரு ஆத்துமாவும், அவருடைய ஆவியிலும், அவருடைய பரிசுத்த லக்ஷணங்களிலும், அவருடைய திவ்யசாயலிலும் ஐக்யப்பட்டிருக்கவேண்டும்.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக்கடவது, அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தம்மைத் தாமே வெறுமையாக்கி மனுஷர் சாயலானார்! கிறிஸ்து செய்ததுபோல நாமும் நம்மை வெறுமையாக்கித் தாழ்த்தவேண்டும். அவர் தமது தெய்வீக மகத்துவத்தையும் வல்லமையையும் உரிந்து தம்மைத் தாமே வெறுமையாக்கின சுயவெறுப்பின் முதல் செய்கை யென்னவென்றால், மனிதனாக சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினதே.

பரி. பவுல் அப்போஸ்தலனும், வேதமும், தேவனும் இந்த திவ்ய லக்ஷணத்தை நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார்களா? ஏன் கூடாது? நம்முடைய சுபாவத்தில் பழைய ஆதாமும், பெருமையின் பயங்காமும் காணப்படுகிறது. கிறிஸ்து நம்மை பாவத்தின் சாபத்திலிருந்து மாத்திரமல்ல பாவத்தின் வல்லமையிலிருந்தும் மீட்டிருக்கிறார். அவர் பூமியில் எவ்வளவு பரிசுத்தமாக ஜீவிக்க நமக்கு அவருடைய உயிர்த்தெழுதலின் ஜீவனையும் வல்லமையையும் கொடுத்திருக்கிறார். அவர் நம்முடைய பிணையாளி மாத்திரமல்ல நமக்கு மாதிரியாகவுமிருக்கிறார். ஆகையால் அவர் மூலமாய் மாத்திரமல்ல அவரைப் போலவும் ஜீவிக்கவேண்டும். இன்னும் அவர் நமக்கு மாதிரியாய் மாத்திரமல்ல நமக்குத் தலையாயிருந்து, இவ்வுலகத்தில் அவர் எவ்வித ஜீவியம் செய்து வசித்து வந்தாரோ அவ்விதமாகவே நமக்குள்ளும் வாசஞ்செய்து வருகிறார். இவ்விதமான கிறிஸ்துவும் இவ்விதமான மீட்புந் தவிர வேறு விதம் நமக்குண்டா? கிறிஸ்துவின் சீஷன் அவரிடமிருந்த சிந்தையையு



டையவனாயிருக்கவேண்டும். விசேஷித்த விதமாக அவரைப்போல மனத்தாழ்மையுடையவனாயிருக்கவேண்டும்.

நாம் பாவஞ் செய்கிறதினாலே தாழ்மையுடையவர்களாயிருக்கவேண்டும் என்று கிறிஸ்துவின் முன் மாதிரி நமக்குப் போதிக்கிறதில்லை. அநேக கிறிஸ்தவர்கள் இவ்விதமான எண்ணமுடையவர்வளாயிருக்கிறார்கள். தினசரி விழுதலினால் தாழ்மையை அடையலாம் என்று நினைக்கிறார்கள். காரியம் அப்படியல்ல அது தாழ்மையாகாது. அதிக இன்பமும் அருமையுமான ஒரு தாழ்மையுண்டு.

அது நம்முடைய குற்றங்குறைகளை அறிக்கையிடும் தாழ்மையை விட மேலானது. அத்தாழ்மை கிறிஸ்துவின் தாழ்மையைப்போல மேலானது. அவருடைய கிருபை நாம் பாவஞ்செய்யாதபடி நம்மைக் காக்கும்போது, நான் ஒன்றுமில்லையென்று நம்மை முழுவதும் அவருக்கு ஒப்புக்கொடுக்கிறோம். நம்மைத் தாழ்மையுள்ளவர்களாக்க பாவமல்ல கிருபையே நமக்கு வேண்டியது. அதிக பாரமான கிளைகள் அதிக தாழ்வாக வளைந்து கிடக்கும். பெருவெள்ளமான நீரோட்டம் ஆற்றுப்படுக்கைகளை ஆழமாக்கும். ஒரு ஆத்துமா தேவனிடத்தில் எவ்வளவுக்குச் சமீபமாய்ச் சேருகிறதோ அவ்வளவுக்கதிகமாய் அவருடைய மகிமையின் பிரசன்னத்தை தன்னுடைய அற்ப நிலைமையில் உணருகிறது. இவ்விதமாய் அவரண்டை வருவதே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணச் செய்கிறது. தேவனுடைய பரிசுத்தராகிய இயேசு கிறிஸ்துவின் தாழ்மையே நமக்கு முன் மாதிரி. இவர் தேவனிடத்திலிருந்து வந்தவரும் அவரிடம் திரும்பப்போகிறவருமானவர்! இவருடைய கரங்களில் தேவன் எல்லாவற்றையுங் கொடுத்திருக்கிறார். இவ்வளவு மேலானவர் சீஷர்களுடைய கால்களைக் கழுவினார். தெய்வப் பிரசன்னமும், பரிசுத்த ஜீவியமும், நம்மிலுள்ள தெய்வீக அன்புமே நம்மைத் தாழ்மையுள்ளவர்களாக்குகிறது.

நான் உன்னைவிட மற்றவர்களை மேன்மையானவர்களாக எண்ணுவேன் என்று சொல்வது கூடாதகாரியம் என்பதாக அநேக கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள். பெருமையை மேற்கொள்ள அவர்கள் கிருபையைத் தேடினபோதிலும், கிறிஸ்து தம்மையே வெறுமையாக்கினதுபோல, தங்களையும் முழுதும் வெறுமையாக்குவது அவர்களுக்குக் கஷ்டமும் மகா உன்னதமுமாயிருக்கிறது. 'தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்', 'தன் ஜீவனை இழக்கிறவன் அதைக் கண்டடைவான்', என்கிற வசனங்களின் ஆழ்ந்த சத்தியத்தையும், அவைகளிலுண்டாகும் ஆசீர்வாதத்தையும் உணருவார்களானால், தங்கள் ஆண்டவருக்குத் தங்களை முழுவதும் ஒப்புவிப்பதைவிட வேறொன்றிலும் திருப்தியடையமாட்டார்கள். நான் என்னும் அகந்தையை மேற்கொள்ள அங்கே வழியைக் காண்பார்கள். அவ்வழியென்ன

வென்றால், நாமும் பரிசுத்தாவியின் கிருபையினால் அவரோடு கூட சிலுவையில் அறையப்பட்டு அவ்விடத்திலேயே எப்போதும் வைக்கப்படவேண்டும் என்பதே. (கலா. 5. 24; ரோமர் 8. 13). அப்படித் தன்னைச் சிலுவையில் அறைந்தவனே தாழ்மையில் வளரக்கூடும்; அவன் கிறிஸ்துவின் மரண ஐக்யத்தில் ஜீவிக்க தன்னை முழுமனதோடு ஒப்புக்கொடுக்கிறான்.

இதையுடைய இரண்டு காரியங்கள் அவசியம். ஒன்று தான் ஒன்றுமில்லை யென்று எண்ணி தேவனுக்காகவும் பிறனுக்காகவும் ஜீவிக்க நிர்ணயம் செய்தல். இன்னொன்று என்னவென்றால் நாம் பாவத்துக்கு மரித்து அதின் வல்லமையிலிருந்து விடுதலையாக்கப்படுவதுபோல, கிறிஸ்துவின் மரணத்தின் வல்லமையை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுகிற விசுவாசம். பாவம் நம்மைவிட பெலனுள்ளதாயிருக்கும்போது, கிறிஸ்துவின் மரணத்தின் ஐக்யம் நம்மை ஜீவனுக்குக் கொண்டுவருகிறது.

பரிசுத்தாவியின் வல்லமையான நடத்துதலினாலும் அவருடைய உபதேசத்தினாலுமே யொருவன் இச்சத்தியத்தையறிந்து பற்றிக்கொள்ளக் கூடும். தேவனுக்கு ஸ்தோத்திரம். நமக்குப் பரிசுத்தாவியாகிய தேவன் இருக்கிறார். அவருடைய நடத்துதலுக்கு நம்மை முழுதும் ஒப்புவிக்கலாம். அவர் நம்மை நடத்துவார், அது அவருடைய வேலை; நம்மில் கிறிஸ்துவை மகிமைப்படுத்துவார். நாம் பாவத்துக்கும் பழைய மனுஷனுக்கும் மரித்தோமென்று, கிறிஸ்துவின் ஜீவியமும் அவருடைய மனத்தாழ்மையும் நமக்குச் சொந்தமென்று அறியும்படி அவர் நமக்குப் போதிப்பார்.

இவ்விதமாய் கிறிஸ்துவின் தாழ்மை விசுவாசத்தின் மூலமாய் நமக்குச் சொந்தமாக்கப்படுகிறது. இத்தாழ்மை உடனே நமக்கு வரலாம்; ஆனால் உரிமையாக்கிக்கொள்வது படிப்படியாய் அநுபோகத்தின்மேல் வரவேண்டும். நமது எண்ணங்களும், உணர்வுகளும் பழக்கவழக்கங்களும்; சம்பாஷணைகளும், பழைய மனுஷனாகிய நான் என்பவன் அதிகாரத்துக்குள் அதிக காலமாக இருந்துவந்தன; அவைகள் கிறிஸ்துவின் தாழ்மையாகிய பரம ஒளியினால் பிரகாசிக்கப்பெற்று மறு ரூபமாக கொஞ்சக் காலம் செல்லும். முதலாவது மனச்சாக்ஷியின் கண்கள் சரியாய்த் தெளிவாக்கப்படவில்லை. ஆவிக்குரிய வாஞ்சையுமுண்டாகவில்லை. ஆனால் நான் கிறிஸ்துவைப் போல தாழ்மையாயிருக்க என்னை யொப்புவிக்கிறேன் என்று தன்னைப் பிரதிஷ்டை பண்ணும்போது, நம்மை முழுதும் பரிசுத்தாவியினால் நிரப்பிச் சுத்திகரிக்க அவரிடமிருந்து வல்லமை புறப்படும், அப்போது கிறிஸ்தவன் மெய்யாய்த் தாழ்மையினால் தரிப்பிக்கப்படுவான்.

கிறிஸ்துவைப்போலொத்த தாழ்மையுள்ளவர்களுக்குரிய ஆசீர்வாதம் சொல்லுக்கடங்காதது. தேவனுடைய பார்வையில் அது விலையேறப் பெற்றது. தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கிறார்.



தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் செய்வதெல்லாம் நீதியும் நன்மையுமாயிருக்கும். தாழ்மையானது அவர் செய்த சிறிய நன்மைக்குங்கூட ஸ்தோத்திரஞ் செலுத்தும்.

தங்களைக் குறித்து அதிகத் தாழ்வாக நினைத்துக்கொண்ட இருவருடைய பெரிய விசுவாசத்தைக் குறித்து இயேசு ரக்ஷகர் புகழ்ந்துபேசுகிறார். நூற்றுக்கதிபதி சொன்னதாவது: 'நீர் என் வீட்டுக்கு வர நான் பாத்திரனல்ல'. சீரோபேனிக்கா ஸ்திரீ தான் நாய்க்குச் சமமாய் எண்ணப்படுவதில் திருப்தியாயிருந்தாள். தாழ்மையான மனுஷன் குற்றவாளியாகிறதில்லை. தன் அயலானுக்கு ஊழியஞ்செய்ய எப்போதும் ஆயத்தமாயிருப்பான்; ஏனென்றால் ஊழியக்காரனாயிருக்கும் தெய்வ லக்ஷணத்தை அவன் இயேசு ரக்ஷகரிடமிருந்து கற்றுக்கொண்டான். தேவனிடத்திலிருந்தும் மனிதனிடத்திலிருந்தும் அவன் தயவைப் பெற்றுக்கொள்கிறான்.

தன்னைத்தான் தாழ்த்துவதைவிட மேலானது ஒன்றுமில்லையென்று ரூபிக்க தேவனால் உலகத்துக்கு அனுப்பப்படுகிற கிறிஸ்துவின் அடியார்களுக்கு இது எவ்வளவு மகிமையான அழைப்பாயிருக்கிறது! தாழ்மையானவன் தேவனை மகிமைப்படுத்துகிறான்; அவரை மகிமைப்படுத்தும்படி மற்றவர்களை நடத்துகிறான்; கடைசியாக அவனும் அவரோடு மகிமைப்படுத்தப்படுவான். கிறிஸ்துவைப்போல் தாழ்மையாயிருக்க யார் விரும்பமாட்டார்கள்?

## மறு பிறப்பு

இது ஓர் மனுஷனுடைய பெயர், இவன் பிறப்பில் மகமதியன். அப்புறம் புத்தமதக்குருவாகி 36 வயதுவரை துன்மார்க்கமாய் ஜீவித்து, தன் போஷிப்புக்காகப் பிச்சையெடுத்துவந்தான். இப்படியிருக்கும் காலத்தில் ஓர் நாள் சீன தேசத்து ராஜதானியாகிய பிக்கிங் பட்டணத்திலுள்ள ஓர் மிஷன் ஆஸ்பத்திரியில் பெரிய நோயாளியாகப் போய்ச்சேர்ந்தான். ஆஸ்பத்திரியில் வரவர அவன் சரீரத்துக்குச் சுகம் கிடைத்ததோடு அவன் ஆத்துமாவுக்கும் ரட்சிப்புக் கிடைத்தது. அவ்விடத்தில் அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்தை ஆவலோடு கேட்டு தன் பாவ நிலைமையை உணர்ந்து தேவசமாதானத்தைப் பெற்றுக்கொண்டான். பாக்ஸர் கலகம நடந்துகொண்டிருக்கும் காலத்தில் ஆஸ்பத்திரியே அவனுக்கு அடைக்கலமாயிருந்தது. வியாதி குணமானவுடன் அவன் நடக்க ஏலாதபடியால் கோல் ஊன்றிக்கொண்டு தெருத்தெருவாய்ப் பிச்சையெடுத்துத் திரிந்தான். அவனுக்கு வீடு வாசல் கிடையாது. சொத்துச்சுகம் இல்லை. சூரியனின் கடும் வெயிலில் அலைந்து பாக்ஸர் கைகளிலும் துன்பமடைந்தான். என்றாலும் சுவிசேஷ சத்தியத்தைக் கேட்க ஆசையுள்ளவனும், முகத்தில் பிரகாசமுடையவனும் நல்ல ஞாபக சக்தியுள்ளவனுமாயிருந்தான். நாளடைவில் கிருபையிலும் தேவ

வசனத்திலும் வளர்ந்து பெருகித் தானே வாசிக்கவும் கற்றுக்கொண்டான். அவன் ஆகாரம் சொற்பம், அவன் வீடு பாயினால் வேயப்பட்ட ஓர் குடிசை. அவன் அதிக அனலோடு சுவிசேஷப் பிரசங்கம் செய்வான். நூற்றுக்கணக்கான பேர் அவர் வார்த்தைகளைக்கேட்கக் கூடுவார்கள். அவனுடைய பிரசங்கத்தைக் கேட்கும்படி 30 மைலுக்கு அப்பாலுள்ளவர்களும் அவனுக்கு வண்டியனுப்பி அழைத்துக்கொண்டுபோவார்கள். அவன் புத்துமதக்குருவாயிருக்கும்போது மற்றவர்கள் இரங்கித் தனக்குப் பணம் கொடுக்கும்படி தன் முகத்தைக் காயப்படுத்தி முகம் முழுவதும் தழும்புகளாயிருந்தும் தேவ அன்பினால் அவன் முகம் பிரகாசமடைந்திருந்தது. அவன் கடன்படுகிறதேயில்லை. தனக்கு எது கிடைக்குமோ அதற்குள் செலவு செய்துகொள்வான். அதிலும் பத்திலொன்றைக் கர்த்தருக்கென்று கொடுத்துவிடுவான். அவன் 44-ம் வயதில் மரித்தான். மரிக்கும்போது, புறமதஸ்தர் அவனுடைய மரணத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு 'இவ்விதமாய் மரிக்கிறதை நாங்கள் எங்கும் பார்த்ததில்லை' யென்றும், 'அவனைப்போல நானும் மரிக்கவேண்டும்' என்றும் பலர் சொன்னார்கள். அவன் ஒருநாள் தெருவில் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும்போது 'சீனன் ஒருவன் அவனைப்பார்த்து' நீ அந்நியருடைய மார்க்கத்தைச் சேர்ந்ததால் உனக்கு என்ன கிடைக்கிறது? என்று கேட்டான். மறு பிறப்பு மாறுத்தரமாக, 'சமாதானம், இரண்டு பேருக்கு வேண்டிய சமாதானம், உங்களில் இரண்டு பேருக்கிருக்கும் சமாதானத்தைப் பார்க்கிலும் அதிக சமாதானம் எனக்குக் கிடைத்திருக்கிறது' என்றான். அவன் மறுபடியும் அவனைப்பார்த்து 'உனக்கு என்ன சம்பளம் கிடைக்கிறது', என்று கேட்டான். அவன் மாறுத்தரமாக 'எனக்கு வெள்ளியும் நிலமும் கிடையாது. குடியிருக்க வீடுமில்லை, மனைவியில்லை, பிள்ளையில்லை. ஆனால் என் இருதயம் பூரண சமாதானத்தினால் நிறைந்திருக்கிறது' என்றான்.

## நோட்டீஸ்

**கொழும்பு நகரின் கண்டவர் ஹாலில்**
சாது சுந்தர் சிங் அவர்கள் செய்த
**ஆறு உபந்நியாசங்களையும்,**

புத்தக ரூபமாய் தமிழில் அச்சிட்டு, இலங்கையில் புஸ்தகம் ஒன்று 20 சதமாகவும், இந்தியாவில் 3 அணாவாகவும், தபாற் கூலி இனாமாகவும் விற்பனைக்கிருக்கின்றன. ஒரே தடவையில் 12 புஸ்தகங்களுக்குக் குறைய வேண்டுவோர் தங்கள் கடிதங்களுடன் முன் பணம் அனுப்பிவைக்க வேண்டியது. இப்புஸ்தகம் அடியிற்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

REV. R. V. ASIRVADAM, Palamcottah &
S. R. DOSS, 92 Wilson St., Colombo.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

183

19 APR 1920

February and March 1920 Registered No. M 136.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI பெப்ருவரி, மார்ச்சும் 1920

## 'பாவிகளின் நேசர்'

'ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்' (பரி. மத். 11: 19) கிறிஸ்துநாதருக்கு இந்த உலகத்திலே அநேக விரோதிகள் இருந்தார்கள். கிறிஸ்துவானவர் நமது சரீரத்தோடு இந்த உலகத்தில் வசிக்காத தற்காலத்திலுங்கூட அவருக்கு அநேக விரோதிகள் இருக்கிறதாக நாம் அறியலாம். அப்படியானால், அவர் இந்த உலகத்தில் ஜீவித்த காலத்தில் அவருக்கு விரோதிகள் இருந்தார்கள் என்பது ஒரு ஆச்சரியமல்லவே! அவர்கள் அநேகர் கிறிஸ்துவானவரைப்பற்றி இழிவாகப் பேசுவதிலும் அவரைப் பேச்சில் அகப்படுத்தவேண்டுமென்கிற எண்ணத்துடன் பல கேள்விகளைக் கேட்பதிலும் தங்கள் காலத்தைக் கழித்துவந்தார்கள். வேறு சிலர் அவரை ஒன்றுக்கும் உதவாதவராக ஆக்கவேண்டுமென்றும், அவருடைய பெயரைக் கெடுக்கவேண்டுமென்றும், இவ்வித துர்க்கிரியைகளினால் ஜனங்களை அவரிடம் சேரக்கூடாதபடி செய்யவேண்டுமென்றும் எண்ணி அவருக்கு ஒரு காரணப்பெயர் சூட்டினார்கள். அதாவது: 'ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்' என்றார்கள். ஆயக்காரரும் பாவிகளும் யூதர்களால் வெகு நீழ்ப்பாக எண்ணப்பட்டார்கள் அவர்களைத் தொடமாட்டார்கள்; கூடஇருந்து சாப்பிடமாட்டார்கள்; கொடுக்கல் வாங்கல் கிடையாது. இவர்கள் கீழான ஜாதியாக எண்ணப்பட்டுவந்தார்கள். அப்பேர்ப்பட்ட ஜனங்களுக்குச் சிநேகிதன் என்று சொல்லிவிட்டால் ஜனங்கள் அவரிடத்தில் நெருங்கவும் அவருடைய வார்த்தைகளைக் கேட்கவும் மாட்டார்கள் என்று நினைத்தார்கள். ஆனால் அவர்கள் எண்ணியிருந்த எண்ணத்திற்கு மாறாக அவர் பாவிகளுக்குச் சிநேகிதன் என்றழைக்கப்பட்டபொழுது அவருடைய நாமம் துலங்கினது. இந்த நாமமே அநேகர் அவரண்டை சேருவதற்குக் காரணமாயிருந்தது. தன்

களுக்கு வேறு கதியில்லையென்று தங்கள் ஜீவியத்தைக் கசப்பாகப் பாவித்த அநேகருக்கு இந்த நாமம் ஞானமிர்தம் போலிருந்தது. நித்திய சந்தோஷத்திற்கு ஆளானார்கள். தற்காலத்தில் எங்கும் சுற்றி கிறிஸ்துவானவரின் நற்செய்தியைக் கூறி அறிவிக்கும் சாது சுந்தர்சிங் என்பவரையும் இந்நாமமே கிறிஸ்துநாதரின் பாதத்தில் கொண்டுவந்து சேர்த்ததென்று அவருடைய ஜீவிய சரித்திரத்தின் மூலமாக அறியலாம். ஜீவியத்தை வெறுத்து மனங்கசந்து, சமாதானமற்று, சந்தோஷமற்று தான் வேறு விமோசனமடையக்கூடாதென்று நினைத்த சாது சுந்தர்சிங் என்பவர் 'பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்தேசு உலகத்தில் வந்தார்' 'நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புதலுக்கு அழைக்கவந்தேன்' என்கிற திருவாக்கியங்களை வாசித்தபொழுது மனச்சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்று கிறிஸ்துவானவரை தனது சொந்த நேசராக ஏற்றுக்கொண்டு இந்த நற்செய்தியை பலவிடங்களிலும் அறிவித்து ஏராளமான ஜனங்களை கிறிஸ்துவானவரின் மந்தையில் சேர்த்து வருகிறார் என்பதை நாமறிவோம்.

நமதருமை இரட்சகரைச் சற்றுக் கவனிப்போம். தம்து பெயரைக் கெடுத்துவிட்டார்களேயென்றும் தம்மை ஒன்றுக்கும் உதவாதவராக ஆக்கிவிட்டார்களேயென்றும் நமது இரட்சகர் விசனப்பட்டவரல்ல. ஆனால் தாம் பாவிகளுக்காகவே விண்ணுலகம் விட்டு மண்ணுலகம் வந்த இவ்வதிசயத்தை தமது பிறப்பிலிருந்து சிலுவை பரியந்தமும் இந்நாள் வரைக்கும் விளங்கப்பண்ணுகிறார். இப்பொழுது நமதருமை இரட்சகரை பாவிகளின் நேசராகச் சற்று சிந்திப்போம்,

**[1] தமது பிறப்பினால் பாவிகளின் நேசராக விளங்குகிறார்.** கிறிஸ்துவானவர் ஒருவேளை ஒரு இராஜாவின் அரண்மனையில் பிறந்திருப்பாரேயானால் எப்பக்கமும் காவலாளர் சூழ்ந்துநிற்க கனவான்களும், தனவான்களும், சீமான்களும், சீமாட்டிகளுமே உட்சென்று கிறிஸ்து தரிசனம் செய்திருப்பார்கள். சாதாரண குடி ஜனங்களும் ஏழைகளும் கூலியாட்களும் பாவிகள் என்றழைக்கப்பட்ட கீழோரும் அவரைப் பார்க்கக்கூடாத நிலைமையிலிருந்திருப்பார்கள். ஆனால் நமது அருள்நாதர் இராஜாக்களின் சிநேகிதராகவல்ல, பாவிகளின் நேசர் என்பதற்கிணங்க சகல நிலைமையிலுள்ளவர்களும், பெரியோர், சிறியோரும், மூத்தோரும் இளைஞரும், இராஜாக்களும் ஏழைகளும் யாவரும் அவரைக்கண்டு ஆனந்தமடையத்தக்கதாக பாவிகளின் மத்தியில் எல்லாரும் அவரைச் சந்திக்கக்கூடிய சத்திரத்திலே வந்துதித்தார். அல்லாமலும் பரிசுத்தமுள்ள அவர் பாவிகளிடத்தில் பிறந்ததினாலேயே பாவிகளுக்குச் சிநேகிதராக விளங்குகிறாரன்றோ?

**[2] தமது ஜீவியத்தில் பாவிகளின் நேசராக விளங்குகிறார்.** பாவிகளை இரட்சிக்க இவ்வுலகத்திற்கு வந்த நமது மீட்பர் நீதிமான்களைத் தேடிச்



சென்றாரோ? தமது ஜீவியம் முழுவதிலும் பாவிகளையே தேடிச்சென்று பரலோக ராஜ்ஜியத்துக்கடுத்தவைகளைக் குறித்து அவர்களோடு பேசினார். பாவிகளோடு சம்பாஷித்தார். பாவிகளைத் தொட்டார். பாவிகளோடு தங்கினார். பாவிகளோடு போஜனம் பண்ணினார். அவர்களுடைய பாவங்களைக் கண்டித்துணர்த்தி நரகாக்கினையினின்றும் இரட்சித்தார். நித்திய ஜீவனைக் குறித்துப் பேசினார். தமது பிள்ளைகளாகச் சேர்த்துக்கொண்டார். அவர்களுடைய குறைவுகளில் அவர்களுக்கு உதவிசெய்தார். கிறிஸ்துநாதர் ஒரு லேவி என்பவன் வீட்டிலே அநேக ஆயக்காரரோடும் மற்றவர்களோடும் பந்தியிருக்கையில் வேதபாரகரும் பரிசேயரும் முறுமுறுத்து நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம்பண்ணுகிறதென்ன என்று கேட்டபொழுது பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை என்று சொல்லி நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்குத் தேடிச்சென்றார். (பரி. லூக். 6: 29-32). இவ்விதமாக தமது ஜீவியத்திலும் பாவிகளின் நேசராக விளங்குகிறார் என்பதில் சந்தேகமில்லையே!

**(3) தமது கடைசி சிலுவை ஆசனத்திலும் பாவிகளின் நேசராக விளங்காதிருந்தாரோ?** இரண்டு பாவிகளுக்கிடையில் தொங்கினார். தம்மை இம்சித்து சிலுவையிலறைந்து தூஷித்த கொடும் பாவிகளுக்காக பிதாவை நோக்கி மன்றாடினார். தம்மை நோக்கி மன்றாடின வலதுபாரிசக் கள்ளனுக்கு நித்திய ஜீவனை வாக்குப்பண்ணினார். பாவிகளை மீட்கும் பொருட்டாகவே தமது மகிமையையும் இன்பத்தையும் விட்டு இப்பூவுலகத்தில் மனிதனாக அவதரித்து தம்மைத்தாமே தாழ்த்தி பாடுபட்டு தமது ஜீவனையே ஈந்தாரல்லவா? எதினாலே? பாவிகளின் பேரிலுள்ள அன்பினாலல்லவா? இவ்விதமாக சிலுவைமரத்திலும் பாவிகளின் நேசராக, விளங்குகிறார்.

**(4) தேவனுடைய வலதுபாரிசத்திலும் பாவிகளின் நேசராக விளங்குகிறார்.** நீதிமான்களுக்காக பரிந்துபேசுகிறவராகவல்ல, பாவிகள் தங்கள் பாவத்தைவிட்டுத் திரும்பும்வரை அவர்களுக்காக எவ்வளவோ கவலையுள்ளவராகவும், பெருமூச்செறிந்தவராகவும் தமது பிதாவினிடத்தில பரிந்து பேசுகிறவராகவும் வீற்றிருக்கிறார். தமது பாடுகளையும் தமது பிரயாசத்தையும் பிதாவினிடத்தில் ஞாபகப்படுத்தி பாவிகளுக்காக மன்றாடுகிறார். அவர் ஒரு நிமிஷமாகிலும் கவலையற்றவராக இருக்கிறவரல்ல. 'மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாயிருக்கும்'. இந்நான்கு திருஷ்டாந்தங்களால் கிறிஸ்துநாதர் பாவிகளின் நேசராகவே விளங்குகிறார். இந்நாமத்தை அவருக்குச் சூட்டி அவரை அவமானப்படுத்த பிரயாசப்பட்ட சாத்தான் அவருடைய நாமம் மென்மேலும் மகிமைப்பட்டதினால் வெட்கிப்போனான். நமதருமை இரட்சகர் பாவிகளின் நேசராக

நாம் அறிகிற இக்ஷணமே நம்மை நாமே பாவிகளிலும் பிரதான பாவிகளாக ஒப்புக்கொண்டு நமது நேசரை ஏற்றுக்கொள்வோமாக. அப்படி அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்களிலும் மூன்று வகுப்பாரைக் காணலாம்.

(1) அவரை ஒரு [illegible]க மட்டும் ஏற்றுக்கொள்வாருமுண்டு. அதாவது உலகத்தில் அ[illegible]சர்கள் இருக்கிறார்கள். அவர்களில் இவர் ஒருவர் என்பதே அவர்களுடைய தாற்பரியம். இப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவானவரால் யாதொரு பிரயோஜனமுமிராது.

(2) அவரை **நேசராக**மட்டும் ஏற்றுக்கொள்ளுவாருமுண்டு. அதாவது: அவர் பாவிகளுக்காக மட்டும் உலகத்திற்கு வந்தாரென்றும் தாங்கள் பாவிகளல்லாததால் தங்களுக்கும் அவருக்கும் யாதொரு சம்பந்தமில்லையென்றும், ஆனால் தங்களிடம் வந்தால் தாங்கள் ஏற்றுக்கொள்ளலாம் என்றும் நினைக்கிறது மற்றொரு கூட்டத்தார். இவர்களும் கிறிஸ்துவானவரிடத்திலிருந்து யாதொரு பிரயோஜனமும் பெற்றுக்கொள்ளுகிறதில்லை.

(3) அவரை **என் நேசர்** என்று ஏற்றுக்கொள்வாருமுண்டு. இதில் ஒரு விசேஷமிருக்கிறது. உலகத்தில் அநேக நேசர்களிருந்தபோதிலும் அந்தந்த நேசர்கள் அவரவர்களுக்கே உரியவர்களாகும். ஆனால் என் நேசர் என்று ஏற்றுக்கொள்ளும்பொழுது மற்ற நேசர்களின் பேரிலல்ல என் சொந்த நேசர் பேரிலேயே என் அன்பு பொங்கும். அது போலவே கிறிஸ்துவானவரை **நம் சொந்த இரட்சகராக** ஏற்றுக்கொள்ளும்பொழுது தான் அவரே நமது ஆசையும் ஆஸ்தியும் செல்வமும், இன்பமும் சந்தோஷமும் எல்லாவற்றிற்கும் எல்லாமுமாயிருந்து நமது இருதயங்களைப் பாவங்களறக்கழுவி நம்மை ஜீவகரையில் சேர்க்கக்கூடிய பிரதான ஆசாரியராகவும் நமது மீட்பராகவும் பாவிகளாகிய நம் நேசராகவுமிருக்கிறார். சகோதரரே இம் மூன்று வகுப்பாரில் நாம் எந்தவகுப்பைச் சேர்ந்தவர்கள்?

'பாவிக்கவர் காட்டின மாநேசத்தால்
சிலுவையில் தொங்கின யேசு
திருசிரசிலவர் முண்முடியை சூண்டார்
பெரும்பாவி என்னை இரட்சிக்க'

S. R. D.

# நொறுங்குண்ட இருதயம்

சங். 51: 17. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். தாவீது ராஜா மெய் பக்தன், எப்போதும் கர்த்தருக்கு பயந்து நடந்துவந்தவர். அவருக்குப் பிரியமான காரியங்களை செய்து 'என் தாசன்



என்னும் சிறப்புப்பெயரை ஆண்டவரிடத்திலே பெற்றவர். ஆனாலும் ஒரு சமயம் அவர் சோம்பலுக்கும், அசதிக்கும், கண்களின் இச்சைக்கும் இடம் கொடுத்ததினால் ஒரு பெரிய பாவத்தைச் செய்தார் (2 சாமு. 11: 1-4). அந்த பாவத்தை உடனே உணர்ந்து ஆண்டவரிடத்தில் அறிக்கையிட்டு பாவமன்னிப்பையும் பரிசுத்தாவியின் பெலத்தையும் பெற்றுக்கொள்ளாததினால் பின்னும் சில பெரும் பாதகங்களையும் செய்யத் துணிந்தார். சில காலமாக தன் பாவங்களை உணராமலும் ஆண்டவரிடத்தில் அறிக்கையிடாமலும் இருக்கவே கர்த்தர் கிருபையாக தீர்க்கதரிசியாகிய நாத்தானைக்கொண்டு ஒரு உவமையினாலே அவருடைய பாவங்களை உணர்த்திக்காட்டினார் (2 சாமு. 12: 1-7). உடனே அவர் தன் பாவங்களை உணர்ந்து பாவ அறிக்கை செய்து பாவமன்னிப்பையும் சந்தோஷத்தையும் ஆத்தும சமாதானத்தையும் பெற்றுக்கொண்டாரென்று 51-ம் சங்கீதத்தின் மூலமாய்ப் பார்க்கிறோம். அவர் தவறுதலுக்குட்பட்டவுடனே மன்னிப்பை தேடாமலிருந்துவிட்டேனே என்று புலம்பி தவித்து இந்த வசனத்தையும் தன் அனுபோக சாக்ஷியாக எழுதிவைத்திருக்கிறாரென்று சொல்லலாம். தன்னுடைய பலி காணிக்கைகளைவிட ஆண்டவருக்கு உகந்த காணிக்கை நொறுங்குண்ட இருதயமேயென்று இப்போதுதான் அறிந்துகொண்டாற்போல் தெரிகிறது (வ. 17, 18). ஏனென்றால் தன் பலி காணிக்கைகளை செலுத்தினபோதல்ல இவ்விதமான நொறுங்குண்ட இருதயத்தை ஆண்டவருக்கு படைத்தபோதே அவர் தனக்கு மன்னிப்பையும் சந்தோஷத்தையும் திரும்ப கிருபையாய் அருளினார் என்ற நிச்சயமான அனுபவம் பெற்றாரென்றும் இவ்வசனத்தினால் அறிகிறோம்.

**I. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுடைய பாவ அறிக்கைக்கே பாவமன்னிப்பு உடனே அளிக்கப்படும்** சங். 32: 5.

அநேகர் பாவஅறிக்கை செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்தில் உணர்வில்லை. இருதயம் கடினப்பட்டு கல்லாயிருக்கிறது. அவர்கள் பாவங்களை அறிக்கையிட்டாலும் பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் அதனாலுண்டாகிய ரக்ஷண்ய சந்தோஷத்தையும் ஆண்டவரிடத்தில் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. பாவ உணர்வும் பாவ வெறுப்பும் கர்த்தருடைய உத்தம பிள்ளையாய் ஜீவிக்கவேண்டுமென்கிற ஆசையும் இல்லாததினாலே அந்த அனுபவம் கிடைக்கிறதில்லை. இப்படிப்பட்டவர்கள் பார்வோன் சவுல் என்பவர்களைப்போல் துன்பகாலத்தில் மாத்திரம் உண்மையாய் உணர்வடைந்து பாவ அறிக்கை செய்கிறவர்கள்போல் காட்டுவார்கள். உள்ளத்திலோ மெய்யான உணர்வற்றவர்களும் மாய்மாலமும் பக்தியின் வேஷம் தரித்தவர்களாய் காணப்படுவார்கள். ஒரு சபையில் ஒரு சகோதரனை அறிவேன். அவர் தப்பிதங்கள் செய்யும்போது சகோதரனே இப்படி செய்ய

லாமா என்று கண்டித்தால் ஐயா தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், தன் பாவங்களை அறிக்கையிடுகிறவன் தேவனிடத்தில் இரக்கம் பெறுவானென்று நீதிமொழி வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? அப்படியே நானும் பாவங்களைசெய்து ஞாயிற்றுக்கிழமைதோறும் ஆலயத்தில் அறிக்கை செய்கிறேன் என்பார். அப்போது நான் சகோதரனே வாக்கியத்தில் பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிடுகிறவனே தேவனிடத்தில் இரக்கம் பெறுவானென்று சொல்லியிருக்கிறதே என்றேன் அப்போ அந்த சகோதரனுக்கு உத்தரவு சொல்ல முடியாதவராய் திகைத்தார். இப்படி செய்கிறவர்களும் இப்படி போதிக்கிறவர்களுமே துணிகரக்காரர்களும் வஞ்சிக்கப்பட்ட கடின இருதயமுடையவர்களென்பதற்கு சந்தேகமில்லை. இவர்களை பாரவோனின் சந்ததியார்களென்றும் சொல்லலாம்.

வாசிக்கிற சகோதரனே, நீ மெய்யான நொறுங்குண்ட இருதயமுடையவனாக இருக்கிறாயா என்பதை தேவசமுகத்தில் சோதித்துப்பார்க்க கேட்டுக்கொள்ளுகிறேன்.

**II. நொறுங்குண்ட இருதயத்தில்தான் தேவன் வாசம்பண்ணுகிறார்.** ஏசா. 57: 15.

'நித்திய வாசியும் பரிசுத்தரென்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவரும், உன்னதருமானவர் சொல்லுகிறார். உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நாம், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவி உள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்' என்கிறார். தெய்வத்துக்கு பிரியமானதும் அவர் தங்குகிறதுமான ஆலயம் நொறுங்குண்ட இருதயமே. அப்படிப்பட்ட இருதயத்தில் அவர் வாசம்பண்ணி அதை பரிசுத்தம்பண்ணி அதை மகிமையுள்ளதாக்குகிறார். சாலமோன் கட்டின தேவாலயத்தில் தேவமகிமை தங்கினதுபோல் இப்படிப்பட்ட இருதயமாகிய ஆலயத்திலும் தேவமகிமையின் பிரசன்னம் எப்போதும் குடிகொண்டிருக்கும். அப்போது அது 'யேகோவாஷம்மா' என்று அழைக்கப்படும் (கர்த்தர் அங்கே வாசம்பண்ணுகிறார்). எசேக். 48: 35.

**III. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களே தேவகிருபையில்வளர வாஞ்சிப்பார்கள்.** சங். 51: 10, 11. இப்படிப்பட்டவர்களைப்பற்றி ரொம்ப நம்பிக்கை உண்டு. இவர்கள் தங்கள் இருதயத்தின் உள்ளான கேடுகளை உணர்ந்து அதற்காக மிகவும் கவலைப்பட்டு தங்கள் இருதயம் ஆண்டவருக்கு முன்பாக எப்போதும் பரிசுத்தமாய் இருக்கவேண்டுமென்று ஆசிப்பார்கள். தாவீது ராஜாவைப்போல 'தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும், உமது சமு



கத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும் உமது பரிசுத்தாவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலுமிரும்' என்று ஏக்கத்தோடே ஜெபிப்பார்கள். தங்கள் இருதயம் எப்போதும் பரிசுத்தம் நிறையப்பெற்றதாயும் எப்போதும் தேவசமுகத்தில் ஜீவித்து தெய்வத்தோடு ஐக்கியப்பட்டு ஜீவிக்கும் இன்பத்தை அனுபவிக்கவும் எப்போதும் தேவ ஆவியினால் நடத்தப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, ஆவிக்குள் ஜெபம்பண்ணி கர்த்தரை துதித்து போற்றவும் ரக்ஷணிய சந்தோஷத்தையும் சமாதானத்தையும் உடையவர்களாயிருப்பதுமே இவர்களுடைய ஆத்தும வாஞ்சையாயிருக்கும் ஒரு சபையில் ஒரு சகோதரியை அறிவேன். அவள் கர்த்தருக்கு பிரியமான பிள்ளையாய் ஜீவிக்க ஆசையுள்ளவள் அவளிடத்தில் காணப்படும் சொற்ப அறிவீன பலவீனங்களைக் கண்டு கண்டித்து புத்தி சொல்லும்போது அதை சந்தோஷமாய்க் கேட்டுக்கொள்வதோடு 'ஐயா, நான் செய்தது தப்பிதந்தான், என் அறிவீனந்தான்' என்று உணர்ந்து கண்ணீரோடு மன்னிப்புக் கேட்பாள் இந்த சகோதரி எப்போதும நொறுங்குண்ட உணர்வுள்ள இருதயமுள்ளவளாயிருந்தபடியினால் அவள் தேவகிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர்ந்துவந்தாளென்று நான் மெய்யாய் சொல்லக்கூடும்.

வாசிக்கிற சகோதரனே, நீயும் தேவகிருபையில் வளர்ந்து தேவசாயலை பிரகாசிக்கச் செய்யத் தக்கதாய் உன்னிருதயம் நொறுங்குண்டதாய் இருக்கிறதா?

N. D.

## ஜெபத்தின் விசேஷித்த இலட்சணங்கள்

எலியாத் தீர்க்கதரிசி மழைக்காகச் செய்த ஜெபத்தில் சில விசேஷித்த இலட்சணங்களுண்டு. அவைகள் எல்லா உத்தம ஜெபங்களிலும் காணப்படவேண்டியதால், அவைகளை குறித்துப் பார்ப்போம்.

**1. அது தேவனுடைய வாக்குத்தத்தை ஆதாரமாகக்கொண்டு செய்யப்பட்ட ஜெபம்.** எலியா சாரிபாதிலிருந்து அனுப்பப்பட்டபோது, 'நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி, நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன்' என்று கர்த்தர் சொன்னார் (1 ராஜா. 18: 1). இந்த வசனத்தைப் பார்க்கும்போது எலியா மழைக்காக ஜெபம்பண்ண வேண்டிய அவசியமில்லை என்று சிலர் எண்ணலாம். ஆனால் எலியா இன்னொரு வேதவசனத்தையுங் கவனித்து ஜெபிக்கவேண்டியது அவசியம் என்பதையறிந்தான். பிந்திய காலத்தில் ஒரு தீர்க்கதரிசி தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஆயத்தம்பண்ணின எல்லாவற்றையும் அறிவித்தபின், இஸ்ரவேலின் வம்சத்தாருக்காக நான் இதை அருளச் செய்யும்படி

அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்' என்ற வசனத்துக்கொப்பாக அவன் எண்ணமிருந்தது.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஜெபத்துக்குத் தடையாகவல்ல; ஜெபத்துக்கு நம்மைத் தூண்டிவிடும்படிக்கே அருளப்பட்டிருக்கின்றன. அவ்வாக்குத்தத்தங்கள் நாம் பயமில்லாமல் ஜெபிக்க நம்மை ஏவுங் கருவியாயிருக்கிறது. அவைகள் கையொப்பமிடப்பட்ட உண்டியல் சீட்டைப்போலிருக்கின்றன. அதற்கு நாமும் கையெழுத்துப்போட்டு தொகையை வாங்க ஆயத்தமாயிருக்கவேண்டியது.

வேதாகமத்தில் ஏராளமான வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன. அவைகளை நாம் ஜெபமாகத் திருப்பிக்கொள்ளாவிடில், அவைகளால் நமக்கு பயன் இல்லை. நாம் ஏன் ஜெபிக்கவேண்டும்? ஜெபம் எப்படிப் பிரயோஜனப்படுகிறது? என்று கேட்டால், ஜெபமானது பக்திக்கடுத்த ஜீவியத்தில் இயல்பான சுபாவமாயிருக்கிறது. அது சர்வ வல்லவருக்கு முன்பாக அதிக சக்தியைக் கொடுக்கக்கூடியது. மனுஷருக்குள்ளே மகா பரிசுத்தவான்களும் ஜெபத்தை அப்பியாசித்து, அதின் பலனைக்குறித்துச் சாட்சியிட்டிருக்கிறார்கள். நமது கர்த்தராகிய இயேசு ரட்சகரும் பிதாவை நோக்கி ஜெபித்துவந்ததோடு, ஜெபத்தின் அருமையையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். 'கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்'. ஜெபம் பலிதப்படும் வகையைப்பற்றிய சாஸ்திரம் நமக்குத் தெரியாவிட்டாலும், நாம் ஜெபம்பண்ணுவதில மனத்திருப்தியுடையவர்களாயிருக்கவேண்டும். ஜெபமானது கண்டுமறைகிற சொப்பனமல்ல. அது அப்பியாசமுள்ள ஜீவசத்தாயிருக்கிறது. ஆகவே எல்லா ஜெபங்களும் எலியாவின் ஜெபத்தைப்போல வாக்குத்தத்தங்களின்பேரில் சார்ந்திருக்கவேண்டும். அவருடைய வாக்குத்தத்தங்களை எடுத்துக்காட்டி, நீர் சொல்லியபடி எனக்குக் கிருபைசெய்யுமென்று கேட்கையில் நமது விண்ணப்பம் கேட்கப்படும்.

**2. குறிப்பாகச் செய்யப்பட்ட ஜெபம்.** அநேக ஜெபங்கள் கேட்கப்படாததற்குக் காரணம் அவைகள் குறிப்பாகச் செய்யப்படாததே. அவைகள் ஆகாயத்தில் எய்யப்படுகிற அம்புகளைப்போலிருக்கின்றன. இன்னது தேவையென்று கேட்காத விண்ணப்பத்துக்கு மறுமொழி அவசியமில்லையே. குறிப்பற்ற ஜெபங்களும் அப்பேர்ப்பட்ட விண்ணப்பத்துக்கொப்பாயிருக்கிறது. இன்னும் அவைகள் விளையாட்டுச் சண்டையில் வெற்று வெடி தீருவதுபோலிருக்கிறது. எலியாவைப்போல உறுதியான எட்டு வைத்து கர்மேல் பர்வதத்தில் ஏறுதவர்களாயிருக்கிறோம். நெடுநாளாய் ஆவலுடன் காத்திருந்து மழையை வருவிக்க தேவனுடைய வாக்குத்தத்தத்தை எடுத்துக்காட்டி, ஜெபத்தில் ஜெயம்பெறத் தீர்மானித்தான். தேவ



னுக்கு முன்பாக நாம் விண்ணப்பம் செய்கையில், இன்னின்னவைகளுக்காக ஜெபிக்கவேண்டுமென்பதை மனதில் வைத்துக்கொள்வோமாக. குறிப்பிட்டுக் கேட்டால் நவமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம் (சங். 5: 3).

**3. அது கருத்தான ஜெபம்.** 'எலியா கருத்தாய் ஜெபம்பண்ணினான்' [யாக். 5: 17]. 'நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது' [யாக். 5: 16]. வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஜெபங்களெல்லாம் அனலுள்ளதாய்ப் பிரகாசிக்கின்றன. யாக்கோபு போராடினதையும், தாவீது தன்னிருதயத்தை ஊற்றினதையும், கபோதியான பிச்சைக்காரன் அலட்டினதையும் நினைத்துப்பாருங்கள்.

நமது ரட்சகர்கூட பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களெல்லாரும் தங்களை முழுவதும் ஒப்புவித்து, அனலோடே விண்ணப்பஞ் செய்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் மகிமைக்காக மாத்திரம் ஜெபம் கேட்கப்படும். தேடும் ஆசீர்வாதம் உள்ளபடி அவசியம் என்பதைக் காட்ட கருத்தாய் ஜெபிக்காவிடில், அது கேட்கப்படமாட்டாது. எலியாவைப்போல் நாம் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறத் தேடி, நமது நன்மையை நாடாமல் அவருடைய மகிமையை நாடும்போது, மெய்யாகவே நாம் ஊக்கமான ஜெபம் செய்வோம்.

**4. மனத்தாழ்மையுள்ள ஜெபம்.** 'அவன் தரையிலே பணிந்து தன் முகம் தன் முழங்காலில்பட குனிந்தான்' [1 ராஜா. 18: 42]. எலியா கொஞ்ச நேரத்துக்கு முன்னே, பாசானின் கர்வாலிமரம்போல் நிமிர்ந்து நின்றான். இப்போதோ நாணல்போல் பணிகிறான். தேவனுடைய ஸ்தானாபதியாக மனிதரோடு வழக்காடினான். இப்போதோ மனிதருடைய காரியக்காரனாக தேவனிடத்தில் பரிந்துபேசுகிறான். பாவத்துக்கு எதிர்த்து நிற்பவர்கள் தேவசமுகத்தில் இவ்விதமாய்ப் பணிவார்கள். தேவனிடத்தில் நெருங்கி ஜீவிக்கிறவர்கள் பயபக்தியுடையவர்களாயிருப்பார்கள். நீ மீட்கப்பட்டவனானாலும், நீ பாவியாயிருந்தாயென்பதை மறவாதே தைரியமாய் வரலாம். ஆனால் தேவனுடைய மகத்துவத்தையும் வல்லமையையும் உணர்ந்து உன் கால்களிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு. அவருடைய சமுகத்திலிருக்கிற தேவதூதர்கள், தங்கள் முகங்களை மூடிக்கொண்டு, பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று சொல்லிப் பறக்கிறார்கள். நாம் நம்முடைய பிரதான ஆசாரியராகிய இயேசுவின் புண்ணியத்தை முன்னிட்டு தாழ்மையோடு ஜெபிப்போமாக.

**5. பூரண விசுவாசமுள்ள ஜெபம்.** 'நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள், அப்போது அவைகள் உங்களுக்குண்டாகும்

[மாற். 11: 24]. எல்லா உத்தம ஜெபத்துக்கும் விசுவாசம் இன்றியமையாதது. அது பரிசுத்தாவியானவருடைய ஈவு. ஜெபிக்க ஜெபிக்க விசுவாசம் விர்த்தியடைகிறது. வாக்குத்தத்தங்களை அது புசித்து பலப்படுகிறது. தேவவசனமே அந்த விசுவாசத்துக்கு ஆகாரம். தேவன் தமது வார்த்தையை நிறைவேற்றுவார் என்பதை அறிந்து, எலியா தன் வேலைக்காரனை கடலுக்கு நேராகப் பார்க்கும்படி கட்டளையிட்டான். தன் ஜெபம் சீக்கிரத்துக்குள் கேட்கப்படும் என்ற நம்பிக்கையிருந்தது. நாம் அடிக்கடி ஜெபிக்கிறோம். ஆனால் நாம் தேடின ஆசீர்வாதங்களை எதிர்நோக்குவதில்லை. பரம கப்பல்கள் நாம் விரும்பிக்கேட்ட ஆசீர்வாதங்களை துறைமுக மேடைக்குக் கொண்டுவந்தன. ஆனால் அவைகளைப் பெற்றுக்கொள்ள, நாம் அவ்விடத்திலில்லாததால், திரும்ப அனுப்பிவிடப்பட்டன. விசுவாசமுள்ள ஜெபம் நன்மையைத் தப்பாமல் கொணடுவரும். அப்போது அது துதி தோத்திரங்களாக மாறும். ஜெபத்தில் விசுவாசம் இல்லாவிட்டால் கிரமமான ஜெபங்கூட நின்றுபோம். அப்போது ஊரீம் தும்மீம் மங்க, தேவன் 'இனி இந்தக் காரியத்தைக் குறித்து என்னோடே பேசவேண்டாம்' என்பார். தேவன் அல்லத்தட்டாத விசுவாசம் உண்டு, அது எல்லாவற்றையும் செய்யும். மலைகளையும் பேர்த்துக் கடலில் தள்ளிவிடும். இப்பேர்ப்பட்ட விசுவாசம் நம்முடையதாயிருப்பதாக.

6. **எலியாவின் ஜெபம் ஊக்கமுள்ளது.** அவன் தன் ஊழியக்காரனை நோக்கி 'நீ போய் சமுத்திர முகமாய்ப் பார்' என்றான். அவன் போய்ப் பார்த்து ஒன்றுமில்லை என்றான். ஒன்றுமில்லை என்றவுடன் எலியா மனஸ்தாபப்படவில்லை. ஒன்றுமில்லையென்று நாம் ஜெபிக்கத் தொடங்கி அதை விட்டுவிடுவதுண்டு. எலியாவுக்கு அப்படிக் காணப்படவில்லை. 'நீ இன்னம் ஏழுதரம் போய்ப்பார்' என்றான். வேலைக்காரன் ஒவ்வொரு தரமும் தீர்க்கதரிசியிடம் வந்து ஒன்றுமில்லையென்று சொன்னான். சற்று பொறுத்து மறுபடியும் போகும்படி கட்டளையிடப்பட்டான். இப்படி ஏழுதரம் செய்தான். இது தீர்க்கதரிசியின் பொறுமைக்கு இலேசான பரீட்சையல்ல. ஆனால் சோதனையோடுகூட கிருபையுங் கொடுக்கப்பட்டது. ஆனதினால்தான் அதைத் தாங்கினான்.

தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு அவர் அருளும் உத்தரவுக்கு மேல்விலாசம் எழுதிவைத்திருக்கிறார். நமக்காசீர்வாதமுண்டாக அதின்மேல் தாகமுண்டாகுமட்டும் அதை நிறுத்திவைத்திருக்கிறார். அவருக்குக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுபோவதில்லை. 'உன் விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது' என்பார். நமக்குக் கிருபையளிக்க அவர் காத்திருக்கிறார்.

7. **எலியாவின் ஜெபம் பூரணமாய்க் கேட்கப்பட்டது.** 'அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்; அவர்கள்



பேசும்போதே நான் கேட்பேன்'. உங்களுடைய ஜெபத்துக்கு மறு உத்தரவு நீங்கள் நினைப்பதற்கும் சமீபமாயிருக்கலாம். அதற்கு முன்னதாகவே புறப்பட்டுமிருக்கலாம். அது செட்டைகளைக் கட்டிக்கொண்டு உங்களுக்கு நேராக வருகிறது. தேவன் உங்களுக்கு மறுஉத்தரவு அருளுவார். அதிகாலையில் சகாயஞ்செய்வார்.

உடனே வேலைக்காரன் பார்த்தபோது அடிவானத்திலிருந்து இதோ ஒரு மனிதனுடைய உள்ளங்கையளவான மேகம் ஆகாயத்தில் எழும்புவதைக் கண்டான். மழை வந்துவிட்டதென்பதற்கு இது நல்ல அடையாளம். இப்போது தீர்க்கதரிசியின் உத்தரவுப்படி வேலைக்காரன் ஆகாபண்டைக்குப் போய் சீக்கிரமாய் கர்மேல் பர்வதத்தைவிட்டு இறங்கி கீசோன் ஆறு அவனை மறித்துக்கொள்ளாதபடி, இரதத்தில் ஏறி வீட்டுக்குப் போகச் சொன்னான். இச்செய்தியை அறிவிக்கவும் வானம் கருத்துப் பெருமழை பெய்யத் தொடங்கினது. இராஜன் மழையோடே அரண்மனைக்குப் போனான். எலியாவோ இரதத்துக்கு முன்னே அஞ்சற்காரன்போல ஓடினான்.

இப்படியாக ஒரு மனிதன் ஜெபத்தினாலும் விசுவாசத்தினாலும் இஸ்ரவேலருக்கு மழையை வருவித்தான். இந்த உலகம் அறிவதற்கு மிஞ்சின காரியங்கள் ஜெபத்தினால் நடத்தப்பட்டிருக்கின்றன. நாம் ஏன் இந்த இரகசியத்தைக்கற்று அப்பியாசிக்கக்கூடாது. அது நம்மெல்லாருடைய கைக்கும் எட்டக்கூடியதுதானே. நாமும் ஆவிக்குறிய ஆசீர்வாதங்களைப் பரலோகத்திலிருந்து இறக்கலாம். அப்போது வறண்டுபோன சபையும் உலகமும் புஷ்பத்தைப்போல பூத்து மகிழ்ச்சியடையும்.

## Millennial Dawn
## ஆயிரவருஷ அருணோதயம்

உலகமெங்கும் தேவனுடைய சபையில் அரிபிணவைப்போல் படர்ந்து வருகிற ஒருவிதமான பதிதம் இந்தச்சென்னையிலும் தலைகாட்டியிருக்கிறது. வேதோபதேசங்களைத் திட்டமாயறியாத கிறிஸ்தவர்கள் இந்த கயவஞ்சகமான ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டுவரும் போதகருடைய வலையில் இலேசா யகப்பட்டுக் கொள்கிறார்கள். ஆகையால் தமிழ்ச்சபைக் குரிய உத்திரவாதத்தைச் சிரமேற்கொண்டு இந்தக் கள்ள போதனையையும் இப்போதனையின் ஆக்கியோனையும்பற்றி 'The Out Look' என்ற நியுஷிலாந்துப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற ஒரு நிருபத்தின் சில பாகத்தை இதில் மொழிபெயர்த்திருக்கிறோம். கனடா தேசத்திலுள்ள சங்கை (A. E. Cook) குக் என்ற போதகர் மேற்படி

பத்திரிகையின் 1915-ஹு மார்ச்மீ 23உ சஞ்சிகையில் எழுதியிருக்கிற தாவது:

"இந்த நவீனகால மார்க்கபோதனையை அவர்கள் பிரபலப்படுத்தும் வகை ஒருவனை ஆச்சரியப்படுத்தும் ஜாலவித்தை போன்றது. இவ்வுபதேசம் இன்னதென்றும் எங்கிருந்து பிறந்ததென்றும் அறியுமுன்னமே அநேக குடும்பங்களை ஆட்டிக்கொண்டிருக்கிறது. இந்த நூதனக் கொள்கைகளை முதல்முதல் பிரசுரப்படுத்திய புஸ்தகங்களிலிருந்து அநேக காரியங்களை எடுத்துவிட்டு Millennium Dawn என்ற ஆதிப்பெயரையும் மாற்றி (Studies in the Scriptures) வேதபாடங்கள் என்ற பெயரைச் சூட்டி ஆறு பிரபந்தங்களாக அச்சிட்டிருக்கிறார்கள். இவைதான் இக்கொள்கைகளையேற்படுத்திய Russell என்பவரின் ஆதாரநூல்களாம். இவற்றை லண்டனிலும் புரூக்லின் நகரிலுமுள்ள (Bible and Tract Society) வேதாகம புஸ்தகச் சங்கம் பிரசுரித்ததாகவும் காட்டியிருக்கிறது. இவற்றை விற்கிற ஆசாமிகள் ஆக்கியோன் பெயரையும் பொருளடக்கத்தையும்பற்றி ஒன்றும் சொல்லாமல் வெகு எச்சரிக்கையாயிருந்து சர்வசபை சமரச வேதபாடங்கள் என்று மாத்திரம் சொல்லி விற்கிறார்கள் அவர் அச்சிடுகிற மற்ற புஸ்தகங்களுக்கும் மற்றவர்கள் சமுசயம்கொள்ள இடமில்லாதபடி மாணுக்கரின் மாதாந்த சஞ்சிகை, ஜனங்களின் பிரசங்கபீடம்; காவற்கோபுர முதலிய நல்லபேர்களை யிட்டிருக்கிறார்கள். இந்தக் கொள்கைக்காரர் மாத்திரம் கூடியிருக்கிற கூட்டத்துக்கு சர்வதேச வேதபாடசங்கம் என்ற விசாலமான பேரைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் உள்ளபடி தங்கள் மூளையையும் மனச்சாட்சியையும் Charles D. Russell போதகரின் பாதுகாவலுக் கொப்படைத்தவர்களின் கூட்டமே யிது. நமது சத்திய வேதத்தைப்பற்றிய சாதாரண அறிவுடைய எவனும் இப்போதகரின் 3,000 பக்கங்களடங்கிய புஸ்தகங்களை வாசிப்பானாகில் தன் நூதனகொள்கைகளுக்கேற்குமாறு வேதத்தைப் புரட்டியிருக்கிற அவருடைய அகங்காரத்தையும் வெளிப்படையான மூல உபதேசங்களுக்கெல்லா முற்று மாறாகப் போதிக்கும் அவருடைய குருட்டுத்தனத்தையுங் கண்டு ஆச்சரியப்பட்டு திகைக்கிடாமலிருக்கமுடியாது. திருச்சபைச் சரித்திரத்தைப் படித்தவனெவனும் இவற்றை வாசித்தால் பூர்வ மார்சியன்முதல் குனோஸ்திகரீறாக மனிதரை வழிதப்பப்பண்ணிய சகல பழைய பதிதங்களையும் ரசல்போதகரின் உபதேசத்தில் கண்டுகொள்வான்.

## ரசல் போதகர் வேதத்தைக் குறைபடுத்தல்

இவர் வேதத்தை உச்சிதமாக மதிக்கிறதாகச் சொல்லிக்கொண்டே அதைத் தாமே புஸ்தகங்களைவிடத் தாழ்ந்ததாய் அவமதிக்கிறார். வேதத்திலுள்ள திறவுகோல் வாக்கியங்களை தாம் ஏற்படுத்திய கருத்துக் கிசை



யத் தெரிந்துகொண்டு மூலபாஷையைத் தப்பிதமாக மொழிபெயர்த்து தமது மனக்கருத்துக் கிசைய பாஷாந்திரம் பண்ணுகிறார். அப்பாஷைதானும் தேவகாரியங்களை பரிகாசத்திற்கிடமாக்கி தாறுமாறாக்கிவிடுகிறது. அவரெழுதிய மற்ற வியாசங்களில் வேதத்தை யருத்தம்பண்ண தமது புஸ்தகங்கள் அத்தியந்த அவசியமாக சாதிக்கிறார் 1910-ஹு செப்டம்பர்மீ 15உ வெளிப்பட்ட ("Watch Tower") என்ற பத்திரிகையில் 298-ம் பக்கத்தில் அவர் சொல்லுவதாவது 'இந்த வேத பாடங்கள் வேதத்திற்கு வெறும் வியாக்கியானமல்ல உள்ளபடி வேதமாகவேயிருக்கிறது, மேலும் வேதத்தை மாத்திரம் படிக்கிறதினாலே ஜனங்கள் தேவனுடைய பிரமாண ஒழுங்கைக் கற்றுக்கொள்ள முடியாது. அதுமாத்திரமல்ல இந்தப் பாடங்களை ஒருவன் பத்து வருஷங்களாகப் படித்து வித்துவானான பின்னும் இவற்றை சும்மா வைத்துவிட்டு வெறும் வேதப்புஸ்தகத்தை மாத்திரமெடுத்து பத்து வருஷமட்டும் படித்துக்கொண்டு கெட்டிக்காரனான போதிலும் இரண்டு வருஷத்திற்குள் இருளடைந்து அறிவிலியாவானென்பது எமது அநுபவம். மற்றபடி இந்த வேதபாடங்களைமாத்திரம் அவற்றின் ஒத்துவாக்கியங்களுடன் வாசித்து வருவானானால், அவன் வேதத்தில் ஒருபக்கத்தைத்தானும் வாசியாதிருந்தாலுங்கூட இரண்டு வருஷத்திற்குள் ஒளியடைந்து வேத விற்பனனாவான். ஏனென்றால் அவன் வேதத்தின் ஒளியை யுடையவனென்பதே இதேகருத்து ("Bible Student, Monthly") என்ற பத்திரிகையில் நவீனகாலத்தில் வெளிப்பட்டிருக்கிறது. இவர் கருத்திற் கொவ்வாத வேதவாக்கியங்கள் குறுக்கிட்டால் அவற்றை கள்ளத்தனமாய் வேதத்தில் இடையிற் சேர்க்கப்பட்ட வாக்கியக்களென்பார். அல்லது தமது சொந்த வார்த்தைகளைச் சேர்த்து மூல அர்த்தத்தைப் புரட்டி மொழிபெயர்ப்பார். (Higher Critics) உயர் திருத்தக்காரரென்ற வேதசாஸ்திரிகளுக்கு விரோதமாய் இவர் செய்த வன்சொற் பிரசங்கங்களை வாசித்தாலுங்கூட ஒருவன் சிரிக்கத்தான் நேரிடும். ஏனெனில் அவர்களில் தேர்ச்சிபெற்ற ஒரு சாஸ்திரிதானும் இந்த பயங்கரப்படத்தக்க போதனையைப்போல அத்தனை துணிகரமாய் வேதத்தைப் புரட்டும் சுயாதீனம் எடுக்க கனவிலும் நினைத்ததில்லை. ஆயிர வருஷ வாழ்வே இவரது முழுக்கருத்தின் மத்திப்பொருள். அதைப்பற்றி புத்திக் கெட்டாதிருக்கிற தேவ ஒழுங்குகளை யறியவும் போனகால நிகழ்கால வருங்கால நடபடிக்குறிய கால நிருணயங்களை வரையறுதத்துக் குறிப்பிடவும் ஆசித்து மூளை திணவெடுத்தவர்களின் மனதிற்கு வசியமாக இவரெழுதியிருக்கிறார். மூடபக்தி வெறிகொண்ட நூதன பிரியருக்கு இது தகுந்த வசியமே.

ரசல் கொள்கைப்படி நாம் இப்போது ஆயிரவருஷ அரசாட்சியின் துவக்கத்திலிருக்கிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை 1874—ல் துவங்கிவிட்டதாம். அது 1914-ஹு அக்டோபர் மாதத்தில் பூரணமாய் ஸ்தாபிக்கப்படுமாம். முந்தின வட்டங்களெல்லாம் இதையே நோக்கி நின்றது.

உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் நிறைவேறித் தீருங்காலமிதுவே. கிறிஸ்து பூமியை ஆண்டு அதன் குடும்பங்களையெல்லாம் ஆசீர்வதிக்குங்காலமே யிது. (Vol. No. I, p. 222.) இக்காலத்தில் பாவமும் மரணமும் பரிகரிக்கப்படும் ரசல் போதகருடைய கொள்கையின்படி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதிருந்த எல்லாருக்கும் இரண்டாம் தவணை இக்காலத்தில் அளிக்கப்படும். ஏனெனில் மரித்தவர்களெல்லாரும் (Vol. No. 5 p. 456) உயிர்த்தெழுந்து ஆதாம் பாவம் செய்யுமுன்னிருந்த பூரணநிலையளிக்கப்பெறுவார்கள். இந்த ஆளுகையில் இஸ்ரவேல் பூலோகவாசிகளில் தலைமை பெற்றிருப்பார்கள். ரசல் போதகரின் சிறுமந்தையான சபை காணாமற்போய் ஆவிரூபத்தில் கிறிஸ்துவைப்போல உன்னத நிலை பெறும் பூமியிலுள்ளவர்கள் கொஞ்சங்குறைய எல்லாரும் படிப்படியே உயர்ந்து பூரணமடைவார்கள். சிலரோ அழிந்து சூனியமாவார்கள். முதலாவது பூரணவெளிச்சமும் நற்சமயமும் நூறுவருஷமட்டும் கிடைத்தும் நீதியை யடையவும் பூரணம் பெறவும் சம்மதியாதவர்களும், இரண்டாவது அப்படி பூரணம்பெற்றும் ஆயிர வருஷமுடிவில் நடக்கும் சோதனையில் உண்மையற்றவர்களாகவே காணப்படுகிறவர்களுமே இப்படி யழிகிறவர்கள். இதுவே இரண்டாம் மரணம். இதின்பின் மீட்பில்லை. (Vol. I. p. 241) வெளிப்படுதல் 20: 5. 'மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிர வருஷ முடியுமளவும் உயிரடையவில்லை' என்ற வாக்கியம் இந்த வீண் பிதற்றலுக்கு பிரமாண்டமான இடையூறாய்க் கிடக்கிறது. ஆனால் அவர் இதைக் கள்ளவாக்கியமென்று ஒரே போடாய்ப் போட்டுவிடுகிறார். கிறிஸ்துவின் சரீரபிரகாரமான வருகைக்கு முன் ஆயிர வருஷ வாழ்வு நடைபெறுமென்று பூர்வமுதல் சாதித்த நல்லவர்களும் வல்லவர்களுமான கல்விமான்கள் அநேகர் இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவராவது இந்த ரசல் போதகரைப்போல கிறிஸ்துவை ஆள்வடியாய் பூமியை ஆளப்போகிறாரென்ற சுத்தக்கொள்கையை அந்தகாரப்படுத்தி அவமதிக்கும் நுணுக்கமான இத்தனைக் கோரமும் சிரிப்புக்கிடமுமான விதமாய் இவ்வாக்கியத்தை மறுத்ததில்லை. மனந்திரும்புகிறதற்கு இரண்டாம் தவணையுண்டென்கிற இந்த நூதனகொள்கை தற்காலத்தில் ஞானவிரகறியாருக்குச் சுவையாயிருக்கிறது.

இவைகட்கிசைவாக 'இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை 1874-ல் நடந்துவிட்டதாம். மரித்துப்போன சீமான்கள் 1878-ல் உயிர்த்தெழுந்துவிட்டார்களாம். அவர்கள் இப்போது பூமியிலிருக்கிறார்களாம். அதேகாலத்தில் பேர்கிறிஸ்தவசபை ஏற்பாடுகள் வாந்திபண்ணப்பட்டதாம். தேவன் அவர்களை அங்கீகரிக்கிறதில்லையாம். உலகத்தாரை அழைக்கிற சுவிசேஷ அழைப்பு 1881-ல் பூரணமாய் நின்றுவிட்டதாம். 1914-ஆ



அக்டோபர் மாதத்தில் கிறிஸ்தவ ராஜாங்கங்களும் அவற்றின் ஏற்பாடுகளும் கவிழ்க்கப்பட்டுப்போய் ஆயிரவருஷ ஆளுகைக்கு வழிதிறக்கப்படுமாம். இந்த கடைசி தேதி முடிந்துபோனபிற்பாடு ரசல் போதகர் தமது வார்த்தைகளுக்கு அளவுபோடவும் தாம் அந்த தேதியென்று திட்டமாய்க் குறித்துவிடவில்லையென்று அதிவியாயப்பியம் சொல்லவும் ஆரம்பித்திருக்கிறார், ஆனால் அவருடைய புஸ்தகங்களிலெல்லாம் அந்த தேதி வெகு திட்டமாய் குறிக்கப்பட்டிருக்கிறதென்பது திண்ணம், அதைப் பிற்பாடு மறுப்பது கூடாதகாரியம். இப்போது அந்த தேதி கடந்து, அவர் வெகு திட்டமாய் முன்கூறின பரிகாச சம்பவங்களில் ஒன்றும் நிறைவேறவில்லை. இந்த ஆச்சரியமான தீர்க்கதரிசி தம்மை பக்தியுடன் பின்பற்றின தொண்டரை ஒருவாறு திருப்திபடுத்தி தாம்முன்னுரைத்தபடியே எல்லாம்நிறைவடைந்து வருகிறதென்றும் சிறுமந்தையைத்தவிர மற்றவர்கள் அதை ஒருவித ரகசியமாகவும் கண்காணாத விதமாகவும் அறியக்கூடாதென்றும் கூறுகிறார்.

ரசல் கொள்கைக்காரருக்குப் பிரியமான இன்னொரு கொள்கை நரகமில்லை யென்பதே. எல்லா கிறிஸ்தவ சபைகளையும் பொய்யரென்றே இவ்விஷயத்தில் தூஷிக்கிறார். தற்கால பிரசங்கிகள் நரகத்தில் சொல்லர்த்தமான அக்கினியும் கெந்தகமும் உண்டென்று சாதிப்பதாக இவர் நடித்து, தப்பர்த்தம்பண்ணி, தன்னை மகா எபிரேயு கிரேக்கு பாஷைகளின் தேர்ந்த பண்டிதராக தமது தொண்டர்களால் மதிக்கப்பட பாசாங்கு பண்ணுகிறார். சியோல், ஆதீஸ் என்ற மூலபதங்கள் சவக்குழியை மாத்திரம் குறிக்கிறதென்று புத்திக்கு விரோதமாகப் போதிக்கிறார். இவ்விதமாய் மரணமென்றால் சூனியமே யென்கிறார். குணப்படாதவர்கள் சூனியமாவார். கடைசியுயிர்த்தெழுதல் வேதஉயிர்த்தெழுதலைக் குறியாமல் திரும்ப சிருஷ்டிப்பதாயல்லோ முடியும். (Vol. No. 5, pp. 321–350). இந்த வகையாய்ப் பவுல் எழுதுகிற 1 கொரி. 15-ம் அதி. சரீர உயிர்த்தல் உண்டென்பதை ஒரே புரட்டாய்ப் புரட்டி, மரித்தவர்கள் கர்த்தர் உயிர்த்தெழும்புமட்டும் மிருகங்களைப்போல அழிந்துபோவதாக பவுல் போதிப்பதாய்க் காட்டப் பார்க்கிறார். பழைய ஏற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டும், பக்தர் அனுபவத்தால் அங்கீகரிக்கப்பட்டும் வருகிற தேவனுடைய மகிமையின் ஐசுவரியமான ஆள்தத்துவத்தைப்பற்றித் திருச்சபையின் விசுவாசத்தில் மனுஷீகவார்த்தையால் கூடியமட்டும் விளக்கிவரும் பரிசுத்த திரித்துவ உபதேசத்தை சாத்தானுடைய உபதேசமென்று சாதித்து அதை ருசுப்படுத்த இந்தத் தற்கால சன்னதக்காரன் ஏற்பட்டு, பரிசுத்த ஆவியானவர் பிதாவாகிய தேவனுடைய வல்லமை மாத்திரமென்றுகாட்ட 45 பக்கம் எழுதுகிறார்.

ரசல் போதகருடைய ஆபாசத்தின் உச்சநிலை கிறிஸ்துவின் தன்மையைப்பற்றிப் போதிப்பதில்தான் ரசல்போதகரின் ஆபாசம் உச்சநிலை

யடைந்திருக்கிறது. தற்கால குனோஸ்தீகம் ஆரியானவாதம் சூன்யவாதம் முதலிய பதிதங்களின் சேர்க்கையே இவர் கிறிஸ்துவைப்பற்றிப் போதிக்கிற கொள்கை. கிறிஸ்துவானவர் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு தூதன் போன்ற ஆவிப்பொருளாம், அவர் பிறந்தபோது வெறுமனுஷனாக பிறந்தார் (ஆகவே அவர் அவதாரம் மறுக்கப்படுகிறது), அவர் ஜீவித்தும் மரித்ததும் வேறு மனுஷனாக, அவர் சரீரம் உயிர்த்தெழும்பவேயில்லை. அது அற்புதமாக ஆகாயமாக மாறிக் காணாமல் போயிருக்கவேண்டும். இந்த மனிதனான கிறிஸ்தேசு மரித்தபோது நித்தியகாலத்துக்கும் அழிந்தேபோனார் (Vol V, 466, 454). கர்த்தராகிய யேசுவின் ஆத்துமா ஒழிந்தபோயிற்று (362) அவர் முற்றும் அழிக்கப்பட்டார். அவர் மறுபடியும் பிழைக்காமல் நித்தியமாயழிந்துபோகவேண்டியதே அத்தியந்த அவசியம். ஆதலால் கிறிஸ்து மூன்றும் நாளில் காணப்பட்டபோது அவர் முந்தின யேசுவாயிருந்ததில்லை. மனுஷனாகவும் இருந்ததில்லை, ஆனால் மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்ட மகா உன்னதமான ஒரு ஆவிப்பொருளாகவும், ஒரு தேவனாகவும், ஒரு வல்லவராகவுமிருந்தார் அவர்தான் பிரதான தூதனாகிய மிகாவேல் (Vol 1, 1120–21, 5156–86). சிறுமந்தையான சபை உயிர்த்தெழும்பும்போதும் அவரைப்போல்தானிருக்கும். அதுவும் மனிதத்தன்மையிலல்ல, தெய்வீகமாகவும் தேவதன்மையிலும் வடிவத்திலுமிருக்கும். இதுவும் மகா உன்னத நிலைமையே இக்கொள்கை யோ. 2: 20–21. ரோ. 9: 5. 1 தீமோ 3: 16. பிலி. 2: 6-7. அப் 1: 11 1தீ. 2: 5-6 முதலிய வேதவாக்கியங்களுக்கு நேர்விரோதமாகயிருக்கிறதல்லவா?

இயேசு கிறிஸ்துவினாலுண்டான இரட்சிப்பைப்பற்றி ரசல்போதித்தது ஒவ்வொரு வேதவாக்கியத்தையும் பொய்யாக்குகிறது. அந்தப்படியே சுவிசேஷ அழைப்பு 1881–ல் நின்றுவிட்டதாம். அழைக்கப்பட்டவர்கள் சொற்பமான சிறுமந்தையாம். எல்லாரும் அழைக்கப்படவில்லையாம் (V. 456 1: 195) 'People's Pulpit' என்ற பத்திரிகை Vol II. சொல்லியிருப்பதாவது. நமது ஆண்டவர் சகல உலகத்தாருக்கும் சாட்சியாக சுவிசேஷம பிரசங்கம்பண்ண போதித்தார். உலகத்தைக் குணப்படுத்தவல்ல ஒரு சிறு மந்தையாகிய ராஜரீகக் கூட்டத்தைச் சேர்க்கவே சுவிசேஷமனுப்பப்பட்டது. கடவுளும் உலகத்தைக் குணப்படுத்த எத்தனிக்கவுமில்லை. Vol. 1: 93; 6: 72. உலகமானது ஆயிரவருஷ ஆட்சிக்குக் காத்திருக்கிறது அக்காலத்தில் அது கர்த்தரால் பிறந்து புதுத்தன்மை படையாமல் பாவத்தினால் வந்த அழிவுக்கும் அதன் கறைகளுக்கும் நீங்கி ஆதியிலிருந்த சுத்த மனுஷீகத்தின் நிலைமைக்குத் திரும்பிவரும். ரசல் கொள்கைப்படிக்கு இரட்சிப்பானது உலகத்துக்கு நித்திய ஜீவனையாவது ஆசீர்வாதத்தையாவது கொண்டுவராமல் ஆயிரவருஷ ஆளுகையில் இரண்டாம் தவணையை மாத்திரங் கொடுக்கிறது. 1. 150 V. 468. ஆதாமையும் அவன் சந்ததியையும்



மரணசாபத்திலிருந்து விடுதலையாக்கும்போது அவர்கள் அதினால் நித்திய ஜீவனுக் குரியவர்களாகிறதில்லை. ஆனால் பிதாவாகிய ஆதாமுக்கிருந்த நற்சமயமாத்திரமே அவர்களுக்குக் கிடைக்கும், அவர்கள் நித்திய ஜீவனுக்குப் பாத்திரவான்களாகிக்கொள்ளும்படி புதிய பரீட்சை நிலையில் வைக்கப்படுவார்கள். யோ. 3. 15–18, 36, கொ. 1. 16 ஒத்துப்பார். 1908–ஆம் அக்டோபர் 15உ 'Watch Tower' பத்திரிகையில் ரசல் போதகர் போதித்ததாவது: கிறிஸ்து கல்வாரியில் பாவவிமோசனத்தை முடித்துத் தீர்க்கவில்லை. தாம்மாத்திரமே அதை நிறைவேற்றவுமில்லை. அவருடைய சரீரத்தின் அவயங்களாக விருக்கிற நாமும் நமது ஜீவனை இக்காலத்தில் பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டியது. இந்தப் பலியும் அவருடைய பலியுடன் சேர்க்கப்பட இவ்விதமாக கிறிஸ்துவின் இரத்தமாகிறது. இது தேவனுக்கும் உலகத்துக்குமுள்ள புதிய உடன்படிக்கையை முத்திரிக்கிறது. அந்த மகாமத்தியஸ்தருடைய உதிரம் இவ்விதமாகச் சிந்தப்படுகிற வரையில் இந்தப் புதிய உடன்படிக்கை முத்திரையிடப்படமாட்டாது. இப்பாஷையின் கருத்துப்படி இந்த தேவதூஷணத்தின் அர்த்தம் என்னவென்றால் ரசலும் அவர் சிஷர்களும் சேர்ந்தே கிறிஸ்துவின் பாவப் பிராயச்சித்தப் பலியும் கிறிஸ்துவின் உதிரமுமாகிறார்கள் என்பதே. இந்தக் கொடிய பிதற்றலும் தேவதூஷணமான சாதிப்பை முன்னிட்டு மற்றச் சபைகளையெல்லாம் ஜனங்களை வழிதப்பப் பண்ணுகிறவர்களென்று நம்மை ரசல் கட்சியார் தூஷிக்கிறார்கள். நாம் பாபேலின் குழப்பக்காரராம். எபி. 1: 3; 9: 26; 10: 11–14. வாக்கியங்கள் தெளிவாயிருக்க வேதபுஸ்தகத்தைத் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டிருந்தும் இந்தப் போதனைக்கு யாதொரு உணர்ச்சியுமற்றவர்களாய் ஆண்களும் பெண்களும் செவிகொடுத்துவருவது எப்படியாகும்.

கடைசியாக இந்த ஆயிரவருஷ அருணோதயக் கொள்கையை உண்டாக்கி அதற்குத் தீர்க்கதரிசியா யேற்பட்டிருக்கிற ஆளையும் அவர் ஜீவியத்தையும்பற்றி இத்துடன் ஒரு வார்த்தை சொல்வது தப்பாகமாட்டாது. இத்த Charles Sage Russell என்பவர் பென்னிசில்வேனியா நாட்டிலுள்ள அலகனி என்ற விடத்தில் 1852 வருஷம் பெப்ருவரி மாசம் 15உ பிறந்தார். அதுமுதல் அநேக இடையூறுகளடைந்தும் செல்வவானாக வளர்ந்தவர். பல வருஷங்களுக்கு முன்னே இவர் அவ்வூரிலுள்ள சீமான்களுக்குச் சாமான் சவதரிக்கும் வேலையில் காரியசமர்த்தனும் பேர்போனவரும் சீமானுமாகி இந்தக் கொள்கை பிரபலப்படுத்தும் ஸ்திதியுடையவரானார்.

ரசல் போதகரின் ஜீவியமும் அவரைக் குற்றஞ்சாட்டும் தஸ்தாவேஜ் சாட்சியங்களும்:—

மேற்படி கூக் போதகரின் நேர்வாக்கு–ரசல் போதகரின் பிற்கால ஜீவியத்தைப்பற்றி மிகவும் விநோதமான அநேக தஸ்தாவேஜுகள் என் முன்பாக

விருக்கிறது. அவற்றுள் 1909 வருஷம் மே மாசம் 4ௗ முதல் 1913 வருஷம் ஜனுவரி மாசம் 29ௗ வரையில் எழுதி பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகை, களின் ஜாப்தாவும் அடங்கும். இவைகள் புருக்லின் நகரின் 'Daily Eagle என்ற பத்திரிகையில் வெளிப்பட்டவை. அந்தப் பத்திரிகைக்கு விரோதமாயிவர் இலட்சம் டாலருக்கு மானநஷ்டப்பிரியாது செய்திருந்தார். கோர்டில் ஜட்ஜ்மார் மேற்படி பத்திரிகை இவர்மேல் சாட்டிய குற்றமெல்லாம் சரியென்று தீர்க்க இவர் தோற்றுப்போனார். அந்த சஞ்சிகை (article) களின் தலைப்புகளைமட்டும் இங்கே வரிசையற்று உதாரணமாசக் குறிப்பிடுகிறேன்:— 'ரசல் போதகரின் மனோரதப் பிரசங்கங்கள்' அதாவது அவர் பிரசங்கியாதிருந்தும் புறநாடுகளில் அவர் செய்ததாகச் சொல்லப்பட்ட பிரசங்கங்களின் ரிப்போட்டுகள். 'விழுந்துபோன தூதர்களின் சீஷனான ரசல்,' 'ரசல் போதகர் கெட்டிக்காரப் பணக்கணக்கன்' அவரது 'மாய காரிய நிர்வாகம்,' 'போதகர் தருமத்துக்கு பலத்த கயிறுக்கட்டு', 'மனைவியை மோசம்பண்ணி வீட்டை 50 டாலருக்கு விற்றது', 'மனைவியைப் பைத்தியக்காரியென்று காட்ட முயன்றது,' 'பெண் (girl) போதகனை முத்தமிட்டு மடிமே லுட்கார்ந்தது", " அற்புதமாகவந்த கோதுமையை ரசல் அறுபது டாலருக்கு விற்க ஆலயம் வியாபாரச்சாலையானது" முதலியவைகளே இந்தக் கடை ஆர்டிக்கிளைப்பற்றித்தான் இவர் 'Eagle' என்ற பத்திரிகை மேல்பிரியாதுகொடுக்க அதுமெய்ப்பிக்கப்பட்டுத் தோல்வியடைந்தார். ஆனால் எனக்கு முன்னிருக்கிற மற்றநேக விசேஷித்த தஸ்தாவேஜுகளால் மற்ற தலைப்புகளுள்ள காரியங்களெல்லாம் உண்மையென்று விளங்குகிறது. இந்த தஸ்தாவேஜுகள் 1913—ல் ஆமில்டன் போலீஸ் கோர்ட்டில் நடந்த சாட்சியங்களைப்பற்றி கோர்ட்டு லிகிதனுடைய ரிப்போர்ட்டுகளே. அப்பொழுது போதகரே ஆஜர். ஒன்டேரியோ நாட்டு ஆமில்டன் நகர் போதகரான Rev. J. J. Ross என்பவர்பேரி லிவர்தொடுத்த மானநஷ்டப் பிரியாதில் பிரமாண வாக்குமூலம் கொடுத்தார். ரசல் தமது அந்தரங்க ஜீவியத்தைப் பற்றியும் தமது மதவியாபாரத் தொழிலைப்பற்றியும் ஆணையிட்டுரைத்த அவர் சொந்த வாக்குமூலங்களடங்கிய இந்த தஸ்தாவேஜுகளுக்கு கோர்ட்டு லிகிதன் கையெழுத்தும் முத்திரையும் பதிச்திருக்கிறது. இத்துடன்கூட அவருக்கும் அவர் தள்ளிவிட்ட அவர் மனைவிக்கும் நடந்த நீண்டகால வியாச்சியத்தின் ரிக்கார்டுகளும் வைக்கப்பட்டிருக்கிறது. மனைவியைத் தள்ளிவிட்டபோது கொடுக்கும்படி யேற்பட்ட ஜீவனாம்சத் தொகையை ஐந்து வருஷமாய் கொடாதிருந்ததைப்பற்றியதே யந்த வியாச்சியம். பிட்ஸ்பர்க்கிலுள்ள Common Pleas என்ற கோர்ட்டிலிருந்து இந்த தஸ்தாவேஜுகள் வரவழைக்கப்பட்டன. அவ்விடத்தில் 1909ஆ ஜூன்மாதத்தில் லாயர் சந்தாவுடன் ,696 டாலர் அவர் மனைவிக்குக் கொடுக்கலானார். இந்தத் திட்டவட்டமான கோர்ட்டு நடபடிக்கைகளின் தஸ்தாவேஜுகளால் 1913-ல் ரசல் தமது சொந்த



வாயினால் சொல்லிய பிரமாண வாக்குமூலங்களிலிருந்து கொடுமையினாலும் மற்ற பெண்களுடனிருந்த தகாத சம்பந்தத்தாலும் அவர் மனைவி படுக்கையிலிருந்தே (From bed and board) தள்ளுமுறி பெற்றுக்கொண்டதாக அறியலானோம். மேலும் அவர் மனைவியின் ஸ்திரீதன ஊதியத்தை மோசமாய்க் கவரும்படி தமது ஆஸ்தியைக் கையாட்சி செய்தாரென்றும் விளங்கினது. அதற்குதாரணங்களில் ஒன்றாக 35,000 டாலர் பெறும்படியான ஒரு வீட்டைத் தமது (Watch Tower Society) வாட்ச் டவர் சங்கத்தாருக்கு செரிப் மூலமாக 51 டாலருக்கு விற்றார். மேலும் அநேக கூட்டுவர்த்தகச் சாலைகளை ஸ்தாபித்தும் ஆட்கொண்டும் (Dummy corporation) மாயக் கூட்டுவர்த்தகங்கள் நடத்தியும் பண்டுசேர்த்து தமது வாட்ச் டவர் சங்கம் வேதாகம சங்கங்களை யாதரிக்கிறார். இதற்காக இவர் சீடர்கள் 1912-ல் 202,000 டாலரும், 1911-ல் 169,000 டாலரும், 1910-ல் 139,000 டாலரும் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பணத்தொகைகள் 'Eagle' பத்திரிகை வியாச்சியத்தில் William E. Van Ausbury என்ற பொக்கிஷக்காரருடைய பிரமாண வாக்குமூலத்தில் வெளிப்பட்டது. அவரே சங்கவரும்படி நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகிறதென்றும் வாட்ச் டவர் வருஷாந்தர ரிப்போர்ட்டில் ரசல் போதகர் தானும் தமது பிரமாண வாக்குமூலத்தில் தமது வேதாகம சாலையில் அற்புதக்கோதுமை பவுன் ஒரு டாலர்மேனிக்கு விற்றதாகவும், தாம் கற்றதெல்லாம் ஒரு பொதுப்பாடசாலையில் ஏழு வருஷம்போலிருக்குமென்றும் ஐஸ்கூலிலாவது காலேஜிலாவது தான் ஒருக்காலும் படித்ததேயில்லையென்றும் தான் குருப்பட்டம் பெற்றதில்லையென்றும் பாஸ்டர் பட்டம் தானே தரித்துக்கொண்டேனென்றும் சொன்னார். துவக்கத்தில் தனக்கு கிரேக்கபாஷை தெரியுமென்று சாதித்தவர் பிற்பாடு கிரேக்குப் பாஷைப் புதியேற்பாட்டைக் கண்டபோது அதன் அட்சரங்கூடத் தெரியவில்லை. என்றாலும் அவர் எழுதின புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் எபிரேயு, கிரேக்குப் பாஷைகளில் பாண்டித்தியம்பெற்ற நிபுணரையெல்லாம் தமது கொள்கைக்கு ஒத்துவராதபடியால் அவர்களைக் கண்டனம்பண்ணுகிற மகா எபிரேயு கிரேக்க வித்துவான்போல பேசுகிறார். அப்படியிருந்தும் அவருடைய சீஷர்கள் அவர்மேல் சாட்டப்படுகிற குற்றங்களெல்லாம் அபத்தமென்றும் பொது நன்மையை நாடி அவற்றை வெளியிட்டவர்களைக் கிறிஸ்தவத் தன்மையற்றவர்களென்றும் பழிதூற்றுகிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையானால் அவர் பொய்யாணை (Perjury) என்னும் குற்றத்திலிருந்து அவரை விடுதலையாக்குவது கூடாமையாயிருக்கிறது. அப்படியே அவர்களில் அநேகர் இக்குற்றங்களை உள்ளதுதானென்று ஒப்புக்கொண்டும்கடந்துபோன காரியங்கள் கடந்துபோகட்டும் ஒரு மனிதனுடைய கொடிய குற்றங்களும் மன்னிக்கப்படக் கூடியவைதானேயென்ற விடுகதைப்பேசித் தப்பப் பார்க்கிறார்கள். இவ்விதமாக அந்தப் போதகர் தற்கால சபைத்தலைவராகவும் தீர்க்க

தரிசியாகவும் மதித்து நேசிக்கவும் நம்பிக்கைவைக்கவும் யோக்கியராகிறார். ஆனால் சாதாரண மனிதருக்கு இது நம்பிக்கைக்குரிய காரியமல்ல. ஏனெனில், 1913-ல் நானே ஆமில்டன் கோர்ட்டு கிளிக்கூட்டில் தாம் முந்தின வாரத்தில் இல்லையென்ற குற்றங்களையெல்லாம் ஒத்துக்கொண்டார். அவருடைய சொந்த வாயிலிருந்து புறப்பட்ட சாட்சியங்களையெல்லாம் ஒருவன் பட்சபாதமற்ற மனதுடன் படிப்பானானால் இந்தப் போதகரின் அந்தரங்கமும் பகிரங்கமுமான முழுஜீவியமும் தேவனை மகிமைக்குறைவாக்குகிற அவருடைய தப்பான கொள்கைகளுக்கு முற்றும் பொருந்தினதாகவே காணப்படுவதுமன்றி, தமது சுயமகிமைப் பிரஸ்தாபத்தையும், எத்துக்களையும் பிரபலப்படுத்தி வேதமறியாதவர்கள் தப்புபதேசங்களின் காற்றுகளால் அடியுண்டோடும்படி இந்த 30 வருஷங்களா யுழைத்துவருகிறாரென்றும் அறிந்துகொள்வான். ஒரு மனுஷனெப்படியோ அவன் உபதேசமும் அப்படியே. இப்படிப்பட்ட விஷயத்தில் உள்ளதையுள்ளபடி சொல்லுவது ஒரு கிறிஸ்தவனுடைய அத்தியந்த கடமையாயிருக்கிறது.

தமிழ்ச் சபைத் தீபிகை.

## நித்திரையும் ஜெபமும்

தேவசத்தத்தை அசட்டை செய்யும்பொழுது, நாம் நித்திரை செய்கிறவர்களாயிருக்கிறோம். ஒருவன் தன் வீட்டில் படுத்து நித்திரை செய்கிறான். வீடு தீப்பற்றி எரிகிறது. அது அவனுக்குத் தெரியாது. ஏனென்றால், அவன் அயர்ந்த நித்திரையாயிருக்கிறான். பாம்பு அவன் பக்கத்தில் படுத்திருக்கிறது, கள்ளர் வருகிறார்கள். அவன் பக்கத்தில் எவ்வளவோ பயங்கரமான ஆபத்துகள் இருந்தபோதிலும் அவன் நித்திரை செய்கிறபடியால் ஒன்றையும் அவன் உணரான். அவனுடைய ஐம்புலன்களும் அடங்கியிருக்கிறது. இதேவிதமாக, சிற்றின்பங்களுக்கு தங்கள் மனதைச் சாய்க்கிறவர்கள், தேவசத்தத்தைக் கேளாதவர்களாய் அயர்ந்த நித்திரையாயிருக்கிறார்கள். நீங்கள் நித்திரைபண்ணுகிறதென்ன? சோதனைக்குட்படாதபடிக்கு, எழுந்திருந்து ஜெபம் பண்ணுங்கள். (லூக். 22: 46). இதோ நமதருமை ரக்ஷகர் தம் பன்னிரு சீஷர்களுடன் கெத்சமனே தோட்டத்திற்குப் போகிறார். சீஷர்களை ஓரிடத்திலிருந்து ஜெபம்பண்ணும்படி கற்பித்துவிட்டு தானும் ஒரு தனியிடத்தில் ஜெபிக்கிறார். சீஷர்களிடத்தில் திரும்பிவந்தபொழுது நித்திரை மயக்கத்திலிருந்தார்கள். தேவாதிதேவன் தாமேவந்து அவர்களோடு பேசுகிறார். அவர்களுக்குக் காது கேட்கவில்லை. தட்டி எழுப்புகிறார். இவ்விதமாக, நான் வருமளவும் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்று சொல்லிவிட்டு மேகத்தின்மீது போனவர் வர காலமாயிற்று. நம்மோடு பேசுகிறார். நாம் அயர்ந்த நித்திரையிலிருக்கிறோம்.



ஆகவே தட்டி எழுப்புகிறார். வேதாகமத்தினாலேயோ, ஒரு எழுப்புதலான பிரசங்கத்தினாலேயோ, அல்லது ஆவிக்குரிய ஒரு புஸ்தகத்தினாலேயோ, துன்பத்தினாலேயோ, இன்பத்தினாலேயோ தட்டுகிறார். எழுந்தாயிற்று. நித்திரையைவிட்டு எழுந்தவுடனே சும்மாயிருக்கக்கூடாது. எழுந்து, சோதனைக்குட்படாமல் ஜெபம் பண்ணுங்கள். ஆம் இதுவரைக்கும் நித்திரை செய்தபடியால் சரீரசம்பந்தமாக மாத்திரமே ஆபத்திலிருந்தோம். அந்த சமயத்தில் சாத்தான் நம்மில் கிரியை நடப்பிக்க ஏதுவில்லை. இப்பொழுதோ, ஆத்தும மோசத்திலிருக்கிறோம். சாத்தானோ, கெர்ச்சிக்கிற சிங்கம்போல யாரை விழுங்கலாமென்று தேடித்திரிகிறான். நித்திரை செய்யும்வரை நம்மைத் தாராட்டினான். இப்போழுதோ, தன் அம்பைக் கையிலெடுத்து நாணேற்றுகிறான். குறிப்பாய் எய்கிறான். தப்பமுடியுமா? முடியவே முடியாது. அவன் மகா தந்திரசாலி. நேரத்திற்கொரு வேஷம் போடுபவன். தப்புகிறதற்கும் ஒரு வழியுண்டு. தேவன் தம்முடைய பிள்ளைகளைக் கைவிடுவாரா? அவனிடத்திலிருந்து தப்பிக்கொள்ளுகிறதற்கு ஒரு வழியும் சொல்லிக்கொடுத்திருக்கிறார். நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள். (லூக். 22: 40) இதுதான் நமக்கிருக்கிற ஆறுதல். அவரை நோக்கிக் கூப்பிடாமலிருக்கும்பொழுது அவர் வந்து நம்முடைய பாவங்களை மன்னித்து மோக்ஷத்தில் கொண்டுபோய் வைத்துக்கொள்வார் என்று எண்ணுவதும் பிசகு. இப்படி எண்ணுகிறவர்கள், இரக்ஷிப்படையாமல் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்ளுகிறார்கள். அல்லது தங்கள் பாவங்களைப் பேணிவைத்துக்கொண்டு, ஆண்டவரே, எங்களை இரக்ஷியும் என்று ஜெபம்பண்ணிவிட்டால், உடனே தேவன் வந்து பாவங்களையெல்லாம் அகற்றிவிட்டு மோக்ஷத்தில் வைத்துக்கொள்வார் என்று எண்ணுவதும் பிசகு. எனக்கு ஒரு சரித்திரம் ஞாபகத்திலிருக்கிறது. அதாவது, நாமெல்லாரும் நித்தியவீட்டை நோக்கி மோக்ஷபிரயாணம் செய்கிறவர்களாயிருக்கிறோம். ஆனால், பாவத்தின் அந்தகாரத்தில் மோக்ஷத்தின் கதவை நாமே அடைத்துக்கொள்ளுகிறோம். இதைக் கவனித்த சாத்தானோ, வெகு கவனம் செலுத்தி, எங்கே திரும்பவும் உணர்வடைந்து மோக்ஷ கதவைத் திறக்கப் பிரயாசப்படுகிறோமோ என்று தீவிரமாய் வந்து, தன் இடது கையால் கதவைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, தன் வலது கையால் அநேக பூட்டுகள்செய்து ஒவ்வொன்றாய் அதில் மாட்டி, கதவை பலமாய் பூட்டிவிடுகிறான். அப்பொழுது பெருமூச்சுவிடுகிறோம். கதவுக்கு அந்தப் புறத்தில் நமதருமை ரக்ஷகர் நிற்கிறார். நாமோ இந்தப் புறத்திலிருக்கிறோம். இருவருக்கு மிடையில் 10 அங்குல தூரந்தான். ஆனாலும், நித்தியத்தின் பங்கை பெற்றுக்கொள்ள ஏதுவில்லை. காரணமென்ன? பூட்டுகள் விதத்திற்கொன்று மாட்டப்பட்டிருக்கின்றன. 'பிள்ளையே, எங்கிருக்கிறாய்'? என்கிற சத்தமுண்டாகிறது. 'ஆண்டவரே, அநேக பூட்டுகள் இருக்கின்ற

னவே? கதவைத் திறக்க எனக்கு சக்தியில்லையே? என்னை ரக்ஷியுமய்யா!' என்று புலம்புகிறோம். அதற்கவர்: 'நான் வந்து பூட்டுகளைத் திறக்கமாட்டேன். ஆனால், திறக்கும் வகையைச் சொல்லித்தருகிறேன் எல்லாப் பூட்டுகளையும் திறந்துகொண்டு வந்தால் மாத்திரம் என்னிடம் சேரமுடியும்' என்கிறார். நல்லது, ஒன்றுகுறைய மற்றப் பூட்டுகளைத் திறந்தாயிற்று, கதவைப் பிடித்திழுத்தால், கதவைத் திறக்கமுடியுமோ? 'ஆண்டவரே, பூட்டுகளைத் திறந்துவிட்டேனே, கதவைத் திறக்கக்கூடவில்லையே' 'இல்லை, இல்லை, ஒரு பூட்டு திறக்கப்படாமலிருக்கிறது. அதையும் திறந்தால்த்தான் கதவையும் திறக்கமுடியும்' என்கிறார். தேவகிருபையால், நாம் நம்முடைய பழைய பாவங்களையும், சிற்றின்பங்களையும் வெறுத்திருக்கலாம். தேவனுக்கு ஸ்தோத்திரம். பின்னை ஏன் ரக்ஷிப்படையவில்லை? ஏன் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படவில்லை. ஏன் தேவன் நம்மில் வாசம்பண்ணுகிறதில்லை. காரணம் ஒன்று உண்டு. கடைசிப் பூட்டு எடுபடவேண்டும். கடைசிப் பூட்டு எது? கடைசியாக நாம் பேணி வைத்திருக்கும் அற்பப் பாவமெது? நமதருமை ரக்ஷகரிடத்தில் ஒருவன் ஓடிவந்து, பாதத்தில் விழுந்து, 'ஆண்டவரே, நித்திய ஜீவனை அடைவதற்கு, நான் என்ன செய்யவேண்டும்' என்றான். 'கற்பனைகளைக் கைக்கொள்'. 'ஆண்டவரே, என் சிறுவயதுமுதல் அவைகளைக் கைக்கொண்டிருக்கிறேனே'. 'உன்னிடத்தில் ஒரு குறைவுண்டு' என்று சொன்னவுடன், மனஸ்தாபத்தோடு போய்விட்டான். ஆம், சகோதரரே, அந்த ஒரு குறைதான் நாம் தேவனிடத்தில் சேருவதற்குத் தடை.

ஒரு அம்மாள் பரிசுத்த ஆவியானவருடைய நடத்துதலுக்காக ஆவலோடு வெகுநாள் ஜெபித்துவந்தார்கள். ஆனால், அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவில்லை. அதற்குக் காரணமென்ன? என்று யோசித்தபொழுது, ஒரு காரணமிருந்தது. அந்த அம்மாள் தன் அருமை ரக்ஷகரைப் பார்க்கிலும் அருமையாய் நேசித்துவந்த ஒரு சிறு ஆபரணம் அவர்கள் கழுத்திலிருந்தது. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளத் தடையாயிருந்த அந்த ஆபரணத்தை உடனே அவர்கள் கழற்றி எறிந்துவிட்டு, தேவனோடு நெருங்கி ஜீவித்தார்கள் என்று ஒரு சரித்திரம் சொல்லுகிறது. ஆம், சகோதரரே, அற்பந்தானே என்று நாம நினைக்கிற அந்த அற்பப் பொருளோ, அல்லது அற்ப எண்ணமோ, அற்ப செய்கையோ இவைகள்தான் நம்மை தேவனிடத்திலிருந்து பிரித்து, நமக்கும் அவருக்கும் இடையில் ஒரு பெரிய தடுப்புச் சுவர் உண்டாக்குகிறது. 'ஐயோ, ஒரு நாளைக்குப் பத்துத்தரம் ஜெபிக்கிறேனே, ஒரு மறுமொழியுமில்லையே, என் நேரங்களையெல்லாம் ஆவிக்குரிய விஷயங்களிலேயே செலவிடுகிறேனே. ஒரு பலனுமில்லையே' என்று தவிக்கிறவர்களாயிருக்கிறோம. கடைசிப் பூட்டைத் திறந்துகொண்டுதான் நமதருமை ரக்ஷகரிடம் செல்லக்கூடும்.

S. R. D.



## திருஷ்டாந்தங்கள்

அமெரிக்காவிலுள்ள துரை ஒருவர் லண்டன் பட்டணத்தில் வசித்துவந்தார். ஓர்நாள் அவருடைய சகோதரன் தன் வீட்டிற்கு வருவதாகக் கடிதம் வந்தது. வரும் நாள் திட்டமாய் எழுதவில்லை. ஓர்நாள் லண்டன் பட்டணத்திலுள்ள சகோதரன் பட்டணத்துக் கடைகள் வழியாய் விரைந்து செல்லுகையில் தன் சகோதரனை கடையொன்றில் நிற்கிறதைத் தான் கண்டதாக நினைத்தார். தான் பார்த்தபோது தன் சகோதரன் பார்வைக்கு அழகானவர் என்றாலும் முன்போலப் பெருமைக்காரனாகக் காணப்பட்டதாக நினைத்தார். அப்படி நினைத்துக்கொண்டு தான் அவனைப் பார்த்த கடைக்குப் போனபோது அங்கிருந்த நிலைக்கண்ணாடியில் தான் விரைந்து செல்லுகையில் தன் நிழலையே கண்டதாக அறிந்தார். இப்படித்தான் நமது ஜீவியத்திலும் நடக்கிறது. நமது சொந்தத் தப்பிதங்கள், குறைகள், பெலவீனங்களை நாம் உணராமல் இவைகள் மற்றவர்களிடத்தில்தான் அதிகமாய்க் காணப்படுகிறதாக நாம் எண்ணி அவர்களைக் குற்றப்படுத்துகிறோம்.

யோப்பாவிலிருந்து புறப்பட்ட கப்பல் ஒன்றில் பிரயாணம்பண்ணின ஒருவர் தன் அறையிலுள்ள படுக்கையின் அடியில் கப்பலில் ஓர் துவாரம் உண்டாக்கினார். காவற்காரன் இவர் செய்கிறதைக் கண்டு 'என்ன செய்கிறாய்?' என்று கேட்டான். பிரயாணி அவனைப் பார்த்து 'உனக்கென்ன? நான் என் படுக்கையின் கீழ்த்தானே துவாரம் உண்டாக்குகிறேன்' என்றார். இது எவ்வளவு மதியீனம்! இப்படியே நாம் பேசும் வார்த்தைகள், நமது செய்கைகள், நமக்கிருக்கும் சலாக்கியங்கள் எல்லாம் நம்முடையவைகள் நமது இஷ்டப்படி செய்ய நமக்குச் சுயாதீனம் உண்டு என்று எண்ணுகிறோம். இது பயங்கரமான காரியம்! இதினாலுண்டாகும் பலன் என்னவென்றால், தேவன் நமக்குத் தந்திருக்கும் இந்த இலவசமான ஈவுகளை நாம் அற்பமாய் எண்ணி அவமதித்தால், நாம் அவைகளை இழந்துபோவது மாத்திரமல்ல, இழந்தபின் திரும்பப் பெற்றுக்கொள்வதும் கூடாத காரியம்.

**கிறிஸ்தவ ஈகை.** ஓர் சீனக் கிறிஸ்தவன் ஏழைப் பெற்றோரிடம் பிறந்தவன். தான் பெரியவனாகும்வரை தரித்திர திசையிலிருந்தான். கிறிஸ்தவனானபின் தையல் யந்திரங்கள் விற்கும் கம்பெனியில் வேலையமர்ந்து, நாளடைவில் ஒரு ஏஜென்டானான். இப்போது அவன்தான் அந்தக் கம்பெனியில் பிரதான ஏஜென்டாகவிருக்கிறான். அவன் கையின்கீழ் 70 பிராஞ்சு ஆபீசுகள் இருக்கின்றன. அவனுக்குத் திரளான பணம் உண்டு என்றாலும் பணம் அவனுடைய கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறைத்துப்போடவில்லை. ஆஸ்தியில் பெருகப் பெருகச் சபை விஷயங்களில் அதிக உற்சாகமும், ஒழுங்கும் உள்ளவனாயிருக்கிறான். சபை ஊழியத்துக்காகத் தன் பணத்தை உதாரத்துவமாய்ச் செலவழிக்கிறான். அநாதப்பிள்ளைகளுக்கு

ஓர் பாடசாலை ஏற்படுத்தி நடத்துகிறான். கோவில் கட்டுமானங்களுக்கு 1000 டாலருக்குக் குறையாமல் கொடுத்துவருகிறான். இப்போதும் தான் பிறந்த பட்டணத்தில் ஏழை ஜனங்களுக்காக நாலு பாடசாலைகள் கட்டி, அதிலுள்ள உபாத்திமாருக்குப் போதுமான சம்பளம் எப்போதும் கிடைக்கத்தக்கதாகப் போதுமான நிதி பிரத்தியேகப்படுத்தி அந்தப் பள்ளிக்கூடங்களெல்லாம் மிஷனெரிமாருடைய ஆளுகைக்குள்ளேயே இருக்கும்படி ஒழுங்குசெய்கிறான். கிறிஸ்தவ உதாரத்துவம் ஆசீர்வாதமுள்ளது.

பிரயாணியொருவன் இரண்டு வழிகாட்டிகளைக் கூட்டிக்கொண்டு உன்னதமான ஓர் மலைச்சிகரத்தில் ஏறினான். சிகரத்தின் கிட்டப் போனபோது வழிகாட்டிகள் இருவரும் ஓர் பக்கமாய் நின்றுகொண்டு பிரயாணியை முந்திச் சிகரத்தில் ஏறும்படி கேட்டார்கள். பிரயாணி வழியேற்றத்தால் இளைப்படைந்திருந்தபோதிலும் சிகரத்தில் ஏறும் சலாக்யம் கிடைத்தபடியால், சிகரத்தின் மேலடிக்கும் பலத்த காற்றைப்பற்றிக் கவனியாமல், சந்தோஷத்தோடு குதித்து நிமிர்ந்துநின்று சுற்றிவரப் பார்க்க ஆரம்பித்தான். வழிகாட்டிகள் இருவரும் அவனைப் பிடித்திழுத்து, 'ஐயா, முழங்காலில் நில்லும், மற்றப்படி நீர் காற்றினால் அடிபட்டுப்போவீர்' என்றார்கள். தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்.

தாமியன என்னும் குரு (Father Damieu) குஷ்டரோகிகள் நடுவில் வேலை செய்யும்படி தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர்களுக்காகச் சில சட்டங்களை உண்டுபண்ணினார். அந்தச் சட்டங்கள் தமக்கு அவசியமில்லாவிட்டாலும் தாமும் அச்சட்டங்களையெல்லாம் கைக்கொண்டு நடந்து அவர்களுடைய அன்பைக் கவர்ந்துகொண்டார். அவர்களுடைய குஷ்டரோக வியாதியைத் தம்மேல் ஏற்றுக்கொண்டவராக இப்படி நடந்தார்.

## நோட்டீஸ்

போன வருஷம் டிசம்பர் மாசத்துப் பத்திரிகையில் பத்திரிகையின் சந்தாவைக் குறித்துப் பின்னால் எழுதுவேன் என்று சொல்லியபடி நாளது வருஷம் ஜனுவரி மாசமுதல் பத்திரிகையின் கிரயம் வருஷம் ஒன்றுக்குத் தபால் கூலி நீங்கலாக அணா 5 (ஐந்து) என்று தீர்மானித்திருக்கிறது. முன்பணம் அனுப்பினவர்களும் சந்தாப் பிந்தி அனுப்புபவர்களும் இதைக் கவனித்துச் சரிபண்ணும்படி கேட்கிறேன். டிசம்பரில் காட்டியிருந்தபடி பத்திரிகையின் கடனுக்காக உதவிசெய்ய விரும்பும் நண்பர்கள் கூடிய சீக்கிரத்தில் தங்கள் பாகத்தை யனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. V. ASIRVADAM,
*Manager, Water of Life.*

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

305

**April 1920.** Registered No. M 136.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

**Vol. XXI** ஏப்பிரல்௴ **1920**

## உயிர்த்தெழுதலின் ஜீவியம்

'அவருடைய மரணத்தின் சாயலில்நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்' ரோமர் 6: 5.

கிறிஸ்துவால் மீட்கப்பட்டவர்களெல்லாரும் அவருடைய மரணத்தில் பங்கு பெற்றவர்களே. அவ்விதமாய் நாம் அவருடைய மரணத்தில் பங்கடைந்திருப்போமானால், அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்படவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை இவ்வசனத்தில் நாம் பார்க்கிறோம். கிறிஸ்துவின் மரணத்தில்மாத்திரம் பங்கு பெறுவதும் அவர் நிமித்தம் துன்பத்தையனுபவிப்பதும், தன்னையே வெறுப்பதுமாகிய காரியங்களைப்பற்றிமாத்திரம் பேசுவது அவரைப் பின்பற்றுவதின் ஒரு பக்கத்து வழியைக் காட்டுகிறது. அதோடுகூட அவருடைய உயிர்த்தெழுதலின் ஜீவியத்தைப்பற்றியும் பார்க்கவேண்டும்.

உயிர்த்தெழுதலின் வல்லமையே அவருடைய மரணத்தின் சாயலிலிருந்து உள்ளான மனுஷனில் வளரச் சக்தியைக் கொடுக்கிறது. கிறிஸ்துவோடு மரித்தலாவது பழைய ஜீவியமாகிய பாவத்துக்கும் உலகத்துக்கும் மரித்தலைக்குறிக்கும். அவரோடு உயிர்த்தல் பரிசுத்தாவியானவர் நம்மிலுள்ள பழைய சுபாவங்களை யொழித்து புதிய ஜீவனை யருளுவதைக் குறிக்கும். உண்மையாய்க் கிறிஸ்துவைப்போல் நடக்க விரும்பும் கிறிஸ்தவனுக்கு அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலைப்பற்றிய அறிவு வேண்டியது அதிக அவசியம்.

இவ்வித ஜீவியத்தை நாம் எங்கே கண்டடையலாம்? அவருடைய மரணத்துக்கு முன்னே பாவம் ஜெயமாக விழுங்கப்படுவதில்லை. அவரு

டைய மரணத்துக்குமுன் சீஷர்களும் பரிசுத்தாவியினால் நிரப்பப்படவில்லை. ஆனால் அவருடைய உயிர்த்தெழுதலோடு எல்லாம் மாறிப்போயிற்று. கிறிஸ்து தேவனுடைய சர்வ வல்லமையினால் உயிரோடெழுந்தார். அந்த உயிர்த்தெழுதலின் ஜீவன் நித்தியமான சர்வவல்லமை நிறைந்ததாயிருந்தது. கிறிஸ்து பாவத்தையும் மரணத்தையும் ஜெயித்தார். அந்த ஜெயமே தமது சீஷர்களுக்கும் உரியது. அவர் உயிர்த்தெழுந்ததுமுதல் கிறிஸ்துவின் ஆவியிலும், சந்தோஷத்திலும் பரம வல்லமையிலும் பங்கு பெறும்படி சக்தியைக்கொடுத்தார். இவ்வித சக்தியைக் கொடுக்கும்போது அந்த ஜீவனானது தமது மரணத்துக்கு முன்னிருந்ததைப்போலல்ல. மரணத்தினால் ஜெயித்து உயிர்த்த ஜீவியத்தையே தந்தார். இந்த உயிர்த்தெழுதலின் ஜீவியமே பாவத்துக்கொரு முடிவையுண்டாக்கி அதை யொழித்தது. இந்த ஜீவியமே நரகத்தையும், பிசாசையும், உலகத்தையும் மாம்சத்தையும் ஜெயித்தது.

இதுவே மனுஷனில் தெய்வ வல்லமையைக்கொடுத்தது. இதுவே அவருடைய சாயலைக் கொடுக்கக்கூடியது.

'அவர் பிழைத்திருக்கிறது தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார், நீங்களும் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்'. ரோமர் 6: 10, 11. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் ஜீவிய மகிமையைப் பரிசுத்தாவியானவர்மூலமாய் தேவன் நமக்கு வெளிப்படுத்துவாராக. இந்த ஜீவியத்தில் நாம் அவரோடு ஐக்கியப்பட்டிருக்கிற இரகசியத்தை அறிகிறோம்.

அநேக கிறிஸ்தவர்களுக்கு இந்த ஐக்கியத்தின் ஜீவியம் ஒரு மறைவான காரியமாயிருக்கிறது. ஆகையினால்தான் அவர்கள் சொந்த ஜீவியம் பாவம் நிறைந்ததும் பெலவீனமானதும் தோல்வியடையக்கூடியதுமாயிருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப்பற்றித் தங்கள் சொந்த அபிப்பிராயமாய் எண்ணுகிறார்கள். அதாவது கிறிஸ்து நமது மத்தியஸ்தராக பரலோகத்திலும் தமது ஊழியத்தைச்செய்ய உயிரோடெழுந்திருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அப்படியல்ல நமது அன்றாட ஜீவியத்தில் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை காணப்படவேண்டுமென்பதே. இவ்விதமான எண்ணம் அவர்களிலில்லை. ஆதலால்தான் அவர்கள் அவரில் ஐக்கியப்பட்டு அவரை முழுவதுமாய்ப் பின்பற்றமுடியாத நிலைமையிலிருக்கிறார்கள். ஒரு பாவி கிறிஸ்து ஜீவித்ததுபோல தானும் ஜீவிப்பது கூடிய காரியமல்லவென்று எண்ணக்கூடும். ஆனால் அவர் நிமித்தம் எல்லாவற்றையும் நஷ்டமென்றெண்ணித் தம்மிடம் வருபவர்களுக்கு உயிர்த்தெழுதலின் வல்லமையைக் காண்பிக்க ஆயத்தமாயிருக்கிறார். பிலிப். 3: 8; எபேசி. 1: 19, 20. கிறிஸ்துவையல்லாமல் ஜீவிக்கிற ஆத்துமாவே! வா



அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்று. நீ இதுவரை ஜீவித்த ஜீவியத்தைவிட மேலான ஜீவியம் செய்ய பரிசுத்த வேதாகமத்தை திறந்து பார் அதில் புதைந்திருக்கும் பொக்கிஷம் உன்னுடையதே.

**இப்போது உன்னை மூன்று கேள்விகள் கேட்கிறேன்.**

**முதலாவது.** கிறிஸ்துவின் ஆளுகைக்கும் அவருடைய உயிர்த்தெழுதலின் ஜீவியத்துக்கும் உன்னையொப்புவிக்க ஆயத்தமாயிருக்கிறாயா?

கிறிஸ்துவின் முன்மாதிரியைப்பற்றிய சிந்தை உன் பாவங்களை உனக்கு உணர்த்திக் காட்டுமென்பதற்குச் சந்தேகமில்லை.

தெய்வ சித்தத்துக்குப் பதிலாய் உன் சுய சித்தத்தையும் சுய மகிமையையும் தேடுவதினாலும், பேராசை, பெருமை, சுயநயம், மனிதரிடத்தில் அன்புத் தாழ்ச்சியாகிய குணங்களையுடையவனாயிருப்பதாலும், கிறிஸ்துவின் தெய்வ லக்ஷணங்களாகிய அவருடைய கீழ்ப்படிதலுக்கும், தாழ்மைக்கும், அன்புக்கும் எவ்வளவு தூரத்திலிருக்கிறாயென்று உன்னைச் சீர்தூக்கிப்பார். இந்தக் காரியங்களையெல்லாம் உணர்ந்து, உன் பாவங்களை யறிக்கையிட்டுப் பின்வரும் தீர்மானங்களைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறாயா? 'என்னைக் கிறிஸ்து தமக்குச் சொந்தமாக்கிக்கொண்ட பிறகு என் சுய சித்தத்தின்படியொன்றையும் செய்யமாட்டேன். எனக்குள்ளதெல்லாவற்றையும் அவருக்கொப்புவித்து அவருடையவன் ஆவேன். அவர் தமது வசனத்தின் மூலமாய் பரிசுத்தாவியானவர் கட்டளையிடுகிறபடியெல்லாம் செய்வேன். அவர் என்னில் தங்கி என்னை ஆண்டுவர என்னை முழு இருதயத்தோடும் ஒப்புவிக்கிறேன்' என்பதே.

இவ்வித தத்தஞ்செய்வதற்கு அவசியம் வேண்டியது விசுவாசம் ஆகையால் **இரண்டாவது கேள்வியாவது.**

அவரிடம் ஒப்புவித்ததைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டு ஆளுகை செய்து காப்பாற்றுவாரென்று விசுவாசிக்கிறாயா? அப்படி விசுவாசிக்கிறவன் தன்னை முழுவதுமாய்க் கிறிஸ்துவுக்கு ஒப்புவித்தால் 'நான் மரித்தேன் இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்'. என்ற பவுல் அப்போஸ்தலனுடைய வசனங்களை யறிந்துகொள்ளக்கூடும். இது நமது சுய சக்தியினால் நடத்தக்கூடிய ஜீவியமல்ல. ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்; கிறிஸ்து தாமே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருப்பது உயிர்த்தெழுதலின் ஜீவியம். அவரோடு இந்த ஜீவனில் ஜீவிக்கிறேன் என்கிற நிச்சயத்தை நாளுக்குநாள் நம்மில் வர்த்திக்கப்பண்ணுவாராக.

ஜீவனுள்ள தேவனுடைய ஆலயங்களாகிய நாம் இவ்வித பரிசுத்த ஜீவியம் செய்யமுடியாதென்று பயப்படவேண்டியதில்லை. உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிற கிறிஸ்து நமது சத்துருக்கள் எல்லார் மேலும் தமது

வல்லமையைக் காண்பித்தார். நம்மை நேசிக்கிற அவர் தாமே நம்மில் கிரியை செய்வார். அவரில் நமது நம்பிக்கையை வைக்கவேண்டும். அப்போது நமக்குச் சக்தியருளப்படும்- கிறிஸ்துவே நமது ஜீவன்.

## மூன்றாவது கேள்வி

இழந்துபோனதைத் தேட கிறிஸ்து உலகத்துக்கு அனுப்பப்பட்டது போல, நீயும் மற்றவர்களை இரட்சிக்க இந்த ஜீவியத்தை உபயோகிக்க ஆயத்தமா? நம்முடைய சுய மேன்மையைத் தேட இச்சீவியம் பிரயோஜனமாயிருக்கமாட்டாது.

மனந் திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் அருளுவதற்கே தேவன் கிறிஸ்துவை எழுப்பி உயர்த்தினார். பாவிகளுக்காக அவர் வேண்டிக்கொள்கிறார். இந்த நோக்கத்துக்காகவே உன்னையும் ஒப்புவி. கெட்டுப்போகிறவர்கள் மத்தியில் ஊழியஞ் செய்யவும் அவர்களுக்காக ஜெபிக்கவும் உன்னைத் தத்தஞ்செய். அப்புறம் நீ சரியான பாத்திரமாகவும் நல்ல கருவியாகவும் இவ்வுயிர்த்தெழுதலின் ஜீவியத்தினால் உபயோகப்படுத்தப்படுவாய்.

சீஷருடைய ஜீவியம் கிறிஸ்துவின் மரணத்துக்கு முன் இருந்ததைவிட அவருடைய உயிர்த்தெழுதலுக்கப்புறம் எவ்வளவு வித்தியாசமுடையதாயிருந்தது. முன்னே எல்லாம் பெலயீனமும், பயமும் தன்னயமும், பாவமுமாயிருந்தது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கப்புறம் எல்லாம் வல்லமை, சந்தோஷம், ஜீவன், அன்பு, மகிமை. இதுபோலவே நமக்குள்ளும் பெரிய மாறுதல் உண்டாகும்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தை ருசித்து நமது ஜீவியம் முழுவதையும் அவருக்கு ஒப்புவிப்போமாக.

---

## பர்னபா

### I

விருத்தாந்தத்தை பின்வரும் பாகங்களில் வாசித்துப்பார்க்க:—

பூர்வம். அப். 4: 36; விவாகம் செய்யாதவர், மாற்குவின் பந்து கொலோ. 4: 10; சுயாதரவில் வேலை செய்தவர். 1 கொரி. 9: 4-6.

வேலைகள். தீர்க்கதரிசியாக: எருசலேமில் 4: 37, 9: 27; அந்தியோகியாவில் 11: 22-29; எருசலேமில் 11: 30; அந்தியோகியாவில் 11: 25-133. அப்போஸ்தலனாகவும் மிஷனெரியாகவும்: சீப்புருதீவில் 13: 4-12; தென்கலாத்தியாவில் 13: 13–14: 25; அந்தியோகியாவில் 14: 26—15: 3; எருசலேம் கவுன்சலில் 15: 4-29; அந்தியோகியாவில் 15: 30-35, கலா. 2: 13; சீப்புருதீவில் 15: 36-40.



(N. B. பற்பல பாரம்பரைகளுண்டு. அவைகளை நம்புவது தகுதியல்ல. ஓர் பாரம்பரையில் 70 சீஷரில் ஒருவர் என்றும் ஒன்றில் மில்லன் பட்டண பிஷப்பாயிருந்து மரித்ததாகவும், ஒன்றில் சீப்புருதீவில் ரத்த சாட்சியாக மரித்ததாகவும், ஒன்றில் ரோமில் வெகு நாளாய் வேலை செய்து மரித்ததாகவும், இவர் அலக்சந்திரியாவில் வேலை செய்து மரித்தார் என்று மற்றொன்றிலும் சொல்லப்பட்டிருக்கிறது. எபிரேயர் நிருபத்தை எழுதினதாக தெர்த்துலியன் சொல்லுகிறான். பரி: பர்னபாவின் நிருபம் ஒன்றுமிருக்கிறது. அக அத்தாட்சியிலிருந்து அவர் இவைகளுக்கு ஆக்கியோனல்லவென்று தோன்றுகிறது.

### II

ஆதிகாலத்திலிருந்த பரி: அகஸ்தீன் சாஸ்திரி சொன்னதாவது 'பரிஸ்தேவன் ஜெபிக்காவிட்டால் பரி: பவுல் பிரசங்கித்திருக்கமாட்டார்' நடபடி புஸ்தகத்தை வாசிக்கிற நாம் மனுஷ மேறையின்படி சொல்லக்கூடியதாவது 'தாள்பாள்களை பரி: பர்னபா திறக்காவிட்டால் சுவிசேஷத்துக்கு திறந்த வாசலை பரி: பவுல் கண்டிருக்கவேமாட்டார்'. இப்புஸ்தகத்தில் பல பக்தரின் சரித்திரம் அரைகுறையாய் பரி: லூக்காவால் வரையப்பட்டிருக்கின்றன. சவிஸ்தாரமாய் பரி: பவுலின் வேலைகள் வரையப்பட்டிருப்பதினால் பர்னபா முதலியவர்களின் ஜீவியம் சிறு சிறு நட்சத்திரங்களைப்போல் அங்குமிங்கும் இலங்குகின்றன. பர்னபாவின் விசேஷித்த லட்சணம் பெருந்தகமை புருஷ லட்சணம் சிறந்து விளங்கப்பெற்றவர். இழிகுணமென்பது இவரிடம் கனவிலும் காணக் கிடையா? இவர் கால யூதர்கள் பொதுவாக பெருந்தன்மை இராகின்றார்கள். இவரோ தாவீதின் கோத்திரத்து சிகைமான யேசுபெருமானை தாங்கி நின்றபடியால் இவரும் சிங்காசியானார். பூமியில் மன்னன் யாவன்? பெருநெஞ்சனே யவன்.

### III

பரி: பர்னபாவின் மேம்பாட்டை அவருடைய சரீரத்தில் பார்க்கலாம். யாவரும் மதிக்கக்கூடிய ரூபமுள்ளவராயிருந்தார். வளர்ந்த உருவமும், புனித முகமும், ரிஷிகளுக்குரிய காம்பீரிய நடையும், லேவி கோத்திரத்திலுள்ள தனது முற்பிதா ஆரோனுக்கொப்ப தாடியும், யாவரும் விரும்பக்கூடிய சாதாரணமும் சுத்தமுமான உடையும் உடையவராயிருந்தார்போலும்,

அந்தியோகியாவில் மார்க்க எழுப்புலுண்டாக பரி: பர்னபா அங்கு அனுப்பப்பட்டு அவர்களுக்குள் பணிவிடை செய்துவந்தார். அச்சமயத்தில் தெருத்தெருவாய்ப் போய் புதிதாய் மதப் பிரவேசமடைந்தவர்களை பரிசுத்த கச்சையினால் இறுக கட்டினார், பொல்லாத அப்பட்டணத்தார் இவரையும் இவருடைய உதவிக்காரரையும் கண்டபோது இவர்களுக்கு 'கிறிஸ்தவர்கள்' [கிறிஸ்துவே இவர்கள் அல்லது கிறிஸ்துவாகிய மனுஷர்கள்]

யென்று பேரிட்டார்கள் [அப். 11: 26;]. இவ்வசனத்தின் சிலமூல பிரதிகளில் இப்பதம் 'கிறிஸ்தவர்கள்' (Siniatic B. D.) யென்றுமிருக்கிறது. கிறிஸ்தவர்களென்று ஓர் பேரும் கிறிஸ்துவினடியாருக்கு இருந்ததாக சியுட்டோனியு யென்ற ரோமை சரித்திரக்காரனுமுரைக்கிறான். கிறிஸ்தவர்களென்றால் 'புனித குணவான்கள்' யென்று தமிழில் கருத்து.

லீஸ்திராவில் பரி: பர்னபா, பவுல் யென்பவர்கள் தங்கி தங்களுடைய ரட்சகரும் ஆண்டவருமான ரட்சணியா மூர்த்தியைக் குறித்து பிரசங்கித்தார்கள் [14: 8-14]. அச்சமயத்தில் பரி: பவுல் பிறவிச்சப்பாணியை குணமாக்கினதுமன்றி அவர்களுக்குள் பிரசங்க காலக்ஷேபமும் நடத்தினான். யெனினும் அவ்வூரார் பரி: பர்னபாவை யூப்பித்தர் யென்றும், பரி: பவுலை மெர்கூரி யென்றும் சொன்னார்கள். கிரேக்க வணக்கத்தில் யூப்பித்தர் 'பரலோகத்தின் பிதா', மெர்க்கூரி 'தேவர்களின் அஞ்சல்காரன்'. வானலோகத்தின் பிதா மனுவுருவெடுத்தால் பர்னபாவைப்போ விருப்பானென அவ்வஞ்ஞான ஜனார் மதித்தார்கள்.

வாசிப்போரே! நமது பேச்சு விண்ணுலகத்திற்குரியதாயிருக்கிறதா? நமது ஜீவியம் உலக வழிபாடுகளுள்ளதாயல்ல பரி: ஆவியினால் நடத்தப்படுவதற்குரியதாயிருக்கவேண்டுமே. நாமண்டின அமலகுருவின் பரிசுத்தம் நம்மிடம் காணப்படவேண்டும், நமது ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடு மிருக்குமாயின் [1 யோ. 1: 3] நம்மினும் அவருடைய ஜோதி விளங்கும். இக்காலத்தில் கிறிஸ்து மதம் பிரபல்லியமாகாதிருப்பதற்கு காரணமென்ன? பிரசங்கத்திற்கேற்ற நடக்கையில்லை, வாயினால் அறிக்கைபண்ணுவது போதாது. நமது ஜீவியமும் நமது கோட்பாட்டிற்கிசைந்திருக்க வேண்டும். அப்படியாயின் போதனையின்றி நமது நடக்கையினால் பலர் கிறிஸ்துவின் தாசராவார்கள்.

## IV.

இரண்டாவது பரி: பர்னபாவின் மேம்பாட்டை அவரால் பக்குவப்படுத்தப்பட்ட பக்தர்களில் பார்க்கலாம். இவர் மிக அனுதாபமுள்ளவராயிருந்ததாக பரி: வேதாகமங்களில் வரையப்படுகிறார். புறக்கணிக்கப்பட்டவர்களை சேர்த்துக்கொண்டதுமாத்திரமல்ல, அவர்களை தமது குருமூர்த்தியைப்போல் பக்குவப்படுத்தவும் செய்தார். மற்றவர்களால் கைவிடப்பட்டவர்களைச் சேர்த்துக்கொண்டு 'கர்த்தருக்குள் பூரண புருஷராக்குவது' இவரது தொழிலாயிருந்தது. இவ்விஷயமாயுள்ள இவரது சிறந்த இருதயத்தையும் பெரு நெஞ்சையும் 4 சம்பவங்களில் தெளிவாய் வாசிக்கிறோம்.

(a) முதல் சம்பவம் எருசலேமில் நடைபெற்றது. பென்னியமீன் கோத்திரத்தவனும் சவுல்ராயனின் இரக்கமற்ற தன்மையும் பொருந்திய சவுல் துன்பப்பட்டு புதிய மனுஷனாய் எருசலேம் சிஷரிடம் வருகிறார்.



ஆனால் அவரில் சந்தேகங்கொண்டு யாவரும் புறக்கணித்தார்கள். அவரோ துரோகியென யூதராலும், ஆட்டுத்தோலையுடைய புலியென கிறிஸ்தவ தாசராலும் எண்ணப்பட்டு எருசலேமின் வீதிகளில் தன்னந்தனிமையாய் அலைகிறார். இச்சமயத்தில் பரி: பவுலின் ஞானத்தகப்பனும் ஜாமீன்தாரராயும் பரி: பர்னபா நிற்கிறார். எருசலேமிலுள்ள யாவரும் அவரைப் பழிப்பாய்ப் பேசும்போது பரி: பர்னபா தன்னிருதயத்தையும், தன் வீட்டையும் திறந்து அவருக்கு இடங்கொடுத்தார்.

நண்பரே! பாவ மனஸ்தாபங்கொண்டு மனந்திரும்பியவுடன் பரிசுத்தத்தையடைய விருப்பமுள்ளோராய்ப் பலர் நம்மிடம் வருவதுண்டு. தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மிடம் உதவி தேடிவருகிறார்கள். உடனே அவர்களைச் சேர்த்துக்கொண்டு உதவிசெய்யாமலிருப்போமாயின் அவர்களுடைய ஜீவியம் முழுவதுமே கெட்டுப்போம். அச்சமயத்தில் ஸ்திரீ தன் கர்ப்பத்திலிருக்கும் பிள்ளையை கவலையோடு காப்பதுபோல் (கலா 4: 19) நாமும் கருத்தாய் அவர்களை நடத்தாவிடில் நாம் அவர்களை இழந்துபோகலாம். தருணம் கைவிடேல் 'யென்ற சூத்திரத்தை கடைப்பிடித்த பரி: பர்னபாவினால்' பரி: பவுலும் திருச்சபையின் தூணானார்.

(b) இரண்டாம் சம்பவத்தை புறசாதியாரை ஊன்றக்கட்டினதில் பார்க்கலாம். 'அறுப்பு மிகுதி' யென்று வாக்குக்கொடுத்த ரட்சாபெருமான் 'கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலன் கொடுக்கும் யென் மந்திரத்தையும் சொல்லிவிட்டுப்போனார். ஆனால் நல்லெண்ணமும், பரிசுத்த சிந்தையுமுள்ளோராய் சிஷர்களிருந்தபோதிலும் புறசாதியாருக்குள் தங்களுடைய கோதுமை மணியை விதைக்கப் பயந்தார்கள். சர்க்கார் எண்ணங்களினாலும், புறம்பான அபிப்பிராயங்களினாலுமிவர்கள் கட்டுப்பட்டிருந்தார்கள். ஆனால் சிப்புருதீவரான இவருடைய சுற்றத்தார் சிநேகிதர் பலர் அந்தியோகியாவில் பிரசங்கிக்க மார்க்க எழுப்புதலும், கும்பல் கும்பலாக கிளர்ச்சியும் (Mass Movement) புறசாதியாருக்குள்ளுண்டானது. இச்சமயத்தில் குணமும் யூகமும்வாய்த்த பரி: பர்னபா அவர்களுக்குள் வேலை செய்ய அனுப்பப்பட்டார். அங்கு திருச்சபையின் புறம்பான விஷயங்களைக் கவனியாது பரி: ஆவியின் கிரியைமாத்திரம் தேடினார். அவர்களுக்குள் தேவ கிருபையைக் கவனித்தபோது மார்க்க எழுப்புதலைச் சட்டதிட்டங்களால் கட்டுப்படுத்தவில்லை. அவர்கள் பிறப்பில் புறஜாதியாயிருந்தபோதிலும், பரி: ஆவியின் புதுப்பிறப்பினால் 'பரிசுத்தவான்களானார்கள்' புறக்கணிக்கப்பட்ட இவர்களை திருச்சபையின் ஐக்கியத்துக்குள் சுயாதீனத்தோடு சேர்த்தார்.

பரி: பர்னபாவின் ஆவி மிஷனெரி ஊழியத்துக்கு தேவை: பணம், குலம், அறிவு வித்தியாசமின்றி சுவிசேஷ விதையை விதைக்கக்கடவோம்.

ஓர் காலத்தில் நமது பாகங்களில் ஏராளமானவர்கள் மனமாறி சேர்ந்தகாலம் போக இக்காலத்தில் சபை விருத்திக்குறைவாயிருக்கிறது. எருசலேம் சபையின் ஆவி நம்மிடமிருக்கிறதோவென நம்மைப் பரிசோதிப்பது தகுதி வெளி விஷயங்களைக்கருதி சுவிசேஷ விதையை விதைக்க பயப்படுவோமாயின் விளைவு பலன் கிடைப்பதரிது. எண்ணுமற் செய்வெண்மையென்பது முதியோர் வாக்கு.

மேலும் நம் கிறிஸ்தவ சபை அநேக வகுப்புகளாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிற இக்காலத்தில் பர்னபாவின் ஆவி தேவை. இவருடைய பெருந்தன்மையும், நீண்ட பார்வையும் நம்மிடமிருக்குமாயின் S.'P. G, C. M. S. சபைகள் யென்ற வித்தியாசங்கள் குன்றிப்போம்.

(c) மூன்றாவது பரி: பர்னபாவின் பெருந்தன்மையை சவுலை வேலைக்கு அழைப்பதில் பார்க்கலாம். அந்தியோகியாவில் புறஜாதியாருக்குள் வேலை செய்யும்போது திரள் ஜனங்கள் கர்த்தரிடம் சேர்க்கப்பட்டார்கள். அவர்களுக்கு ஞானோபதேசம் ஒண்டியாய் கற்றுக்கொடுத்தல் கூடாததாக காணப்பட்டது. அச்சமயம் சவுலைதேடி அழைத்து அப்புற ஜாதியாருக்குள் வேலை செய்யப்பண்ணுகிறார்.

சவுல் இதுவரை பரிசேய கொள்கையை மேம்பாடாகக்கொண்டவராயும், யூதர்களுக்குள் தனது சமயத்தவரே உயர்ந்த ஜாதியென்றெண்ணினவருமாயிருந்தார். பரிசேயனும், கிறிஸ்தவ சபை விரோதியுமாயிருந்த இவரை அந்தியோகியாவுக்கு திருப்பணிவிடை செய்ய அழைப்பது தகுதியல்லவென பலர் பர்னபாவுக்கு ஆலோசனை சொல்லியிருக்கலாம். இம்முறை தவறென அற்ப நெஞ்சத்தனர் பலர் கூறியுமிருக்கலாம். சவுலைக்கண்டவுடன் அந்தியோகிய சபை ஆரம்பத்தில் புலியைக் கண்டதுபோல் வெருண்டிருக்கலாம். யென்றாலும் சவுலின் பிற்கால ஜீவியத்தை வாசித்தோரில் பரி: பர்னபாவின் மேல்குற்றஞ் சுமத்துவார் யாவர்? இருடைய மனோ விலாசத்தை நன்கு மதியாதோர் யாவர்?

உலகத்தில் மற்றவர்களை புறங்கூறுவோர் பலருளர். சில பக்தர்களின் சிற்சில தவறுதல்களையும், பூர்வ குறைகளையும் வெளியிட்டு அவர்களுடைய திருப்பணிவிடையையும், பக்தியையும் குறைகூறுவோர் அநேகர் உண்டு. சவுலின் முந்தின ஜீவியத்தைக் கவனித்து அவரைப் புறக்கணித்திருந்தால் பரி: பவுல் உண்டாகியிருக்கமாட்டார். ஆதலால் பழைய ஜீவியத்திலும், ஆதாமுக்குரிய பூர்வதன்மையினாலும் கிறிஸ்தவ தாசரை அவமதித்தல் தகாது அவர்களுடைய புதுப்பிறப்பையும்; அப்பிறப்புக்குரிய புதிய ஜீவனையும் மாத்திரம் கவனிப்பது தகுதி.

(d) நான்காவது சம்பவத்தை அப். 15: 36-41-ல் பார்ககலாம். முதலாம் மிஷனேரிப் பிரயாணத்தில் பரி. மாற்கு கூடப்போனார். ஆனால்



யாது காரணத்தினாலோ (13: 13) பெர்கே பட்டணத்திலிருந்து தன் சுய வீடு திரும்பினார் ஆதலால் இரண்டாம் பிரயாணத்தில் அவரைப் பரி: பவுல் புறக்கணிக்க, பரி: பர்னபா அவரைக் கூட்டிக்கொண்டு சீப்புருதீவில் சுவிசேஷ வேலை செய்தார்.

பரி: மாற்குவில் காணப்பட்ட ஓர் தப்பிதத்தினிமித்தம் பரி: பவுல் அவரைத் தள்ளினார். அந்தியோகிய சபைமுழுவதுமே பரி: பவுலுடன் சேர்ந்துகொண்டதாக தோன்றுகிறது (15: 40). என்றாலும் பரி: பர்னபாவின் பெருந்தன்மையோ பரி: மாற்குவின் தவறுதலை பெரிதாக யெண்ணாது அவரைச் சேர்த்துக்கொண்டு அவரை வல்லபுருஷனாக்கினது. பரி: மாற்குவை சேர்த்துக்கொண்டதினால் திருச்சபைக்கு எவ்வளவு நன்மை வந்தது. இப்பிரிவினை தீமைக்கு யேதுவாயிராது நன்மைக்கு ஏதுவாயிருந்தது. சுவிசேஷம் சீப்புருவில் நிலைநாட்டப்பட்டது செர்கியு பவுல் குணப்பட்டதாக போக்த அத்தாட்சியிருப்பதாக Ramay சாஸ்திரி சொல்லுகிறான். மேலும் கொஞ்சக்காலத்துக்குள் அவமதிக்கப்பட்ட பரி: மாற்கு இவர்களுக்கு மிகப்பிரியம் வாய்த்த உகந்தமகனானார் (1 பேது. 5: 13. 2 தீமோ. 4: 11).

* * * *

நமதாண்டவர் பாவிகளை ரட்சிக்க பாவ மனுஉருவை எடுத்து பாதாளம் வரை ஏகினார். பரிசேயர் முதலியோர் சாதாரண ஜனங்களை பாவிகளென புறக்கணித்து தள்ள இப்பரிசுத்தநாதர் பாவிகளை சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு சிநேகிதரானார். இவ்வன்பின் சொரூபியை தரிசித்த பரி: பர்னபா புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவும், சகாயமுமானார். தாமண்டின குருவைப்போல இவரும் இருளிலிருக்கும் ஜனங்களுக்கு வெளிச்சமும், இருதயப் புண்பட்டோருக்கு அவிழ்தமுமானார். நெறிந்த நாணலை பேணுவோரும், மங்கி யெறியும் திரியை அவியாதவருமான சுகுண புருஷனுமாயிருந்தார். ஆனதுபற்றியே 'நல்லவன் ஒருவனுமில்லை' யென்ற குருமொழியை எழுதிவைத்த பரி: லூக்கா இவரை 'நல்லவன்' யென எழுதினார் (11: 24) இவ்வரிய குணத்தினால்தான் இவருக்கு 'பர்னபா' என்ற காரணப்பேரும் சீஷரால் இடப்பட்டது. பர்னபா என்றால் பெர்க்கிளீவியின் மகன் (4: 36). Paraclesis என்ற கிரேக் பதத்தை 'தேற்றரவாளன்' ஆறுதல்படுத்துகிறவன், 'உதவிசெய்கிறவன், 'வக்கீல் யென்று பல விதமாய் திருப்பலாம். பாவிகளை நேசித்தல் தேவனுடைய பிள்ளைகளின் கடமை. அவர்களை நேசிப்பதுமாத்திரமல்ல; அவர்களையும் பரிசுத்தவான்களாக்கவேண்டும். தற்பெருமை, தன்னயம் முதலிய தீக்குணங்களினால் பிராமணர் முதலியோர் சாதாரண ஜனங்களின் நிழல்கூட தங்கள்மேல் படக்கூடாதென சாதிக்கிறார்கள். இக்குணம் நம்மிடம் காணப்படுமாயின் நாம் ரட்சகரை தரிசித்தவர்களேயல்ல.

## V

பரி: பர்னபா அற்பமாய் எண்ணப்படவும் ஆயத்தமாயிருந்தார். இதிலும் அவருடைய பெருந்தன்மையைப் பார்க்கலாம். நம்பெருமான் வான ஜோதியாயிருந்தாலும், நரவுருவெடுத்து தம்மை சாதாரண மனுஷனென காட்டினார். அவருடைய பாதாரவிந்தத்தில் படித்ததினால் இவருக்கும் மறைவாய் ஜீவிக்கும் ஜீவியம் உண்டானது.

ஆரம்ப எருசலேம் சபையில் ஐசுவரியவான்கள் பலர் இல்லை. துன்பத்தினால் தரித்திரமடைந்த பலரிருந்தார். பூர்வ கிறிஸ்தவர்களுக்குள் பரி: பர்னபா ஐசுவரியவான்களுக்குள் ஒருவராகயிருந்தார். எனினும் யாவரையும்போல் தரித்திரராக யெண்ணப்படும்பொருட்டு தமது சொத்துக்களை விற்று அச்சபை ஆதரிப்புக்கொடுத்து இவர் தரித்திரரானார். ஐசுவரியத்தின்மேல் பிரியமில்லாதோர் யாவர்? இலச்சுவான் என்ற கௌரவம் யாவருக்குமுண்டு. இலச்சுவானாக யாவருக்கும் பிரியமுண்டு. ஆயினும் தன் சொத்து தன் வேலைக்கு இடறலாயிருந்ததினாலேயோ, மற்றவர்களும் அதைக்கொண்டு நன்மை செய்யவே இவர் அதை நல்ல நோக்கத்துடன் விற்றுவிட்டு சுயவிருப்பத்தினால் தரித்திரமானார். 'உன் கால் உனக்கு இடறுண்டாக்கினால் அதை தறித்து எறிந்துபோடு' யென்று சொன்ன புண்ணியமூர்த்தியே இவருக்கு இந்நல்விருப்பத்தையும் அவ்விருப்பத்தைச் செய்ய சத்துவத்தையும் ஈந்தார்.

நமது ஐசுவரியம் கர்த்தர் நமக்குக் கொடுத்த ஈவாயிருக்கிறது. ஆதலால் அதை சத்விஷயங்களில் செலவளித்தல் தகுதி. மேலும் இவர் தரித்திரமானபோதிலும், மற்றவர்களிடம் பிச்சை எடுத்து பிழைக்காது 'கையினால் வேலைசெய்து' தமது ஆதரிப்பைத் தேடினார். இக்காலத்தில் பிழைப்புக்காகவும், சோம்பேறித்தனத்தினாலும், கல்லுணவை நாடி சுயாதீனப் பிரசங்கிகள் பலர் எழும்பியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக்குறித்து எச்சரிப்பாயிருத்தல் தகுதி. பரி: பவுலின் குணப்படுதல் காலத்தில் யாவராலும் நன்குமதிக்கப்பட்டோராய் பரி: பர்னபா விளங்கினார். பரி: பவுலின் பிற்கால மேன்மைக்கும் இவரே மூலகாரணராயுமிருந்தார். இரண்டாம் மிஷனெரி பிரயாணம்வரை பரி: பர்னபாவுக்கு உதவிக்காரராகவே பரி: பவுல் நின்றார். அதின் பின்னுள்ள சரித்திரங்களில் பரி: பவுல் அதிமேன்மையுள்ளவராக விளங்கிநின்றார். தன் ஞானப்பிள்ளைபோன்ற பரி; பவுல் தன்னைவிட அதிகமேன்மையும், பணிவிடையில் காரியசித்தியும் பெற்றதில் பரி: பர்னபா பொறாமைகொண்டாரோ? இல்லவே இல்லை. இவர்பேரிலுள்ள பரி: பவுலின் மதிப்பை 1 கொரி 9: 4-6 பார்க்க) இழிகுலத்தோருக்குரிய அற்பக்குணமான 'பொறாமைவன்கண் புறங்கூறுதல்' முதலிய இவரிடம் கிடைக்கவேயில்லை. பரி: பவுலாகிய நட்சத்திரம் ஜோதியுடன்



பிரகாசிக்க ஆரம்பித்தபோது 'பரி: பர்னபா' தம்மை மறைத்துக்கொண்டு பரி: பவுலின் காரியசித்தியில் ஸ்தோத்திரம் செலுத்தவும், சந்தோஷமுறவுமானார். வாசிப்போரே இதுவே பக்தர்களின் லட்சணம் 'நான் சிறுகவேண்டு'மென்பதே நமது நோக்கமாயிருக்கவேண்டும். பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை 'அறிக்கையிடுவோரில் காரணப்படவேண்டிய உள்ளான லட்சணம் இதுவே. பொறாமையின்மை ஆடவரின் மோதிரம் அதுவே புருடலட்சணம்

M. V. J.

## மனந்திரும்பும் முறை

'நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்'. ஏசா. 53: 5.

ஏசாயா தீர்க்கதரிசி கிறிஸ்து பிறக்க 740 வருஷங்களுக்குமுன் இருந்தபோதிலும் இவ்வதிகாரத்தில் அவர் ரக்ஷகருடைய பாடுகளைப்பற்றி மகா தெளிவாயும் விபரமாயும் எழுதி வைத்திருக்கிறாரென்பதை நாம் பார்க்கும்போது ரக்ஷகருடைய சிலுவை பாடுகளின் காக்ஷியை அவர் தனது விசுவாசக்கண்ணால் கண்டாற்போல் உணர்ந்து சாக்ஷி கூறுகிறார் என்று சொல்லலாம் நாம் எப்போதும் அருள்நாதருடைய சிலுவை பாடுகளை தியானிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். விசேஷமாய் லெந்து நாட்களில் சிலுவையை நாம் நோக்கிப்பார்த்து ரக்ஷகரின் அகோர கஸ்திகளை தியானித்து, உணர்ந்து மனந்திரும்பி சீர்ப்படவேண்டியது நமது கடமை. அதற்காக அருமை ரக்ஷகர் எனக்காகவே பாடுபட்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்று அவரை நமக்கு சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும். வாக்கியத்தில் நம்முடைய மீறுதல்களினிமித்தம்..........நம்முடைய அக்கிரமங்களினிமித்தம்.........நமக்கு சமாதானத்தை.........அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். 'நம்முடைய, நம்முடைய' என்பதற்குப் பதிலாக என்னுடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, என்னுடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். எனக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் நான் குணமாகிறேன் என்று நாம் முழங்காலில் நின்று ரக்ஷகரின் பாடுகளை தியானிப்போமானால் மெய்யாகவே நம்முடைய இருதயம் நொறுங்குண்டு நாம் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பி சீர்ப்படுவோமென்பதற்கு சந்தேகமில்லை.

ஒரு குருவானவர் தமது சபையில் மிச்சமானவர்கள் குணப்படாமல் இருக்கிறதைக் கண்டு பரிதபித்து தமது சபையார் மனந்திரும்பி சீர்ப்படும்படியாய் இந்த வாக்கியத்தை பின்வருமாறு வாசித்து, முழங்

காலில் நின்று நியானிக்கும்படியாய் ஆலோசனை சொன்னார். அதாவது சபையார் ஒவ்வொருவரும் 'நம்முடைய', 'நம்முடைய' என்பதற்கு பதிலாக தன்தன் பெயரை சொல்லி வாக்கியத்தை நியானிக்கும்படியாய் ஏவினார். அப்படியே அந்த சபையார் தன்தன் பெயரைச் சொல்லி, 'என்னுடைய மீறுதல்களினிமித்தம்.........என்னுடைய அக்கிரமங்களினிமித்தம்.........எனக்கு சமாதானந்தை........நான் குணமாகிறேன்' என்று ஜெபிக்கவே அவர்களுடைய உள்ளம் மெழுகுபோல் உருகி நொறுங்குண்டு, எல்லாரும்பாவஅறிக்கைசெய்து, பாவமன்னிப்பு பெற்று புதுஜீவியம்செய்ய ஆரம்பித்தார்கள்.

(இன்னும் வரும்)

## நோட்டீஸ்

### 22-வது கன்வென்ஷன் கூட்டங்கள்

மேமீ 3—6. சித்திரை மீ 21—24.

கர்த்தருக்குச் சித்தமானால் தமிழ் கிறிஸ்தவர்களின் 22-வது கன்வென்ஷன் கூட்டங்கள் நாளது வருஷம் மேமீ 3உ முதல் 6உ முடிய (சித்திரைமீ 21—24) டக்கரம்மாள்புரத்தில் நடத்தத் தீர்மானித்திருக்கிறது. 2உ திங்கள் சாயங்காலத்தில் முதல் கூட்டம் ஆரம்பிக்கும். சகோதரர் யாவரும் முதலாம் கூட்டத்திலேயே ஆஜராயிருக்கும்படி விரும்பிக் கேட்கிறோம். வரத்தீர்மானிக்கிற சகோதரர் இரண்டு காரியங்கள் செய்யும்படி அன்பாய்க் கேட்கிறோம். **முதலாவது**—இந்த நோட்டீஸ் பார்த்தது முதல் கன்வென்ஷன் கூட்டங்களுக்காகத் தயவுசெய்து ஜெபியுங்கள். தனி ஜெபம் குடும்ப ஜெபங்களிலும், ஆலய ஆராதனைகள் ஜெபக்கூட்டங்களிலும் இக்கூட்டங்களில் தேவனுடைய ஆசிர்வாதம் கூடிவருகிற அனைவர்மேலும் பொழிந்தருளப்பட ஜெபிப்போம். தேவனுடைய பிள்ளைகள் அநேகர் கூடிவரவும், கூடிவருபவர்களுக்கேற்ற தேவசெய்தி அருளப்படவும் ஜெபிப்போம். **இரண்டாவது**—வரத் தீர்மானித்திருக்கிற ஒவ்வொரு சகோதரனும் தன் பெயரையும், இன்ன நேரத்தில் வருவேனென்பதையும் அடியிற்கண்ட விலாசத்துக்குத் தெரிவிக்கும்படி கேட்கிறோம். இது சகலத்தையும் முன்னமே ஒழுங்குப்படுத்துவதற்கும், எல்லாருக்கும் வசதியுண்டாகக் காரியங்களை ஆயத்தப்படுத்துவதற்கும் அநுகூலமாயிருக்கும்.

N. B.—டக்கரம்மாள்புரம் பாளையங்கோட்டையிலிருந்து தெற்கே நாகர்கோவிலுக்குப் போகும் பெரும்பாதையில் நாலாவது மைலிலுள்ள ஓர் கிறிஸ்தவ கிராமம்.

கன்வென்ஷன் நடத்தும் சகோதரருக்காக,

**R. V. ASIRVADAM,**
Bishop's Chaplain.

Bishopstowe,
Palamcottah
22-3-20.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

06

May 1920. Registered No. M 136.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI மேமீ 1920

## பரிசுத்த ஓய்வுநாள்

'ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக' (யாத். 20. 8) பூர்வ காலத்தில், எவனாவது ஓய்வுநாளில் விறகு பொறுக்கினால் அல்லது வேறெந்த வேலைகளில் தலையிடுவானானால் கல்லெறியுண்டு சாவான் என்பதற்குத் தடையில்லை. ஏனெனில், அக்காலத்தில் ஓய்வுநாளைக்குறித்து இஸ்ரவேலர் அதிக பக்தி வைராக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள். ஓய்வுநாளில் சமையல் முதலாய் செய்துகொள்ளமாட்டார்கள். ஓயவு நாளுக்குரிய போஜன பதார்த்தங்களை, அதற்கு முந்தின தினமே ஆயத்தப்படுத்திக் கொள்வார்கள். இது தேவ கட்டளை. 'நாளைக்கு கர்த்தருக்குரிய ஓய்வு. நீங்கள் சுடவேண்டியதை சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காகவைத்துவையுங்கள்' (யாத் 16.23) என்றார். தற்காலத்திலுங்கூட சில கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளில் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்கும் பொருட்டு, சகல உலகவேலைகளிலிருந்தும் ஓய்ந்திருக்கிறதுமாத்திரமல்ல, சமையல்முதலாய் அந்நாளில் செய்துகொள்ளமாட்டார்கள். ஆனால், கிறிஸ்தவர்களில் மிகுதியான பேர், ஓய்வுநாளை வேலை நாளாகவும், ஊர்புறணிகள் 'பேசும் நாளாகவும்? சிநேகிதர்களைச் சந்திக்கும் நாளாகவும், விருந்திடும் நாளாகவும், கிராமங்களுக்குப் போகும் நாளாகவும், வீட்டுச் சாமான்கள் வாங்கும் நாளாகவும், விளையாடும் நாளாகவும், லாகிரி வஸ்துக்கள் உபயோகிக்கும் நாளாகவும், இன்னும் அக்கிரமங்கள் செய்யும், நாளாகவும் உபயோகிக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களுக்கு தேவன் உடனேக்குடனே தண்டனையனுப்பாமல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறபடியால், இவர்கள் இருதயம் கடினப்பட்டுப்போகிறது. பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டு, கடைசியில் அழிவைக்கண்டதை நாம் மறந்துபோகாதிருப்போமாக.

தற்காலத்துக் கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளைக்குறித்து எவ்விதபயமும், எவ்வித கவலையுமற்றவர்களாய் ஜீவிக்கிறதையும் பார்க்கலாம். அவர்களிடத்தில் ஓய்வுநாளைக்குறித்துப் பேசுவோமானாலும், அதைக்குறித்துக் கேலிபண்ணக்கூடியவர்களாயிருக்கிறார்கள்.

ஒரு போதகர் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டுமென்பதாய் பிரசங்கித்துக்கொண்டிருந்தாராம். அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு வாலிபன் உரத்த சத்தமாய் சிரித்துக்கொண்டு, வெளியேபோய் யாதொரு காரணமும் அவசியமுமின்றி ஒரு மரத்தினடியில் விழுந்துகிடந்த சிறு விறகுகளைப் பொறுக்கிக்கொண்டிருந்தானாம். கோவில் ஆராதனை முடிந்து, எல்லாரும் தங்கள் தங்கள் இல்லிடம் செல்லும்பொழுது, அந்த வாலிபன், பிணமாக மரத்தினடியில் செத்துக்கிடக்கக்கண்டு தங்கள் வாயின்மேல் கைவைத்தவர்களாய் சென்றார்களாம்

மேலும் ஓய்வுநாளானது நம்முடைய நாளல்ல, அது கர்த்தருடைய நாள். கர்த்தருடையநாளை கர்த்தருக்கென்று செலவிடுவோமாக. ஒரு நாள் உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமுமில்லாமல் தரித்திர திசையிலிருந்த ஒரு பிச்சைக்காரன் ஒரு குடியானவனுடைய வீட்டையணுகி, பிச்சை கேட்டபொழுது, அவ்வீட்டிலிருந்த அவனுடைய மகன், அப்பிச்சைக்காரனுக்கு ஆகாரம் அளித்தான். தாயானவள் அவனுக்கு வஸ்திரம் கொடுத்தாள். குடியானவனோ, அப்பிச்சைக்காரனிடத்தில் வந்து: 'அப்பா, என் னிடத்தில் எழுரூபாய்கள் உண்டு. இதோ, ஆறு ரூபாய்களை நீ வைத்துக்கொள். ஒரு ரூபாய் என் குடும்பத்தை நடத்திக்கொள்வதற்காக எனக்கு வேண்டுமென்று தனக்காக வைத்துக்கொண்டான். இதை அறிந்த அப்பிச்சைக்காரன் அந்த ஒரு ரூபாயையும் அபகரித்துக்கொள்ளவேண்டுமென்று அவாக்கொண்டு, அக்குடியானவன்செய்த நன்றியையும் மறந்து இரவில் நடுச்சாமத்தில் கன்னக்கோலும்கையுமாய் வந்து, அந்த வீட்டை உடைத்து அந்த ஒரு ரூபாயையும் அபகரிப்பானானால் நீங்கள் அப்பாதகனை என்னவென்றழைப்பீர்கள்! மேலும் அவ்வீட்டிற்குள் சென்றிருக்கும்போது யாராவது திடீரென்று எழுந்து அவனைக் கண்டுகொள்ளுவார்களானால், அவன் தான் தப்புவதற்கான வழியைத்தேடி, அங்குள்ள ஒருவரையாவது கொலை செய்வானானால் காரியம் எப்படியிருக்கும்! அக்கொலைபாதகனை வன்னெஞ்சன், நன்றிகெட்ட துரோகி மரணத்துக்குப் பாத்திரவானென்று ஐயமற சொல்வீர்களல்லவா? அப்படியிருக்க, நமக்கு ஆறு நாட்களையும் தந்து, நமது கையின் கிரியைகளையும் ஆசீர்வதித்திருக்கிற தேவனுடைய நாளாகிய ஓய்வுநாளை நமது சொந்தத் தினமாக மாற்றி, அந்நாளில் குடித்து, வெறித்து, அக்கிரமங்கள் செய்வோமானால், தேவனும் நமக்கு தண்டனை விதிப்பது நியாயமல்லவோ? ஆகையால், தேவகோபம் நம்மேல் பற்றியெரி



யாவண்ணம் நாம் நடந்து, ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரித்து, தேவனைத் துதிப்போமாக.

'கர்த்தரின் ஓய்வுநாள் இதாம்,
விசாரம் வேலையையெல்லாம்
ஒழித்து, தேவதயவை
சந்தோஷமாக நீ நினை'

S. R. D.

## 'தேவனுடையதை தேவனுக்குச் செலுத்துங்கள்'

## 'Render unto God the things which be God's'

இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் (லூக்கா 20, 25) கிறிஸ்துவானவர் எங்கெங்கே சென்றாரோ அங்கங்கே திரளான ஜனங்களும் அவரிடத்தில் கூடிவந்தார்கள். அவர்களில் அநேகர் பற்பல நோக்கங்களோடு அவரிடத்தில் வந்திருந்த போதிலும், நாம் ஒரு வகுப்பாரை மாத்திரம் எடுத்துக்கொள்வோம் அதாவது அவரிடத்தில் குற்றங்கண்டு பிடிக்கவும் அவரை அவமானப்படுத்தவும் அவரை ஆகாதவரென்று தள்ளவும் கடைசியாக கொலைசெய்யவும் ஏற்பட்ட ஒரு கூட்டத்தாரில் அநேகர் பரிசேயரும், சதுசேயரும், வேதபாரகருமாயிருந்தார்கள். அவர்களெல்லாரும் தேவனுடைய வசனத்தை தப்பிதமாக அர்த்தம் பண்ணிக்கொண்டு தகாதவிதமாக ஜனங்களுக்குப் போதிக்கிறவர்களாயிருந்தார்கள். கிறிஸ்துவானவர் சரியானபடி போதித்து வந்தார். உலகமே அவரைப் பின்சென்று போயிற்று. அவருக்குச் சாப்பிடுகிறதற்கும் சமயம் கிடையாதபடி. அவ்வளவு திரளான கூட்டம் அவரைப் பின்சென்று நெருக்கிற்று அப்பொழுது, வேதபாரகர் பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய உபதேசத்தைக் கேட்க ஜனங்கள் பிரியமற்றுப் போனார்கள். ஜனங்கள் கிறிஸ்துவானவருடைய புதிய உபதேசத்திற்கே செவிகொடுத்தார்கள். ஆகையால், கிறிஸ்துவானவரைக் கொலை செய்துவிடவேணுமென்று தீர்மானித்தார்கள். என்றாலும், எவ்விதத்தில் அப்படிச் செய்வதென்று அறியாமல், அவர் எங்கெங்கு சென்றாரோ அங்கெல்லாம் சென்று, எவ்விதத்திலாவது அவரைப் பேச்சில் அகப்படுத்தி தங்கள் எண்ணத்தை நிறைவேற்றலாமென்று நினைத்தார்கள் ஆனால் எல்லா இருதயங்களையும் எல்லா சிந்தனைகளையும் அறிகிற சர்வவல்லமையுள்ள தேவன் ஒவ்வொருவருக்கும் தகுந்த விடைகளை அளித்தார். பின்னும் இக்கூட்டத்தார் ஒரு தந்திரமான கேள்வியோடு தங்களை உண்மையுள்ளவர்களாகக் காண்பிக்கிற சில வேஷக்காரரை அவரிடத்தில் அனுப்பினார்கள்.

அந்த மனுஷர் கிறிஸ்துவானவரிடத்தில் நல்லவர்களைப்போல் நடித்து, முகத்தாட்சணியமான வார்த்தைகளைப் பேசினார்கள். முகத்தாட்சணியத்தை ஏற்றுக்கொள்ளுகிறவரானால் அவரைப் பேச்சில் அகப்படுத்திக் கொள்ளலாம் என்பதே அவர்களுடைய நோக்கம். ஆனால், கிறிஸ்துவானவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கடைசியில் தந்திரமான ஒரு கேள்வியை அவரிடத்தில் கேட்டார்கள். அக்கேள்விக்கு ஆம் என்றாலும், இல்லையென்றாலும் குற்றப்படுத்தும் விதமாகவிருந்தது. அதாவது, 'இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ?' என்பதே. வரி கொடுக்கவேணுமென்றால், நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகவும், வரி கொடுக்கவேண்டாமென்றால், இராயனுக்கு விரோதமாகவும் குற்றஞ்சாட்டக் காத்திருந்தார்கள். எல்லா இருதயங்களின் நினைவுகளையுமறிந்த கர்த்தர் ஒரு பணத்தைக் கொண்டுவரக் கட்டளையிட்டு, அந்தப் பணத்தில் இராயனுடைய சொரூபமும்; அவருடைய எழுத்தும் இருக்கிறபடியால், 'இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்' என்றார். இந்த வசனத்தில் இரண்டு பங்குகள் அடங்கியிருக்கின்றன. இராயனுடைய பங்கு ஒன்று. தேவனுடைய பங்கு மற்றொன்று. முதலாவது இராயனுடைய பங்கைப்பற்றிக் கவனிப்போம். (1) அந்த நாணயம் இராயனுடைய தங்கசாலையில் செய்யப்பட்டது. (2) இராயனுடைய சொரூபமும் அந்த நாணயத்தில் பதிக்கப்பட்டிருந்தது. (3) அது மாத்திரமல்ல, இராயனுடைய பெயரும் அந்த நாணயத்தில் எழுதப்பட்டிருந்தது. ஆகையால் அந்தப் பணம் இராயனுடையதென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. நமதருமை ரக்ஷகர் சொன்னதும் சரிதான். இராயனுடையது இராயனுக்குச் சேரவேண்டியது அவசியந்தான். அப்படி இராயனுடையதை இராயனுக்குச் செலுத்தாவிட்டால் இராஜ தண்டனை விதிக்கப்படுமென்பது யாவராலும் அறியப்பட்ட சத்தியமே.

இப்பொழுது தேவனுடைய பங்கைக் குறித்து சற்றுக் கவனிப்போம். நீங்கள் தான் தேவனுடையவர்கள். 'நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்' (1 கொரி. 3: 16) ஏனென்றால், (1) அவரே நம்மை உண்டாக்கினார் (சங். 100: 3). ஆகையால், நாம் அவருடையவர்கள் (2) 'தேவன் தமது சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார்' (ஆதி. 1: 27). அவருடைய சாயல் நம்மில் இருக்கிறபடியால் நாம் அவருடையவர்கள். (3) நாம் அவருடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறபடியால் (ஏசா. 43: 7) நாம் அவருடையவர்கள்தான். சகோதரரே, இராயனுடையதை இராயனுக்குக் கொடுக்கிற நாம், தேவனுடையதை தேவனுக்குக் கொடுக்கிறோமா? இராயனுடையதை இராயனுக்குக் கொடாவிட்டால் இராஜ தண்டனையடைவிப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்விதமாகவே தேவனுடையதை நாம் தேவ



னுக்குக் கொடாவிட்டால் தேவ தண்டனை அடைவதும் நிச்சயம். ஆனால், தேவன் நம்மிடத்தில் கடினமாகக் கடிந்துகொள்ளுகிறவரல்ல. அநேக நியாயங்களை எடுத்துக் கூறி 'என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா.' (நீதி. 23: 26) என்று இனிய குரலோடு கேட்கிறார். முதலாவது, சிருஷ்டிகர்த்தாவாக நம்மண்டை வருகிறார் (ஏசா. 43: 1). (2) மீட்பராகவும் வருகிறார் (ஏசா. 43: 1). (3) சிநேகிதராகவும் வருகிறார் (யோவா. 15:14) (4) தகப்பனாக வருகிறார் (மாற்கு 2: 5). (5) சகோதரனாகவும் வருகிறார் (மத். 12: 50) இன்னுமென்ன தாமதம்? தேவனுடையதை தேவனுக்குச் செலுத்துகிறோமா? (6) மணவாளனாகவும் வருகிறார் (மாற். 2: 19). மனிதரில் இதற்கு மிஞ்சின சம்பந்தமுள்ளவர்கள் ஒருவருமிரார்கள். ஏனென்றால், இவர்கள் சரீரத்தில் இருவராயிருந்தாலும் ஒரே மாம்சமானவர்கள் (ஆதி. 2: 24). இவ்வளவாக நெருங்கி 'உன் நெஞ்சை எனக்குத் தா' என்கிறார். இனிமேலும், நாம் கடின இருதயமுள்ளவர்களாயிருக்கலாமா? அப்படியானால், இனிமேல், அவர் நம்மிடம் பிரம்போடு வரவேண்டுமோ? வணங்காக் கழுத்துள்ளவர்களுக்கு அப்படியுந்தான் வரவேண்டும். (7) 'உன்னை பேர் சொல்லி அழைத்தேன். (8) உன்னைக் கிரயத்துக்கு வாங்கினேன். (9) உன் நாமம் என் உள்ளங்கையில் எழுதப்பட்டிருக்கிறது' என்கிறார். இனி தப்ப வேறு வழியில்லை. இவ்வளவாக நம்மிடம் நெருங்கும்பொழுதும், நாம் நமது இருதயத்தை அடைத்துக்கொள்வோமானால் தேவ கோபாக்கினை தப்பாமல் நம்மேல் வரும்.

சகோதரரே, தேவனுடையதை தேவனுக்குச் செலுத்தப் பின்வாங்காதிருப்போமாக. நாம் நமது இருதயத்தை அவருக்கு பிரதிஷ்டைசெய்யும் பொழுது, அவரே நமதிருதயத்தை நிரப்பியிருப்பார். அப்பொழுதுதான் நம்மில் கிறிஸ்துவானவரின் சிந்தை காணப்படும். அவருடைய பேச்சு அவருடைய தன்மை, அவருடைய லக்ஷணங்கள் நம்மில் காணப்படும்.

தற்காலத்தில், சாது சுந்தர் சிங் என்பவரைக் கவனிப்போமானால், கிறிஸ்துவானவரின் அநேக லக்ஷணங்களை அவரிடத்தில் காணலாம். இது காரணத்தைப்பற்றியே திரள் திரளான கூட்டம் அவரைப் பின்சென்று நெருக்குகிறது. ஏனென்றால், தேவனுடையதை தேவனுக்குக் கொடுக்க அவர் பின்வாங்கவில்லை இனி இவரல்ல, கிறிஸ்துவானவரே இவருக்குள் பிழைத்திருக்கிறார். இப்படிப்பட்டவர்களே வெண்வஸ்திரங்கள் தரிக்கப்பட்டவர்களாய், இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறவர்கள். ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்களும் இவர்களே.

சகோதரரே, நாம் தேவனுடையதை தேவனுக்குக் கொடுத்தவர்களா? இல்லையானால், இந்நேரமே நமக்கு இரக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற

காலத்தை ஆதாயப்படுத்திக்கொள்வோமாக. நமது இருதயங்களை அடைத்துக்கொள்வோமானால் 'ஐயோ!' (வெளி. 8: 13).

---

## ஒரு மூங்கில் கதை

மலையாளத்திலுள்ள குச்செஞ் ஜில்லாவின் மலைப்பக்கத்திலுள்ள மரங்கள் அதிக விலையுயர்ந்தவைகள். அவைகளின்மேல் அவற்றின் சொந்தக்காரர் பெயர் வெட்டப்பட்டிருக்கும்.

சாதாரணமாய் மலையின்மேலுள்ள நீரூற்றுகளிலிருந்து மூங்கில் குழாய்கள் வழியாய் கிராமங்களுக்குத் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது.

ஒரு செழிப்பான மலைச்சாரலில் அநேக மரங்களுக்கு ஊடே ஒரு அழகான மூங்கில் மரம் வளர்ந்தது. அதன் அடிமரம் பளபளப்பாயும், கரும்பச்சை நிறமாயும் இருந்தது. இறகுபோன்ற அதின் கிளைகள் சாயங்கால வேளையில் வீசும் இளங்காற்றில் அசைவாடுகையில் பார்க்க வெகு பிரியமாயிருக்கும். மரக்கிளைகள் காற்றினாலசைவதைப் பார்த்தால், கிளைகளாகிய கைகளால் அழைப்பதைப்போலக் காணப்பட்டன.

நாங்கள் அதைப் பார்த்து, ஆச்சரியப்பட்டபோது, இலைகளில் உண்டான மெல்லிய இரைச்சல் மூலமாய், அம்மரமானது பின்வருமாறு எங்களோடு பேசுகின்றதுபோல் தோன்றிற்று.

'நீங்கள் என் அழகையும், வளர்த்தியையும், செழிப்புகளையும் பார்த்து ஆச்சரியப்படுகின்றீர்கள். ஆனால் நான் பெருமை பாராட்டத்தக்கதாக என்னில் ஒன்றும் இல்லை. எனக்குள்ளதெல்லாம் என் அன்புள்ள எஜமானின் பாதுகாப்பினால் உண்டானது. இந்த நல்ல மலையில் அவர்தான் என்னை நாட்டினார். இங்கேயிருந்து என் வேர்கள் மலைக்குள்ளே மறைந்து கிடக்கும் நீரூற்றுக்கு ஓடி, நான் பிழைத்திருப்பதற்கு வேண்டிய தண்ணீரை எப்போதும் குடித்து, அதன் மூலமாய் ஆகாரத்தையும், செழிப்பையும், அழகையும், பலனையும் பெறச்செய்கின்றன.

அந்தப் பக்கத்திலுள்ள மரங்களைப் பாருங்கள், எவ்வளவு நிர்ப்பந்தமாயும் வறண்டுபோயும் இருக்கின்றன. அவைகளின் வேர்கள் இன்னும் நீரூற்றைக் கண்டுபிடிக்கவில்லை. நான் அம்மறைவான ஜீவதண்ணீரைக் கண்டுபிடித்தபடியால் எனக்கு யாதொன்றிலும் குறைவில்லை. என் அடிமரத்திலுள்ள எழுத்துக்கள் தெரிகின்றனவா? கவனித்துப் பாருங்கள், என் மேலேயே வெட்டப்பட்டிருக்கின்றன. அவ்வெழுத்துக்கள் வெட்டப்பட்டபோது எனக்கு அளவில்லாத நோவு உண்டாயிற்று. நான் ஏன் இவ்வளவு கஷ்டப்படவேண்டுமென்று அப்போது நினைத்து ஆச்சரியப்பட்டேன். என் எஜமான் தமது சொந்தக் கையினாலேயே என்பேரில் வெட்டினார். வெட்டி முடித்தபிறகு, அது என் எஜமானின் பெயர் என்று கண்டுபிடித்தேன். ஆஹா எனக்கு என்ன சந்தோஷம்! அதன்பின் என் எஜமான் என்னை மதித்து, நேசித்து, நான் அவருடையது என்று உலகமெல்லாம் அறிய விரும்பினார் என்று விளங்கிக்கொண்டேன். இத்தகைய நல்ல எஜமான் இருக்கிறார் என்று மாத்திரம் நான் பெருமைபாராட்டக்கூடும்' என்பதே.



இப்படி அம்மரம் தன் எஜமானைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், நாங்கள் திரும்பிப் பார்த்தோம். இதோ, எஜமான் தாமே அங்கே நின்றார். அவருடைய முகம் அன்பினாலும், அம்மரத்தின் மேலிருந்த பிரியத்தினாலும் பிரகாசித்தது. அவர் கையிலே கூர்மையான ஒரு கோடரி வைத்திருந்தார்.

பின் வருமாறு எஜமானுக்கும் மரத்துக்கும் ஓர் சம்பாஷணை நடந்தது.

எஜமான் :— நீ எனக்கு வேண்டும். உன்னை எனக்கு கொடுக்க விருப்பமா?

மரம் :— எஜமானே, நான் முழுவதும் உமக்குச் சொந்தம். ஆனால், என்னாலே உமக்கு என்ன பிரயோஜனம்!

எஜமான் :— உன்னைக்கொண்டு வறண்டதும் தண்ணீரற்றதுமான இடங்களை நீர்ப் பாய்ச்சப்போகிறேன்.

மரம் :— எஜமானே, நான் எப்படி நீர்ப்பாய்ச்சக்கூடும்? நான் நீரூற்றிலேயே இருந்து அந்தத் தண்ணீரைக் குடித்து எனக்கு ஆகாரத்தைத் தேடிக்கொள்ளக்கூடும். வானத்திலிருந்து வரும் மழையையும், பனியையும் என் கிளைகள் மூலமாய்ப் பெற்று நன்றாய் வளர்ந்து, என் அழகையும், செழிப்பையும் உறுதியையும் பார்த்து சந்தோஷப்பட்டு எனக்கு என்ன, நல்ல எஜமான் இருக்கிறார் என்று மாத்திரம் சொல்லக்கூடும்? எனக்கு வேண்டிய ஆகாரத்துக்கான தண்ணீரை மாத்திரம் குடிக்கக்கூடும்? மற்றவர்களுக்குக் கொடுக்க என்னிடம் என்ன உண்டு?

இவற்றையெல்லாம் கேட்டு, எஜமான் மனதுருகி அதைப் பார்த்து நீ விரும்பினால், நான் உன்னை உபயோகிக்கக்கூடும். நான் உன்னை வெட்டி உன் கிளைகளையெல்லாம் தறித்து, உன்னை வெறுமையாக்கி மற்ற மரங்களிலிருந்தும், நீ நிற்கும் சந்தோஷமான இடத்திலிருந்தும் உன்னைப் பிரித்து களையும், முள்ளும், புல்லும் நிறைந்த தூரமான இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவேன். அங்கே நீ தனிமையாய் இருப்பாய். இப்போது நீ பார்க்கிற மரக்கூட்டத்தையெல்லாம் இழந்து விடுவாய், உன் வழியாய் மற்றவர்களுக்கு ஜீவதண்ணீர் செல்லும்படி, நல்ல வாய்க்கால் உண்டாக்க, உனக்கு ஊடே இருக்கும் சோற்றையும், மற்ற வஸ்துக்களையும் நீக்கும்படி

மறுபடியும் ஒரு நீண்ட கத்தியை உபயோகிப்பேன். நீ செத்துப்போவாய்! ஆம், என் மரமே நீ செத்துப்போவாய். ஆனாலோ, என் ஜீவதண்ணீர் இடைவிடாமல் உன் வழியாய், இடையறாமல் தாராளமாய் ஓடிக்கொண்டே இருக்கும். உன் அழகு மங்கிப்போகும். அது முதல் ஒருவரும் உன் அழகைப்பற்றியும், செழிப்பைப்பற்றியும், உறுதியைப்பற்றியும், புகழ்ந்து பேசமாட்டார்கள். ஆனால் அநேகர் உன் வழியாய் ஓடும் ஜீவதண்ணீரைக் குனிந்து குடிப்பார்கள். வாஸ்தவத்தில் உன்னைப்பற்றி கவனிக்கமாட்டார்கள். உன் வழியாய் ஓடும் ஜீவதண்ணீரை அனுப்பின எஜமானைத் தோத்திரிக்கமாட்டார்களா? இதெல்லாம் உனக்குச் சம்மதமா? என் மரமே!'

மரம் என்ன மறுமொழி கொடுக்குமோ என்றறிய ஆவலோடு காத்து நின்றோம். மூங்கில் எஜமானைப் பார்த்து 'எஜமானே, நானும் எனக்குண்டானவைகளும் உம்மால் வந்தவை. நான உமக்குத் தேவையானால் சந்தோஷமாயும், மனப்பூர்வமாயும் என்னை உமக்கு கொடுக்கிறேன். நான் செத்துப்போனால் மாத்திரம் மற்றவர்களுக்குத் தண்ணீர் கொண்டுவரக் கூடுமானால் சாகவும் சம்மதிக்கிறேன். நான் உமக்குச் சொந்தமாதலால், என் எஜமான், என்னை எடுத்து உமதிஷ்டப்படி உபயோகியும்' என்றது. எஜமான் இன்னும் அதிக இரக்கத்தோடே, அந்த அழகான மரத்தை வெட்டித் தரையில் சாய்த்தார். மரமோ, ஒவ்வொரு வெட்டுக்கும் 'எஜமானே உமதிஷ்டப்படியே' என்று சொல்லிக்கொண்டே வளைந்து கொடுத்தது.

எஜமான் கோடரியைக் கீழே போடவில்லை. மரத்தை வெட்டியபின் அதன்மேலுள்ள கொப்புகளையெல்லாம் செதுக்கி, இவ்விதமாய் அதன் அழகையும், பெருமையையும் போக்கினார். அப்போது அந்த மரம் வெறுமையாயும் வறண்டுபோனதாயும் காணப்பட்டது. ஆனால் எஜமானோ அன்பினால் பொங்கினவராய், அந்த அடிமரத்தை தூக்கி தன் தோள்மேல் வைத்துக்கொண்டு மற்ற மரக்கூட்டத்தைவிட்டுப் பிரித்துத் தூரமாய், உயர மலைமேல் ஏறிப்போனார்.

மரம் எஜமான்மேல் வைத்த அன்பினால் இவற்றையெல்லாம் பொறுமையாய்ச் சகித்து 'என் எஜமானே, என்னை எங்கே கொண்டுபோகச் சித்தமோ' அங்கே கொண்டுபோம் என்று மெதுவாய்ச் சொன்னது.

எஜமான் கடைசியாய் அவர் சொன்னபடி பாழான தனித்த இடத்துக்குப் போய்ச்சேர்ந்தார். மறுபடியும் ஒரு நீண்ட கூர்மையான கத்தியை ஊடே விட்டு மரத்தைக்குடைந்து ஜீவதண்ணீர் ஓடிவரத்தக்கதான வாய்க்காலை உண்டாக்கினார். ஏனென்றால் அப்படிக்குடைந்தால்மாத்திரம் அதன்வழியாய் தடையின்றி வறண்ட நிலத்துக்குத் தண்ணீர் தாராளமாய் ஓடும்.



மரம் முறுமுறுக்கவில்லை. விசனப்படவுமில்லை. அமர்ந்த சத்தத்தோடே 'எஜமானே, உம்முடைய சித்தம் ஆகக்கடவது' என்றது.

இப்படியே, எஜமான் அன்பு நிறைந்த மனதோடும் கனிந்த பார்வையோடும் அதை வெட்டிக் கீழே சாய்த்து, அதன்மேலிருந்த கூர்மையான முள்களையும் கொப்புகளையும் ஒன்றுவிடாமல் செதுக்கி, நன்றாய்க் குடைந்து வாய்க்காலை உண்டுபண்ணியபின்தான் எஜமான் இருதயம் திருப்திப்பட்டது.

பிற்பாடு அவர் அதை மெதுவாய் உயர்த்திக்கொண்டுபோய், கண்ணாடி போன்ற தண்ணீர் ஊறிக்கொண்டிருந்த நீரூற்றண்டையில் வைத்தார். அதன் ஒரு நுனி குளிர்ந்த ஜலத்தைத் தொட்டுக்கொண்டிருந்தது. ஜீவதண்ணீர் அடிமரத்தின் ஊடே ஒரு நுனிமுதல் மறு நுனிவரை சததமின்றி உள்ளேயும் வெளியேயும் இடைவிடாமல் ஓடிக்கொண்டே இருந்தது. எஜமான் இதைப்பார்த்து முகமலர்ந்து மனரம்மியம் அடைந்தார்.

எஜமான்போய் மறுபடியும் அநேக மரங்களைத் தேடினார். சில மரங்கள் கஷ்டத்துக்கு பயந்து பின்னிடைந்தன. வேறு சில மரங்கள் 'எங்கள் எஜமானே, நாங்கள் உம்மை நம்புகிறோம். உமதிஷ்டப்படி எங்களை உபயோகியும்' என்று சொல்லி மனப்பூர்வமாய் அவைகள் தங்களை அவருக்கு ஒப்புக்கொடுத்தன. அவைகளையும் ஒவ்வொன்றாய்க் கொண்டுவந்து முதல் மரத்துக்குச் செய்தபடியே செய்து ஒரு மரத்தின் நுனியோடு இன்னொரு மரத்தின் நுனியைப்பொருத்தினார். இவ்விதமாகவே ஒவ்வொன்றும் பொருத்தப்படவே, ஒவ்வொன்றின்வழியாயும் சுத்தமான ஜீவதண்ணீர் ஊற்றிலிருந்து வெகுதூரத்துக்கு ஓடிற்று. கடைசியாய் வறண்ட நிலத்துக்கு ஜீவதண்ணீர் பாய்ந்தது. தவித்துப்போன ஆண்களும பெண்களும், சிறு பிள்ளைகளும், தாங்கள் வெகுநாளாய்க் காத்திருந்த ஜீவதண்ணீரைக் குடித்து அந்த நற்செய்தியை மற்றவர்களுக்கும் கொண்டுபோனார்கள் அதாவது 'ஜீவதண்ணீர் வந்திருக்கின்றது பஞ்சம் ஒழிந்துபோனது, வந்து தாகந்தீர்த்துக்கொள்ளுங்கள்' என்பதே. ஜனங்கள் வந்து, குடித்து ஜீவனடைந்தார்கள். எஜமான் இதைப் பார்த்து அகமகிழ்ந்து, திரும்பி மரத்தினிடம் வந்து 'என் மரமே நீ தனிமையாயிருக்கிறதற்காகவும், கஷ்டப்பட்டதற்காகவும், இப்போ விசனப்படுகிறாயா? உலகத்துக்கு ஜீவதண்ணீர் கொடுக்க நீ பட்டபாடுகள் போதுமானதா என்று கேட்டார். மரம அவரைப் பார்த்து 'இல்லை என் எஜமானே இல்லை என்று நான் ஆயிரம், ஆயிரம் தரம் சொல்லக்கூடும். இன்றைக்கு நான் அறிந்திருக்கிறபடி உம்மை அறிவதற்கும், உம்மைச் சந்தோஷப்படுத்துவதற்கும், எனக்கு ஆயிரம் ஜீவன்கள் இருந்தாலும் அவை எல்லாவற்றையும் சந்தோஷமாய் உமக்குக் கொடுக்கக் கூடும்' என்றது.

## மனந்திரும்பும் முறை (தொடர்ச்சி)

அப்போஸ்தலனாகிய பவுலும் இப்படியே ரக்ஷகரை தமக்கு சொந்தமாக்கிக்கொண்டார் என்று பார்க்கிறோம். பிலிப்பியர் 3: 8ல் என் கர்த்தராகிய கிறிஸ்து ஏசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். 'இதில் என் கர்த்தராகிய கிறிஸ்து ஏசு என்கிறார். அப்படியே, கலாத்தியர் 2: 20ல் கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட்டேன்.........என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரன் என்று ரக்ஷகரை தமக்கு சொந்தம் பாராட்டிப் பேசுகிறார். இன்னும் 1 தீமோ. 1: 15ல் 'பாவிகளை ரக்ஷிக்க...... ... அவர்களில் பிரதான பாவி நான்' என்கிறார். இவ்வசனத்தின் சரியான கருத்து என்னவென்றால் பாவிகளையெல்லாம் ரக்ஷிக்க கிறிஸ்து ஏசு உலகத்தில் வந்தது வாஸ்தவமே. அப்படி பாவிகளையெல்லாம் ரக்ஷிக்க கிறிஸ்து ஏசு உலகத்திற்கு வரவில்லையென்று வைத்துக்கொண்டாலும் பாவிகளில் பிரதானமான பாவியாகிய தன்னை மாத்திரமே ரக்ஷிக்க வந்தார் என்று அவர் அருமை ரக்ஷகரை உரிமை பாராட்டி பேசுகிறதுபோல் இருக்கிறதல்லவா; ஆம். அப்படி அப்போஸ்தலன் அருள்நாதரை தனக்கு சொந்தமாக்கிக்கொண்டதினாலேதான் அவரில் கிறிஸ்துவின் ஜீவனும் கிறிஸ்துவின் சிந்தையும் அவருடைய ஊழியத்தில் கிறிஸ்துவின் வல்லமையும் மகிமையும் சிறந்து விளங்கினதென்று பார்க்கிறோம்.

அப்படியே எபிரேயர் 2: 9ல் அருமை ரக்ஷகர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாமும் கர்த்தராகிய கிறிஸ்து, எனக்காகவே கெத்சேமனேயிலும் சிலுவையிலும் சகல கஸ்திகளையும் பட்டு உத்தரித்தார் என்று இந்த நாட்களில் உணர்ந்து தியானித்து வருவோமாக. அப்படியானால் மெய்யாகவே நாம் மறுபிறப்படைந்து ரக்ஷகருடைய அன்பின் ஆழம் நீளம் உயரத்தை அறிந்து அந்த அன்பினால் நிறைந்து அன்பினால் ஏவப்பட்டு அவருக்கென்று பிழைத்து உழைத்து வருவோமென்பதற்கு சந்தேகமில்லை.

இதன் சம்பந்தமாக பின்வரும் சரித்திரம் பிரயோஜனமாயிருக்கும். தெலுங்கு நாட்டில் நல்லபிள்ளை யென்று பெயர்பெற்ற ஒரு வாலிபப் பெண் சிறுவயது முதலே உலகத்தை வெறுத்து பரிசுத்த ஜீவியம்செய்து வருகிறது. ரக்ஷகருடைய பாடுகளை வாசிக்கும்போதெல்லாம் அந்தப்பிள்ளைக்கு தன்னையறியாமலே கண்ணீர் வந்துவிடும். மத். 27-ம் அதிகாரத்தில் ஆண்டவருக்கு நடந்த அகோரபாடுகளை வெள்ளிக்கிழமைதோறும் வாசித்து தியானிப்பாள். பிலாத்துவின் வீட்டில் போர்ச்சேவகர் கர்த்தருடைய வஸ்தி



ரத்தை கழற்றி சிவப்பு அங்கியை தரித்து, சிரசில் முண்முடி சூட்டி, கையில் நாணல் கோலைக்கொடுத்து, அவர் முன்பாக முழங்கால் படியிட்டு யூதருடைய ராசாவே வாழ்க; என்று பரிகாசம்பண்ணி அவரைத்துப்பி, முண்முடி சூட்டியிருந்த சிரசை கோலால் அடித்து, போர்ச்சேவகர் வதைத்தார்களே. அதை முழங்காலில் நின்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு தியானிப்பாள். உடனே கீழேவிழுந்து ஜெபம்பண்ணுவாள். 'அன்பு நிறைந்த ஆண்டவரே உமது சொந்த உடுப்பை எடுத்துப்போட்டு பரியாச உடுப்பை உமக்கு உடுப்பாகப் போட்டார்களே. நான் என் தோலை உரித்து உமக்கு உடுப்பாகப் போடுகிறேன். உமது திருமுகத்தில் துப்பி அடித்தார்களே என் கண்ணீரால் அதை கழுவி உமது பாதத்தை முத்தஞ்செய்கிறேன். உமது கையிலே கோலைக்கொடுத்தார்களே என்னையே உமக்குக் கோலாகக்கொடுத்துவிடுகிறேன். உமது முன்பாக என் ஜீவகாலமெல்லாம் முழங்காலிலே இருப்பேன். நானும் எனக்கு உள்ளதெல்லாம் உமக்கே சொந்தம் என்பாள். இவள் பள்ளிக்கூடத்தில் படித்தபோது இரண்டரை ரூபாய் இவளுக்கு இனாமாகக்கிடைத்தது. அதை தகப்பனாரிடத்தில் காட்டினபோது தகப்பனார் சந்தோஷப்பட்டு தன் கையிலிருந்த இரண்டரை ரூபாயை இனாமாக தன் பிள்ளைக்குக் கொடுத்துவிட்டார். பிள்ளை சந்தோஷத்தோடு முழங்காலிலிருந்து கர்த்தரை துதித்து தகப்பனாரண்டை ஓடிவந்து 'இந்த 5 ரூபாயையும் உடனே சுதேச மிஷனெரி சங்கத்துக்கு அனுப்பிப்போடுங்கள். கர்த்தர் எனக்குச் செய்த உபகாரங்கள் எல்லாவற்றிற்காகவும் நான் அவருக்கு என்னத்தை செலுத்துவேன். என் ஆண்டவர் எனக்காக சிந்தின திருரத்தத்திற்கு ஈடாக நான் 5 கோடி ரூபாய் கொடுத்தாலும் சரியாயிராதே' என்று சொன்னாள். தகப்பனார் எழுப்புதலடைந்து கூட கால்ரூபாய் சேர்த்து அச்சங்கத்துக்கு அனுப்பினார்.

என் அருள்நாதா யேசுவே!
சிலுவை காட்சி பார்க்கையில்,
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்.

N. D.

## திருநெல்வேலி தமிழ் கிறிஸ்தவ 22-வது கன்வென்ஷன்

நாளது வருஷம் மே மாசம் 3உ முதல் 6உ முடிய திருநெல்வேலி தமிழ் கிறிஸ்தவர்களின் 22-வது கன்வென்ஷன் டக்கரம்மாள்புரத்தில் நடைபெற்றது. பாளையங்கோட்டை, ஆள்வானேரி, செவல் சர்க்கிள்களிலுள்ள மிஷன் ஊழியரும் பற்பல இடங்களிலுமிருந்து வந்திருந்த சகோதர

குமாக ஏறக்குறைய 145 பேர் கன்வென்ஷன் கூட்டங்களுக்கு வந்திருந்தார்கள். முதல் நாள் இரவுக் கூட்டத்துக்கே 80 பேர் ஆஜராயிருந்தார்கள். கனம் எஸ். ஜி. மதுரம் ஐயரவர்கள் பரி. மத்தேயு சுவிசேஷத்தின் பேரில் மிகவும் அருமையும் தேர்ந்த ஆராய்ச்சியுள்ளதுமான வேத பாடக்குறிப்புகளை ஒழுங்குப்படுத்தி மூன்று கூட்டங்களில் பலமாய் பேசினார்கள். கனம் டி. எஸ் டேவிட் ஐயரவர்கள் எபேசியர் நிருபத்தின்பேரில் கிறிஸ்தவனின் உன்னத ஆசீர்வாதங்கள், கடமைகள் இவைகளைப்பற்றிக் கேட்பவருள்ளத்தில் படத்தக்க விதமாய் மூன்று பிரசங்கம் செய்தார்கள். [கனம் யம். ஆசீர்வாதம் ஐயரவர்கள் மறுபிறப்பின் ஜீவியம் என்ற விஷயத்தின் பேரில் மனதில் உணர்வுண்டாக்கத்தக்க விதமாய்ப் பேசினார்கள். கனம் டி யம். ஞானசிகாமணி ஐயரவர்கள் பரி. நற்கருணை ஆராதனையிலும், Mr. டி. சாமுவேல் அவர்களும், Mr. ரத்னம் வேதபோதகம் அவர்களும் கடைசி நாளில் வைத்திருந்த மிஷனெரிக் கூட்டத்திலும் அதிக உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் உணர்வோடும் பேசினார்கள். இந்த நாளின் கூட்டங்களும், வேதவாசிப்புப் பாடங்களும், மிஷனெரி போதனைகளும் வந்திருந்த யாவருக்கும் பிரயோஜனமுள்ளதாயும் அனல் மூட்டி எழுப்பத்தக்கதாயும் இருந்தன. ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். சாப்பாட்டுக்குரிய சகல ஆயத்தங்களும் சேராடக்கர் பாடசாலை போர்டிங் மாஸ்ற்றராகிய Mr. செல்வசிரோமணி அவர்களால் நடத்தப்பட்டன. இது விஷயத்தில் அவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசை அதிகம்.

இக்கூட்டங்களுக்கு வந்த யாவரையும் தேவன் தாமே ஆசீர்வதித்து அவ்விடத்தில் பெற்றுக்கொண்ட அருமையான போதனைகளைத் தங்கள் ஜீவியத்தில் காட்டும்படி தேவன் கிருபை செய்வாராக.

## திருஷ்டாந்தங்கள்

சில காலங்களுக்குமுன் நியூயார்க் பட்டணத்துப் பெருவீதிகளொன்றில் வயதுசென்ற ஓர் பெண் போய்க்கொண்டிருந்தாள். இரைச்சி கொண்டு போகும் வண்டியொன்றில் பூட்டிய இரண்டு குதிரைகள் மிரண்டு ஓடி இவளுக்குமுன் வந்துவிட்டன. பக்கத்தில் போலீஸ்காரன் ஓடிக் கிழவியைப் பிடித்துத் தூரத்தள்ளிவிட்டான். அவள் தப்பிக்கொண்டாள். போலீஸ்காரனோ குதிரைகளின் கால்களுக்குள்ளகப்பட்டுக் காயப்பட்டுத் தன்னறிவற்றவனாய்க்கிடந்தான். பிறருக்குதவி செய்பவர் தன்னை வெறுத்தால்தான் உதவி செய்யக்கூடும்.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

356

OFFICE … 3 JUL 1920 … MADRAS.

June 1920. Registered No. M 136.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI ஜூன் 1920

## 'பெந்தெகொஸ்தே நாள்'

'அவர்களெல்லாரும் பரிசுத்தாவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.' அப். 2: 4.

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 538 வருஷங்களுக்குமுன் யோவேல் தீர்க்கதரிசியின் மூலமாய்ச் சொல்லப்பட்ட பரிசுத்தாவியானவர் அவர் பரத்துக்கேறின பத்தாவது நாளிலே (அதாவது பெந்தெகொஸ்தே நாளிலே) பலத்த காற்றடிக்கிற முழக்கம்போல் மகா வல்லமையாய் எருசலேமில் கூடியிருந்த ஆண்கள்மேலும் பெண்கள்மேலும் வந்தமர்ந்தார். அப்போது அவர்களெல்லோரும் பரிசுத்தாவியினாலே நிரப்பப்பட்டு பற்பல பாஷைகளைப் பேச ஆரம்பித்தார்கள். அப்போஸ்தலரெல்லாரும் புது ஆவியைப் பெற்று தைரியமடைந்தார்கள். பரிசுத்தாவி அருளப்பட்ட இச்சம்பவமானது ஒரு ஜாதியாருக்கு மாத்திரமல்ல எல்லாருக்கும் உரியது. ஒரு காலத்தில் மாத்திரமல்ல காலாகாலங்களிலே தம்முடைய திருச்சபைகள்மேலும் தனித்தனி ஆத்துமாக்கள்பேரிலும் பூரணமாய்ப் பொழிந்தருளிவருகிறார். இவ்விதமாய் சபைகள் பரிசுத்தாவியினால் நிரப்பப்படவேண்டியது இன்றியமையாதவசியம். அப்படி நிரப்பப்படுவதினாலே சபைகள் சுத்திகரிக்கப்பட்டுச் சீரடைகின்றன. ஊக்கமும் உற்சாகமுமுண்டாகி எழும்பிப் பிரகாசிப்பதை நம்முடைய அனுபவத்திலறிகிறோம்.

பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து..... .......எனக்குச் சாக்ஷிகளாயிருப்பீர்கள். அப். 1: 8.

பரிசுத்தாவி ஊற்றப்படுமுன்னதாக சீஷர்கள் ஜனங்களைப் பாவத்தினின்று நீதிமார்க்கத்துக்குத் திருப்ப சக்தியற்றவர்களாயிருந்தார்கள். கவி

சேஷத்தை மாத்திரம் பிரசங்கித்தார்கள். பெந்தெகொஸ்தே நாளுக்கப்புறமோ பயங்காளியாயிருந்த பேதுருகூட கிறிஸ்துவை தைரியமாயறிக்கை செய்து மரணபரியந்தம் நிலைத்திருந்தான். ஸ்தேவான் தன்னுடைய மரணத்தின் மூலமாய் கிறிஸ்துவை மகிமைப்படுத்தி அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினான். துன்பப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள் பற்பல இடங்களில் சிதறடிக்கப்பட்டு அங்கேயும் அவர்கள் சாக்ஷியின் மூலமாய் ஆத்துமாக்கள் நாள்தோறும் சபையில் சேர்க்கப்பட்டார்கள். அப்போஸ்தலர் நடபடிகளில் நாம் வாசிக்கிற பிரகாரம் சீஷர் பரிசுத்தாவியினால் பெலப்படுத்தப்பட்ட பிறகு கிறிஸ்துவினிமித்தம் உபத்திரவங்களிலும் துன்பங்களிலும் உறுதியாய் நின்று தங்கள் பரிசுத்த ஜீவியத்தினால் அவரை மகிமைப்படுத்தினார்கள்.

**1. எல்லாரும் பரிசுத்தாவியினால் நிரப்பப்படவேண்டியது அவசியம்.** இது திருச்சபைக் கிருக்கவேண்டிய இலக்ஷணங்களிலொன்று. முதலாவதாகப் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டவர்கள் திரும்பவும் நிரப்பப்பட்டார்களென்று அப். 4: 31-ல் வாசிக்கிறோம். தர்சுப் பட்டணத்து சவுல் குணப்பட்ட பின்பு பரிசுத்தாவியைப் பெற்றான் என்றும்; பரி. பவுல் அங்கங்கே சபைகளை ஸ்தாபித்த பிறகு அந்தச் சபைகளெல்லாம் பரிசுத்தாவியினால் நிறைந்திருந்தது என்றும்; இந்த ஆவியின் வரங்களை அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்களென்றும் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்தாவியைப் பெற்றீர்களா என்ற கேள்வியும் ஒருதரம் கேட்கப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாளின் வரங்கள் பிந்திய காலத்திலுள்ள எல்லாத் தலைமுறையாருக்கும் முன்போலவே அருளப்படும் 'வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கு முண்டாயிருக்கிறது.' அப் 2: 39 தற்காலத்துச் சபை அந்த நிலைமைக்கு வந்தெட்டாதிருந்தால் குறைவு ஆண்டவரிடத்தில் இல்லை சபையினிடத்திலேயே இருக்கிறது எல்லாரும் பரிசுத்தாவியைப் பெறலாம். பரிசுத்தாவியின் நிரம்புதல் இல்லாததால் அநேக சபைகள் குளிர்ந்த நிலைமையிலிருக்கின்றன. நமக்குள் அவர் வல்லமையாய்க் கிரியைசெய்ய நாம் இடங்கொடுக்கவேண்டும்.

**2. பரிசுத்தாவியைப் பெற நாம் துணப்படவேண்டும்.** அசுத்தமான பாத்திரங்களில் தம்முடைய ஆவியை அருளமாட்டார். நாம் பாவமறச் சுத்திகரிக்கப்பட்டாலல்லாமல் இந்த இலவசமான அருளைப் பெறமுடியாது. அவருடைய இரத்தத்தால் சுத்திகரிக்கப்படவேண்டும். பாவத்தைப் பேணிவைத்துக்கொண்டு பரிசுத்தாவியின் வரத்துக்காகக் கெஞ்சினால் அவர் வரமாட்டார். நாம் பாவத்துக்கு மரித்து நீதிக்கு பிழைக்கவேண்டும். மறு



30 JUL 1920

பிறப்படையவேண்டும். பரிசுத்தாவியைப் பெற[illegible]ட்டிருப்ப தற்குக் காரணம் நாம் பேணிவைத்துக்கொண்டிருக்கி[illegible]ம். அவர் வந்து நமதுமேலிறங்கத் தக்கதாக தடையாயிருக்கும் பாவத்தை விட்டுவிடவேண்டும். பாத்திரத்தின் மேல்மூடியை எடுத்தாலல்லாமல் பாத்திரத்தில் தண்ணீர் வார்க்கமுடியாது. நம்முடைய பாவத்தைப் போக்கிப் பரிசுத்தாவியையருள அவரை நோக்கி மன்றாடுவோமாக.

**3. விசுவாசத்தினால் பரிசுத்தாவியை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும்.** அவர் நம்மைப் பரிசுத்தமாக்கினபிறகு பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ள வாக்குத்தத்தம் மாத்திரமல்ல கட்டளையையும் கொடுக்கிறார். 'ஆவியினால் நிரப்பப்படுங்கள்' எபேசி. 5: 18, 19. அவருடைய வாக்குத்தத்தத்தை நமக்குச் சொந்தமாக்கிக்கொள்வோமாக. 'பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தாவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா! லூக்கா 11: 13. வாய்க்கால்கள் வெட்டுங்கள் தண்ணீர் வருவதற்கான குறிப்படையாளங்களை நீங்கள் காணாவிட்டாலும் அவைகள் தண்ணீரால் நிரப்பப்படும். அநேகர் பெற்றுக் கொள்ளக்கூடியவர்களாயிருந்தாலும் அவிசுவாசத்தினாலே ஒன்றும் பலன் இல்லாதவர்களாகிவிடுகிறார்கள். நாம் அவருடைய ஆவியினால் நடத்தப்படுவோமானால் நம்முடைய ஊழியத்தில் பலன் தோன்றும். ஊக்கமும் புதுப்பெலனும் அடைவோம்.

**4. பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்வதினாலுண்டாகும் ஆசீர்வாதங்கள்.** ஆசீர்வாதங்கள் அநேகமுண்டு. இரண்டொரு ஆசீர்வாதங்களை இங்கெடுத்துரைப்போம். அவ்வாசீர்வாதங்கள் ஆவியின் கனியென்றும் அழைக்கப்படலாம்.

**(a) பாவத்தின்மேல் ஜெயம்.** ஜீவனுக்குரிய ஆவியின் பிரமாணம் கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைப் பாவமரணம் என்ற பிரமாணத்தினின்று விடுதலையாக்குகிறது. இந்த ஜெயம் கிடைப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். தபோதனர்களென்று அழைக்கப்பட்டவர்களுங்கூட பாவத்தின்மேல் ஜெயம் பெறக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். பாவத்துக்கே அடிமைப்பட்டு அவ்வடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்படக்கூடாத நிலைமையிலிருக்கிறார்கள். ஆவியானவரே அதின்பேரில் ஜெயங் கொடுக்கிறவர்.

**(b) ஆவியின் கிருபை வரங்கள்** அருளப்படுகின்றன. அன்பு சந்தோஷத்தையும் சந்தோஷம் சமாதானத்தையும் சமாதானம் நீடிய பொறுமையையும் உண்டுபண்ணுகிறது. கலா. 5: 22, 23. இவ்வசனங்களில் சொல்லப்பட்ட கிருபை வரங்களை ஒவ்வொன்றாய் வாசித்துப்பார்த்து அவ்வித நற்கனி நம்மில் காணப்படுகின்றனவா என்று சோதித்துப்பார்ப்போ

மாக. அந்த இலக்ஷணங்கள் நம்மில் தோன்றாவிட்டால் பரிசுத்தாவியானவர் நமக்கு இன்னும் அருளப்படவில்லையென்பதை நினைத்துக்கொள்வோமாக.

(c) **ஊழியஞ்செய்ய வல்லமை கிடைக்கிறது.** அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியைப் பெற்றபிறகு மிகுந்த வல்லமையோடு சாக்ஷி பகர்ந்தார்கள். நம்முடைய ஊழியத்திலும் திரளான ஆசீர்வாதங்களுண்டாகும்.

ஜீவதண்ணீருள்ள நதிகள் நம்மிடமிருந்து புறப்பட்டு வறண்ட நிலங்களை நீர்ப்பாய்ச்சி பசுமையைக் கொடுக்கும். 'என்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்' யோவா. 7: 38. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட மனுஷன் கனியற்றவனாயிருக்க முடியாது. தன்னைச் சுற்றிலும் பசுமையான நிலங்களையும் பசும்புற்றரையையும் காண்பான். எஜமானிடம் அநேக ஆத்துமாக்களைக் கொண்டு வரக்கூடியவனாயுமிருப்பான். 'அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நக்ஷத்திரங்களைப்போல என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்' தானி. 12: 3.

வெட்டாந்தரை நிலந்தானும்
ஏதேன்போலாகுமென்றீர்
சாபத்துள்ளான புல்பூண்டும்
கேதுருவாகுமென்றீர்.

பல்லவி. தேவன்பின் வெள்ளம்
தேவன்பின் வெள்ளத்தேவை
கொஞ்சம்ருசித்த என்னுள்ளம்
கெஞ்சுதே இன்னுந் தேவை.

---

## சீலா

1. விருத்தாந்தத்தை பின்வரும் பாகங்களில் வாசித்துப் பார்க்க —

**பூர்வம்.** இருபேருண்டு சீலா, சில்வானு. எருசலேம் சபையிலுள்ள ஓர் விசேஷித்தவர். அப். 15: 22. ரோம சலாக்கியம் பெற்றவர். அப். 16: 37.

**வேலைகள்.** தீர்க்கதரிசியாக எருசலேமிலும், அந்தியோகியாவிலும், (அப். 15; 22-39).

மிஷனெரியாக சீரியா சிலிசியம். அப். 15: 2; தென் கலாத்தியா. அப். 16: 1-6; துரோவ. அப். 16: 7-10; பிலிப்பு. அப். 16: 12-40; தெசலோனிக்கே. அப். 17: 1-9; பெராயா. அப். 17: 10-15; கொரிந்து. அப். 18: 5, 2 கொரி. 1: 19, 11: 9.



N.B —இதற்கு பின்னுள்ளவை ஒன்றும் சொல்லப்படவில்லை. பரி பேதுருவுடனிருந்து வேலைசெய்தார்போலும் 1 பேது. 5: 12.

2. பூர்வ இந்தியாவில் வில் யுத்தம் செய்யப்பட்டதாக ராமயாணம், மகாபாரதம் முதலிய கட்டுக்கதைகளில் பார்க்கிறோம். ஒவ்வொரு பட்டாளத்தானும் நன்றாய் நாணேற்றப்பட்ட இரு வில்களுடன் யுத்தத்திற்கு ஏகுவான். ஓர் வில்லிலுள்ள கயிறு தொய்யும்போது அடுத்த வில்லைக் கொண்டு யுத்தஞ்செய்வான். அந்தகார லோகாதிபதியுடன் யுத்தஞ்செய்யும்போது பரி. பவுல் முதலாவது பரி: பர்னபாவுடன் சென்றார். அந்த வில்லில் சற்று தொய்வு காணப்பட்டபோது, ஏற்கனவே நாணேற்றப்பட்டு யுத்தத்திற்கு ஆயத்தமாயிருந்த "சீலா" வென்பவருடன் சேர்ந்து இரண்டாம் மிஷனெரி பிரயாணம் செய்கிறார்.

கிரேக்க இதிகாசங்களில் ஹெர்மிஸ் (Hermes) என்ற உப-தேவன் எப்பொழுதும் பாதரட்சையை தொடுத்துக்கொண்டு பிதாவாகிய மூலதேவனின் விஷயமாய் உலகமெங்கும் செல்லுவதாய் வெளியிடப்பட்டிருக்கிறது. நடபடி புஸ்தகத்தில் சீலா. இத்தன்மையையுடையவராயிருந்ததாக வரையப்பட்டிருக்கிறார். 'சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை எப்பொழுதும் தொடுத்துக்கொண்டு' (எபே. 6: 15) மிஷனெரி வேலையைச் செய்தார். நாளையத் தினத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்ற தெருவில் நில்லாது இன்றைக்கே இப்பொழுதே செய்யவேண்டும் என்ற கொள்கையுடைய யத்த புருஷனாய் விளங்கினார். இவரில் காணப்படும் விசேஷித்த லட்சணம் **'சத் விஷயங்களுக்குத் திட ஆயத்தம்'.**

3 **தனது மேன்மையை யெல்லாம் துரக்க ஆயத்தமாயிருந்தார்.** சீலா சாதாரண ஓர் மனுஷனல்ல. மினாசோன் என்பவனைப்போல் பழைய சீஷனாயும் (அப். 1: 22, 21: 16) உயிர்த்தெழுந்த ரட்சகரைக் கண்டவர்களிலொருவராயுமிருந்ததாக Dr. Lightfoot அனுமானிக்கிறார். இவர் தீர்க்கதரிசியாயுமிருந்தார் (அப். 15: 32); அதாவது பரி: ஆவியினால் ஏவப்பட்டு நன்றாய் பிரசங்கிக்கிறவராயிருந்தார். இந்த உத்தியோகம் அப்போஸ்தல பட்டத்துக்கு மாத்திரம் சற்று தாழ்ந்ததாயுமிருந்தது (1கொ. 12: 28) மேலும் இவர் எருசலேம் சபையிலுள்ள ஓர் முக்கியஸ்தனாயுமிருந்தார் (அப் 15: 22) ரோமை சலாக்கியமும் பெற்று புறமதஸ்தராலும் மதிக்கப்படக்கூடியவராயிருந்தார். இச்சலாக்கியம் பெற்றவர்கள் ஐசுவரியவான்களாயும், தேச பிரபுக்களுக்கு சரிசமமான கௌரவத்தையுடையவர்களாயுமிருந்தார்கள் ஆகவே திருச்சபையிலும், ரோமராச்சியத்திலும் மிக நன்கு மதிக்கப்பட்டு பரி. பவுலுக்கு சரிசமமாக எல்லா விஷயத்திலுமிருந்த இவர் இப்பொழுது தம்மைத் தாழ்த்தி தமக்குரிய மேன்மைகளை யெல்லாம் துரந்து பரி. பவுலுக்கு வேலைக்காரனாகவும், ஆயுததாரியாயும் தம்மை படைக்கிறார்:

பரி. பவுலுடன் உடன்வேலையாளாகவும், அவருக்கு சரிசமமானவராயுமிருந்து பரி: பர்னபா இதுவரை வேலைசெய்து வந்தார். இவரோ தீமோத்தேயுவைப்போல் அவருக்கு கீழாயிருந்து வேலைசெய்ய அழைக்கப்பட்டார். என்றாலும் சீலா தமது ரத்தத்தோடும், மாம்சத்தோடும் ஆலோசிக்காமல் தமது அழைப்பை கற்றுக்கொண்டார் 'உங்களில் எவனாகிலும் முதன்மையாயிருக்க விரும்பினால், அவன் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்' (மத். 20 27) என்று சொல்லிய தமது எஜமானை பின்பற்றினதினால் இவ்வாறு சீலா உழைத்தார். புறமதஸ்தரின் மேலுள்ள அன்பே தம்மை இவ்வாறு தாழ்த்த இடங்கொடுத்தது. பரி. பவுல் வியாதியினால் கஷ்டப்படுகிறவர். அவருக்கு உதவி செய்வதையே தமக்கு கிடைத்த பெரிய பாக்கியமென வெண்ணினார். (எபி 13: 7, 17).

தேவனுடைய சபையில் நாம் நம்மை உயர்த்தாதிருப்போமாக. மறைந்திருந்து கர்த்தருக்கு பணிவிடை செய்யக்கடவோம். பரி. சுத்த தேவனுக்கு பணிவிடை செய்ய நான் எம்மாத்திரம், என் குடும்பம் எம்மாத்திரமென்ற வெண்ணம் நமது இருதயத்தை ஆளவேண்டும். அப்படிப்பட்ட வெண்ணம் நம்மை ஆளும்போது தேவனுடைய வீட்டில் மேன்மையான ஆசனங்களை விரும்பமாட்டோம். இதுவே கிறிஸ்துவின் சிந்தை; சீலாவின் கோள்ப்பாடு.

4. **ஆபத்தில் உதவ ஆயத்தமாயிருந்தார்.** ஆனாலும் திறமையும், திடசித்தமும் நுண்ணிய புத்தியுமுள்ளவராய் பரி. பவுல் விளங்கினபோதிலும் இரண்டாம் பிரயாண சமயத்தில் மிகக் கலக்கமுற்றவரானார். சொந்த ஜனங்களாலும், உற்றார் உறவினர் சிநேகிதராலும் ரட்சண்ணியா மூர்த்தி மறக்கப்பட்டதுபோல், தொண்டன் பவுலும் இச்சமயத்தில் யாவராலும் சந்தேகிக்கப்படுகிறார்.

புறஜாதிய சபை விருத்தியாக பற்பல கஷ்டங்களுண்டாயின. புறஜாதி சபையை மோசேயின் பிரமாணத்தினால் கட்டுப்படுத்தக் கூடாதென்பதே இவருடைய கோட்பாடு (அப். 15). ஒவ்வொரு திருச்சபையும் சுயாதீனமுள்ளதாயும், பரி: ஆவியினால் நடத்தப்படுவதுமாயிருக்கவேண்டுமென்பது இவருடைய வாஞ்சை. ஆனால் யூதமார்க்க வழக்கங்களில் வளர்க்கப்பட்டு குறுகிய பார்வை (Short-Sight) யுடையவர்களாயிருந்த யூதக் கிறிஸ்தவர்கள் மிகக் கலக்கங்கொண்டு திருச்சபையாகிய கப்பலின் தளவாடங்களை தளரவிடுவதினால் அக்கப்பலுக்கு மிக மோசம் வருமென பயந்தார்கள். அப்பயத்தினால் பரி. பவுலின் மேலும், அவருடைய வேலையின்மேலும் சந்தேகங்கொள்ள ஆரம்பித்தார்கள். ஏதேனுக்குள் சென்ற முதல் பாவம் 'சந்தேகம்'. அப்பாவம் பூர்வ திருச்சபைக்குள்ளும் சென்றது. 'கிறிஸ்துவைப்பற்றும் அன்பு பிரகாசித்து கொழுந்துவிட்டெரிய, சுயவெறுப்



**பழகிய நதி செந்நிறமாக ஓடும்போது திருச்சபைக்கு மோசமேயில்லை**யென்ற சத்தியத்தை இப்பேதைகள் அறியாதிருந்தார்கள்.

மேலும் இவருடைய நண்பர்களான 'பரி. பர்னபா, பரி. மாற்கு' முதலியவர்களும் இச்சமயத்தில் பிரிந்துகொண்டார்கள். பரி. பவுலின் தன்மையைப் பார்க்கும்போது இவ்வித சந்தேகத்தினாலும் பிரிவினைகளாலும் இவருடைய இருதயம் ஆராத்துயரம் அடைந்ததெனசொல்லலாம். ஏனெனில் இவர் இந்தியா நாட்டு மௌன ரிஷிகளைப் போன்றவருமன்று; பலஸ்தீன பரி: யோவானைப் போன்றவருமன்று; ரட்சாபெருமானைப்போல ஜனங்களுடன் பழகி சந்தோஷம் கொண்டாடுகிறவர். இவர் ஜனசாரி.

இவருடைய இருதயப்புண்ணை ஆற்றுவோராய் சீலா விளங்குகிறார்: இவர் ஓர் உத்தம நண்பன். எருசலேம் சபையின் பிரதிநிதியாய் சீலாவிருந்தபடியால் பரி: பவுலின் 2-ம் பிரயாணம் மிகப்பலனுள்ளதானது. பரி' பவுலைப்பற்றிய தப்பிதமான அபிப்பிராயங்கள் யாவும் சீலாவின் பிரசன்னத்தினால் விலகின

நமது சபையிலும் ஒருவரையொருவர் தாங்கும் ஆவி தேவ ஊழியருக்குள் வேண்டும். "பரிசுத்தவான்களின் ஐக்கியத்தின் தன்மையை" நாம உலகத்துக்கு படமாக எடுத்துக் காட்டவேண்டும். தற்சயமும், தற்பெருமையும், திருச்சபையை கெடுக்கும் புழுக்கள். அத்தொற்றுவியாதிக்கு விலகி ஓடுவோமாக.

5. **கஷ்டப்பட ஆயத்தமாயிருந்தார்.** மலைகள், குன்றுகள், வனாந்தரங்கள், ஆறுகள், கடல்கள் முதலியவைகளை ஊடுருவி கடந்து 2-ம் மிஷனெரி பிரயாணம் செய்யப்பட்டது. இச்சமயத்தில் நேரிட்ட மோசங்கள் பல 2 கொரி. 11: 26ல் சொல்லப்பட்டிருக்கின்றன. பிலிப்புப் பட்டணத்திலும் மகா நிந்தைகளையும் கஷ்டங்களையும் அடைந்தார். (1தெச 2) சவுக்காலடிக்கப்பட்டு, விலங்கிடப்பட்டிருக்கும்போது, மனோதைரியம் குன்றாதவராய் தேவனை ஸ்தோத்திரித்துப் பாடினார். மக்கெதோனியா நாட்டில் பஞ்சமுண்டாயிருந்தபடியால் சொந்தக் கைகளினால் கூலிவேலை செய்து தன்னை ஆதரித்தார் (2 தெச. 3: 7, 8; 1 தெச. 2: 9). பெராயாவிலிருந்த துன்பமுண்டாக, பரி: பவுல் அத்தேனேக்குப் போக, இவரும் தீமோத்தேயும் துன்பங்கள் மத்தியில் தரித்திருந்து வேலை செய்தார்கள். துன்பத்தினால் மிக வருந்தின பிலிப்புவுக்குப் போகச் சொன்னபோது தைரியமாய்ப் போய் அவர்களைத் திடப்படுத்திவிட்டு, அவர்களுடைய பண உதவியையும் பெற்றுக்கொண்டு திரும்பினார். (பிலி.4: 1[illegible]; 2கொரி. 11: 9; அப். 18: 5).

........கல்வாரிப் பாதையில் தைரியமாய் கிறிஸ்தியான் ஓடவேண்டும். துன்பத்தின் வழியாய் நித்திய ஜீவனை சுதந்தரிக்கவேண்டுமென்பது தேவ நியமம். துன்பத்தைக் கண்டு அஞ்சுதல் தேவ ஊழியனிடம் காணப்படக்

கூடா. தேவ ஊழியம் சொகுசான ஊழியமென்றெண்ணாமல் துன்பம் நிறைந்த ஊழியமென்றெண்ணவேண்டும். துன்பத்தின் மத்தியில் பொறுமை, விடாமுயற்சி, கர்த்தரோடு ஐக்கியம் காணப்படவேண்டும்.

ஓர் சபையின் வாழ்வுக்கு "சுய வெறுப்பு" தேவை. கிறிஸ்துவின் மூலோபதேசமுமதுவே. நமது நாட்டின் வாழ்வுக்கும், நமது சபையின் விருத்திக்கும் 'தற்பிரதிஷ்டை' வேண்டும்.

6. 2-ம் மிஷனெரி பிரயாணத்தில் கொரிந்து பட்டணம்வரை பவுலுடன் சேர்ந்து சீலா வேலை செய்ததாக பார்க்கிறோம். அதின்பின் 10 வருஷங்களாக அவரைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. கடைசியாக 1 பேது. 5: 12ல் அந்நிருபத்தை ரோமிலிருந்து ஆசியாவுக்கு கொண்டு போகிறவராய்க் காணப்படுகிறார். பரி: பவுலுக்கு ஏற்ற உதவிக்காரராய் பரி: லூக்கா, தீமோத்தேயு விளங்கினபடியால் அவரைவிட்டுவிட்டு பரி: பேதுருவுடன் சேர்ந்து ஓர்வேலை உழைத்தார்போலும். இவரைக்குறித்து பரி: பேதுரு சொல்லுவதாவது 'உண்மையுள்ள சகோதரன்'.

நமமைக்குறித்து இவ்வித நற்சாட்சி கூறப்படுமா? உண்மையுள்ள தேவ ஊழியன் என்ற பட்டம் எவ்வளவு மேன்மையும் மகிமையுமானது.

திடீரென்று காணப்பட்டு திடீரென மறைந்துபோகும் நட்சத்திரத்தைப் போன்றவர்வர் இவரைக்குறித்து 'எப்பொழுதும் ஆயத்தமாயிருந்த சுறுசுறுப்புள்ள ஊழியன் (லூக். 17: 7—10) என கர்த்தரால் கடைசி நாளில் புகழப்படுவார்.

M. V. J.

---

## வியாதியும் சுகமும் (திருச்சபைத் தீபிகை)

ஜெபத்தினால் சுகம் கிடைக்கப்பண்ணுகிறவர்கள் தமிழ்நாட்டில் அநேகர் எழும்பியிருக்கிறார்கள். பதினைந்து வருஷங்களாய் இவ்வித ஊழியம் அங்கங்கே நடைபெற்றுவருகிறது. திருநெல்வேலியிலும், சென்னையிலும் இப்படிப்பட்டவர்கள் பலர் உண்டு. இவர்கள் மூலமாய் நற்சுகம் கிடைக்காதிருக்குமானால், இத்தனை வருஷகாலம் இவ்வித வேலை நிலைபெற்று வளராது. ஆகையால் அநேகர் இவ்வித பத்தர்களால் நன்மையடைகிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை. உலகின் கண்ணிருக்கும் வியாதி துன்பங்கள் எத்தனையோ ஏராளமாயிருக்கின்றமையால், குணமாக்கும் தொழிலை யார் செய்தாலும், வைத்தியமோ, ஜெபமோ, கிறிஸ்துமார்க்கத்துக்கும் ஏலாத முறையை ஒருவர் கையாளுவதின்றி எவ்விதமாய்ச் செய்தாலும் அதை நன்கு மதிப்பதும் அதற்குக் கைகொடுப்பதும் அதற்கு இடையூறு செய்யாமலிருப்பதும் கிறிஸ்தவர்கள் கடமை.



காரியம் இவ்வாறிருந்தபோதிலும், சுகத்துக்காக ஜெபிக்கிறவர்களுக்கும் சுகத்துக்காக மருந்துப் பிரயோகம் செய்கிறவர்களுக்கும் கக்ஷி உண்டானதுபோல காணப்படுவதுண்டு. ஜெபிக்கிறவர்கள் வைத்தியரை அவமதிப்பதும், வைத்தியர் ஜெபிக்கிறவர்களை அவமதிப்பதும் சகஜம். வைத்தியம் பார்ப்பது குற்றமென்றாற்போல் ஜெபிக்கிறவர்கள் பேசுவதுண்டு; ஜெபிக்கிறது பைத்தியமென்றாற்போல வைத்தியர் பகிடிபண்ணுவதுமுண்டு. ஒருவருக்கொருவர் சகாயர்களாயிருக்கவேண்டியவர்கள் ஒருவரோடொருவர் போராடுகிறபடியால், பார்க்கிறவர்கள் மனம் கலங்கித் திகைக்கிறது. இதுதான் சரியோ, அதுதான் சரியோ-என்ற சந்தேகம் அநேகரைக் குழப்புகிறபடியால், அப்படிப்பட்டவர்களுக்கு உதவியாக இதை எழுதுகிறோம்.

வியாதியாவதென்ன, சுகமாவதென்ன என்பதைதமுதல்முதல் விசாரிப்போமாக.

1. வியாதியாவதென்ன? வியாதி இருவகையாய் உண்டாவதுண்டு: (1) ஜீவாதாரக்கருவிகள் குடங்குவதினாலுண்டாகும வியாதிகளுண்டு; (2) வெளிவிஷம் ஜீவாதாரக் கருவிகளுக்கு உட்செல்வதினாலுண்டாகும் வியாதிகளுமுண்டு.

(1) ஜீவாதாரக் கருவிகள் குடங்குவதினாலுண்டாகும் வியாதிகள்.

ஏதாமொரு கருவி அசமந்தமாயிருப்பது, அதாவது, செய்யவேண்டிய வேலையைச் சரியானபடி செய்யாமற்போவது சில வியாதிகளுக்குக் காரணம். ஈரல் சரியானபடி வேலைசெய்யாவிடில் சரியானபடி ஜீரணமாகாமலும், குடல் சுத்தமாகாமலும் போவதினால் சுகவீனம் உண்டாகிறது. தோலிலிருக்கும் வேர்வை நரம்புகள் தம்தம் வேலையைச் செய்யாதபடி தடைபடுமாகில் வேர்வைகட்டி ஜலதோஷம் உண்டாகும். இவ்வாறே சரீரத்தினுடைய கருவிகள் ஏதாகுலும் தம்தம் வேலையைக் கிரமப்படி செய்யாவிட்டால் வியாதி உண்டாகிறது.

ஏதாமொரு கருவி தன் வேலையை மிதஞ்சிச் செய்யுமானாலும் ரோகம் லபிக்கும். பித்தம் ஜாஸ்தியாகுமாகில் அல்லது இரத்தாசயம் மிதமிஞ்சித் துடிக்குமாகில் சரீரம் குடங்குவதியல்பு. போஜனத்தை மட்டுப்படுத்தாமல் குடல்கள் மட்டுக்குமிஞ்சி தங்கள் வேலையைச் செய்யப்பண்ணுவது, அஜீரணம் உண்டாகவும், ரத்தம் கெட்டுப்போகவும் வழிநடத்தும்.

அல்லது, ஏதாமொரு கருவி தன்வேலையில் பாதியைச்செய்து பாதியைச் செய்யாதே போகும்போது சரீரம் குடங்கும்; ஜீரணகருவிகள் சில பதார்த்தங்களை ஜீரணிக்காமற்போனால் வியாதியுண்டாகும்.

இவை அனைத்தும் ஜீவனுக்கு ஆதாரமாயிருக்கும் கருவிகள். ஏதோ ஒரு பிசகினால் தம்தம் வேலையைச் சரிவரச் செய்யாமற்போவதினாலுண்டாகும் ரோகங்கள்.

(உ) புறம்பேயிருந்து விஷம் சரீரத்துக்குட் செல்வதினாலுண்டாகும் வியாதிகள்.

இவைகள் அதிக நுட்பமான விஷ ஜெந்துக்களாலுண்டாகும் வியாதிகள். இவ்விஷ ஜெந்துக்கள் அல்லது விஷ அணுக்கள் தோலின்மூலமாகவோ, அல்லது சரீரத்திலுள்ள மற்ற வாசல்கள் மூலமாகவோ உட்பிரவேசித்து பற்பல வியாதிகளைப் பிறப்பிக்கின்றன. விஷஜுரத்தை உண்டாக்கும் ஜெந்துக்கள் கொசுக்கடியினால் தோல்வழியாய் இரத்தத்துக்குட் சென்று குளிர்க்காச்சல் அல்லது முறைக்காச்சல் என்று சொல்லப்படும் வியாதியை உண்டாக்குகின்றன. விஷபேதி, டைபாயிட் என்று சொல்லப்பட்ட விஷஜுரம் முதலிய ரோகங்களை உண்டாக்கும் ஜந்துக்கள் நாம் குடிக்கும் தண்ணீரின் வழியாய் அல்லது ஆகாரத்தின் வழியாய் உட்பிரவேசிக்கின்றன. க்ஷயரோகம், இன்புளுவென்சா முதலியன நாம் சுவாசிக்கும் ஆகாயத்தின் வழியாய் சரீரத்துக்குட் செல்லுகின்றன. இவைபோக, பாஷாணம் முதலிய நஞ்சு பதார்த்தங்களாலுண்டாகும் வியாதிகள் நமக்குத் தெரியுமே இவையனைத்தும் புறம்பேயிருந்து சரீரத்துக்குட் பிரவேசிக்கும் விஷத்தினால், அல்லது விஷ ஜெந்துக்களாலுண்டாகும் வியாதிகள்.

இவ்விஷ ஜெந்துக்களைக் கண்ணினால் பார்க்கமுடியாது, நம்மை அறியாமலே இவை நமது சரீரத்துக்குட் பிரவேசிக்கிறவைகள். இவை எப்போதும் எல்லாரிலும் அந்தந்த வியாதிகளை உண்டாக்குகிறதில்லையென்று வைத்திய சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இவ்வணுக்கள் சரீரத்துக்குட் பிரவேசித்தவுடனே இவைகளுக்கும் நமது இரத்தத்திலிருக்கும் ஜீவ ஜந்துக்களுக்கும் போராட்டம் உண்டாகிறதாம். இரத்தம் சுத்தமாயும் பெலமுள்ளதாயு மிருக்கும்போது, இவ்விஷ அணுக்களைக் கொல்லும் சக்தி இரத்தத்திலிருக்கும ஜீவ அணுக்களுக் குண்டாம். இவ்வித ஆரோக்கியமும் ஜீவனும் இரத்தத்தி லில்லாதிருக்கும்போது, விஷஜந்துக்களான அணுக்கள் தம் நாசவேலையைச் செய்துவிடுகின்றனவாம்.

புறம்பேயிருந்து சரீரத்துக்குண்டாகும் வலி, அடி காயம் முதலியன வியாதியல்ல. இரத்தம் சுத்தமாயிருக்கும்போது, தோலின்மேல் படும் அடியானாலும், காயமானாலும தன்னாலேயே சுகமாகக்கூடும். காயம்பட்ட இடம் சுத்தமாயும் புறத்திலிருந்துவரும் விஷ அணுக்கள் உட்பிரவேசியாமலு மிருக்கும்படி காத்துக்கொண்டால்போதும், காயம் புண்ணாக வேண்டிய அவசரமில்லை.

### 11. சுகமாவதென்ன?

சம்பூரண ஜீவனே சுகமாம். ஜீவதாரக் கருவிகளைத் தம் தம் விதிப்படி கிரியைசெய்யப் பண்ணுவதும், புறம்பேயிருந்து சரீரத்துக்குட்செல்லும் விஷ அணுக்களைக் கொல்லுவதும் தேகத்திலிருக்கும் ஜீவனே.



ஆகவே வியாதிகளை நீக்குவதற்கும், சரீரத்துக்குக் குணமளிப்பதற்கும் மனுஷர் பிரயோகிக்கும் சகல பக்குவங்களும் செய்யும் வேலையென்னவென்றால், சரீரத்திலுள்ள ஜீவனானது தன் வேலையைச் செய்வதிற்கிருக்கும்தடைகளை நீக்கி, விஷ அணுக்கள் அணுகாதபடி காத்துக்கொள்ளுவதே. உதாரணமாக, வைசூரி குத்திக்கொள்ளுவது என்னவென்றால், வைசூரியின் விஷ அணுக்கள் சரீரத்துக்குள் பிரவேசிக்குமாகில் அவற்றைக் கொல்லும் வல்லமையை சரீரத்திலிருக்கும் இரத்தத்திற்கு அளிப்பதேயாம். இவ்வாறு புது வல்லமையைப்பெற்ற ஜீவ அணுக்கள் வைசூரி விஷ அணுக்களை மிஞ்சிப்போக விடமாட்டாது. பிளேக் வியாதிக்கும், விஷபேதிக்கும் டைபாயிட் ஜுரத்துக்கும். மேலேரியா என்ற மலே ஜுரத்துக்கும் இவ்வித மாற்றுப்பாலை வைத்திய சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவையெல்லாம் வியாதிகளைச் சுகமாக்கும் மருந்துகளல்ல, சரீரம் தானே வியாதியை நீக்கிவிடத் தக்கதாக சரீரத்தின் இரத்தத்திற்குள் ஜீவனையும் சத்துவத்தையும் கொடுக்கும் உபாயங்களே.

சம்பூரண ஜீவனே சுகம் என்பது சத்தியமானால், ஜீவனைப் பெலப்படுத்துவது யாவும் சுகத்தைக்கொடுக்கும் யத்தனங்களென்பது தெளிவு. சுத்த ஆகாயம் ஆரோக்கியமான போஜனம், தகுதியான வேலை இவை யாவும் சரீரத்தைப் பெலப்படுத்தும் யத்தனங்களாகையால், சுகத்தையும் கொடுக்கும் யத்தனங்களென்று தாராளமாய்ச் சொல்லவேண்டியது.

இவை மாத்திரமல்ல, மனநிலையும் ஜீவனுக்கும் சுகத்துக்குமடுத்ததென்று சற்று யோசித்தால் விளங்கும். பயமுண்டானால் சரீரத்தில் வேர்வை உண்டாவதும், மனசில் துக்கமுண்டானால் போஜனத்தின்மேல் இஷ்டமில்லாமற் போவதும், அழுதுகொண்டே கிடக்கும் பிள்ளைக்கு அஜீரணமுண்டாவதும நாம் சாதாரணமாய்க் கவனித்திருக்கும் விஷயங்கள் தானே. சரீரம் பலட்சயப்படுமானால் மன ஊக்கமற்றுப்போவதும், பித்தம் அதிகரித்தால் அசதியுண்டாவதும் கடும்பசியாயிருக்கும்போது கோபம் வருவதும் சகஜமல்லவா? மேலும் வியாதிகாலத்தில் தைரியமும் மனச்சமாதானமும் எவ்வளவு அவசியம் என்று அறிவோமே. நான் சாகப்போகிறேன் என்று ஒருவன் நினைத்துப் பயப்படும்போது, அவனைப் பிழைப்பூட்டுகிறது கஷ்டம். பயம் சுகத்தைக் கெடுக்கும். தைரியம் சுகத்துக்கு உதவிசெய்யும். வைத்திய சாஸ்திர நூல் ஒன்றில. பயமகிய பசாசைத்துரத்தி, வியாதியஸ்தனுடைய படுக்கைக்கு நம்பிக்கையின் தூதனைக்கொண்டு வருவதேதுவோ, அது வைத்தியன் செய்யும் சிகிச்சைக்கு ஓர் பலத்த உதவி என்று கண்டிருக்கிறது தனக்கு ஏதோ மோசம் வரப்போகிறது என்று ஒருவன் ஓயாமல் நினைத்துப் பயப்படும்போது, அவனைச் சுகமாகக் கூடிய சத்துவத்தில் கொஞ்சத்தை தன் ஜீவனை விட்டு எடுத்துப்போடுகிறான். இப் பயத்தை ஏதாமொரு ஏதுவைக்கொண்டு நீக்கிவிடக் கூடுமானால் அவன்

சுகமாகும்வழியில் அவனை கிருத்தினதற்குச் சமமாகும். ஒருவன் ஏதாவதொன்றை நினைத்து மனசைக்கலக்கி வருத்தப்படுத்தும்போது, 'ஏன் இதையே நினைத்து நினைத்து உயிரைக் குறைக்கிறாய்' என்று சொல்லுவதுண்டு. உள்ளபடியே கவலை, பயம், அதைரியம், அவநம்பிக்கை—இவைகள் உயிரைக் குறைக்கிறவைகள்தான். இவற்றை நீக்கும்போது, உயிரைப் பெலப்படுத்துகிறோம்; உயிரைப் பெலப்படுத்தும்போது ஆரோக்கியத்தை உண்டாக்குகிறோம்.

விசுவாசம், பக்தி, ஜெபம்—முதலியவற்றிலும் சரீர சுகத்துக்கு மிருக்கும் சம்பந்தம் இதினால் விளங்கும். (இன்னும் வரும்)

V. S. D.

---

## திருஷ்டாந்தங்கள்

அமெரிக்காவிலுள்ள துரை ஒருவர் லண்டன் பட்டணத்தில் வசித்து வந்தார். ஓர்நாள் அவருடைய சகோதரன் தன் வீட்டிற்கு வருவதாகக் கடிதம் வந்தது. வரும் நாள் திட்டமாய் எழுதவில்லை. ஓர்நாள் லண்டன் பட்டணத்திலுள்ள சகோதரன் பட்டணத்துக் கடைகள் வழியாய் விரைந்து செல்லுகையில் தன் சகோதரனை கடையொன்றில் நிற்கிறதைத் தான் கண்டதாக நினைத்தார். தான் பார்த்தபோது தன் சகோதரன் பார்வைக்கு அழகானவர் என்றாலும் முன்போலப் பெருமைக்காரனாகக் காணப்பட்டதாக நினைத்தார். அப்படி நினைத்துக்கொண்டு தான் அவரைப் பார்த்த கடைக்குப் போனபோது அங்கிருந்த நிலைக்கண்ணாடியில் தான் விரைந்து செல்லுகையில் தன் நிழலையே கண்டதாக அறிந்தார். இப்படித்தான் நமது ஜீவியத்திலும் நடக்கிறது. நமது சொந்தத் தப்பிதங்கள், குறைகள், பெலவீனங்களை நாம் உணராமல் இவைகள் மற்றவர்களிடத்தில்தான் அதிகமாய்க் காணப்படுகிறதாக நாம் எண்ணி அவர்களைக் குற்றப்படுத்துகிறோம்.

யோப்பாவிலிருந்து புறப்பட்ட கப்பல் ஒன்றில் பிரயாணம்பண்ணின ஒருவர் தன் அறையிலுள்ள படுக்கையின் அடியில் கப்பலில் ஓர் துவாரம் உண்டாக்கினார். காவற்காரன் இவர் செய்கிறதைக் கண்டு 'என்ன செய்கிறாய்?' என்று கேட்டான். பிரயாணி அவனைப் பார்த்து 'உனக்கென்ன? நான் என் படுக்கையின் கீழ்த்தானே துவாரம் உண்டாக்குகிறேன்' என்றார். இது எவ்வளவு மதியீனம்! இப்படியே நாம் பேசும் வார்த்தைகள், நமது செய்கைகள், நமக்கிருக்கும் சலாக்கியங்கள் எல்லாம் நம்முடையவைகள். நமது இஷ்டப்படி செய்ய நமக்குச் சுயாதீனம் உண்டு என்று எண்ணுகிறோம். இது பயங்கரமான காரியம்! இதினாலுண்டாகும் பலன் என்னவென்றால், தேவன் நமக்குத் தந்திருக்கும் இந்த இலவசமான ஈவுகளை நாம் அற்பமாய் எண்ணி அவமதித்தால், நாம் அவைகளை இழந்துபோவது மாத்திரமல்ல, இழந்தபின் திரும்பப் பெற்றுக்கொள்வதும் கூடாத காரியம்.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

04

July 1920. Registered No. M. 136

13 OCT 1920 MADRAS

# The Water of Life.

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI ஜுலை 1920

## திவ்ய சுவிசேஷகர்

சுவிசேஷ ஊழியத்தின் சம்பந்தமாய் நமது ரட்சகரின் மாதிரியைக் கவனிப்பது நமக்குப் பிரயோஜனமாயிருக்கும். அதை ஆராய்ந்து பார்ப்போமானால் கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் சுவிசேஷகனாகவேண்டிய பொறுப்பையுடையவன் என்பதை அறியலாம். ரட்சகரும் தமது உபதேசங்களில் இதை வற்புறுத்திப் பேசுகிறார். அவர் தாமே தனித்தனி ஆட்களின் ரட்சிப்பைக் குறித்துக் கவலையுள்ளவராயிருந்தார் என்பதைப் பார்க்கலாம் அவர் இளைப்படைந்தவராய்க் கிணற்றோரத்தில் உட்கார்ந்திருந்தாலும், சமாரிய ஸ்திரீயின் ஆத்தும ரட்சிப்பைக் கருதிச் சம்பாஷிக்கிறார். இரவில் தம்மைத் தேடிவரும் நிக்கோதேமோடு சம்பாஷிக்கச் சமயம் கண்டுபிடிக்கிறார். அவருடைய முறை இன்னதென்பதைக் கவனிப்பது நல்லது.

1. தனித்த ஆளானாலும் சரி, கூட்டமானாலும் சரி, யார் யார் தம்மிடத்தில் வந்தார்களோ, அல்லது யார் யாரை அவர் சந்திக்க நேரிட்டதோ, அவர்களோடு சம்பாஷித்தார். அவருடைய முதல் சீஷர்கள், பெரும்பாடுள்ள ஸ்திரீ, பெத்தானியாவிலுள்ள சிறு கூட்டம், சிரோபெனிக்கேயா ஸ்திரீ இன்னும் எத்தனையோ பேரோடு அவர் சம்பாஷித்திருக்கிறார். ஒவ்வொரு ஆத்துமாவின் அருமையையும் அவர் அறிவார். மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாயிருக்கும் என்றார். அதுவே தமது பிதாவின் சித்தம் என்பதை அறிந்தார். குணப்பட்டவர்களின் தொகை, சபைகள் ஸ்தாபிக்கப்படல் என்பது அவருடைய நோக்கமல்ல. தம்மிடத்தில் வரும் ஒவ்வொருவருக்கும் ரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டுமென்று ஆவல்கொண்டார். இதுவே நமது சுவிசேஷ ஊழியத்தின் நோக்கமாயிருக்குமானால் தேவநாமம் மகிமைப்படும்.

நம்முடைய வேலையின் பலனைத் தொகையிடவும், அவைகளை ரிப்போர்ட்டாக அச்சிட்டுப் பிரசித்தப்படுத்தவும் ஆரம்பிப்போமானால் நமது நோக்கம் சித்திபெறுவது சந்தேகம். இயேசுகிறிஸ்துவானவர் ஆத்துமாக்கள் பேரில் தாகம்கொண்டு அன்பினால் ஏவப்பட்டுச்செய்தவண்ணம் நாமும் அதே சிந்தையோடு வேலை செய்வோமாக.

2. யார் யாரிடத்தில் தாம் சம்பாஷித்தாரோ, அவர்கள் மெய்யாய்த் தமது சத்தியத்துக்குக் கீழ்ப்படிவார்கள் என்று நம்பினார். சகேயுவின் திருஷ்டாந்தத்தை எடுத்துகொள்வோம், சகேயுவின் உத்தியோகமாகிய ஆயத்துறை வேலையைக் கவனிப்போமானால், இப்படிப்பட்டவன் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வான் என்று சொல்லமுடியாது. அவன் மிகுந்த திரவியத்தைச் சம்பாதிக்கிறவன், ஏழைகளைக் கசக்கிப் பரிதானம் வாங்குகிறவன். நியாயமான முறையை விட்டு விட்டு எப்படியாகிலும் பொருளோடு பொருளைத் தகாத விதமாய்ச் சேர்க்கும் அப்பியாசமுள்ளவன். என்றாலும் அவனுடைய உள்ளான சிந்தையில் சத்தியத்தைத் தேடும் வாஞ்சையிருந்தது. உலகத்தில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியை அவன் வாஞ்சித்தான். ஆத்துமாக்களைப்பற்றிய நம்பிக்கையும் விசுவாசமும் நமக்குத்தேவை. அவன் குடிகாரன், அவன் பெரும்பாவி அவன் சத்தியத்தை சட்டைபண்ணான் என்று ஒருவனையும் குறித்துத் தீர்ப்புச் சொல்லாமலும் புறம்பாக ஒருவனுடைய ஜீவியத்தின் நிலைமையைப் பார்த்துச் சந்தேகங்கொள்ளாமலும், தேவனுடைய சத்தியம் எல்லாருக்குமுரியது என்றும் இயேசுவின் அன்பு யாரையும் இழுக்கக்கூடும் என்று நம்பி விசுவாசத்தோடு வேலை செய்வோமாக.

3. இயேசுநாதர் சகேயு விஷயத்தில் நடந்துகொண்ட விதம் நமக்கு நல்ல மாதிரியே. அவன் குள்ளன். திரள்கூட்டத்துக்குள்போகவும் அவரைப் பார்க்கவும் பிரயாசப்பட்டும் கூடவில்லை. கூட்டத்தைவிட்டு முன்னுக்கு ஓடுகிறான். பெரிய மனுஷனாகிய அவன் அத்திமரத்தில் ஏறி அதன் இலைகளுக்குள் மறைந்து இருந்துகொண்டு தம் வழியேபோகிற இயேசுவைக் காணக் காத்திருந்தான். இயேசுநாதர் அந்த மரத்தின் கீழே போய் நின்றுகொண்டு ஏறிட்டுப்பார்த்து அவனைப் பேர்செல்லிக் கூப்பிடுகிறார். தாம் அவனைப் பேர்சொல்லி அழைத்ததினால் தமது அன்பையும் தைரியத்தையும் காட்டினதோடு, யூதருடைய போதகராகிய தாம் ஆயக்காரனாகிய அவனுடைய வீட்டுக்குக்கூடப் போவதாக வாக்களிக்கிறார். இந்த வாக்கு அவனுடைய வெட்கத்தை நீக்கி மிகுந்த உற்சாகத்தைக்கொடுத்தது. தமது பிரயாணத்தின் அவசரம், கூட்டத்தின் அபிப்பிராயம், தமது பேருக்கு வரும் நிந்தை இவைகளை அவர் எண்ணவில்லை. தம்மை ஆசையோடு தேடும் ஆத்துமாவைத் திருப்திசெய்வதே அவருடைய வாஞ்சை. அந்த



ஒரே ஆத்துமா மனந்திரும்புவதே அவருடைய நோக்கம். ஆத்துமாவை ஆதாயம்பண்ணுகிறவனே ஞானவான். ஒரு ஆத்துமாவை ஆதாயம் பண்ணும் விஷயத்தில் எவ்வளவு ஞானமும், சுயவெறுப்பும் அவசியம் என்பதைப் பார்க்கிறோம். கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையும், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் அவர் கையாடின முறையும் நமக்குச் சொந்தமாவதாக.

## சுவிசேஷ மருவு

கிறிஸ்துவைப்பற்றிய அறிவு இந்தியாவுக்கு முதல்முதல் கிடைத்தது சூரியானியச் சபைகளின் மூலமாகவே. சூரியானியச் சபைகள் தூங்காமல் சுவிசேஷத்தை அறிவித்திருப்பார்களானால் இந்தியாவின் நிலைமை எவ்வளவோ மாறுதலடைந்திருக்கலாம். சுவிசேஷம் ஜனங்களுக்கு அறிவிக்கப்படாமல், அதின் சரித்திரம் இந்துக்களுடைய காவியங்களில் மட்டும் சற்று வித்தியாசமாய் வரையப்பட்டிருக்கிறது. தற்கால சாஸ்திரிகள் கிறிஸ்துமார்க்கம் இந்தியாவிலேயே ஆரம்பமானது என்பதை ரூபிக்க முயன்றபோதிலும், வாஸ்தவமாகக் கிறிஸ்துமார்க்க சரித்திரத்திலிருந்தே இந்துக்கள் சிற்சில காரியங்களை எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. கிறிஸ்தவர்களாகிய சூரியானியர்களிடமிருந்து கிறிஸ்துவின் சரித்திரத்தைக் கற்றுக்கொண்ட பிராமணர் அவைகளிலிருந்து சிலவற்றை மஹாபாரதத்தோடு சேர்த்துக்கொண்டதாக எண்ணப்படுகிறது. இடையில் சேர்க்கப்பட்ட இந்தச் சரித்திரங்களின் தன்மையைக் கவனிக்கும்போது அவைகள் பிராமணர்களுடைய தன்மைக்கொத்தவைகளா யிருக்கின்றன. இப்படிச் சேர்க்கப்பட்டது கிறிஸ்துவின் சதாப்தத்துக்குப் பிந்தினகாலமே. மஹாபாரத யுத்தங்கள் கிறிஸ்துவுக்கு 14 நூற்றாண்டுகளுக்குமுன் நடந்தனவாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பிராமணர் தலைமைக்கு வந்தகாலம் கிறிஸ்துவுக்குப் பின்னான காலமே. கிறிஸ்தவ சரித்திரங்களுக்கு ஒப்பான இச் சரித்திரங்கள் புத்தமத காலத்துக்குப்பின்தான் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். கிறிஸ்துமார்க்க சரித்திரங்களுக்கு ஒப்பாயிருக்கின்றவை எவையென்றால்:

கிறிஸ்துவின் பெயரே மருவிக் கிருஷ்ணன் என்றிருக்கலாம். அவரைக்குறித்து முன்னறிவிக்கவந்த முனிவர் வனாந்தரத்தில் வசித்துத் தபசு செய்தாராம். இது யோவான்ஸ்நானகனைக் குறிக்கலாம். உலகமெங்கும் பாவம் பெருகினபடியால் தெய்வமே கிருஷ்ண அவதாரமெடுத்தாராம். அவதாரமெடுத்து மதுரையில் வாசம்செய்த ஓர் குரூர அரசனை அழிக்கத்

நிர்மாணித்தாராம். அந்த அரசன் சிசுவதைசெய்தானும் (ஏரோது) கிருஷ்ணன் யாது என்னும் (யூதா) ராஜகுலத்தில் பிறந்தானும். அவனுடைய தாயின் பெயர் தேவகி என்னும் திவ்வியமாதாவாம். அவனுடைய தகப்பன் பெயர் வாசுதேவன் (வாசு என்பது யுசவ் அல்லது யோசேப்பு தெவ்—தெய்வ) கிருஷ்ணன் என்ற பெயர் அபிஷேகம்பண்ணுதல் என்றர்த்தங்கொள்ளும் கிரீஷ் என்னும் பதத்தை மூலமாயுடையதென்று சிலர் எண்ணுகிறார்கள். (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) கிருஷ்ணன் பிறக்குமுன் மேலேசொன்ன குரூர அரசனுக்கு ஓர் அசரீரவாக்குண்டாகி உன் குடும்பத்தில் ஓர் குமாரன்பிறப்பான். அவன் உன்னைக் கொல்லுவான் என்று சொன்னதின்பேரில் தேவமாதாவிடம் பிறந்த பிள்ளைகளையெல்லாம் கொன்று யாது குலத்திலும் பெரிய சங்காரம்செய்தானும். கிருஷ்ணன் தகப்பன் தன் பிள்ளைக்கு மோசம் வருமென்று பயந்து எகிப்திலுள்ள ஓர் பாகத்துக்கு குழந்தையை கொண்டுபோனானும். கிருஷ்ணன் வனாந்தரத்தில் விளையாடிக்கொண்டிருக்கையில் அசுத்த ஆவிகள் அவனைத் தாக்க அவைகளையெல்லாம் ஜெயித்துவிட்டானும். அவனுக்கு நேரிட்ட சோதனையின் முடிவில் பெரிய சர்ப்பத்தை ஜெயித்து அதன் தலையின்மேல் திரிலோகத்தின் பாரத்தையும்வைத்து மிதித்துப்போட்டானும். இது ஆதி. 3: 15-ல் சொல்லிய சர்ப்பத்தின் தலையை நசுக்குவதாம். கிருஷ்ணன் அத்திமரத்தின் கீழிருந்து வேதனையைச்சகித்து மற்றவர்களுக்குப் பட்சம் காட்டுகிறவன் பாக்கியவான் என்றானும். இன்னொரிடத்தில் அன்புபாராட்டுகிறவர்கள் ஒருக்காலும் மரணமடையமாட்டார்கள் என்றானும். கிருஷ்ணன் ஓர் மலையிலிருந்து வெளிப்படுகையில் சந்திரனையொத்த முகமுடையவனாய் தலையில் கிரீடத்தைத் தரித்துக்கொண்டு வெளிப்பட்டானும். இது மறுரூப மலைக்கொத்ததுபோலிருக்கிறது.

பின்காலத்தில் கிருஷ்ணன் ராஜவஸ்திரம் தரித்து ராஜதானிக்குள் பிரவேசிக்கும்போது ஸ்திரீகளும் இடையர்களும் அவனைச்சூழ்ந்து வந்தார்களாம். பட்டணத்துக்குள் அங்கவீனமுள்ள ஓர் ஸ்திரீ எதிர்ப்பட்டு சந்தனத்தைதலாபிஷேகம் செய்ய அவளைச் சுகப்படுத்தினானும். ஓர் விதவையையும் அவன் மகனையும் உயிரோடெழுப்பினானும். மரித்துப்போன ஒருவனுடைய கையைக் கிருஷ்ணன் பிடித்துக்கொண்டு 'எழும்பு' என்று சொல்ல, சர்வ வல்லவரின் செயலால் அந்த மனுஷன் உயிரோடெழுந்தானும். யுதிஸ்திரா என்னுமிடத்தில் நடந்த பெரிய யாகத்தில் கிருஷ்ணன் அங்கு வந்திருந்தவர்களுடைய கால்களைக் கழுவினானும். அவர்களில் தீமையின் அவதாரமான துரியோதனன் என்னும் ஒருவன்மாத்திரம் சம்மதிக்கவில்லையாம். யூதாஸ்காரியோத்தைப்போல அவன் பணப்பையை வைத்திருந்து பொக்கிஷக்காரனுமிருந்தானும், மதுரையென்னும் பரிசுத்த நகரத்துக்கு விரோத



மாய் பாண்டவருடைய சேனையும், மிலேச்சருடைய பெருஞ் சேனைகளும் தாக்கினவாம் (எருசலேமை ரோமர் முற்றிகைபோடல்) கிருஷ்ணன் தன் சிஷர்களைத் துவாரகாபுரிக்குக் கொண்டுபோனானும். (கிறிஸ்தவர்கள் முற்றிக்கை சமயத்தில் எருசலேமைவிட்டுப் பெல்லா என்னுமிடத்தில்போய் ஒதுங்கல்) கிருஷ்ணன் வெண்மலை என்னும் ஓர் மலையிலுள்ள கெபிக்குத் தப்பியோட அவ்விடத்தில் ஓர் மனிதன் மரித்துப்போனானும். அவன் தன்னைத் துரத்தினவனை விழுங்கிவிட்டானும். (உயிர்த்தெழுதல்) அப்புறம் கிருஷ்ணன் பாதாளத்துக்குப் மரித்துப்போன அநேகரை உயிரோடெழும்பச்செய்தானும்.

இதை யெல்லாம் பார்க்கும்போது, சூரியானியச்சபை தனக்குத் தேவன் ஒப்புவித்திருந்த சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிக்காமல் போனதினால் விளைந்த தீமை எவ்வளவு பெரிதென்று காட்டுகிறது. இந்தியாவில் கிருஷ்ணனைத் தெய்வமாக வழிபடுகிற அனைவரும் சத்திய சுவிசேஷத்தை அறியவும் அதைப் பின்பற்றவும் தங்கள் மனதைத் திருப்பாமல் தங்கள் தங்கள் மனதுக்கேற்பட்ட சத்தியத்தைத் திருப்பி தங்கள் செய்கைக்கேற்ற தேவர்களை உண்டாக்கி வழிபடுகிறார்கள் என்பதைக் காட்டுகிறதல்லவா. கிறிஸ்து சபையே பரமபொக்கிஷம் உன்னிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அதை யாவரும் அறியவும் அதில் பங்குபெறவும் பார்ப்பது உன் கடமை, உத்தரவாதம் என்றறி.

## ஆரும் கற்பனையைப்பற்றி கிறிஸ்துவின் போதனை

**பரி. மத். 5: 20-26**

கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்தினாலும் விசுவாசத்தினாலும் சகல பரம நன்மைகளையும் பெற்றபிற்பாடு, அவர்கள் எப்படி கபடற்ற நீதிமான்களாக நடக்கவேண்டுமென்று நமது ரக்ஷகர் இந்த வசனங்களில் பேசுகிறார். கொலை செய்யாதிருப்பாயாக என்னும் கற்பனையை விஸ்தரித்துச் சொல்லுகிறார். 'வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்' மத். 5: 20 என்றும் எச்சரிக்கிறார். அதிகப்பட்டிருக்கிற இந்த நீதியாவது என்ன? கைமாத்திரம் கொலைசெய்யாதிருப்பது போதாது. மனதிலும் வார்த்தையிலும் கோபமும் பகையுங் காணப்படவுங்கூடாது. நீ எதினால் உன் அயலானுக்குச் சேதம் வருவிக்கிறாயோ, அதினால் அவனைக் கொலைசெய்கிறாய். நீ ஒருவனைப் பகைத்து, உன் மனதினால் அவனுக்குத் தீமைசெய்ய விரும்பினால் உன் மனதினால் அவனைக் கொலைசெய்கிறாய். 1 யோவா 3: 15

'தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்' அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராதென்று அறிவீர்கள். ஏனெனில் பகை எங்கேயிருக்கிறதோ, அங்கே சமயங் கிடைக்கும்போது கொலைபாதகம் உண்டாக இடமுண்டு ஆகையால் இக்கற்பனையைக் கைக்கொள்ள மனதுள்ளவன் இருதயத்திலுமிருந்து எந்தக் கோபத்தையும் பகையையும் நீக்கிவிடவேண்டும். அவன் தன் சத்துருக்களையும் நேசித்து எப்போதும் சாந்தத்தைக் காண்பிக்கவேண்டும். மேலும் இக்கற்பனை பலவிதமாய் மீறப்படுகிறது. என்று ஆண்டவர் தெளிவாய்க் காட்டுகிறார். ஒருவரையொருவர் கோபித்துக்கொண்டு பொறுமையாய்ப் பார்த்தால் அது மனதில் மீறப்படும். கோபக்குறியைக் காட்டினால் அது சைகையினால் மீறப்படும். ஒருவன் மற்றொருவனைப் பாராமலும், அவனோடு பேசாமலும் அவனைக் கடந்துபோனால் அதுவும் பகையின் அடையாளம்.

நீ உன் ஜீவிய காலத்தில் எப்போதும் இந்தக் கற்பனையைக் கிறிஸ்துவின் கட்டளைக்குத் தக்கதாய் கைக்கொண்டாயோ என்று சிந்தித்துப்பார். நீ மாயக்காரனாயிருந்தாலொழிய நான் அதைச் சரியாய்க் கைக்கொள்ளவில்லையென்றும், அறிக்கையிடுவாய். கர்த்தர் தமது வசனத்தை மீறுகிறவர்களைப் பயங்கரமாய்த் தண்டிப்பார். பரிசேயனைப்போல உன்னை தேவபக்தனாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. உன் இருதயத்திலே ஒருவனைக் கோபித்துக்கொண்டு அதை வாயினால் வெளிப்படுத்தினவுடனே, தேவனண்டைக்குத் திரும்பி கர்த்தாவே நான் உமது கற்பனைக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன். நான் முகத்தினாலும் வார்த்தைகளாலும் கோபத்தைக் காட்டினேன் இப்பாவத்தை எனக்கு மன்னித்து இனி அப்படிச்செய்யாதபடி எனக்குக் கிருபைசெய்து என்னைச் சீர்ப்படுத்தியருளும் என்று அவரை நோக்கி வேண்டிக்கொள்.

அதோடு நீ இனிமேல் கோபத்துக்கு இடங்கொடாமல் அதை அடக்கப்பார். நீ உன்னை அடக்கி உன் அயலானோடு பக்ஷமாய்ப் பேசி எல்லாவற்றிலும் அவனிடம் அன்பைக்காண்பித்தால் கோபமும் பகையும் வர வர ஒரு புகையைப்போல் இருதயத்திலிருந்து கழிந்துபோம்.

பரிசேயர் இவ்விதம் செய்யவில்லை. அவர்கள் இருதயத்தின் கோபத்தையுதம் நிந்திக்கிற வார்த்தைகளையும் பாவமாக எண்ணாமல் அச்சமின்றி அதை நடப்பித்துவந்தார்கள். இன்னின்னான் இன்னின்ன பொல்லாப்பு செய்தபடியால் நான் கோபம் அடையாமலிருக்கலாமா? எனக்கு இன்னும் அதிக அநியாயம் செய்வானே என்பார்கள். இவ்விதமாய் நினைத்தால் பிசாசு உன்னை இலேசாய் ஜெயித்து உன் பகையை நாளுக்குநாள் அதிகரிக்கச்செய்வான். நாம் எவ்விதச் சாக்குப்போக்கும் சொல்லாமல் நமது



பாவங்களை சரியாய் உணர்ந்து தேவனிடத்தில் மன்னிப்பையும் குணப்படுதலையுந் தேடும்படிக்கு இரக்ஷகர் நம்மை எச்சரிக்கிறார்.

நாம் கிறிஸ்தவர்களாயிருக்க விரும்பினால் நமது சுயதோற்றத்தின்படி நடவாமல் தேவனுடைய கற்பனையின்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த வாக்கியங்களில் இரக்ஷகர் இரண்டு காரியங்களைக்குறித்துப் பேசுகிறார். கோபமும் விரோதமும் எங்கேயோ அங்கே இரண்டு கட்சிகளுண்டு. அதாவது அநியாயம் செய்கிறது ஒன்றும் அநியாயத்தை அநுபவிக்கிறது வேறொன்றுமே.

சண்டைக்கு காரணமாயிருந்து மற்றவனுக்கு அநியாயம் செய்தவனுக்கு கர்த்தர் முதலாவதாக ஒரு புத்திமதியைக் கூறுகிறார். நீ பலிப்பீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்தவந்து, உன்பேரில் உன்சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில்............... உன் காணிக்கையைச் செலுத்து. மத். 5: 23,24. பரிசேயர் பகையும் பொறுமையுமுள்ள இருதயத்தோடு ஆராதனைக்கு வந்தும், தங்களைத் தேவபக்தியுள்ளவர்களாக எண்ணிக்கொண்டார்கள். அப்படிச் செய்கிறவர்கள் தங்களையே மோசம் போக்குகிறவர்களாயிருக்கிறார்கள். தேவன் முதலாவது உன் இருதயத்தைச் சோதித்துப் பார்க்கிறார். அவர் அதிலே பகையையும் பொறுமையையும் கண்டால் உன் ஆராதனை அவருக்குப் பிரியமென்று நினையாதே. ஏனெனில் உன்னைப்போல் உன்பிறனையும் நேசிப்பாயாக என்று அவர் கற்பித்ததினால் எல்லாவற்றிலும் விசேஷமாய் உன்னிடத்தில் இந்தக் கீழ்ப்படிதலைத் தேடுகிறார். இப்படியிருக்க சிலருக்கு மற்றவர்களோடு சண்டையிருக்கும்வரையில் அவர்கள் திரு இராப்போசனத்தில் சேரவும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவும் மாட்டார்கள். ஏனென்றால் எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்ற மன்றாட்டு அவர்களுக்கு இடறலாயிருக்கும்.

தாங்கள் மன்னிக்கச் சித்தமில்லாமையால் தேவன் தங்களுக்கு மன்னிக்கவேண்டாம் என்ற சாபத்தை தங்களுக்கு வருவிக்கப் பயப்படுகிறார்கள். அது மெய்தான். நீ உன் எதிரிக்கு மன்னிக்க மனதில்லாதிருந்தால் தேவன் உனக்கு மன்னிக்கமாட்டார். ஆகையால் நாம் கோபத்தையும் பகையையும் விட்டுவிடாமல், நம் இருதயத்தில் பேணிவைத்தால் நாம் கோபாக்கினைக்கு ஆளாவோம். தேவன் நம்மை எந்த நிலமையில் கண்டுபிடிக்கிறாரோ அந்த நிலைமையில் நியாயந்தீர்ப்பார். எந்தக் கோபத்தையும் விட்டுவிட்டு உன் சகோதரனோடு ஒப்புரவாகு. மற்றப்படி அது கர்த்தருக்குப் பிரியமுள்ளதல்ல.

அநியாயத்தை அநுபவித்த மற்றொருவனோதான் கோபப்பட தனக்குப் போர்ந்த காரணமுண்டென்று நினைத்தாலும், கர்த்தர் அவனையும் எச்சரித்து சந்தோஷத்தோடு மன்னிக்க ஆயத்தமாயிருக்கவேண்டுமென்கிறார். ஏனெனில் ஒருவன் மன்னிக்கத் தாமதித்தால், அதினால் பெரிய மோசமுண்டு. நீ உன் எதிரியின் வேண்டுகோளுக் கிடங்கொடாமல் அவனோடு ஒப்புரவாகப் பிரியமற்றுமிருந்தால் உன் எதிரி பரம நியாயாதிபதிக்கு இந்தக் காரியத்தை யொப்புக்கொடுத்து, கர்த்தாவே நான என் கடமையைச் செய்தேன்: உம்மிடத்தில் எனக்குக் கிருபை கிடைத்தும், மனிதரிடத்தில் இரக்கம் கிடைக்கவில்லை; நான் என்னை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் என்பான். அப்படிப்பட்ட நேரத்தில் உனக்கு மரணம்வந்தால்உன் நிலைமை எவ்விதமாயிருக்கும்? மன்னிக்கவும் மறக்கவும் மாட்டேன் என்கிற உன்னை ஒப்புக்கொடுத்து சிறைச்சாலையிலே போடுவிப்பார். நீ கடைசிக் காசைக் கொடுத்துத் தீருமட்டாக அவ்விடமிருந்து புறப்படமாட்டாய். அங்கே யாதொரு கிருபையும் கிடையாது. எந்த அளவினால் அளக்கிறாயோ அந்த அளவினால் உனக்கு அளக்கப்படும். அப்படியே கர்த்தர் இரக்கம் காட்டவும் கோபத்தை அகற்றவும் நன்மைபொருந்தவும் வேண்டுமென்று இருதட்சிக்காரருக்கும் கட்டளையிடுகிறார். இல்லாவிட்டால் ஆண்டவருடைய கற்பனை நம்மைக் கொலைகாரரென்று தீர்த்து நம்மைக் குற்றஞ்சாட்டுகிறது. இப்போதனை கிறிஸ்து சபையில் கையாடப்படாமல் போனால் நாம் தேவனுக்குப் பிரியமானதைச் செய்யாமல் நமது ஆத்துமாவை நஷ்டப்படுத்துகிறோம்.

ஆனால் லௌகீக ஊழியங்களிலும் நியாயஸ்தலங்களிலும் இக்கற்பனையைப்பற்றிய போதனை செல்லாது. ஏனெனில் அதிகாரிகளுக்கு தேவன் ஒரு விசேஷித்த கட்டளை கொடுத்திருக்கிறார். அவர்கள் துஷ்டரைத் தண்டிக்கவும், கோபப்படவும் தேவனால் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

மேலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடைய தப்பிதங்களை அற்பமாயெண்ணாமலும் அவைகளுக்காகப் பிள்ளைகளைக் கண்டிக்கவும், தண்டிக்கவும், தேவனால் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். பெற்றோரும் அதிகாரிகளும் அப்படிச் செய்யாதிருந்தால் அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் அவருடைய கட்டளையை மீறுகிறார்கள்.

கிறிஸ்துவின் இராஜ்யத்தில் கோபமும் பகையுமிராமல், பட்சமும் சிநேகமும் இருக்கவேண்டும். அங்கே வாயாவது கையாவது எவனையும் வருத்தப்படுத்தக்கூடாது.

நம்மில் ஒவ்வொருவரும் தன் தன் நிலைமையிலும் வேலையிலும் கிறிஸ்தவர்களுக்கு ஏற்றபிரகாரமாக நடக்கும்படிக்கு கர்த்தர் தமது பரிசுத்தாவியினால் நமக்கு உதவிசெய்வாராக.



[ இது சபைப் பிதாவாகிய மார்ட்டின் லூதர் என்பவருடைய பிரசங்கங்களில் ஒன்று ].

## அலெக்சாந்தர் பால்

சீனதேசத்திலுள்ள யாங்ற்ஸி எனும் நதிக்கரையிலுள்ள விஸ்தீரணமான தேசம் 1913-ம் வருஷத்தில் ஆற்றில்வந்த பெரும் வெள்ளத்தால் ஜலத்தில் மூழ்கிப்போயிற்று. லட்சக்கணக்கான டாலர் பெறுமான சேதமாயிற்று. வெள்ளம் வராதபடி தடுக்கப் போதுமான அணைகள் போட்டிருந்தபோதிலும், அணைகளின் கட்டுமானம் பெலவீனமாயிருந்தபடியால் வெள்ளத்துக்கு நிற்காமல் இடிந்துவிட வெள்ளப்பெருக்கெடுத்துவிட்டது. வருஷாவருஷம் இப்படியே வெள்ளத்தினால் பல நூறுண்டுகளாக இவ்வித நஷ்டம் நேரிட்டுக்கொண்டேவந்தது. இதினால் தேசத்தில் பஞ்சம் அதிகரித்தது. பஞ்சநிவிர்த்திக் கமிற்றிமாரும் ராஜாங்கத்தாரும் சேர்ந்து கிறிஸ்தவனான அலெக்சாந்தர் பால் என்பவரை நியமித்து, அவரே வெள்ளத்தைத் தடுக்கத்தக்க பலத்த அணைகள் போடும்படி ஏற்பாடுசெய்தார்கள். இவருக்கு இஞ்ஜினீயர் வேலை தெரியாது. அணைக்கட்டுமானம் என்பதே அவர் அறிந்தவரல்ல. என்றாலும் அவருடைய உண்மையும் தயாளமுமான சுபாவமே இந்த வேலைக்கு நியமிக்கப்படக் காரணமாயிருந்தது. அவர் கையின்கீழ் வேலைசெய்ய 7000 (எழாயிரம்) கூலியாட்களைக் கொடுத்தார்கள். அவர் இரவும் பகலும் ஓய்வில்லாமல் வேலை செய்துகொண்டு வந்தார். இயற்கையில் அவருக்கிருந்த புத்திக்கூர்மையினாலே அவ்வேலையைக் கற்றுத்தேறி, சீனதேசத்திலுள்ள அணைக்கட்டு வேலைகளிலெல்லாம் பெலமானதும் சிறந்ததுமான வேலையைச் செய்துமுடித்தார். வேலை முடிந்தபின் பரிசோதனை செய்தவர்கள், முன் கட்டப்பட்ட எந்த அணைக்கும் செய்யாதபிரகாரம் இவர் பலமான அஸ்திபாரம்போட்டுக் கட்டியிருப்பதைப் பார்த்து மெச்சிக்கொண்டார்கள். அப்புறம் அப்பிரதேசத்தில் வெள்ளம் பயிர்களைச் சேதப்படுத்தினதில்லை.

இந்தத் திறமையான வேலைக்கு நன்றியறிதலாக ஒரு சதம்கூட வாங்க மாட்டேனென்று மறுத்துவிட்டார் ஆனால் கமிற்றிமாரோ அவருடைய பேரை ஓர் கல்லில் வெட்டி அந்த அணைக்கட்டோடே சேர்த்துக் கட்டிவிட்டார்கள். உத்தியோகஸ்தர் பலர்கூடி அவர் செய்துமுடித்த வேலைக்காகத் தங்க ஞாபகசின்னங்கள் அளித்தனர். ஆனால் அவருடைய வேலைக்கு அவர் விரும்பின சம்பளம் கிடைத்து. அதன்பின் ஓர் காலத்திலும் நெற்பயிர் அழியவில்லை. தேசம் முழுவதும் அவர் தேவனுடைய சுவிசேஷத்தைத் தாராளமாய் அறிவிக்கும்படி திறக்கப்பட்டது.

## பரிசுத்த ஸ்தலத்திற் பரிசேயன்

இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள். ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகஞ் செலுத்திவருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான் (பரி. லூக். 18: 10–12). இந்தப் பரிசேயனிடத்தில் அநேக விஷயங்கள் கவனிக்கப்படத்தக்கவைகளாயிருந்தபோதிலும் சிலதை மாத்திரம் இங்கே சொல்லுவோம்.

(1) **பரிசேயனுடைய ஒழுக்கம்.** பரிசேயன் நின்று ஜெபம்பண்ணினான் அவனைக்குறித்துக் கிறிஸ்துவானவர் புகழ்ந்துகொள்ளவில்லை. 'தானியேலோ வென்றால்,.........தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக **முழங்காற்படியிட்டு**, ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரஞ் செலுத்தினான்' (தானி. 6: 10). 'பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, **தரையிலே பணிந்து தன் முகம் தன் முழங்கால்களிற்படக் குனிந்து**' தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணினார். (1 இராஜா. 18: 42, யாக். 5: 17, 18). இப்படியாக, வேதாகமம் முழுவதிலும் பக்திமான்கள் அநேகர் தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தினார்கள். கடைசியாக, நமதருமை இரட்சகரைச் சற்றுக் கவனிப்போமானால், தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே, கெத்செமனே தோட்டத்தில் கடுமுரடான இடத்தில் **முழங்காற்படியிட்டு** ஜெபம்பண்ணினார் (பரி. லூக். 22: 41). பின்னும் **முகங்குப்புற விழுந்து** ஜெபம்பண்ணினார். (பரி. மத். 26: 39) ஒருவர் ஒரு பிரசங்கியாரைப் பார்த்து: 'ஐயா, உங்கள் பிரசங்கத்தால் அநேக ஆத்துமாக்கள் குணப்படுகிறார்களே, அதற்குக் காரணமென்ன?' என்று கேட்க, அவர் ஒன்றும் பேசாமல், தன் படுக்கையறைக்கு அவரை அழைத்துக்கொண்டு போய், தான் அடிக்கடி முழங்காற்படியிட்டு ஜெபஞ்செய்ததினால் தரையிலுண்டான ஒரு பள்ளத்தைக் காண்பித்து: 'இதுவே அப்பலனுக்குக் காரணம்' என்றாராம். பாருங்கள்! பக்திமான்களும், பரிசுத்தவான்களும், வயோதிபரும் தங்களை எவ்வளவாய்த் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தினார்கள். ஆனால், இந்தப் பரிசேயனோ, தேவனுக்கு முன்பாகத் தன்னை எவ்வளவுந் தாழ்த்தவில்லை. ஒருவேளை, தான் முழங்காற்படியிடுவதினால் தன் அந்தஸ்துக்குக் குறைவு வந்துவிடும் என்று நினைத்தானோ? அல்லது தன் ஆடையாபரணம் பழுதாகிவிடுமென்று நினைத்தானோ? அல்லது மற்றவர்கள் தன்னைக்குறித்துப் பழிப்பார்களென்று நினைத்தானோ? எப்படியென்றாலும், தன்னைத் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தவில்லையென்பதை அறிகிறோமல்லவா? சகோதரரே, நம் நிலைமை என்ன? நாம் ஜெபம்பண்ணும்பொழுது, நம்மைத் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்துகிறோமா? அல்லது நாமும் அந்தப் பரிசேயனைப்போலிருக்கிறோமா? நம்மைக்குறித்துத் தேவனுடைய அபிப்பிராயமென்ன? தேவாலயத்தில் உட்காருவதற்கும், ஜெபம்பண்ணுவதற்கு (மேற்குத்தேச ஆசாரங்களை அனுசரித்து) வசதியான இடங்கள் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கின்றன. ஆனாலும், நம்மில் அநேகர் இந்தப் பரிசேயனைப்பார்க்கிலும் கேடாய் நடந்துகொள்ளுகிறதில்லையா? **நின்றுகொண்டு** ஜெபித்த பரிசேயனையே கிறிஸ்துவானவர் புகழாதிருக்க, **உட்கார்ந்துகொண்டு** ஜெபிப்பவரை அவர் புகழுவாரோ? கிறிஸ்துவானவரோ **முழங்காற்படியிட்டாரே**. 'நீங்கள் தமமுடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனாரே' (1 பேது. 2: 21). சகோதரரே நம்மைத் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்துகிறோமா?

(2) **பரிசேயனுடைய செபம்.** தேவனுக்கு முன்பாகத் தன்னைப் புகழுகிறான். தேவனோ, அவன் மண் என்று நினைவுகூருகிறார். ஆயக்காரனைப் பழிக்கிறான். தேவனோ, அவன் தமது சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷனென்று நினைவுகூருகிறார். இன்னும் "வாரத்தில் இரண்டு முறை உபவாசிக்கிறேன்' என்றும், 'என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகங் கொடுத்துவருகிறேன்" என்றும் வீணான வார்த்தைகளைச் சொல்லிச் ஜெபிக்கிறான். இப்படிப்பட்ட ஜெபத்தைத் தேவன் விரும்புகிறவரல்ல. மேலும், தன்னை ஞானியாகவும், நீதிமானாகவும் பாவித்து, தன்னைக்குறித்துத் தேவனிடத்தில் வர்ணிக்கிறானேயொழிய, தன்னை ஒரு பாவியென்று சொல்லவும் ஐயப்படுகிறான். சகோதரரே! நம் ஜெபம் எப்படிப்பட்டது? நம்மிலும் இப்படிப்பட்ட பரிசேயரில்லையோ? நாம் ஜெபஞ்செய்கையில், நம்மை நாடிப் புகழுகிறதில்லையா? அவசியமற்ற வார்த்தைகளையும், வீணான வார்த்தைகளையுஞ் சொல்லிச் ஜெபிக்கிறதில்லையா? மற்றவர்களைப் பழிக்கிறதில்லையா? நம்மை நாமே பரிசுத்தவான்களென்றும், நீதிமான்களென்றும் எண்ணித் தேவனுக்கு முன்பாக இறுமாப்பாயிருக்கிறதில்லையா? இப்படிப்பட்ட ஜெபத்தைத் தேவன் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. 'பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்துநிற்கிறார்' என்பதை நாம் மறந்துபோகாதிருப்போமாக.

(3) **பலனற்ற செபம்.** இந்தப் பரிசேயன் நீதிமானாக்கப்படாதவனாக வீட்டுக்குத் திரும்பிப்போனானென்று பார்க்கிறோம். நாமும் தேவாலயத்திற்குச் சென்று தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதத்தைப்பெற்றுத் திரும்பும்படி எண்ணுகிறோம். எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணினாலும், நமது இருதயம் நேர்மையாயிராதபடியால், நம்மில் எத்தனையோபேர் தேவாசீர்வாதத்தைப் பெறாமல் வீட்டுக்குத் திரும்புகிறவர்களாயிருக்கிறோம்

'தேவ ஆசீர்வாதத்தோடே
அடியாளை அனுப்பும்,
வார்த்தை என்னும் அப்பத்தாலே
போஷித்து வளர்ப்பியும்'

என்று நாம் தேவனுடைய திருப்பாதத்தில் விழுந்து கெஞ்சவோமாக.

S. R. D.


## NEW READER

### English Edition of
### SADHU SUNDAR SINGH'S SERMONS

**with his portrait**

Price:

Ceylon: Cents 25 each, India: 4 Annas each

Apply to:

**Rev. R. V. Asirvadam,**
*Bishopstowe, Palamcottah,*
*Tinnevelly Dt., South India.*

**S. R. Doss,**
*64 New Chetty St.,*
*Colombo.*

N. B. Tamil copy can be had at half price at above addresses.


Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.



OFFICE OF THE ... 13 OCT 1920

August 1920. Registered No. M 136

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

162002

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI ஆகஸ்டு 1920

## அவர் வீட்டில் இருக்கிறாரென்று ஜனங்கள் கேள்விப்பட்டார்கள். மாற். 11: 1.

கப்பர்நகூமில் உள்ள ஒரு வீடு. ஒருவேளை அத்தனை அலங்காரமான வீடல்ல, பெரிய மாளிகையல்ல. சாதாரணமான வீடு. ஆனாலும் அங்கே கூட்டம் கூடுகிறார்கள். அங்கே நெருங்கிநிற்கிறார்கள். அங்கே பெரிய அதிசயங்கள் காணப்படுகிறது. காரணம் என்ன? ஏசுநாதர் அருள்மூர்த்தி அங்கே இருக்கிறார்.

திருஷ்டாந்தம். உவெஸ்டு மினிஸ்டர் (Westminister) அரண்மனையில் விடியற்காலமுதல் பொழுதுபோகும்வரை திரள்திரளாய் ஜனங்கள் போவது ஏன்? இறந்துபோன மந்திரி சரீரமிருந்ததால். ஆ! செத்துப் போன பெருமான் அல்ல ஜீவனுள்ள ரக்ஷகர் அங்கிருந்தார்.

அப்படிப்போல கிறிஸ்துநாதர் நம் ஆலயங்களிலும் சபைகளிலும் வீடுகளிலும் இருப்பாரானால் அதிசயங்கள் நடக்கும். 'அவர் வீட்டிலிருக்கிறாரென்று ஜனங்கள் கேள்விப்படுவார்கள்'

### இயேசுநாதர் ஓர் சபையில் எழுந்தருளிவந்தால் நடக்கிற காரியங்கள் என்ன?

I. அங்கே ஆசையோடே கூட்டம்கூடுகிறது (வா. 2.) 'உடனே வாசலுக்கு முன்னும் நிற்க இடம்போதாதபடிக்கு அநேகர் கூடிவந்தார்கள்' பெரிய கூட்டம் நெருக்கமான கூட்டம். இடங்காணாது. என்னத்துக்கு வந்தவர்கள். வேடிக்கை பார்க்கவா? சந்தோஷம் கொண்டாடவா? அங்கே பொருளைப்பெற்றுக்கொள்ளவா? அல்ல. வேறு விசேஷமில்லை. அங்கே ரக்ஷாபெருமான் இருக்கிறார். போதிக்கிறார், ஞானோபதேசம் செய்கிறார்.

'அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார்'. கிறிஸ்துவின் சுவிசேஷம் வல்லமையாய் பிரசங்கிக்கப்பட்டது. ஜனங்களின் மனதைக் கவர்ந்துகொண்டது. 'நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கையில் எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்' யோவான். 12: 32.

'என்னை இழுத்துக்கொள்ளும் உமக்குப் பின்னே ஓடிவருவோம்'.

நம்முடைய சபைகளில் இப்படிப்பட்ட ஆசையுண்டா? இல்லாவிட்டால் காரணம் என்ன?

II. அங்கே பாவங்கள் மன்னிக்கப்பட்டுப்போகிறது. (வா. 5) 'மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. அந்த ஜனக்கூட்டத்தில் ஒரு மனிதன். அவனுடைய சங்கதிதான் இங்கே சொல்லப்படுகிறது. பெரிய சபை என்றாலும் அங்குள்ள ஒவ்வொரு மனிதனுடைய நிலைமையையும் ஆண்டவர் அறிவார். அவன் ரோகஸ்தன், கிருபையைத் தேடக் கொண்டுவரப்பட்டான். ஆத்திரம் அதிகம் அவன் சரீரப்பாடு மற்றவர்களுக்குத் தோன்றினபோதிலும், அவன் ஆத்தும வியாதியும், பாவத்திரளும அவர்களுக்குத் தோன்றவில்லை. அவன் செய்த கொடிய பாவங்கள் கர்த்தருக்கே தெரியும பாவத்தைத் தூண்டிக்காட்டினார். பாவத்தை மன்னித்து நீக்கிப்போட்டார்.

பாவம் நீங்காத கிறிஸ்தவன் என்ன கிறிஸ்தவன்? பாவத்தை விட்டுவிடாத மிஷன் ஆசாமி என்ன வழியக்காரன், சகோதரனே, உன் பாவம் நீங்கியிருக்கிறதா? தேவனோடே சமாதானமாயிருக்கிறாயா? நீங்கள் குணப்பட்டவர்களானால் உங்கள் சபைகளில் ஜனங்கள் குணப்படுகிறார்களா?

III. அங்கே கிறிஸ்துவின் வல்லமை விளங்குகிறது. (வா 6–12) அந்த மனிதனுடைய ஸ்திதியைப் பாருங்கள். திமிர்வாதம் நடக்கமுடியாது ஒன்றுக்கும் உதவாதவன். 'பாவம் மன்னிக்கப்பட்டது. என்று சொன்னாலும் அப்படியே பெலவீனத்தோடு கிடந்தால், என்ன மகிமை? அந்தப் பெலவீனம் இருக்குமட்டும் யார் நம்புவார்கள்? ஆகையால் அது வெறும் பேச்சு. ஆண்டவருக்கு வல்லமை இல்லையென்று அவிசுவாசிகள் சொல்லுகிறார்கள். (வா. 7). ஆ! ரக்ஷிப்பின் விஷயம் வெறும் பேச்சாய் நடிக்கிறதில்லை. மன்னிப்பைப்பெற்ற மனிதனிடத்தில் ரக்ஷகருடைய வல்லமை விளங்கவேண்டும். பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரமுண்டென்றும் பெலவீனத்தை முற்றிலும் நீக்க அவருக்கு வல்லமை உண்டென்றும் எல்லாரும் அறிந்துகொள்ளவேண்டும். ஆகையால் சர்வாங்க சுத்தத்தைக் கட்டளையிடுகிறார்.

பெலவீனம் முற்றும் நீங்க. 'எழுந்திருந்து படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்குமுன்பாகப் போனான்' திமிர்வாதம் எங்கே? பெலவீனம் எங்கே? ஆ? பாவத்தை மன்னிப்பதோடேகூட பெலவீனத்தையும் நீக்கிப்போடுகிறார்.



அவன் பலவீனத்தைக் காட்டிய படுக்கையை இப்போது எடுத்துக்கொண்டு போகிறான். ஆவல், விசுவாசம், கீழ்ப்படிதலையும் பார்க்கலாம்.'

ஆ! நம்மில் எத்தனைபேர் பெலவீனத்தோடு கிடக்கிறோம். நம்மைப் பார்க்கும்போது ரக்ஷகருடைய வல்லமை எங்கே என்று கேட்கத்தக்கது. நாம் குணப்பட்டவர்கள் என்பது நடக்கையினாலே அல்லவா விளங்கவேண்டும்.

கிறிஸ்து மார்க்கத்துக்கும் மற்ற மார்க்கங்களுக்கும் உள்ள வித்தியாசம் உபதேசத்தில் மாத்திரமல்ல, விசேஷமாய் வல்லமையிலும் காணப்படுகிறது. இந்த மனுஷன் கூடுமோ? என்று சந்தேகப்படாமல் நடந்துபோகிறான்.

IV. அங்கே தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. (வா. 12) 'அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லை என்று சொல்லித் தேவனை மகிமைப்படுத்தினார்கள்'. ஆம்! கிறிஸ்துநாதர் நம்முடைய நடுவில் இருப்பாரானால் ஜனங்கள் ஆச்சரியப்படுவார்கள். அந்த ஜனக்கூட்டத்தில் பெரிய அசைவு, மகா பிரமிப்பு, பெரிய அற்புதத்தைக் கண்டார்கள். கிறிஸ்துவின் வல்லமையை அறிந்துகொண்டார்கள். திமிர்வாதக்காரனுடைய காரியம் அந்த ஊரெங்கும் தெரிந்திருக்கலாம் அவன் முன் செய்த பாவங்கள் பிரசித்தமாயிருக்கலாம். பாவம் நீங்கி சொஸ்தமானான் என்று கண்டுகளித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். 'ஆம் கிறிஸ்து எங்கேயோ அங்கே தேவ நாமம் மகிமைப்படும் அந்த நாமத்தை மகிமைப்படுத்தப் புண்யநாதர் இவ்வுலகத்தில் வந்தார். 'பிதாவே உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்'. யோ. 12: 28.

தேவனுக்கு மகிமை, மகிமை, மகிமை. பாவி குணப்பட்டால் தேவனுக்கு மகிமை கிறிஸ்தவன் தன்னை ஒப்புவித்துப் 'பிரதிஷ்டை செய்தால் தேவனுக்கு மகிமை.

## நீதிமானின் சிங்காரம்

**நீதிமான் பனையைப்போல் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்.** சங். 92: 12.

ஆண்டவர் நீதிமான்களைப் பனைக்கு ஒப்பிட்டுப் பேசுகிறாரே. அதேனென்று சற்று கவனியுங்கள். பனைமரம் ஒருவர் இரண்டு பேருக்கல்ல, அல்லது ஒரு ஜாதிக்குமட்டுமல்ல, இவ்வுலகத்திலுள்ள நாலுவகை ஜாதிக்கும் உதவுகிறது. பெரும்பாலும் சில ஜனங்கள் இத்தொழிலைச் செய்தபோதிலும் இது எண்ணிக்கைக்கடங்காத நன்மைகளை அநேகருக்குக் கொடுத்துக்கொண்டேயிருக்கிறது, பசியுள்ளவர்களுக்குப் பசியாற்றுகிறது, பண்டம்பாடிகள் செய்ய உதவுகிறது, சீனி முதலிய இனியபொருள்கள் செய்ய

உதவுகிறது. அவை செழிப்பான இடத்தில் நின்றாலும் வரண்ட நிலத்தில் நின்றாலும் பலன் ஒன்றுபோலவே கொடுக்கிறது. பனைமரத்துக்கும் மற்ற மரங்களுக்கும் வித்தியாசமுண்டு.

I அதன் நோக்கு அல்லது நிலை: நீதிமானுக்கு ஒப்பிடப்படக்கூடியது. பனையைப் பாருங்கள். எப்போதும் நேரே உயர நோக்கிக்கொண்டே நிற்கிறது. கோணலான பனைகள் அபூர்வம். அப்படியிருந்தாலும் அவைகளின் உச்சி உயரத்தான் பார்க்கிறது. மற்ற விருக்ஷங்கள் வளர வளர கொப்பும் கிளையும்விட்டுக் கீழே பார்க்கிறதுபோலிருக்கிறது. ஆனால் பனையின் கிளையையும் குருத்தையும் பாருங்கள், குருத்து எப்போதும் ஆண்டவனை நோக்கிக் கையைக்கூப்பி ஜெபிக்கிறதுபோலவும் அதன் கிளைகளெல்லாம் கையை விரித்துக்கொண்டு உயர இருந்துவரும் தேவாசீர்வாதங்களை வாங்குவதுபோலுமிருக்கிறது. இப்படி அது ஆசீர்வாதம் பெறுகிறதினால் தான் பூமியிலுள்ளவர்களுக்கு மிகுந்த பலனைக் கொடுக்கிறது. மற்ற மாஞ் செடிகளைப்போல இதற்கு தண்ணீர் எடுத்துவிட்டு வளர்ப்பாரில்லை. அப்படியிருந்தும் அது அதிகமான பலனைக் கொடுக்கிறது.

II. பாடுபட்டு பலன்கொடுப்பதில் நீதிமானுக்கு ஒப்பிடப்படக்கூடியது. அதின் சாரத்தை எடுக்கிற அல்லது பெறுகிற மனிதர் அதை வெகு பாடு படுத்தித்தான் எடுக்கிறார்கள். அது அப்படிப் பாடுபடாவிட்டால் பிரயோஜனமாயிருக்கவும் முடியாது. முதலில் உயர ஏறும்போதே காலால் மிதிக்கப்படுகிறது. பனை அதை சம்மதித்துக் கொள்வதுபோல் வளையாமல் அசையாமல் நிற்கிறது. பனையின் பலனைப் பெறுகிறதற்குத் தடையாயிருக்கப்பட்ட ஓலை, மட்டை, பன்னாடை முதலியவைகளையெல்லாம் அரிவாள்கொண்டு நீக்கி பாளையைத் தெரியப்பண்ணி அந்தப் பாளை கல்போலிராதபடி கடிப்பு என்கிற ஓர் ஆயுதத்தால் மெதுப்படுத்தி பலனுக்குக் கொண்டுவருகிறார்கள். இதுமாத்திரமா? இனி நித்தமும் பாடுதான். ஒவ்வொருநாளும் காலையும் மாலையும் பதநீர் அல்லது சாரம் சொட்டுச் சொட்டாய்ப் போட்டுகொண்டிருக்கும்போதும் பாடுதான். பலன் குறைந்துபோகுமென்று பாளையின் நுனியை அரிந்தரிந்து விட்டுவிடுகிறார்கள். இந்தப் பாடுபட்டாலும் பனை வருத்தப்படாமல் மேலேயே நோக்கி நின்று அதிகமதிகமான சாரத்தை மனிதருக்கு உபயோகமாகக் கொடுக்கிறது. பதநீர் மாத்திரமல்ல பனையிலுள்ள ஒவ்வொரு பாகமும் மனிதருக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது. கனத்துக்குரிய வேலைக்கும் அற்பமான வேலைக்கும்கூட உதவுகிறது. இப்படியே நீதிமான்களும் தங்களுக்கு நேரிடும் உபத்திரவங்கள், சோதனைகள், வருத்தங்கள், கட்டுகள், காவல்கள், அடிகள், மிதிகள். ஏச்சுகள், பேச்சுகள், கஷ்டநஷ்டங்கள் முதலானவைகளையெல்லாம் பொறுத்து, சகித்து, தங்கள் சிலுவைகளை எடுத்துக்கொண்டு 'மயங்கும் தாசனை தேவா நீர் நடத்தும், என் பாதை காட்டியாய் சகாயம் புரியு'மென்று, தேவ ஒத்தாசையைத் தேடிக்



கொண்டு, தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து; தங்கள் ஊழியங்களுக்கு இடையூறாயிருக்கும் சகல தடைகளையும் ஆவியின் பட்டயத்தாலறுத்துத் தள்ளிவிட்டு தங்கள் மனதையும் கண்ணையும் மேல்நோக்கி தேவகிருபைக்காகவும் ஒத்தாசைக்காகவும் ஜெபித்து ஊக்கத்தோடே உழைத்து மனிதருடைய ஆத்தும வாழ்வைக்கருதி ஆத்துமாக்கள் ரக்ஷிக்கப்பட ஆவலோடே எதிர்பார்த்துத் தங்கள்பிரயாசம் சுகம் பெலன்முதலியவைகளை செலவழித்து சாரம் கொடுத்துக்கொண்டேயிருக்கிறார்கள். பனை எவ்வளவு வருத்தப்பட்டாலும் செழிப்பாயும் சாரமாயுமிருந்து அதிகமதிகமான நன்மையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறதோ, அதேவண்ணமாய் நீதிமான்களும் எத்தனையோ பாடுகளை அனுபவித்தாலும் சந்தோஷமாயும் அலங்காரமாயும் விளங்கி ஆத்தும ஆதாயமாகிய பெருநன்மையை உண்டாக்கிக்கொண்டேயிருக்கிறார்கள். ஆகையால்தான் நீதிமான்களையும் பனையைப்போலிருப்பார்கள் என்று தெய்வவசனம் கூறுகிறது.

III. மேலும் பனையேற்றுத்தொழில் நீதிமான்களுக்குரிய தொழிலாயுமிருக்கிறது. இத்தொழிலையும் அதைச் செய்கிறவர்களையும் சிலர் அற்பமாய் நினைப்பதுண்டு. காரியத்தை அறிந்தால் ஒருபோதும் அப்படி நினைக்கமாட்டார்கள். இவ்வேலையைச் செய்கிற ஒரு பக்தன் தெரிவிக்கிறபடி இவ்வேலை மிக சந்தோஷமும் சமாதானமுமுள்ளது. எப்படியெனில்:

(1) சோம்பலுக்கு இடமிராது. சும்மாயிருப்பது சோதனைக்கு இடம் சோம்பலினால் பலர் பாவத்தில் விழுந்தார்கள். சுறுசுறுப்பு பல தீமையை விலக்கும்.

(2) ஜெப ஜீவியத்துக்கு வழி. சுமார் 30 பனை ஏறுவதானால் ஒவ்வொரு பனையிலும் ஏறும்போதும் இறங்கும்போதும் 60 தடவை. இப்படி காலையிலும் மாலையிலுமாக 120 தடவை ஜெபம் செய்ய ஏதுவாகிறது.

(3) உன்னத ஜீவியத்துக்கு வழி. மண்ணில்கிடந்து உழல்வதைவிட அதைவிட்டுப் பனைமண்டையில் இருந்து தியானிப்பது ஆத்துமாவுக்கு ஆனந்தம் அநுபவித்தவர்கள் அறிவார்கள்.

(4) விசுவாச ஜீவியத்துக்கு வழி. இதில் உபயோகிக்கும் ஒவ்வொரு ஆயுதமும் ஞானார்த்தமுள்ளவை. முறுக்குதடி = விசுவாசம், தளைநார் = ஏணி; அரிவாள் = ஆவியின் பட்டயம், கடிப்பு = ஞானம், குடுவை = நம்பிக்கை; அரிவாள்பெட்டி = அன்பு, எப்படியெனில்.

(a) கிறிஸ்தவன் விசுவாசத்தில் ஆரம்பித்து அந்த ஏணிவழியாய் உன்னதத்துக்குப் போகவேண்டுமென்றும்.

(b) ஆவியின் பட்டயத்தால் தன்னிலுள்ள பாவத்தடைகளையெல்லாம் அறுத்துத் தள்ளவேண்டுமென்றும்.

(c) கடினமாயிருக்கும் பாளையைக் கடிப்பினால் மெதுப்படுத்தி ஞானமாகப் பக்குவம் செய்யுமாப்போல ஞானமுள்ள கர்த்தர் இருதயக்கடினமுள்ள பாவியைத் தமது உன்னத ஞானத்தால் மெதுப்படுத்தி பக்குவம் செய்கிறார் என்றும்.

(d) பலன் நிச்சயமாய்க் கிடைக்குமென்று நம்பிக்கையோடே குடுவை கொண்டுபோய் பதனீரால் நிரப்பிக்கொண்டுவந்து தித்திப்பான அச்சாறை பலர் அநுபவிக்க கொடுக்குமாப்போல் ஸ்ரீமான் தனக்குக் கிடைக்கும் பரமபாக்கியங்களை நம்பி அணைத்துகொண்டு பலரும் இந்த நன்மையைப் பெறத்தக்கதாக உண்மையான சாட்சி பகருவான் என்றும்.

(e) எல்லாவற்றுக்கும் மேலாக அரிவாள் பெட்டி அவனுடைய ஆயுதங்களில் பலதை அடக்குமாறு ஸ்ரீமான் சகல சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்வானென்றும் தான் செய்யும் கிரியைகளை அன்புக்குள்ளாகச் செய்யவேண்டும் என்றும் உணர்ந்துகொள்கிறான். ஆகவே பனையைப்போலவும் அதில் பலன்பெற்ற பக்தன் சொன்னதுபோலவும் நமது நிலைமையும் ஜீவியமும் பலன் கொடுக்க ஏதுவாயிருக்கும்படி அருள்நாதர் துணைபுரிவாராக. ஆமென்.

D. G.

## சபையைக் கெடுக்கும் சங்காரன்

இந்தச் சங்காரன் ஏது என்றும், அத்தால் விளையும் தீமைகள் ஏதுவென்றும் சற்று கவனித்தால் நமக்கும் நமது சபைகளுக்கும் வாழ்வுண்டாகுமென்பதற்கையமில்லை. திருச்சபையின் அங்கங்களின் ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கவேண்டுமென்று பரி. பேதுரு சொல்லுகிறார். பிதாவோடும் குமாரனோடும் ஐக்கியப்பட்டு ஜீவிக்கிறவர்கள்—திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தோடும் ஐக்கியப்பட்டு குமாரனின் கட்டளையை நிறைவேற்றவேண்டும் என்பது நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இவ்வைக்கியத்தைக் கெடுக்கும் சங்காரன் கோள் என்பதுதான். ஆனால் அவ்வைக்யத்தை முன்னேறவிடாதபடித் தடுக்கிற பழைய பாம்பாகிய சாத்தான் உலகெங்கும் சுற்றித்திரிந்து, விசுவாசிகளின் ஐக்கியத்தைக் கெடுக்கும்படி சிலருக்குள் புகுந்து கோள் சொல்லும்படி ஏவிவிடுகிறான் தற்காலத்தில் இப்படிப்பட்ட ஆவியுடைய அநேகர் சபை எங்கும் சுற்றித்திரிந்து, சிநேகிதனைச் சிநேகத்தைவிட்டுப் பிரித்தும், வேலைக்காரனை எஜமானுக்கு விரோதமாக்கியும், பிள்ளைக்குத் தாயும்; தாய்க்குப் பிள்ளையும் ஆகாதபடியும் ஆக்கிவிடுகிறான். 'கோள்சொல்லிக் குறளை காற்றுடன் நெருப்பு' என்பது முதுமொழி. நெருப்பு தனித்திருந்தால் அதிகச் சேதமும் நஷ்டமும் உண்டாக்காமல் ஓர் [illegible]



தடுத்துவிடலாம். அத்தோடு காற்றும் சேர்ந்துவிட்டாலோ அதினாலுண்டாகும் கேடு எவ்வளவு அதிகமென்பது நமக்குத் தெரியுமே. சமீப காலத்தில் ஓர் கிராமத்தில் கைப்பிசகாய் ஒரு வீட்டில் தீப்பிடித்தது. காற்று தன்னுடைய வல்லமையைக் காண்பித்தது. ஜனங்கள் தீயை அணைக்கப் பிரயாசப்பட்டும் கூடாமல் அநேக வீடுகள் எரிந்தும், அநேகருக்குப் பொருள் நஷ்டமும் உண்டானது. அப்படியே கோள்சொல்லுதலும் இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் உத்தமனைக் கண்ணியில் அகப்படுத்தவோ, அல்லது அவர்கள் பேரைக் கெடுக்கவோ ஆலோசித்து, ஒருவரைப்பற்றி அடுத்தவரிடம் தீமையைப் பிணைத்துவிட்டு, எந்த ஆளைப்பற்றிப் பேசினார்களோ அவர்களிடம் போய் தன்னை மறைத்துக்கொண்டு, இன்னார் உன்னைப்பற்றி இன்னின்ன பிரகாரம் சொல்லுகிறார் என்று ஒன்றைப் பத்தாக ஜோடித்துப் பெருக்கிவிடுகிறார்கள். அதுவுமன்றித் தன்னை மறைக்கும்படி என் பேர் வெளிக்கு வந்துவிடக்கூடாது, நான் சொன்னதாகச் சொல்லவேண்டாம் என்றும் சொல்லிக்கொள்ளுவார்கள்.

கோள் நாவானது அழிவுக்கேதுவான அநேக காரியங்களுக்கு ஒப்பிடப்படுகிறதைப் பரிசுத்த வேதாகமத்தில் காணலாம். இவர்கள் ஒருவருக்கொருவர் மனஸ்தாபத்தையும், பிரிவினையையும் உண்டாக்குகிறவர்களாயும் பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தைக் கெடுக்கிறவர்களாயுமிருக்கிறார்கள். இந்தச் சிறியரில் ஒருவனுக்கும் இடறலுண்டாக்காதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

இன்னும் கோள்சொல்லும் நாவானது தீட்டப்பட்ட சவரகன் கத்திபோலும், தீமையையும், பொய் வசனிப்பையும் விரும்புகிறதாயுமிருக்கிறது. இவர்களிடம் ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டால் விளையாட்டுக்கல்லவோ சொன்னேன் என்பார்கள். ஆனால், அது விளையாட்டுப்போலிருந்து உத்தமனையும், சன்மார்க்கனையும், தேவதாசனையும் காயப்படுத்திவிடுகிறது. கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதனையும் பிரித்துவிடுகிறான் என்றும் ஞானி சொல்லுகிறார். அவன் வெள்ளிப்பூச்சுப் பூசிய ஓட்டைப்போலவும் இருக்கிறான். கோள் சொல்லுகிறவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் கவனிப்போம். இவர்கள் நம்பிக்கைத் துரோகிகள் என்றும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் என்றும், திறக்கப்பட்ட பிரேதக்குழிகள் என்றும், இருதயத்தில் வஞ்சனையும் வாயில் பாம்பின் விஷமும் உள்ளவர்கள் என்றும் வாசிக்கிறோம் இப்படிப்பட்டவர்களுக்கு வரும் முடிவு பயங்கரமானது. தீமையை விதைக்கிறவர்கள் தீமையையும், நன்மையை விதைக்கிறவர்கள் நன்மையையும் அடைவார்கள். தான் வெட்டின குழியில் தானே விழுவான் என்பது மெய்யே.

அவனவன் தன்தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். எந்தச் [illegible] மோசம்பண்ணுகிறான் [illegible]

அவர்கள் நாவு கூர்மையாக்கப்பட்ட அம்பு. அவனவன் தன்தன் அயலா னோடே தன் வாயினாலே சமாதானமாய்ப் பேசுகிறான். ஆனால் தன் உள்ளத் தில் அவனுக்குப் பதிவிடை வைக்கிறான் என்று எரேமியா சொல்லுகிறார்.

கோள் சொல்லி மறைந்துகொள்ளப் பார்க்கிறவர்களே! நீங்கள் மறைந் துகொள்ளக்கூடுமோ? இப்போது மறைந்துகொண்டாலும் உங்கள் பாவம் உங்களைக் கண்டுபிடிக்கும். பயங்கரமான ஒரு நாள் உண்டு அந்த மகா நாளில் வெளிப்படுத்தப்படுவீர்கள். அப்போது வெட்கம், துக்கம், சஞ்சலம், தவிப்பு அடைந்து வருத்தப்பட நேரிடும் என்பது மெய்.

ஆகையால் சங்கீதக்காரனாகிய தாவீதைப்போல நாவினால் புறங்கூரு மலும், தன் தோழனுக்குத் தான் தீங்கு செய்யாமலும் அயலான்மேல் சொல லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலுமிருக்கப் படிப்போமாக. தேவ தாசரே! இப்படிப்பட்ட பாவத்துக்கு நமது சபையை விலக்கிக் காத்துக் கொள்ளும்படி ஊக்கமாய் ஜெபிப்போமாக.

---

## ஜாதிப்பேய்

இந்தியாவின் வடபாகத்திலுள்ள ஓர் ஊரில் விஷபேதி மும்முரமாய் நடந்தது. ஒரு மனுஷன் அந்த வியாதியினால் பீடிக்கப்பட அவன் ஓர் குளத்துக்கரையில் விழுந்துகிடந்தான். ஒருவரும் அவனண்டையில் போய் உதவிசெய்ய மறுத்துவிட்டார்கள். அந்த மனுஷன் சிநேகிதர், இனத்தார் சகாயமில்லாமல், தண்ணீர் கொடுக்கக்கூட ஆளில்லாமல் சாகிறநிலைமைக்கு வந்துவிட்டான். அவ்விடத்தில் மிஷனெரி வேலை பார்த்துவந்த ஓர் துரை சானியும் சில உதவிக்காரரும் இதைக் கேள்விப்பட்டுப்போய் அந்த மனுஷ னைத் தாங்களே தூக்கிக்கொண்டுவந்து ஓர் அறையில் வைத்து சிகிச்சை செய்தார்கள். அவனுக்கு மூடக் கம்பளிகொடுத்து, இரவும் பகலும் மாற் றிமாற்றிக் காவல்வைத்து அவனைச் சுகப்படுத்தினார்கள். சாப்பிடக்கூடிய பெலனுண்டானபோது அவனுக்கு ஆகாரம் கொடுத்தார்கள். பூரண சுக மானபின் அவனுக்கு ஓர் வஸ்திரமும் கொடுத்தனுப்பினார்கள். அவன் தன் சொந்த ஊருக்குப் போகவே, அவனுடைய இனத்தார் அவனைப் பார்த்து, நீ தாழ்ந்த ஜாதியாரிடத்தில் போஜனம் வாங்கிச் சாப்பிட்டபடியால் நாங்கள் உன்னை ஜாதியில் சேர்த்துக்கொள்ளமாட்டோம் என்று துரத்திவிட்டார் கள். அந்த மனுஷன் தனக்குதவிபுரிந்த மிஷனெரியம்மாளிடம் போய்த் தன் இனத்தார் கேள்விப்பட்டது வாஸ்தவமல்ல, தான் தாழ்ந்த ஜாதியார் கொடுத்த ஆகாரம் சாப்பிடவில்லையென்று சொல்லும்படி ஓர் கடிதம் கேட் டான். இந்தச் சம்பாஷணை நடந்துகொண்டிருக்கையில் ஓர் இந்து பிராம ணர், ஆங்கில நாகரிகமும் கல்வியுமுடையவர் அந்தத் துரைசானியிடம் வந் தார். அவரிடத்தில் நடந்த சங்கதிகளைச் சொல்லவே, அவர், 'சாகுந்தரு வாயிலிருந்த மனுஷன் நடப்பித்த காரியங்களுக்கு அவன் உத்தரவாதியல்ல, ஆகையால் அந்தக் குற்றம் பரிகரிக்கக்கூடாது' என்றார். துரைசானியம் மாள் அவரைப் பார்த்து, நீர் இப்படிப்பட்ட நிலைமைக்குட்பட்டால் என்ன செய்வீர் என்று கேட்க அவர், 'நான் வியாதிநேரம் கொடுத்த ஆகாரத்தைச் சாப்பிட்டிருப்பேன். ஆனால் சுகமானபின் சுத்திகரிப்பு சடங்காசாரம் நடப் பித்துக்கொள்வேன்' என்றார்.



ஜாதி என்னும் பேய் இந்தியர்களை எவ்வளவு பலமாய்ப் பிடித்திருக்கி றது. கிறிஸ்துவின் உபதேசம் இந்தப் பேயைத் துரத்த வல்லமையுள்ள தென்று நம்புகிறோம். தேவனுடைய பிள்ளையே, இந்தக் குற்றத்தில் உனக்கு ஏதாவது பங்குண்டா?

---

## திருஷ்டாந்தங்கள்

கிறிஸ்தவ ஈகை. ஓர் சீனக் கிறிஸ்தவன் ஏழைப் பெற்றோரிடம் பிறந்தவன். தான் பெரியவனாகும்வரை தரித்திர நிலைமையிலிருந்தான். கிறிஸ்தவனானபின் தையல் யந்திரங்கள் விற்கும் கம்பெனியில் வேலை யமர்ந்து, நாளடைவில் ஒரு ஏஜென்டானான். இப்போது அவன்தான் அந்தக் கம்பெனியில் பிரதான ஏஜென்டாகவிருக்கிறான். அவன் கையின்கீழ் 70 பிராஞ்சு ஆபீசுகள் இருக்கின்றன. அவனுக்குத் திரளான பணம் உண்டு என்றாலும் பணம் அவனுடைய கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறைத்துப்போட வில்லை. ஆஸ்தியில் பெருகப் பெருகச் சபை விஷயங்களில் அதிக உற்சா கமும், ஒழுங்கும் உள்ளவனாயிருக்கிறான். சபை ஊழியத்துக்காகத் தன் பணத்தை உதாரத்துவமாய்ச் செலவழிக்கிறான். அநாதப்பிள்ளைகளுக்கு ஓர் பாடசாலை ஏற்படுத்தி நடத்துகிறான். கோவில் கட்டுமானங்களுக்கு 1000 டாலருக்குக் குறையாமல் கொடுத்துவருகிறான். இப்போதும் தான் பிறந்த பட்டணத்தில் ஏழை ஜனங்களுக்காக நாலு பாடசாலைகள் கட்டி அதிலுள்ள உபாத்திமாருக்குப் போதுமான சம்பளம் எப்போதும் கிடைக் கத்தக்கதாகப் போதுமான நிதி பிரத்தியேகப்படுத்தி அந்தப் பள்ளிக்கூடங் களெல்லாம் மிஷனெரிமாருடைய ஆளுகைக்குள்ளேயே இருக்கும்படி ஒழுங்குசெய்கிறான். கிறிஸ்தவ உதாரத்துவம் ஆசீர்வாதமுள்ளது.

---

சில காலங்களுக்குமுன் நியுயார்க் பட்டணத்துப் பெருவீதிகளொன்றில் வயதுசென்ற ஓர் பெண் போய்க்கொண்டிருந்தாள். இரைச்சலோடு போகும் வண்டியொன்றில் பூட்டிய இரண்டு குதிரைகள் மிரண்டு ஓடி இவளுக்குமுன் வந்துவிட்டன. பக்கத்தில் போலீஸ்காரன் ஓடிக் கிழவியைப்

பிடித்துத் தூரத்தள்ளிவிட்டான். அவன் தப்பிக்கொண்டான். போலீஸ்காரனோ குதிரைகளின் கால்களுக்குள்ளகப்பட்டுக் காயப்பட்டுத் தன்னறிவற்றவனாய்க் கிடந்தான். பிறருக்குதவி செய்பவர் தன்னை வெறுத்தால்தான் உதவி செய்யக்கூடும்.

---

கடந்த யுத்தத்தில் ஜெனரல் லீ என்பவர் போர் முகத்தில் நின்று யுத்தம்செய்தார். அவருக்காகவும் அவருடைய உத்தியோகஸ்தருக்காகவும் சில வான்கோழிகள் வெகுமானமாக அனுப்பப்பட்டுப் பின்னணியத்துக்குவந்தன. இதைக் கேள்விப்பட்டவுடன் யுத்தம் ஓய்ந்தபின் ஜெனரல் பின்னணியத்துக்கு வந்தார். வான்கோழிகளில் பெரிது அவருக்கென்று அனுப்பப்பட்டது. அந்தக் கோழியை அவர் சற்றுநேரம் பார்த்துக்கொண்டிருந்து தமது உத்தியோகஸ்தரைப் பார்த்து, 'உங்களுக்குரியவைகளை நீங்கள் என்ன செய்தாலும் சரி, என் கோழியோ ருஷியாவில் காயப்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிற போர்வீரருக்காக அனுப்பப்படவேண்டியது அவர்களுக்குத்தான் கொழுத்த போஜனம் தேவை' என்றார். மற்ற உத்தியோகஸ்தரில் ஒவ்வொருவரும் சம்மதிக்கவே, மறுநாட் காலையில் வான்கோழிகள் எல்லாம் ருஷியாவுக்கு அனுப்பப்பட்டன. சுயவெறுப்புக்குறிய மாதிரி.

---

ஐக்கியமாகாணத்தில் ஓர்காலம் பிரசிடெண்டாயிருந்த மாக்கின்லி Mckinley) என்பவர் பட்டணங்கள்தோறும் சென்று தேச ஆளுகைக்கடுத்த உபந்நியாசங்கள் செய்துகொண்டுவந்தார். ஓர் பத்திரிகையின் ஆசிரியரும் அவர் போகும் இடமெங்கும் சென்று அவருடைய உபந்நியாசத்தைக் குறைகூறித்திரிந்தான். பிரசிடென்றுக்கு இவனுடைய காரியம் தெரியவந்தது. இவன் ஏழை, உடை கேவலம், சாப்பாடு பூச்சியம், என்றாலும் திறமையுள்ளவன், பிடிவாதன். ஓர்நாள் இரவு பிரசிடென்று ஓர் குதிரை வண்டியை வாடகைக்கமர்த்திக் குளிர்காலமானபடியால் வண்டியை நன்றாய்ப் பூட்டிக்கொண்டு உள்ளிருந்தார். புறப்பட்டுச் சற்றுதூரம் போகவே, பத்திரிகையாசிரியனின் வழக்கமான தூத்தல் சத்தத்தை யறிந்திருந்த பிரசிடென்று குதிரை ஓட்டுகிறவனுடைய ஆசனத்தில் அதேவிதமாய்த் தூத்துகிற ஓர் ஆளிருக்கிறதென்று கவனித்து வண்டியை நிறுத்தி, கீழே இறங்கி ஆசிரியனைப் பார்த்து 'வாலிபனே, இறங்கி, உள்ளேவா' என்றார். அவன் உடனே கீழ்ப்படிந்து பயத்தோடு இறங்கினான். பிரசிடென்று, தாம் மேற்போட்டிருந்த கனத்த மேற்சட்டையைக் கழற்றி அவனுக்குக் கொடுத்து இதைப் போட்டுக்கொண்டு வண்டிக்குள்ளே வந்து உட்காரு என்றார். ஆசிரியனோ 'ஐயா, நான் யாரென்று உங்களுக்குத் தெரியாது போலும். உங்கள் உபந்நியாசங்களையெல்லாம் குறைகூறிப் பிரசுரப்படுத்து



கிறவன் நான்தான். நாளைக்கும் நீங்கள் பேசப்போகிறவைகளை என்னாலானமட்டும் எதிர்க்கவேண்டுமென்று போகிறேன் என்றான். பிரசிடென்று மாறுத்திரமாக, 'எனக்கு எல்லாம் தெரியும், என்றாலும் நீ இந்தச் சட்டையைப் போட்டுக்கொண்டு என்னோடு வண்டிக்குள்ளிருந்தால் நீ நல்ல வேலை செய்யக்கூடும்' என்றார். பரி மத். 5: 44—47.

---

எகிப்து தேசத்திலுள்ள வாலிபனொருவன் பரி: மக்கேரியு என்னும் ஓர் பக்தனிடத்தில்போய் தனக்கு ஆவிக்குரிய ஆலோசனை சொல்லும்படி கேட்டதற்கு, அப்பக்தன் வாலிபனைப் பார்த்து, 'நீ கல்லறைத் தோட்டத்துக்குப்போய் முதலில் மரித்திருக்கிறவர்களைப் பார்த்து கோபதாபமாய்ப் பேசு. அப்புறம் அவர்களைப் புகழ்ந்து முகஸ்துதி பேசு' என்று சொல்லியனுப்பினார். வாலிபன்போய் அப்படியே செய்துவிட்டுத் திரும்பிவந்தான். பக்தன் அவனைப் பார்த்து, 'நீ கோபதாபமாய்ப் பேசினாயே, அப்போது அவர்கள் என்ன மாறுத்தரம் சொன்னார்களென்றார். அவர்கள் ஒரு வார்த்தையும் பேசவில்லையென்றான், நீ அவர்களைப் புகழ்ந்து முகஸ்துதி பேசினாயே அதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்றார். அதற்கும் பதில் சொல்லவில்லையென்றான். அப்படியானால் நீயும்போய் அப்படியேசெய். வாலிபத்தில் பொறுமையும் சாந்தமும் கையாடுவையானால் முதிர் வயதில் பரிசுத்தனாவாய் என்று சொல்லியனுப்பினார்.

---

மழை பெய்துகொண்டிருந்த ஓர் நாளில் நியுயார்க் பட்டணத்திலுள்ள ஓர் பெரிய கம்பெனியில் வேலை பார்க்கும் விசிதரான வாலிபர் பலர் கூட்டமாய் நின்றுகொண்டிருந்தார்கள். மழையில் நனைந்து வந்த ஓர் துரைசானி கம்பெனியாரின் ஷாப்புக்குள் பிரவேசித்தார்கள். வாலிபர் தாங்கள் முன் நின்றபடியே பேசிச் சிரித்துக்கொண்டு நின்றார்கள். அவர்களில் சொற்ப சம்பளம் வாங்கும் வாலிபன் ஒருவன் அவர்களை விட்டுப்பிரிந்து துரைசானியிடம்போய் அம்மா! 'நான் தங்களுக்கு என்ன உதவிசெய்யவேண்டும் என்று கேட்டான். அந்த அம்மாள் தனக்கு வேண்டிய சாமானின் பேரைச் சொல்லவே, வாலிபன் உடனேபோய் அந்தச் சாமானைக் கொண்டுவந்து அம்மாள்முன் வைத்து அது நல்ல சாமான்தான் என்று சொல்லிக்கொண்டிருந்தான். அதை வாங்கிக்கொண்டு அம்மாள் புறப்படும்போது இந்த வாலிபனுடைய விலாசத்தைக் கேட்டு வாங்கிக்கொண்டார்கள். சில காலத்துக்குப்பின் இந்த அம்மாள்தானே அந்த ஷாப்பின் மானேஜருக்குக் கடிதம் எழுதி ஸ்காட்லாந்திலுள்ள தன்னுடைய பெரிய மாளிகைக்கு வேண்டிய சாமான்களெல்லாம் ஷாப்பிலிருந்து சவதரிக்கவேண்டுமென்றும் அந்தச் சாமான்களை அம்மாளிகையில் ஒழுங்குபடுத்த தன்னை மரியாதையோடு

ஏற்றுக்கொண்ட அந்த வாலிபனின் பேரைக் காட்டி அவனை அனுப்பவேண்டுமென்றும் எழுதினார்கள். ஷாப்பின் முதலாளி பிரதியுத்தரமாக, அவர்கள் கேட்டுக்கொண்ட வாலிபன் இளைஞனும் அனுபவமில்லாதவனுமானவன் என்றும் அவனை விடச் சற்று வயதான வேறொருவனுடைய பேரைச் சொல்லி அவன் அதற்கு ஏற்றவன் என்றும் எழுதினார். எஜமானி திரும்பவும் எழுதி 'எனக்கு வேறு யாரும் வேண்டாம். நான் கேட்டுக்கொண்ட அந்த வாலிபனே வேண்டும் நான் பெரிய ஆர்டர் கொடுத்திருக்கிறபடியால் என் விருப்பப்படி செய்யவேண்டும்' என்று எழுதினார்கள். அப்படியே வாலிபனான அந்தக் கிளார்க் கடலைக் கடந்து ஸ்காட்லாந்து தேசத்துக்குப் போய் அவ்விடத்து மாளிகையில் சாமான்களை ஒழுங்குசெய்தான். இந்த அம்மாள் பேர்போன அந்திரேயா கார்னிகி என்பவரின் மனைவி. (Mrs. Andrew Carnegie). அந்த மாளிகையின் பேர் ஸ்கிட்போ மாளிகை.

---

பாரசீக தேசத்தில் ஒரு கதை வழங்கிவருகிறது. என்னவென்றால் தேவன் உலகத்தைச் சிருஷ்டிக்கும்போது மரம், செடிகள் இல்லாமல் வெறுமையாய்ச் சிருஷ்டித்தார் என்றும், பின்பு ஓர் தேவதூதனையனுப்பி எல்லாவிடங்களிலும் விதையை விதைக்கச்செய்தார் என்றும், சாத்தான் இந்த விதைகளை அழிக்க வகைதேடி, அவைகளைத் தரையில் புதைத்துவிட்டு, அவைகள் அழுகிக் கெட்டுப்போகும்படி சூரியனையும் மழையையும் அழைத்தான் என்றும், இவ்விதமாக அவன் அழிந்துபோகும் என்று நினைத்த கருவிகளே அந்த விதைகள் முளைத்து அழகான செடிகளாக வளரும் முறையாகத் தேவன் மாற்றிவிட்டாரென்றும், அப்புறம் தேவன் சாத்தானைப் பார்த்து 'மதியீனனே, நீ விதைக்கிறது சாகாவிட்டால் உயிரடையமாட்டாதே' என்று சொன்னதாகவும் சொல்லியிருக்கிறது. கிறிஸ்துநாதரும் தமது சீஷரைப் பார்த்து, 'தன் ஜீவனை என்னிமித்தம் இழந்துபோகிறவன் அதை ரட்சித்துக்கொள்வான்' என்கிறார்.

---

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3- JAN 1921
MADRAS

Registered No. M 136

September 1920.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI செப்டெம்பர் 1920

## சங்கீதங்கள் மனுஷனுடைய ஆத்துமாவுக்கு ஓர் கண்ணாடி

யூதருக்குள் வழங்கிவந்த ஓர் பாரம்பரையின்படி, தாவீது அரசனின் மஞ்சத்தின்மேல் ஓர் வீணை தொங்க வைத்திருந்ததாம். நடுராத்திரியில் வீசும் காற்றானது நரம்புகளை அசைக்கவே, அவைகளில் சத்தம் பிறந்து அதின் இன்பமானது கவிராயனான அரசனை எழுப்ப, பொழுது உதயமாகுமட்டும் அந்தச் சத்தங்களுக்கிசைவாகப் பாடிக்கொண்டேயிருப்பானாம். சங்கீதங்களானது, மனுஷனுடைய இருதயத்திலிருந்து உண்டாகக்கூடிய சகலவிதமான இராகங்களையும் அடக்கினவைகளாயிருக்கின்றன. அவைகளில் மனுஷனுடைய உருக்கமான கீதங்களும், மனஸ்தாப ஒப்பாரியும், சஞ்சலத்தின் சத்தமும், ஜெயகீதமும், தோல்வியினாலுண்டாகும் அவநம்பிக்கையின் ராகமும், நம்பிக்கையின் ஜெயதொனியும், விசுவாச கீதமும் அடங்கியிருக்கின்றன. மனுஷனுடைய ஆத்தும நிலைமையின் உறுபாடெல்லாம் அவைகளில் காட்டப்பட்டிருக்கின்றது. சூரிய உதயமும், அஸ்தமனமும், பிறப்பும், இறப்பும், வாக்குத்தத்தமும் அதின் நிறைவேறுதலுமாகிய சகலமும் அடங்கியிருக்கின்றது.

மனுஷனுடைய ஆத்தும போராட்டத்தின் பற்பல தன்மைகளை சங்கீதங்களில் பார்க்கலாம். அடிக்கடி துன்பப்பட்டாலும் முற்றிலும் அபஜெயமடையாததும், எப்போதும் உன்னதமும் மேன்மையுமான நிலைமைக்காகவே போராடுகிறதும், மனுஷன் தன் அபிப்பிராயத்தினால் லக்கைப் பிடித்துக்கொள்ளத் தவறிப்போகிறதும், வாஞ்சை நிறைவேறாமலிருக்கிறதுமான பல நிலைமைகளைக் காட்டுகிறது. ஏதேன் தோட்டத்தில்

மனுஷனுக்கிருக்க கலக்கமற்ற நிலைமையைச் சங்கீதங்களில் பார்க்கமாட்டோம். அதற்கெதிரிடையாக, தன் பாவ நிலைமையை உணர்ந்து, வெட்கத்தோடும் மனஸ்தாபத்தோடும் நம்பிக்கையோடும் தேவனுடைய ஐக்கியத்தைத் தேடி வாஞ்சித்து அவரோடு இன்ப சகவாசம் செய்ய விரும்பும் ஆத்துமாவின் தன்மையை வெளிப்படுத்துகிறது. இதுவே சங்கீதங்களில் காணப்படும் சத்தியம். மார்க்க சத்தியங்களும், ஆவிக்குரிய ஜீவியத்தின் சட்டங்களும், ஜெபம் ஸ்தோத்திரங்களடங்கிய தக்க தியானங்களும் இன்பமான செய்யுள் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆகவே சங்கீதங்களில் ஒவ்வொரு மனுஷனும் தன்தன் ஜீவியத்துக்கடுத்த அனுபவங்களைக் காணலாம். உன்னத மகிமையுள்ளவருமான அன்புள்ள தேவனை மனுஷன் தன் பிதாவாகவும் சிநேகிதராகவும் பாவித்துப் பேசத்தக்கவிதமாக எழுதப்பட்டிருக்கிறது.

தனி ஜீவியத்துக்கடுத்த விஷயங்கள்மட்டுமல்ல, ஒவ்வோர் ஜாதிக்கடுத்த விஷயங்களையும் சங்கீதங்களில் பார்க்கலாம். ராஜவாழ்த்துக்கீதம் சங்கீதங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. (சங 20, 68) ராஜ சின்னங்கள், ராஜ மகுடாபிஷேக வார்த்தைகள், பூர்வீக குடும்பங்களின் சட்ட வாக்கியங்கள், எடின்பரோ, ஆக்ஸ்பர்ட், டர்ஹாம் சர்வகலா சாலைகளின் சட்ட வசனங்கள், தர்ம சாலைகள், ஆஸ்பத்திரிகள் பொது ஸ்தாபனங்கள் இவைகளில் பொறிக்கப்பட்டிருக்கும் தங்கவசனங்கள் எல்லாம் சங்கீதங்களிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன. ஞானஸ்நானம், விவாகம் அடக்கம் முதலிய சகல திருச்சபையின் ஆராதனை முறைகளிலும் சங்கீதங்கள் வழங்கப்படுகின்றன. நமது ஜீவியத்துக்கடுத்த சகல காரியங்களிலும் அவைகள் நமக்கு மிகவும் அவசியமாய்க் காணப்படுகின்றன. இளைப்படைந்த பிரயாணிகளுக்கு இவைகளே இளைப்பாறுதலளிக்கும் கீதங்கள். எக்காலத்திலும், எத்தேசத்திலும் எம்மதஸ்தர்க்கும் இவைகள் பொருந்தினவைகளே. ஆங்கில சபை, ரோமைச்சபை, பிரஸ்பிதீரியன் சபை மற்றும் சபைகள் யாவும் இவைகளை ஒன்றுபோல் வழங்குகின்றன. நூற்றாண்டுகளாக மார்க்கத்தின் உபதேசங்களைப்பற்றிப் பலத்த தர்க்கங்களும் வித்தியாசங்களும் ஏற்பட்டபோதிலும் சங்கீதங்களை உபயோகிக்கிறதில் வித்தியாசம் ஏற்பட்டதேயில்லை.

துன்பப்படும் சமயங்களில் இவைகளே பாடல்களாயிருந்திருக்கின்றன. யோவா, இரத்தச் சாட்சியான ஸ்தேவான், ரட்சகர் தாமும் தமது மரண வேளையில், பிலிப்பிபட்டணத்து சிறைச்சாலையில் பவுலும் சீலாவும், சங்கீதங்களையே உபயோகித்திருக்கிறார்கள். கிறிஸ்து மார்க்கத்தின் ஆரம்ப கால சரித்திரத்தில், துன்பப்பட்ட கிறிஸ்தவர்கள், பெற்றோரால் துரத்துண்ட பிள்ளைகள், எஜமான்களால் ஒடுக்கப்பட்ட அடிமைகள், அயலாரால்



OFFICE 3- JAN 1921

சமுசயப்பட்ட பட்டணவாசிகள் முதலானோர் பட்டணத்துக்கு வெளிப்புறத்திலுள்ள பாழான வீடுகள், மண்ணறைகளில் கூடிக் காலையிலும் மாலையிலும் ஜெபித்து ஆராதித்து வந்தார்கள். 73-ம் சங்கீதம் காலையிலும் 141-ம் சங்கீதம் மாலையிலும் வழங்கப்பட்டுவந்தது. அடிமைகளும், செருப்புத் தைக்கிறவர்களும், வண்ணாருமான படிப்பறியாத இவர்களோடு அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தரும், நூற்றுக்கதிபதிகளும், சர்க்கார் அதிகாரிகளும் உயர்குலத்திலுள்ள துரைசானிகளும் வந்துசேரும்போது ஓர் சங்கீதத்தை உபயோகித்தே தங்கள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்வார்கள. சங். 62: 1-ல் சொல்லிய மான் இந்த ஆத்துமாக்களுக்குப் பொருந்தின திருஷ்டாந்தம், ஒருதரம் இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அடிக்கப்படும்படி நியமிக்கப்பட்ட ஆடுகள் போலானார்கள். என்றாலும் கர்த்தர் அவர்கள் மேய்ப்பராயிருந்தார். 23-ம் சங்கீதம் இரத்தச் சாட்சிகளின் சங்கீதம் என்று அகுஸ்தின் குறித்திருக்கிறார். ராயனுக்குப் பலி செலுத்தும்படி கிறிஸ்தவர்களைக் கட்டாயப்படுத்தும் வேளைகளில், 'அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும் மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது' என்ற வாக்கியத்தையே [சங். 115: 4, 5] தங்களுக்கு ஆதாரமாக உபயோகித்து அதின்படி சாதித்திருக்கிறார்கள். கி. பி. 288-ம் வருஷத்தில் சாயிசான் என்னும் பட்டணத்தில் டையோக்ளிஷன் ராயன் அரசாண்டபோது, கிறிஸ்பின் கிறிஸ்பினியன் என்னும் இரண்டு சகோதரர் இருந்தார்கள். இவர்கள் செருப்புத் தைக்கிறவர்கள். கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றும் விசுவாசத்தினிமித்தம் இவர்கள் தங்கள் பிறப்பின் மேன்மையை வெறுத்து ஏழைகளுக்குச் செருப்புத்தைக்கும் தொழிலைத் தெரிந்துகொண்டார்கள். இவர்களை மிகவும் குரூரமாய் வதைத்தார்கள். அவர்கள் சரீர வேதனைகளிலெல்லாம் அவர்களுக்குத் தைரியத்தைக் கொடுத்த வசனம், 'எங்களை இரட்சிக்கும் தேவனே, நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவி செய்து, உமது நாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து, எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும். அவர்களுடைய தேவன் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன். [சங். 79: 9, 10] துண்டிக்கப்பட்ட அவர்கள் சரீரங்களை ஆற்றில் எறிந்துவிட்டார்கள். அவர்கள் பிரேதங்களைப்பற்றிய ஓர் கதையுண்டு. ஆற்றில் எறியப்பட்ட அவர்கள் சரீரங்கள் கடலில் சேர்ந்து அலைகள் அவைகளை அடித்துக்கொண்டுபோய் மாந்ஷ் என்னும் ஓர் கடற்கரைப் பட்டணத்தில் சேர்க்கவே, அப்பட்டணத்தார் அந்தச் சரீரங்களைச் சந்தோஷத்தோடு எடுத்து அடக்கம்செய்து அவ்விடத்திலேயே அவர்கள் பேர் நிலைநிற்கும்படி லிட் என்னும் ஓர் ஆலயத்தைக் கட்டினார்களாம். கி. பி 306-ம் வருஷத்தில் வாலிப போர்ச் சேவகனாகிய தியொடோர் இரத்தச் சாட்சியாய் மரித்தான். அவன் 'தெய்வ மாதா' என்னும் ஓர் இந்து ஆலயத்தை வைராக்கியத்தினாலே சுட்டெரித்ததினிமித்தம் அவன் சரீரத்தை

வதைத்தார்கள். வதைக்கும்போதுள்ள சரீர வேதனையின் மத்தியில், சங் 34: 1-ல் சொல்லிய 'கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்' என்னும் வசனமே அவன் தன் வேதனையைத் தாங்கிக்கொள்ள பெலத்தைக்கொடுத்தது. தேவாட்டுக்குட்டியின் தரிசனம் கண்டு குணப்பட்ட ஓர் சாரசன் பிரபு கிறிஸ்தவ போதகர் ஒருவரைச் சேர்ந்து, அவரிடத்திலிருந்து சங்கீதங்களையெல்லாம் பாராமல் கற்று தன் சுயதேசத்துக்குப்போய் தன் ஜனத்தாருக்குச் சுவிசேஷத்தை அறிவித்தார். ஆனால் அவர்களோ அவனுடைய செய்தியைத் தள்ளிவிட்டு அவனைக் கல்லாலெறிந்து கொன்றார்கள். அவன் மரிக்கும் சமயத்தில் சங். 13: 3-ல் சொல்லிய 'நான் மரண நித்திரையடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும்' என்னும் வசனத்தையே திருப்பித்திருப்பிச் சொல்லி தன் ஜீவனைவிட்டார். மாரிஸ் என்னும் சக்கரவர்த்தி 582-ம் வருஷத்தில் ஓர் சங்கீதத்தினாலே தன்னைத் தேவசித்தத்துக்கு ஒப்புக்கொடுத்தான். அவன் 20 வருஷம் ரோம ராஜ்யத்தை அரசாண்டான். அவனிடத்தில் அநேக சிறந்த குணங்கள் காணப்பட்டன. அவனுடைய சேனை அவனுக்கு விரோதமாய் எழும்ப, கி. பி. 60-ல் அவன் தன் மனைவி பிள்ளைகளோடு கால்கிதோனுக்கு ஓடிப்போனான். அங்கே அவனையும் அவன் ஐந்து குமாரரையும் பிடித்து, பிள்ளைகளை அவன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாய்க் கொலை செய்தார்கள். ஒவ்வொரு பிள்ளையையும் வாளால் வெட்டும்போது, மாரிஸ் உரத்த சத்தமாய் சங். 119: 137 'கர்த்தாவே, நீர் நீதிபரர், உமது நியாயத்தீர்ப்புகள் செம்மையானவைகள்' என்னும் வசனத்தையே சொல்லிக்கொண்டிருந்தான். கடைசியாக அவனையும் வெட்டிக்கொன்றுபோட்டார்கள்.

(இன்னும் வரும்)

---

## இனிமேல் நித்தியஜீவனையடையும்படி இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்கு திருஷ்டாந்தம்

### 1 தீமோ. 1: 16

பவுலின் ஜீவிய ஆரம்பத்தில் அவர் கேட்ட இரண்டு கேள்விகள் தனித்தனியே ஒருவனுடைய குணப்படுதலுக்கும் பிரதிஷ்டைக்கும் சம்பந்தமானவைகள். முதலாவது கேள்வி ஆண்டவரே நீர் யார்? இது ரட்சகருடைய தெய்வீகத்தை ஒப்புக்கொள்ளும் வசனம், அதுமாத்திரமல்ல, அவரை எப்படி அறியலாம் என்று அறிய விரும்பும் கேள்வி. தெய்வீக அறிக்கை பரிசுத்த ஆவியினாலுண்டானது. ஏனென்றால் 'பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது' 1 கொரி



12: 3. அந்தக் கேள்வியில் காட்டப்பட்ட ஆத்தும விசாரத்தைக் கவனிக்கும்போது அது குணப்படுதலுக்கு நடத்தும் வழியாகக் காணப்படுகிறது. இந்த முதலாம் கேள்விக்கு உத்தரவு கிடைத்தவுடனே 'ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர்?' என்ற இரண்டாம் கேள்வி தற்பிரதிஷ்டையைக் காட்டும் குறிப்பாயிருக்கிறது. ஆகவே ஆண்டவரை அறியும்படியான வாஞ்சை எந்த ஆத்துமாவில் உண்டாகிறதோ, அந்த வாஞ்சை குணப்படுதலுக்கும் தற்பிரதிஷ்டைக்கும் காரணமாயிருக்கிறதென்று பார்க்கிறோம். அப்போஸ்தலனுடைய ஜீவியத்தின் இந்தச் சம்பவம் கிறிஸ்தவன் ஒவ்வொருவனுடைய ஜீவியத்தின் அநுபவத்திற்கும் ஓர் ஏற்ற திருஷ்டாந்தம் என்று சொல்லலாம்.

மேலேகாட்டிய இந்த இரண்டு கேள்விகளும் ஒரே நிமிஷத்திற்குள் நடந்த சம்பவத்தை விளக்குகிறபடியால், கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் குணப்படுதலும் தற்பிரதிஷ்டையும் ஏககாலத்திலேயே சம்பவிக்குமா? அல்லது குணப்படுதல் நடந்து சிலகாலங்களுக்குப் பின்தான் தற்பிரதிஷ்டை ஜீவியம் ஆரம்பிக்குமா? என்ற கேள்வி வருகிறது. இவ்விரண்டிற்கும் இடையில் சிலகாலம் செல்லவேண்டும் என்பது பிரமாணமல்ல. ஒருவனுடைய ஆத்துமா கிறிஸ்தேசுவைப்பற்றும் அறிவினால் பிரகாசிக்கப்பட்ட க்ஷணத்திலேயே அவரையே தன் எஜமானாக ஒப்புக்கொள்ளுதலும் தன்னை முற்றிலும் அவருக்கு ஒப்புக்கொடுத்தலும் உண்டாகக்கூடும். ஆனால் அப்போஸ்தலனுடைய காரியத்தைக் கவனிக்கும்போது, குணப்படுதலுக்குமுன் அவரில் காணப்பட்ட சிறந்த தேவபக்தி, மார்க்க வைராக்கியம் ஆகிய இவைகள் அவரை முன்னமே ஆயத்தப்படுத்தி கிறிஸ்துவின் அழைப்புக்காகமாத்திரம் அவர் காத்துக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இவ்வித முன் ஆயத்தம் இல்லாதவர்களுடைய விஷயத்தில் தேவனை அறிதலும் அவருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தலுமாகிய ஜீவிய அநுபவங்கள் வெவ்வேறு காலத்தில் நடக்கிறவைகளாயிருக்கலாம். இஸ்ரவேல் ஜனங்களுடைய சரித்திரத்தைப் பார்ப்போம் (1 கொரி 10, 11) சிவந்த சமுத்திரத்துக்கும் காதேஸ்பர்னேயாவுக்கும் இடையில் 18 மாசகாலம் சென்றதென்றறிவோம். மனத்தைரியமுள்ள சிலர் யுத்தத்தினிமித்தம் மனமடிவாகாமல் கானானுக்குச்செல்லும் நேர்வழியாகப் போய் மூன்று நாளில் வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரித்திருக்கலாம். ஆனால் அவிசுவாசமும் அதைரியமுமுள்ள மிச்சமானவர்களுக்குப் பதினெட்டுமாச ஆயத்தம் அவசியமாயிருந்தது. பரி. பவுல் மூன்றுநாளைக்குள் தன்னுடைய தற்பிரதிஷ்டை கேள்விக்கு உத்தரவைப்பெற்று தன்னை ஒப்புக்கொடுத்துவிட்டார். இவரைப்போல் எங்கள் ஜீவியத்தில் காரியங்கள் நடைபெறக்கூடிய பலர் உண்டு. இருப்பார்கள். ஆனால் மிச்சமானவர்களுடைய அநுபவம் இஸ்ரவேலருடைய அநுபவத்தைப்போல்தானிருக்கிறது. ஆகை

யால் எல்லாருடைய ஜீவியத்தின் அனுபவமும் ஒன்றுபோலிருக்குமென்று எண்ண இடமில்லை. ஆனால் ஒவ்வொருவனுடைய ஜீவியத்திலும் இந்த இரண்டு அனுபவமும் உண்டு. குணப்படுதல், பிரதிஷ்டை.

குணப்படுதல் திடீரென்று நடக்கிற ஓர் சம்பவமா? அல்லது படிப்படியாய் நடக்கிறதா? உவில்லியம் கார்னல் என்னும் பக்தன் தமது ஜீவியத்திலும் இவ்வித சந்தேகம் உண்டாகிக் கடைசியாக, சூரிய வெளிச்சத்தைக் காணாமல் அந்தகாரத்துக்குள் பலகாலம் இருந்தபோதிலும், அது (சூரிய) வெளிச்சம் எப்போது உன் ஜீவியத்தில் காணப்பட்டது என்பது உனக்குத் தெரியவேண்டும்' என்று எழுதி வைத்திருக்கிறார். பிலிப்பிய சிறைச்சாலைக்காரனைப்போல ஒருவனுடைய உண்மை திடீரென்று பிரகாசமடையலாம். நிக்கொதேமைப்போல ஒருவனுடைய உண்மை படிப்படியாய்ப் பிரகாசமடையக்கூடும்.

தற்பிரதிஷ்டையும் குணப்படுதலைப்போலவே ஒருவனுடைய ஜீவியத்தில் காணப்படும் ஓர் விசேஷ சம்பவம். இவ்விரண்டிலும் மனுஷனுடைய ஆத்துமா தேவனோடு ஐக்கியமடைகிறது. இவ்விரண்டிலும் தேவ கிருபை விளங்குகிறது. விசுவாசமானது அந்தக் கிருபையைப் பெற்றுக் கொள்ளுகிறது. இவ்விரண்டும் ஓர் மனுஷனுடைய ஜீவியத்தில் ஞாபகப்படுத்தக்கூடியதும் மாறுதலடையாததுமான சம்பவங்களாக இருக்கவேண்டியவை. தற்பிரதிஷ்டையானது பரி. பவுலின் ஜீவியத்தில் நடந்தது போல ஏககாலத்தில் சம்பவிக்கிறதா? அல்லது படிப்படியாய் நடக்கிறதா? என்பதைப்பற்றி நாம் விசாரிக்க அவசியமில்லை. நீ உன்னை முற்றிலும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறாயா? அல்லது ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? என்ற கேள்விக்கு உன் ஜீவியத்தின் நடபடிக்கைகளே உத்தரவாயிருக்கின்றனவா? இதுதான் காரியம்.

பரி. பவுலின் ஜீவியம் நித்திய ஜீவனையடையும்படி இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தமானால், அவர் கேட்ட கேள்விகள் மட்டுமல்ல, அந்தக் கேள்விகளுக்குக் கிடைத்த உத்தரவுகளும் நமது ஜீவியத்துக்கு மாதிரியாயிருக்கவேண்டும். தற்பிரதிஷ்டைக் கேள்விக்குக் கிடைத்த உத்தரவைக் கவனிப்போம். நீ அவருக்குச் சாட்சியாயிருப்பாய் அப். 22: 16 அவருடைய ஜீவிய முழுவதும் கிறிஸ்துவுக்குச் சாட்சி பகர்வதே. இதுவே அவருடைய ஜீவியத்தை நடத்தினது. அவருடைய வார்த்தைகள், பிரசங்கங்களைப் பெலப்படுத்தினது, ஆவிக்குரியதாக்கினது. அவருடைய பிரயாணங்களை நடத்தினது. அவருடைய ஜீவியத்தை முழுவதும் நிரப்பினது. நமது ஜீவியத்திலும் இவைகள் விளங்கினால் மட்டும் நாம் நம்மைப் பிரதிஷ்டை செய்திருக்கிறோம் என்னலாம்.

1. அவர் தம்மைக் குறித்துக் கொடுக்கும் சாட்சியைக் கவனித்தால் அதில் தற்பிரதிஷ்டை விளங்கும். "உடனே நான் மாம்சத்தோடும் இரத்



தத்தோடும் யோசனை பண்ணவில்லை" என்கிறார். "வேறே ஆண்டவன்மார் எங்களை ஆண்டார்கள்" ஏசா. 26. 13. இது பழைய ஜீவியம். இனிமேல் மற்ற ஆண்டவன்மார் மரித்துப்போக தேவன் ஒருவரே, அவருடைய திவ்ய சத்தமே என்னை ஆளுவதாக. உம்முடைய நாமத்தையே சொல்லிக் கைவெடுப்போம். இனி நான் அல்ல, கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார். "கிறிஸ்து எனக்கு ஜீவன்" பூரண பிரதிஷ்டையின் பலன் இதுவே. மறு பிறப் படைக்கபோதே தன்னை இவ்விதமாய்க் கர்த்தருக்குப் பிரதிஷ்டை பண்ணும் ஆத்துமா எவ்வளவு பாக்கியமானது. தம்மைக் குறித்துச் சாட்சி கொடுத்தது மட்டுமல்ல, தன் வார்த்தைகளைக் கேட்கிறவர்கள் தம்மைப்போல் கிறிஸ்துவைப் பின் பற்றுகிறவர்களாக வேண்டும் என்றும் அழைக்கிறார். இது தம்மைக் குறித்துப் பெருமையாக எண்ணாமலும், துணிகரமாக இந்த அழைப்பைக் கூறாமலும், தம்மில் விளங்கிய தேவ கிருபையே இவ்வித சாட்சி கூறத் தன்னைப் பெலப்படுத்துகிறது என்கிறார். இவ்வித அழைப்பை ரோமாபுரிச் சபையாருக்கு வேறு விதமாய் கூறுகிறார். ரோமர். 12. 1. "சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்" என்கிறார். "நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து தேவனோடே ஒப்புரவாகுங்களென்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்" (II கொரி. 5 20) குணப்படுதலுக்கு இவ்வாக்கியத்தில் அழைக்கிறதுபோல தற்பிரதிஷ்டைக்கு மேற்கண்ட வாக்கியத்தில் அழைக்கிறார். பிரதிஷ்டை அழைப்பில் "சகோதரரே" என்று அழைக்கிறார். மனந்திரும்பித் தேவனுடைய வீட்டாரானவர்களை அவருடைய இரக்கங்களுக்குப் பாத்தியஸ்தராகச் சகோதரரே என்றழைக்கிறார். தேவனை அறிந்து, மறு ஜனன முழுக்கினாலும் பரிசுத்தாவியின் புதிதாக்குதலினாலும் அவருடைய கிருபையைப் பெற்றுக்கொண்டவர்களைப் பிரதிஷ்டைக்கு அழைக்கிறார். ஆகையால் தேவ கிருபையால் தங்கள் ஜீவியம் மாறுதலடையாதவர்களுக்கு இந்த அழைப்பில் பங்கில்லை என்பது தெளிவாகிறது.

II "உங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்" ஒப்புக்கொடுங்கள் என்பது ஓர் திட்டமான கிரியையைக் காட்டுகிறது. மூல பாஷையின் கருத்தைக் கவனித்தால் ஓரேதரம் முடிவாகச்செய்கிற ஓர் செய்கையைக் குறிக்கிறது. கொடுத்துவிடல் கையளித்தல் ஒப்புக்கொடுத்தல் இவைகள் ஒரு ஆள் தன் வசமிருக்கிறதை இன்னொருவர் வசம் விட்டுவிடுகிறதைக் குறிக்கிறது. இந்த வார்த்தைகளின்படி ஒப்புக்கொடுத்தல் என்றால் கொஞ்சம் கொஞ்சமாக அல்லது படிப்படியாய் நடக்கிற ஓர் கிரியையைக் காட்டாமல் ஒரே சமயத்தில் முடிவாய் நடக்கிற கிரியையைக் காட்டுகிறது.

பின் எகிப்து தேசத்தில் தாங்கள் நிலைபெற்றிருக்கலாம் என்னும் எண்ணம் அவர்களுக்குள் உண்டானபோது, தாம் மாறாதவர் என்றர்த்தங்கொள்ளும், 'ஏகோவா' என்னும் நாமத்தால் தம்மை வெளிப்படுத்தினார். அதன்பின் மற்ற ஜாதிகளால் அவர்கள் நெருக்கமடைந்த காலத்தில் 'சேனைகளின் கர்த்தர்' என்னும் நாமத்தால் தம்மை வெளிப்படுத்தினார். ஆனால் இப்போது அவர்களுக்குள் பாவம் பெருகியிருந்த இக்காலத்தில், அவருடைய பரிசுத்தத்தின் மேன்மையே தீர்க்கதரிசிக்கு முன்பாகக் காட்டப்பட்டது.

1. **தரிசனம்.** அந்திப்பலி செலுத்தும் நேரமான சாயங்காலமாயிருக்கலாம். ஏசாயா தேவாலயத்தில் தொழுதுகொள்ள வரும் கூட்டத்தோடு ஆலயத்தின் அலங்கார வாசல்வழியாய் வருகிறான். அவனுக்கு எதிரே, பெரிய வெண்கலப் பலிபீடமும், ஆசாரியர் தங்களைக் கழுவிக்கொள்ளும் கடற்றொட்டியும் இருந்தன. இவைகளைக் கடந்துபோனால் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும் கேதுரு மரப் பலகைகளுள்ள கதவுகளிருந்தன. ஜனங்கள் வெளியே காத்திருக்கையில், உட்பிரவேசித்துத் தூபம் காட்டப்போகும் ஆசாரியனுக்கு இவைகள் முன்னால் காணப்படும். வெண்ணாங்கி தரித்த லேவியரின் கூட்டம் இரு பக்கங்களிலும் நின்று கீதம் பாடிக்கொண்டிருக்க தூபம் ஆகாயத்தில் எழும்பும். இது ஓர் மாட்சிமையான காட்சி! ஆனால் தீர்க்கதரிசிக்கு இன்னோர் காட்சி வெளிப்பட்டது. கண்ணுக்குத் தெரிந்த இந்த ஆலயத்திற்குப் பதிலாகக் காணக்கூடாத நித்திய ஆலயம் அவனுக்குப் புலப்பட்டது. பலிபீடம், உடன்படிக்கைப்பெட்டியாகிய இவைகளுக்குப் பதிலாகப் பரலோகத்தில் வைக்கப்பட்ட தேவனுடைய சிங்காசனம் காணப்பட்டது. தூபத்திற்குப் பதிலாக ஆகாயத்தின் மகிமையும் லேவியரின் கீதத்துக்குப் பதிலாகச் சேராபீன் கூட்டத்தாருடைய கீதமும் அவன் காட்சிக்குத் தென்பட்டது.

சேராபீன்களின் கூட்டத்தார் பாடின பாட்டானது திரியேக தெய்வத்தை அவர்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள் என்று காட்டிற்று. ஆனால் இவைகளின் கருத்து அவர்களுக்குத் தெரிந்ததைப் பார்க்கிலும் நமக்கு நன்றாய்த் தெரியவேண்டும். என்றாலும் அவர்களுக்குத் தெரியாத ரகசியங்கள் அவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியவைதான். தேவனுடைய பிதாவின் பரிசுத்தம் மனுஷருக்குப் பயத்தையும் எச்சரிக்கையையும் கொடுக்கக்கூடியது. சீனாய் மலையில் விளங்கின மேகம், மின்னல், இடிமுழக்கம் இவைகள் இஸ்ரவேலருக்குத் திகிலையுண்டாக்கிற்று. தேவனுடைய பரிசுத்த ஆவியின் பரிசுத்தம் மனிதராகிய நமக்குப் புலப்படக்கூடாததுதான். ஆனால் தேவனுடைய குமாரனுடைய பரிசுத்தமோ மனிதராகிய நாம் காணத்தக்கதாக மனித ரூபத்தில் வெளிப்பட்டது. சேராபீன் கூட்டத்தாருடைய ஸ்தோத்திரங்களை ஏற்றுக்கொண்ட அவரே, கலிலேயருக்குள்ளே சிறுவரைத் தம்மண்டையில் சேர்த்து அணைத்துக்கொள்ளவும், வெட்கப்போனவர்கள் தமது

பாதத்தைத் தொட்டுக் கழுவவும், தீட்டாயெண்ணப்பட்டவர்களோடு பழ
கிச் சம்பாஷிக்கவும் இடங்கொடுத்தார். இதுதான் நமது புத்திக்கு
விளங்கக்கூடிய பரிசுத்தம். இவருடைய பரிசுத்தத்தை நாமும் சுதந்தரிக்க
வாஞ்சிக்கும்போதுதான் அவர்தாமே நம்மைப் பார்த்து, 'நான் பரிசுத்தர்,
நீங்களும் பரிசுத்தராயிருங்கள்' என்றுரைக்கிறார். பரிசுத்தராகிய அவர்
தாமே நம்மில் வாசம்பண்ணினால் மாத்திரம் நாமும் பரிசுத்தத்தை அடைய
லாம். பட்சிக்கிற அக்கினியாயிருக்கிற அவர்தாமே தமது குமாரனின் மூல
மாய் நம்மில் வாசம்பண்ணும்போது நாமும் பரிசுத்தாவியின் வல்லமையால்
மற்றவர்களைப் பரிசுத்தம்பண்ணுகிற அக்கினிகள் ஆகலாம்.

2. **அறிக்கை.** ஐயோ! அதமானேன். சேராபீன்கள் கர்த்தரைத்
தங்களுடைய உதடுகளால் போற்றுகிறதையும் தான் தன் உதடுகளை உபயோ
கிக்கிற வகையையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது தன்னுடைய அசுத்தத்தை
உணருகிறார். அவர்கள் தங்கள் உதடுகளால் தேவனை, 'பரிசுத்தர், பரிசுத்
தர், பரிசுத்தர்' என்று போற்றுகிறார்கள். நானோ தன் உதடுகளால் கேவல
மான, தீமையான வார்த்தைகளைப் பேசித் தன் பொல்லாத இருதயத்திலி
ருந்து இவைகளெல்லாம் புறப்படுகிறதே என்று தன்னைத் தாழ்த்துகிறார்.
தன் வார்த்தைகளாலேயே தான் நியாயந்தீர்க்கப்படுவேன் 'என்றும், தான
பேசின வார்த்தைகளுக்காகக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்' என்றும் அறிக்
தான். இவ்விதமாய்த் தன்னை அசுத்தன், அபாத்திரன் என்று அறிக்கை
செய்த அதே நேரத்தில், ரத்தமும் நெருப்பும் அவனைச் சுத்திகரிக்கும்படி
அருளப்பட்டது. நெருப்புத்தழலில் ரத்தம் இருந்தது. எப்படியென்றால்,
பலி மாம்சத்தின் ரத்தம் தழலில் வடிந்து உந்தத் தழல் ரத்தம் சேர்ந்ததாயி
ருக்கவேண்டும். ஆகையினால்தான் சேராபீன் அவனைப் பார்த்து, உன்
பாவம் நிவிர்த்தியானது என்கிறான். தழலில் எரிந்துகொண்டிருந்த நெருப்
பும் இருந்தது. தீர்க்கதரிசியின் உதடுகளைத் தழலால் தொடும்போது அக்
கினித் தழலாகத்தான் இருந்தது. நம்மையும் சுத்திகரிக்கக் கல்வாரியும்
பெந்தெகொஸ்தும் தேவை. நமக்குப் பாவமன்னிப்பும் அக்கினி அபிஷே
கமும் தேவை. தேவதூதன் உன் பக்கத்தில் பறந்துவருவதை நீ காண
மாட்டாய் மெய்தான். என்றாலும் மெய்மனஸ்தாபமும் பாவஅறிக்கையும்
உன்னிலிருந்து புறப்பட்ட அதே நிமிஷத்தில், பரலோகத்தில் அதன்
பலன் உடனே புறப்படுகிறது என்பதை நிச்சயமாய் நம்பு.

3. **கட்டளை.** தீர்க்கதரிசி நிறைவேற்றும்படி அழைக்கப்பட்ட
ஊழியம் அவனுக்குப் பிரியமானதல்ல. அவனுடைய பிரசங்கத்தின்
பலன் ஒன்றுமிராதென்றும் அவனுக்கே அது கெடுதியாயிருக்குமென்றும்
அறிவிக்கப்பட்டது. எவ்வளவுக் கதிகமாய்க் கேட்கிறார்களோ, அவ்வளவுக்
கதிகமாய் அவர்கள் இருதயம் கடினப்படும். அவர்கள் வெளிச்சத்தை
வெறுப்பார்கள். முன்னிலும் அதிகமான குருட்டாட்டத்துக்கும் இருதயக்

வாற்கோதுமை அப்பம் கொடுக்கப்பட்டது. ஆனால் நமது ரட்சகர் இந்தச் சாதாரண போஜனத்தைக்கொண்டு இந்தப்பெரிய அற்புதத்தைச் செய்தது நாம் கவனிக்கத்தக்கது.

ஐயாயிரம்பேரைப் போஷித்த இவ்வற்புதம் நாலு சுவிசேஷங்களிலும் சொல்லப்படுகிறது. கிறிஸ்துநாதர் தமது கடைசி நாட்களில் செய்த அற்புதங்கள் தவிர, மற்றவைகளில் இந்த ஒன்றுமாத்திரம் நாலு சுவிசேஷகராலும் சாட்சி பெற்றிருக்கிறது. ஐயாயிரம் பேரைப் போஷித்த அற்புதமும், நாலாயிரம்பேரைப் போஷித்த அற்புதமும் ஆகிய இவ்விரண்டும் ஒரே அற்புத கிரியைதான், வெவ்வேறிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று ஓர் பலத்த ஆட்சேபனையுண்டு. ஆனால் பின்வரும் காரியம் இதை நிராகரித்து சுவிசேஷ சரித்திரத்தை உறுதிப்படுத்துகிறது. சில வருஷங்களுக்குமுன் அந்தியோகியாவில் அரபியரால் ஓர் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டு அந்தப் பாத்திரம் இப்போது பிரான்சு தேசத்திலுள்ள பாரீஸ்மாநகரில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த பாத்திரத்தில் கிறிஸ்துநாதர், அவருடைய பத்து அப்போஸ்தலர்கள், ஐயாயிரம்பேரைப் போஷிக்கும்போது உபயோகித்த ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும், நாலாயிரம்பேரைப் போஷிக்கும்போது உபயோகித்த ஏழு அப்பங்கள். இவைகளின் சித்திரங்கள் பிரத்தியேகமாய் வரையப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டும் இரண்டு வித்தியாசமான அற்புதங்கள் என்பதற்கு இது ஓர் சிறந்த தெளிவான சாட்சி. அந்தப் பாத்திரத்தின் தன்மையைப் பார்க்கும்போது கி. பி. 55-ம் வருஷத்திற்கும் 85-ம் வருஷத்திற்கும் இடையில் வழங்கப்பட்ட பாத்திரங்களின் வடிவமும், அக்காலத்துப் பாத்திரங்களுக்குரிய சித்திரமும் இருக்கிறதாகக் காண்கிறார்கள். இந்த வருஷங்களில் அப்போஸ்தலனாகிய பரி. யோவானும் இவ்வற்புதங்களில் பங்குபற்றிய சிலரும் உயிரோடிருக்கவேண்டும்.

இவ்விரண்டும் இரண்டு வித்தியாசமான அற்புதங்கள் என்பதற்கு உள்ளான ஆதாரங்கள் நமக்குண்டு. முதல் அற்புதம் யூதருடைய நாடாகிய கலிலேயாவில் நடந்தது. இரண்டாவது அற்புதம் தெக்கப்போலி என்னும் புறஜாதியார் நாடுகளில் நடந்தது. யூதருக்கும் புறஜாதியாருக்கும் கிறிஸ்துவே ஜீவ அப்பம் என்பதைக் காட்டுகிறது. முதல் அற்புதம் பஸ்கா பண்டிகைக்காக எருசலேமுக்குப் போகும் வழியில் கூடின யூதருக்காகச் செய்யப்பட்டது. (யோ. 6–4) அச்சமயத்தில் ஜனங்கள் உட்கார்ந்திருந்த தரை புல்லுள்ளதாயிருந்தது (மாற். 6, 39) இரண்டாம் அற்புதம் நடந்த காலம் வருஷத்தில் பிந்தினகாலம். அச்சமயத்தில் ஜனங்கள் புல் காய்ந்துபோனபடியால் தரையின்மேல் உட்கார்ந்தார்கள் என்றிருக்கிறது. மேலும் யூதருடைய நாட்டில் நடந்த முதலாம் அற்புதத்தில் யூதருடைய வழக்கத்தின்படியே ரட்சகர் ஒருதரம் மட்டும் ஆசீர்வாதம் கூறியிருக்கிறார். ஒரு வேளை



அப்பத்தைமாத்திரம் யூதர் வழங்கும் ஆசீர்வாத வார்த்தைகளைச்சொல்லி ஆசீர்வதித்திருப்பார். ஆனால் புறஜாதியார் நாட்டில் நடந்த அற்புதத்தில் அப்பத்தைத் தனியாயும் மீனைத் தனியாயும் ஆசீர்வதித்ததாகச் சொல்லியிருக்கிறது.

இதுமாத்திரமல்ல, இவ்விரண்டு அற்புதங்களிலும் உபயோகித்த கூடைகள் வித்தியாசமானவை. இந்த வித்தியாசத்தை நெருங்கிப் பார்க்கலாம். கலிலேயா அற்புதத்தில் வழங்கின கூடை சமீபமான ஓரிடத்துக்குக் கொண்டுபோகத்தக்கதானதும் கிரேக்கு பாஷையில் (கொபைனுஸ்) என்று சொல்லப்பட்டதுமான கூடை. புறஜாதியார் நாட்டில் நடந்த இரண்டாம் அற்புதத்தில் வழங்கின கூடை சந்தைக்குக் கொண்டுபோகத் தக்கதான (ஸ்புரிஸ்) என்னும் பெரிய கூடை. இவ்வித கூடை நீண்ட பிரயாணத்துக்கு மட்டும் உபயோகிக்கிறது. நமது ரட்சகர் இந்த அற்புதங்கள் நடந்து சில காலத்திற்குப்பின் சீஷரிடத்தில் இதைப்பற்றி கேள்விகேட்ட சமயத்திலும் இந்த இரண்டு வித்தியாசமான கூடைகளைக் குறிக்கும் வார்த்தைகளையே உபயோகப்படுத்துகிறார். முதல் கேள்வியில் கொபைனுஸ் என்ற பதத்தையும், இரண்டாம் கேள்வியில் ஸ்புரிஸ் என்னும் பதத்தையுமேயே உபயோகித்திருக்கிறார் பரி. மாற். 3. 19. 20.

---

## ஊமையன் பேசுகிறான்

சீன தேசத்திலுள்ள சுங்கிங் என்னும் இடத்தில் ஓர் ஸ்திரீ தன் புருஷனைக் கொலை செய்துபோட்டாள். அந்த மனுஷனுக்கு முந்தின மனைவியின் மூலமாய்ப் பிறந்த ஓர் ஆண்பிள்ளை அவனோடு இருந்தான். அந்தப் பையனுக்கு வயது 8. தன் புருஷனைக் கொலை செய்த குற்றத்தைப் பையன் வெளியில் சொல்லிவிடுவான் என்று பயந்து அவனுடைய நாக்கை வெட்டிப்போட்டு அவன் கையை ஓர் ஆணியால் வீட்டிலுள்ள ஓர் மரத்தோடு சேர்த்து அடித்துவிட்டாள். அவன் இறந்துபோனான். பையன் பெரியவனானான். அந்தப் பட்டணத்தில் நடந்துகொண்டிருந்த சுவிசேஷ பிரசங்க கூட்டத்துக்கு அடிக்கடி பிரியத்தோடு போனான். ஒரு நாள் இரவு நடந்த கூட்டத்தில் ரட்சிப்பின் சத்தியத்தால் மிகவும் உணர்வடைந்துதான் கிறிஸ்துவை அறிக்கையிடவேண்டியது தன் கடமையென்பதைப் பலமாய் உணர்ந்து கூட்டத்தின் மத்தியில் எழுந்து பேச ஆரம்பித்தான். முதலில் வார்த்தைகள் உளறி உளறிப்பேசினான். வரவரச் சற்று தெளிவாகிக் கடைசியில் அவன் பேசினது விளங்கக்கூடியதாயிற்று. 19வருஷம் பேச[illegible]னவன் இன்றைக்கும் கிறிஸ்துவைக் [illegible]ன்.

வார்க்கோதுமை அப்பம் கொடுக்கப்பட்டது. ஆனால் நமது ரட்சகர் இந்தச் சாதாரண போஜனத்தைக்கொண்டு இந்தப்பெரிய அற்புதத்தைச் செய்தது நாம் கவனிக்கத்தக்கது.

ஐயாயிரம்பேரைப் போஷித்த இவ்வற்புதம் நாலு சுவிசேஷங்களிலும் சொல்லப்படுகிறது. கிறிஸ்துநாதர் தமது கடைசி நாட்களில் செய்த அற்புதங்கள் தவிர, மற்றவைகளில் இந்த ஒன்றுமாத்திரம் நாலு சுவிசேஷகராலும் சாட்சி பெற்றிருக்கிறது. ஐயாயிரம் பேரைப் போஷித்த அற்புதமும், நாலாயிரம்பேரைப் போஷித்த அற்புதமும் ஆகிய இவ்விரண்டும் ஒரே அற்புத கிரியைதான், வெவ்வேறிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று ஓர் பலத்த ஆட்சேபனையுண்டு. ஆனால் பின்வரும் காரியம் இதை நிராகரித்து சுவிசேஷ சரித்திரத்தை உறுதிப்படுத்துகிறது. சில வருஷங்களுக்குமுன் அந்தியோகியாவில் அரபியரால் ஓர் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டு அந்தப் பாத்திரம் இப்போது பிரான்சுதேசத்திலுள்ள பாரீஸ்மாநகரில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த பாத்திரத்தில் கிறிஸ்துநாதர், அவருடைய பத்து அப்போஸ்தலர்கள், ஐயாயிரம்பேரைப் போஷிக்கும்போது உபயோகித்த ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும், நாலாயிரம்பேரை போஷிக்கும்போது உபயோகித்த ஏழு அப்பங்களும். இவைகளின் சித்திரங்கள் பிரத்தியேகமாய் வரையப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டும் இரண்டு வித்தியாசமான அற்புதங்கள் என்பதற்கு இது ஓர் போராந்த தெளிவான சாட்சி. அந்தப் பாத்திரத்தின் தன்மையைப் பார்க்கும்போது கி. பி. 55-ம் வருஷத்திற்கும் 85-ம் வருஷத்திற்கும் இடையில் வழங்கப்பட்ட பாத்திரங்களின் வடிவமும், அக்காலத்துப் பாத்திரங்களுக்குரிய சித்திரமும் இருக்கிறதாகக் காண்கிறார்கள். அந்த வருஷங்களில் அப்போஸ்தலனாகிய பரி. யோவானும் இவ்வற்புதங்களில் பங்குபெற்ற சிலரும் உயிரோடிருக்கவேண்டும்.

இவ்விரண்டும் இரண்டு வித்தியாசமான அற்புதங்கள் என்பதற்கு உள்ளான ஆதாரங்கள் நமக்குண்டு. முதல் அற்புதம் யூதருடைய நாடாகிய கலிலேயாவில் நடந்தது. இரண்டாவது அற்புதம் தெக்கப்போலி என்னும் புறஜாதியார் நாடுகளில் நடந்தது. யூதருக்கும் புறஜாதியாருக்கும் கிறிஸ்துவே ஜீவ அப்பம் என்பதைக் காட்டுகிறது. முதல் அற்புதம் பஸ்காபண்டிகைக்காக எருசலேமுக்குப் போகும் வழியில் கூடின யூதருக்காகச் செய்யப்பட்டது. (யோ. 6–4) அச்சமயத்தில் ஜனங்கள் உட்கார்ந்திருந்த தரை புல்லுள்ளதாயிருந்தது (மாற். 6, 39) இரண்டாம் அற்புதம் நடந்த காலம் வருஷத்தில் பிந்தினகாலம். அச்சமயத்தில் ஜனங்கள் புல் காய்ந்துபோனபடியால் தரையின்மேல் உட்கார்ந்தார்கள் என்றிருக்கிறது. மேலும் யூதருடைய நாட்டில் நடந்த முதலாம் அற்புதத்தில் யூதருடைய வழக்கத்தின்படியே ரட்சகர் ஒருதரம் மட்டும் ஆசீர்வாதம் கூறியிருக்கிறார். ஒரு வேளை



அப்பத்தைமாத்திரம் யூதர் வழங்கும் ஆசீர்வாத வார்த்தைகளைச்சொல்லி ஆசீர்வதித்திருப்பார். ஆனால் புறஜாதியார் நாட்டில் நடந்த அற்புதத்தில் அப்பத்தைத் தனியாயும் மீனைத் தனியாயும் ஆசீர்வதித்ததாகச் சொல்லியிருக்கிறது.

இதுமாத்திரமல்ல, இவ்விரண்டு அற்புதங்களிலும் உபயோகித்த கூடைகள் வித்தியாசமானவை. இந்த வித்தியாசத்தை நெடுகிலும் பார்க்கலாம். கலிலேயா அற்புதத்தில் வழங்கின கூடை சமீபமான ஓரிடத்துக்குக் கொண்டுபோகத்தக்கதானதும் கிரேக்கு பாஷையில் (கொபைனஸ்) என்று சொல்லப்பட்டதுமான கூடை. புறஜாதியார் நாட்டில் நடந்த இரண்டாம் அற்புதத்தில் வழங்கின கூடை சந்தைக்குக் கொண்டுபோகத் தக்கதான (ஸ்புரிஸ்) என்னும் பெரிய கூடை. இவ்வித கூடை நீண்ட பிரயாணத்துக்கு மட்டும் உபயோகிக்கிறது. நமது ரட்சகர் இந்த அற்புதங்கள் நடந்து சில காலத்திற்குப்பின் சீஷரிடத்தில் இதைப்பற்றி கேள்விகேட்ட சமயத்திலும் இந்த இரண்டு வித்தியாசமான கூடைகளைக் குறிக்கும் வார்த்தைகளையே உபயோகப்படுத்துகிறார். முதல் கேள்வியில் கொபைனஸ் என்ற பதத்தையும், இரண்டாம் கேள்வியில் ஸ்புரிஸ் என்னும் பதத்தையுமேயே உபயோகித்திருக்கிறார் பரி. மாற். 3. 19. 20.

## ஊமையன் பேசுகிறன்

சீன தேசத்திலுள்ள சூங்கிங் என்னும் இடத்தில் ஓர் ஸ்திரீ தன் புருஷனைக் கொலை செய்துபோட்டாள். அந்த மனுஷனுக்கு மூத்த மனைவியின் மூலமாய்ப் பிறந்த ஓர் ஆண்பிள்ளை அவனோடு இருந்தான். அந்தப் பையனுக்கு வயது 8. தன் புருஷனைக் கொலை செய்த குற்றத்தைப் பையன் வெளியில் சொல்லிவிடுவான் என்று பயந்து அவனுடைய நாக்கை வெட்டிப்போட்டு அவன் கையை ஓர் ஆணியால் வீட்டிலுள்ள ஓர் மரத்தோடு சேர்த்து அடித்துவிட்டான். அவன் இறந்துபோனான். பையன் பெரியவனானான். அந்தப் பட்டணத்தில் நடந்துகொண்டிருந்த சுவிசேஷ பிரசங்க கூட்டத்துக்கு அடிக்கடி பிரியத்தோடு போனான். ஒரு நாள் இரவு நடந்த கூட்டத்தில் ரட்சிப்பின் சத்தியத்தால் மிகவும் உணர்வடைந்துதான் கிறிஸ்துவை அறிக்கையிடவேண்டியது தன் கடமையென்பதைப் பலமாய் உணர்ந்து கூட்டத்தின் மத்தியில் எழுந்து பேச ஆரம்பித்தான். முதலில் வார்த்தைகள் உளறி உளறிப்பேசினான். வரவரச் சற்று தெளிவாகிக் கடைசியில் அவன் பேசினது விளங்கக்கூடியதாயிற்று. 19வருஷம் பேசக்கூடாமலிருந்த மனுஷன் இன்றைக்கும் கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறான்.

**யுத்தத்துக்குமுன் ஜெபம்.** வடபிரான்சில் நடந்த யுத்தமொன்றில் நமது போர்ச்சேவகர்கள் முன்சென்று தாக்கும்படி உத்தரவு பிறக்கவே, அத்தியக்ஷர் ஒருவர் பக்கத்திலிருந்து தேவ நடத்துதலுக்காகவும், ஆசிர்வாதத்துக்காகவும் ஜெபிப்போமென்று ஹேக் தளகர்த்தனைக் கேட்டாராம். தளகர்த்தர்-உத்தரவு கொடுக்கவே, சேனை முழுவதும் நிற்க அத்தியக்ஷர் ஜெபித்து சேனையை யுத்தத்துக்கு அனுப்பினர். யுத்தம் செய்திருக்கும் நன்மைகளில் இது ஒன்று.

**யுகண்டா சபை.** இச்சபை ஆப்பிரிக்காவின் மத்திய கீழ்பாகத்தில் சி. எம். எஸ். சங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நாலு அத்தியக்ஷர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். முதல் அத்தியக்ஷர் இரத்தசாட்சியாய் மரித்த பிஷப் ஹன்னிங்டன். இரண்டாவது ஜுரத்தினால் மரித்த பிஷப் பார்க்கர். மூன்றாவது இருபது வருஷம் அத்தியக்ஷராயிருந்த பிஷப் டக்கர். நாலாவது தற்காலத்தில் அத்தியக்ஷராயிருக்கிற பிஷப் உல்லிஸ். இச்சபை ஆளுகை சற்று விசேஷமானது. முதலாவது: சபை கவுன்சல். உபதேசியார் இதின் தலைவர். அவர் கைக்குள்ளிருக்கும் ஐந்தாறு சபையின் மூப்பர், உபாத்திமார் இதற்கு அங்கங்கள். ஞானஸ்நானம், திடப்படுத்தலுக்கு ஒப்புக்கொண்டு சிபார்சு செய்கிறவர்கள் இவர்களே. சபைவேலை, பள்ளிக்கூடவேலை, சுவிசேஷ பிரசங்கவேலை இவர்கள் பொறுப்பு. அதற்கப்பால் பாஸ்டரேட் கவுன்சில். குருவானவர் இதின் தலைவர். பாஸ்டரேட்டைச் சேர்ந்த கிராமங்களின் உபதேசிமார், லே ரீடர்கள், சபைப் பிரதிநிதிகள் இதின் அங்கங்கள். பாஸ்டரேட்டு முழுவதிலுமுள்ள சபை, பள்ளிக்கூட, சுவிசேஷ-வேலையை இவர்கள் விசாரிக்கிறவர்கள். அப்பால் டிஸ்டிரிக்ட் கவுன்சல். பல பாஸ்டரேட்டுகள் சேர்ந்த டிஸ்டிரிக்ட்டின் விஷயங்களை இக்கவுன்சலார் விசாரணை செய்வார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அத்தியக்ஷாதீன சினட். பயிற்சிசாலைகள், குருப்பட்ட மாணாக்கர் வகுப்பு-முதலிய பொதுக்கலாசாலைகள் சினட்வசமிருக்கிறது. பெண்களும் மெம்பர் தெரிந்து கொள்ளும் சீட்டுக்கொடுக்கலாம். ஸ்திரீகள் கிராமக் கமிற்றி ஒன்றுண்டாம். அக்கமிற்றிமாரே ஸ்திரீகளை ஞானஸ்நானத்துக்கும் திடப்படுத்தலுக்கும் சிபார்சு செய்யவேண்டும். அப்படியே ஸ்திரீகள் பாஸ்டரேட் கமிற்றி, ஸ்திரீகள், டிஸ்டிரிக்ட் கமிற்றி, ஸ்திரீகள் சினட் கமிற்றி உண்டு. ஸ்திரீகள் வேலையனைத்தையும் இக்கமிற்றிமார் மேற்பார்வையிடுவார்கள். இந்து தேச சபை இவ்வொழுங்கிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய விஷயங்கள் அநேகம்.

தமிழ்ச்சபைத் தீபிகை.

## நோட்டீஸ்

தற்காலத்துத் தபால் சட்டப்படி வி. பி. மூலமாய் அனுப்பப்படும் எதுவும் ரிஜிஸ்தர் செய்யப்படவேண்டும். அதினால் ஒரு பத்திரிகையின் பேரில் 2 அணா அதிகச் செலவாகும். ஆகையால் சந்தாதாரிய நண்பர்கள் இதைக்கவனித்து சந்தாப் பாக்கிகளையும் அடுத்த வருஷத்துச் சந்தாவை முன்டணமாகவும் மணியார்டர்மூலம் அனுப்ப கேட்கிறோம்.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

24

3-JAN 1921 MADRAS

October 1920. Registered No. M 136

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI அக்டோபர்மீ 1920

## மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை, மாம்ச சிந்தை மரணம். ரோ. 8: 7.

இரண்டு வகையான ஜனங்கள் உண்டு. மாம்சத்துக்குட்பட்டவர்கள் ஆவிக்குட்பட்டவர்கள் (வ. 9). மாம்சத்தின்படி நடக்கிறவர்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் (வ. 2, 4). மாம்ச சிந்தையுடையவர்கள், ஆவியின் சிந்தையுடையவர்கள் (வ. 6). ஆ, பாருங்கள், தேவனுடைய நினைவுகள் நம்முடைய நினைவுகளல்ல. சகல ஜனங்களையும் இரண்டு வகுப்பாகப் பிரிக்கும்போது, யூதனென்றும் கிரேக்கனென்றும் அவர் பிரிக்கிறதில்லை. கிறிஸ்துமார்க்கமென்றும், அஞ்ஞானமார்க்கமென்றும் அவர் பிரிக்கிறதில்லை. கல்விமானென்றும், கல்லாதவனென்றும் அவர் பிரிக்கிறதில்லை ஞானஸ்நானக்காரனென்றும், ஞானஸ்நானம் பெறாதவனென்றும் அவர் பிரிக்கிறதில்லை. மாம்ச சிந்தையென்றும் ஆவியின் சிந்தையென்றும் மாத்திரம் அவர் பிரிக்கிறார். மனுஷன் பார்க்கிறபடி அவர் பாரார். 'மனுஷன் முகத்தை பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்' (1 சாமு. 16: 7). 'கர்த்தர் இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார்' (நீதி. 21: 2). நம்முடைய எண்ணம், நினைவு, நோக்கம், சிந்தனைகளையெல்லாம் தம்முடைய தராசில் வைத்து, நிறுத்துப்பார்க்கிறார். சிந்தையிலே, இருதயத்திலே, உள்ளத்திலே, இந்த வித்தியாசம் காணப்படும். அதோ! ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர், கூடப்பிறந்த அண்ணன் தம்பி, ஒரே தகப்பனுடைய பிள்ளைகள், ஒரே வீட்டில் வளர்ந்தவர்கள், ஒரே மார்க்கத்தை அனுசரித்து வந்தவர்கள், பிறப்பில் வித்தியாசமில்லை, குடும்பத்தில் வித்தியாசமில்லை, வீட்டில் வித்தியாசமில்லை, பிறப்பில் வித்தியாசமில்லை, வளர்ப்பில் வித்தியாசமில்லை, கல்வியில் வித்தியாசமில்லை, மார்க்க சலாக்

கியங்களில் வித்தியாசமில்லை. ஆனால் இவனுக்கும் அவனுக்கும் மெத்த வித்தியாசமுண்டு. கர்த்தருடைய பார்வையில் மிகுந்த பேதமுண்டு. 'யாக்கோபைச் சிநேகித்து ஏசாவை வெறுத்தேன்' என்று ஆண்டவர் சொல்லுகிறார் (ரோ. 9:13). 'ஏசா யாக்கோபுக்குச் சகோதரனல்லவா? ஆனாலும் யாக்கோபை நான் சிநேகித்தேன், ஏசாவையோ நான் வெறுத்தேன்' (மல். 1, 2, 3). ஏன்? ஏசா மாம்ச சிந்தையுடையவன், பூமிக்கடுத்தவைகளை மாத்திரம் சிந்தித்தான். இந்த ஜடத்தைப் பேணிக்கொண்டான், இவ்வுலகத்தை நேசித்தான். போஜனப்பிரியனாய் இருந்தான். அவன் சிந்தையெல்லாம் உலக சிந்தை, இழிவான சிந்தை, மாம்ச சிந்தை. யாக்கோபோ ஆவியின் சிந்தையுள்ளவன், பரம காரியங்களை விரும்பினான். தேவாசீர்வாதத்தை வாஞ்சித்தான். மேலான நன்மைகளை நாடித்தேடினான். அவன் தவறுதல் உடையவன் என்றாலும் கர்த்தரைச் சார்ந்த ஆவிக்கடுத்தவைகளைச் சிந்தித்தான். இந்த வித்தியாசத்தினாலேயல்லவா, 'யாக்கோபைச் சிநேகித்து ஏசாவை வெறுத்தேன்' என்று தேவன் தீர்மானிக்கிறார்.

என் பிரிய சிநேகிதரே, உங்கள் சிந்தை எப்படிப்பட்ட சிந்தை? கர்த்தருடைய சந்நிதானத்தில் ஏறுகிறதா? பூமியை நோக்கிக்கொண்டே செல்லுகிறதா? ஐயோ, கிறிஸ்தவ சபையில் உலக சிந்தை, மாம்ச சிந்தை அதிகம். இவ்வுலகத்தை வெறுத்தவர்கள் எங்கே? ஆவியின்படி நடக்கிறவர்கள் எங்கே? பவுலப்போஸ்தலன் கொரிந்து சபையாரைச் சுற்றிப்பார்க்கும்போது ஆவியின் சிந்தை ஏகதேசம் மாத்திரம் தெரிந்தது. ஆகையால் அவர் பெருமூச்சுவிட்டு, "நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால் இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை" என்று புலம்புகிறார் (1 கொரி. 3:2). நம்முடைய சபைகளை நாம் எப்படிச் சொல்ல? மாம்ச சிந்தை இல்லையா? உலக சிந்தை இல்லையா? "நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? (1 கொரி. 3: 3) மோசம்! மோசம்! 'இது எங்கள் பெலவீனம், இதிலே நாங்கள் என்ன செய்யக்கூடும்? இதற்குப் போக்கில்லை' என்று சொல்லாதேயுங்கள். மாம்ச சிந்தை லேசான பாவமல்ல. மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை. மாம்ச சிந்தை மரணம். மாம்ச சிந்தையுடையவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். சகோதரனே, 'நீ தேவனைப் பகைக்கிறாய்! நீ யேசுவின் சத்துரு! பவுலப்போஸ்தலன் எலியாவைப் பார்த்துச் சொன்னதுபோல' எல்லாக்கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே! பிசாசின் மகனே! நீதிக்கெல்லாம் பகைஞனே! கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? '(அப். 13: 10) என்று நான் உங்களையும் கேட்கவேண்டும். மாம்ச சிந்தையுள்ளவனே நீ மனந்திரும்பிக் குணப்படாவிட்டால் சாவாய், நரகத்துக்குப் போவாய். ஏனென்றால் மாம்சசிந்தை மரணம். கொலைபாதகர் மாத்திரமல்ல, விபசாரக்காரர் மாத்திரமல்ல, குடிகாரர் மாத்திரமல்ல



3 - JAN 1921

மாம்ச சிந்தையுடையவர்களெல்லாரும் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டுப் புறம்பான இருளிலே பங்கடைவார்கள். ஏனெனில் மாம்ச சிந்தை மரணம். இந்தக் காரியம் விளங்கத்தக்கதாகச் சில குறிப்புகளை எடுத்துக்காட்டுகிறேன்.

I. **மேட்டிமையான சிந்தை எல்லாம் மாம்ச சிந்தை.** மேட்டிமையான சிந்தை ஆவியினால் பிறவாமல் மாம்சத்தினாலே உண்டாகிறது. அதின் தகப்பன் மாம்சம், தாயும் மாம்சம், ஜெனனம் மாம்சம். கிறிஸ்தவர்களுக்கு மேட்டிமையான சிந்தை வேண்டாம். 'மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்' (ரோ. 12.16). மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும், பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் (1 யோ. 2.16). அதாவது ஆவியினாலுண்டானவைகளல்ல, மாம்சத்தினால் உண்டானவைகள் என்று சொன்னாலும் சொல்லலாம். நம்முடைய ஆண்டவர், 'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்' என்று சொன்னாரே. 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. (ரோ. 8:9). கிறிஸ்துவின் சிந்தையில்லாதவன் அவருடையவனல. ஆகையால் மேட்டிமைச் சிந்தையுடையவன் அவருடையவனல்ல. பெருமைக்காரன் அவருடையவனல்ல. அகங்காரங்கொண்டவன் அவருடையவனல்ல. எல்லாப் பாவங்களிலும் மகா பிரபல்லியமான பாவம் இதுவே. பெருமை, அகந்தை, அகங்காரம் எந்ததேசத்திலும் அதைக் காணலாம், எந்த ஊரிலும் அதைப் பார்க்கலாம், எந்தச் சபையிலும் அதைக் கவனிக்கலாம். ஒரு ஊரில் முக்கியமான மனுஷன் சபையில் பிரிவினையுண்டாக்கியிருக்கிறான். காரணமென்ன? தன்னைவிட மற்றவர்கள் அதிகச் சங்கப்பணம் கொடுக்கக்கூடாதாம். சபையில் சிலர் அதிகமான சங்கப்பணம் கொடுக்க மனதுள்ளவர்களாயிருக்கிறதை அறிந்து தனக்குப் பெரிய அநியாயம் நேரிட்டதுபோல நினைத்துப் பிரிவினை செய்திருக்கிறான். பெருமை அல்லவா? இன்னொரு ஊரில் சபையான் ஒருவன் வண்டியில் ஏறிப்போகும்போது தலத்து ஐயரைக் கண்டான். குருவானவரோ அவனைக் காணாமலும் இன்னான் என்று அறியாமலும் தன்வழியே போய்விட்டார். அதினாலே அந்த மனுஷன் விசனப்பட்டு, 'குருவானவர் என்னோடு பேசவில்லையே' என்று சொல்லி இனிமேல் கோவிலுக்கு வரமாட்டேன் என்று சாதித்துப்போட்டான். குருவானவர் இதை அறிந்தவுடனே 'நான் உம்மை இன்னாரென்று அறியவில்லையே. அறிந்தேனானால் எப்படியும் பேசியிருப்பேன், சுகத்தை விசாரித்திருப்பேன்' என்று நலவு பேசினபோதிலும் அவன் பெருமை கொண்டு தேவாலயத்துக்கு வருவதை நிறுத்தினான். கர்வம், அகந்தை, மாம்ச சிந்தையல்லவா? இரண்டு ஸ்திரீகளுக்குள் மனஸ்தாபம். இவள் வீட்டுக்கு அவள் வரமாட்டாள். அவள் வீட்டுக்கு இவள் போகமாட்டாள்

சமாதானமாயிருக்கின் என்று புத்தி சொல்லும்போது 'அவள் என் வீட்டுக்கு வந்து மன்னிப்புக் கேட்கவேண்டும், இல்லை, இவள் என் வீட்டுக்கு வந்து நல்ல வார்த்தை சொல்லவேண்டும் என்று சொல்லி இரண்டுபேரும் பிதற்றினார்கள். பெருமைச் சுபாவம் அல்லவா? ஒரு பெண்பிள்ளை பட்டுச் சேலை வாங்கிப் போட்டுக்கொண்டு கோவிலுக்கு வருகிறாள். அடுத்த வீட்டுக்காரி பெருமைகொண்டு 'என்னைவிட இவள் பெரியவளா?' என்று சொல்லிக்கொண்டு, கடன் வாங்கியாவது தானும் பட்டுச்சேலையைச் சம்பாதிக்கப் பிரயாசப்படுகிறாள். ஐயோ! பெருமை! பெருமை! பெருமை! 'பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது' (1 பேது. 3:3, 4) என்று அறியீர்களா?

பிரியமான ஜனங்களே! மாம்சசிந்தை மரணம். மேட்டிமைச்சிந்தை நரகத்தில் தள்ளிவிடும். நரகம் உண்டானதற்குக் காரணமென்ன? சாத்தானும் அவன் தூதர்களும் ஒரு காலத்தில் மோட்சலோகவாசிகளாயிருந்தார்களே? தேவனுடைய சன்னிதானத்தில் நின்று பாக்கியமடைந்து பரிசுத்த சந்தோஷங்களை அனுபவித்து கர்த்தருக்கு ஊழியம்செய்தார்களே! அந்த உயர்ந்த பதவியிலிருந்து எப்படி விழுந்தார்கள்? மேட்டிமைச்சிந்தை அவர்களுக்கு உண்டாயிற்று. தேவனைப்போலாவோம் என்று கலகம் செய்தார்கள் அதினாலே மோட்சத்திலிருந்து தள்ளுண்டு நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்துவைக்கப்பட்டார்கள். மேட்டிமைச்சிந்தையானது மோட்சத்தை அடைத்து நரகமுண்டாக்கிற்று மோட்சவாசிகள் நரகவாசிகளாகும்படி செய்தது. பரிசுத்த தேவதூதர்களைப் பொல்லாத பிசாசுகளாக்கிற்று. சந்தேகமில்லை. மாம்சசிந்தை மரணம். இவ்வுலகத்தில் மரணம் வந்ததற்குமுகாந்தரம் என்ன? மேட்டிமைச்சிந்தையல்லவா? 'நீங்கள் தேவனைப்போலாவீர்கள்' என்று பிசாசு சொன்ன வஞ்சக வசனத்தை நம்பி, பெருமைகொண்டு நம்முடைய ஆதித்தாய் தகப்பன்மார், விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்துக்கொண்டார்கள். அதினாலே சாபமும் மரணமும் துன்பமும் பூலோகத்தில் வந்தது. ஆ! இப்படிப் பார்த்தால் பெருமை என்னும் பாவம் மகா பொல்லாத பாவம். நல்ல பாம்பின் விஷத்தைப்பார்க்கிலும் மகா மோசமானது. பெருமைக்காரன் மோட்சத்துக்குப் போகமாட்டான். ஆண்டவருடைய சன்னிதானத்தில் பிரவேசிக்கமாட்டான். 'மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்'. கையோடே கைகோர்த்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான் (நீதி. 16: 5). மற்றோர் தப்பினாலும் அவன் தப்பவேமாட்டான்.



'மேட்டிமையான பார்வையும் அகந்தையான மனமுமுள்ள துன்மார்க்கர்போடும் வெளிச்சம் பாவமே' (நீதி 21: 4). அவர்கள் பக்தி வேஷம் தரித்துக்கொண்டு ஜெபம்பண்ணி மற்றவர்களுக்குப் போதித்தாலும் அது பாவமேயல்லாமல் வேறல்ல. (இன்னும் வரும்.) T. W.

---

## திருநெல்வேலி சி. யம். எஸ், நூற்றாண்டுற்சவம்

கர்த்தருக்குச் சித்தமானால் 1921-ம் வருஷம் பெப்ருவரி மாசம் 15ௗ செவ்வாய் சாயங்காலமுதல் 18ௗ வெள்ளி சாயங்காலம்வரை நூற்றாண்டுற்சவக் கொண்டாட்டம் பாளையங்கோட்டையில் நடைபெறும். இந்தியாவிலுள்ள பல அத்தியக்ஷர்மாரும், பக்கத்து மிஷன் சங்கங்களின் பிரதிநிதிகளும், திருநெல்வேலி சபையாரில் உத்தேசம் 5000 முதல் 8000 வரை ஜனங்களும் வருவார்களென்று எதிர்நோக்கப்படுகிறது. இந்த மூன்று நாட்களிலும் கூட்டங்கள் நடத்தும்படி ஓர் பெரிய பந்தல் தயார்செய்ய ஆயத்தங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. செவ்வாய் இரவில் ஆயத்த ஆராதனையும், காலக்ஷேபமும், புதனில் பரி. இராப்போஜன ஆராதனையும், ஸ்தோத்திர ஆராதனையும், பையாஸ்கோப் காக்ஷியும், வியாழனில் பிரதிநிதிகளின் கூட்டமும், பருவம்கடந்த உத்தேசம் 500 பேருக்குத் தாம்பிரவர்ணி நதியில் ஞானஸ்நானமும், பவனிவருதல், 100 வருஷ சரித்திரத்தைக் காட்டும் மந்திர தீபப்படமும், வெள்ளியில் முன்னேற்ற ஆலோசனைக் கூட்டமும் (Forward movement), பள்ளிப்பிள்ளைகளின் பாட்டாராதனை, பரிசளித்தல், காலக்ஷேபம், இந்துக்களுக்கு உபந்நியாசமும் நடைபெறும். கூட்டத்துக்கு வருபவர்களுக்கேற்ற வசதி செய்யும்படி ஓர் கமிற்றிகூடி ஆலோசனை செய்கிறார்கள். திருநெல்வேலி சபையானது 100 வருஷங்களாய்ப் பெற்றவரும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் நினைவுகூறும் நோக்கமாய் நன்றியறிதலாகவும் ஞாபகார்த்தமாகவும் ஸ்தோத்திரக் காணிக்கைகள் நேரில் படைக்கவும், பணம் சேகரித்தனுப்ப விரும்புவோர் 5 ரூ முதல் 100 ரூ வரை சேகரிக்கும்படியான சப்ஸ்கிரிப்ஷன் கார்டுகளை வாங்கிப் பணம் சேகரித்தனுப்பவும், உதாரகுணமுள்ள கனவான்களும், குடும்பங்களும் தங்கள் பேரால் நூற்றாண்டு ஞாபகார்த்த ஸ்காலர்ஷிப் நிதியாக ரூ. 500 முதல் ரூ. 15,000 வரை. ஓர் பள்ளிப்பிள்ளையை அல்லது ஓர் உபாத்தியாயர், உபதேசியார், பிரசங்கியாரை அல்லது ஓர் குருவானவரைத் தாபரிக்கும்படி கொடுக்கவும் அழைக்கப்படுகிறார்கள். தேவன் கடந்த 100 வருஷங்களில் நமக்குச் செய்த சகல நன்மைகளையும் நன்குணர்ந்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தவும், சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் வேண்டிய நன்மைகளை நமக்குக் கிடைக்கக் கருவியாயிருந்த சி. யம். எஸ்.

தாய்ச்சங்கத்தை நன்றியறிதலோடு நினைவுகூறவும் நாம் இந்த நாட்களில் கூடிக் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரிப்போமாக.

---

## பரி. அந்திரேயா

இங்கிலாந்து திருச்சபை ஒழுங்கின்படி அட்வெந்தென்னும் நாட்களிலுள்ள முதலாம் ஞாயிறு திருச்சபையின் வருஷப்பிறப்பு தினமாக எண்ணப்பட்டபோதிலும் கருத்தின்படி நவம்பர்மீ 30உயாகிய பரி. அந்திரேயாவின் திருநாளிலேயே கிறிஸ்து சபையின் வருஷம் ஆரம்பமாகிறது என்பதற்கையமில்லை. ஏனெனில் பரி. யோவான் 1: 40ல் நாம் வாசிக்கிறபடி அந்திரேயா முதல்முதலாக இயேசுவானவரைப் பின்பற்றின இருவரில் ஒருவர். எக்காலத்திலுமுள்ள கிறிஸ்து சபை பின்பற்றத்தக்க மாதிரியான உத்தம கிறிஸ்தவனாக விளங்குகிறார். அவருடைய பெயரின் அர்த்தமே திடமனதுள்ளவன் என்பது. அவரைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களிலிருந்து கிறிஸ்தவ ஜீவிய சம்பந்தமாய் அடியிற்கண்ட சில குறிப்புகளைக் கவனிப்பது பிரயோஜனமாயிருக்கும்.

முதலாவது, திட்டமான குணப்படுதல். பரி. யோவான் 1: 37 யோவான் சொன்னதைக்கேட்டு இயேசுவுக்குப் பின்சென்றார். இயேசுவானவரைப்பற்றி யோவான் கொடுத்த சாட்சியின் மூலமாய் அவரண்டை நடத்தப்பட்டார் இயேசுவானவரை உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் பலியாக ஒப்புக்கொண்டார். யோவானின் சாட்சியைக் கேட்டது மாத்திரமல்ல அதற்குச் செவிகொடுத்தார், பின்சென்றார். நம்பிக் கீழ்ப்படிந்தார். தன் பழைய எஜமானை விட்டுப் புதிய எஜமானைப் பின்சென்றார். இதுவே அவருடைய திட்டமான குணப்படுதலின் ரகசியம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொள்வதே கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பம்.

கிறிஸ்துவாகிய பலியின் சுவிசேஷமே பலனுள்ளது. சிலுவையில் உயர்த்தப்பட்ட கர்த்தரை நமது பிரசங்கங்களில் உயர்த்திக் காட்டுவதே ஆத்துமாக்களை அவரண்டை இழுக்கும் முறை.

இரண்டாவது, சீஷனாகுதல். அந்திரேயாவும் அடுத்த சீஷனும் ஒரு வார்த்தையும் பேசாமல் தங்கள் புது எஜமானைப் பின்செல்லுகிறார்கள். அவரோடு நெருங்கிய ஐக்கியமுள்ளவனாகவேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம். இயேசு திரும்பி அவர்கள் பின்செல்லுகிறதைக் கண்டு என்ன தேடுகிறீர்கள் என்ற கேள்விக்கு மறுமொழியாக நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?' என்று கேட்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி இன்னும் அதிகமாய் அறியவேண்டுமென்ற ஆசை உண்டானது. இயேசு



கிறிஸ்து நமது சொந்த ரக்ஷகரானால் அவரைப்பற்றி அதிகமதிகமாய் அறிய ஆசைப்படுவோம். ரக்ஷகர் நமது ஆசையைத் திருப்தி செய்வார். இயேசு 'வந்து பாருங்கள்' என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள். அவரைத் தங்கள் சொந்த அனுபவத்தில் கண்டார்கள். அவரோடு தங்கின நேரம் எவ்விதம் செலவிடப்பட்டதென்று சொல்லப்படவில்லை. ஆனால் மறுநாள் அந்திரேயா தன் சகோதரனைக் கண்டவுடன் கொடுத்த சாட்சி அந்த அனுபவத்தை நன்கு விளக்குகிறது.

மூன்றாவது, காலதாமதமில்லாத ஊழியம். அந்திரேயா முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான். அந்திரேயாவின் ஜீவியத்தில் உடனே ஊழியம் ஆரம்பித்துவிட்டது. அவன் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் அவரைப் பற்றி சாட்சி கொடுக்க நெடுங்காலம் செல்லவில்லை. தன் சொந்தக் குடும்பத்திலேயே முதலாவது சாட்சி கொடுத்தான். இதுவே உத்தம சீஷத்துவத்தின் உண்மையான ரூபகாரம். முதலாவது ஜீவியம், அப்புறம் அன்பு. 'முதலாவது சொந்தக் குடும்பத்தில் பக்தி விளங்கவேண்டும்' என்று பரி. பவுல் உரைக்கிறார் (1 தீமோ. 5: 4). நமது ஜீவியத்தால் சாட்சியிடுவதே மேலானது. அந்திரேயா விவகாரம் பேசவில்லை; தர்க்கிக்கவில்லை. தன் சொந்த அனுபவ சாட்சியையே கூறினான். 'மேசியாவைக் கண்டோம் என்பதுதான். அப்புறம் அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டு வந்தான். அந்திரேயா தன்னிலே பெரியவனல்ல. பெரிய காரியங்களை நடப்பித்ததாக அவனைப்பற்றிச் சொல்லப்படவில்லை. ஆனால் தன் சகோதரனை ரக்ஷகருக்காக ஆதாயம்பண்ணினான். நாம் நம்மில் வல்லவர்களல்ல' வென்றாலும் கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வல்லமையான ஊழியம் செய்யும்படி மற்றவர்களை அவரண்டை நடத்தும் கருவிகளாகலாம்.

நாலாவது, பூரண பிரதிஷ்டை. பரி. மத்தேயு. 3: 18, 19-இல் அவனுடைய ஜீவியத்தின் மேலான அழைப்பைக் கவனிக்கிறோம். முன் சீஷனானவன் இப்பொழுது ஊழியனாகவும், படிப்படியாய் அப்போஸ்தலனாகவும் ஆவது அவசியமாய்த் தோன்றியது. தன் சொற்ப அனுபவத்தில் அவனை உண்மையுள்ளவனாகக் கண்ட ரக்ஷகர் இப்பொழுது மேலான ஊழியத்திற்கு அழைக்கிறார். என் பின்னே வா, உன்னை மனுஷரைப் பிடிக்கிறவனாக்குவேன் என்றார். 'உன்னை ஆக்குவேன்' என்றார் அந்திரேயா உடனே, பூரணமாய், சந்தோஷத்துடன் அதற்கு இணங்கினான், கீழ்ப்படிந்தான். மனுஷரைப் பிடிக்கிறவனாகும்படி தன்னை முழுவதுமாய் இயேசுவுக்கு ஒப்புவித்துவிட்டான். எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின்சென்றான்.

ஐந்தாவது, வளரும் அனுபவம். பரி. யோவான் 6: 8, 9-இல், ஐயாயிரம் பேரைப் போஷித்த அற்புத சம்பந்தமாய் அந்திரேயாவின் சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பெரிய அவசியம் ஏற்பட்டது. அதைச் சரிப்படுத்த சீஷர் சக்தியற்றவர்களாயிருந்தார்கள். அந்திரேயா இயேசுவை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் எம்மாத்திரம் என்றான். அற்பமான சாதனங்களாயிருந்தபோதிலும் சரியானபடி கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கப்படும்போது தேவ வல்லமை அவைகளைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்யக்கூடும் என்கிற இந்தப் பெரிய அனுபவத்தை ரக்ஷகர் கற்பித்தார். அந்திரேயா இந்த அனுபவத்தைக் கற்றுக்கொண்டான். மோசேயின் கோல், சாதாரணமான மேய்ப்பனின் கோலாயிருந்தபோதிலும், மோசே பார்வோனுக்குமுன் நின்றபோது அது தேவ வல்லமையின் அதிகாரத்திற்கு அடையாளமாயிருந்தது. நாம் நம்மை முற்றிலும் கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கும்போது தேவன் தமது ஊழியத்தில் வல்லமையாயும் மகிமையாயும் உபயோகிப்பார்.

ஆறாவது, விசாரித்தறியும் மனம். பரி. மாற்கு 13: 3, 4 இயேசுகிறிஸ்துவின் மனுஷாவதார ஜீவியத்தின் கடைசி நாட்களில் அந்திரேயாவும் மற்றும் இரண்டு சீஷரும் அவரிடம் வந்து ஒரு கேள்வி கேட்டார்கள். 'இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறுங் காலத்துக்கு அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும்' என்றார்கள். அந்திரேயா அதிகமாய் அறிய விரும்பி இயேசுகிறிஸ்துவினிடம் போனான். இது உண்மையான, வளரும் சீஷத்துவத்தின் அடையாளம். தனக்கு வேண்டிய செய்தியை இயேசுகிறிஸ்து கொடுக்கக்கூடும் என்கிற நிர்ணயம். அன்றியும் அவன் அறியவிரும்பினது அவருடைய இரண்டாம் வருகையைப்பற்றி. உத்தம விசுவாசிகளின் பெரிய நம்பிக்கையும் வாஞ்சையும் இதுவல்லவா? இக்காலத்தில் இதுவே பக்தர்களின் இருதயத்தை நிரப்பிக் கொண்டிருக்கும் மேலான நாட்டம்.

ஏழாவது, ஆவிக்குரிய ஆழ்ந்த அறிவு. பரி. யோவான் 12: 21-இல் சில கிரேக்கர் பிலிப்புவினிடத்தில் வந்து 'ஐயா இயேசுவைக் காண விரும்புகிறோம்' என்று கேட்டதாக வாசிக்கிறோம். இது சற்று விநோதமாகத் தோன்றுகிறது. ஏனெனில் இயேசு ரட்சகர் தாமும் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கே தாம் அனுப்பப்பட்டதாகச் சொல்லியிருந்தார். ஆனாலோ இந்தப் புறஜாதியார் இயேசுவைக் காண விரும்புகிறார்கள். பிலிப்பு தானாய் இயேசுவிடம் போகாமல் அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான். ஏனெனில் அந்திரேயாவுக்கு இதைப்பற்றிய நல்ல அறிவு உண்டு என்று நினைத்திருக்கலாம். இந்தத் தொழுவத்திலுள்ள



வைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு என்று எஜமான் சொன்ன வார்த்தைகளின் கருத்தை அந்திரேயா அறிந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இஸ்ரவேலருக்கு மாத்திரமல்ல எல்லா ஜாதியாருக்கும் சுவிசேஷ செய்தியை அறிவிக்கும்படிக்கே தானும் மற்றச் சீஷரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்னும் நுண்ணறிவு அந்திரேயாவுக்கு இருந்திருக்கவேண்டும் என்று நம்ப இடமுண்டு. எப்படியாயினும் புறஜாதியாரும் இயேசுவை அறியவேண்டுமென்கிற வாஞ்சை அந்திரேயாவுக்கு இருந்தது. புறத்தேச சுவிசேஷ பிரபல்ய வாஞ்சை உத்தம விசுவாசியிடம் விளங்கும்.

எட்டாவது, ஆவியின் அபிஷேகம். கடைசியாக அந்திரேயாவைப் பற்றி அப். 1: 13-இல் வாசிக்கிறோம். மற்றச் சீஷரோடு மேல் வீட்டறையில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்காக ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தான். ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றபின் முன்னிலும் பலத்த வல்லமையான காரியங்களைச் செய்யக்கூடியவனானான். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் விசுவாசியைப் பலத்தின்மேல் பலனடைந்து, கிருபையின்மேல் கிருபைபெற்று, மகிமையிலிருந்து மகிமைக்குப் பங்காளியாக்குகிறது. கிறிஸ்தவ ஜீவியத்தின் இவ்வித மேலான அனுபவம் நமக்குக் கிடைக்கும். கெஞ்சுவோமாக.

ஒன்றுமில்லாமல் உம்தன்
பாதத்திலே விழுந்தேன்.
நான் வெறுமையான பாத்ரம்
உபயோகஞ் செய்யுமேன்.
கறையும் குறையும் நீக்கி,
நீர் துப்புரவாக்கிவீர்.
வெறுமையானது! பாரும்!
பேரருளால்நிரப்புவீர்.

---

## இஸ்ரவேல் தேசத்துப் பெண்

(2 ராஜா. 5 அதி.)

சீரியதேசத்து இராஜனுக்கு ஒரு படைத்தலைவனிருந்தான். அவன் மகா பராக்கிரமசாலியும், கீர்த்திபெற்ற யுத்தவீரனுமாயிருந்தான், கர்த்தர் தானும் அவனைக்கொண்டு சீரியதேசத்திற்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டிருந்தார். இவன் பேர் நாகமான். நாகமான் என்பதற்கு அழகுள்ளவன் என்றும், சௌந்தரியவான் என்றும் பலவிதமாய் அர்த்தப்படுத்தினபோதிலும், அவன் இராஜாங்கத்தில் ஒரு உயர்ந்த பதவியிலிருந்தானென்பதை மாத்திரம் நம்மனதில் வைத்துக்கொள்வோமாக. அவன் எவ்வளவுதான் கீர்த்திபெற்றவனாயிருந்தபோதிலும், இராஜாவுக்கு இரண்டாவது ஸ்தானத்

திலிருந்தபோதிலும், பிரஜைகளால் அதிகமாய் மதிக்கப்பட்டு வந்தபோதிலும், இராஜாவோடாவது பிரஜைகளோடாவது நெருங்கிச் சகவாசஞ் செய்யக்கூடாத நிலைமையிலிருந்தான். இராஜாவாலும் ஜனங்களாலும், தன் சொந்த ஜனங்களாலும் அருவருக்கக்கூடிய நிலைமையுடையவனாயிருந்தான். ஏனென்றால் "பராக்கிரமசாலியாகிய அவனே குஷ்டரோகியாயிருந்தான்." இது நிற்க

இந்தச் சீரியர் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாய் படையெடுத்துச் சென்றகாலத்தில் ஒரு சிறு பெண்ணைச் சிறைப்பிடித்துக்கொண்டு வந்தார்கள். அந்தப் பெண், நாகமானுடைய மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். என்றாலும், தன் தேசத்தையும் தன் தேசத்திலுள்ள கர்த்தருடைய பலத்த செய்கைகளையும் மறந்தவளல்ல. தன் தேசத்திலுள்ள தீர்க்கதரிசியாகிய எலிசா தேவனுடைய மனுஷனென்பதையும், அவர் மூலமாய்த் தேவன் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையுஞ் செய்து வருகிறார் என்பதையும் நன்றாய் அறிந்திருந்தாள். அறிந்தமட்டும் போதுமென்று இருந்துவிடவில்லை. அதைப்பற்றியறிவிக்கச் சமயமும் வாய்த்தது. தன் எஜமான் குஷ்டரோகம் என்னும் வியாதியாற் கஷ்டப்பட்டு வருந்துகிறாரென்று அறிந்தவுடனே அவர் சுகதேகியாகிவிடவேணும் என்ற எண்ணம் மேலிட்டது. ஆகையால் தான் பணிப்பெண்ணாயிருந்தபோதிலும் பெரிய காரியத்தில் தலைப்பட்டுக்கொண்டாள். தான் போய் எஜமானோடு பேசுவதற்குரிய நிலைமையில்லாதபோதிலும், தன் மனதிலுள்ள எண்ணம் தன் எஜமானுடைய காதிற்போய் எட்டும்படியான வழியையுந் தேடிக்கொண்டாள். எப்படியென்றால்: ஒருநாள் "அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்திற் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்? என்றாள். இது எவ்வளவு சிறந்த ஊழியம் பாருங்கள்! இச்செய்தியை நாகமான் கேள்வியுற்றவுடனே, பணிப்பெண்ணென்று அசட்டை செய்யாமல் தான் அந்தத் தீர்க்கதரிசியண்டை போய்ச் சேரும்படியான வகையைத் தேடிக்கொண்டானல்லவா? இச்சிறு பெண்ணின் விஷயத்தைக் கவனிக்கும்பொழுது தற்காலத்துக் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு நல்ல முன்மாதிரியையும், நல்ல படிப்பினையையுங் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

(1) சிறு பெண்ணின் அறிவு. இந்தப் பெண் தன் தேசத்திலிருந்தபொழுது, தன் தேசத்தில் ஒரு தீர்க்கதரிசி உண்டென்றும், அவர் மூலமாய்த் தேவன் பெரிதான காரியங்களைச் செய்துவருகிறாரென்றும் அறிந்திருந்தாள். அதைப் பற்றி தன் ஜீவியகாலத்தில் மறந்தவளல்ல. கிறிஸ்தவர்களாகிய நாமும் கிறிஸ்துவானவருடைய பெரிதான இரட்சிப்பை அடைந்தவர்களாகவும், அறிந்தவர்களாகவும் இருக்கிறோம். ஆனால் கிறிஸ்



துவானவரைக்குறித்தும், அவர் நமக்குள் சம்பாதித்த இந்தப் பெரிதான இரட்சிப்பைக் குறித்தும் நாம் மற்றவர்களுக்கு அறிவித்து வருகிறோமா? சென்ற ஆறுமாதக்காலத்தில் சென்ற வருஷத்தில், அல்லது நம் ஜீவியகாலத்தில் எத்தனை ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினோம்! எத்தனை ஆத்துமாக்களுக்கு ஜீவவார்த்தையைப் புகட்டினோம்? பாவரோகத்தை நீக்கும் பரிகாரி ஒருவர் இருக்கிறாரென்று சொல்லி எத்தனை பேரைப் பரமவைத்தியனிடத்தில் அழைத்துவந்து பரலோக இராஜ்ஜியத்துக்குப் பங்குள்ளவர்களாக்கினோம்.

(2) சிறு பெண் இருந்த இடம். இவளோ இஸ்ரவேல் தேசத்துப் பெண். அங்கிருந்து சீரியதேசத்துக்குச் சிறையாகக் கொண்டுவரப்பட்டவள். ஆனாலும், தன் கடமையைச் செய்யப் பின்வாங்கவில்லை. கிறிஸ்தவர்களாகிய நம் காரியமென்ன? எவ்விடத்திலிருந்தாலுஞ் சரி, எந்தத் தேசத்திலிருந்தாலுஞ் சரி, புறமதஸ்தர் மத்தியிலிருந்தாலுஞ் சரி, உத்தியோகஸ்தலத்திலிருந்தாலுஞ் சரி தேவ ஊழியஞ் செய்யலாமே. நாம் அப்படிச் செய்கிறோமா?

(3) சிறு பெண்ணின் நிலைமை. அடிமைப் பெண். நாகமானுடைய மனைவிக்குப் பணிப்பெண். சிறு பெண். பெரிய மனிதரிடத்திற் சென்று பேசக்கூடிய நிலைமையிலிருந்தவளல்ல. என்றாலும், தன் மனதின் நோக்கத்தை எவ்விதத்திலாவது தன் எஜமானுக்கு அறிவித்துவிட்டாள். ஆகையாலே நாகமான் பூரண சுகமடைந்தான். கிறிஸ்தவர்களாகிய நாமும் அப்படித்தான். நாம் எந்த நிலைமையிலிருந்தாலும், தாழ்ந்த அந்தஸ்திலிருந்தாலும், தாழ்ந்தவர்களிடத்திலிருந்தாலும், உயர்ந்தோரிடத்திலிருந்தாலும், வாழ்விலும், தாழ்விலும், கிறிஸ்துவானவருடைய பெரிதான இரட்சிப்பைக்குறித்து அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சகோதரரே, நம்மில் எத்தனை பேர் இச்சிறு பெண்ணுக்கு ஒத்திருக்கிறோம்? சமயங் கிடைத்தாலும் சமயங் கிடையாமற்போனாலும், நேரமிருந்தாலும், நேரமில்லாதிருந்தாலும், எந்த நிலைமையிலும், எந்தவிடத்திலும் நாம் ஆத்தும தாகமுள்ளவர்களாய் ஜீவிக்கப் பிரயாசப்படுவோமானால், மெய்யாகவே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கொஞ்சக்காலத்தில் சில ஆத்துமாக்களையாவது தேவனுடைய இராச்சியத்தில் கொண்டுவந்து சேர்ப்போம் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்பேர்ப்பட்ட ஆவியைத் தேவன்தாமே நமக்குத் தந்தருளுவாராக.

துக்கப்பாரத்தால் இளைத்து
நொந்துபோனாயோ?
இயேசு உன்னைத் தேற்றல்செய்வார் வாராயோ?

---

## பாவம் என்றால் என்ன?

உலகத்தில் பாவம் இருக்கிறதென்பது மறுக்கக்கூடாத சத்தியம். கிறிஸ்து இயேசுவினாலுண்டான மீட்பு எவ்வளவு வாஸ்தவமோ அப்படியே.

இதுவும் வாஸ்தவம். இவ்விரண்டைப்பற்றியும் ஒருவன் அறியவேண்டியது அவசியம். கிறிஸ்துவின் முன்தூதனாகிய யோவான்ஸ்நானகன் நீதியின் பிரசங்கியாக வந்தான். கிறிஸ்துவை ஒருவன் அறியவேண்டுமானால் அவனுக்குப் பாவ உணர்வு அவசியம். தன் இருதயத்திலுள்ள பாவத்தை அறிந்து உணராதவன் கிறிஸ்துவைப்பற்றியும் அறியக் கவலைப்படமாட்டான். மெய்யாய்த் தன் பாவத்தை உணர்கிறவன் கிறிஸ்துவண்டை வராமலிருக்கமுடியாது. இறந்துபோன ஓர் பக்தனின் ஜீவிய சரித்திரத்தில் காணப்பட்ட விஷயம் கவனிக்கப்படத்தக்கது. அவர் வேதசாஸ்திரங்களை அதிக முஸ்திப்பாய்க் கற்றுக்கொண்டிருக்கும் சமயத்தில் அவருடைய விசுவாசம் தடுமாறியது. ஆனால் தன் சொந்த சுபாவத்திலும் ஜீவியத்திலும் காணப்பட்ட பாவத்தைப்பற்றிய உணர்வு அவரைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கிறிஸ்துவண்டை இழுத்து தாம் கற்றுக்கொண்ட வேத சத்தியங்களை விசுவாசிக்கும்படி செய்தது. பாவத்தின் தன்மையைக்குறித்து கிறிஸ்துமார்க்கம் சொல்வது வேறே, அவிசுவாசியான மனுஷன் சொல்வது வேறே. பாவத்தைப்பற்றிய சத்தியமே வேதத்தின் உண்மையை ஸ்தாபிக்கக்கூடியது. கிறிஸ்துமார்க்கம் ஒன்றே பாவத்தைக் குறித்துச் சரியான அபிப்பிராயம் கூறுகிறது.

I. **பாவம் என்றால் என்ன?** பாவத்தையும் அதின் பயங்கரமான பலாபலனையும் நாம் சாதாரணமாய் அறிந்திருக்கிறபடியால் அது ஆகாது என்று தீர்க்கிறோம். அது நாம் போராடவேண்டிய பயங்கரமான ஓர் வியாதி. அது மனுஷனுடைய இயற்கை சுபாவத்துக்கு விரோதமானதும் அவனுடைய சந்தோஷத்தையும் பாக்கியத்தையும் கெடுக்கிறதுமாயிருக்கிறது. பாவமானது எப்பக்கத்திலும் நம்மை நெருக்குகிறது. மனுஷன் தன் அயலானோடு உறவாடாதபடி ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் கடு, வஞ்சக துன்மார்க்க காரியங்களை நடப்பித்து வெட்கத்தையுண்டாக்குகிறது. இவ்விதத் தீமைகள் பரவாதபடி தேச சட்டமானது பிறப்பிக்கப்படாவிட்டால் ஜனங்களின் கூட்டுறவு கூடாத காரியமாகும். இவ்வித சட்டங்களும் பிரமாணங்களும் அவசியமென்று புத்தியும் விவேகமுமுள்ள யாவரும் ஒப்புக்கொள்வார்கள். நாகரீகமுள்ள எந்த ஜாதிகளின் பிரமாணமும் நீதியை நிலைநிறுத்தும்படிக்கே யுண்டாக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் தண்டனைகளும் சட்ட நிருபணங்களும் மனுஷர் குற்றம் செய்யாதபடி தடுக்கக்காணோம். மரியாதை, கௌரவம் என்கிற விஷயங்களுக்காக வெளிப்படையான குற்றம் செய்யாதபடி சிலர் தடுக்கப்படலாம். அதினால் தீமை மட்டுக்கு மிஞ்சாதபடி மட்டுப்படலாம். ஆனால் குற்றத்துக்குக் காரணமும் ஊற்றுமானது மாறுதலடையாமலேயிருக்கிறது. மனுஷனுடைய இருதயத்திலிருந்து தீயசிந்தனைகள், விபசாரங்கள், கொலைகள், காம விகாரங்கள், களவுகள், பொய்ச் சாட்சிகள், தூஷணங்கள் ஆகிய இவைகள் புறப்படுகிறதென்று இயேசுநாதர் தாமே சொல்லுகிறார். முதலாம் நூற்றாண்டில் எப்படியிருந்ததோ அப்படியே இந்த இருபதாம் நூற்றாண்டிலுமிருக்கிறது.

(இன்னும் வரும்)

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

5

November 1920

OFFICE OF THE ... BOOKS
3- JAN 1921
MADRAS.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI நவம்பர் 1920

## மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை, மாம்ச சிந்தை மரணம்.

(ரோ. 8. 7. 6.)

(தொடர்ச்சி)

II உலக சிந்தையெல்லாம் மாம்ச சிந்தை. அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு. அவர்களுடைய மகிமை அவர்களுடைய லச்சையே. அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். (பிலி. 3: 19). ஐயோ! உலக சிந்தை இல்லாத சபை எங்கே? பிலிப்பியருடைய சபையில் முதலாய் அது நுழைந்ததென்று பார்க்கிறோம். அது மாத்திரமா? அப்போஸ்தலன்மாருடைய கூட்டத்தில்கூட அது ஒருகாலம் விளங்கினது. இயேசுநாதர் தம்முடைய பாடுகளையும் சிலுவை மரணத்தையும் தமது சீஷர்களுக்கு முன் அறிவிக்கும்போது சீமோன் பேதுரு விசனப்பட்டான். ரட்சகர் பாடுபடுவது அவனுக்குப் பிரியமில்லை. உலக மகிமையை விரும்பினான். ஆண்டவர் ஒரு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்து சீஷர்களுக்கும் விசேஷமாய்த் தனக்கும் உயர்ந்த அந்தஸ்தையும் அதிகாரத்தையும் கொடுக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். எல்லாம் உலகம், உலகம், உலகம். ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே இது உமக்குச் சம்பவிப்பதில்லையே யென்று அவரைக்கடிந்துக் கொள்ளத் தொடங்கினான். அப்போது ரட்சகர் அவனை விசனத்தோடு கண்டித்து, எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே. நீ தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷனுக்கேற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார் (மத். 16: 22, 23). பார்த்தீர்களா! உலக சிந்தையுள்ள சீஷனைச் சாத்தான், பிசாசு என்றழைக்கிறார். அப்படியானால் கிறிஸ்தவ சபையில் எத்தனையோ சாத்தான், பிசாசு

கள் இருக்கிறார்கள். பயங்கரமான வார்த்தை. எச்சரிக்கையாயிருப்போமாக. உலக சிந்தை, மாம்ச சிந்தை. அந்தக் கிறிஸ்தவனைப் பாருங்கள். பொருளாசைக்காரன், அவன் எண்ணம் எல்லாம் கூடிப் பணம் சம்பாதிக்கவேண்டும், நிலங்களைச் சம்பாதிக்கவேண்டும். அவன் பேச்செல்லாம் பணம், நிலம், கரை, கொடுக்கல் வாங்கல், முதல், வட்டி, கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுநாளில் முதலாய் அந்த எண்ணத்தையும் பேச்சையும் விட்டுவிடாமல் கர்த்தருடைய கற்பனையைத் துணிந்து மீறுகிறான். அவன் சிந்தை பரத்துக்கேறுவது கிடையாது. மோட்சத்துக்குப் போக அவனுக்கு ஆசையேயில்லை. ஆகையால் மரணம் வந்தால் பயப்படுகிறான். புத்தியீனனே, உலகசிந்தையினால் அனனியாவும் சப்பீராளும் கெட்டுப்போகவில்லையா? பொருளாசையினாலே யூதாஸ் நித்திய செல்வங்களை இழந்து அதோகதியாய்ப் போகவில்லையா? உலகசிந்தை மரணம். ஓர் ஊரில் களஸ்டை ஒன்றிருக்கிறது. நான் அந்தப் பக்கம் போகும்போதெல்லாம் ஜனங்கள் அதிலே கூடுகிறார்கள், குடிக்கிறார்கள், கெட்டுப்போகிறார்கள். சில கிறிஸ்தவர்கள் விசேஷமாய்க் கிறிஸ்தவ வாலிபர்கள் அங்கே போய்க் கள் குடிப்பதுண்டு. உஷ்ணகாலத்தில் அதினாலே வேலை செய்யத் தேகத்தில் பெலன் உண்டாகிறது என்று போக்குச் சொல்லிவருகிறார்கள். பார்த்தீர்களா? மாம்சசிந்தை, உலகசிந்தை, உலகத்தாருடைய சாக்குப்போக்கு. அருமையானவர்களே, மோசம்போகவேண்டாம். மாம்சசிந்தை மரணம். அசுத்தமானதைத் தொடாதிருங்கள். திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (1 கொரி. 6 10). ஸ்திரீகளும் இந்தப் பாவத்துக்கு நீங்கினவர்களல்ல. அநேகருடைய எண்ணம் என்னவென்றால், நகைகளைப் போடவேண்டும், நல்ல வஸ்திரங்களை வாங்கவேண்டும். ஒரு பெண்பிள்ளையை அறிவேன். அவளுக்கு ஒரு விசேஷித்த சீலையுண்டு. உத்தேசம் ரூ. 500 பெறும். அப்புறம் புருஷன் பெரிய வீடு கட்டவேண்டும். ஊரில் தான் அதிகாரம் செலுத்தவேண்டும். எல்லாம் உலகம். மாம்சம், சரீரம். மரியாளைப்போல நல்ல பங்கைத் தெரிந்துகொள்ளவில்லை. சகோதரரே, இந்த உலக சிந்தை மாறவேண்டும். இல்லாவிட்டால் மோட்சத்துக்குப் போகமாட்டோம். போனாலும் அங்கே இருக்கப் பிரியம் இராது.

III. சுபாவ சிந்தை எல்லாம் மாம்ச சிந்தை. நான் பொருளாசைக்காரனுமல்ல, பெருமைச் சுபாவமுள்ளவனுமல்ல, குடிவெறியனுமல்லவென்று உங்களைத் தேற்றிக்கொள்ள வேண்டாம். மாம்சத்தினால் பிறப்பதெல்லாம் மாம்சமாயிருக்கும் (யோ. 3: 6). ஜெபம் ஆனாலும் சரி, வேதவாசிப்பு ஆனாலும் சரி, பிரசங்கம் ஆனாலும் சரி, அது தேவாவியால் பிறவாமல் நம்முடைய சொந்த சுபாவத்தினாலே பிறந்ததென்றால் அது மாம்சமே. விசுவாசத்தினாலே வராதயாவும் பாவமே (ரோ. 14: 23). தானதருமம்



3 - JAN 1921

என்றாலும், கண்கொடை என்றாலும் ஸ்தோத்திர[illegible] என்றாலும் உயிருள்ள விசுவாசத்தினாலே உண்டானதல்லவென்றால் [illegible] அப்படிப்போல தேவாவியால் பிறவாத யாவும் மாம்சமே. அப்படியானால் மாம்ச சிந்தை எவ்வளவு? பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே பேசாத வார்த்தை யாவும் மாம்ச வார்த்தை. அவருடைய கிருபையால் உண்டாகாத சிந்தையெல்லாம் மாம்ச சிந்தை. மாம்ச சிந்தை மரணம்.

T. W.

## பாவம் என்றால் என்ன?

(தொடர்ச்சி).

சிருஷ்டிப்பின் இயற்கையிலும் மனுஷனுடைய சரீர இயற்கையிலும் பாவம் இருக்கிறதென்று காண்கிறோம். எங்கும் துன்பமும், அழிவும், மரணமும் காணப்படுகிறது. மனுஷர் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் செய்யும் சகல நடபடிக்கைகளிலும் தீமை கலந்திருக்கிறது. கொள்ளைநோய், பஞ்சம், யுத்தம் ஆகிய தீமைகள் காணப்படுகின்றன. வியாதியின் கொடுமைகள், பேறுகால வேதனைகள், மரணக் கசப்புகள் எங்கும் பார்க்கலாம். ஆகவே இஜ்ஜீவியத்தில் காணப்படும் சகல போராட்டங்களுக்கும் துன்பங்களுக்கும் ஓர் காரணமிருக்கவேண்டுமென்று புத்தியுள்ள யாரும் ஒப்புக்கொள்வார்கள். 'சிருஷ்டிப்பு யாவும் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது.

வெளிப்படையாய்க் காணப்படும் இத்தீமைகள் உள்ளேயும் விளங்குகின்றன. மனுஷனுடைய சுபாவத்திலேயே போராட்டம் ஏற்படுகிறது. நமது இழிவான சுபாவம் பாவத்தை விரும்புகிறது. மேலான சுபாவமோ பாவத்தை இழப்பமாகவும் வெட்கமாகவும் எண்ணுகிறது. மனுஷ சுபாவம் சோதனை நிறைந்ததாயிருக்கிறது. உண்மையுள்ள எந்த ஆத்துமாவும் தன் ஜீவியத்தில் போராட்டமும் தோல்வியுமிருக்கிறதாக உணர்கிறது. இது வேத சாஸ்திரமல்ல, அனுபவ சத்தியம். ஆகவே மனுஷனுடைய புறம்பான ஜீவியம்; கூட்டுறவு, அவனுடைய இருதயம் ஆகிய இவற்றில் தீமைகள் உண்டாகி அவனுடைய ஜீவியத்தின் பாக்கியத்தைக் கெடுத்து அவன் மரணத்துக்கும் இனிவரும் உலகத்துக்கும் பயப்படும்படியான நிலைமைக்கு அவனைக் கொண்டுவந்துவிட்டது.

மனுஷன் சிருஷ்டிக்கப்படும்போது பாவம் அவனுடைய இயற்கையின் ஓர் பாகமாய் உண்டாக்கப்படவேயில்லை. அப்படியானால் அது அவனுக்கு வெளியேயிருந்தே உண்டானது. ஆகவே பாவத்தின் ஆரம்பத்துக்கும் ஓர் சரித்திரம் இருக்கவேண்டும். அந்தச் சரித்திரமே ஆதியாகமத்தில் சொல்லியிருக்கிறது. ஆகவே 6000 வருஷங்களாக மனுஷனுடைய சுபாவத்தில் சம்பந்தப்பட்ட பாவமானது அவனுடைய இயற்கை

யின் சம்பந்தமுள்ளதாயல்ல, அவனுக்கு வெளியேயிருந்தே ஆரம்பித்திருக்கிறது. இதுவே வேத சத்தியம். ஒரே மனுஷனால் பாவமும், பாவத்தினால் மரணமும் உலகத்தில் பிரவேசித்தது. பாவத்தின் ஆரம்பத்தைக்குறித்து வேதம் சொல்லும் சத்தியம் மனுஷனுடைய புத்திக்கு விளங்கத்தக்க சுபாவமானதாயிருக்கிறது. அதாவது சத்துரு அதைச் செய்தான். மனுஷன் மாசற்றவனாகவும் நல்லவனாகவும் உண்டாக்கப்பட்டான். அவனுடைய விருப்பங்கள் நேர்மையும் சுத்தமுமாயிருந்தன. அவனுக்குத் திருப்தியுண்டாக்கினது தேவனே. அவனுடைய இயற்கையான சுபாவம் அவனைத் தேவனோடு ஐக்யப்படுத்திற்று. ஆனால் இந்த இயற்கை சுபாவமானது கட்டாயமாயல்ல தன் சுய இஷ்டப்படியே தேவனைத் தெரிந்துகொள்ளவும் அவரோடு ஐக்யப்படவுமான தன்மையுள்ளதாய் அமைக்கப்பட்டது. மனுஷன் தன் சுயாதீன சித்தத்தின்படி தேவனுடைய சித்தமே தனக்கு நன்மையென்று தெரிந்துகொள்ளத்தக்கவனாய் உண்டாக்கப்பட்டான்.

இவ்விதம் அமைக்கப்பட்ட மனுஷன் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டான். தேவனுடைய அன்பை அவிசுவாசித்தான். ஏவாள் விலக்கப்பட்ட விருட்சத்தைப் பார்த்து அதன் தன்மை இப்படியிருக்கலாம் என்று தானே தீர்மானம் செய்துகொண்டு, புசிப்புக்கு நல்லதும் கண்களைத் தெளிவிக்கத்தக்கதும் புத்தியைக் கூர்மையாக்கத்தக்கதுமானதென்று தீர்த்துக்கொண்டாள். இதுதான் மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமைக்கு காரணமாயிற்று. ஆகவே, பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம் என்பது உண்மையாயிற்று. உள்ளபடியே விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியில் இயற்கைப்படி யாதொரு விஷமுமில்லை. கீழ்ப்படியாமையே இந்த முதல் பாவத்தை அதிகப் பாவமுள்ளதாக்கினது. மனுஷனுடைய கீழ்ப்படிதலைப் பெலப்படுத்தி அவனுடைய தன்மையை மேன்மைப்படுத்தும்படியாய்க் கொடுக்கப்பட்ட கட்டளையானது அவிசுவாசத்துக்கும், கீழ்ப்படியாமைக்கும், தேவனுக்கு விரோதமான கலகத்துக்கும் ஏதுவாயிற்று.

ஆகவே சட்ட மீறுதலே பாவமாயிற்று. மனுஷனுடைய காரியாதிகளை நடத்துகிற பாத்தியதை தேவனுக்குரியது என்பதை மறுத்துவிட்டதே பாவம். உலகத்தின் ஆளுகைகளைக் கவனிக்குங்கால், ஆளுகிறவருடைய அதிகாரம் ஆளப்படுகிறவர்களுடைய சம்மதத்தைப் பொறுத்தது. ஆனால் தேவனுடைய ஆளுகை இத்தன்மையதல்ல. சட்டமானது நல்லதென்பதை மனச்சாட்சியும் ஒத்துக்கொள்வதுதான் இயல்பு என்றபோதிலும், தேவனுடைய சட்டம் நமக்குப் பொருந்தினாலும் சரி பொருந்தாவிட்டாலும் சரி, அதுவே மேலானது. நமது மனச்சாட்சியும் ஒத்துக்கொண்டால்தான் தேவனுடைய கட்டளை நம்மைக் கட்டுப்படுத்தக்கூடும் என்பது கூடா



தகாரியம். தேவன் ஒரு காரியத்தை விலக்கியிருக்க, அதைச் செய்கிறதில் தீமையில்லையென்று நான் நினைக்கிறேன் என்று மனுஷன் சொல்வது வீண். இது தேவனுடைய தீர்ப்புக்கு விரோதமாய் நடக்கிறதாகும் இதுவே பெருமை. இதுவே பாவம். இது நன்றிகேடு. நமக்குத் தற்சமயம் விளங்காத எந்தத் தேவனுடைய கட்டளையும் நமது நன்மைக்காகவே உண்டாக்கப்பட்டது என்பதை உணராமலும் விசுவாசியாமலும் போவதே தேவனுடைய அன்புக்கு விரோதமான நன்றி கேடு.

தேவனுடைய நியாயப்பிரமாணங்கள் மனுஷனுடைய சுபாவ இயற்கைக்கு ஒத்தது. ஆகவே அவன் அவைகளை மீறும்போது குற்றவாளியாகிறது மாத்திரமல்ல, அசுத்தனுமாகிறான். குற்றம், அசுத்தம் ஆகிய இருதீமைகள் உண்டாகிறது. பாவமானது தேவ கட்டளையை மீறினதால் மனுஷனைத் தேவ கோபத்துக்கும் ஆக்கினைக்கும் உள்ளாக்கிவிட்டது மாத்திரமல்ல, மனுஷன் அசுத்தனும் அக்கிரமக்காரனுமாகிறான். ஆகையால் மனுஷன் பாவத்தின் குற்றத்தினின்று மட்டுமல்ல, அதின் வல்லமையினின்றும் மீட்கப்படவேண்டியவனாயிருக்கிறான். கிறிஸ்துவானவர் ஆசாரியனாக அவனைச் சுத்திகரித்து குற்ற நிவாரணம் செய்வதோடு வைத்தியனாக அவனைக் குணமாக்கவும் செய்கிறார்.

## நாகமான் (தொடர்ச்சி)

(2 ராஜா 5 அதி.)

முன்னொரு சஞ்சிகையில் பிரசுரித்தபடி நாகமான் இஸ்ரவேல் தேசத்துக்குப் புறப்பட ஆயத்தப்பட்டான். தன் எஜமானாகிய சீரிய ராஜாவிடத்திலிருந்து இஸ்ரவேல் ராஜாவுக்கு நிருபம் கேட்டு வாங்கிக்கொண்டு, காணிக்கைகளோடும், தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் கூட இஸ்ரவேல் ராஜாவினிடத்திற்குப் போனான். இதையறிந்த இஸ்ரவேல் ராஜா கலக்கமுற்று வருந்துகையில் இதோ எலிசாவினிடத்திலிருந்து ஆள் வந்து, "நீர் கலங்கவேண்டியதவசியமில்லை. நாகமான் என்னிடத்திற்கு வந்து இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்று அறிந்துகொள்ளட்டும்" என்று எலிசா சொல்லுகிறார் என்று சொன்னபோது, நாகமான் புறப்பட்டு எலிசாவினுடைய வீட்டு வாசற்படியில் வந்து நின்றான். எலிசா வெளியேவந்து தன்னை உள்ளே அழைத்துச் சென்று ஆசனம் அளிப்பார் என்பதாக நாகமான் நினைத்திருக்கலாம். அப்படியும் நடக்கவில்லை. அல்லது எலிசா வெளியேவந்து தன்னைத் தொட்டு, அல்லது மருந்துகொடுத்து, தன் குஷ்டரோகத்தை சொஸ்தப்படுத்துவார் என்றும் எதிர்பார்த்திருக்கலாம். அப்படியும் நடந்ததில்லை. தான் எதிர்பாராவண்ணமாக, வீட்டுக்குள்ளிருந்து ஒரு செய்திமாத்திரம் வந்தது. அதாவது "நீ போய் யோர்தானில் ஏழுதரம்

ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி நீ சுத்தமாவாய்" என்பதே. இதைக் கேட்டபொழுது, நாகமான் கடுங்கோபங்கொண்டு, உக்கிரத்தோடே திரும்பிப்போனான். ஏனென்றால் இவன் தன் அந்தஸ்தையும், தன் உத்தியோகத்தையும், தன் வீடுவாசல், சம்பத்துகளையும், கவனியாமல் அங்கிருந்து புறப்பட்டு இஸ்ரவேல் தேசத்தைத் தேடிவந்ததுமல்லாமல், கடைசியில் ஒரு குடியானவனுடைய வீட்டுவாசலில் வந்து காத்திருந்தும், தன்னை சட்டை செய்யாமல் தனக்கு யாதொருமரியாதையும் செய்யாமல், தான் போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணும்படி எலிசா சொன்னதைக் கேட்டபொழுது, தன்னைப் பரியாசம் செய்கிறதாக நினைத்திருக்கலாம். இப்படி கோபத்துடன் தன் தேசத்திற்குத் திரும்பச் சென்றபொழுது தன் ஊழியக்காரனால் உணர்த்தப்பட்டு, இரதத்தைவிட்டுக் கீழே இறங்கி, தேவனுடைய மனுஷன் சொன்னபடியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது அவன் மாம்சம் ஒருசிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி அவன் சுத்தமானான் என்பதை, நாம் சத்தியவேதத்தின் மூலமாய் அறிவோம். இந்த நாகமானுடைய சரித்திரத்திலிருந்து நமது ஜீவியத்திற்கு பிரயோஜனமாக அறிந்துகொள்ளக்கூடிய முக்கியமான சில சத்தியங்கள் உண்டு அதைப் பற்றிக் கவனிப்போம்.

**நாகமானின் தாழ்மை.** முன் சொன்னபடி நாகமான் தன் தேசத்தில் ஒரு பேர்பெற்ற யுத்தவீரனாகவும், ராஜாவுக்கு உகந்த ஒரு மனுஷனாகவும் ஜனங்களால் அதிகமாக மதிக்கப்பட்டு வந்தபோதிலும்; தன் அந்தஸ்தை ஒரு பொருட்டாக எண்ணாமல் ஒரு குடியான ஒரு மனுஷனைத் தேடி, அவனுடைய வீட்டுக்குப்போனதே வெகுவியக்கப்படத்தக்கது. அதுமாத்திரமல்ல, எலிசாவுடைய வீடு எந்த ஸ்திதியிலிருந்ததென்றும் அவர் எந்த நிலைமையிலிருந்தார் என்பதும் நமக்குத்தெரியாதபோதிலும், முற்காலத்தில் தீர்க்கதரிசிகள் எந்த நிலைமையில் இருந்தார்கள் என்பது நமக்குத்தெரியாததல்ல. அப்பேர்ப்பட்ட வீட்டுக்கு நாகமான் போனதை நினைக்கையில், கிறிஸ்தவர்களாகிய நாம் இன்னும் எவ்வளவு தாழ்மையுள்ளவர்களாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துமார்க்கத்தையே தாழ்மையின் மார்க்கம் என்று அழைக்கலாமே. கிறிஸ்துவானவரே நமக்காக அடிமையின் ரூபமெடுத்த தமது பிறப்புமுதல் தமது மரணபரியந்தம், அதாவது தமது சிலுவை மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினாரே! (பிலி. 2: 8). ஆகையால் "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது, (பிலி. 2: 5). அப்படியே, தேசத்தார்களிலும் கிறிஸ்துவானவரின் சிந்தையைக் காணலாம். தற்காலத்தில் ஐரோப்பா, அமெரிக்கா தேசத்திற்கு சுவிசேஷத்தை அறிவித்துவரும் நமது நண்பர் சாது சிந்தர் சிங் என்பவரைக் கவனியுங்கள். எவ்வளவு சுயவெறுப்பு, எவ்வளவு தாழ்மை! சகோதரரே நமது நிலைமை யென்ன? நாம் நமக்குள்ளவைகளில் பெருமைகொள்ளு



கிறோமோ? பெருமைக்காரரின் முடிவு மிகவும் பயங்கரம். "பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்துநிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது". யா (4: 6).

**நாகமானின் இரதம்.** உக்கிரத்தோடும், அகங்காரத்தோடும், மூர்க்க வெறியோடும் சென்ற நாகமான் ஊழியக்காரரால் உணர்த்தப்பட்டபொழுது (2 ராஜா 5: 13) தன் இரதத்தை விட்டுக் கீழே இறங்கினான். இதுதான் கிறிஸ்தவர்களிடத்தில் காணப்படவேண்டிய முக்கியமான லட்சணம் ஆனால், அநேகர் தங்கள் பாவங்கள் எடுத்துக் காண்பிக்கப்படும்பொழுது கோபங்கொள்ளுகிறவர்களாயும். வேறு சிலர் அதைக் கவனியாமல் உதறிவிட்டுப் போகிறவர்களாயும் இருக்கிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் பாவத்தை உணர்ந்து உத்தம மனஸ்தாபப்படவேண்டியவனாயிருக்கிறான். நாம் அப்படிச் செய்கிறோமா? நாகமான் தன் இரதத்தைவிட்டுக் கீழே இறங்கி யோர்தான் நதியண்டை சென்றவண்ணமாக நாமும் நமது பாவங்களிமித்தம் முழுமனதோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டு கிறிஸ்துவானவருடைய இரத்தத்தினண்டை போகவேண்டியவர்களாயிருக்கிறோம். இதுவே உத்தம மனஸ்தாபம்.

**நாகமானின் ஸ்நானம்.** "தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினான். ஆறுதரம் மாத்திரம் முழுகியிருந்திருப்பானானால் ஒருவேளை குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்கியிராது. தேவமனுஷன் வார்த்தையின்படியே கடைசிவரைக்கும் முழுகினான்; சுத்தமானான். அப்படியே நாமும் நம்பாவங்களை ஒவ்வொன்றாய் அறிக்கைபிட்டு கிறிஸ்துவானவரின் இரத்தத்தில் முழுகவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒரு பாவத்தைமாத்திரம் பேணிவைத்துக்கொள்வோமானால், அதுவே நாம் ரட்சிப்படையத் தடையாயிருக்கும்! "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" (நீதி.28: 13). இதுவே பாவவறிக்கை.

**நாகமானின் ஆரோக்கியம்** முன்னே பார்த்தபடி அவன் தான் இரதத்திலிருந்து இறங்கினாலும், யோர்தான் நதியில் ஏழுதரம் முழுகினாலும் அவ்வளவு விசேஷமல்ல. ஆனால் "அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி அவன் சுத்தமானான்" என்னும் செய்தியே மிகவும் விசேஷமானது. அவன் தான் சுத்தமானதை தன்சரீரத்தில் கண்டான். தன் சரீரத்திலுள்ள சொறிகள் நீங்கினதையும் தன் சரீரத்திலுண்டாயிருந்த ஊறல்கள் நின்றுபோனதையும் அறிந்திருப்பான். இப்பொழுது அவனுடைய மனதில் ஒரு சந்தோஷம் உண்டாயிருக்கும். தான் எப்பொழுதும் குஷ்டரோகியாயிருந்து, குஷ்டரோகியாகத்தான் மரிக்கவேண்டும் என்று நினைத்திருந்த அவனுடைய உள்ளம் தான் பூரணசுகத்தை அடைந்தவுடனே,

*பூரித்திருக்கும். அவன் மாத்திரமல்ல, வேலைக்காரரும், வீட்டாரும், சிறிய ராஜாவும், இவனுடைய சுகத்திற்குக்காரணமாயிருந்த அந்தச் சிறு பெண்ணும், இவனுடைய சரீரசுகத்தையறிந்து சந்தோஷித்திருப்பார்களல்லவா? சகோதரரே இந்த மாறுதல் நம்மில் காணப்படுகிறதா? நாம் பாவமன்னிப்படைந்திருக்கிறோமா? பாவகுஷ்டரோகம் நம்மைவிட்டு நீங்கிற்று? நமது பாவக்குஷ்டரோகம் நம்மைவிட்டு நீங்கினது மெய்யானால் நமது இருதயம் சுத்தமாயிருக்கவேண்டுமே! பூரண சந்தோஷம் நம்மை ஆட்கொள்ளவேண்டும். நாம் தேவபார்வையிலும் மனுஷர் பார்வையிலும் கறையற்றவர்களும் மாசற்றவர்களுமாய்க் காணப்படவேண்டுமே. அப்படியில்லையானால், நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளாதிருப்போமாக. இந்த நேரத்திலேயே நமதருமை ரட்சகரண்டையில்போய் நமது குறைகுற்றங்களை அறிக்கையிட்டு பூரணசந்தோஷத்தோடே திரும்புவோமாக.*

*'இம்மானுவேலின் ரத்தத்தால்*
*சுரந்த ஊற்றுண்டே*
*எப்பாவத்தீங்கும் அதனால்*
*நிவிர்த்தியாகுமே.'*

அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத்தழலை எடுத்து என்னிடத்தில் பறந்துவந்தான். *ஏசாயா* 66.

அவன் சிரசின்மேல் சுத்தமான பாகைகளை வைப்பார்களாக என்றார். அப்பொழுது சுத்தமான பாகையை அவன் சிரசின்மேல் வைத்து அவனுக்கு வஸ்திரங்களைத் தரிப்பித்தார்கள். கர்த்தருடைய தூதன் அங்கே நின்றார். *சகரி.* 3. 5.

*தேவனுக்குச் சமீபமாய் வாசம் செய்கிறவர்களுக்கு அவருடைய சிந்தையே உண்டாயிருக்கிறது. செய்யவேண்டியதின்னதென்றும், அவருடைய சித்தம் இன்னதென்றும் வெகு தீவிரமாய் அறிந்துகொண்டு அதின்படியே செய்கிறார்கள். அவர் கூப்பிடுமுன் உத்தரவு கொடுக்கிறார்கள் அவர் கட்டளையிடுமுன் அவருடைய சித்தத்தின்படி செய்யத் தீவிரிக்கிறார்கள். அவருடைய பிரியம் இன்னதென்பது லகுவில் அவர்களுக்குத் தெரிந்துவிடுகிறது. வேலைக்காரரின் கண்கள் எஜமான்களின் கை முகம் இவைகளை நோக்கிக்கொண்டேயிருந்து எஜமானுடைய சாடைகளால் அவருடைய விருப்பத்தையறிந்து வாயில் சொல் பிறவாமலே வேலை செய்யும் வண்ணம், பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள அவருடைய சம்மனசுக்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளுகிறார்கள். வேதத்தில் இதற்கு இரண்டு*



*நல்ல திருஷ்டாந்தங்களுண்டு. சேராபீன்கள், தீர்க்கதரிசிகள், ஏசாயா தீர்க்கதரிசி, தேவதூதர்கள் பரிசுத்தர், பரிசுத்தர் என்று தேவனைத் துதிக்கும் பரிசுத்த உதடுகளையும் தன்னுடைய அசுத்த உதடுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தன்னை எவ்வளவு அசுத்தனென்றுணர்ந்தார். உடனே, கட்டளையிடப்படுமுன், சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து நெருப்புத்தழல் ஒன்றை எடுத்து ஏசாயாவின் உதடுகளைத் தொடப் பறந்துபோனான். தங்களுடைய அன்பிலும், தேவகுமாரனுக்குச் செய்யும் பணிவிடையிலும் நாமும் பங்குபெறும்படி சேராபீன்கள் எவ்வளவு ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள்! ஊழியர்களுடைய காரியம் இப்படியிருக்குமானால் எஜமானுடைய உள்ளம் எவ்வளவு அதிக அன்பால் நிறைந்திருக்கவேண்டும்? நட்சத்திர வெளிச்சத்துக்கும் சூரிய வெளிச்சத்துக்கும், மலையிலிருந்து வழிந்தோடும் சிற்றோடைக்கும், அமேசான் நதியின் பெருவெள்ளத்துக்கும் எவ்வளவு வித்தியாசம் ஏற்படுமோ, அவ்வளவு வித்தியாசம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஓர் சிருஷ்டியின் அன்புக்கும் தேவ குமாரனாகிய இயேசுவின் அன்புக்கும் உண்டு. இதற்கொப்பான இன்னொரு திருஷ்டாந்தமுண்டு. அது ஏதென்றால், பிரதான ஆசாரியனான யோசுவாவுக்காக சகரியா தீர்க்கதரிசி செய்த விண்ணப்பம்.*

*சிறையிருப்புக்குமுன் தீர்க்கதரிசிக்கும் ஆசாரியனுக்கும் ஓயாத சண்டை. எரேமியாவின் தீர்க்கதரிசனத்தில் இதற்கு அனந்த திருஷ்டாந்தம் உண்டு. ஆனால் பொதுவான துன்பம் பொறாமை பகையாகிய அக்கினிகளை அவித்துப்போட்டது. ஆகையால் பிரதான ஆசாரியன் தனக்கடுத்த பரிசுத்த பணிவிடைகளைச் செய்வதற்குப் போதுமான திறமையுள்ளவனாயிருக்கவேண்டுமென்று தீர்க்கதரிசி விரும்பினான். அவன் கண்களுக்கு முன்பாகவே மாறுதல்களெல்லாம் நடந்தன. சாத்தான் கண்டிக்கப்பட்டான். அழுக்கான வஸ்திரங்களெல்லாம் நீக்கப்பட்டன. புது வஸ்திரம் தரிக்கப்பட்டது. யோசுவா பரிசுத்தவான்களின் நீதியாகிய சுத்தமான மெல்லிய வஸ்திரம் தரித்து தேவதூதனுக்கு முன்பாகச் சுத்திகரிக்கப்பட்டவனாய் நின்றான். ஆனால் ஆசாரியத்துவத்துக்குரிய அதிகாரத்தைக் குறிக்கும் பாகை தரிப்பிக்கப்படவில்லை. இந்தக் குறை சகரியாவுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. ஆகையால் அவன் உரத்த சத்தமாய்த் தன் சிநேகிதனுடைய தலையின்மேல் பாகையைத் தரிப்பிக்கும்படி விண்ணப்பம் செய்தான். அவன் விண்ணப்பம் உடனே கேட்கப்பட்டது. அவன் பூலோகத்தில் கட்டினதெதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டது. அவன் சிரசின்மேல் சுத்தமான பாகையை வைத்தார்கள்.*

*இந்த விசேஷத்தைத் தியானிப்பது நமக்குப் பிரயோஜனமாயிருக்கும். ஏனென்றால் நாமும் மற்றவர்களுக்கு இரண்டுவிதமாய் ஆவிக்குரிய*

உதவிபுரிய அழைக்கப்பட்டிருக்கிறோம். முதலாவது நாம் அவர்களை உற்சாகப்படுத்தி அனல் மூட்டி எழுப்பிவிடவேண்டும். இரண்டாவது அவர்களுக்காகப் பரிந்து பேசவேண்டும்.

முதலாவது, நாம் மற்றவர்களை உற்சாகப்படுத்தி அனல் மூட்டி எழுப்பிவிடுவது நமக்குக் கிடைத்த ஓர் சலாக்கியம். விசுவாசிகள் குளிர்ந்து எண்ணமற்றுப்போவது கூடிய காரியமே. அவர்களிலுள்ள அனலையும் உற்சாகத்தையும் உலகமானது வஞ்சகமாய் எடுத்துப்போடுகிறது. பரிசுத்த அக்கினியானது எரிந்துகொண்டிருக்காதபடி அணைந்துபோகும்படி செய்யத்தக்க சோதனைகள் ஏற்படுகிறதுண்டு. ஆகையால் அவர்களிடத்தில் பொறுமையைக் கையாடி இடைக்கிடையே பலிபீடத்திலிருந்து அக்கினியை அவர்கள் மேல்கொட்டவேண்டியதாயிருக்கிறது.

நமது பரிசுத்த ஜீவியத்தின் மாதிரியாகிய வாசனையினால் அவர்களை அனல்மூட்டி எழுப்பிவிடலாம். சேராபீன்களின் துதியின் சத்தத்தை ஏசாயா கேட்டபடியால் தனக்கு நெருப்புத்தழல் அவசியமென்பதை யுணர்ந்தான். மற்றவர்களில் நாம் எவைகளைக் கவனிக்கிறோமோ அவைகள் நமக்குமிருந்தால் நல்லதென்கிற வாஞ்சையுண்டாகிறது. தேவன் தமது சபைக்களித்த அருமையான ஈவுகளிலெல்லாம் சிறந்தது எதுவென்றால் இந்தப் பரிசுத்த சம்மனசுக்கள் தங்கள் சிறகுகளால் தங்கள் முகங்களை மூடி அதினால் தங்கள் தாழ்மையைக் காட்டினபோதிலும் அவர்களில் எவ்வளவு உற்சாகம் காணப்படுகிறது.

நமது வார்த்தைகளினால் மற்றவர்களை அனல் மூட்டிவிடலாம். தங்கள் பழைய ஜீவியம் எப்படிப்பட்டதென்றும், தங்களைக் கிறிஸ்துவானவர் எவ்வளவு மாற்றக்கூடியவரும் ஆசையுள்ளவருமா யிருக்கிறாரென்றும் எந்த நேரத்திலும் தங்களுக்கு மேன்மையான மாறுதல் கிடைக்குமென்றும் மற்றவர்களுக்குத் தங்கள் வாயினால் சாட்சியிடுவார்களானால் அது அவர்களை அனல் மூட்டி எழுப்பும். எரிகிற தழலாகிய இந்த உற்சாக ஆவி கிறிஸ்துவின் சிலுவையாகிய பலிபீடத்திலிருந்து வருகிறது. மனுஷரைத் தேவனிடத்தில் கொண்டுவரும்படியாகத்தான் அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராகிய இயேசு சிலுவையில் மரித்தார்.

பக்தருடைய ஜீவியத்தையும் ஊழியத்தையும் குறித்து மற்றவர்களோடு பேசியும் அவர்களை அனல்மூட்டி எழுப்பிவிடலாம். பர்ன்ஸ் என்னும் பக்தன் ஒரு ராமுழுவதும் ஜெபத்தில் தரித்திருந்து மறுநாள் பிரசங்கம் பண்ண நூறுபேர் குணப்பட்டார்கள். ஜாண் லிவிங்ஸ்ற்றன் என்பவர் வல்லமையான பிரசங்கம் செய்ய ஒரே சாயங்காலத்தில் 500 பேர் குணப்பட்டார்கள். அதிலிருந்து ஓர் பெரிய எழுப்புதலுண்டாகி அநேக வருஷங்களாகப் பலன் கிடைத்துக்கொண்டேயிருந்தது. மூடி துரை வாலி



பனாயிருந்தபோது அவர் குடியிருந்த வீட்டிலிருந்த ஒருவர், மூடி துரை அதிகாலமே நாலுமணிக்கெல்லாம் எழுந்திருந்து சத்தமிட்டுத் தமக்கு வல்லமை வேண்டுமென்று ஜெபிப்பதைத்தான் கேட்டதாகச் சொல்லுகிறார். அதின் பலனாக மூன்று மிஷனெரி சங்கங்கள் ஆரம்பமாகிறதற்குக் காரணமாயிருந்ததாகச் சொல்லியிருக்கிறது.

பரிசுத்தனான மக்கேயின் ஸ்காட்லாந்து தேசத்தில் சுவிசேஷப் பிரசங்கிகள் இல்லாத விஸ்தாரமான நாடுகளில் சுற்றிப் பிரசங்கம் செய்துவந்தார். வசந்த காலத்தில் அபர்டீன் மாகாணத்தில் பிரசங்கம் செய்யும்போது தனித்தனியாட்களோடு சம்பாஷித்துச் சமயம் வாய்க்கும்போது ஆராதனைகள் நடத்துவாராம். ஒரு ஓய்வுநாள் சாயங்காலம் காலை ஆராதனை முடிந்தபின் அவர் அபர்டீன் பட்டணத்துக்குச் சமீபமாயுள்ள ஓர் சிறு கிராமத்துக்குப்போய் குருவானவரைக்கண்டு தான் மாலை ஆராதனையில் பிரசங்கம் செய்யலாமாவென்றார். குருவானவர், சபையார் பல இடங்களில் சிதறியிருப்பதால் மாலை ஆராதனை கிடையாது என்றார். மக்கேயின் அவரைப் பார்த்து, கோயில்மணியடித்தாலாவது சபையாரை அழைக்கக்கூடுமோவென்று கேட்டார். அப்போது குருவானவர், மணியடித்தால் எங்கேயோ அக்கினி பற்றியெரிகிறதென்று நினைப்பார்கள் என்றார். மக்கேயின் பிரதியுத்தரமாக என்றும் அவியாத அக்கினி எரிந்துகொண்டிருக்கிறதேயென்றார். அப்படியே மணியடிக்கத் திரள் ஜனங்கள் கூடினார்கள். மக்கேயின் வல்லமையாய்ப் பிரசங்கித்தார்.

நாமும் நெருப்புத்தழலண்டையில் தரித்திருந்தாலல்லாமல் மற்றவர்களுக்கு நெருப்புத்தழலைக் கொடுப்பது கூடாத காரியம். கர்த்தராகிய யேசு நம்மை மீட்கும்படி தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்த சிலுவையே நாம் தங்கியிருக்கவேண்டிய இடம். அங்கேதான் ரட்சகர் நமக்காகக் கொண்டிருந்த அன்பு எவ்வளவென்பதை நமக்குக் காட்டினார். அந்த அன்பின் தழலே நம்மை எப்பொழுதும் அனல் மூட்டிக்கொண்டிருக்கவேண்டும். அதைக்கொண்டே நாம் மற்றவர்களையும் அனல்மூட்டி எழுப்பிவிடவேண்டும்.

இரண்டாவது, நாம் மற்றவர்களுக்காகப் பரிந்து மன்றாடுவது நமக்குக் கிடைத்த இன்னொரு சலாக்கியம். அவன் சிரசின்மேல் தலைப்பாகையை வைப்பார்களாக என்று ஜெபிப்போமாக. ஒருவர் நல்ல பிரசங்கி, ஆனால் அவருடைய ஜீவியமோ இடறல், அவருக்குப் பரிசுத்தம் என்னும் தலைப்பாகை வைக்கப்படும்படி ஜெபிப்போம். இன்னொருவர் வேத சாஸ்திரத்தில் வல்லவர், நல்ல அறிவாளி, கிரமமாய் வேலை செய்வார். ஆனாலும் வேலையில் யாதொரு பலனுமில்லை, ஆவியானவரின் வல்லமை தேவை. இந்தப் பாகை அவர் தலையின்மேல் வைக்கப்படும்படி ஜெபிப்போமாக. இதுவே

நமது ரட்சகராகிய கிறிஸ்துவின் சிந்தை. இந்தச் சிந்தையுண்டாகத்தக்கதாக பரிசுத்தாவியாகிய அக்கினித்தழலும் பாகையும் தேவனுடைய ஊழியக்காரர் அனைவர்மேலும் வைக்கப்படும்படி அவர்களுக்காகத் தேவனை நோக்கிப் பரிந்து மன்றாடுவோமாக. நமது குருவானவரின் குறைகளை மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டு திரிவதைவிட்டு அவைகளை ஆண்டவரிடம் சொல்லி, அவர்கள்மேல் தலைப்பாகை வைக்கப்படும்படி மன்றாடுவோமாக.

---

யோசேப்புக்கு நேரிட்ட துன்பங்கள் அவன் தன் ஜீவியத்தில் பெற்றிருக்கக்கூடாத உயர்ந்த பதவிக்கு அவனைப் படிப்படியாய் வழிநடத்தின. யோபின் நிலைமை முன்னிருந்ததைப் பார்க்கிலும் இரண்டு மடங்கு ஆசீர்வாதமுள்ளதாயிருந்தது (யோபு 42: 10). நமது ஜீவியத்திலும் அப்படியேயிருக்கும். நாம் ஆவிக்குரிய பிரகாரமாய் வளரும்போது, துன்பங்கள் பெருகி; விரோதம் பலத்து, சத்துருக்கள் அதிகப்பட்டபோதுமானால், அதிகத் துன்பம் ராஜ்யத்துக்குட்படும் பிரவேசத்தை நமக்குச் சீக்கிரம் கொடுக்கும்

---

கல்வாரி எங்கேயோ அங்கே ஒலிவமலையும் உண்டு. சிலுவையிலறையப்பட நேரிடும் ஒவ்வோரிடத்திலும் பரமேறுதலுமுண்டு.

இயேசுநாதருக்காக அவருடைய சீஷரிலொருவன் விழித்திருந்து வேதனையோடு ஜெபித்துக்கொண்டிருக்கையில் அவர் ஒருமணி நேரமாவது தூங்கவில்லை.

---

**பரிபூரணமாயிரு: ஆறுதலடை.** எந்த மார்க்கத்திலும் புசித்துக் குடி, நாளைக்குச் சாவோம். ஆகையால் ஆறுதலாயிரு என்று சொல்வதைப் பார்க்கலாம். ஆனால் அவைகளில் பரிபூரணமடையும் வழி சொல்லக்காணோம். இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தில் மாத்திரம் இவ்விரண்டையும் பார்க்கலாம். அவர் நமது மத்தியில் நின்று தமது வலது கரத்தைத் தமது சீநிக்கு நேராகக் காட்டி நம்மை மேலே நோக்கிச் செல்லும்படி நடத்தி 'நீ பரிபூரணமடை' என்று நமக்கு வசனிக்கிறார். அதே சமயத்தில் தமது அன்பின் கரமாகிய இடது கரத்தால் நம்மை அணைத்துக்கொண்டு ஆத்துமாவே, நன்றாய் இளைப்பாறு. அதற்காகவே நான் வந்தேன் என்கிறார்.

---

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

266

18 APR 1921

December 1920.

Registered No. M 136

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXI டிசம்பர் 1920

## 'அவர் உங்களை ஆராய்ந்து பார்த்தால் அது உங்களுக்கு நலமாயிருக்குமோ'

யோபு 13. 9.

அப்போஸ்தலன்மார் கூட்டத்தில் ஒருவன் பிசாசாயிருந்தான். 'உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்' என்று ஆண்டவர் சொல்லும்பொழுது அவர்கள் 'ஆண்டவரே, நானோ, நானோ' என்று ஒவ்வொருவராய்க் கேட்கத் தொடங்கினார்கள். (மத். 26: 21, 22). அப்படிப்போல சிலருடைய சரித்திரத்தை எடுத்துத் தியானிக்கையில், 'ஆண்டவரே நானோ, நானோ' என்று நாம் ஒவ்வொருவராய்க் கேட்போமாக.

தேவனுடைய பணிவிடைக்காரரில் அபாத்திரராய்க் காணப்பட்ட சிலர்

1. **அந்நிய அக்கினியைக் கொண்டுவந்த ஊழியக்காரர்.** [லேவி, 10: 1, 2] நாதாபும், அபியூவும் கர்த்தருடைய பலிபீடத்தின் மேல் பரிசுத்த அக்கினி அவியாமல் எரிந்துகொண்டே வந்தது. [லேவி 6: 12]. வானத்திலிருந்து இறங்கின பரிசுத்த அக்கினி (லேவி. 9: 24). ஆம். தேவனுடைய அக்கினி. மனுஷனுடைய அக்கினி உதவாது. பூமியின் அக்கினி உதவாது. மேலும் அந்நிய தூபமும் வேண்டாம். [யாத். 30: 9]. தேவ கட்டளைப்படி செய்த பரிசுத்த தூபத்தை மாத்திரம் கொண்டுவரலாம். இவர்களோ துணிகரமாய் தங்கள் கலசங்களில் அந்நிய தூபத்தையும் அந்நிய அக்கினியையும் போட்டுக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். மோசம்! அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு அவர்களைப் பட்சித்தது. அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெந்தார்கள். தேவ ஊழியம் செய்கிறோம். அநேகர் அந்நிய அக்கினியைக் கொண்டுவருகிறார்

கள். வானத்திலிருந்து தேவாவியின் அக்கினியைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இருதயமாகிய பலிபீடத்தின்மேல் அந்தப் பரிசுத்த அக்கினி அவியாமல் எரிந்துகொண்டிருப்பது கிடையாது. வைராக்யம் இருக்கலாம். ஆனால் அது உலக அக்கினி. மாம்ச அக்கினி. வானத்திலிருந்து இறங்கி பலிபீடத்தின் மேல் எரிந்துகொண்டிருக்கிற பரிசுத்த அக்கினியை மாத்திரம் உபயோகப்படுத்தலாம். பிரசங்கத்தைப் பாருங்கள். தேவனிடத்தில் வந்து பேசவேண்டிய வார்த்தைகளைப் பெற்று அவரைச் சார்ந்து போதிக்காமல், வாயில் வந்தபடி போதிப்பது. அறிவைப் பாராட்டுவது. பள்ளிக்கூட வேலையும் அப்படி, நடக்கையும் அப்படி, முடிவைப் பாருங்கள். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினி.

2. **சுயபிரயோஜனத்தை நாடின ஊழியக்காரர்.** [1 சாமு. 2: 12—17]. ஏலியின் குமாரர் ஆசாரியர். ஓப்னியும் பினேகாசும் பேலியாளின் மக்களாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஐயோ, தேவபணிவிடைக்காரர் கர்த்தரை அறியவில்லை. பிழைப்புக்காக மாத்திரம் பணிவிடை செய்தார்கள். ஜனங்கள் பலியிடும்போது வேலைக்காரனை விட்டு மூன்று கூருள்ள ஆயுதத்தைக் கொண்டு முதல்தரமான இறைச்சியைத் தங்களுக்கென்று எடுத்துக்கொள்வது. அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்வான் (வ. 14). தேவனுடைய பாகத்தைக் குறித்தும் மகிமையைக் குறித்தும் கவலையில்லை. சுய லாபத்தை மாத்திரம் நாடுவது. நமக்குள்ளே இந்தக் குறிப்பு இல்லையா? சில இடங்களில் கலியாணம் நடத்தவேண்டுமென்றால், ஐயரவர்களுக்குக் கோழி வேண்டும், பணம் வேண்டும், இது வேண்டும், அது வேண்டும். சபையாருக்கு உதவி செய்யவேண்டுமானால் அவர்கள் ஆசாமிகளுக்கு இதைக் கொடுக்கவேண்டும்; அதைக் கொடுக்கவேண்டும் சில இடங்களில் உபாத்திமார் சொந்தத்துக்கு என்று வாங்கிப் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பது, விலங்கரை சம்பாதிப்பது, ஆத்துமாக்களை மாத்திரம் சம்பாதிப்பதில்லை. ஜனங்கள் அவர்களைக் கனம் பண்ணவேண்டும். ஐயோ, சுயபிரயோஜனத்தை நாடுவது எவ்வளவு? அவர்கள் முடிவையும் கவனியுங்கள். 'தேவனுடைய பெட்டி பிடிபட்டது. ஏலியின் இரண்டு குமாரராகிய ஓப்னியும் பினேகாசும் மாண்டார்கள் [1 சாமு 4: 11]. தேவனுடைய காரியத்துக்கு அவமானம், அவர்களுக்குமரணம்,

3. **கர்த்தருடைய சபையைத் தீட்டுப்படுத்தின ஊழியக்காரர்** நெகேமி. 13. ஆசாரியனாகிய எலியாசிப் அஞ்ஞானிகளோடு சம்பந்தம் பண்ணி, பரிசுத்த தேவாலயத்தில் முதலாய் அவர்களுக்கு இடங்கொடுத்தான். ஒரு அறையில் வைக்கப்பட்ட பரிசுத்த வஸ்துக்களை அப்புறப்படுத்தி அங்கே அவபக்தரான தன் பந்துக்கள் வந்து உட்கார ஏற்பாடு செய்தான் (வ. 5). தேவனுடைய காரியங்களை அலட்சியம்பண்ணி உலக



காரியங்களைக் கொண்டுவந்தான். அவனும் அவன் மகனும் ஆசாரிய ஊழியத்தையும் ஆசாரிய ஊழியனுக்கும் லேவியருக்கும் இருக்கிற உடன்படிக்கையையும் தீட்டுப்படுத்தினார்கள் (வ. 29). பரிசுத்தம் கிடையாது. நம்முடைய சபையின் குறைகளுக்கு ஆசாமிகளுடைய உலக சிந்தையும் நடக்கையும் காரணம் என்று அநேகர் சொல்லுகிறார்கள். நம்முடைய இருதயமாகிய தேவாலயத்தில் அசுத்தத்திற்கும் உலகத்திற்கும் இடங்கொடுத்திருக்கிறோமா? நம்முடைய நடக்கையினாலே சபையைத் தீட்டுப்படுத்துகிறோமா? எலியாசிப் பிசாசைக் கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டுவந்து வைத்தான். அப்படிப்போல் ஒன்று கிறிஸ்துநாதரைச் சபையில் கொண்டுவந்து நிறுத்துகிறோம். அல்லவென்றால் பிசாசைக் கொண்டுவந்து வைக்கிறோம். 'அவனை என்னை விட்டுத் துரத்தினேன்' என்று நெகேமியா சொல்லுகிறான். மிஷன் ஆசாமிகள் சிலருடைய [illegible]யத்தில் கிறிஸ்துநாதர் அப்படியே சொல்லவேண்டியதாய் வரும். அதினாலே சபையில் உண்டான தீட்டைப் பாருங்கள். (வ. 24) தேவனுடைய ஜனங்களோ அஞ்ஞானிகளோ. புது ஏற்பாட்டிலிருந்து திருஷ்டாந்தங்களை எடுத்துக் கொள்ளலாம். யூதாஸ், தேமா. ஆனால் இதோடு நிறுத்துகிறேன். 'ஆண்டவரே, நானோ, நானோ?'

T. W.

---

## கெம்ப ஐயர் வேதாகமப் பாடமுறை

### 28-ம் பாடம்—நீதிமொழிகள்.

### Part I

தாவீதின் சங்கீதங்கள் தனித்தியானத்திற்கும் ஆலய ஆராதனைக்கும் ஏற்றவைகள். சாலொமோனின் நீதிமொழிகள் நமது அன்றாடக உபயோகத்திற்கு ஏற்றது. நாம் எவ்வாறு ஜெபிக்கவும் சங்கிக்கவும் வேண்டுமென்று தாவீது கற்பிக்கிறான். நாம் எவ்வாறு ஞானமாய் ஜீவிக்கவேண்டுமென்று சாலொமோன் கற்பிக்கிறான்.

**ஆகமத்தைப்பற்றிய எண்ணம்.** இவ்வாகமம் அநேக நீதிநூல்கள் அடங்கியது. தேச நிபுணர்களுக்கு எப்போதும் உதவக்கூடிய ஒரு கைப்புஸ்தகம். யேசுகிறிஸ்துவை வெகு தெளிவாய்க் காட்டுகிறது. ஆயிர வருஷ அரசாட்சியில் அதின் குடிகளை நியாயந்தீர்ப்பதற்கு ஏற்பட்டுள்ள நியாயப்பிரமாணங்களுக்கு ஆதாரமான ஒரு பாகம் என்கலாம். அநேக ஆயுள்காலங்களுக்குரிய ஞானம் தொகுத்து உரைக்கப்பட்டிருக்கிறது கிரேக்க ரோம நூல்களின் சாஸ்திரங்களைவிட மேலான ஞானம் இச்சிறு ஆகமத்தில் அடங்கியிருக்கிறது. இது ஆச்சரியமல்ல! ஏனெனில் 'சாலொமோனிலும் பெரியவர் இங்கே யிருக்கிறார்'.

ஞானமானது ஒரு ஆளாகப்பாவிக்கப்பட்டுத் தானே பேசுகிறது. சாலொமோன் குழந்தையின் மழலைப்பேச்சையும் வாலிபனின் தெளிவான குரலையும் கேட்டு அறிந்தவன். வியாபாரியை அவன் கடையிலும் மனைவியை அவள் வீட்டிலும், ஆசாரியனை ஆலயத்தின் பலிபீடத்திலும், பிச்சைக்காரனை ஆலய வாசல்படியிலும் கவனித்து அவர்களுடன் அனுதாபங் கொண்டவன். நம்பிக்கையற்றவனின் முறுமுறுப்பையும் உலகத்தில் காரிய சித்தி அடைந்தவனின் கொக்கரிப்பையும் அதிகாரியின் கர்வ சத்தத்தையும் குடியானவனின் எளிமைப்பேச்சையும் புருஷப்பிராயமானவனின் முறுக்கான ஜீவியத்தையும் வயசாகி உலக நம்பிக்கை யிழந்து எப்போது கல்லறைக்குப் போவோமென்றிருப்பவனின் தன்மையையும் நன்றாய் அறிந்தவன். ஆகையால் பல தன்மையுடைய எல்லா வகுப்பார்க்கும் அவரவருக்கு வேண்டியது இன்னதென்று தெரியப்படுத்துகிறான். பரிசுத்த ஞானமடங்கிய சிறு வாக்கியங்களை அவர்களுக்கு எடுத்துக் கூறுகிறான். 8—ம் அதிகாரத்து ஞானம் கிறிஸ்துவையே குறிக்கிறது.

ஆகமத்தின் பெயர். இவ்வாகமத்தின் முதல் வசனத்தில் இருக்கிறது என்றாலும் 10-ம் அதிகாரத்தில் நீதிமொழிகள் ஆரம்பிக்கின்றன. ராஜ பக்தனுடைய ஞானம் ஜனங்களுக்கு சிறு பழமொழிகளாகவும் நீதிமொழிகளாகவும் கூறப்பட்டது. இம்முறையாய் உபதேசிப்பது கிழக்கத்திய நாட்டார்க்கே உரியது. வேதாகமத்தின் நீதிமொழிகள் எபிரேய செய்யுள்களாக அரங்கேற்றப்பட்டவை. அவைகள் நமக்கு தேவாவியினால் அருளப்பட்டிருக்கின்றன.

ஆக்கியோன். சாலொமோன் எழுதிய நூல்களில் மூன்று கனோன் வேதாகமத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு. சாலொமோன் தன் வாலிபத்தில் உன்னதப்பாட்டையும் புருஷ பிராயத்தில் நீதிமொழிகளையும் வயோதிபத்தில் பிரசங்கியையும் எழுதினதாக யூத சரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். அவன் மூவாயிரம் நீதிமொழிகளை எழுதினதாக ஜொசிபஸ் என்னும் சரித்திரக்காரன் சொல்லுகிறான். அவைகளில் அநேகம் அழிந்துபோயின. 1 இராஜா 4: 32, 33.

இவ்வாகமம் முழுவதும் ஒரே ஆக்கியோனால் எழுதப்பட்டதென்று சொல்ல ஏதுவில்லை. சாலொமோனின் 3000 நீதிமொழிகளில் முக்கியமானவை இதில் உண்டு.

எசேக்கியாவின் மனிதரால் சாலொமோனின் நீதிமொழிகளிலிருந்து தெரிந்து எடுக்கப்பட்டவை. 25 அதி. — 29 அதி. முடியவுள்ளது. ஆகூரின் உபதேச வாக்கியங்கள். 30 அதி. லேமுவேலின் தாய் தன் மகனுக்கு உபதேசித்த வசனங்கள். 31 அதி. மேற்சொன்ன இரண்டு ஆகூரும் சாலொமோ



னைத்தான் குறிக்கிறதென்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் அதற்கு ஆதாரமில்லை. என்றாலும் சாலொமோன் இவ்வாகமத்தை எழுதுவதற்கு தகுதியானவனாயிருந்தான். 1 இரா. 4: 29–34.

ஆகமத்தின் நோக்கம். தேவனுக்கு மிகுதியான வணக்கமும் அவருடைய நியாயத்தீர்ப்புக்குப் பயப்படும் பயமும் ஞானம் சன்மார்க்கம் இவைகளைப்பற்றிய வாஞ்சையும் உண்டாகும்படி ஏவுகிறது. 1 அதி. 2–4 இவ்வாகமம் பூமியிலுள்ள ஜீவியத்திற்குப் பரத்திலிருந்து கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் என்கலாம்.

## Part II

ஆகமத்தின் பொருள். முதல் 20 அதிகாரங்களின் பொருள் அடக்கத்தைப் பின்வருமாறு பிரிக்கலாம். (1) நியாயம், அநியாயம் 88 நீதி. மொழிகள். (2) காது, நாவு 80 நீதி. (3) ஞானம், மூடத்தனம் 76 நீதி. (4) செல்வன், பணிதன் 44 நீதி. (5) முயற்சி, சோம்பல் 38 நீதி. (6) அரசன் 34 நீதி. (7) ஆஸ்தி, தரித்திரம் 30 நீதி. (8) பெற்றோர், பிள்ளைகள் 27 நீதி. (9) உண்மை, பொய் 26 நீதி. (10) தாழ்மை, பெருமை 22 நீதி. (11) ஸ்திரீ 17 நீதி. (12) இரக்கம், கொடூரம் 13 நீதி. (13) கோபம் 12 நீதி. (14) சண்டை 11 நீதி. (15) யோக்கியம், வஞ்சகம் 10 நீதி. (16) தயவு 8 நீதி. (17) சந்தோஷம், துக்கம் 6 நீதி. (18) ஈகை 6 நீதி. (19) மதுபானம் 5 நீதி. (20) பட்சபாதம் 4 நீதி.

மேற்சொன்ன பொருள்களோடு நம்பிக்கை, கிழத்தனம், ஈகை, தைரியம், வஞ்சகம் சுயநீதி, விவேகம், பழிவாங்குதல், மனச்சாட்சி, தண்டனை, தன்னடக்கம், சதியோசனை, மிதமாயிருத்தல், சந்திப்பு, சாமர்த்தியம், நற்செய்தி, போஜனப்பிரியம், இச்சை, புகழ்ச்சி, கொலை, பிறர் காரியத்தில் தலையிடல், கவலைத்தாழ்ச்சி, வேலைக்காரர், இயற்கையின் ரகஸ்யங்கள் முதலிய பொருள்களும் அடங்கியிருக்கின்றன. மேலும் பரிஷ்காரமான தீமைகளைப்பற்றி ஆறு வகையான எச்சரிப்பு உண்டு.

1. பிள்ளைகளுக்குரிய பக்தியின்மை (1: 8, 9). 2. கெட்ட சகவாசம் (1: 10–19). 3. அசத்தியம். (16: 17). 4. சோம்பல் (6: 6-11). 5. மிதமிஞ்சின தீனி, பானம், மதுபானம். (20: 1). 6. சண்டை. [8: 30).

### ஆகமத்தின் மூன்று பிரிவுகள்

I. ஞானத்தைப்பற்றிய குறிப்புகள் 1 அதி.—9 அதி.

1 அதி. 1-7. இவ்வாகமத்தின் முகவுரையான வசனங்கள் இது எழுதப்பட்ட நோக்கத்தைக் கூறுகிறது. இதின் திறவுகோல் வார்த்தை 'ஞானம்' என்பது. திறவுகோல் வசனம் 'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்' 1 அதி. 7. மூடர் ஞானத்தையும் போதகத்தையும்

அசட்டைபண்ணுகிறார்கள். 'என் மகனே' என்ற வார்த்தைகள் இவ்வாகமத்தில் அடிக்கடி வருகின்றன. ஆகையால் இது பழமொழிகளைவிட புத்திபோதனைகள் அதிகமாய் அடங்கியது. இதில் இரண்டு வகையான சத்தங்கள் உண்டு. ஒன்று ஞானம், உணர்வு, அறிவு, விவேகம், போதனை, நிதானம். மற்றொன்று மூடத்தனம், பாதகம், பேதமை, அறிவீனம் முதலியன. இதில் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று ஞானத்தின் வழி. அதைக் கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள். மற்றொன்று மூடத்தனத்தின் வழி. அதின் பாதைகள் நரகத்தின் ஆழங்களிலிருக்கின்றன. சாலொமோனின் மதிகேட்டை மூடுகிற எந்தக் குறிப்பும் அவன் எழுதினதில் காணப்படவில்லை. தான் லேசாய்க் கண்ணிக்குள்ளான தீமைகளுக்கு விரோதமாய் மற்றப் பரிசுத்த சன்மார்க்கர்கள் எல்லாரையும்விட மிகக் கண்டிப்பாய் எச்சரிப்புக் கூறுகிறான்.

II. **நீதிமொழிகள்.** 10 அதி.—29 அதி. முடிய.

(a) **சாலொமோனால் எழுதப்பட்டவை.** 10 அதி.—22 அதி. 16 ஒவ்வொரு வசனமும் தனிமையாக நின்று இரண்டு பிரிவுகளுடையது. ஞானத்திற்கும் மூடத்தனத்திற்குமுள்ள வித்தியாசம் தெளிவாய்க் காட்டப்படுகிறது.

(b) **ஞானிகளான மனிதரால் எழுதப்பட்டவை.** 22 அதி 17.—24 அதி. இதின் முகவுரை வசனங்கள், 22 அதி. 17-21. மீதிப்பாகம் சாதாரண புத்திமதிகளும் சன்மார்க்க போதனைகளும் முக்கிய எச்சரிப்புகளும் அடங்கியது.

**மதுபானத்திற்கு விரோதமாக தேவ வசனமாகிய சாட்சியின் 14 விஷயங்கள்.** 23 அதி. 29—35.

1. மூர்க்கம் சண்டைக்குரிய குணம். 'யாருக்குச் சண்டைகள்'.
2. வாய் குழறிப் பேசுதல். 'யாருக்குப் புலம்பல்'.
3. நிரேகக் கெடுதி. 'யாருக்குக் காயங்கள்'.
4. கண் புகைச்சல். 'யாருக்கு இரத்தங் கலங்கின கண்கள்'.
5. பெருங்குடி. 'மதுபானம் இருக்கும் இடத்தில் தங்கித் தரிப்பவர்களுக்கும்'.
6. சோக்கிடமான ஆசை. 'கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குத் தானே'.
7. மதுபானத்தைக் கண்டு மயங்குதல் 'மதுபானம் இரத்தவர்ணமாயிருந்து பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது நீ அதைப் பாராதே'.



8. துர் இச்சை. 'உன் கண்கள் பரஸ்திரிகளை நோக்கும்'.
9. பேச்சு மாறாட்டம். 'உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்'.
10. புத்தி மாறாட்டம் 'நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப் போலவும்'.
11. நடக்கை மாறாட்டம். 'பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப் போலவும்'.
12. கண்டபடியான அடி, மிதி உதைகள். 'என்னை அடித்தார்கள் எனக்கு நோகவில்லை. என்னை அறைந்தார்கள் எனக்குச் சுரணையில்லை'.
13. இயல்பில்லாத திமிர். 'எப்பொழுது விழிப்பேன'?
14. கொடியஆசை. 'நான் பின்னும் அதைத் தொடர்ந்து தேடுவேன்

(c) **எசேக்கியாவின் மனிதரால் சாலொமோனின் நீதிமொழிகளிலிருந்து பேர்த்தெழுதப்பட்டவை.** 25 அதி — 29 அதி.

III. வசனங்கள். 30, 31 அதி

1. ஆகூரின் வசனங்கள் 30 அதி. ஈத்தியேலுக்கும் ஊகாலுக்கும் உரைக்கப்பட்டவை. இவர்கள் யாரென்று தெரியாது 4,19,24-28,30,31 ஆகிய வசனங்கள் யோபு ஆகமத்தின் வசனங்களை ஒத்திருக்கின்றன.

2. **லேமுவேலுக்குரைத்த வசனங்கள்.** 31 அதி. 1—9.

3. குணசாலியான நல்ல மனைவியைப்பற்றியது. 31 அதி 10—31. இவ்வித நடக்கைச்சிறப்பு மற்றெந்தப் பாஷை நூல்களிலும் காணப்படவில்லை.

---

## போதனை திருஷ்டாந்த இரத்னக்கோர்வை

### 2. அமைதி

பரிசுத்த சந்தோஷமாகிய தண்ணீரால் நிரப்பப்படவேண்டிய இருதயமாகிய பாத்திரத்தை ஆடாமல் அசையாமல் காத்துக்கொள்ளவேண்டியது முக்கியம்.

தேவபக்தியாய் நடக்கிறவர்களுக்கு மனரம்மியம் அவசியம். மனரம்மியம் வேண்டுமானால் தேவபக்தி இன்றியமையா அவசியம். 'நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்' என்பது வேதசுருதி.

அதிகப் பிரயாசத்தையும் பணத்தையும் செலவுசெய்து அநேகர் பேச்சுத்திறமை கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவன் பரிசுத்த ஆவியானவரின் பாடசாலையிலும் சிலுவைக் கலாசாலையிலும் படிக்கவேண்டிய பாடம் தன் நாவையடக்குதல்தான் என்று ஒரு பக்திமான் சொல்லுகிறார். உலகத்தில் சரியானபடி சந்தோஷமுள்ள ஜனங்கள் யாரென்று

வாஸ்தவத்தில் சொல்லவேண்டுமானால் சாந்தமும் அமைதியுமாயிருக்கிறவர்கள்தான். அநேகர் எப்போதும் படபடப்பாயும் மட்டுக்கு மிஞ்சின ஆத்திரமுள்ளவர்களாயு மிருக்கிறார்கள். சகலமும் அவர்களுக்கு இசைவாயில்லாதபோது அதைக்குறித்து மட்டுக்குமிஞ்சி பேசவும் மட்டுக்குமிஞ்சி கவலைப்படவும் தொடங்கி காரியத்தின் இயற்கையான தன்மைகளை வெகு தூரம் கெடுத்துப்போடுகிறார்கள்.

படபடப்பும் தன்னடக்கமில்லாத சுபாவமும் உலகத்துக்கு ஏதோ ஆபத்து வருகிறாப்போலவும் சிருஷ்டிகர் தமது கிரியையைக்குறித்துக் கவலையற்றவர்போலவும் எண்ணும்படிசெய்து தேவனைப்பற்றி அவிசுவாசத்தையும் தனது சொந்த அறிவீனத்தையும் அதிகரிக்கச்செய்கிறதாயிருக்கிறது. இவ்வித மனுஷர் தாங்கள் ஒரு கையால் கட்டுவதை அடுத்த கையினால் இடித்துப்போடுகிறவர்களாயிருக்கிறார்கள். உன்னால் கூடியதை நீ செய். உனக்கு மிஞ்சினதைக் கடவுளிடம் ஒப்புவித்துவிடு. மேகங்கள் இடையில் வந்து நீல ஆகாயத்தை மறைக்கின்றன என்பது நிசம்தான். சற்றுநேரம் பொறுத்துப்பார்த்தால் ஆகாயம் தானிருந்த இடத்திலேயே இருக்கின்றது என்று அறியலாம். ஏனென்றால் மேகம் பறந்துபோய்விடும். இப்படியே உத்தமருக்கு நேரிடும் துன்பங்களுமிருக்கும்.

பட்சிகளை கூண்டுகளுக்குள் அடைத்து இரண்டு மூன்று நாட்களுக்கு மேலும் கீழுமாகப் பறந்து அந்தச் சிறு சிறைச்சாலையிலிருந்து ஆத்திரத்தோடே வெளியேறிவிடும்படி பார்க்கிறது. ஆனால் பின்னும் சில நாட்களுக்குள்ளாக கூண்டுக்குள்ளிருக்கும்படி பழகிக்கொள்ளுகிறபடியால் அங்கிருந்து பாடவும் களிக்கவும் தொடங்கிவிடுகின்றன அப்படியே தேவனுடைய பிள்ளைகளுக்கும் சிக்குமுக்கான சில சம்பவங்கள் நேரிடும்போது படபடப்பும் ஆத்திரமுமிருப்பது இயல்புதான். என்றாலும் தேவன் அவர்களை வைத்திருக்கும் அந்தப் புதிய நிலைமையில் மனத்திருப்தியாயிருக்க வேண்டியதே. அப்போஸ்தலர்கள் கால் தொழுமரத்தில் மாட்டப்பட்டுச் சிறைச்சாலைக்குள் போடப்பட்டிருந்தபோதும் கூட அங்கிருந்து பாடிக்கொண்டிருந்தார்கள் என்று வாசிக்கிறோம்.

ஒரு பெரிய துப்பாக்கியில் உள்ள மருந்தைவிட ஜாஸ்தியான மருந்து ஒரு டப்பாசுக்கட்டில் இருப்பது நிசமானாலும் டப்பாசுகளின் வெடிப்பு பல திசைக்கும் சிதறினதாயும் யாதொரு பயனுமில்லாத வெறும் சத்தத்தை மாத்திரம் உண்டுபண்ணுவதாயுமிருக்கிறது. ஆனால் கொஞ்சமருந்து மாத்திரமுள்ள துப்பாக்கியின் ஒற்றைத் தொனியானது வெகுதூரம் துப்பாக்கிக்குண்டை செலுத்திக்கொண்டுபோய் பொருளின்பேரில் குறிப்பாய்த்தைத்து பிரயோஜனமுடையதாய்க் காணப்படுகிறது. நாம் பேசிக்கொள்ளும் எந்த விஷயமும் வித்தியாசமான அநேக வெறும் பேச்சுகளாய் மாத்திரமிராமல் காரியமானதாகவும் சொற்பமானதாகவுமிருப்பது அவசியம்.



ஒரு பள்ளிக்கூடத்துக்குள்ளே அநேகம் பிள்ளைகளிருந்தார்கள் அக்காலத்தில் ஊரிலுள்ள ஜனங்களுக்குள் அடிக்கடி தீ விபத்து நேரிட்டு எல்லாருக்கும் கலக்கத்தை உண்டுபண்ணிக்கொண்டுவந்தது திடீரென்று பள்ளிக்கூடத்தில் தீ தீ என்று பெருங் கூக்குரல் உண்டாயிற்று. பிள்ளைகள் புகையைப் பார்த்தவுடனே ஜன்னல்கள் வழியாகவும் வாசல் வழியாயும் ஒருவரையொருவர் நெரிந்து மிதித்துக் சாடி தப்ப எத்தனித்தார்கள். அதில் நொருக்குண்டு காயப்பட்டவர்கள் அநேகர். பெரும் இரைச்சலும் ஆத்திரமும் காணப்படத்தக்கதாய் பிள்ளைகள் ஒவ்வொருவராய் ஓட்டம் பிடித்துக்கொண்டிருக்கையில் ஒரு பாலியப் பெண் பெஞ்சின்மேல் தன்னிடம் விட்டுப் பெயராமல் தானிருந்த இடத்திலேயே தரித்திருந்தது. சகல அமளியும் அடக்கமும் நின்றுபோனபின்பு ஒரு மனிதன் அந்தப் பிள்ளையைப் பார்த்து இந்த ஆபத்தான சமயத்திலு முதலாய் இருந்த இடத்தை விட்டுப் பெயராமல் நீ ஏன் அழுதுகொண்டிருந்தாய் என்று கேட்டான். அதற்கு மாறுத்தரமாக அந்தப் பிள்ளை சொன்னது: என் தகப்பனார் தீயணைக்கும்படி ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர்களில் ஒருவராயிருக்கிறார் தீயைப்பற்றிய பயம் பள்ளிக்கூடத்தில் உண்டாகிறதாயிருந்தால் படபடப்புக்கொள்ளாமலும் இருந்த இடத்தைவிட்டுப் பெயராமலுமிருக்கவேண்டியது என்று உத்தரவு கொடுத்திருந்தார். ஆகையால் நானப்படியிருக்க நேரிட்டது. நமது ஜீவியத்தில் எவ்வித பயங்கரமான புசல் தொந்தரவும் வெள்ளம் வந்தாலும் பயப்படாமல் நமது பரமபிதாவின் கட்டளைப்படி அமரிக்கையாயிருப்பது நமது கடமை.

## 4. அவதூறு

தீயினாற் சுட்ட புண்ணுறுமே ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

ஈக்கள் ஒரு மனிதனுடைய அசுத்தமான புண்களின்மேலே மாத்திரம் உட்கார்ந்துகொள்ளுகின்றன. புண்ணில்லாத இடங்களில் அவைகள் தாமதிக்கிறதில்லை. ஒருவனுடைய குற்றங் குறைகளை மாத்திரம் எடுத்துப் பேசுகிற மனிதன் இப்படியே யிருக்கிறான். நன்றாய்ப் பழுத்த பழங்களை வௌவால் முதலிய பட்சிகள் கொத்தி கோறல் உண்டுபண்ணுகின்றன. அதுபோல சிறந்த லட்சணமுள்ள மனிதரை துஷ்டர்களான மனுஷர் நிந்தித்து அவதூறு மரியாதைக் குறைவாய் பேசுவது வழக்கம்.

ஒரு தடவை பிளேற்றோ என்னும் சாஸ்திரியைப் பார்த்து 'நீர் பாடின விதத்தைக் குறித்துப் பிள்ளைகள் பரியாசம் செய்கிறார்கள்' என்று ஒரு மனிதன் சொன்னான். அதற்கு அவர் 'அப்படியானால் நான் முன்னைவிட இனி நன்றாய்ப் பாடப் பிரயாசைப் படவேண்டும்' என்று விடை பகர்ந்தார். இன்னொரு தடவை அவரிடத்தில் அவரை நிந்தித்துப் பேச

கிற அநேகரிருக்கிறதாக அறிவித்தான். அதற்கு அவர் 'இனி மற்றவர்கள் என்னைக் குறித்துக் குறை கூறுவதற்கு இடமில்லாமல் நான் நடந்து கொள்ளவேண்டியது அவசியம்' என்றார். பின்னொரு தடவை ஒரு மனிதன் அவரைப் பார்த்து 'உமது சிநேகிதன் உம்மை அலட்சியமாய்ப் பேசுகிறான்' என்றான். அதற்கு அவர் 'என்னிடத்தில் ஏதோ தவறுதல் இருந்திருக்கவேண்டும். அப்படியில்லாத பட்சத்தில் என் சிநேகிதன் என்னைக் குறித்து அவ்விதமாய்ப்பேசமாட்டானே' என்றார்.

ஒரு நரைசனி பிரடரிக் என்ற சக்கரவர்த்தியிடம்போய் 'மகாராஜாவே, என் புருஷன் அடிக்கடி நிஷ்டூரமாய் என்னை நடத்திவருகிறார்' என்று முறையிட்டாள். சக்கிரவர்த்தி பிரதியுத்திரமாக 'அக்காரியத்தைக் கவனிப்பது எனக்கடுத்ததில்லையே' என்றார் அப்போது அவள் 'அவர் உம்மையுங்கூட அவதூறாய்ப் பேசுகிறார்' என்றாள் 'அதைக் கவனிப்பது உனக்கடுத்ததில்லையே' என்று சக்கரவர்த்தி பிரதிஉத்தரம் கொடுத்தார்.

மற்றவர்களைக்குறித்து தன்னிடம் எவராவது அவதூறு பேசும்போது அம்மனிதனுடைய நற்கருமங்களை என்னிடம் சொல்லு. யாதொரு நற்குணமும் நீ அவனிடத்தில் காணவில்லையா? சேற்றைக் கலக்கி வீசுவது இலேசுதான். தன் சொந்த வஸ்திரத்தில் சேறுபடாதபடி பார்த்துக்கொள்ளுவது ஒவ்வொரு மனிதனுக்குமுரிய கடமையாயிருக்கவேண்டும்" என்று ஒரு மகான் சொல்லுவது வழக்கம்.

"ஆஜரில்லாத எவரைக்குறித்தாவது தீது பேசும்படி விரும்புகிற ஒருவரும் இங்கே இருக்கக்கூடாது" என்கிற சட்டத்தை அகுஸ்தீன் பிஷப் தமது தீனி மேசையின்மேல் வரைந்து வைத்திருந்தார்.

முகத்துக்குமுன் ஒருவனுடைய நற்குணத்தை எடுத்துப்பேசவுங் கூடாது. முதுகுக்குப்பின் அவனுடைய துற்குணத்தைச் சொல்லவும் கூடாது. 'என்று பிஷப் பெவரிட்ஜ் என்பர் தமக்குப் பிரமாணமாக வைத்துக்கொண்டார்.

தியோடோஸியஸ் என்னும் சக்கிரவர்த்தி தனக்கு விரோதமாய்ப் பேசுகிற ஒருவருக்கும் தண்டனைகொடுக்கக்கூடாது என்று சட்டம் பிறப்பித்திருந்தார்.

"அற்பத்தனமாய் என்னைக்குறித்து ஒருவன் பேசினால் அதைக்குறித்து சிரித்துக்கொள்ளத்தான் வேண்டும். என்னைக்குறித்து அரோசிகமாய்ப் பேசினால் அதை மன்னித்து விடவேண்டும். என்னிடம் கோபதாபத்தோடு பேசினால் அதைப்பற்றி அனுதாபப்பட்டுக்கொள்ளவேண்டும். என்னைப் பற்றி வாஸ்தவமான காரியத்தைப் பேசினால் நான் அப்படிப் பேசுகிறவனுக்கு நன்றியறிதல் காண்பிக்கவேண்டியதேயன்றி வேறுவகை சிட்சை செய்யவே கூடாது என்று அவர் சொல்லுவது வழக்கம்.



## 5. அவிசுவாசம்

அவிசுவாசம் என்பது விசுவாசம் என்னும் கண்ணில் வளர்ந்த பூவுக்கு ஒப்பாயிருக்கிறது. தேவனுடைய கிருபை நிறைந்த வாக்குத்தத்தங்களை திமிர்பிடித்த கரங்களைக்கொண்டு பற்றிப்பிடிக்கிறதுபோல அவிசுவாசமிருக்கிறது.

விசுவாசமாகிய கப்பல் அவிசுவாசமாகிய பாறைமேல் மோதியடிபடுவது மோசமே. அவிசுவாசத்தோடு செய்யப்படும் ஜெபமானது பலிதமற்றதாகவே இருக்கும். சிறகு ஒடிந்துபோன பட்சியானது மகா நிர்ப்பந்தமானதே. ஆனால் விசுவாசமில்லாத கிறிஸ்தவனின் நிலைமை அதிலும் நிர்ப்பந்தமானது.

அழகான புஷ்பங்கள் காரிருளில் மங்கி நிறம் தோன்றாமற் போய்விடுகின்றன, அப்படியே உத்தம கிறிஸ்தவ லக்ஷணம் அவிசுவாசத்தால் இனந்தெரியாமற் போய்விடும்.

## 9. அனுதாபம்

மின்சாரக் கம்பியைப் பிடித்துக்கொண்டிருக்கிற எல்லாருக்கும் ஒரே வகையான நடுக்கமிருக்கிறதுபோல ஒரே மார்க்கானுசாரிகளான கிறிஸ்தவர்கள் யாவருக்கும் பொதுவான அனுதாப வுணர்ச்சி யிருப்பதவசியம். சங்கீத வாத்தியத்திலுள்ள எல்லா நோட்டுகளும் ஒரே போக்காகத் தொனித்தால் மாத்திரம் பாட்டின் இசையும் தொனியும் இனிதாயிருக்கும். ஒரே தேகத்திலுள்ள ஒரு தனித்த நரம்பு வேதனையடைந்தால் சகல நரம்புகளிலும் அந்த வருத்தம் பிரத்தியட்சமாய்த் தெரியும். கிறிஸ்தவர்கள் யாவரும் சபையாகிய ஒரே சரீரத்திலுள்ள பல அவயவங்கள்தானே. அப்படியானால் ஒருவருக்கு நேரிடுகிற கஷ்டம் மற்றவர்களுக்கும் பொதுவானதாகப் பாவித்து அனுதாபம் பாராட்டுதல் அவசியம்தான்.

இரண்டு மெழுகுவர்த்திகள் சேர்ந்தால் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயல்ல, ஒளியை அதிகரித்துக் காண்பிப்பதில் ஒற்றுமையுடையனவாயிருக்கின்றனவென்று அறிகிறோம்.

சந்தோஷ காரியத்தில் மாத்திரமல்ல துக்ககாலத்தில் ஒருவருக்கொருவர் அனுதாபம் பாராட்டுவதே மிக்க அவசியமான விஷயம். அதுவே இன்றியமையா அவசியமானது. ஏனென்றால் சந்தோஷமான காரியங்கள் பிறர் உதவியில்லாமலே நடந்தேறக்கூடியது. துக்கமான விஷயங்களோ பிறருடைய அனுதாபத்தினால் மாத்திரம் நீங்கக்கூடியது.

புதிதாய்க் கிறிஸ்தவனாகிற ஒரு மனிதனுக்கு இன்னொரு கிறிஸ்தவனுடைய தோழமை அவசியம். உத்தம கிறிஸ்தவர்களுக்குள்ளே அன்னியோன்னிய அனுதாப உணர்ச்சியவசியம்,

பரலோக பிரயாணிகள் ஒருவருக்கொருவர் ஆதரவும் நேசமும் உள்ளவர்களாகவும் ஒருவரையொருவர் தாங்குகிறவர்களாயுமிருக்கவேண்டியது.

அவர்கள் தனித்தவர்களாக இருக்கக்கூடாது என்று ஹென்றி உவார்பீச்சர் என்பவர் சொல்லுகிறார்.

### 79. தன்னயம்

இந்தக் குணத்தை ஒவ்வொருவரும் தன்னிடத்திலல்ல வேறே ஆட்களிடத்திலிருக்கக் காணும்போது ரொம்ப வெறுப்பாயெண்ணுகிறார்கள். ஆனால் இக்குணமில்லாதவர்கள் வெகு சொற்பப்பேர்தானுண்டு. கடற்பஞ்சானது தண்ணீரை உறிஞ்சி எடுத்துக்கொள்ளுகிறது. வெருவாய் கசக்கிப் பிளிந்து எடுத்தாலன்றி தண்ணீரை வெளியே விடுகிறதில்லை, சுயநயமுள்ள மனிதருமிப்படியே இருக்கிறார்கள் தன்னயமுள்ள மனிதர் நன்றாய்ப் பழுத்துக் கனிநிறைந்திருக்கிற திராட்சத்தோட்டத்துக்குள் கனி பிடுங்கவிடாமற் தடையாயிருக்கிற முள் செடிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவர்கள் யாதொரு மரம்செடியில்லாமல் வெறும் பாறையாகமாத்திரமிருக்கிற உன்னதமான மலை. அம்மலையை அடுத்துச்செல்லுகிற மனிதருக்கு அல்லது பிரயாணிகளுக்குப் பிரயோசனமான யாதொரு நிழலாவது கனிவர்க்கங்களாவது அதிலில்லை. நான் எனக்கென்று பிறக்கவில்லை. ஏனென்றால் என் தேசம் என்னால் பிரயோஜனமடையவேண்டியதாயிருக்கிறது. என்னிஷ்டருக்கும் சிநேகிதருக்கும் நான் பிரயோஜனமுள்ளவனாயிருக்கவேண்டியதே என்று பிளேற்றோ என்னும் சாஸ்திரி சொல்லுகிறார். தன் விஷயமாய் அல்லது தனது ஆட்கள் விஷயமாய் மாத்திரமுள்ள காரியத்தில் மெத்த அனுதாபசிந்தை பாராட்டி மற்றவர்கள் விஷயத்தில் யாதொரு கரிசனையும் பாராட்ட மனதில்லாமல் எண்ணுவதும் தன்னயமே. 'உன்னால் கூடியவாறு கிறிஸ்துநாதருக்குச் சமீபத்தில் சேர்ந்து வாசம்செய். சுயநயம் பாராட்டுதலாகிய குணத்துக்குமுன்பாக உன்னைச் செத்துப்போனவனாகப் பாராட்டு என்பது ஒரு பக்தன் தன் சிநேகிதர் ஒருவருக்குச் சொல்லிய புத்திமதி.

ஒவ்வொரு மனிதனும் தனக்காகவே ஜீவிக்கிறான். தேவன் சகலருக்காகவும் ஜீவித்திருக்கிறார் என்பது ஒரு பழமொழி ஆனால் மனிதன் தனக்காகவே ஜீவித்திருக்கிறதாயிருந்தால் பிசாசு சகலத்தையும் [அதாவது எவ்வித மனுஷனையும் சேர்த்து] தனக்கென்றே சொந்தமாக்கிக்கொள்ளுகிறது என்று ஒரு பக்தன் சொல்லுகிறார்.

கிறிஸ்தவர்கள் உலகத்துக்கு உப்பாயிருக்கிறார்கள் போதிக்கிறவர்களுமப்படியே இருக்கவேண்டிய தென்பதைச் சொல்லவேண்டியதில்லை. உப்பானது கரைந்தால்மாத்திரம் மற்றவர்களுக்கு ருசியைக் கொடுக்கும். அப்படிக்கில்லையானால் அதில் பிரயோஜனமில்லை. அப்படியே பிரசங்கிமாரும் தன்னயத்தை குறையப்பண்ணி அதைக் கரைத்துவிட ஆயத்தமாயிருந்தால்மாத்திரம் மற்றவர்களைச் சீர்ப்படுத்திக்கொள்ளக்கூடும். D. S.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

267

January 1921. Registered No. M 136

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

18 APR 192

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXII ஜனுவரி௴ 1921

## மூடி துரை பிரசங்கியான விதம்

அவர் உலகப்பிரகாரமான வியாபாரஞ்செய்துகொண்டிருந்தார். போஸ்றன் பட்டணத்தில் தமது வியாபாரசாலையிலிருக்கும்போது குணப்பட்டார். அநேக வருஷங்களாய்ப் பேர்க்கிறிஸ்தவனாகவே ஜீவித்துவந்தார். தான் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்வது கூடாத காரியம் என்று எண்ணினபோதிலும் கிறிஸ்து யேசுவைப்பற்றிய சிந்தை அவரைவிட்டுப் போகவில்லை. கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படி யாரும் அவரைக் கூப்பிடவுமில்லை. சிககாக்கோ பட்டணத்துக்கு வியாபார விஷயமாய்ப் போய் அங்கே குடியிருந்தார். அங்குள்ள ஆலயத்திலிருந்த ஐந்து வரிசை நாற்காலிகளுக்குத் தானே பணம் கொடுத்துத் தமக்குச் சொந்தமாக்கி தெருவில் போய் வாலிபரை அழைத்துவந்து அந்த நாற்காலிகளில் உட்காரும்படி செய்வார். ஆனால் அந்த வாலிபர்களோடு ஆவிக்குரிய சம்பாஷணை செய்ததில்லை, அதெல்லாம் குருமாருடைய வேலையென்றே எண்ணிக்கொண்டார். இவ்விதமாய்ச் சிலகாலம் வேலை செய்தபின், ஓர் ஓய்வுநாள் பள்ளிக்கூடம் ஆரம்பித்தார். அதிலும் மிச்சமான பேரைக் கூட்டிச் சேர்ப்பது தான் சிறந்த வேலையென்றெண்ணி அநேகர் ஓய்வுநாள் பள்ளிக்கூடத்துக்கு வரும்படி அழைத்துவந்தார். 1200 அல்லது 1300 பேர்வந்தால் அவருக்குச் சந்தோஷம். ஆயிரத்துக்குக் குறைந்துவிட்டால் துக்கப்படுவார். ஆனால் அந்த வருட்பில் குணப்படுதல் காணப்படவில்லை. அப்பொழுது தேவன் அவருடைய கண்களைத் திறந்தார். அந்தப் பள்ளிக்கூடத்தில் வாலிபப் பெண்களுக்கு ஓர் வகுப்பு இருந்தது. அந்த வகுப்பிலுள்ள பெண்கள் உல்லாசப் பிரியர். ஒருநாள் அந்த வகுப்பை நடத்தும் உபாத்தியாயர் வியாதியாயிருந்தார். இவர் தாமே நடத்தினார். பிள்ளைகள் இவரைப்

பார்த்துச் சிரித்தார்கள். அப்போது இவருக்கு விசனமுண்டாகி, இந்தப் பிள்ளைகளெல்லாரையும் வகுப்புக்கு வெளியே துரத்தி இனிமேல் வரவேண்டாம் என்று சொல்லட்டுமோவென்று யோசித்தார். மறுவாரத்தில் அவர்களுடைய உபாத்தியாயர் வந்துவிட்டார். அவருடைய முகம் வெளுத்துக் காணப்பட்டது.. அவரைப் பார்த்து உமக்கு என்ன வியாதியென்று கேட்டார். அவர் பிரயுத்தரமாக " சுவாசாசயத்திலிருந்து ரத்தம் வந்தது. டாக்டர் நானிந்த இடத்தில் இருக்கக்கூடாது. நியுயார்க்ப் பட்டணத்துக்குப் போகவேண்டுமென்கிறார். அங்கே நான் போனால் சீக்கிரம் சாகவேண்டியதுவரும் என்றார். அது மாத்திரமல்ல, வேறொரு கவலையும் அவருக்கிருந்ததாகத் தெரிந்தது. அதை அவர் விசாரித்தபோது அவர், 'ஐயோ, நான் என் வகுப்பிலுள்ள ஒரு பிள்ளையையாவது கிறிஸ்துவண்டை வழி நடத்தவில்லை. என் பிள்ளைகளுக்கு நான் செய்த நன்மையிலும் நான் செய்த தீமையே அதிகம்' என்று வருத்தமடைந்தார். இவர் பேசினதுபோல அந்த வகுப்புகளை நடத்தின எவரும் பேசாதபடியால் மூடிதுரை மறுபடியும் அவரைப் பார்த்து 'அப்படியானால் நீர் போகுமுன் உமது மனதிலிருக்கும் இந்த வருத்தத்தை உமது வகுப்புப் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் சொல்லிவிட்டுப் போவீரானால் நன்றாயிருக்கும். ஓர் வண்டியமர்த்தி நாமிருவரும் அந்தப் பிள்ளைகளின் வீடுகளுக்குப் போவது உமக்குப் பிரியமா? என்று கேட்டார். அவரும் சம்மதிக்கவே, இருவருமாகப் புறப்பட்டு, முதலாவது ஓர் பெண்ணின் வீட்டுக்குப் போனார்கள். உபாத்தியாயர் அந்தப் பிள்ளையின் ஆத்தும நிலைமையை எடுத்துக்காட்டிப் பேசினார். அந்தப் பிள்ளை மிகவும் உணர்வடைந்து முன் வகுப்பு நேரங்களில் சிரித்ததற்குப் பதிலாகக் கண்ணீர்விட்டழுதது. உபாத்தியாயர் மூடிதுரையை ஜெபம் பண்ணும்படி கேட்டார். மூடிதுரை ஆத்துமாவின் குணப்படுதலுக்காக ஜெபித்த முதல் சமயம் இதுவே. மறுபடி இன்னொரு பிள்ளையைக் கண்டுபேசப் போனார்கள். 10 நாளைக்குள் பிள்ளைகள் எல்லாரையும் பார்த்து முடித்தார்கள். உபாத்தியாயர் புறப்படுமுன் மூடிதுரை அவருடைய வகுப்புப் பிள்ளைகளை எல்லாம் ஒன்று சேர்த்து வழியனுப்பும்படி செய்தார். உபாத்தியாயர் பரி. யோவான் சுவிசேஷம் 14-ம் அதிகாரத்தை வாசித்துமுடித்தார். பிள்ளைகள் ஒருவர் ஒருவராய் வியாதியாயிருந்து சீக்கிரத்தில் மரிக்கப்போகிற தங்கள் உபாத்தியாயருக்காக ஜெபம்பண்ணினார்கள். எல்லாரும் ஜெபம் பண்ணி முடிந்தபின் பாட்டுப்பாட ஆரம்பித்தார்கள். பாட முடியவில்லை. அன்றிரவு மூடிதுரையின் மனதிலுண்டான மாறுதல் மிகவும் பலமாயிருந்தபடியால் அந்த நேரத்தின் சம்பவத்தை மறக்கமுடியவில்லை. அது முதல் வியாபாரம் செய்யவேண்டுமென்ற எண்ணமே முற்றிலும் அவர் மனதை விட்டுப் போய்விட கர்த்தருக்கு ஊழியம் செய்யவும் ஆத்துமாக்களை ரட்சகரண்டை வழிநடத்தவுமாகத் தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்தார்.

---



# ஜெபத்தின் வல்லமை

டாக்டர் மூடி துரையவர்களின் ஜீவியத்தில் நடந்த ஓர் சம்பவம் ஜெபத்தின் வல்லமைக்குத் திருஷ்டாந்தமாகும். மூடி துரையவர்கள் இங்கிலாந்து தேசத்தில் ஸ்பெஷல் மிஷன் பிரசங்கம் முடித்தபின் அமெரிக்காவுக்குப் போகும் ஓர் கப்பலில் [ஸ்பிரீ] பிரயாணம்பண்ணினார்கள். துறைமுகத்தை விட்டு 800 மைல் போனபின்னர் கப்பல் யந்திரத்தில் தண்ணீருக்குள்ளிருக்கும் ஓர் பாகம் உடைந்துபோக அலைகளின் மும்முரத்தினால் ஸ்குரு ஆணியொன்று கழன்று கீழ்த்தட்டில் ஓர் துவாரம் உண்டாய்விட்டது. தண்ணீர் அதிவேகமாய் அத்துவாரத்தின் வழிசென்றுகொண்டிருந்தது. அக்கப்பலின் அறைக்கதவுகளெல்லாம் தண்ணீர் செல்லக்கூடாதபடி அமைக்கப்பட்டிருந்த போதிலும் தண்ணீர் அதிவேகமாய் உட்சென்றபடியால் துவாரத்தை அடைக்கவாவது தண்ணீரை வெளியே இறைக்கவாவது முடியாமற்போயிற்று. அன்றிரவு முழுவதும் கப்பலானது மும்முரமான புசல்காற்றினாலும் மலைபோன்ற அலைகளினாலும் மிகவும் அலைசடிப்பட்டது. கப்பலில் 700 பிரயாணிகளுண்டு. இரண்டாம் தட்டறைகளில் 27 அடி தண்ணீர் வந்துவிட்டது. ஒவ்வொரு நிமிஷமும் கப்பல் தண்ணீரில் மூழ்கிப்போகும் என்று பிரயாணிகளெல்லாரும் பயந்துகொண்டேயிருந்தார்கள். சனிக்கிழமையாகிய அன்றிரவு முழுவதும் பிரயாணிகளில் ஒருவரும் நித்திரை செய்யவேயில்லை. ஞாயிறு காலையில் மூடி துரையவர்களும் ஐக்கியமாகாணங்களின் சேனைக்கு இரண்டாவது தளகர்த்தரான ஜெனரல் ஹாவெர்டையும் ஆலோசித்துக் கப்பல் மாலுமியிடம் உத்தரவுபெற்று கப்பலிலுள்ள பிரயாணிகளில் ஒருவர் தப்பாமல் மேல்தட்டறையில் ஆராதனைக்கு வரும்படி ஒழுங்குசெய்தார்கள். புருஷர், ஸ்திரீகள், பிரயாணிகள், கப்பலாட்கள், பலஜாதி, பாஷை, மதஸ்தரான யாவரும், பேதமின்றிகூடிவந்தார்கள். மூடி துரையவர்கள் சுவிசேஷத்தையெடுத்து நித்திய ரட்சிப்பைப்பற்றி பிரசங்கித்தார்கள். ஜனங்கள் யாவரும் வெகு கவனமாய்க் கேட்டார்கள். பிரசங்கம் முடிந்தபின் மூடித்துரை வசனத்தைக்கேட்ட யாவரும் ஆத்துமசரீர மீட்படையும்படி ஊக்கமாய் ஜெபித்தார்கள்.

ஆராதனை முடிந்து ஒரு மணி நேரத்தில் காற்று நின்றது. அலைகளின் மும்முரம் தணிந்தது. மிகுந்த அமைதல் உண்டாயிற்று. இரவில் இளைப்பினாலும், கவலையினாலும், சோர்படைந்தவராய் ஜெனரல் ஹாவர்டைப் பார்த்து 'நாம் மேலே போனாலும் சரி, கீழே போனாலும் சரி, நான் என் அறையில்போய்ப் படுத்துக்கொள்ளப்போகிறேன்' என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள்போய், தாயின் மடியில் குழந்தை சுகமாய் படுத்துறங்கும் வண்ணம் அமரிக்கையான நித்திரைசெய்தார். கப்பலிலுள்ள வேறு

யாரும் தூங்கவில்லை. அன்றிரவு முழுவதும் யாதொரு சகாயம் கிடைக்க வழியில்லை மறுநாள் காலை 5-மணிக்கு ஜெனரல் ஹாவெர்ட் என்பவரின் ஐந்துவயதுள்ள பேர்த்திப்பிள்ளை சத்தமிட்டுக் கூப்பிட்டு 'கப்பல் வருகிறது, கப்பல் வருகிறது' என்று சொல்லிற்று. அந்தப் பிள்ளை சொன்னது சத்தியம். அநேக மைல்களுக்கப்பால் திடீமேற்றப்பட்ட கப்பல் ஒன்று இந்தக் கப்பலின் அடித்தட்டில காணப்பட்ட நெருப்பைக் கண்டுகொண்டது இராமுழுவதும் கப்பலிலுள்ள ஜனங்கள ஆண்டவரைநோக்கி ஜெபித்துக் காவலுக்கு ஆட்கள் நியமித்திருந்தார்கள். அந்தக் கப்பல் நெருங்கிவரவே பிரயாணிகள் யாவரும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்திக் கைகளைத் தட்டினார்கள். உடனே அந்தக் கப்பல் சமீபித்துவந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு கப்பலையும் தன்னோடு தொடுத்துக்கொண்டு ஐந்துநாள் இரவு பகல் பிரயாணம்பண்ணித் துறைமுகம சேர்ந்தது. கப்பலில் அவிசுவாசியான வாலிபன் ஒருவனிருந்தான். கப்பல் துறைமுகம் சேர்ந்ததும் இன்னொரு வாலிபன் மூடி துரையிடம் வந்து 'மூடி, நீர் சொன்னது சத்தியம், தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர்' என்றான். அப்போது அவிசுவாசியான வாலிபன் 'மூடி, நீர் ஜெபம்பண்ணினாலும் ஜெபம்பண்ணாவிட்டாலும் அந்தக் கப்பல் இந்த வழியாய் வந்திருக்கும்' என்றான்.

மூடி துரை பிரதியுத்தரமாக, 'சரி, நீர சொன்னபடி யிருக்கட்டும். ஆகிலும் நாங்கள் ஜெபம்செய்தோம். தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டார். இது சத்தியம்' என்றார். அவர்கள் கரை பிடித்ததும், கப்பலில் ஓர் ஸ்தோத்திர ஆராதனைவைத்து 107-ம் சங்கீதம் 23-31 வசனம்வரை வாசித்தார் கப்பலிலுள்ள யாவருடைய இருதயமும் அசைவுற்றது. கர்த்தர் தங்களுக்குப் பாராட்டின பெரிய கிருபைக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்.

## உலகக் கவலை

நமக்கிருக்கும் உலகப்பிரகாரமான கஷ்டங்களினால் நாம் பாரமடைந்து கவலைப்படக்கூடாதென்று கண்டிப்பான கட்டளை நமக்கிருக்கிறது. அது பாவம். அதின் தண்டனையும் அதோடு கூடவரும். நமக்காகக் கவலைப்படுகிற ஒருவர்மேல் நமது கவலைகளையெல்லாம் போட்டுவிடலாம் என்பது நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய சலாக்கியமல்லவா? அவர் நம்மோடு சில வேளைகளில் அன்போடு அடியிற்கண்டவிதம் பேசுகிறதை நாம் கேட்கலாம்- நான் உன்னை நேசிக்கிறதுபோல எந்தத் தாயும உன்னை நேசித்திருக்கமாட்டாள் எந்த மனுஷனும தன்னுடைய வருத்தங்கள், கஷ்டங்களுக்காகக் கவலைப்படுகிறதைப் பார்க்கிலும் நான் உனக்காகக் கவலைப்படுகிறேன். நீ உன்னை எனக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறபடியால் உன்னுடைய கவை



காரியங்களெல்லாம் என்னுடையவை. உன் தலையிலுள்ள ரோமங்களெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றன. உன் கண்ணீர்களை நான் காண்கிறேன். அவைகளையெல்லாம் என் துருத்தியில் வைத்திருக்கிறேன். அவைகள் எனக்குப் பொக்கிஷவைப்பாக இருக்கின்றன. ஓ, என் பிள்ளையே, சத்துரு உன்னைச் சேதப்படுத்தவிடேன். உன்னைத் தொடுகிறவன் என் கண்ணின் கருப்பு விழியைத் தொடுகிறான் என்னை முற்றிலுமாய் நம்பு. எல்லாவற்றிற்கும் மேலாக, உன்னை என் கைகளைவிட்டு எடுத்துக்கொள்ள விரும்பாதே. நீ உனக்காகக் கவலைப்படும்போதெல்லாம் என் கைகளைவிட்டு உன்னைப் பறித்துக்கொள்ளுகிறாய். உன் சொந்தக் காரியங்களைக்குறித்து நீதானே ஒழுங்குசெய்யாதே. அவைகளை நான் ஒழுங்குசெய்ய இடங்கொடு. நீ உன்னை ஞானியென்று எண்ணி உன்னை நீயே நடத்தும்போது நான் மனவருத்தமடைகிறேன். நான் உன் காரியங்களை கவனிக்கிறது போல உலகத்தில் யாரும் உனக்காக கவலைப்படுவார்கள் என்று எண்ணாதே. ஆகையால் என்னை அதிகமாய்ப் பற்றிக்கொண்டு, நேசி. நான் உன்னை நித்தியமாய் நேசிக்கிறேன் என்கிற இன்ப நிச்சயத்தை நான் உன்னில் உண்டாக்குகிறதுபோல என்னுடைய அன்பிலேயே நீ சார்ந்து எனக்கே உன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்திருக்கிறாய் என்னும் சந்தோஷம் எனக்கு உண்டாகும்படி நடந்துகொள்

## பாவியாகிய ஒரு ஸ்திரீ லூக். 7: 37.

இந்த ஸ்திரீயைப்பாருங்கள். அவள் காரியத்தில் ஆண்டவருடைய பரிபூரண கிருபை விளங்குகிறது. நமக்கு நல்லநம்பிக்கை உண்டாக, சண்டாளப் பாவிகளை ரட்சித்து மாதிரிகளாக வைத்திருக்கிறார். மகதலேனா மரியாள், பவுலப்போஸ்தலன். சிலுவையில் அறையப்பட்ட கள்ளன், பாவமுள்ள இந்த ஸ்திரீ.

1 **பெரிய பாவியாயிருந்தாள்.** 'பாவியாகிய ஒரு ஸ்திரீ' 'இவள் பாவியாயிருக்கிறாளே' துன் மார்க்கமாய் நடந்த ஸ்திரீ, விபசாரக்காரி, அந்தப் பட்டணம் எங்கும் அவள் அக்கிரமம் தெரியும். அவள் பெயர், நடக்கை எல்லாம் நாற்றமாயிருந்தது. வெளியரங்கமாய்ப் பாவம் செய்தவள். பணத்துக்காகத் தன்னைக் கெடுத்துப்போட்டாள். நான் அப்படிப்பட்டவனல்ல என்கிறாயோ? அந்தப் பாவமில்லாவிட்டாலும் வேறே பாவமில்லையா? 'ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும் ஒன்றில் தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்'(யாக். 2: 10.) ஒன்று மாத்திரமா? பொய் எத்தனை? வஞ்சகம் எத்தனை? தூஷணம் எத்தனை? எல்லாம் பாவமே. பிராஞ்சுதேசத்தில் ஒரு அம்மாள் இருந்தாள். மெத்தப்

பக்தியுள்ளவள் என்று எல்லாரும் சொன்னார்கள், நினைத்தார்கள். அவளிடத்தில் ஒரு தீமையையும் ஒருவரும் காணவில்லை. அந்த ஊரில் அவளே பக்தியில் சிறந்தவள் என்று எண்ணினார்கள். வியாதிவந்தது இறந்துபோனாள். சாகும்போது ஒரு காரியத்தைக் கேட்டாள். என் தலை ரோமத்தை ஒருவரும் தொடக்கூடாது. அவள் தலைமயிர் கறுப்பல்ல சிவப்பு, பொன் நிறமாயிருந்தது. என் தலை ரோமத்தை மாத்திரம் தொடக்கூடாது என்று கேட்டாள். என்னமோ, ஓர் வகையான விருப்பம் என்று எண்ணி அதைத் தொடாமலிருந்தார்கள். நல்ல கல்லறையைத் தயார்பண்ணி அவளை அடக்கம் பண்ணினார்கள். மோட்சத்துக்குப் போய்விட்டாள் என்று எல்லாரும் நினைத்தார்கள். அநேக வருஷகாலம் சென்றுபோயிற்று. அந்தக் கல்லறையைத் தற்செயலாய் திறந்துபார்த்தார்கள். அங்கே அந்த ஸ்திரீயின் எலும்புக்கூடு இருந்தது. தலையுமிருந்தது. அந்த மயிரில் என்னமோ பளிச் சென்று மின்னினது. பார்த்தார்கள். அங்கே அந்த ரோமத்தில் பல பொன் நாணயங்கள், தங்கம் இருந்தது. தலைக்கூந்தலில் அந்தப்பணம் பின்னியிருந்தது. மயிர்ச்சுருளோடு அது கட்டியிருந்தது. பண ஆசை தெரியவந்தது. அந்த அம்மாளுக்கு அந்தரங்க பாவம் இருந்ததாக ஒருவருக்குந் தெரியாது. பின்புவெளிக்குவந்தது. எத்தனை கீர்த்தியான அம்மாள் பொருளாசையினாலே கெட்டுப்போனாள். நீங்களும் அப்படி உங்கள் அந்தரங்க பாவம் சுவாமிக்குத் தெரியும்.

2. தன்பாவத்தை உணர்ந்து மெய் மனஸ்தாபப்பட்டாள். இச்சரித்திரத்தின் முன்பின் சம்பவங்களைக் கவனித்தால் காரியம் விளங்கும். கப்பர்நகூம் ஊரில் கிறிஸ்துநாதர் தெருப்பிரசங்கம் செய்கிறார். பாவிகளின் நேசர்! அன்பின் சொரூபி. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அழைக்கிறார் (மத். 11: 28-29). அந்த ஜனக்கூட்டத்தில் இந்த ஸ்திரீயும் நிற்கிறாள். கொடிய பாவி! பாவத்தால் வருத்தப்பட்டவள் பெரிய பாவ பாரம் சுமக்கிறவள்! அந்த வார்த்தை அவள் மனதில் தைத்தது. நான் இப்போது செய்கிறது பெரியதப்பிதம் என்று உணர்ந்தாள். இப்படிப்பட்ட அன்புள்ள ரட்சகர் அழைத்திருக்க நான் என் வீணாய்க் கெட்டுப் போகவேண்டும் என்று நினைத்தாள். மனதுக்கு முன்பாகச் செய்த பாவங்கள் ஒவ்வொன்றாக எழும்பிநின்றது. கண்ணீர்விட்டாள். தன் துன்மார்க்கத்தைவிட்டுவிடத் தீர்மானித்தாள். வீட்டுக்குப்போய் ஜெபம்பண்ணினாள். தன் அக்கிரமத்தையெல்லாம் கண்ணீரோடு அறிக்கையிட்டாள்.

3. பாவத்தை வெறுத்து ரட்சகருடைய பாதத்தில் வந்துவிட்டாள். பரிசேயன் வீட்டில் தைரியமாய்ப் பிரவேசித்தாள். மற்றவர்கள் பேசும் பழிப்பான வார்த்தைகளை அவள் கவனிக்கவில்லை. எல்லாரும் காணத்தக்



கதாக ஆண்டவருடைய பாதத்தில் வந்துவிட்டாள். வேறே சக்தியில்லை அந்தத் திருப்பாதங்களைக் கண்ணீரினாலே துடைத்து, நனைத்து, தன் தலைமயிரினாலே முத்தம்செய்து பரிமள தைலத்தைப் பூசினாள். ஆசையைப்பாருங்கள்! ஆத்திரத்தைப் பாருங்கள். இனிப் பாவநாசகரை சேவிப்பேன். பிழைப்பைப்பற்றிக் கவலைப்படவில்லை. பாவத்தை வெறுத்து ரட்சகரை அண்டிக்கொண்டாள். அவர் புறம்பே தள்ளவில்லை.

4. கைம்மாறில்லாமல் ரட்சிக்கப்பட்டாள். கண்ணீர் அவளை ரட்சித்ததோ? இல்லை, பரிமளதைலம் ரட்சித்ததோ? அல்ல. ஆண்டவர் சொன்ன உவமையைப் பார்த்தால் தெரியும். கொடுக்க நிர்வாகமில்லாத போது கடனை மன்னித்து விட்டான். இரக்கம். பாவியாகவந்தாள். பாவத்தோடு வந்தாள். வந்தவுடனே ரட்சிக்கப்பட்டாள், என்று அறிந்து அல்லவா அதிகமாய்க் கண்ணீர்விட்டாள். முத்தம் செய்தாள். இரண்டு வார்த்தைகள் மாத்திரம் அவளுக்குச் சொல்லப்பட்டது அருமையான வார்த்தைகள். உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது, உன் விசுவாசம் உன்னை ரட்சித்தது, சமாதானத்தோடேபோ'. ஒன்று அவளை விட்டு எடுக்கப்பட்டது —பாவம் ஒன்று அவளுக் கொடுக்கப்பட்டது—சமாதானம்.

T. W.

---

## அசிஸ்ஸி பட்டணத்துப் பிரான்ஸிஸ் என்னும் பரிசுத்தவானுடைய ஜீவிய விருத்தாந்தம்

### I-ம் அத்தியாயம்

#### பிரான்ஸிஸின் பாலிய பருவம்

பீட்ரோ பெர்னார்டோன் என்னும் பெயருள்ள ஒரு ஜவுளி வர்த்தகன் இத்தாலியா தேசத்திலுள்ள அசிஸ்ஸி என்னும் பட்டணத்தில் வசித்தார். அவர் பிராஞ்சு தேசத்திற்குப் போயிருந்தகாலத்தில் அவருக்கோர் ஆண் குழந்தை பிறந்து யோவான் என்று அழைக்கப்பட்டது. 1182-ம் ஆண்டு பிரான்சிலிருந்து திரும்பி, அசிஸ்ஸியின் ஒடுக்கமான தெருக்கள் கடந்து தன்னுடைய வீட்டிற் சேர்ந்தபோது அப்புதல்வன் வரவை எதிர்பார்த்திருப்பதைக் கண்டார். தன்னுடைய பிரயாணத்தை ஞாபகப்படுத்தும்பொருட்டு அப்பையனுக்கு பிரான்சிஸ் என்னும் பெயரிட்டார். அதற்குப்பின் எப்பொழுதும் அப்பெயரே அவனுக்கு வழங்கிற்று.

பீட்ரோ என்பவர் தனக்கு மகன் பிறந்திருக்கிறான் என்னும் பெருமையுடையவராய், அவனுக்குப் புதுப்பெயரிட்டதுமட்டுமல்ல, பையனின் மனம் விரும்பியபிரகாரம் அவனுக்கு எல்லாம் கொடுத்து, நேர்த்தியான உடைகளும் மிகவும் நல்ல சாப்பாடும் கொடுத்துவந்தார். அந்தப் பையன்

சற்று பெரியவனானபோது அவனுக்கு அவசரத்துக்கு மிஞ்சியும் பணம் கொடுப்பார். ஆகையால் பிரான்சிஸ் முழுவதும் சீர்கெட்டவனாகி, அயலகத்தார் அவனுடைய வீண் ஆடம்பரத்தைக் குறித்து இகழ்ந்துபேசினார்கள். அப்பையனுடைய தாயின் சிநேகிதியான ஒரு அம்மாள் உங்களுடைய பையன் இராஜ பிரபுவைப்போல் ஜீவிக்கிறான் என்று சொன்னார்கள். அப்பையனின் தாயாகிய பிக்கா "பொறுமையாயிருங்கள். அவன் தேவபுத்திரனாக ஜீவிக்கிற நாள் வரலாமே" என்று மாறுத்தரம் சொன்னார்கள். ஆனால் அந்தச் சமயத்தில் அப்படிப்பட்ட நாள் வருவது வெகுதூரமாய்க் காணப்பட்டது. பிரான்சிஸ் பெரியவனானபோது அதிகக் கவலையீனமாயும், சோம்பேறித்தனமாகவுமிருந்தான். அவன் தன் தகப்பனுடைய தொழிலில் உதவிசெய்யவேண்டியவனாயிருந்தாலும்; தன் இஷ்டப்படியே காலம் போக்கி, அவனுக்குத் தட்டில்லாமல் எதையும் கொடுத்துவருகிற தகப்பனுடைய ஐசுவரியத்தைச் சார்ந்து ஜீவிக்கிறவனாயிருந்தான். அவன் தோற்றத்தில் நல்ல தேஜசுடையவன். முகமலர்ச்சியுள்ளவன். யாவரும் விரும்பத்தக்கவிதமாய்ப் பேசும் சாமர்த்தியமுடையவன். ஆகையால் அப்பட்டணத்தின் மற்ற வாலிபர் அவனை அதிகமாய் நேசிப்பதுண்டு. இயற்கையாய் சகல திறமும் வாய்த்தவன் இவனுக்கு ஏராளமான பணமுமுண்டு. ஆகவே, குடிகாரராய் தங்கள் இஷ்டம்போலெல்லாம் ஜீவித்துவருகிற வாலிபருக்கு இவன் தலைவனானான். கொஞ்சக்காலம் சென்றபின் பிரான்சிஸ் மற்றத் தேசங்களுக்குச் சென்று யுத்தவீரனாகவும் சேவித்தான். இச்சந்தர்ப்பங்களெல்லாம் அவன் தன்னிலும் தன்னுடைய உல்லாசமான ஜீவியத்திலுமட்டுமே கவனத்தைச் செலுத்தும்படி ஏவின.

கடவுளைப்பற்றியாவது, கடவுள் விரும்பும் ஜீவியத்தைப்பற்றியாவது அவன் இதுவரையிலும் நினைத்ததேயில்லை. ஏழைகளுக்குப் பிச்சைகொடுப்பதும், சடங்காசாரங்களை நிறைவேற்றுவதுமே மார்க்கம் என்பதாய் அக்காலத்தவர்கள் எண்ணினார்கள். இருதயத்தில் உண்டாகும் உற்சாகத்தோடும் அனலோடும் முகமுகமாய் மனுஷனை தேவனோடு ஐக்கியப்படுத்துவதுமான மார்க்கம் வெகு சொற்பமாய்க் காணப்பட்டது. ஆகையால் இவருடைய ஜீவியம் இவ்விதமாய்ப்போனது அதிக ஆச்சரியமல்லவே. எனினும் தேவன் பிரான்ஸிஸோடு பேசி, ஜீவியத்தை விளையாட்டுக்காலமாகவல்ல, அதைவிட மேலான ஓர் நிலைமையாகவிருக்கிறதென்னும் சத்தியத்தை அவர் மனதிலே காட்டினார். அவர் இருபத்தைந்து பிராயமானபோது மிகவும் கஷ்டமான வியாதியால் பீடிக்கப்பட்டு, சிலவாரங்களாக மரணத்தறுவாயிலிருந்தார். இக்கஷ்ட நிலை நீங்கியும் வெகுகாலமாக நடமாடச் சக்தியற்றவராய்ப் படுக்கையிலிருந்து, தன் ஜீவியத்தின் சுவாசம்போலிருந்த இன்பங்களை அனுபவிக்கக் கூடாதவராயிருந்தார். இவ்வியாதிப் படுக்கையிலேயே தன் ஜீவியத்தின் முதலாவதான பெரிய பாடத்தைக் கற்றுக்கொண்



டார். அதாவது பணத்தினால்வரும் பொருட்களினாலுண்டாகும் சந்தோஷத்தில் சார்ந்திருப்பது நல்லதல்ல; ஏனெனில் அவைகள் நிலையானவைகள் அல்ல. அவைகளால் வரும் சந்தோஷம் அவைகளோடு போய்விடுகின்றன. சுகமாய் இன்பத்தை யனுபவிக்கும்போதும், வியாதிப்படுக்கையிலிருக்கும் காலத்திலும் நிலையாயிருக்கக்கூடிய சந்தோஷமே நமக்கு வேண்டும் என்பதே. வெளியே நேர்த்தியான சூரியப் பிரகாசத்தில் போகத் தனக்குப் பலம்வந்தால் எல்லாவிதமான சந்தோஷமும் திரும்பவரும், தன்னை ஒடுக்கிக்கொண்டிருக்கிற பாரமும் காணாமற்போய்விடும் என்று நினைத்தார். ஆகவே ஒருநாள் தனக்குச் சற்று பலம் வந்திருக்கிறதென்று அறிந்தபோது, அவர் பிரயாசப்பட்டு வெளியே போய், தனக்கு முன் விரிந்துகிடந்த ஓர் அலங்காரமான படத்தைப் பார்த்துச் சந்தோஷப்பட்டார். முன்போல எல்லாம் அழகாகத் தோன்றினாலும், தனக்கு ஏதோ ஒரு குறைவு இருக்கிறதாக அறிந்தார். தனக்கு முற்காலத்திலுண்டான சந்தோஷம் இன்னும் ஏற்படவில்லை, இச்சந்தோஷமும் மாறிப்போம் என்ற எண்ணம் அவரைத் தொடர்ந்தது. தன் ஆத்துமாவை ஆறுதல்படுத்துவது எதுவாயிருக்கக்கூடும் என்று அறிய ஆசைப்பட்டார். தேவன் அவரோடு பேசிக்கொண்டிருந்தாலும் அச்சப்தத்தை அவர் அறியவில்லை.

## 2-ம் அத்தியாயம்

வியாதிப்பட்டுக் கஷ்டப்பட்டவர்கள் நோய் நீங்கிச் சொஸ்தமாகிற நிலைமையிலிருக்கும்போது, நல்ல பிரதிக்கினைகளைச் செய்வதுபோல், பிரான்ஸிஸும் தன் வியாதி நீங்கிச் சுகமாகிற நாட்களில் நல்ல தீர்மானங்கள் பலவற்றைச் செய்துகொண்டார். தான் அச்சமயத்தில் என்ன செய்வதெனவறியாதிருந்தும், அதற்குமுன் தன் ஜீவியத்தை வீணாய்க் கழித்ததுபோல இனி ஒருபோதும் செய்வதில்லையென்று தீர்மானம்செய்தார். ஏதாவது அரியதோர் பெருஞ்செயலொன்றியற்றி தன் காலத்தைப் பிரயோசனமாய்க் கழிக்கவேண்டுமென்றெண்ணிக்கொண்டார். அப்பெருங் காரியம் எப்போது வாய்க்குமென்று காத்துக்கொண்டிருக்கும் காலத்தில் ஓர் தருணம் நேர்ந்தது. அப்பட்டணத்திலுள்ள சீமான் ஒருவன் அப்பொழுது நடந்துகொண்டிருந்த ஓர் யுத்தத்திற்குப் புறப்படும் சமயமாயிருந்தது. தானும் அச்சீமானோடு சென்றாலென்னவென்று பிரான்ஸிஸ் யோசித்தார். அப்படிச்செய்வது அவருக்கு நற்காரியமாய்த் தோன்றிற்று. அவருடன் செல்வதற்காக, சிறிதுகாலமும் போக்காமல் உத்தரவுபெற்றுக்கொண்டு, அச்சமயத்திற்கேற்றவாறு தகுதியான ஆயத்தம் செய்துகொண்டார். இவருடைய பிரயாண உபகரணங்கள் அப்பிரபுவினுடையவைகளைவிட அதிக ஆடம்பரமானவைகள். தான் அந்த யுத்தத்தில் காண்பிக்கப்போகிற வீரச்செயல்களைக் குறித்து, அதிக உற்சாகமும் உல்லாசமும் உடையவராயிருந்

தார். இச்சமயத்தில் தான் கண்ட ஓர் தரிசனத்தால் அவர் இன்னும் அதிகமாய் ஆனந்தப் பரவசமானார். ஆயுதங்களும், பற்பலவிதமான படைக்கல அடையாளங்களும் தொங்கவிடப்பட்டிருந்த விஸ்தாரமான ஓர் அறையில் தானிருந்ததாகக் கண்டார். அவருக்கும் அவருடைய பரிவாரத்தாருக்கும் இவைகளெல்லாம் பத்திரமாய் வைக்கப்பட்டிருக்கிறதாக ஒரு சப்தம் தொனித்தது. அவைகள் ஒவ்வொன்றிலும் சிலுவையடையாளமிட்டிருக்கிறதைச் சிறிது ஆச்சரியத்தோடு கவனித்தார். ஆனால் அவ்வடையாளங்களின் கருத்தென்னவென்பதையறியவேண்டுமென்கிற எண்ணம் அவருக்குத் தென்படவில்லை. யுத்த ஆயுதங்களிலும், தான் அடையப்போகும் கீர்த்தியிலுமே அவர் முழுவதுமாய் எண்ணங்கொண்டிருந்தார். தான் கண்ட தரிசனத்தையெடுத்துரைக்கும்போது 'நான் நிச்சயமாகவே ஓர் பெரிய அதிபதியாவேன்" என்று சொன்னார். பிரயாணப்படுவதற்கேற்பட்ட காலம் வந்தபோது பிரான்ஸிஸ் புறப்பட்டார். ஆனால் சிறிது தூரம் போவதற்குள் அவர் ஜுரத்தால் பீடிக்கப்பட்டு அப்புறம் செல்லுதற்கியலாமற் போயிற்று. அவர் கண்ட தரிசனம் விநோதமான விதமாய் நிறைவேறலாப்போற் காணப்பட்டது. இதன் காரண காரியங்களைச் சிந்தித்துக்கொண்டு தூக்கமயக்கமாய்ப் படுத்திருக்கும்போது, தான் ஆயுதசாலையில் கேட்ட அதே சப்தம் தன் செவிகளில் திரும்பவும் விழுவதாக அவருக்குத் தோன்றிற்று. "பிரான்ஸிஸே; எஜமானோ, ஊழியக்காரனோ, ஐசுவரியவானோ, ஏழையோ யார் உனக்கு அதிக நன்மையை அருளமுடியும்" என்று அச்சப்தம் சொன்னது. அதற்குப் பிரான்ஸிஸ் "எஜமானும், ஐசுவரியவானுமே". என்றார். அப்படியானால் ஊழியக்காரனை வேண்டி எஜமானையும், தரித்திரனையும்வேண்டி ஐசுவரியசம்பன்னராகிய தெய்வத்தையும்விட்டு விலகுவதின் காரணமென்னவென்று அச்சப்தம் வினவிற்று. "ஆகையால் நான் செய்யவேண்டியதென்ன" வென்றார் பிரான்ஸிஸ். வீட்டிற்குத் திரும்பு. நீ செய்யவேண்டிய ஊழியம் என்னவென்று உனக்குக் காட்டப்படும்" என்று உரைக்கப்பட்டது. தெய்வம் தன்னோடு மெய்யாகவே பேசியுமிருக்கிறதென்று பிரான்ஸிஸ் நினைத்தார். வீட்டிற்குத் திரும்புவது அவருக்குக் கஷ்டமான ஓர் காரியமேயானாலும், மறுத்துரையாது திரும்பி மதிப்புவாய்ந்த தன் தகப்பனாது வெறுப்புக்காளாகி வீடுவந்துசேர்ந்தார். அதற்குமேல் அவர் அறியவேண்டிய விஷயங்களுக்காகக் காத்திருந்தார். இன்னும் பொறுமையோடு காத்திருக்காமல், அவர் அவநம்பிக்கையினுழையில் அகப்பட்டுழந்தினார். தான் அதற்குமுன் வீணாய்க்கழித்த நாட்களை நினைத்து நினைத்து ஏக்கமுற்று மனம்வருந்தினார். நோம்பு நோற்பதினாலும் ஸ்தலயாத்திரைகள் போவதினாலும், தான தர்மஞ்செய்வதாலும், தன் பழைய பாவதோஷங்களை நிராகரிக்க நாடிநின்றார். ஆனால் இவைகளில் ஒன்றிலாகிலும் அவரது சோகம் நீங்கி அவர் நாடிநின்ற நன்மை புலப்படவில்லை. தன்னூருக்கு சமீபமாயுள்ளதோர்



குகைக்குச் சென்று தியானம் செய்வது வழக்கம். தன்னைப்பற்றியுள்ள தெய்வ தீர்மானம் என்னவென்பதையறிய பேரவாக்கொண்டு தியானத்தில் தன் ஆன்மாவையோர் தைலம்போல் வார்த்திட்டார். தன் பழைய ஜீவியத்திற்குத் திரும்பி சந்தோஷமாயிருக்கலாமா என்னும் சோதனைகள் தோன்றியதும் உண்டு. அவரது நண்பர்கள் யாவரும் தங்களுடைய உல்லாசமான நேசன் தங்களோடில்லையேயென்று மனம் வருந்தினர். தங்கள் இன்பமுள்ள பழைய நேசனை தங்கள் மத்தியில் திரும்பவும் காண வெகு விருப்பமுற்றிருந்தார்கள். தான் தனியாய்த் தியானம்செய்து உலாவிவரும்போது அங்கவீனத்தால் கோரரூபமுள்ள ஓர் கிழவியை அடிக்கடி சந்திப்பதுண்டு. பக்தியில்லாத ஜீவியம் செய்தால் வயசு காலத்தில் அவளைப்போல் இருக்க வேண்டுமோ வென்னும் பயம் அவருக்கிருந்தது. தன்னைப்பற்றிய தெய்வ தீர்மானத்தையும் அதன் பலனாய் நிகழக்கூடிய யாவற்றையும் ஏற்றுக் கொள்வதே சோதனைகளை ஜெயிக்கும்முறை.

இந்த முறையைக் கைக்கொண்டவராய் தன் சோதனைகளை ஜெயித்தார். சந்தேகம், சோதனை முதலியவைகளோடு போராடிக்கொண்டிருக்கும் காலத்தில், அவருடைய இருதயத்தில் வெளிச்சம் பிரகாசித்தது. கிறிஸ்துநாதரொருவரே தனக்குற்ற துன்பங்களெல்லாவற்றையும் நிராகரிப்பதற்கு வேண்டியவர் என்று அறிந்தார். மானிடருக்கு இரட்சகரும், முன்மாதிரியும், எஜமானும், நண்பருமாகிய கிறிஸ்துநாதரே, தனக்காக ஜீவன் விட்டவரும், தன்னை வெளிப்படுத்துகிறவருமானவர் என்று பிரான்ஸிஸ் கண்டார். பிரான்ஸிஸ் என்பவருடைய இருதயத்தில் பெருவெளிச்சம் பிரகாசித்தது. அவருக்கு இந்த மேகம்போன்ற துன்பங்களெல்லாம் நீங்கின. தெய்வமக்களுக்குரிய சுதந்தரத்திற்குப் பங்குள்ளவரானார்.

அன்றுமுதல் அஸிஸிபட்டணத்தின் தெருக்களிலும், ரஸ்தாக்களிலும், ஓர் புதிய பிரான்ஸிஸ் தென்பட்டார். அவருக்கு மனிதர்பேரிலும், கடவுளின்பேரிலும் அன்பு பொங்கிற்று. அன்பின் கிரியையினாலேயே அன்பை அறியலாம். தன் அன்பைக் கிரியையினால் காட்ட அவருக்கு அதிக ஆசை. சிறிதுகாலத்திற்குமுன் வெறுமையாய்த் தோன்றிய உலகம் இப்பொழுது தெய்வ சமூகம் நிறைந்ததாயிற்று. இப்பொழுது, மனுஷனை உடையினாலாவது, சாமர்த்தியத்தினாலாவது, மதியாமல், இயேசுநாதர் தாம் மனுஷாவதாரம் செய்து பிரதிஷ்டை செய்த மனுக்குலத்தைச்சேர்ந்தவன் என்பதனால் மிகவும் அருமையுள்ளவனாகிறான். பிச்சைக்காரருடைய கந்தைத்துணிகள், முத்தமிடத்தக்கவைகளாயின. அறிவீனருக்காகவும் ஓர் கேடர்களுக்காகவும், ஜீவனைக் கொடுப்பது இலகுவாக யிருந்தது. வேலைகளை இழிவாக எண்ணாமல், ஒவ்வொரு வேலையும் பிறருக்கு நன்மை செய்யும் சந்தோஷசமயமெனத் தோன்றிற்று, மனுஷரால் அருவருக்கப்படுகிற

குஷ்டரோகியைக்கூட சர்வத்தையும் ஏற்றுக்கொள்ளுகிற அன்பினது ஆசீர்வாத வாழ்த்ததலை அடையாமற்போவதில்லை. பிரான்ஸிஸ் என்பவர், ரஸ்தாவில் ஓர் குஷ்டரோகியைச் சந்தித்து, தன் முந்தின வழக்கம்போல் அக்குஷ்டரோகியை விட்டோடாமல், அவன் தன்னிடத்தில் நீட்டிய கோரமான கையை முத்தமிட்டார் என்னும் விஷயம் எல்லாருக்கும் தெரிந்த சரித்திரமே. இதைக்குறித்து அவர் தாமே சாட்சியாக உரைப்பதென்னவென்றால் 'முன் கசப்பாயிருந்தவைகளெல்லாம், என் சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் இனிமையாயின' என்பதே. அப்படிப்பட்ட ஆச்சரியமான காரியங்களையும் அன்பு செய்து முடிக்கக்கூடியது.

## போதனு திருஷ்டாந்த இரத்னக் கோர்வை.

### 1. அட்வென்று.

சகல ஜாதிகளும் எதிர்பார்த்திருந்தது கிறிஸ்துநாதரின் முதலாம் வருகை. அவருடைய இரண்டாம் வருகையோ கிறிஸ்தவர்கள் மாத்திரம் எதிர்நோக்கும் விஷயம், கண்ணீர் நிறைந்த உலகமாகிய பள்ளத்தாக்கு உலர்ந்து வசதியானதாய்க் காணப்படுவதற்கு கிறிஸ்துவாகிய இரக்ஷத்தின் சூரியன் தமது கதிர்களை வீசும்படி நாம் எதிர்பார்க்கவேண்டியது அவசியமே. ஒரு யூதன் ஜூபிலி வருஷத்துக்காகவும் அந்நிய நாட்டில் பரதேசியாயிருக்கிற ஒரு மனிதன் தன் சொந்த வீட்டின் சந்தோஷத்துக்காகவும் ஆசிப்பதைப் பார்க்கிலுமதிகமாய் தனது இரட்சகரின் இரண்டாம் வருகை சீக்கிரம் இருக்கும்படி மெய்க்கிறிஸ்தவன் விருப்பமுள்ளவனாயிருக்கவேண்டும். ஏனென்றால் அதுவே அவன் நம்பிக்கைக்குப் பலனும் அவனுடைய விசுவாசத்துக்குக் கிடைக்கவேண்டிய பலனுமாயிருக்கிறது. ஆகையால் 'கர்த்தராகிய இயேசுவே, சீக்கிரமாய் வாரும்' என்பதே அவனுடைய முக்கிய ஜெபமாயிருக்கிறது.

ஒரு மெஜிஸ்திரேட்டு விசாரணை நடத்தும் நோக்கமாய்க் கச்சேரியில் மணி அடிக்கப்படுகிறது. யாதொரு கட்சி விவாதத்தில் சம்பந்தப்படாத ஜனங்கள் அந்த மணிச்சத்தத்தைக்குறித்து எவ்வித திகிலுமின்றி இருக்கிறார்கள். ஆனால் குற்றவாளியாக அடைத்துக் கைதியாய் வைக்கப்பட்டிருக்கிற மனுஷனுக்கோ அந்த மணியோசை மிகுந்த கலக்கத்தைக் கொடுக்கிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் நான் விசாரணைக்குக் கொண்டுபோய் விடப்படுவேன், என் கதி என்னமாயிருக்குமோ, நான் செய்த பாதகத்துக்காக ஒருவேளை கொடிய தண்டனை கிடைக்குமே என்று மகா திகில் அடைந்துகொண்டிருப்பான். பிரதான தூதனுடைய கடைசி எக்காள சத்தமும் இப்படியே துன்மார்க்கருக்குப் பயங்கரத் தொனியாயிருக்கும்.

நதியைக் கடந்து செல்லும்படி ஜனங்களுக்கு உதவிபுரிந்து ஜீவனம் செய்து வருகிற வள்ளக்காரன் தன் தோணிக்குள் பிரயாணிகளெல்லாரும் பிரவேசித்து முடியுமட்டும் சற்றுநேரம் கரையில் தாமதிக்கிறான். இந்த விதமாகவே இரட்சகரும் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் தொகை தமது திருச்சபையாகிய பேழைக்குள் வந்துசேரும் பரியந்தம் தமது நியாயத்தீர்ப்பாகிய இரண்டாம் வருகையைத் தாமதமாய் வைத்திருக்கிறவராய்க் காணப்படுகிறார். (இன்னும் வரும்) D. S.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.



February 1921. Registered No. M 188

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

18 APR 1921 MAD

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXII பெப்ருவரி 1921

## உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு

ஆமோஸ் 4: 12.

I. நியாயாதிபதியாக வருகிறார். ஆயத்தப்படு

"நம்முடைய தேவன் வருவார் மவுனமாயிரார் . . தேவனே நியாயாதிபதி" சங். 50: 3, 6.

"இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்" யாக். 5: 9.

மணவாளனாகமட்டுமல்ல, ராஜாவாகமட்டுமல்ல, நீதிபதியாகவும் வருகிறார்.

திருஷ்டாந்தம். பிரான்சுதேசத்தில் பத்து வருஷங்களுக்குமுன் நடந்த பித்தலாட்டத்தைக் கண்டுபிடித்து விசாரணைசெய்தார்கள். அநேக கல்விமான்களும் கனவான்களும் சேர்ந்து லஞ்சம் வாங்கி ஜனங்களை வஞ்சித்து அவர்களுடைய பணங்களை அபகரித்துக்கொண்டு அழித்துப்போட்டார்கள். அந்தத் தேசத்து ஆலோசனைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள நாங்கள் உயர்ந்த உத்தியோகஸ்தர், ஒருவரும் விசாரிக்கமாட்டார்கள் என்று நினைத்தார்கள். ஆனால் காரியம் எல்லாம் வெளிக்குவந்தது, 'இப்போது நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்' என்று சொல்லுவதற்காக அந்தப் பெரிய மனிதர்களைப் பிடித்துக்கொண்டு விசாரணையில் நிறுத்தினார்கள். ஜனங்களே, நம்முடைய தேவன் வருவார். மவுனமாயிரார். பத்து வருஷத்துக்குமுன்செய்த பாவமானாலும், ஐம்பது வருஷங்களுக்கு முன்செய்த அக்கிரமமென்றாலும் நேற்றுச்செய்த பொல்லாப்பாகிலும் விசாரியாமல் விடார். இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார். ஆண்டவர் வந்து வெகு சீக்கிரத்தில் உட்கார்ந்து நியாயத்தீர்ப்பை நடப்பிக்க ஆயத்தமாயிருக்கிறார். வாய்தாப் போட்டு சமன் பிறப்பித்தாயிற்று என்று சொன்னாலும் சொல்லலாம்.

1. பாவத்தைவிட்டு மனந்திரும்பி இஸ்ரவேலே உன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. இஸ்ரவேல் ஜனங்கள் மனந்திரும்பக்கடவர்கள், கர்த்தர் அவர்களை அதிகமாய் ஏவிவந்தார். பலமுறை பலமுறையாய் அவர்களை நடத்தினார். புத்திசொல்லியும் அவர்கள் கவனிக்கவில்லையென்று கண்டு அவர்களைக் கொடிய துன்பங்களினாலே வாதிக்க ஆரம்பித்தார். விசேஷமாய் ஐந்து பெரிய தண்டனைகளை அவர் வரவிட்டார் என்று இங்கே வாசிக்கிறோம். (1) பஞ்சத்தை அனுப்பினார் (வ6). அப்பக்குறைவினாலே சாப்பாட்டுக்கு ஒன்றும் இல்லாமல் வருத்தப்பட்டார்கள், பசி ஆற ஏதுவில்லை, அதினால் உண்டான சங்கடமும் உபத்திரவமும் கொஞ்சமல்ல, வியாதிப்பட்டார்கள். அநேகம்பேர் இறந்துபோயிருப்பார்கள். பாவத்தை வெறுத்து மனந்திரும்பினார்களோ? இல்லை. ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (2) மழைத்தாழ்ச்சி உண்டாகச் செய்தார் (வ 8). குளங்களிலும் கிணறுகளிலும் தண்ணீர் இல்லை. குடிக்கிறதற்கு ஜலம் கிடையாது. தாகத்தைப் பொறுக்கமாட்டாமல் அடுத்த ஊரில் தண்ணீர் கிடைக்கும் என்று இங்கும் அங்கும் அலைந்து திரிந்து தேடிப்பார்த்தார்கள் பிரயோஜனமில்லை. கொடிய தாகத்தினாலே நாவு வரண்டு தேகத்தில் புண் உண்டாகி அதிகமாய்த் துன்பப்பட்டார்கள். கர்த்தரைத் தேடினார்களோ? இல்லை. ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (3) விஷப்பனியை அனுப்பினார் (வ 9) அதினாலே ஜனங்களுக்குக் கொடிய காய்ச்சல் உண்டானதோடு அநேக பூச்சிகளும் புழுக்களும் திரளாய் வந்து திராட்சத்தோட்டங்களையும் கனிவிருட்சங்களையும் அரித்துப்போட்டது. மரங்களில் பலனில்லை. சரீரத்தில் சுகமில்லை. கஷ்டம் அதிகம். தங்கள் பாவங்களை உணர்ந்தார்களோ? இல்லை. 'ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள்' என்று கர்த்தர் சொல்லுகிறார் (4) கொள்ளைநோயை வரவிட்டார் (வ10). பெரியோரும் செத்துப்போனார்கள். வாலிபரும் மாண்டுபோனார்கள், தேசம் எல்லாம் கூக்குரலாயிருந்தது. இங்கே நாம் வாசிக்கிறபடி செத்த பிரேதங்கள் எப்பக்கத்திலும் கிடந்தன. நாடெங்கும் நாற்றமாயிருந்தது. அவர்கள் மனமாறிக் குணப்பட்டார்களோ? இல்லை. ஆகிலும் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார். (5) பூமிஅதிர்ச்சியை அனுப்பினார் (வ11). பூமியை அதிரப்பண்ணி அநேகரைக் கவிழ்த்துப்போட்டார். மற்றவர்கள் அக்கினியிலிருந்து பறிக்கப்பட்ட கொள்ளிகளைப்போல அற்புதமாய்த் தப்பிக்கொண்டார்கள். நாசவாசலிலிருந்து அவர்களைத் தப்புவித்ததுபோலிருந்தது. தங்கள் அக்கிரமத்தை வெறுத்துவிட்டார்களோ? இல்லை. "ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற்போனீர்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார்
கிறவராக இனிப்பொறுக்கமாட்டாமல் தம்முடைய நீதியின் பட்டயத்தை
Printed at The ... அவர்களை வெட்டிப்போட அதை ஓங்கி வீசி விளாத்
the (



தோடு பேசுகிறார். "இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிறபடியினாலே, உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு" எப்படி? அதைக் காட்டவில்லை. இப்படி என்பதில் ஆக்கினைத்தீர்ப்பு, நரகத்தீ, நித்திய தண்டனை, சொல்லிமுடியாத பயங்கரம் அடங்கியிருக்கிறது. 'சுவாமி, எப்படிச் செய்யப் போகிறீர்'. அக்கினியும் கெந்தகமுமான கடலைக் காண்பித்து, 'இப்படிச் செய்யப்போகிறேன் என்கிறார். அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் புறம்பான இருளைக் காட்டி இப்படிச் செய்யப்போகிறேன் என்கிறார். குணப்படாத பாவிகளுக்கு ஐயோ, ஐயோ, மகிமையின் ராஜா நியாயாதிபதியாக வரும்போது அவர்களுடைய முடிவு பயங்கரமாயிருக்கும். பிரியமான ஜனங்களே, அக்காலத்திலே தேவன் இஸ்ரவேலை நடத்தினதுபோல இந்தத் தேசத்தை நடத்தியிருக்கிறார். இங்கே எழுதியிருக்கிற ஐந்து வார்த்தையும் இந்தத் தேசத்தின் தற்கால நிலைமைக்கு ஏற்றது என்பதற்குச் சந்தேகமில்லை. கடந்த வருஷத்தில் உண்டான அகவிலை கிராமங்களிலே, ஆயிரமாயிரமான [illegible] பின்னைப் போஷிக்க வேண்டியதாயிற்று. கொள்ளைநோயினாலே ஆயிரக்கணக்கான ஜனங்கள் மாண்டுபோனார்கள். பூமியதிர்ச்சியும் அநேக இடங்களில் உண்டானது. என்ன இந்த ஆபத்துகள்? என்ன இந்தத் தண்டனைகள்? ஆனாலும் ஆவிக்குரியதில் மனந்திரும்பியிருக்கிறோமா? இல்லை, இல்லை ஜனங்களே, இப்படி உணராமலும் குணப்படாமலும் போவோமானால் கர்த்தர் விடமாட்டார். நியாயாதிபதியாக வந்து சங்காரம்பண்ணுவார்.

(இன்னும் வரும்)

T. W.

## அத்தியாயம் 3.

### பிரான்சிஸ் என்பவரின் அழைப்பு.

பிரான்சிஸ் துரை ஒளியடைந்தபோதிலும், தனிமையாய்ச்செய்ய வேண்டிய போராட்டம்பாக்கி அவருக்கிருந்தது. அவரது சுற்றுப்புறங்களிலுள்ளவர்களில், அவருடன் அனுதாபப்பட்டவரும், அவருக்கு வழிகாட்டுவாரும் ஒருவரும் இல்லை. தான் புதிதாயடைந்த ஆசீர்வாதங்களைக் கொண்டு, எவ்வாறு தேவனுக்கு ஊழியஞ்செய்யலாமென்று எப்பொழுதும் நினைத்துக்கொண்டு தனக்குள் உலாவிவந்தார். அதுவுமன்றி, அவருக்கும் அவர் தகப்பனுக்குமுள்ள பிரியமே நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. வெகு ஊதாரியாய் வெளியே சுற்றும்பான தன் மகன் திரும்ப வீட்டுக்கு வந்துவிட்டதைப் பெற்றோருக்கு அதிகமான வருத்தமாயிருந்தது. பிரான்சிஸ் மற்றவர்களுக்கு விளங்காத நோக்கமற்றவராய் அலைந்து

திரியத் தொடங்கினதும், வழியிற் கண்ட யாசகனுக்குத் தன் பணத்தையும், உடைகளையும் கொடுத்துவிடுவதும் அவருக்குத் தாங்கமுடியாததாயிருந்தது. தாய்மாரின் வழக்கத்தின்படியே, அவருடைய தாயும் வீட்டில் சமாதானத்தைக் காத்துக்கொள்ளப் பிரயாசப்பட்டாள். ஒருநாளும் அவள் தன் மகனின் நடபடிக்கைகளை அறிந்துகொள்ளாதவளாயிருந்தாள். ஆகவே பிரான்சிஸ் ஒன்றும் செய்யமுடியாதவராய், தான் புதிதாகக் கண்டுபிடித்த கர்த்தர் பேரிலேயே முற்றிலும் சார்ந்திருக்கவேண்டுமென்பதை யுணர்ந்தவராய், எப்பொழுதும்போல தனியாய் ஜெபித்துக்கொண்டுவந்தார். அவர் தனது ஜெபத்தை வெளிப்படுத்த காரியங்களையும் நடப்பித்துவிட்டு, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்செல்லவேண்டியதாயிருந்தது. இவ்வாறு அவர் தாழ்ந்து கொண்டிருக்கையில், தருமசபையால் உடைந்துபோனதோர் பூர்வீக ஆலயத்தைக் கண்டு, ஜெபம் செய்யும்படி அதனுள் பிரவேசித்தார். அவரது இருதயத்தில் பிரகாசமும், எழுச்சிகளையும் வெளிப்படுத்த அவர் ஜெபம். அவர் ஜெபம் செய்யவே இருள் நீங்கிற்று. இறைவனது தயவை அவர் உணர்ந்ததனால் அனுபவித்தாரெனினும், அவ்வாலயத்தை இடிபாடுகளிலிருந்து கட்டியெழுப்பக் கூடுமென்றும் உணர்ந்தார். அந்த ஆலயம் அழிந்துபோகும் நிலைமையிலிருந்தது. அவர் அதைப் பழுதுபார்க்கவேண்டாமா? அந்த வேலை தாழ்மையுடனே செய்யக்கூடியதுமாகும். ஆனால் பிரான்சிஸ் அதை அசட்டை செய்யவில்லை. ஒரு பெரிய காரியம் செய்யவேண்டுமென்ற திட்டத்தை விட்டுவிட்டார். பலசரக்குக் கடையிலிருந்து சரக்குகளை உதாரமாய் எடுத்து வீட்டுக்கு வராமல் தாம் வைத்திருந்த துணிகளை ஒலிவசாதக் கடையிற் கொண்டுபோய் விற்று, அப்பணத்துடன் குருவானவரிடம் திரும்பிவந்தார். அந்தத் துணி தமதுடைய தாயினுடையதே, தன் தகப்பனுடையதானபடியால் அவர் செய்த காரியம் சரியே, ஆழ்ந்த கிறிஸ்தவமாயிருந்தது. பிற்பாடு அவர் செய்தது தப்பென்று அவர் உணர்ந்தபோதிலும், தருசமயத்தில் அவ்வாறு உணரவில்லை. இப்படிப்பட்ட காரியத்தைத் தன்சொந்த சம்பாத்தியத்தைக் கொண்டு செய்திருப்பாராயின் அவர் தகப்பனார் அதிகமாய்த் தடுத்திருக்கமாட்டார். இவ்வாறு சம்பாதித்த பணத்தை அந்தக்குரு எடுத்துக்கொள்ளமாட்டேனென்று சொன்னபோது, பணத்தை ஜன்னல்மேல் வைத்துவிட்டு தன்னையாவது சில நாட்களுக்கு உள்ளே சேர்த்துக்கொள்ளும்படி கேட்டனர். குருவானவர் அப்படியே செய்தார். ஆனால் சேதியைக் கேட்டதும், அவருடைய தகப்பன் அதிக கோபத்துடனே பணத்தைப் பெற்றுக்கொள்ளவும், தன் இஷ்டப்படி செய்கிற அவருடைய குமாரனைத் தண்டிக்கவும் எண்ணி அவரைத் தேடி வருவதைக் கண்டு ஒரு தனிமையான கெபியிலே போய் ஒளிந்துகொண்டு சில வாரங்களாக அங்கேயே தங்கியிருந்தார். தேவனுக்குத்தமது நிலைமையைச் சொல்லி, தேவ



பமே 'வேண்டுமென்ற பகுப்பாட்டத்தை இப்பொழுது படித்துக்கொண்டார். உடனே தெய்வீக பலத்தையடைந்தவராய், சகல பயத்தையும் புறம்பே தள்ளிவிட்டு நேரே தன் தகப்பன் வீட்டுக்குச் சென்றார்.

அவ்வேளையில் பியற்றோவும் பிக்காவும் வீட்டில் அமைதியாய் உட்கார்ந்துகொண்டிருக்கையில், அஸ்ஸிஸி நகரத்தின் தெருக்களில் ஒருநாளும் கேள்விப்படாததோர் பேரிரைச்சலைக் கேட்டார்கள். அந்தச் சத்தம் பியற்றோவின் வீட்டுக்குச் சமீபமாய் எட்டெட்டியபடியால், அவர் அத்திரத்தோடு என்னவென்று பார்க்க வெளியே போனார். தெருவின் அடுத்த முனையிலே ஒரு கூட்டமான ஜனங்கள் 'பயித்தியக்காரன், பயித்தியக்காரன்' என்று உரத்த சத்தமாய்க் கதறிக்கொண்டு கற்களையும் சேற்றையும் மத்தியிலுள்ள ஒரு மனிதன்பேரில் எறிகிறதைக் கண்டார். அது யாரன்றோ? அவரது குமாரன் பிரான்ஸிஸே. அதைக் கண்டவுடன் வெகு கோபத்துடன் கூட்டத்துக்குள் பாய்ந்தார். அவனை இரட்சிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடோ? அன்று. குடும்பத்தின் மரியாதையைக் குலைத்துவிட்டானென்று, அவனைச் சபித்துக்கொண்டு அடி அடியென்றடித்து இழுத்துக்கொண்டு வரவே அக்கோபத்துடன் ஓமரர் அவர் தகப்பன். அவர் வீட்டிலேயிருந்த ஓர் இருளான இருட்டறைக்குள்ளே பிரான்ஸிஸ் அடைக்கப்பட்டார். ஆனால் அவர் அதிக நேரமாய் அதனுள் இருக்கவில்லை. பியற்றோ வேலையாய் வெளியேறிப் போனவுடனே அவர் தாய் அவரைத் திறந்துவிட்டனள். தன் பழைய மாதிரி ஜீவியத்தை அநுசரிக்கும்படி அவரது தாய் தன்னாலியன்றமட்டும் அவரை வசப்படுத்தப் பிரயாசப்பட்டும் முடியாமல் கடைசியாக, அவரது பழைய கோவிலுக்கே போகும்படி விட்டுவிட்டனள்.

பியற்றோ திரும்பி வந்தவுடன், தன் மனைவியின்மேல் கோபத்தையெல்லாம் காட்டி, பின் பிரான்ஸிஸைக் கோவிலிலிருந்து கூட்டிக்கொண்டு வரப் புறப்பட்டுப்போனார். பிரான்ஸிஸ் வர மறுத்துவிட்டமையால் கோர்ட்டில் வழக்குப் பேசிப் பார்த்தார். அதிலும் பயனொன்றும் இல்லை. என் செய்வதென்று யோசிக்கலானார். கடைசியாக தன் குமாரனைப் பட்டினியால் வருந்தச்செய்து அவ்வாறு அவனை அடக்க முயலவேண்டுமென்று தீர்த்துக்கொண்டு அதற்கிடையில் கல்வியாளன ஜோதிட கண்காணியாரிடம் ஆலோசனை கேட்க உறுதிசெய்துகொண்டார். அக்கண்காணியார் பிரான்ஸிஸைத் தன்முன் வரும்படி அழைத்தார்.

குறிக்கப்பட்ட தினத்தின் மத்தியான வேளையிலே பியற்றோவும், பிரான்ஸிஸும் முன்செல்ல, ஓர் பெரிய கூட்டம் ஜனங்கள் பின்சென்று எல்லோரும் கண்காணியாரின் அரண்மனைக்குச் சென்றனர். பிரான்ஸிஸின் கண்களிலிருந்த தீவிரமான பிரகாசம், தன் தகப்பனுடைய ஒழுங்குகள் ஒன்றும் தன்னிடத்தில் ஒரு பயனும்படாது என்பதுபோலிருந்தது. தன்

காணியார் தன் வேலைக்காரருடன் படிகளிலிறங்கி வந்தனர். பிரான்ஸிஸினிடத்தில் சற்றேனும், மனக்குழப்பமாவது தாமதமாவது காணப்படவில்லை. அக்கூட்டம் வெகு அமைதியாயிருக்கையிலே, பிரான்சிஸ் தான் அணிந்திருந்த கீர்த்தியான வஸ்திரத்தைக் கழற்றி தகப்பனின் பாதத்தடியில் வைத்துவிட்டு 'இப்பொழுதும் எனக்கு ஒரே தகப்பன் உண்டு. பரலோகத்திலிருக்கிற என் பிதாவே என்று நான் உண்மையோடே சொல்லக்கூடும். அவர் கரங்களிலேதான் என் பொக்கிஷமும், விசுவாசமும், நம்பிக்கையுமிருக்கின்றன' என்றுரைத்தார். எல்லாரும் ஆச்சரியத்தினால் நிறைந்தவர்களாய், ஒரு நிமிஷம்போல் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தார்கள். ஆனால் பியற்றோ சீக்கிரத்தில் புத்தி தெளிந்து தன் மகன் வைத்துவிட்ட வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு தன்னால் எவ்வளவு கண்ணியமாய் நடக்கமுடியுமோ அவ்வளவு கண்ணியமாய் வெளியே போனார். அந்த பெரிய கண்காணியார் கண்ணீருடன் தன் சொந்த சால்வையினால் அந்த வாலிபனின் அரை நிர்வாணத்தை மூடி தன் வீட்டிற்குள் கொண்டுபோனார். வந்திருந்த ஜனக்கூட்டம், மெதுவாய்க் கலைந்து இரைச்சலாகவும், மௌனமாகவும் நடந்து பிரான்சிஸின் நடவடிக்கையைப்பற்றியும், அந்த தகப்பனின் பெருமை தாழ்த்தப்பட்ட தன்மையைப்பற்றிச் தர்க்கம் செய்துகொண்டே வீடுசென்றனர். அந்தக் கூட்டத்தில் எத்தனைபேர் அன்று நடந்த சம்பவத்தின் கருத்தை அறிந்தனர் என்று நினைக்கிறீர்கள்? குற்றப்படுத்தினோர் பலர். ஆறுதலடைந்தவர் சிலர். பிரான்சிஸின் வீரச் செயலைச் சீர்ப்படுத்தக்கூடிய ஆவிக்குரிய எழுப்புதலென்றும், அதில் அபிஷேகிக்கப்பட்டவர்கள் பங்கடைவார்கள் என்றும் அறியத்தக்க ஞானமுள்ளவரோ ஒருவருமில்லை. பிரான்சிஸ் தனக்குரிய சுதந்தரத்தை எறிந்துவிடுகிற பக்தியீனமுள்ள வாலிபனாக அவர்களுக்குக் காணப்பட்டான். ஆனால் பிரான்சிஸின் பக்தியீனம் உலகத்தின் ஞானத்தைவிடப் பெரிதாயிருந்தது. கூட்டம் கலைந்த பின்பு, பிஷப்பின் வேலைக்காரரில் ஒருவன் கொடுத்த அங்கியைத் தவிர வேறொன்றும் கிடையாததினால் அதையே தரித்துக்கொண்டு, பிஷப்பின் வீட்டைவிட்டுக் காட்டுக்குப்போய், ஜீவகாலத்தில் நடந்த சம்பவங்களைக் குறித்துத் தனியே தியானம்செய்யப் போயினர். அவர் போகையில், தேவனை அதிகச் சத்தமாய்த் துதித்துப் பாடிக்கொண்டு போனபடியால், ஒளித்திருந்த சில கள்ளர் அவரிடமாய் இழுக்கப்பட்டார்கள். அவர்கள் பாய்ந்தோடிவந்து, அந்த அலைந்துதிரியும் பாடகனைப் பிடித்து அவருடைய பெயரும் வேலையும் என்னவென்று வெகு கோபத்துடன் சீறிக்கொண்டு கேட்டனர்.

பிரான்சிஸ் அவர்களிடம் 'நான் மகாராஜாவின் தூதன்' என்று சொன்னதின்பேரில் திருடர் அவரைப் பைத்தியக்காரன் என்று நினைத்து அவரைப் பனிக்கட்டியால் நிறைந்த ஒரு குழியில் எறிந்துவிட்டு, அங்கேதான்



கிட, என்று மகிமையின் மூன்றாதனே தேவனுடைய மூன்றாதனென்றழைத்துக்கொள்கிறாய் என்று சொல்லிக்கொண்டே போயினர்.

பிரான்சிஸ் வெட்கப்படாமல் அவர்கள் போகும்வரை காத்திருந்து, பின் வெளியேறி முன்போலவே பாடிக்கொண்டு தன் வழியே போனார். அவர் இவ்வாறு அலைந்துதிரிகையில் ஓர் மடத்தில் வந்து சேர்ந்து அங்கு சில நாள் தங்கினார். தான் தரித்திருந்த அந்த ஒரே வஸ்திரம் துண்டுதுண்டாய்க் கிழிந்துபோவதை அறிந்து சமீபத்திலுள்ள ஓர் பழைய சிநேகிதனிடம் சென்று கிழிந்த பழைய வஸ்திரம் ஒன்று கெஞ்சிக்கேட்டார். இவ்வாறு மற்றொரு வஸ்திரம் கிடைத்தவுடன் அவர் குஷ்டரோகிகளிடம் சென்று அவர்களுடன் வசித்து அவர்களுக்கு உதவி செய்துவந்தார். ஆனால் அவர் முதலில் சிலைப்பாதத் தங்கின அந்த இடிந்துபோன கோவில் பழுதுபார்க்கப்பட வேண்டுமென்ற எண்ணம் அவரை வருத்திக்கொண்டேயிருக்கின்றபடியால் அவரால் சும்மாயிருக்க முடியவில்லை. ஆகவே அந்தக் கோவிலைச் சரியான ஒழுங்குக்குக் கொண்டுவரவேண்டும் என்ற முழு நோக்கத்தோடே புறப்பட்டுப்போனார். அதற்கு வேண்டிய கற்களைத் தேடுவது மனதுக்குக் கொஞ்சம் தொல்லையைக் கொடுக்கக்கூடியதாயிருந்தது. அவர் இப்பொழுது அளவற்ற செல்வமுள்ள ஐசுவரியவானான பிரான்சிஸ் அல்ல ஆனால் வீடில்லாமல் அலைந்துதிரிகிறவராயிருக்கிறார். அவருக்கு ஒரே ஒரு வழி மாத்திரம் இருந்தது. அதற்கு வேண்டிய சாமான்களைப் பிச்சை எடுத்துச் சம்பாதித்து தானே வேலைசெய்யவேண்டும். ஆனால் இதையுங்கூட அவர் இப்பொழுதே செய்யக்கூடியவராயிருந்தார்.

பிரான்சிஸ் ஒரு இடிந்துபோன கோவிலைப் பழுதுபார்க்கும்பொருட்டு வீடு வீடாய்ப் போய் கற்களுக்காக பிச்சை எடுப்பதை அஸிஸி பட்டணத்தார் கண்டபோது அவர்களுக்கிருந்த ஆச்சரியத்திற்கோர் அளவில்லை. அவன் பைத்தியத்திற்கு இதுவோர் அடையாளம் என்று சிலர் நினைத்தனர். ஆனால் சிலர் இந்த விசமான பைத்தியத்தில் தாங்களும் பங்குபெறுவது மெத்த நலமானது என்று சிந்திக்கலாயினர். அது எப்படியிருந்தபோதிலும் பிரான்சிஸ் தனக்கு வேண்டிய கற்களைச் சம்பாதித்து அந்தக் கோவிலைக் கடைசியாகப் பழுதுபார்க்க முடித்தார். இந்த வேலையோடு போதுமென்றிருக்காமல். இதேமாதிரி இடிந்துகிடந்த வேறு இரண்டு கோவில்களையும் இப்படியே பழுதுபார்த்து முடித்தார். இது முடிந்தபிறகு, தான் ஜெபத்திலும், தியானத்திலும் செலவழிக்கும்படியாக தனக்கென்று ஒரு குடிசை கட்ட யோசித்தார். என்றாலும், தேவன் தமது ஊழியக்காரனுக்கு இதைவிட ஒரு பெரிய வேலையை வைத்திருந்தார்.

ஒருநாள், அவர் ஆலயத்திலிருந்து சுவிசேஷத்தைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கையில் அந்த வார்த்தைகள் அவருக்கு நேராய் வந்த ஒரு

அதுபோலிருந்தது. நீங்கள் போகும் இடத்தில் எல்லாம் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறதென்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள். குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள். பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். உங்கள் கச்சைகளில் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பையாவது வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது சேடிவைக்கவேண்டாம். வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்.

தன் இரட்சிப்பைத் தேடுகிறது மாத்திரமல்ல, மற்றவர்களுடைய இரட்சிப்பையும் தேடவேண்டியது தன் வேலை என்று பிரான்சிஸ் உணர்ந்தார். ஊழியம் செய்யவேண்டுமென்கிற பெரிய எண்ணம் அவரைப் பிடித்தது. இதுதான் எனக்கு வேண்டியது இதைத்தான் என் ஆத்துமா வாஞ்சிக்கிறதென்று நினைத்தார். பிரான்சிசுக்கு எப்பொழுதும் கீழ்ப்படிகிறது தான் செவிகொடுக்கிறது என்று நினைத்தார் அந்தக் காரியத்தைக் குறித்து தர்க்கிக்கக் காத்திராமல், உடனே தன் பாதரட்சைகளையும், பையையும் புறம்பே வைத்துவிட்டார். ஒரு சாதாரண வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு கைக்குக்கப்பட்ட ஒரு கயிற்றை எடுத்து அரையில் கட்டிக்கொண்டு தன் வேலையை நிறைவேற்ற வெளிப்புறப்பட்டுச் சென்றார். அவர் அங்குமிங்கும் சுற்றித்திரிந்து, தனக்குச் செவிகொடுக்கும் யாவருக்கும் தன் அநுபோகங்களைப்பற்றிச் சொல்லி மனந்திரும்பி தேவனைத் தேடும்படியாக வற்புறுத்திச் சொன்னார். அவருடைய வார்த்தைகள் சாதாரணமாயும், லேசாயும் இருந்தபோதிலும், அவைகள் மனிதருடைய இருதயங்களைப் பிடிக்கத்தக்கவைகளாயும், அவர்கள் வேண்டுமென்று மனதினின்று அகற்றிவிட்ட காரியங்களைச் செய்யக்கூடியவைகளாயுமுள்ள வல்லமையுள்ள வார்த்தைகளாயிருந்தன. என்றாலும் பிரான்சிஸ் முன் எப்படித் தன் போராட்டங்களில் தனிமையாயிருந்தாரோ, அப்படியே தன் வேலையிலும், தனிமையாகத் தான் இருந்தார். ஆனால் அவர் பேசக்கேட்டவர்களுக்குள், தேவன் சிநேகிதர்களையும் சீஷர்களையும் ஏற்படுத்தப்போகிறவராயிருந்தார்.

## ஜிப்ஸி சிமித் குணப்படுத்தின முதல் ஆள்

நான் என் தகப்பனோடு சாமான்கள் விற்கும்படி அவனுடைய வண்டியில் போகிறது வழக்கம். நான் கிறிஸ்துவை என் சொந்த ரட்சகராக அறிந்த சிலாக்கிய மறுநாளில் அப்படியே வண்டியில் போகும்போது, உலகத்தில் பல காட்சிகளைக் கண்டது எனக்கு நூதனம்போல் காணப்பட்டது. நான் பாட்டுப் பாடாமல் என்னை அடக்கிக்கொள்ளக் கூடாதிருந்தது. நன்றாய்ப் பாடுவேன். எவ்வளவு உயர்ந்த சத்தத்திலும் பிசகாமல் பாடுவேன்.



நான் வண்டியை விட்டிறங்கி வழக்கமாய்க் குண்டூசிகளை டசனுக்கு இரண்டு பென்சாக விற்றுவருவேன். அன்றையதினம் நான் போன முதல் வீட்டிலுள்ள அம்மாள் குண்டூசிகள் வாங்கினாள். அவளிடத்தில் நான் ஒரு பாட்டுப் பாடட்டுமாவென்று கேட்டேன். அக்காலத்தில் நான் மற்றவர்களிடத்தில் ஆத்தும காரியங்களைக்குறித்துப் பேசக்கூடாவிட்டாலும் அநேகம் பாட்டுகள் படித்திருந்தேன். அம்மாள் சம்மதிக்கவே,

இயேசுவைப் பகைசெய்வோர் யார்?
சிலுவை சுமப்போர் யார்?
ஆயத்தமானால், காத்திருந்தால்,
கிரீடம் தரிப்போர் யார்? என்று பாடினேன்.

இதைக் கேட்டதும் அம்மாளுடைய கண்களில் கண்ணீர் வடிந்ததைப் பார்த்து, நான் பாட்டு முடிந்ததும் பயத்தினால் அதிவேகமாய் ஓடிப்போய் விட்டேன். இருபத்தைந்து வருஷங்களுக்குப்பின் நான் ஓர் பட்டணத்தில் பிரசங்கம்செய்துகொண்டிருக்கும்போது, பிரசங்கம் முடிந்ததும் ஸ்திரீகளின் பக்கத்திலிருந்து ஒரு அம்மாள் என்னிடம் வந்து கைகுலுக்கினார்கள். அவர்கள் முகம் என் ஞாபகத்திற்கு வரவே, உங்களைப் பார்க்க மெத்த சந்தோஷம். நீங்கள் என்னிடம் குண்டூசி வாங்கினீர்களே. ஒருநாள் நான் ஒரு பாட்டைப் பாடிவிட்டு பயந்து ஓடிப்போனது உங்களுக்கு ஞாபகமா? என்று கேட்டேன். அம்மாள் பிரியமுடனே, 'எனக்கு நல்ல ஞாபகமிருக்கிறது, அதின் சரித்திரத்தைச் சொல்லுகிறேன். நீ பாடும்போது பக்கத்து வீட்டிலுள்ள என் மகள் எனக்குப் பின்னால் மறைவாக நின்று அந்தப் பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தாள். நீ போனபின்பு என் மகள் என்னிடம் வந்து, அம்மா, குண்டூசி விற்கிற ஓர் பையன் இயேசுவுக்காகப் பாடிச் சாட்சி கொடுப்பானானால் நானும் இயேசுவை நேசித்து அவருக்காகச் சாட்சி கொடுக்கவேண்டும் என்றாள். உடனே நாங்களிருவரும் முழங்காற்படியிட்டு ஜெபித்தோம். என் மகள் தன்னை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தாள். அவள் இப்போது இங்கே வந்திருக்கிறாள். அவள் கல்யாணமாகி அவளுக்குப் பிள்ளைகளுண்டு. கடந்த இருபத்தைந்து வருஷங்களாய் அவள் இயேசுவைப் பின்பற்றுகிறவளாயிருக்கிறாள்' என்றார்கள். நல்ல குரலுள்ளவர்கள் சுவிசேஷத்தைப் பாட்டாய்ப் பாடி மற்றவர்களுக்கு அறிவிக்கலாம். காதறா ஆத்துமாக்களைப் பலதயாகக்குவார்.

## ஆதாமுடைய மறுமொழி

முன்னொரு சமயம், ஒருவன் ஆதாமை நோக்கி ஒரு கேள்வி கேட்டதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு ஆதாம் கொடுத்த மறுமொழியும், தேவனுக்கும் ஆதாமுக்கும் நடந்த சம்பாஷணையும், ஆதாமும் ஏவாளும் ஏதேன்

தோட்டத்தைவிட்டுத் துரத்துண்டதும் நமக்குத் தெரிந்த விஷயமே. ஆதாம் தேவனுக்குச் சொன்ன மறுமொழியை நாம் கவனிக்கும்பொழுது, ஆதாம் தான் குற்றமற்றவனைப்போல நடந்துகொண்டான். ஏனெனில் தானே அந்தக் குற்றத்தைச் செய்யவில்லை என்பதுபோலவும், அக் குற்றத்திற்குக் காரணமாயிருந்தது ஏவாள்தான் என்பதுபோலவும், அந்த ஏவாளை தனக்குத் துணையாக தேவன் சிருஷ்டிக்காதிருந்தால், தான் ஒரு பொழுதும் பாவம் செய்யாமல் பரிசுத்தனாயிருந்திருக்கலாம் என்பதுபோலவும் பேசினான். தேவன் ஏவாளைக் குறித்துப் பேசினபொழுது அவளும் அவ்விதமாகவே தன் குற்றத்தை மறாமல் சாட்டிப் பேசினாள். இப்படியாக, இருவரும் தங்களைப் பரிசுத்தமுள்ளவர்களைப்போல் நடித்தார்கள். தேவனோ, அவர்கள் பாவங்களை [illegible] கண்டிக்குமளவுக்குட்பட்டு, சாபத்தோடே இருவரையும் ஏதேன் தோட்டத்தைவிட்டு விரட்டிவிட்டார். இவைகளெல்லாம் வேதத்திலிருந்து நமக்கு ஒரு போதனையாகவும், எச்சரிக்கையாகவும், எழுதப்பட்டும், வாசிக்கப்பட்டும் போதிக்கப்பட்டும் வருகிறது.

சகோதரரே, இவைகளுக்காக கஷ்டப்பட்டு வேலைசெய்யும்பொழுதும் வியாதியில் வருந்தும்பொழுதும், துன்பப்படும்பொழுதும், தோன்றுகிறதல்லவோ? ஐயோ ஆதாமுடைய பாவத்தினாலல்லவோ நமக்குப் பாடுகள் வந்தது! ஆதாம் செய்த பாவத்தினால் தானே இந்த நிலைமைக்குக் கொண்டுவந்தது. ஏதேன் தோட்டத்தைவிட்டுப் புறப்படலாயிற்றல்லவோ! நம்முடைய வேலைத்தாழ்ச்சிக்கும் அல்லது சோம்பலுக்கும் அல்லது அசட்டைக்கும் நாம் வருந்தும்பொழுது, நமது குற்றங்களை நாம் சற்றேனும் உணராது மற்றவர்களை நாம் சற்றேனும் உணராது மற்றவர்களைக் குறைகூறலாமோ! ஒரு சிறு உதாரணத்தை இவ்விடம் எடுத்துரைப்போம்.

ஒரு விறகுவெட்டி ஒருநாள் பாதையோரத்தில் விறகு வெட்டிக் கொண்டிருக்கும்பொழுது, 'ஐயோ, ஆதாம் செய்த பாவமல்லவோ, என் முகத்தின் வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு உழைக்க வேண்டியதிருக்கிறது' என்று வாய்விட்டுச் சொன்னான். இதைக் கேட்டுக்கொண்டு, அந்தப் பாதை வழியாய்ச் சென்ற ஒரு துரை சற்று நின்று, அவனை நோக்கி 'அப்பா, நீ ஏன் இவ்வளவு வருந்துகிறாய்? என் பங்களாவில் நீ வசிக்கும்படியும் உயர்ந்த போஜனம் புசிக்கவும், வேலைக்காரர் உனக்கு ஊழியஞ்செய்யவும், வண்டிகள் குதிரைகள் ஏராளமாயிருக்கின்றன; நீ சந்தோஷமாக வாழ்ந்திருக்கலாம்' என்று அவனை வருந்தியழைத்தார். ஆனால், மெய்யாய் உழைத்தாலும் வேலையின் கஷ்டத்தாலும், பசி பட்டினியினாலும் வருந்திக்கொண்டிருக்கும் அவன் இதைக் கேட்டமாத்திரத்தில், அந்தத் துரை தன்மேல் பரிதாபம் செய்கிறார் என்று சந்தோஷங்கொண்டான். பின்னும் அந்தத் துரை வருந்தி அழைத்ததனால், இது கனவோ என்று மலைத்துக்கொண்டான். கடை-



சியாக உண்மைதான் என்றறிந்த அவன் துரையின் வாகனத்தில் ஏறி அவருடைய இருப்பிடம் சேர்ந்தவுடனே வேலைக்காரர் வந்து அவனுக்கு உபசாரம் செய்து உயர்தர வஸ்திரங்கள் கொண்டுவந்து உடுத்தி உயர்தர போஜனம் அளித்தனர். நாள் செல்லச்செல்ல அந்தத் துரை விறகுவெட்டியை தன் வீட்டுக்கும், தன் ஆஸ்திக்கும் மேலதிகாரியாக்கினார். இப்படியிருக்கும் காலத்தில், ஒருநாள் துரை அவசரமாக ஓரிடம்போய் சில நாட்கள் தங்கவேண்டியதாயிருந்தது. ஆகையால், அந்த விறகுவெட்டியினிடத்தில் தன் வீட்டையும் ஆஸ்தியையும் தனக்குண்டான எல்லாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்து; 'அப்பா இவைகளெல்லாம் உன்னுடையவைகள். இவைகளெல்லாம் நீயே அநுபவி. சின்னப்பெட்டியின் திறவுகோலையும் நீ வைத்துக்கொள். ஆனால் அந்தப் பெட்டியைமாத்திரம் நீ திறக்கவேண்டாம்' என்று உறுதியாகக் கட்டளையிட்டுப் புறப்பட்டுப்போனார்.

சிலநாட்களாக, அந்த விறகுவெட்டி துரை சொன்னபடியே அந்த சிறு பெட்டியைத் திறவாமலும், அதன் பக்கத்தில் செல்லாமலுமிருந்தான்: நாள் செல்லச் செல்ல, 'அந்தப் பெட்டியில் அவ்வளவு முக்கியமான வஸ்து என்னயிருக்கிறது? அதை நான் பார்ப்பதினால் குறை என்ன? இவ்வளவு ஆஸ்திகளுக்கும் என்னை அதிகாரியாக வைக்க அந்த துரை இதை மறைப்பதற்குக் காரணமென்ன? இது ஒரு விசேஷமிருக்கவேண்டும். ஆகையால் அதைப் பார்த்துவிட்டு உடனே மூடிவிட்டால், அது துரைக்குத் தெரியவராது' என்று நினைத்து, பெட்டியண்டைபோய், அதைத் திறந்தான். திறந்த மாத்திரத்தில் ஒரு சிறு சுண்டெலி கீழே குதித்து ஓடிப்போயிற்று. அதைப் பிடிக்க தன்னாலானமட்டும் பிரயாசப்பட்டபோதிலும் ஓடித்தப்பியது. திரும்பவும் அந்தப் பெட்டியை பத்திரமாய் மூடி, அதிருந்த இடத்திலேயே வைத்துவிட்டு என்ன நடக்குமோ என்று கலங்கியிருந்தான். போன துரை தன் வேலையை முடித்துக் கொண்டு, வீடுவந்து சேர்ந்தான். வந்ததும் முதல்முதலாவதாக அந்தப் பெட்டியண்டை சென்று அதைத் திறந்து பார்க்கவே அந்தச் சுண்டெலியைக் காணவில்லை. ஆதியோடந்தமாய், விஷயத்தை அறிந்துகொண்ட அந்தத் துரை அவனை நோக்கி' உன்னை என் வீட்டுக்கு அதிகாரியாக்கினேன். என் வீட்டில் சுகம் அநுபவித்தாய். நான் உனக்கு எவ்வளவோ நன்மை செய்திருந்தும், நான் உனக்கு இட்டிருந்த கட்டளையைக் கைக்கொள்ளவில்லை. இந்த அற்ப விஷயத்தில் நீ உன் கீழ்ப்படியாமையைக் காட்டுகையில், ஆதாமைக் குறைகூறலாமோ? உன்னிடத்தில் குற்றங்களும் குறைகளும் நிறைந்திருக்கையில் ஆதாமின் பேரில் அதைச் சாட்டலாமோ நீ உன் பழைய நிலைமைக்கே போ. என்று வீட்டைவிட்டு விரட்டிவிட்டான்.

சகோதரரே, ஆதாமின்பேரில் குறைகூறுவதில் பிரயோஜனமில்லை குற்றங்களும் குறைகளும். நம்மிடத்திலும் தானிருக்கின்றன. தன் பாவங்களை மறைத்துக்கொள்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இரக்கம் பெறுவான்'.

S. R. D.

## மிஷனெரி வர்த்தமானங்கள்

பெல்ஜிய கிறிஸ்தவன். ஜலன் லாட்டோர் என்பவர் ஒர் பெல்ஜிய தளகர்த்தர். பிரசித்தி பட்டாளத்தைச் சேர்ந்தவர் உயர்ந்த பெல்ஜிய உத்தியோகஸ்தரில் இவர் ஒருவரே புரோட்டஸ்தந்தர். அதினிமித்தம் அதிகப் பாடுபட்டார். ஜெர்மானியர்களுக்குள் பரிசுத்தாவிக்காகப் பிரதிஷ்டைபண்ணப்பட்ட சர்ச்சினை (Mass of the Holy Spirit) யில் பங்குபெற சில ரோமர்களுக்குள் மறுத்தார். இன்னோர் சமயம் மரித்துப்பட்டணையில் வேலைசெய்த எழுபது வேலைக்காரரைத் தள்ளிப்போடவேண்டுமென்று சர்க்கார் உத்தரவளிக்க பலர் சாட்சி நிமித்தம் மறுத்தார். இக்காரணங்களினிமித்தம் அவர் தேசத்தில் உயர்ந்த உத்யோகப்பட்டம் பெற லாயக்குள்ளவராயிருந்தும் அவைகள் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. என்றாலும் நாற்பத்தாறு வருஷங்களுக்கு மேலாக யுத்தகாலத்தில் போலவே சமாதான காலத்திலும் தம் தேசத்திற்காக யாதொரு குற்றம் சொல்லப்படாத உண்மையோடும் தேசபக்தியோடும் உழைத்துவந்தார். அவருடைய கிரமமாகவும் சாஸ்திரவிஷயமாய்க் கண்டுபிடித்த புதுமைகளுக்காகவும் பரிசு பெற்றனர். அவரது குமாரர் இருவரும் தேசத்துக்காகவே தங்கள் ஜீவனைக் கொடுத்தனர். இம்மகான் தமது சிறந்த கிறிஸ்தவ லக்ஷணத்துக்கு வேதாகமமே ஆதாரம் என்று சாட்சி கொடுத்தார். சுவிசேஷத்தைப் பிரபல்லியம் பண்ணும் சங்கங்களைத் தேவன் ஆசீர்வதிக்கவேண்டுமென்று அடிக்கடி ஜெபிப்பார். வேதாகமம் தமது ஜீவியத்திலேயே ஆச்சரியமான மாறுதலுக்குக் காரணமாயிருந்ததென்று தமது அநுபவத்திலிருந்தே சாட்சிகொடுத்திருக்கிறார். அவர் பகரும் சாட்சியாவது, "சுவிசேஷ சத்தியங்கள் கூறி அறிவிக்கப்படும் ஆராதனைகளும் ஆலயங்களுமில்லாத ஓவியடோ என்னும் பட்டணத்திலுள்ள மருந்துசாலையில் நான் ஐந்துவருஷம் இருக்கநேரிட்டது. வேதாகமத்தையே நான் வாசித்துக்கொண்டுவந்தால் மிகுந்த சோதனைகளும் துன்பங்களும் நிறைந்த இடத்திலும் வேளைகளிலும் என் சொந்த ஜீவியத்தைத் திடப்படுத்தினது வேதவசனமே. இரண்டாவது சம்பாஷணையிலாவது புஸ்தகங்களைக் கொடுப்பதிலாவது நட்பிப்பின் ஏழ்மை என் தேசத்தாருக்கு தைரியமாய்ச்சொல்ல என்னைத் தைரியப்படுத்தினது வேதவசனமே. மூன்றாவது என் உத்தியோக முறைப்படி நான் ஆஜராகவேண்டிய மாஸ் என்னும் ரோமமச்சடங்கு ஆராதனைக்குப்போக மறுத்து இவ்விதமாய் என் விசுவாசத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடச்செய்தது வேதாகமமே. நான் செய்த எந்தவேலையிலும் என்னை உற்சாகப்படுத்தினது வேதாகமமே. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார், அவர்களில் பிரதான பாவி நான்" என்னும் அறிவு பரிசுத்த வேதத்தினால் என்னில் உண்டாகும்வரை என் ஜீவியம் பிரகாசமுள்ளதாயில்லை" என்பதே

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

670

March 1921 · Registered No. M 136.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXII மார்ச்சு 1921

## திருநெல்வேலி இந்திய கிறிஸ்தவர்களின் 23-வது கன்வென்ஷன் கூட்டங்கள்—1921.

1921. மேமீ 17உ—20உ முடிய (வைகாசிமீ 4உ—7உ)

கர்த்தருக்குச் சித்தமானால் நாளது வருஷத்தக் கன்வென்ஷன் கூட்டங்கள் மேலே குறிப்பிட்ட தெய்திகளில் டக்கராம்மாள் புரத்தில் நடத்தும்படி கர்த்தருக்குள் தீர்மானித்திருக்கிறது. 17உ செவ்வாய்க்கிழமை சாயந்திரம் முதல் வெள்ளிக்கிழமை சாயந்தரம் முடிய கூட்டங்கள் நடைபெறும். கூட்டங்களில் பல சகோதரர் பேசும்படியான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. வழக்கம்போல சாப்பாட்டு வசதிகள் செய்யப்படும். கிறிஸ்து சபைக்கடுத்ததான பல நூதன ஏற்பாடுகள் ஆலோசிக்கப்படும் இக்காலங்களில் திருநெல்வேலி சபையானது ஆவிக்குரிய பிரகாரமாய் முன்னேறிச் செல்லவேண்டியதாயிருக்கிறது. நமது அத்தியக்ஷாதீனத்துச் சபையானது இந்திய திருச்சபைக்கு எல்லா விஷயங்களிலும் மாதிரிச் சபையாகும்படி சபாநாயகர் நடத்துவாராக. தேவனுடைய பிள்ளைகளும் ஊழியருமாகக்கூடிவரும் இவ்விதக் கூட்டங்கள் பரிசுத்தாவியின் ஏவுதலால் நடத்தப்படவும் இக்கூட்டங்களின் மூலமாய் நமது அத்தியக்ஷாதீனமுழுவதிலும் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடவும் அருள்புரியும்படி ஜெபிப்போமாக. திருச்சபையின் ஞான வளர்ச்சியை விரும்பும் யாவரும் இக்கூட்டங்களுக்கு வரும்படி வருந்தியழைக்கிறோம். இந்நாட்களில் நடக்கும் கூட்டங்கள் கூடிவரும் யாவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமுள்ளவைகளாயிருக்கும்படி ஜெபிப்போமாக.

கன்வென்ஷன் நடத்தும் சகோதரருக்காக,

Palamcottah,<br>April 5, 1921.

R. V. Asirvadam,<br>Bishop's Chaplain,

## உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு (தொடர்ச்சி)

**II. தேவனோடு ஒப்புரவாகி உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.**

கிறிஸ்துநாதர் மகிமையோடு வரும்போது அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும். அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும். சங். 50: 3. வல்லமையோடும் மகத்துவத்தோடும் பிரசன்னமாகி தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார். அப்போது ஒரு விசேஷம் நடக்கும். தமது தூதர்களுக்கு உத்தரவு கொடுப்பார் 'பலியினாலே என்னோடே உடன்படிக்கைபண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்' என்பார். அவர்களுக்கு மோசமுமில்லை, ஆக்கினைத்தீர்ப்புமில்லை. யாருக்கு? பலியினாலே தேவனோடே உடன்படிக்கை செய்தவர்களுக்கு. சில இடங்களில் உடன்படிக்கை செய்யும்போது இரு பட்சத்தார் கூடி இவர்கள் அவர்களுக்குக் கொஞ்சம் உப்பைக் கொடுக்கவும், அவர்களும் இவர்களுக்குக் கொஞ்சம் உப்பைக் கொடுக்கவும்செய்து எல்லாரும் சாப்பிட்டு இப்படியே ஒருவரோடொருவர் ஒப்பந்தம்பண்ணுவார்கள். அப்படி உடன்படிக்கை செய்தபின்பு இவர்கள் அவர்களுக்குத் தீமைசெய்யமாட்டார்கள். அவர்கள் இவர்களுக்குத் தீமை செய்யமாட்டார்கள். எப்போதும் சகோதரரைப்போலச் சமாதானமும் ஐக்கியமுமுள்ளவர்களாய் இருப்பார்கள். அப்படிப்பட்ட உடன்படிக்கைக்கு உப்பு உடன்படிக்கை என்று பெயர். இன்னும் சில தேசங்களில் ஒப்பந்தம் செய்யும்போது ஒரு பட்சத்தார் தங்கள் கையைக் குத்தி ரத்தம் பீறிடப்பண்ணி மறுபட்சத்தாரும் அப்படியே செய்து இருவகையருக்களுடைய ரத்தமும் கலந்திருக்கச்செய்து மாறாத உடன்படிக்கைக்குக் குறிப்பாக அந்த ரத்தத்தைக் காட்டி நிபந்தனை செய்வார்கள். சொல்லவேண்டுமானால் அருமை ரட்சகர் தம்முடைய ரத்தத்தைச் சிந்தி விசுவாசிகளோடு இரத்த உடன்படிக்கை செய்திருக்கிறார். எபி. 13: 20-ல் 'நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே' என்று சொல்லியிருக்கிறது. ஆனால் இங்கே சொல்லப்பட்ட உடன்படிக்கை மெத்த விசேஷமானது. 'பலியினாலே என்னோடே உடன்படிக்கைபண்ணின என் பரிசுத்தவான்கள்.' ஆதி எபிரேயருடைய வழக்கம் என்னவென்றால், ஒரு மிருகத்தைப் பலியாகக் கொண்டுவந்து அதைத் துண்டித்து இருபட்சத்தாரும் அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோய் அப்படியே நித்திய உடன்படிக்கை செய்வார்களாம். ஆபிரகாமோடு தேவன் உடன்படிக்கை செய்யும்போது அப்படியே நடந்தது (ஆதி. 15: 9–17). ஆபிரகாம் பலி மிருகங்களைத் துண்டித்து துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்: இரவில் அந்தத் துண்டங்களின் நடுவே புகைகிற சூளையும் அக்கினிச் சுவா-



லையும் கடந்துபோகிறதை ஆபிரகாம் கண்டான். அந்த அக்கினியானது தேவனுடைய பிரசன்னத்துக்கு அடையாளம். அவர் அப்படிக் கடந்துபோய் அந்தப் பலியினாலே ஆபிரகாமோடே நித்திய உடன்படிக்கைசெய்தார். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் அந்த உடன்படிக்கை ஒருக்காலும் அற்றுப்போவதில்லை. பிரியமான சிநேகிதர்களே, தேவனுடைய கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் நாமும் பலியினாலே அவரோடு உடன்படிக்கை செய்யவேண்டும். நம்முடைய பாவபலியாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டார். துண்டிக்கப்படவில்லை! ஒப்பில்லாத பரிசுத்த ஏகபலி ஆகையால் துண்டிக்க ஏதுவில்லை. ஆனால் நம்முடைய சகல பாவங்களையும் அவருடைய தலையின்மேல் விசுவாசத்தால் சுமத்தி அறிக்கைசெய்து இனி இவ்வுலகத்துக்கு அல்ல, தேவனுக்கே பிழைப்பேன் என்று உடன்படிக்கை செய்யவேண்டும். 'கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.' (ரோ. 8: 1).

**III. பரிசுத்தமாகி முஸ்தீதமாய் உன் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படு. யாத். 19:**

அதோ, சீனாய் மலையில் தேவன் இறங்கப்போகிறார். தம்முடைய நீதிப்பிரமாணத்தோடு வருகிறார். நீதிபரராக விளங்க எத்தனிக்கிறார். பரிசுத்த கடவுளுக்கு எதிர்கொண்டுபோக ஜனங்கள் எல்லாரும் ஆயத்தப்படுகிறார்கள். எப்படி ஆயத்தப்படுகிறார்கள்? அவர்களைப் பரிசுத்தப்படுத்து என்கிறார் (வ. 10). தங்களைப் பரிசுத்தப்படுத்தி மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள் என்று உத்தரவளிக்கிறார். அன்றைக்குப் பயங்கர காட்சிகள் காணப்பட்டன. பயங்கர சத்தங்களும் கேட்கப்பட்டன. பர்வதம் அதிர்ந்தது, மின்னல்கள் பிரகாசித்தது, இடிமுழக்கங்கள் சப்தித்தது. எக்காளசத்தம் உண்டாயிற்று. ஜனங்கள் எல்லாரும் நடுங்கினார்கள். மோசேயும் நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் என்று திகிலடைந்து சொன்னான். மலையைத் தொடுகிறவன் எவனும் சாவான் என்பது உத்தரவு. ஒரு மிருகமாகிலும் கிட்டப்போனால் அழிந்தேபோம், பார்த்தீர்களா? அந்தப் பரிசுத்த சந்நிதானத்தில் பரிசுத்தமில்லாமல் போவது கூடாத காரியம். நிசந்தான், நியாயப்பிரமாண காலம் கடந்துபோயிற்று. சுவிசேஷ நல்ல காலம் வந்திருக்கிறது. என்றாலும் கர்த்தருடைய பரிசுத்தம் மாறிப்போயிற்று என்று நினைக்கிறீர்களோ? ஒருபோதும் அல்ல. இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலையை அண்டிக்கொள்ளக்கூடாதவர்களாய்ப் போனார்கள் என்றால் நீங்கள் பரிசுத்தமில்லாமல் அந்த வெள்ளைச் சிங்காசனத்துக்கு முன்பாகவும் ஆண்டவருடைய மகிமையுள்ள சந்நிதானத்தில் நிற்பது எப்படி? கூடாதே. பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்ப-

தில்லை. தேவனைச் சந்திக்கவேண்டுமானால் பரிசுத்தமாகவேண்டியது அவசியமான காரியம். சூரியனுடைய பிரகாசத்துக்கு முன்பாக ஆந்தை, கூகை, வெளவால் நிற்குமா?

P. W.

## எபிரேயர் நிருபம்

**அதி. 1: 1, 2** இந்த நிருபத்தை எழுதினவர் யாரென்பது திட்டமில்லை. பவுலப்போஸ்தலனின் போக்கு அதில் காணப்படுகிறது என்றாலும் அவரால் எழுதப்பட்டதென்று சொல்லமுடியாது. ஆக்கியோனைப்பற்றிப் பல அபிப்பிராயங்கள் உண்டு. அப்பொல்லோ எழுதியிருக்கலாமென்பது லுத்தருடைய அபிப்பிராயம், ஆக்கியோன் யூதனென்பதும்; அலெக்சந்திரியன் என்பதும், வேதத்தில் வல்லவனும் கர்த்தருடைய வழிகளில் போதிக்கப்பட்டவனும், ஆவியில் வைராக்யமுள்ளவனும். யேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்களைக்கொண்டு யூதருக்குப் பலமாய் ரூபிக்கிறவனும் என்பதும் அப்பொல்லோவையே குறிக்கலாம். ஆக்கியோன் யூதமார்க்கத்தையும் கிறிஸ்துமார்க்கத்தையும் வித்தியாசப்படுத்திக் காண்பிக்கிறார். யூதமார்க்கம் பிரபலமானது. கட்டளையின்மேல் கட்டளை, பிரமாணத்தின்மேல் பிரமாணம் தேவ வெளிப்படுத்தலாக அதற்குக் கொடுக்கப்பட்டது. அதன் ஏற்பாடுகளெல்லாம் முன்னடையாளங்களும் நிழலுமாகவே யிருக்கின்றன. அதன் பிரமாணங்கள் பரிசுத்தமலையில் கொடுக்கப்பட்டன. யூதஜாதி தாழ்வடையும்போதெல்லாம் அவைகள் அவர்களுக்கு ஞாபகப்படுத்தப்பட்டன. அதன் ஆலயம், பலிகள், சங்கீதங்கள், ஆராதனைகள், பண்டிகை நாட்கள், ஆசாரியத்துவம் சகலமும் விசேஷித்தவைகளே. யூதமார்க்கத்தோடு கிறிஸ்துமார்க்கத்தை ஒப்பிட்டுப்பார்த்தால் கிறிஸ்துமார்க்கம் ஒன்றுமில்லையென்றே சொல்லவேண்டும். ஆனால் அதற்கு வெளிப்படுத்தப்பட்டவைகளெல்லாம் பூரணமும் முடிவுமானவை. தீர்க்கதரிசிகள் மூலமாய் அதிசயமானவைகள் வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் கிறிஸ்தவர்களுக்கோ தேவகுமாரன் சகலத்தையும் வெளிப்படுத்தினார். மேலும் பூர்வத்தில் வெளிப்படுத்தப்பட்டவை அந்தந்தத் தலைமுறையாருக்கென்றே வெளிப்படுத்தப்பட்டன. பங்கு பங்காகவும், இடத்துக்கேற்றதாகவும், தற்காலத்துக்குரியதாகவுமே வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் தேவகுமாரன் மூலமாகவோ பூரணமும், சர்வஜனத்துக்கேற்றதும், நித்தியமுமான, வெளிப்படுத்தல்கள் அருளப்பட்டன. பூர்வவெளிப்படுத்தல் தேவகிருபையைப்பெற்ற மனுஷர் மூலமாய் உண்டாயிற்று. பிந்தினதோ குமாரன்மூலமாய் உண்டாயிற்று.



இந்த ஆகமத்தின் நியாயதோரணைகளெல்லாம் 'இயேசுகிறிஸ்து யார்' என்னும் கேள்வியில் அடங்கியிருக்கிறதென்னலாம். அவர் தீர்க்கதரிசியா, ஆசாரியனா, இராஜாவா?, என்பதே. இக்கேள்விகளுக்கெல்லாம் ஆம் என்றே சொல்லவேண்டும். அதற்கு மேலாக அவர் குமாரனுமாயிருக்கிறார். தேவன் தங்கள் அனுபவத்தில் காண்பித்தவைகளை மற்றவர்கள் வார்த்தைகளால் வெளிப்படுத்தினார்கள். அவரோ தேவனைத் தம்மிலும், தமது ஜீவியம, மரணத்திலும் வெளிப்படுத்தினார். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்'.

**'சர்வத்திற்கும் சுதந்தரவாளி'** எதுவும் சிருஷ்டிக்கப்படுமுன்னமே, தேவனுடைய தீர்மானம் என்னவென்றால், உலகத்தைச் சிருஷ்டித்துத் தமது குமாரனுக்குக் கையளிக்கவேண்டும் என்பதே. காலத்துக்குக் காலம் ஒவ்வொன்றும் சிருஷ்டிக்கப்படும்போது குமாரன் பிதாவோடு ஐக்யப்பட்டு சகலத்தையும் சிருஷ்டித்தார்.

**'மகிமையின் பிரகாசம்'.** பிரகாசம் என்பதால் தேவமகிமைக்குப் புறம்பேயுள்ள ஓர் பிரகாசத்தைக் குறிக்காமல் தேவதன்மையின் மகிமையையே குறிக்கிறது. பிரகாசம் என்பதால் மூன்று காரியம் குறிக்கப்படலாம். (1) குமாரன் தமது தன்மையைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். (2) குமாரனுடைய தன்மை பிரத்தியேகமாய்த் தன்னில்தானே இருக்கப்பெற்றது. [3] அது தேவதன்மைக்கொப்பானது.

**'தன்மையின் சொரூபம்.** கிரேக்குப் பதத்தின் கருத்துப்படி ஓர் முத்திரை மோதிரத்தால் அல்லது முத்திரையால் (seal) இடப்பட்ட முகமானது மோதிரம் அல்லது முத்திரையின் சகல அம்சங்களும் பொருந்தியிருக்கும்வண்ணம் குமாரனில் பிதாவின் சகல அம்சங்களும் பொருந்தியிருக்கின்றன.

**'சர்வத்தையும் தாங்குகிறவர்.'** உலகத்தின் ஆளுகையும் நடத்துதலும் அவருடையதே. உலகத்தை மேன்மையான நிலைமைக்குக் கொண்டு வருவது கிறிஸ்துவின் வேலையே. இதற்காகவே அவர் இப்பூமியில் வந்து தமது ஊழியத்தை நிறைவேற்றினார்.

**'பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணினார்.'** தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் யாதொரு தடையுமில்லாமல் அவனைத் தேவனோடு ஐக்யப்படுத்துவதே மார்க்கத்தின் நோக்கம். இது நிறைவேற வேண்டுமானால் முதலாவது மனுஷன் தேவனை அறியவேண்டும். சரித்திரங்களில் மனுஷன் தன்னாலேதானே தேவனை அறியக்கூடாதவனென்று நாம் பார்க்கிறபடியால் அந்த அறிவும் உன்னதத்திலிருந்து அவனுக்குக் கிடைக்கவேண்டும். வேறு விதமாய்ச் சொல்லவேண்டுமானால், மார்க்கமா

ளது தேவ வெளிப்படுத்தலாயிருக்கவேண்டும். தேவனை அறியும் அறிவு மனுஷனுக்குத் தன் குற்றத்தை உணர்த்தக்கூடியதாயிருக்கிறது. ஏசாயா ஆண்டவருடைய மகத்துவத்தைத் தரிசித்து, சேராபீன்கள் அவருடைய பரிசுத்தத்தைப் போற்றிப் புகழ்ந்ததைக் கேட்டபொழுது, 'ஐயோ, நான் அதமானேன்' என்று புலம்பினான். அசுத்தம் கழுவப்பட்டு பாவத்தின் வல்லமை நீங்குமட்டும் தேவனோடு ஐக்கியப்படுவது கூடாத காரியம். ஆகவேக் மார்க்கமானது தேவனை வெளிப்படுத்துவது மாத்திரமல்ல, மனுஷனுக்கு மீட்பையும் கொடுக்கவேண்டும். இந்த விஷயத்தில் யூத மார்க்கத்துக்கும் கிறிஸ்து மார்க்கத்துக்குமுள்ள பேதத்தை விளக்குவதே இந்நிருபத்தின் முக்கிய நோக்கம்.

**உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்** (வ. 3). விசுவாசிகளின் சுதந்தரம் பூரணப்படவேண்டுமானால், தேவன் தம்மை வெளிப்படுத்தவேண்டும். தமது குமாரன் மூலமாய்ப் பேசி வெளிப்படுத்தவேண்டும். குமாரனும் தம்முடைய ஞானநிச்சயம், வல்லமை, மீட்பின் கிரியை இவைகளினால் அந்தச் சுதந்தரத்தைப் பூரணப்படுத்துகிறார். பூரண கிரியை முடித்தபின் அவர் ஆளுகை செய்கிறார். வலதுபாரிசம் என்பது சர்வத்துக்கும் மேலான கனம்பொருந்திய ஸ்தானம் தமக்கும் தமது ஜனங்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரம், நீதி, இரக்கம் மத்தியஸ்தம் இவைகளுக்குரித்தான ஸ்தானம் இதுவே.

**உட்கார்ந்தார்** (வ. 3) என்பதால் யாதொரு செயலின்றி இளைப்பாறுகிறார் என்றல்ல, அவர் இன்னமும் பிரதான ஆசாரியனுடைய கிரியையை நடப்பித்துக்கொண்டிருக்கிறார். ஆனால் வலது பாரிசத்தில் உட்கார்ந்தது ஓர் சரித்திர சம்பவத்தின் முடிவு என்பதைக் காட்டுகிறது.

**தேவதூதரைப்பார்க்கிலும்......மேன்மையுள்ளவர்** (வ. 4) தேவனுடைய வலதுபாரிசத்திற்கு உயர்த்தப்பட்ட குமாரனாகிய யேசு பூர்வகாலங்களில் பிதாக்களோடு பேசித் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தின ஊழியரைப் பார்க்கிலும் மேலானவர் மாத்திரமல்ல, சிருஷ்டிகளில் சிறந்தவர்களும் பூர்வகால பரிசுத்தவான்களுக்குத் தேவ செய்தியை வெளிப்படுத்திப் பணிவிடை செய்த தேவதூதரைப் பார்க்கிலும் மேலானவரே இரண்டு நியாயம் சொல்லலாம். (1) தூதர்கள் அறிவிக்கவும் வெளிப்படுத்தவும் மாத்திரம் கூடியவைகளைக் குமாரன் தாமே செய்து காட்டினார். பாவங்களின் சுத்திகரிப்பை உண்டுபண்ணினார். (2) தேவனுடைய இருச்சித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்றி அதன் பலனைச் சுதந்தரித்துக் கொண்டார்.

அவருடைய நாமம் மேலானது. மனுஷன் அவரை இயேசு கிறிஸ்து என்றும் தேவனே அவரைக் குமாரனென்றும் அழைக்கிறார். இயேசு



கிறிஸ்து என்பது அவருடைய ஆசாரியத்துவத்தையும் குமாரன் என்பது அவருடைய ராஜரீகத்தையும் குறிக்கிறது. இந்த நிருபம் முழுவதிலும் அவர் தேவகுமாரன், ராஜரீக ஆசாரியன் என்னும் கருத்துக்களையே முக்கியப்படுத்துகிறதாகப் பார்க்கலாம். இவ்வுத்தியோகங்களைக் கொண்டே அவர் தேவ அன்பை வெளிப்படுத்தி மீட்பின் கிரியையை முடித்து விசுவாசிகளுக்கு உன்னத பிரவேசம் அளிக்கிறார். திரைச் சீலையைக் கிழித்து பரிசுத்த ஸ்தலத்துக்குட் பிரவேசிக்கும் வழியைத் திறந்து ஜெபத்தினாலும் ஐக்யத்தினாலும் மனுஷர் தேவனை அறிந்துகொள்ளச் செய்கிறார்.

**தேவதூதர்கள்** (வ 5-14). அவர்கள் தேவனுடைய பணிவிடை ஆவிகள், அவர்கள் அதிசய ஜீவிகள், பாக்கியமுள்ளவர்கள். பழைய ஏற்பாட்டில் சில இடங்களில் அவர்களைத் தேவனுடைய குமாரர் (தேவர்கள்) என்று சொல்லியிருக்கிறது. மனுஷ ஜாதிக்கு மேலானவர்கள் அல்லது தெய்வீக ஜீவிகள் என்பதே அதின் கருத்து. தூதர்களுக்கும் மனிதருக்கும் வித்தியாசமுண்டு. அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர். காற்று, அக்னி இவற்றில் வெளிப்படுகிறவர்கள். காற்றும் அக்னியும் எப்போதும் தேவதூதர்களல்ல, சிலவேளைகளில் தூதர்கள் இவைகளின் மூலமாய் வெளிப்படுவார்கள். தேவனுடைய பராமரிப்பைச் சிருஷ்டிப்புகளின் மூலமாய் வெளிப்படுத்துகிறவர்கள். இரட்சிப்பைச் சுதந்தரிக்கிறவர்களுக்கு ஊழியம் செய்யும்படி கிறிஸ்துவின் ஊழியராய் மீட்பின் கிரியையில் உதவி செய்கிறார்கள்.

கிறிஸ்து தூதர்களுக்கு மேலானவர். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களிலும் சங்கீதங்களிலும் முன் குறிக்கப்பட்ட ராஜா அவரே. இத்தீர்க்கதரிசனங்களில் முதலாவது தீர்க்கதரிசனம் தாவீதின் சந்ததியிலேயே பிறக்கும் ஒருவனைக்குறிக்கிறதாயிருந்தது. யூத ஜனங்கள் அது மெது வான கருத்துள்ளதென்று எண்ணி வந்தார்கள். அப்படி வந்தவர் கிறிஸ்துவே. தாவீதின் சந்ததியில் பிறந்தவர்கள் ஒருவரொருவராய் அந்தத் தீர்க்கதரிசனத்திற்கு அபாத்திரராய்ப் போகவே, யூதஜாதியார் அதை மாம்சத்துக்கடுத்ததாய் நோக்காமல், அது திவ்விய வாக்குத்தத்தமுள்ளதென்று நம்பி எவ்விதமும் ஓர் ராஜா வருவார் என்று எதிர் நோக்கினார்கள். குமாரன் என்ற பெயர் மேசியாவுக்கே உரித்தானதாயிற்று. தேவன் தமது முதற்பேறானவர் இவ்வுலகத்தில் சர்வத்தையும் சுதந்தரிக்க வழிநடத்துவார் என்பதை எதிர் நோக்கினார். அப்போது தூதர்கள் யாவரும் அவரைப் பணிந்து கொள்வார்கள். அவர் தமது சிங்காசனத்தில் நித்தியகாலமாய் அரசாளுவார் அவர் நீதியாய் ஆளுகை செய்வார். மேசியாவின் நீதியான ஆளுகையே அவருக்கு ராஜரீகத்தைக் கொடுத்தது. அவர் ஆளுகை செய்யும்போது தீமைகாணப்படாது, மனுஷர் சந்தோஷப்படுவார்கள். தேவன்தாமே

பூமியை இவ்வித பூரணமுள்ளதாக்கி அதைத்தமது குமாரனுக்குக்கொடுக்கப் போகிறார். அதில் பங்கு பெறுகிறவர்கள் பாக்கியவான்கள்.

## ஏசுவினடிமை

தென்இந்திய சமுத்திரக்கரையில் பல சாத்தான் கோவில்களுண்டு, இதில் கடல்கரை ஓரத்தில் செம்பலிங்க சாத்தான் கோவிலிருக்கிறது. நம்மைப் படைத்துப் பராமரிக்குந் தெய்வம் இன்னதுதான் என்றறியாமல் காரிருளிலகப்பட்டவர்களைப்போன்ற பல ஜனங்கள் இந்தச் செம்பலிங்க சாத்தானை வணங்குகிறார்கள். இப்படி வணங்கிவந்த ஓர் குடும்பம் ஏறக்குறைய 80 வருஷங்களுக்கு முன்னமே இச்சாத்தான் கோவிலுக்கு நேர் வடக்கே 3 காத தூரத்திலுள்ள ஓர் சிற்றூரில் குடியிருந்தார்கள். இக்காலத்தில் 'எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி என்ற ஜீவஒளியைக்கொண்டு பிரஸ்தாபித்த ஓர் மிஷனெரியின் மூலமாய் சாத்தானின் தொண்டர்களாயிருந்த இவர்கள் இயேசுசுவாமியின் தொண்டர்களானார்கள். இவர்களுக்குப் பிள்ளையில்லை.

இவ்வருத்தத்தால் புருஷனும் மனைவியும் தங்கள் புதிய தெய்வத்தை நோக்கி எங்களை ரட்சிக்கவந்த இயேசுசுவாமி எங்களுக்கிரங்கி ஓர் குழந்தை கொடுத்தால் அந்தப் பிள்ளையை உமக்கே கொடுப்போம் என்று அன்னாளைப் போல் ஜெபித்துக்கொண்டனர்.

ஜெபத்தைக் கேட்கிற நமது பரமபிதா தமது நேசகுமாரன் மூலமாய் கேட்டுக்கொண்ட இவ்விண்ணப்பத்திற்கு இரங்கி ஓர் உற்பத்தி காலத்தில் ஓர் பெண்குழந்தை பிறக்கும்படி கிருபையளித்தார். ஆண் குழந்தையையே அதிகமாய் விரும்புவது இத்தேச வழக்கமிருந்தாலும் தனதருள்காதர் ஜெபத்தின் பலனாய்க்கொடுத்த தெதுவானாலும் போதும். அப்பனே, அருமை ஐயாவே என்றடிபணிந்து காணிக்கை படைத்து ஆனந்தமானார். இதன்பின் இயேசுவுக்கு பிள்ளையை கொடுப்பதெப்படி என்ற இன்னோர் வருத்தமுண்டாகி ஆலோசித்தாலோசித்து அக்காலமவர்கள் அறிவின்படி ஏசுவடியாள் என்று பெயரிட்டு பங்களாப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிடுவதே இயேசுவுக்குக் கொடுப்பதென்று தீர்மானித்து படிப்புக்குரிய பக்குவமான வயசில் சமீபத்திலிருந்த ஓர் போர்டிங் ஸ்கூலின் மானேஜரம்மாளிடம் இது ஏசுவுக்கு நேர்ந்துகொண்ட பிள்ளை என்று விட்டுவிட்டனர்.

இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட பிள்ளையோ இயேசுபெருமானைப்பற்றி அறிகிற அறிவிலும் அன்பிலும் அவர்களுக்குப் பயப்படும் பயத்திலும் அவரை துதிக்குந் துதி கீத சந்தோஷத்திலும் அதிகமதிகமாய் வளர்ந்து பரிசுத்த ஜீவியமாய் ஆலயந்தொழும் ஒழுங்கிலும் ஒய்வுநாளாசரிப்பிலும் ஒழுங்



கான நடத்தையிலும் வேத அறிவிலும் விழிப்புள்ள ஜெபத்திலும் பலருக்கும் பிதா மாதாவுக்கும் பார்க்கும் எவருக்கும் முன்மாதிரியாகி அக்காலப் படிப்பின்படி தமிழ் நன்றாய் வாசிக்கவும் எழுதவும் கற்றுவந்தது.

இப்படியிருக்கும்போது இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட அம்மாளின் தகப்பனார் தனது சகோதரி புருஷன் மரணத்தறுவாய் என்று கேள்விப்பட்டு மைத்துனனைப் பார்க்கப்போனார். அவஸ்தைப்படும் இந்துவாகிய மைத்துனர் கிறிஸ்தவ மைத்துனனைப் பார்த்து உம்முடைய மகளை என் இளைய மகனுக்கு மணமுடித்துக் கொடுப்போம் என்றுறுதிசொல்லி என் வாயில் பால்விட்டால் என் ஆவிபிரியும் என்று புலம்ப இச்சமயம் எவ்வித யோசனையுமின்றி ஆகட்டும் என்று பால் வாயிலிட இவர் மரித்துப்போனார்.

இன்னும் சிலகாலமானபின் வாக்குக்குரிய மருமகன் ஏசுவுக்குக்கொடுக்கப்பட்ட அம்மாளை எனக்குக் கொடுங்கள் என்று இந்த சமயத்தில் பெரிய பண்டாரம்போன்ற இவர் பெண்கேட்கத் துணிந்தார். பெண்மணியின் நற்குணப்பேரோசை நாலாதிசைக்கும் எட்டவே இயேசுவின் தொண்டர் பலர் பெண்கேட்டும்வந்தனர். இந்தச் சமயத்தில் இப்பெற்றோர்க்கு மூன்றாவதான வருத்தம் ஒன்றுண்டானது. நாமோ ஏசுவடியார், நமது பிள்ளையோ இயேசுவடியாள், அக்காலம் வாக்குங்கொடுத்தாய்விட்டதே என்று யோசித்து ஆதியின் வாக்குப்பிசகுவது ஆண்டவருக்குப் பிரியமிராது என்று கண்டு வாக்குப்பெற்ற மருமகனை எங்களைப்போல் கிறிஸ்தவனானால் கொடுப்போம் என்றுரைத்தார்கள். மருமகனோ இனிவிடவா என்று தானும் தன் முன்னோர்களும் கைதொழுத பேய்பிசாசுகளை முற்றிலும் விட்டுவிட்டு இயேசுவே என் இரட்சகர் என்றேற்றுக்கொண்டனர்.

தெய்வசித்தமான காலத்தில் இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட அம்மாளுக்கு இந்தியாவின் கிறிஸ்தவ ஆலயங்களிலெல்லாம் பிரமாண்டமான சிறந்த ஆலயத்தில் விவாகமானது. விவாகமுடிந்தபின் முதலாவது தன் வீட்டை ஜெப அறையாக்கி தனிஜெபம் குடும்பஜெபம் ஒழுங்காய் நடந்தவும், இரண்டாவது ஓய்வுநாளாசரிப்பில் சபைக்கும் ஆசாமிகளுக்கும் முன்மாதிரியாய் அந்திசந்தி மத்தியானம் சங்கீதக்காரனைப்போல மூன்று தடவையும் இரவில் ஜெபக்கூட்டத்திலும் வாரநாட்கள் காலை மாலை தினமுந் தப்பாமலும் தேவாலயம் போய் ஜெபித்து வருவார்கள். மூன்றாவது அக்காலம் சொந்த ஊரில் திருவிருந்தருந்துஞ் சிலாக்கியம் இல்லாததால் தூரமான ஆலயம்போக பெரும் மணல்பாதையில் அக்கினிநக்ஷத்திரகாலம் என்ற ஏப்ரல் மேய் மாசமான பங்குனி சித்திரை மத்தியான வெயிலிலும் மாசம் ஓர்தடவை தப்பாதோடிப்போவார்கள். நாலாவது சுவிசேஷ வேலையிலும் சுறுசுறுப்பு அதிகம். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் சுவிசேஷத்தை அறிவி என்ற திருவசனம் அம்மாளின் இருதயத்தில் கல்லில் பதித்த

அட்சரம்போல் பதிந்து தன்னண்டை வரும் அயலகத்தாருக்கும் இனஜனத்தோருக்கும் இயேசுவே நமது இரட்சகரென்று உறுதி சொல்வதோடு கிறிஸ்தவ சமயவழியிலகும் கிறிஸ்தவ பேதைக்கும் ஏற்றபடி உபதேசிப்பார்கள். ஐந்தாவது தர்மவிஷயத்தில் எந்த ஏழைக்கும் இயன்றமட்டும் உதவிசெய்து காணிக்கைவிஷயத்திலும் சங்கப்பண தர்மத்திலும் ஜாக்கிரதையும் உற்சாகமுமாயிருந்தார்கள். ஆறாவது அன்னியரை உபசரிப்பதில் பரி. லூக்கா எழுதியதுபோல அன்னியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு அதிகம் என்பதுபோலவே இந்த அம்மாளும் பாராட்டும் அன்பு அதிகமதிகமே. ஏழாவது குருபக்தி தேவஊழியருக்கும் கிறிஸ்துவின் தாசருக்கும் மரியாதையும் உபசரணையும் கவனித்தால் இந்த நிமிஷம்வரை சாட்சி பகராதார் ஒருவருமில்லை. இச்சிற்றூரின் வழியாய்ப் பிரயாணம்பண்ணும் தேவஊழியர் யாரானாலும் அவர்களுக்கெல்லாம் இந்த அம்மாள் வீடு சத்திரமே சத்திரம் என்பது நான் பார்த்தமட்டும் சத்தியமே சத்தியம்.

இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட அம்மாளின் குடும்ப ஜீவியம் எப்படியிருந்ததென்றால் விவாகமான சில மாசங்களுக்குள் தன் நாயகரின் தோள்ச்சுமைத் தொழிலை நிறுத்தி தெய்வகிருபைக்காய் மன்றாடி மாட்டுச்சுமை வியாபாரமாக்கினார்கள். பின்னும் தெய்வகிருபையை முன்னிட்டு சில வருடங்களுக்குள் வண்டிப்பார வியாபாரம்பண்ண வழிபண்ணினர். பத்து அணாக்கால் ரூபாய்க்காக பத்துகாதச் சுமை சுமந்தோடின தன் எஜமான் பின் பத்து நிமிஷத்தில் பத்து பத்தான ரூபாய் சம்பாதிக்கத் திறமையாக்கினர். ஒரு வார்த்தையுரைக்க ஐந்து நிமிஷம் பிடிக்கக்கூடிய தன் நாயகன் அருள்நாதர் கிருபையைப்பெற்று அவ்வூரிலும் அசலூரிலும் அதிகநேரம் பிரசங்கிக்கத் தகுதியாகும்படி பழக்கி அறிவீனமொழித்து அறிவாளர்மத்தியிலும் அமரக்கூடிய திறமையாக்கினர். மகனையோ சிறுபிராயமுதல் தேவஊழியமாகவே திருப்பிவிட்டனர். சிறிய கூரைவீட்டையொழித்து சுற்றுக்கட்டுக் காரைவீடாக்கினார்கள். "புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்" என்ற சிறந்த வாக்கியம் இந்த அம்மாளில் நிறைவேறலாயிற்று.

துன்மார்க்கவிஷயம், தெருச்சண்டை, வீட்டுச்சண்டை, குடும்பச்சண்டை இவைகள் அம்மாளைக் கண்டாலும் பயந்தோடும். தென் இந்தியச் சபையைக் கெடுக்கும் ஜாதிவித்தியாசத்தை ஜீவகாலம்யாவும் எதிர்த்து என்னைக் கெடுக்காதே பேயே எங்கள் தேசத்தைக் கெடுக்கும் நாயே என்று உயிருளவும் எதிர்வாதம்பண்ணினார்கள். ஏறக்குறைய 95 வயசாகுமட்டும் உலகம், பிசாசு, மாம்சம் என்ற மூச்சத்துருக்களோடு போராடி மேற்கொண்டு தன் சிறுபிராயமுதலாய் நேசித்த தனது பரம எஜமானின் பாதாரவிந்தத் தரிசிக்கும்படி நல்முதிர்வயதிலே வெற்றிசிறந்த சபைக்கெழுந்தருளினார்கள்.



# சீனதேசத்து கவர்னர்

ஷான்சி மாகாணத்துக்கவர்னர் பேர் யென் ஷி ஷான். இவர் தற்காலத்தவரில் பிரக்யாதிபெற்றவர். மற்றமாகாணங்களிலெல்லாம் குழப்பங்கள் நடந்துகொண்டிருக்க இவருடைய மாகாணம் வெகு அமரிக்கையாயிருக்கிறது. கைத்தொழில், விவசாயம் இவைகளை முக்கியப்படுத்துகிறார். தமது மாகாணமெங்கும் ஒரேவிதமான நிறையும் படியும் உபயோகிக்க ஒழுங்கு செய்திருக்கிறார். பெண்களுக்குப் பாடசாலைகள், ஆண்கள் கட்டாயமாய்ப் படித்தல், ஜனங்களுடைய சன்மார்க்கத்துக்கேதுவான புஸ்தகங்கள், பத்திரிகைகள் பிரசுரித்தல் இவைகளை நடத்துகிறார். பத்திரிகைகள் மூலமாய், விபசாரம், சிசுவதை, குடிவெறி, இவைகளைக் கண்டித்து சுத்தம், சுறுசுறுப்பு, சிநேகம் இவைகளைப் பரிபாலிக்கவும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தேவவணக்கத்தை முக்கியப்படுத்தவும், விக்கிரகவணக்கத்தைத் தள்ளவும் ஏற்பாடு செய்கிறார். குடும்பத்துக்குரிய சட்டங்களாக அடியிற் காட்டியவைகளைப் பிரசுரித்திருக்கிறார்:—

[1] பணமின்மையல்ல, தொழிலற்றிருப்பதே தரித்திரம் [2] பெற்றோர் குணமே பிள்ளைகளின் மாதிரி. குணம் நல்லதானால், பிள்ளைகள் நல்லவர்கள், குணம் கெட்டதானால், பிள்ளைகள் கெட்டவர்கள். [3] நஞ்சைவிட அசுத்த ஆகாரமே அநேகரைக் கொல்லும் [4] வேலைக்காரர் அதிகப்பட்டால் மோசம் அதிகம். [5] உன் மகனுக்குச் சன்மார்க்கத்தைப் போதிக்காவிட்டால், அவனைக் கள்ளனாக வளர்க்கிறாய். அவனுக்குத் தொழில்கற்றுக்கொடாத தகப்பன் அவனைப் புறம்பே தள்ளுகிறான். மனுஷர்கள் தேவனை அறியும் அறிவை அடையும்படியாக அதிக முயற்சியெடுக்கிறார். பட்டணமுழுவதிலும் சுவர்களில் 'பயப்படவேண்டிய காரியங்கள் மூன்று : தேவன், பிரமாணம், ஜனசங்க ஏற்பாடு, மெய்யான தேவனில்லாவிடில் சிருஷ்டிப்பு எப்படி யுண்டாகும். வானத்திலும் பூமியிலுமுள்ள அதிசயங்களைக் கவனியுங்கள் இந்த வாசகங்கள், வரையப்பட ஒழுங்குசெய்திருக்கிறார்.

மனுஷர் தனித்தனியாய்த் தேவனை அறிந்துகொள்ள விரும்பி பெரிய பட்டணங்களில் 'தனிப்பரீட்சை மடங்கள்' (Self Examination Halls) கட்டியிருக்கிறார். சில ஊர்களில் கன்பூசிய மதத்து ஆலயங்களையே விக்கிரகங்களை எடுத்துப்போட்டு இவ்வித மடங்களாக்கியிருக்கிறார். ஒவ்வொரு மடத்திலும் ஒரு மேடையும் ஈராயிரம்பேர் இருக்கத்தக்கதான பெஞ்சுகளும் உண்டு. பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு மடம் உண்டு. இந்த மடங்களில் சகல உத்தியோகஸ்தரும் மாணாக்கரும் ஆயிரக்கணக்காய் கூடுவார்கள். மிகுந்த அமைதலும் ஒழுங்கும் இருக்கும். ஞாயிறு காலைதோறும் ஆராதனையுண்டு. எல்லாரும் உட்கார்ந்திருக்கும்போது பட்டணத்தி

ளுள்ள பிரதான உத்தியோகஸ்தர் பிரவேசிப்பார், எல்லாரும் எழுந்திருந்து அவர் போய்த் தமது இடத்தில் உட்காருமளவாக நிற்பார்கள். அப்பொழுது கீதவாத்தியத்தினால் ஓர் ராகம் பாடப்படும். எல்லாரும் உட்கார்ந்தபின் பேசுகிறவர் பீடத்தில் எழும்பிநின்று கன்பூசியஸ் என்பவரின் வசனங்கள் ஒன்றின்பேரில் 15 நிமிஷம் பிரசங்கம்செய்வார். அது முடிந்தபின் எல்லாரும் அமரிக்கையாயிருக்க ஒவ்வொருவரும் தன் இருதயத்தை ஆராய்ந்து, தன் ஜீவியத்தைச் சோதித்து, தான் தேவனுக்கு முன்பாகவும் மனுஷனுக்கு முன்பாகவும் நடந்துகொண்டவிதத்தைப் பரிசோதித்துத் தன் குற்றங்களை உணரவும் தன் பிழைகளை அறிக்கையிடவுமாக நேரம் கொடுக்கப்படும். அது முடியவும் பட்டாளத்து வாத்தியம் கோஷிக்கும்.

பொது ஜனங்களுக்காக ஓய்வுநாள் காலை 11-மணிக்குப் பொதுவான ஓர் ஆராதனையும் நடத்தப்படும். இது எல்லாப் பட்டணங்களிலும் கிராமங்களிலும் உண்டு. இதற்கு 'இருதய சுத்திகரிப்பு சங்கம்' (Heart Cleaning Society) என்று பெயர். இந்தக் கூட்டங்களில், பள்ளிக்கூடப் பாடகர் பாடுவார்கள். தேச கொடிக்கு மரியாதைசெய்வார்கள். தேசாபிமானப்பாட்டுகளை படிப்பார்கள். கன்பூசியஸ் என்பவருக்காகத் தூபங்கள் காட்டப்படும் (அடிக்கடி இது நின்றுபோகும். கிறிஸ்தவர்களுக்கு இது கட்டாயமல்ல) மார்க்கம், நல்லொழுக்கம், ஜனோபகாரம், தேசாபிமானம் இவ்விஷயங்களின் மேல் உபந்யாசங்கள் செய்யப்படும். இந்தக் கூட்டங்களில் பிரதான உத்தியோகஸ்தர், பிரபுக்கள், ஆண், பெண் பாடசாலைகளின் மாணவர், ஒவ்வோர் வியாபாரக் கம்பெனி அல்லது ஷாப்பிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதிகள் வந்திருப்பார்கள் ஆஜர்ப்பட்டியொன்றுண்டு. ஆராதனைக்கு வாராதவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இந்தக்கூட்டங்களில்பேசக் கிறிஸ்தவர்களை வலிய அழைப்பார்கள். கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க யாதொரு ஆக்ஷேபனையுமில்லை ஆனால் அதை ஞானமாய்ச் செய்யவேண்டும். மற்றவர்களுக்கு வருத்தம் உண்டாக்கக்கூடாது. கிறிஸ்தவர்கள் ஊர்க்கூட்டப் பிரசங்கங்களில் கிறிஸ்துவின் நாமத்தை நேரில் சொல்லக்கூடாது. பிரசங்கங்களில் விக்கிரகாராதனை ஒழித்தலும் மெய்த்தேவனை வணங்குதலும் அதிகமாய்ப் பேசப்படுகிறது.

இந்தமார்க்க எழுப்புதலைக் கவனிக்குங்கால் கன்பூசியஸின் மார்க்கம் புது உயிரடையும்போல் தோன்றுகிறது. என்றாலும் யென் என்றும் தேசாதிபதி அந்தரங்கத்தில் கிறிஸ்தவனடியானாயிருப்பாரோ வென்று பலர் சந்தேகப்படுகிறார்கள் மெய்தான் ஜனங்கள் தேவனை அறியும் மெய்யறிவையடையும்படி அநேகரை வழிநடத்தும் கருவியாயிருக்கிறார் இப்படிப் பட்டவர்களுக்காக ஊக்கமாய் ஜெபிப்போமாக.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by
the Christian Brotherhood Association, Tinnevelly.



30 MAY 1921

April 1921 Registered No. M 136.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXII எப்பிரல்மீ 1921

## திருநெல்வேலி இந்திய கிறிஸ்தவர்களின் 23-வது கன்வென்ஷன் கூட்டங்கள்—1921

1921 மேமீ 17உ—20உ முடிய (வைகாசிமீ 4உ—7உ)

கர்த்தருக்குச் சித்தமானால் நாளது வருஷத்துக் கன்வென்ஷன் கூட்டங்கள் மேலே குறிப்பிட்ட தேதிகளில் டக்கரம்மாள்புரத்தில் நடத்தும்படி கர்த்தருக்குள் தீர்மானித்திருக்கிறது. 17உ செவ்வாய்க்கிழமை சாயங்காலம் முதல் வெள்ளிக்கிழமை சாயந்தரம் முடிய கூட்டங்கள் நடைபெறும். கூட்டங்களில் பல சகோதரர் பேசும்படியான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. வழக்கம்போல சாப்பாட்டு வசதிகள் செய்யப்படும். கிறிஸ்து சபைக்கடுத்ததான பல நூதன ஏற்பாடுகள் ஆலோசிக்கப்படும் இக்காலங்களில் திருநெல்வேலி சபையானது ஆவிக்குரிய பிரகாரமாய் முன்னேறிச் செல்லவேண்டியதாயிருக்கிறது. நமது அத்தியக்ஷாதீனத்துச் சபையானது இந்திய திருச்சபைக்கு எல்லா விஷயங்களிலும் மாதிரிச் சபையாகும்படி சர்வேசுவரன் நடத்துவாராக. தேவனுடைய பிள்ளைகளும் ஊழியருமாகக் கூடிவரும் இவ்விதக் கூட்டங்கள் பரிசுத்தாவியின் ஏவுதலால் நடத்தப்படவும் இக்கூட்டங்களின் மூலமாய் நமது அத்தியக்ஷாதீனமுழுவதிலும் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடவும் அருள்புரியும்படி ஜெபிப்போமாக. திருச்சபையின் ஞான வளர்ச்சியை விரும்பும் யாவரும் இக்கூட்டங்களுக்கு வரும்படி வருந்தியழைக்கிறோம். இந்நாட்களில் நடக்கும் கூட்டங்கள் கூடிவரும் யாவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமுள்ளவைகளாயிருக்கும்படி ஜெபிப்போமாக.

கன்வென்ஷன் நடத்தும் சகோதரருக்காக,

Palamcottah, April 5 1921.

R. V. Asirvadam,
Bishop's Chaplain

## "உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக" யோவா 20: 21.

ஆதியிலே தேவன் மனுஷனை தம்முடைய சாயலாகவும் தம்முடைய ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார். அவன் பரிசுத்த நிலைமையிலிருந்தான் தேவன் அவனோடு உலாவினார். தேவனோடு அவன் ஏகசமாதானமாய் ஜீவித்தான். ஆனாலோ அவன் கர்த்தருடைய கட்டளையை மீறின அந்த நிமிஷமுதல் தனக்கும் தேவனுக்கும் சமாதானக்கேடு உண்டானதென்று கண்டு தன்னை ஒளித்துக்கொண்டான். தேவன் அவனைப்பார்த்து "ஆதாமே எங்கே இருக்கிறாய்?" என்று கேட்கும்படி நேரிட்டது. அவரைப் பார்க்க அவனால் கூடவில்லை, தன் நிர்வாணம் தனக்குத் தெரிந்து அதை மூடப் பிரயாசப்பட்டான். அந்த நேரமுதல் தேவனுக்கும் மனுஷனுக்கும் சமாதானக்கேடு உண்டானது. அவன் அவரைத் தரிசிக்கக்கூடாதவனானான்.

கர்த்தர் தம்முடைய இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் அவனுக்காகப் பரிதபித்து, அவன் தம்மைத் தரிசிக்கவும், பழையபடி தம்மோடுகூட இருக்கவும் ஒருவழியைக் காட்டினார். சமாதான பலிகளை ஏற்படுத்தி அதன் மூலமாகவாவது அவன் தம்முடைய தரிசனத்தையடையட்டும் என்று சித்தங்கொண்டார். ஆனால் அவனோ தன் அக்கிரமத்தில் வளர்ந்துகொண்டேவந்து கடவுளிடத்தில் சேரக்கூடாத நிலைமையிலிருந்தான். அவனுக்கும் தேவனுக்கும் கடக்கக்கூடாத பிளப்பை உண்டாக்கிக்கொண்டான். ஆகையால் நீதியும் அன்பும் இரக்கமும் நிறைந்த சர்வவல்லமையுள்ள தேவன், விலைமதியாத ஒரு சமாதான பலியைக் கொடுப்பதாக வாக்களித்தார். அவர் தாமே இந்தப் பூலோகத்துக்கு வந்து நம்முடைய பாவங்களுக்குத்தக்க சமாதான பலியை செலுத்துவதாகத் தெரிவித்தார். அவர் தமது பரிசுத்த தீர்க்கதரிசிகளின் மூலமாக தமது திருவுளச் சித்தத்தை காலாகாலங்களில் வெளிப்படுத்தினார்.

"இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது." "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" என்று தம்முடைய தாசனாகிய ஏசாயா மூலம் தெரிவித்தார் [ஏசா, 9: 6]: மேலும் "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது' என்றும் முன்னறிவித்தார் (ஏசா 53: 5). தம்முடைய வாக்கின்படி காலம் நிறைவேறினபோது ஆகாயத்தில் முழங்கின ஒரு பாட்டின் சத்தம் கேட்டது,' உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக' என்று பரமசேனையின் திரள் ஏகமாய் முழங்கினது.



இதோ வானத்தையும், பூமியையும், சமுத்திரங்களையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்த சர்வவல்லவர், பூமியின்மேல் ஒரு ஏழைக் குழந்தையாக ஒரு மாட்டின் கொட்டிலிலே பிறந்தார். அவர் சமாதானப் பிரபு என்று தேவதூதர்கள் பறைசாற்றினார்கள். ஆசாரியனாகிய சகரியா பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு 'நமமுடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும் உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறதென்று' சாட்சிபகர்ந்தான். அவரை தேவாலயத்திற்குக் கொண்டுபோனபோது நீதியும் தேவபக்தியும் உள்ளவனும் இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருந்தவனுமான சிமியோன் என்பவன் ஏசுபாலகனைத் தன்னுடைய கைகளில் ஏந்திக்கொண்டு "ஆண்டவரே உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்." [புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும் உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் தேவரீர் சகல ஜனங்களுக்கும் ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது"] என்று சொல்லி தேறுதலடைந்து (லூக் 2: 32). வீட்டுக்குத் திரும்பினான். இயேசுப்பெருமானும் இப்பூலோகத்தில் இருந்தகாலத்தில் அந்த சமாதானத்தைப்பற்றி விஸ்தாரமாகப் போதித்து "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் என்று பகர்ந்தார் (மத். 5: 9): தாம் பாடுபடுமுன்னே தம்முடைய சீஷர்களைப் பார்த்து "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று அவர்களைத் தேற்றினார் (யோ. 14: 27). அவர் தமமுடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து பிதாவை நோக்கி வேண்டிக்கொண்டபோது தம்முடைய சீஷர்கள் எல்லாரையும் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாயிருக்கும்படி ஏகமாய் மன்றாடினார் (யோ 17: 23) அவர் சிலுவையில் பாடுபடும் தினத்திலே, முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்தும் ஏரோதும அன்று சமாதானமானார்கள் (லூக். 23: 12). அவர் சிலுவையில் தொங்கும்போது தம்மோடேகூட அடிபட்ட கள்ளனுக்கு சமாதான மரணத்தைக் கட்டளையிட்டார். அவர் மரித்து உயிர்த்தெழுந்த பிறபாடு தம்முடைய சீஷர்களை அவர் சந்தித்து "உங்களுக்குச் சமாதானம்" "உங்களுக்குச் சமாதானம்" "உங்களுக்குச் சமாதானம்" என்று மூன்றுதடவை ஆசீர்வதித்தார் (யோ 20: 19—26). இப்படியாக மனுஷன் பாவத்தில் விழுந்து தேவசமாதானத்தை இழந்த நாள்முதல் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டபடி சமாதான பிரபு தோன்றி சமாதானத்தைப் போதித்து மனுஷர்

கள் ஈடேறும்படி "அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்து இப்படி சமாதானம் உண்டுபண்ணி, பகையை சிலுவையினாலே கொன்று அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபே 2: 14—16) அவருக்கே சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

சர்வவல்லமையும் மகத்துவமுமுள்ள தேவன் நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணி வந்திருக்கிறார். நம்முடைய காரியம் எப்படியிருக்கிறது? நாம் அந்த சமாதானத்தை நமக்குள் அடைந்திருக்கிறோமா? நம்மைத் தாமே சோதித்துப் பார்ப்போமாக. நாம் இரண்டுவிதமான சமாதானத்தை அடையவேண்டியவர்களாயிருக்கிறோம். முதலாவது தேவனோடு சமாதானம் இரண்டாவது மனுஷரோடு சமாதானம். இந்த இரண்டு சமாதானத்தையும் நாம் இந்த பூலோகத்தில் இருக்கும்போதே அடையாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் நமக்குப் பங்கு இல்லை.

1. **தேவனோடு சமாதானம்.** "துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லை" யென்று சத்தியவேதம் சொல்லுகிறது (ஏசா 48: 22). "அவர்கள் கால்கள் பொல்லாப்புச்செய்ய ஓடி குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்த தீவிரிக்கிறது. அவர்கள் நினைவுகள் அக்கிரம நினைவுகள், பாழ்க்கடிப்பும், அழிவும் அவர்கள் வழிகளில் இருக்கிறது. சமாதான வழியை அறியார்கள். அவர்கள் நடைகளில் நியாயமில்லை. தங்களுடைய பாதைகளை தாங்களே கோணலாக்கிக் கொண்டார்கள். அவைகளில் நடக்கிற ஒருவனும் சமாதானத்தை அறியான்" (ஏசா 59: 8). மேலும் சத்தியவேதத்தில் முதலிலிருந்து கடைசிவரையும் பார்த்தால் பாவத்தினால் மனுஷன் தேவசமாதானத்தை இழந்து போகிறானென்று பார்க்கலாம். உதாரணமாக, ஆதாம் தேவனோடே உலாவினவன் கீழ்ப்படியாமையின் பாவத்தினாலே தேவசமுகத்திலிருந்து தன்னை ஒளித்துக்கொண்டான். பேதுரு இரட்சகரோடுகூட அவருடைய பாடுகளின் காலங்களில் பின்சென்றபோதிலும் தான் அவரை மறுதலித்ததினாலே அவர் சமீபத்தில் கூட உள்ளே நிற்கமுடியாமல் வெளியேபோய் அழுதான். ஆகையால் பாவமானது நம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது என்ற சத்தியத்தை நாம் பார்க்கிறோம். பாவத்தில் நிலைத்திருக்கும் வரைக்கும் நமக்கும் தேவனுக்கும் சமாதானம் இல்லவேயில்லை. ஆகையால் அவருடைய பாடுகளைத் தியானிக்கிற காலங்களில் நாம் நம்முடைய பாவங்களை விட்டுத் திரும்புவோமாக. நமக்குள் இருக்கிற "பொய், களவு, குடிவெறி, மாம்ச இச்சை, பெருமை, அசுத்தம், முதலிய சகல செய்கைகளை



யும் விட்டுவிடுவோமாக. சகல கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், மற்ற எந்த துர்க்குணமும், உங்களைவிட்டு நீங்கக்கடவதென்று" அப்போஸ்தலன் எச்சரிக்கிறார்.

2. **மனுஷ சமாதானம்.** தேவனுக்கும் நமக்கும் சமாதானத்தை உண்டுபண்ணின இரட்சாபெருமான் மனுஷ சமாதானத்தைப்பற்றியும் வற்புறுத்தினார். தம் சீஷர்கள் தங்களில் எவன் பெரியவனென்று தர்க்கித்துக்கொண்டிருக்கும்போது அவர்களைக் கண்டித்தார். தாம் பாடுபடுமுன்னே ஒரு திராட்சக்கொடியை எடுத்து அதின் இலைகளைக் காட்டி அவைகள் ஒட்டியிருக்கிற விதத்தையும் காட்டி இவைகளைப்போல் நீங்களும் நிலைத்திருங்கள் என்று போதித்தார். ஒரு இலைக்கு ஒரு இலை வித்தியாசம் இல்லாமல் எல்லாம் ஒரே கொடியில் ஒட்டியிருக்கிறதுபோல நீங்களும் ஒரே ஐக்கியமாயிருங்கள் என்று சொன்னார். "நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள். அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்றும் சொன்னார் (யோ 13: 35). இதுமாத்திரமா? அவர் கெத்செமனே தோட்டத்திற்கு போகிறதற்கு சற்று முன்னமே மேல்வீட்டறையில் சீஷர்களுடைய ஐக்கியத்திற்கும் சமாதானத்திற்கும் போராடவில்லையா? "பரிசுத்த பிதாவே நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படி நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலும் நான் உம்மிலும் இருக்கிறதுபோல அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கவும் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று பிதாவோடே போராடவில்லையா? அவர் பரலோகம் போனபிற்பாடு அவருடைய சீஷர்கள் ஒருமைப்பட்டு ஓரிடத்தில் கூடி ஜெபம்பண்ணினபோது கூடியிருந்த இடம் அசையவில்லையா? சகோதரரே நம்முடைய நிலைமை எப்படியிருக்கிறது? நமக்குள்ளே சமாதானம் உண்டா? காலையிலும் மாலையிலும் "இத்தருணத்தில் ஒருமனப்பட்டு" என்று தினந்தோறும் தேவசமுகத்தில் ஜெபம்பண்ணுகிறோமே, ஒருமை உண்டா? உங்கள் பாவங்களினிமித்தம் முழு இருதயத்தோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டு பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து இனி தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு புதிதாக்கப்பட்டவர்களாய் அவருடைய பரிசுத்தமார்க்கத்தில் நடப்போமென்று தீர்மானித்திருக்கிற நீங்கள் உங்களுக்கு ஆறுதல் உண்டாக இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்று கர்த்தருடைய ஊழியக்காரன் தேவசமுகத்திலிருந்து ஒவ்வொரு வாரமும் சொல்லும்போது ஆமென் என்று சொல்லி பரிசுத்த பந்தியிலும் பங்குபெறும். ஆத்துமாவே, உனக்கு

பிறரோடு அன்பும் ஐக்கியமும் உண்டா? ஒரு பந்தியில் முழங்காலூன்றி
யிருக்கிற சகோதரருக்குள் சிலருக்குப் பேச்சுவார்த்தைகூட கிடையாதே.
ஆலயத்தை விட்டு வெளியேபோனால் அவன் இப்படி, இவன் இப்படி
அவனைத் தொலைக்கவேணுமென்றும் பேச்சுவருகிறதே. பகையையும் வர்
மத்தையும் மனதில் பேணிவைத்து கர்த்தருடைய பந்தியில் சேரலாமா
சகோதரரே இது எப்பேர்ப்பட்ட பந்தி' இது யாருக்கு ஏற்பட்டது? ஒரு
செடியில் ஓடின இலைகளைப்போன்ற ஐக்ய கிறிஸ்தவர்களுக்கல்லவா?
வெளியேபோனால் சகோதரனுக்கு சகோதரன் சதியாலோசனைபண்ணு
கிறான், பரிசுத்த பந்தியிலும் பங்குபெறுகிறான். அப்போஸ்தலனுடைய
எச்சரிப்பை நாம் அறியாமலிருக்கலாமா? "எவன் அபாத்திரமாய் கர்த்தரு
டைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகி
றானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்ற
முள்ளவனாயிருப்பான்." அபாத்திரமாய்ப் போஜனம்பண்ணுகிறவன் கர்த்த
ருடைய சரீரமின்னதென்று அறியாததினால் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு
வரும்படி போஜனம்பண்ணுகிறான்" என்று எச்சரிக்கிறார் (1 கொரி 11:
27–29). அருமை இரட்சகருடைய எச்சரிப்பையும் கவனிப்போமாக. "நீ
பலிபீடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன்
சகோதரனுக்கு குறைவுண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில் அங்கேதா
னே பலிபீடத்துக்குமுன் உன்காணிக்கையைவைத்து விட்டுப்போய், முன்பு
உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை
செலுத்து" என்று இரட்சகர் சொல்லுகிறார் மத். 5: 23, 24). கிறிஸ்தவ
சகோதரனே உன்னைத்தானே சோதித்துப்பார். நீ உன் சகோதரனோடே
ஒப்புரவாகாமல பந்தியில் சேரலாமா? கர்த்தருடைய சபையில் ஒரு அங்க
மாயிருக்கும் உனக்குள், அநியாயம், சபைபிரிவினை, பொறாமை, கோள்,
சண்டை, மற்றவர்களைக் கெடுக்கும் குணம் முதலிய துர்ச்சுபாவங்கள்
உண்டா? நீ எப்போதாவது சபைப்பிரிவினைக்கு காரணமாயிருந்தாயா? நீ
எப்போதாவது மற்றவனைக் கெடுக்கிறதற்கும், அநியாயமாய் கேவலப்படுத்
துகிறதற்கும் காரணமாயிருந்தாயா? அப்படியானால் உனக்குள் மனுஷ
சமாதானமுமில்லை. தேவசமாதானமுமில்லை. கர்த்தருடைய ஆலயத்தி
லிருந்து வெளியே வரும்போது தேவசமுகத்திலிருந்து பிறக்கும் 'எல்
லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானத்தில் உனக்கும் பங்குண்டென்று
நினைக்கலாமா? கிறிஸ்தவர்களின் பிரிவினையினாலும் சண்டையினாலும்
புறமதஸ்தர் பார்த்து சிரிக்கிறதற்கும், கர்த்தருடைய நாமத்தை அவமதிக்
கிறதற்கும் நாம் காரணமாயிருக்கலாமா? சகோதரரே, நாம் பெலவீன மனு
ஷர்தான். நாமும் காலாகாலங்களில் வழுவி பாவத்தில் விழுகிறதுண்டு
ஆனால் அதில் நிலைத்திருக்கிறது தப்பிதமென்று உணரவேணும். தாவீது



தவறினார். பின்னாலே அழுதுபுலம்பினார் பேதுரு தவறினார் பின்னாலே
மனங்கசந்து அழுதார். தம்முடைய ஜீவனைக்கூட அவருக்கென்று ஒப்புக்
கொடுத்தார். சகோதரரே, கர்த்தருடைய பாடுகளையும், மரணத்தையும்
சிந்திக்கிற இந்தக் காலத்தில் நம்மை நாமே சோதித்து தேவனுக்கும் நமக்
கும் சமாதானம் உண்டா, மனுஷருக்கும் நமக்கும் சமாதானம் உண்டா
என்று கர்த்தருடைய சமுகத்தில் சோதித்து தடையாயிருக்கிற பாவங்க
ளுக்காக மனஸ்தாபப்பட்டு, அவைகளை விட்டு விட்டு, இனி அதில் நிலைத்
திராதபடி தீர்மானம்பண்ணுவோமாக. மற்றவர்களுடைய குற்றங்களையும்
மறக்கவும் மன்னிக்கவும் பழகுவோமாக.

ஆகையால் பிரியமானவர்களே இவைகள் வரக்காத்திருக்கிற நீங்கள்
கறையற்றவர்களும், பிரியமுள்ளவர்களுமாய், சமாதானத்தோடே அவர்
சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாய் இருங்கள் (1 பேது) சமாதா
னத்தைத் துலக்கினவரும், அதை முடித்தவரும், இனி நாம் சமாதானத்
தோடே அவர் சந்நிதியில், காணப்படும்படி காக்கவல்லவருமாகிய அந்த
சமாதான பிரபு நமக்கு நித்ய சமாதானத்தைத் தந்தருளுவாராக. ஆமென்.

S M. D.

## 'நீ எங்கேயிருக்கிறாய்?' (ஆதி. 3: 9).

பரிசுத்த வேதாகமத்தில் அநேக கேள்விகள் அடங்கியிருக்கின்றன.
பற்பல மனிதர் பற்பல சமயங்களில் பற்பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்
கள். அதற்கு மறுமொழிகளும் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன.
சிற்சில கேள்விகளுக்கு மறுமொழிகளே இல்லாமல் விடப்பட்டிருக்கின்றன.
அவைகளைப்பற்றி நாம் இப்பொழுது அறிவது அவசியமானது. ஆனால்
தேவாதி தேவன் அநேக சமயங்களில் அநேக கேள்விகள் கேட்டிருக்கிறார்.
அவைகளில் முதற் கேள்வி இது. 'நீ எங்கேயிருக்கிறாய்?' இக்கேள்வியா
னது பரிசுத்த வேதாகமத்தில் முதல் கேள்வியாகவும் காணலாம்.

ஆதியில் தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தபின்பு ஆதா
மையும், ஏவாளையும் பரிசுத்தமுள்ளவர்களாக உண்டாக்கினார் என்பது நமக்
குத்தெரிந்த விஷயமே. அவர்கள் எவ்வளவு சந்தோஷமுள்ளவர்களாயும் பாக்
கியம் நிறைந்தவர்களாயும் ஜீவித்தார்களென்பதும் நமக்குத் தெரிந்ததே.
ஆனாலும், எப்பொழுதும் அவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவில்லை. எப்
பொழுதும் அவர்கள் பாக்கியத்தை அனுபவிக்கவில்லை. ஏனென்றால் புசிக்
கக்கூடாதென்று தேவன் விலக்கியிருந்த விருக்ஷத்தின் கனியை, இருவரும்
புசித்து, இவ்விதமாய் தேவனுடைய கட்டளையை மீறினதினால், இருவரும்
பாவிகளானார்கள். இப்பொழுது தாங்கள் பாவிகளென்றறிந்தவர்களாய் தங்

கள் நிர்வாணத்தை மறைத்துக்கொள்ள அத்தி இலைகளைத் தைத்து உடுத்திக்கொண்டு, தேவசமுகத்தைவிட்டு ஓடி மறைந்து ஒளித்துக்கொண்டார்கள். இதோ தேவன் வருகிறார். ஆதாமைக் காணோம், ஏவாளையும் காணோம். ஆதாமை நோக்கி, 'நீ எங்கேயிருக்கிறாய்?' என்று கேட்கிறார்.

### மாறுதல்

ஆதாமிடத்தில் ஒரு பெரிய மாறுதலைக் காண்கிறோம். முன்னே பரிசுத்தன், இப்பொழுது பாவி. முன்னே எல்லாம் சந்தோஷம், இப்பொழுது துக்கம். முன்னே தேவனோடு உலாவினான், இப்பொழுது தேவனைக் கண்டு ஒளிக்கிறான். முன்னே தேவசமுகத்தைத் தரிசிக்க ஆசித்தான், இப்பொழுது தேவசமுகத்தினின்று ஓடிப்போகிறான். முன்னே தேவன் எப்போ வருவாரென்று காத்துக்கொண்டிருப்பான், இப்பொழுதோ எங்கே வந்துவிடுவாரோ, எங்கே தன் பாவத்தைக் கண்டுபிடித்துவிடுகிறாரோ, எங்கே அழித்துவிடுகிறாரோ என்கிற பயம் கொண்டவனாய் தேவ வரவை வெறுக்கிறான். இந்த நிலைமையில் தேவ சத்தம் கேட்கிறது 'நீ எங்கேயிருக்கிறாய்?' ஐயோ! ஆதாமுடைய கைகால்கள் நடுங்குகிறது, மனம் துடிக்கிறது.

### தேவன் ஆதாமைத் தேடினார்

தாம் உண்டாக்கின மனுஷர், தமது கட்டளையை மீறிவிட்டார்களென்று அவர்களை அழித்துவிடும்படியாக தேவன் வரவில்லை. நடந்த விஷயங்கள் யாவையும் அறிந்த தேவன், வழக்கம்போல், தோட்டத்தில் உலாவி ஆதாமைத் தேடினார். அவருடைய சத்தத்தைக் கேட்டவுடனே ஆதாமுடைய இருதயத்திலுள்ள அந்தரங்கங்களெல்லாம் வெளிப்பட்டன. ஒன்றையும் மறைத்துக்கொள்ள அவனால் கூடாமற்போயிற்று. நடந்த விருத்தாந்தத்தையெல்லாம் சொல்லிவிட்டான்.

தேவன் ஆதாமோடு பேசின அந்த நாளோடே இக்கேள்வி முடிவடைந்து போகவில்லை. அந்நாள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும், இனிமேலும் பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக இக்கேள்வி தொனித்துக்கொண்டிருக்கிறது. அல்லாமலும்! ஆதாமை மாத்திரம் நோக்கிக் கேட்ட கேள்வியாக மாத்திரமல்ல! தேவன் நம் ஒவ்வொருவரையும் நோக்கிக் கேட்கும் ஒரு கேள்வியாகவுமிருக்கிறது.

(1) நாம் தகாத சிந்தனைகள் செய்துகொண்டிருக்கும்பொழுதும், யாரைக் கெடுக்கலாம், யாரை மோசஞ்செய்யலாம், எப்படி நாம் சிற்றின்பத்தை அனுபவிக்கலாம், எவ்விடம் போகலாம், யாரோடு தர்க்கிக்கலாம் என்று இவ்விதமாக நம்முடைய சிந்தனைகளைச் சிதறவிட்டு, பாவத்தில் பிரவேசிக்க ஆரம்பம் செய்யும்பொழுதும் இதோ தேவசத்தம் நம்மை உணர்த்துகிறதில்லையா? 'நீ எங்கேயிருக்கிறாய்?' உன் நினைவுகள் எங்கே செல்லுகிறது?



(2) தகாத சம்பாஷணையில் தலையிட்டுக்கொள்ளும்பொழுதும், தூஷணமான வார்த்தைகளைப் பேசும்பொழுதும், அவன் அப்படி, இவன் இப்படியென்று அவதூறான வார்த்தைகளைப் பேசும்பொழுதும், இவ்விதமாகத் தேவன் தம்மைத் துதிக்கும்படியாக நமக்கு அளித்த நாவினால் பாவம் செய்யும்பொழுது இதோ தேவசத்தம் தொனிக்கிறது. 'நீ எங்கேயிருக்கிறாய்? உன் வாயின் சம்பாஷணை எங்கே செல்லுகிறது?

(3) தகாத வீடு வாசலுக்கு விரைந்து செல்லும்பொழுதும், வழி மறித்து மோசம்செய்யத் தெருக்கடையில் பதுங்கிக் காத்திருக்கும்பொழுதும், கள்ளக்கையொப்பம் இடும்பொழுதும், துன்மார்க்கமான கடிதங்கள் எழுதும்பொழுதும், இவ்விதமாக நமது கரங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் ஒப்புக்கொடுக்கும்பொழுதும் தேவ சத்தத்தை உற்றுக்கேட்போமாக. 'நீ எங்கேயிருக்கிறாய்?' உன் கையின் கிரியைகள் எங்கே சாய்கிறது.

(4) நாம் அவலக்ஷணமான படங்களைப் பார்க்கும்பொழுதும், கண்காட்சிகளைப் பார்க்கும்பொழுதும், இரவும் பகலும் சிற்றின்பங்களை நோக்கும்பொழுதும் இப்படியாக நமது தேக உறுப்புகளை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்பொழுதும் இதோ தேவன் 'நீ எங்கேயிருக்கிறாய்?' என்கிறார்.

சகோதரரே, இக்கேள்விக்கு என்ன உத்தரவு சொல்வோம்? நமது பாவங்கள் அவருடைய கண்களுக்கு மறைவாயிருக்கவில்லை. அவர் எல்லா இருதயங்களையும் அறிகிறவர். ஆகையால் இக்கேள்வியை நமது ஜீவியத்திற்கே ஒரு சட்டமாக்கிக்கொண்டு, நாம் என்ன யோசித்தாலும், என்ன பேசினாலும், என்ன நடப்பித்தாலும் தேவன் நமது பக்கத்தில் நின்று இந்தக் கேள்வியைக் கேட்கிறதாக உணருவோமாகில், மெய்யாகவே நாம் பிசாசின தந்திரங்களுக்கு விலகி மோக்ஷானந்தத்திற்குப் பங்குள்ளவர்களாவோம். 'நீ எங்கேயிருக்கிறாய்?'

S. R. D.

## அத்தியாயம் 4

## பிரான்சிஸை முதலாவது பின்பற்றினவர்கள்

அசிசி பட்டணத்திலே பிரான்சிஸ் என்பவரால் பெரிய கிளர்ச்சி உண்டானதென்று நாம நிச்சயமாய் உத்தேசிக்கலாம். அநேகர் அவரை சொஸ்த புத்தியுள்ளவர்தானோவென்று சந்தேகித்துக்கொண்டிருக்குங்கால், பிரான்சிஸ் என்பவரிடத்தில் வெளிப்படையாய் காணப்பட்ட விபரீதமான காரியங்களுக்குள் ஜீவியத்தின் பெரிய மாறுதலைக் கண்டவரும் சிலருண்டு,

அப்படிப்பட்டவர்களுடைய மனச்சாட்சிகள் இவரது நற்குணங்களைக்கண்டு ஆச்சரியமான விதமாய் எழுப்புதலடைந்தன. பிரான்ஸிஸ் ஜீவியத்தில் மார்க்கத்தினாலுண்டான மாறுதலைக் கண்ட பெருந்தன்மையுள்ள ஆத்துமாக்கள், தங்கள் ஜீவியத்தைப்பற்றி அதிருப்தியடைந்தனர். பிரான்ஸிஸ் என்பவருடைய ஜீவியத்தை வெகு கருத்தோடும் சற்று பொறுமையோடும் கவனித்துக்கொண்டிருந்தவர்களில் உயர்ந்த ஸ்திதியிலுள்ள பெர்னார்ட் என்பவர் ஒருவர். இம்மாறுதலுக்குக் காரணம் இன்னதென்று அறிய பெர்னார்ட் எத்தனையோ கோட்பாடுகளை ஒன்றன்பின் ஒன்றாய் ஆராய்ந்துவிட்டு கடைசியில் இம்மாறுதல் தெய்வத்தினாலேயே உண்டானதென்று தீர்த்தனர். இந்த நீபமோடு தீர்ப்பாய் அவருக்கும் ஓர் தெளிவான அழைப்பு வரவே, தாமும் அப்பாதையிலேயே செல்ல நிர்ணயம் செய்துகொண்டார்.

மற்றவர்கள் தம்மோடு சேர்ந்து ஜீவியத்தில் கஷ்டங்களை அனுபவிக்க ஆவலும் ஆயத்தமுமாயிருப்பார்கள் என்று பிரான்ஸிஸ் என்பவர் நினைக்கவேயில்லை. மற்றவர்களை தேவனிடத்தில் கொண்டுவரவேண்டும் என்பதுதான் அவருடைய ஒரே நோக்கமாயிருந்தது. அச்சமயத்தில் பெர்னார்ட் அவரிடம் சென்று அவருக்குக் கீழ்ப்படிந்து அவருக்குச் சிஷனாயிருப்பதாகச் சொன்னதைக் கேட்டவுடன் அவருக்கிருந்த ஆச்சரியத்திற்கோர் அளவில்லை. நாம் தேவனிடத்தில் இதைப்பற்றி ஜெபித்து இப்பேர்ப்பட்ட அருமையான தீர்மானத்தைக் குறித்து ஆலோசனை கேட்கவேண்டும் என்று சொன்னார்.

அவர்களிருவரும் அருகிலிருந்த ஓர் ஆலயத்தில் ஜெபிக்கவே இந்தக் காரியம் கர்த்தராலுண்டானதென்று திட்டமாய் அறிந்துகொண்டனர். அதிகப் பணக்காரனாகிய பெர்னார்ட் இவ்வுலக ஆஸ்திகளில் பிரயோஜனமில்லை என்று உணர்ந்து பிரான்ஸிஸோடு கலந்து யோசித்து, கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார். பரம மகாராஜாவிடமிருந்தல்லோ அவன் இவ்வாஸ்திகளைப் பெற்றான். இப்பொழுது அதினால் அவனுக்கு உபயோகமில்லை என்று கண்டு, தன் சொத்துக்களையும், வீடுகளையும், தனக்குண்டானதெல்லாவற்றையும் விற்று அசிசிப் பட்டணத்துச் சந்தைவெளியிலே கூடியிருந்த ஏராளமான ஏழைகளுக்கு அப்பணத்தைத் தருமமாகக் கொடுத்துவிட்டான். இக்காட்சியைக் கண்ட அசிசிப் பட்டணத்தாருக்குள்ளே திரும்பவும் ஓர்விதமான கிளர்ச்சியுண்டாயிற்று. பைத்தியம் அதிகரித்ததென்று நினைத்தனர் அநேகர். ஆனால் அங்கு பார்த்துக்கொண்டிருந்தவர்களில் இருவர் மாத்திரம் பிரான்ஸிஸோடு சேர மனதுடையவர்களாயிருந்தனர்.

பிரான்ஸிஸ் கோவில்களைப் பழுதுபார்க்கும் சமயம் சில்வெஸ்டர் என்னும் பேராசையுள்ள குருவினிடம் சில கற்கள் வாங்கியிருந்தார். பெர்னார்ட் தன் சொத்துக்களை ஏழைகளுக்குக் கொடுக்கும் சமயத்தில் இந்தக் குருவும் அந்தக் கூட்டத்தில் நின்றுகொண்டிருந்தார். தானும் கொஞ்சம்



பணம் பெற்றுக்கொள்ள ஆசைப்பட்டு, பெர்னார்ட் இடம் சென்று, அவர் முன் இவரிடம் வாங்கின கற்களுக்கு பணம் கொடுக்கவில்லை என்று அபத்தமாகச் சொல்லவே பெர்னார்ட் கைநிறைய பணம் எடுத்து அவனுக்குக் கொடுத்தார். அந்தக் குரு பணத்தைச் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டு போனபின், தகாத விதமாய் அந்தப் பணத்தை வாங்கினதினாலே அவன் மனச்சாட்சி குத்தப்பட்டவனாய் கடைசியில் கர்த்தரிடம் கொண்டுவரப்பட்டான். அவன் தன் பாவத்தை அறிக்கைசெய்யவே பிரான்ஸிஸ் அவனை சகோதர ஐக்கியத்தில் சேர்த்துக்கொண்டார்.

பிரான்ஸிஸ் பெர்னார்ட் என்பவர்களுடைய செய்கையைக் கேள்வியுற்ற எகிடியஸ் தானும் அவ்வித ஜீவியமடைய வேண்டுமென விருப்பமுற்றனர். அவர் பிரான்ஸிஸை வெளியில் சந்தித்து, தன்னையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென அவ்விடத்திலேதானே வேண்டிக்கொண்டனர். எகிடியஸின் நோக்கம் எவ்வளவு தூரம் உண்மையானதென்று சோதித்தறிவதற்கேற்ற சமயம் ஒன்று பிரான்ஸிஸுக்கு வாய்த்தது. சில நாட்களுக்குப் பின் இவர்களிருவரும் ஓர் வழியே போகையில், பிச்சை கேட்டுவந்த யாசகன் ஒருவனைச் சந்தித்தனர். ஒருவரிடமும் பணம் இல்லாததினால் பிரான்ஸிஸ் எகிடியஸைப் பார்த்து உன் போர்வையை இவ்வேழைச் சகோதரனுக்குக் கொடு என்றார். உடனே யாதொரு மாறுத்தரமுமின்றி தன் போர்வையை எடுத்து அவ்வேழையின் தோளிலே போட்டான். இதைக் கண்டு பேரானந்தம் அடைந்தார் பிரான்ஸிஸ் என்பவர். எகிடியஸ் தான் தெரிந்துகொண்ட பாதையினின்று சற்றும் தவறாமல் சகல காரியத்திலும் பிரான்ஸிஸுக்கு கீழ்ப்படிந்துவந்தான். அவன் எந்த வேலை செய்தாலும், எல்லாவற்றிலும் சித்திபெற்றுவந்தான். தனக்காவது தன் சகோதரருக்காவது வேண்டிய பணம் சம்பாதிக்கும்வண்ணம் எந்த வேலையாயினும் சற்றும் வெட்கப்படாமல் செய்துவந்தான்.

பிரான்ஸிஸை சேர்ந்திருந்தவர்களெல்லாரும் இவ்வளவு திடபக்தியுள்ள தபத்தனராயிருக்கவில்லை. எல்லாரும் புத்திசாலிகளாயுமிருக்கவில்லை. மாஸியோ என்பவன் பிரான்ஸிஸின் செல்வாக்கின் சக்தியைக் கண்டு பொறாமைகொண்டான். ஆனால் சீக்கிரத்துக்குள்ளாக மனந்திரும்பி ஒரு உண்மையுள்ள சிஷனானான். ஜினிப்பரோ தன்னை முழுவதுமாய்த் தத்தம்செய்த பக்தர்களிலும் விவேகத்துடன் தன் வைராக்கியத்தைக் காண்பியாததின்பொருட்டு அடிக்கடி துன்பத்திற்குட்பட்டான். தன் கைக்குக் கிட்டினதெதுவோ அதெல்லாவற்றையும் பிறருக்குக் கொடுத்துவிடுவான். சாதாரணமாய் அவன் உலாவப்போய்த் திரும்பிவருகையில் அவன் முதுகில் துணியொன்றுமிராது. வருங்காலத்தில் நேரிடும் கஷ்டத்தைத் தடுக்கும் வண்ணம், ஓர் சமயத்தில் தான் பிச்சை எடுத்துச் சம்பாதித்த சாப்பிடக்கூ

டைய சாமான்களை எல்லாம் சேர்த்து ஓர் பாத்திரத்தில் போட்டு, ஓர் மாதம் முடியும்வரை புசிப்பதற்குப் போதுமான ஆகாரம் சமைத்துவைத்தான் அம்மனிதன். அவ்வாறு அவன் சமைத்து தன் சகோதரருக்கு முன்பாக புசிக்கும்படி வைத்த ஆகாரமானது, பசியால் வருந்தும் ஒரு நாய்கூட புசிக்கமுடியாததாயிருந்தது. லீயோ என்னும் மற்றொரு சீஷன் பிரான்சிஸ்க்கு நெருங்கிய நண்பனாயிருந்து, அவருடைய ஜீவியத்தின் கடைசி நாட்களில் அவருக்கு வெகு உதவிபுரிந்தான். இவன் தன் குருவைப்பற்றி ஓர் பிரபந்தம் எழுதி வைத்துப்போயிருக்கிறான். அதில் பிரான்சிஸை சம்பூரண சற்குண உருவம் என்றழைக்கின்றனன். பிரான்சிஸின் நடபடிக்கைகளைக் காட்டும் மனோகரமான பிரபந்தங்களில் இது ஒன்று அதுவுமன்றி பிற்காலத்தில் இப்பரிசுத்தவானைப்பற்றி எழுதப்பட்ட சரித்திரங்களில் காணப்படும் குறைகுற்றங்கள் இப்பிரபந்தத்தில் காணப்படவில்லை.

அச்சகோதரர் தொகை அதிகரிக்கவே அவர்கள் இரண்டு இரண்டு பேராய் தேசத்தைச்சுற்றி பலபாகங்களுக்கும் போய் கிறிஸ்துவை மனிதருக்குக்காட்டி மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கித்துவந்தனர். தங்கள் பிழைப்புக்காக தாங்களே வேலைசெய்யவேண்டியதாயும் அல்லது கிறிஸ்துவின் பேரிலுள்ள அன்பினிமித்தம் அவர்களுக்கு எது கொடுக்கப்பட்டதோ அதை ஏற்றுக்கொள்ளவேண்டியதாயுமிருந்தது. கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார் என்பதே அவர்கள் பிரிந்துபோகும் சமயத்தில் ஒவ்வொருவருக்கும் சொல்லப்பட்ட யோசனை.

பிரான்சீசும் எகிடியசும் ஒன்றாய்ச் சென்றனர். இத்தாலியா தேசத்தின் ரோட்மார்க்கமாய் இவ்விருவரும் காலில் பாதரக்ஷையற்றவர்களாயும், சாதாரண உடைதரித்தவர்களாயும் வெகு மனோதைரியத்துடன் போயினர். அவர்களை சந்தித்த ஒவ்வொருவனையும் பார்த்து, தேவன் தமது சமாதானத்தை உங்களுக்கு அருளிச்செய்வாராக என்றே வாழ்த்தினர். சமயம் வாய்த்தபோதெல்லாம் பிரான்சிஸ் சில வார்த்தைகள் பேசினார். அவ்வாறே எகிடியசும் பேசினான். அவர்களுக்கு ஆகாரம் வேண்டியபோது, தேவ அன்புக்காக அதைக் கேட்க ஐயப்படவில்லை. தாம் இவ்வாறு பிச்சை எடுப்பது ஒரு அவமானம் இல்லையென்று காட்டும்வண்ணம் பிச்சை எடுக்குதலை கடவுளின் மேசையைச் சேர்வதற்குச் சமானமாகப் பாவித்து "கடவுளின் மேசையைச்சேர ஒருவரும் வெட்கப்படக்கூடாது என்று சொல்லி வந்தனர்.

இவர்கள் தங்கள் வேலையிலிருந்து திரும்பிவந்தபோது மற்ற சீஷர்கள் இவர்களுக்காகக் காத்துக்கொண்டிருந்ததைக் கண்டார்கள். பிரான்சிஸ் தம் வேலையைப்பற்றி ஜெபித்து அதைப்பற்றி யோசிக்கலாயினர்.

தாம் ஏற்படுத்தவேண்டிய முதல் பெரிய சகோதர ஐக்கியம் இன்னதென்று அவர் மனதில் தென்பட்ட சமயம் அதுவே.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

407

May 1921. Registered No. M. 136.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும். யோவான் 7: 38.

Vol. XXII மே 1921

28 JUL 1921

## 'எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.' அப். 1: 8.

இதோ! கிறிஸ்துநாதர் பரமேறும் சமயத்தில் தம்முடைய ஜனங்களுக்கு அருளின கடைசி உத்தரவு. "நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" இவைகளைச்சொன்னபின்பு உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். பாருங்கள் அவர்களுடைய நோக்கம் வேறு. ஆண்டவருடைய நோக்கம் வேறு. இந்தப் பூமியில் அரசாளும்படி விரும்பினார்கள். ராஜ்யபாரம் செய்யக்கருதினார்கள், "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?" என்று கேட்டார்கள். அதாவது "ஆட்சி செய்ய விரும்புகிறார்கள். அவருடைய தீர்மானமோவேறே. ஆட்சி செய்யும்படி அல்ல சாட்சி சொல்லும்படிக்கே அவர்களை நியமித்தார். ஆ! தற்காலத்திலுள்ள கிறிஸ்தவர்கள் இப்படியே தப்பெண்ணம் கொள்ளுகிறார்கள். இந்த உலகத்தில் நன்றாய் வாழவேண்டுமென்றும் இங்கே ஆடம்பரமாய் ஜீவிக்கவேண்டுமென்றும் அதிகாரம் செலுத்தவேண்டுமென்றும் ஆசைப்படுகிறார்கள். பாவத்தை வெறுக்க மனமில்லை. சிலுவையை எடுத்துக்கொள்ளப் பிரியமில்லை. இயேசுநாதருக்குப் பின்சென்று நடக்க விருப்பமில்லை. சாட்சிகூற ஆசையில்லை. ஆட்சிசெய்ய விரும்புகிறார்களே தவிர சாட்சிகளாய் விளங்க அவர்கள் விரும்புகிறதில்லை. கட்டளையைப் பாருங்கள். "நீங்கள் ..... எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். பரம ராஜாவினுடைய சாட்சிகளாயிருப்பது கனமா? கனவீனமா? விசேஷித்த கனம் அல்லவா? ராஜாதி ராஜாவாகிய கிறிஸ்துநாதர் இந்தப் பூலோகத்தில் தம்முடைய சாட்சிகளாய் விளங்க உங்களை அழைக்கிறார். எத்தனை பெரிய சலாக்கியம் என்று கவனித்துப் பாருங்கள். அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கதே, அவருக்குச்சித்தமானால் தேவதூதர்களையும் மோட்சவாசிகளையும் சாட்சிகளாக அனுப்பலாமே.

நாம் மிதிக்கிற கல்லுகளையும் பேசவும் சாட்சிகூறவும் உயிர்ப்பித்து எழுப்பலாமே. இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக் 19-40) ஆனாலும் அவருடைய திருச்சபையைப் பாருங்கள். மீட்கப்பட்ட நீசப்பாவிகளாகிய நம்மைச் சுவிசேஷத்தை விசுவாசிக்கவும் அதை உலகமெங்கும் பிரசித்தப்படுத்தவும் அழைத்திருக்கிறார். இது அதிசயமே அதிசயம். கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எனக்கு! எனக்கு! ஆச்சரியம்! ஆச்சரியம்!!

I. கள்ளச்சாட்சி உண்டு (சங் 27. 12.) "பொய்ச் சாட்சிகளும்..... எனக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள்" இந்தத் தேசத்தில் கள்ளச் சாட்சிகள் எத்தனை? கோர்ட்டுக் கச்சேரிகளில் போய்ப் பாருங்கள். அங்கே மாத்திரமா? நம்முடைய சபையாருடைய வழக்குகளில் பொய்ச் சாட்சிகளும் கள்ளப் பிரமாணங்களும் இல்லையா? காணாததைக் கண்டோமென்றும் கண்டதைக் காணவில்லையென்றும் சொல்லவில்லையா? நியாயத்தைப் புரட்டிச் சத்தியத்தை மறுத்து அபத்தம் பேசி வருகிறார்களே? ஐயோ! இப்படிப்பட்ட காரியங்களினிமித்தமல்லவா தேவன் இந்தத் தேசத்தின்மேல் விசனமாயிருக்கிறார்? இப்பேர்ப்பட்ட பொய்ப் புரட்டுக் கபடம் கள்ளத்தனம் வஞ்சகங்களினிமித்தமல்லவோ நம்முடைய சபைகளில் அருள்மாரி பெய்யாதபடிக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது? கர்த்தர் வெறுக்கிற ஆறு காரியங்களில் இது ஒன்று (நீதி. 6. 16-19) "அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி" மேலும் அது தனனில்தானே மகா மோசமானது. உலக காரியங்களில் கள்ளச்சாட்சி மோசமானதென்றால் தேவனுக்கடுத்த விஷயங்களில் உண்மைத்தப்பாய்ச் சாட்சிகூறினால் எத்தனை பயங்கரம்! "எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" அப்படியானால் நாம் அவரைக் கண்டவர்களும் கேட்டவர்களுமாயிருக்கவேண்டும். இயேசுவைக்காணாதவன் எப்படி அவருக்குச் சாட்சியாயிருக்கக்கூடும்? அவரை அறியாதவன் அவருடைய ரட்சிப்பைக்கூறி அறிவிப்பது எப்படி? நீங்கள் குணப்படாதவர்களும் பாவத்தைவிடாதவர்களுமாயிருந்தால் இயேசுநாதருக்குச் சாட்சியாயிருப்பது எப்படி? அவரைக்கண்டவர்கள் போலவும் அறிந்தவர்களைப்போலவும் பேசினாலும் வெளியிட்டாலும் கள்ளச் சாட்சி தானே!

திருஷ்டாந்தம். சில நாட்களுக்கு முன் கல்குத்தாவிலே வியாபாரி ஒருவன் தண்டிக்கப்பட்டான். அங்கே சீமை மருந்தொன்றை விற்கிறார்களாம். நல்ல மருந்து, முதல் தரமான மருந்து. அந்த வியாபாரி செய்த குற்றம் என்னவென்றால், வெறும் தண்ணீரோடு ஏதோ ஒன்றைக் கலந்து ஒன்றுக்கும் உதவாத ஒரு மருந்தைச் செய்து அதற்கு அந்த நல்ல மருந்தின்



பெயரைக்கொடுத்து இதைச் சீமை தேசத்து நல்ல மருந்து, சகல வியாதிகளையும் குணமாக்கும் என்று சொல்லிப் பித்தலாட்டம் பண்ணி ஜனங்களை ஏமாற்றிப்போட்டான். ஆனால் அது மருந்தல்ல, அதைச் சாப்பிட்டால் மோசம் வருமேயல்லாது சுகம் வரவேமாட்டாது. அவன் செய்த மாய்மாலம் சர்க்காருக்குத் தெரிந்து அவனைப் பிடித்துத் தண்டித்துப் போட்டார்கள். ஆ, பிரியமான ஜனங்களே! உங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளுகிறீர்கள். பாவவியாதியை நீக்கக்கூடிய மருந்து, ஔஷதம் கிறிஸ்துமார்க்கமல்லவா? மோட்சதேசத்திலிருந்து வந்த அந்தத் திவ்விய மருந்து ஒன்று மாத்திரம் பாவப் பிணியைக் குணமாக்கும். அப்படியிருக்க உங்களில் அநேகர் செய்கிற மோசம் தெரியுமா? ஞானஸ்நானம் பெற்றபோதிலும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருந்தாலும் குணப்படாமலும் பாவத்தை விடாமலும் முன்போலவே பொய் சொல்லிச் சண்டை போட்டு அநியாயம் பண்ணி உலகத்தை நேசித்து அஞ்ஞானிகள் கூடச் செய்யாத அநேக துணிகரமான பாவங்களை மனமறியச்செய்து, இதுதான் கிறிஸ்துமார்க்கம், இந்தக் குணப்படாத நிலைமையே கிறிஸ்து மார்க்கம், குடித்து வெறித்து, ஓய்வுநாளை மீறி, பிறனைக்கெடுத்துப் போட்டு, இதுவே கிறிஸ்து மார்க்கம் என்று உங்கள் நடக்கையினாலே காட்டுகிறீர்கள். அந்த எத்தன் அசுத்தமான தண்ணீரைப் புட்டிகளிலும் குப்பிகளிலும் ஊற்றி நல்ல மருந்து என்று சொல்லி ஜனங்களை வஞ்சித்ததுபோல, நீங்கள் கிறிஸ்து மார்க்கமல்லாததை ரட்சிப்பின் மார்க்கமென்று காட்டுகிறீர்கள். ஐயோ! தூஷணவார்த்தை பேசுவது, கிறிஸ்து மார்க்கமா? பொய் சொல்லுவது கிறிஸ்து மார்க்கமா? சகோதரனே! உன் சாட்சி நல்ல சாட்சியா? நான் கிறிஸ்தவன் என்று நீ சொன்னாலும் கிறிஸ்துநாதரை அறியாதவனாயிருக்கிறாயா? இந்த அக்கம்பக்கத்தில் புறமதஸ்தர் எல்லாரும் ஏன் கவலையற்றிருக்கிறார்கள்? உங்கள் துர் நடக்கையைக்கண்டு—கிறிஸ்து மார்க்கத்தின் நன்மை அப்படித்தானோ என்று அதை விரும்பாமலிருக்கிறார்கள். ஐயோ! கிறிஸ்தவர்கள் மூலமாய் ஆண்டவருடைய மார்க்கமும் நாமமும் நாள்தோறும் தூஷிக்கப்படுகிறது.

II உத்தம சாட்சியுமுண்டு வெளி 1: 5 "உண்மையுள்ள சாட்சி" 1: 14 "உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி" "மெய்ச்சாட்சிக்காரன் பொய் சொல்லான்" (நீதி 14: 25) ஆ! இந்த தேசத்தில் மெய்ச்சாட்சி அவசியம் வேண்டும். மெய்ச்சாட்சியினால் அல்லவா அநியாயங்களும் பித்தலாட்டங்களும் தொலைந்துபோம்.

திருஷ்டாந்தம் ஒரு பட்டணத்தில் ஒரு வீட்டிலே சண்டை நடந்தது. கிறிஸ்தவவீடு, அடுத்த வீட்டுக்காரன் நல்ல கிறிஸ்தவன்—தேவனுக்கென்று தன்னைப் பிரதிஷ்டை செய்தவன். சண்டை நடக்கும்போது அவன் பக்

கத்தில் நின்று கண்டும் கேட்டுமிருந்தான். அப்படியிருக்க சண்டைக்காரர் கோர்ட்டுக்குப்போய்ப் பிராது செய்தார்கள். அநியாயம் செய்தவன் அடுத்த வீட்டுப் பக்திமானையும் சாட்சியாகச் சேர்த்துக்கொண்டான் அவனுக்கு மனமில்லை என்றாலும் அவன் சம்மதமில்லாமல் அவனைச் சாட்சியாகக்கூப்பிட்டான். விசாரணை நடக்கிறதற்கு முந்தின நாளிலே பிராது செய்தவன் இந்த நல்ல கிறிஸ்தவனிடத்தில் வந்து என் பட்சத்துக்கு அனுகூலமாய்க் கோர்ட்டிலே சொல்ல வேண்டும் என்று கேட்டான். அவனோ என் கண்ணால் கண்டதையும், காதால் கேட்டதையும் மாத்திரம் சொல்லுவேன், ஒன்றும் குறைக்கவுமாட்டேன் கூட்டவுமாட்டேன் என்று சொன்னதின்பேரில் பிராதுக்காரன் பயந்து 'அப்படியானால் நீர் வரவேண்டாம்' என்று நிறுத்தினான். பார்த்தீர்களா? உண்மையுள்ள சாட்சி வந்தால் பொய்புரட்டு எல்லாம் வெளிக்கு வரும்.

உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தில் வேண்டும். அப்போஸ்தலர்மார் கதைகளைப் பிரசங்கிக்கவில்லை. தாங்கள் கட்டின மனோராஜ்யங்களையும் பிரஸ்தாபிக்கவில்லை. "நாங்கள் கேட்டதும் எங்கள் கண்களினாலே கண்டதும் நாங்கள் நோக்கிப்பார்த்ததும் எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்' (1 யோ 1: 1) எத்தனை நிச்சயம், எவ்வளவு உத்தமம். "மெய்ச்சாட்சி சொல்லுகிறவன் உயிர்களை ரட்சிக்கிறான்" ஆனால் பொய்ச்சாட்சி சொல்லுகிறவன் உயிர்களைக் கெடுத்துப்போடுகிறான்.

நீ பொய்ச்சாட்சியா? மெய்ச்சாட்சியா? உயிர்களைக் கெடுக்கிறாயா? ரட்சிக்கிறாயா?

## 'நினைத்துக்கொள்ளுங்கள்'

'முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்' எபி. 10: 32.

'முன்னே வருவேனே..........இவைகளை நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள் உருகுகிறது' சங். 42: 4.

ஒரு மனுஷன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான் என்பது பிரசங்கியின் நீதிவசனம். முன்னே நடந்தவைகளை நினைப்பது இருதயத்தை உருகப்பண்ணுகிறது என்பது இஸ்ரவேலின் இன்ப கவிஞனின் அன்பின் அனுபவம், பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டும் என்பது மோசே முனிவரின் முக்கிய பிரசங்கம். வெட்டியெடுக்கப்பட்ட குழியையும் தோண்டியெடுக்கப்பட்ட துரவையும் திட்டமாய் எட்டிப்பார் என்பது தீர்க்கன் ஏசாயாவின் தெளிவான கட்டியம். முந்தின நாட்களை மறந்தவன் கண்சொருகிப்போன குருடனைப்போலாகி



றான். பழைய நிலைமையை மறக்கிறான், முந்தின சிநேகிதனை வெறுக்கிறான், இல்லாத பெருமையும் பொல்லாத நடையும் சொல்லாத வார்த்தையும் சொல்லி நில்லாத நீர்க்குமிழிபோல் நிமிஷத்தில் கெட்டுப்போகிறான் தமிழ்ச் சபைகள் தங்கள் நூற்றாண்டு உற்சவத்தைக் கொண்டாடி மகிழும் இக்காலத்தில் ஆவியானவர் முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள் என்று திருவுளம்பற்றுகிறார்.

1. 'நன்றியோடிருக்க முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்' உபா. 32: 7. வணங்கா இஸ்ரவேலரை தேவன் பலத்த கையினாலும் ஓங்கிய புயத்தினாலும் கொடிய பார்வோனின் அருஞ்சிறையிலிருந்து புறப்படப்பண்ணினார். ஈரோத்தின் இடைஞ்சலில் நேரான பாதைகாட்டினார். செங்கடலைப்பங்கிட்டுத் தங்கம்போல வழிநடத்தினார். மாராவின் கசப்பு இனிப்பானது, சூர்வனத்தின் பக்கத்தில் சீர்சிறந்த நீரூற்றைக்காட்டினார். கன்மலையிலிருந்து தண்ணீர்கள் புறப்பட்டு வறண்டவெளிகளில் ஆறுகளாய் ஓடிற்று, சீன் வனத்தின் பஞ்சம் நீங்கி இன்பமுள்ள மன்னா சொன்னபடி வந்து குவிந்தது. கேட்டார்கள், காடைகளை அருளினார், கன்மலையின் தேனினால் திருப்தியாக்கினார். எரிகோ சரிந்தது, யோர்தான் பிரிந்தது,' பாசானின் பலத்த ராஜாக்களைக் கொன்று அவர்கள் தேசத்தைப் பங்கு போட்டுக்கொடுத்தார். கட்டாத வீடுகளையும் நட்டாத தோட்டங்களையும் வெட்டாத ஊற்றுகளையும் சுதந்தரிக்கச் செய்தார் பாலும் தேனும் ஓடும் தேசத்தைப் பவுசுடன் அனுபவித்த இஸ்ரவேலர் தங்கள் ரட்சிப்பின் தேவனை மறந்தார்கள். சத்துருவின் கைக்குத் தங்களை விலக்கிமீட்ட நாளை மறந்தார்கள். யெஷுரூன் கொழுத்துப்போய் உதைத்தான். தன் ரட்சண்ணிய கன்மலையை அசட்டைபண்ணினான், ஆகையினால் நியாயப்பிரமாணிகன், 'பூர்வ நாட்களை நினை. தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப் பார்' என்று திரும்பத்திரும்ப நினைப்பூட்ட நேரிட்டது. தமிழ் நாட்டுச்சபைகளில் வேதவாசிப்புக்கும் ஜெபதவத்திற்கும் பேரெடுத்த பெரிய சபைகள் சண்டைக்கும் அடிபிடிக்கும் பேரெடுக்கிறது. கலியாணத்திற்குத் தம்புருபல்லக்கு உலக டம்பம் என்று பயந்து விலகியிருந்த காலம் போக கலியாணப் பல்லக்குப் பின்னால் அதே ஊரில் சாராயக்குடம் சுமந்து குடிகாரர் கும்மாளம்போடும் காலமாகிவிட்டது, ஆவிக்குரிய கூட்டங்களுக்கு அகமகிழ்ந்து சென்ற பேர்கள் அக்கூட்டங்கள் நடக்கிறதோ என்று கூட அறிய மனமற்று ஆவிக்குரிய சலாக்கியங்களையும் இகழ்ந்துபேசும் காலம் ஆச்சுது. கர்த்தர் பூர்வ சலாக்கியங்களை அவமதித்த இஸ்ரவேலரைச் சிறையிருப்புக்கு அனுப்பி, பாபிலோன் ஆறுகள் அருகே அலரிச்செடிகளின்மேல் தங்கள் கின்னரங்களைத் தூக்கிவைத்துச் சீயோனை நினைத்து அழப்பண்ணினார். பின்வாங்

கிப்போன யோனாவைப் பூமியின் தாழ்ப்பாழ்கள்போட்டு அடைத்த மீன் வயிற்றிற்குள் அழிவின் குழியில் இறக்கித் தம்மை நினைக்கப்பண்ணினார். யோனா 2: 7. 'என் ஆத்துமா என்னில் தொய்ந்து போகையில் கர்த்தரை நினைத்தேன் என்கிறான்' தேவ சமுகத்தைவிட்டுத் தூரப்பட்டு, மாய்கையைப் பின்பற்றி வீணாய்ப் பாவக்காட்டில் அலைகிற சகோதரனே, நீ எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்கொண்டிருப்பாய்?

இந்த நன்றியை மறந்துபோனாயோ—இயேசுவைவிட்டு எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ

2. மனத்தாழ்மையோடிருக்க முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள் உபா. 15: 15. 'நீ எகிப்து தேசத்தில் அடிமையாயிருந்ததை நினைவுகூறக்கடவாய்' சவுல் என்பவனை ராஜாவாக்கச் சாமுவேல் தேடும்போது குதிரைத் தளவாடங்களுக்குள் ஒளித்துக்கொண்டிருந்தான் கழுதை தேடப்போனவன் கன்னிய ராஜாவானபோது கர்த்தருடைய தாசனின் சொல்லை மதியாமல் கொள்ளையின்மேல் பறந்து கில் காலில் ஜெயஸ்தம்பம் நாட்டிக் கர்த்தரின் வார்த்தை நிறைவேற்றினேன் என்று துணிகரமாய்ச் சொன்னான், சாமுவேலின் சால்வையைப் பிடித்துக்கிழித்தான். ஆடுகளின் பின்னாலே திரிந்த தாவீதை ஆண்டவர் உன்னத நிலைக்கு உயர்த்தியபோது தான் வெட்டியெடுக்கப்பட்ட குழியைப் பார்க்க மனமற்று லக்ஷம் பார்க்க ஏவப்பட்டுப் பெருமைகொண்டதை அறிவோம். அதனால் வந்த சிறுமையும் தெரியும். முன்நாட்களில் இருந்த எளிமையும் இருதயத்தின் உடைவும்போய் இந்நாட்களில் வந்த பவிசும் சொகுசும் முன்னாட்களை மறந்துபோகப் பண்ணிற்று. ஓர் காலம் இருந்த ஞான ஊக்கத்தை உன் பாவத் தூக்கம் உறிஞ்சிவிட்டதல்லவா? பிரசங்கத்திற்கும் ஆவிக்குரிய கூட்டத்திற்கும் முன் ஓடின ஞான ஓட்டத்தைத் தற்காலத்து உலகநாட்டம் குறைத்துவிட்டதல்லவா? தனி ஜெபத்திலிருந்த நேரம் குறைந்து உலகப்பேச்சில் நேரம் வீணாய்க் கழிகிறதல்லவா? குடும்ப ஜெபத்தின் சாரம் அற்று வீண்பேச்சில் உற்சாகம் அதிகப்பட்டு விட்டதல்லவா? கர்த்தருக்குமுன் பெரியவனாக ஆத்திரப்படவில்லையா? தற்காலப் பட்டங்களும் படிப்புகளும் வந்தும் மதிமயங்கி மனமேட்டிமைகொண்டு நிற்கின்ற நேசா, முந்தின நாட்களை நினைத்துக்கொள் என்று ஆலோசனை சொல்லுகிறேன்.

3. ஆதியில் கொண்டிருந்த அநாதி அன்பைவிடாதிருக்க முந்தின நாட்களை நினைத்துக்கொள். வெளி. 2; 4, 5 "நீ ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறையுண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாய் என்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக".



எபேசு சபை உண்டானகாலத்தில் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசு பெறுமான மாயவித்தைப் புஸ்தகங்கள் சுட்டெரிக்கப்பட்டதுண்டு. பலமாய்க் கர்த்தருடைய வசனம் விர்த்தியடைந்து மேற்கொண்டது அப். 19: 19. இந்த வசனத்தில் காட்டிய வேத வசன விர்த்திகட்டமான விர்த்தியையும், பெருக்கமான விர்த்தியையும் குறிக்குமாம். எபேசு சபையின் ஆதியின் அன்பின் அனல் ஜுவாலித்து எரிந்தபடியால் பூச்சக்கரம் முழுதும் சேவிக்கிற தியானாளின் கோவிலே எண்ணமற்றுப் போகத்தக்கதாகிவிட்டது. தற்சமயம் எபேசு சபையின் தூதனுக்கு ஆவியானவர் சொல்வதைப் பார்த்தால் உன் விளக்குத் தண்டை உன்னைவிட்டு நீக்கிவிடுவேன் என்கிறார். பரிசுத்த ஆவியானவர் கெல்லிநாட்டுச் சபைகளில் வல்லமையாய்க் கிரியை செய்கிறார். ஆவியில் அன்பு பொங்கி அனல்கொண்டெழும்பிய தேவபுத்திரர் உண்டு. ஊராய்த் திரிந்து பிரசங்கித்த கூட்டமுண்டு. கால்நடையாய் நடந்து கன்வென்ஷன் கூட்டங்களுக்கு வந்த சகோதரருண்டு. ஆதியில் செய்த ஜெபங்கள் எங்கே? முதல் கூட்டங்களில் சிந்திய கண்ணீர்களும் பண்ணிய இன்பப் பிரசங்கங்களும் மனதில் வரும்போது முந்திய நாட்களை நினைத்து என் உள்ளம் எனக்குள் உருகுகிறதென்று சங்கீதக்காரனோடு சேர்ந்து சொல்ல ஏவப்படுகிறோமல்லவா? தேவதாசரே நமது எஜமானுடைய வருகைக்கு எதிர்நோக்கியிருக்கிற இக்கடைசிக் காலத்தில் ஆதியில் செய்த ஜெபப்படி அனல்கொண்டு செய்யுங்கள். ஊர் ஊராய் ஊக்கமான பிரசங்கம் செய்யுங்கள். ஆவிக்குரிய கூட்டங்களுக்கு அனல்கொண்டு வாருங்கள். ஆவிக்குரிய சகோதரரோடு அன்பின் சம்பாஷணை செய்யுங்கள். முன் செய்த கிரியைகளை மேன்மையாய்ச் செய்ய முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்.

4. உங்கள் தைரியம் குறைந்துபோகாதபடி முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள் எபி. 10: 32. ஆவியானவர் எபிரேய கிறிஸ்தவர்களைப் பார்த்து முந்தின நாட்களில் நீங்கள் சகித்த போராட்டத்தையும் பட்ட பிரயாசத்தையும் காட்டின பொறுமையையும் நினைப்பூட்டி மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள் என்று போதிக்கிறார். ஒருகாலம் கர்த்தருக்குள் ஊக்கமாய் உழைத்த சகோதரரே! கர்த்தருக்குள் நீங்கள் பட்ட பிரயாசமும் ஒருபோதும் விருதாவாயிராதென்று அறிந்து, கர்த்தருடைய வேலையில் ஊக்கம் கொள்வீர்களாக. அமெரிக்காவில் ஒரு பெரிய வியாபாரி மூன்று மெத்தை வீடாய் லக்ஷரூபாய் பெறுமான சாமானத்தோடு சாம்பலாய் எரிந்து மண்மேடாய்க் கிடந்தது. வழிப்போக்கர் யாவரும் வியாபாரியின் பெரு நஷ்டத்திற்காகப் பிரலாபித்துப்போயினர். தீப்பட்ட மறுதினத்தின் அதிகாலையில் குவிந்து கிடந்த குப்பைமேட்டின்மீது ஒரு பெரிய ஸ்தம்பம் நிறுத்தி அதில் பின்வருமாறு

யைக்கமான வார்த்தைகளைத் தீர்க்கமாக வரைந்திருந்தான். கடந்த காலத்தில் தேவன் எனக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்திருக்கிறார். இப்போதும் இந்தப் பெரிய தீ நஷ்டத்திலும் சுவாமி என் அருமையான மனைவி பிள்ளைகள் உயிரையும் பாதுகாத்து எனக்கு ஊக்கத்தையும் தந்திருக்கிறார். நாளைமுதல் வியாபாரம் வழக்கப்படி நடத்தப்படும் என்பதே. இப்படியே அவன் மனம் தளர்ந்து போகாமல் வியாபாரத்தை நடத்தி முன்னுக்குவந்தான். அப்படிப்போல நாமும் முன்னாளில் தேவன் நமக்குச் செய்த கிருபைகளை நன்குணர்ந்து தைரியத்தையும் ஊக்கத்தையும் கைவிடாதிருப்போமாக. நான் ஜீவனுள்ளோர் தேசத்தில் கர்த்தருடைய நன்மையைக் காண்பேனென்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேனென்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். பத்துப்பிள்ளைகளையும் எத்தனையோ ஏராளமான சொத்துக்களையும் இழக்கக்கொடுத்த உத்தமனாகிய யோபு நீர் என்னைக்கொன்று போட்டாலும் உம்முடையபேரில் நம்பிக்கையாயிருப்பேன் என்கிறார். கடந்த காலங்களில் தேவன் பாராட்டிய இரக்கங்களையும் கிருபைகளையும் நினைத்து உங்கள் மனதின் அரைகளைக் கட்டிக்கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். ஐசுவரியவான் பாதாளத்தில் கடும் ஜுவாலையில் கிடந்து ஒரு துளி தண்ணீருக்கு நாவியற்று அலகலாய்க்கின்ற நேரத்தில் மகனே அதை நினைத்துக்கொள் என்று சொல்லப்பட்டது. இயேசுவின் வசனம் யூதரின் அதிகாரிகளின் ஞாபகத்திற்கு வராமல் அப்பொழுது அவர்கள் கண்களுக்கு மறைவாய்ப் போய்விட்டது. இப்பொழுதெல்லாம் முந்தின நாட்களின் கண்டிப்பான போதனை எங்களுக்கு உதவாது என்று உலக பிரபு ஒருவர் சொன்னார். உலக டம்பத்திலும் நிர்விசாரத்திலும் நாட்களைக் கழித்து எண்ணமற்று ஜீவிக்கிற என் நேசா, நீ மனந்திரும்பு. முன்னாளில் பாடுபட்ட கல்வாரி நாயகனை நினைத்துக்கொள், அவர் உனக்காய்க் கண்ணீர்விட்ட கெத்செமனேயின் நேசத்தை நினைத்துக்கொள். ஆவியானவர் உனக்காய் இதுவரையும் செய்திருக்கும் அன்பின் கிரியைகளை ஞாபகம்பண்ண முந்தின நாட்களை நினைத்துக்கொள்.

## எபிரேயர் நிருபம். இரண்டாம் அதிகாரம்

**பொருளடக்கம்.** யேசுவின் மேன்மை, முந்தின உடன்படிக்கை தேவதூதரைப்போன்ற தாழ்வான சிருஷ்டிகள் மூலமாய்க் கொடுக்கப்பட்டதாயினும் அதை அசட்டை பண்ணினவர்கள் பயங்கரமாய்த் தண்டனைக்குள்ளாகத் தக்கதாக அவ்வளவு பரிசுத்தமானதாய் இருந்தது. அப்படியிருக்கத் தேவகுமாரன் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டு கண்கண்ட சாட்சி



களால் நமக்கு அறிவிக்கப்பட்டு அற்புதங்களினாலும் வரங்களினாலும் உறுதிப்பட்டதைக் குறித்து அசட்டையாயிருப்போமானால் தண்டனை எவ்வளவு அதிகப் பயங்கரமாயிருக்கும் வ. 1-4. கிறிஸ்துவானவர் மனுஷத்தன்மையைத் தரித்துக்கொண்டதால் தேவதூதரிலும் சற்று சிறியவரானார். இது அவருடைய மேன்மைக்கு ஆக்ஷேபனையேயல்ல, ஏனென்றால் அவருடைய தாழ்மை சொற்பகாலத்துக்குரியது. மீட்பையுண்டாக்குவதற்காகவே தாழ்மையின ரூபமெடுத்தார். அவருடைய பாடுகளும் மரணமும் அவரை மனுஷஜாதியோடு ஐக்கியப்படுத்தினபடியால் அவரைப் பூரண பிரதான ஆசாரியனாக்கிற்று. இனிவரப்போகிற உலகத்திற்குத் தேவதூதரல்ல, மனுஷனே அதிகாரி. மனுஷனுக்குரிய மேன்மை இன்னும் வெளிப்படவில்லை. கிறிஸ்துவின் மேன்மையே அதற்கு அச்சாரம் வ. 5-18.

**குறிப்புகள்.** வ. 1-4 கேட்டவைகளெவை? (வ. 1). குமாரன் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டவைகளே. எபிரேயக் கிறிஸ்தவர்கள் புதியவைகளைக் கைக்கொள்வதால் மற்ற யூதர்களோடுள்ள ஐக்கியம்விட்டுப்போமென்றும், யூதஜனங்களின் பாரம்பரியங்களுக்கு அன்னியராவோமென்றும் யூதஜனங்களோடுள்ள குடும்ப சம்பந்தம் நீங்கிப்போமென்றும் பயந்தார்கள். கிறிஸ்துமார்க்கம் சகல ஜாதிகளுக்கும் பொதுவானது. யூதன், புறஜாதியான்; சுயாதீனன், அடிமையென்ற வித்தியாசங்களில்லை. புதிதாய் ஏற்றுக்கொண்ட புறஜாதியாருக்குப் புதியவைகளை அனுசரிப்பதில வருத்தமில்லை. தங்களுக்கோ பழையவைகளைப் பூரணமாய் மறந்து புதியவைகளை அனுசரிப்பது கூடாத காரியம்போல் எண்ணினார்கள். அப்போஸ்தலனோ அவர்களுக்கு உத்தரவாகப் பழையவைகளாகிய நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் கைக்கொள்ளப்படவேண்டும். ஆனாலும் அவைகளிலும் மேலான ரட்சிப்பின் சத்தியம் தேவகுமாரன் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளில் ஒருவரென்றும் அவருடைய வசனம் பழைய ஏற்பாட்டு வசனம் போலொத்ததுதான் என்றெண்ணாமல் அவற்றிலும் அதிகமாய் கிறிஸ்துவையும் அவருடைய ரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கிறார்.

வ. 5-9. பெரிதான ரட்சிப்பு தூதர்களால் கூடாதது, தேவகுமாரன் மாத்திரம் நிறைவேற்றக்கூடியது. இனிவரும் உலகத்தின் நம்பிக்கையைக் கொடுக்கக்கூடியது. அந்த உலகம் இவ்வுலகத்தைப் பார்க்கிலும் பெரிது, ஆச்சரியமானது. இவ்வுலகம் மாறுதலுள்ளது. அதுவோ மாறாதது.

மனுஷனுக்கு நேரிடப்போகிறவைகளைக் குறித்துத் தூதர்கள் முன்னறிவித்து வெளிப்படுத்தினார்கள். மனுஷன் தூதரைப்பார்க்கிலும் சற்று சிறிதானவன்தான். ஆனால் தேவனே தம்மை மனுஷனுக்கு வெளிப்படுத்தினார். யேசுவும் மனுஷனாகி இவைகளில் பங்குபெற்றார். தூதர் செய்

யாத பிரகாரம் இவர் மரணத்தை ருசி பார்த்தார். இதினாலேயே அவர் தூதரைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவரானார். கிறிஸ்து முடிசூட்டப்பட்டது அவருடைய மரணத்திற்குப் பின்னல்ல. அவருடைய மகிமை எப்படி வெளிப்பட்டது? அவர் முடிசூட்டப்பட்டது எப்போ? அவர் மேசியாவாக ஒப்புக்கொள்ளப்பட்டபோதே. அவர் ஞானஸ்நானம் பெற்ற சமயத்தில், மறுரூபமடைந்த வேளையில், சீஷர்கள் பிலிப்பு செசரியா திசைகளில் அவரை அறிக்கையிட்டபோது அவர் மேசியாவென்று தேவனாலும் மனிதராலும் அங்கீகாரம் பெற்றார். மரணத்தை ருசிபார்க்கும்படி தேவதூதரைப் பார்க்கிலும் சற்று சிறியவராக்கப்பட்டார், மரணபயம் மனுஷனை ஆட்கொள்ளாதபடி தமது மரணத்தினாலே அதை நீக்கி அவர்களையும் தேவதூதரைப்பார்க்கிலும் மேலான மகிமையடையும்படி அவர் தாமே மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார்.

ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார். மரணத்தினாலே தேவ தீர்மானம் நிறைவேறுதலடையாது என்று தோன்றலாம். ஆனால் ஒவ்வொருவனுக்காகவும் கிறிஸ்து மரித்ததினால் அது நிறைவேறிற்று.

வ. 9, 10. இதுவரைக்கும் இயேசுவின் பேர்காட்டவில்லை. அவரை 'குமாரன்' என்றும், 'தேவகுமாரன்' என்றும் ஆக்கியோன் அழைத்து தேவதூதர்களோடு ஒப்பிட்டுப் பேசினார். ஆனால் இந்த வாக்கியங்களில் மனுஷன் தேவதூதரிலும் சிறியவனென்றும், தூதர் மரிக்காதிருக்க மனுஷன் மரணத்துக்குரியவனென்றும் பேசுகிறார். எபிரேயக் கிறிஸ்தவர்களுக்கும் இடறல் இதுவே. இயேசு ஓர் மனுஷன், அவர் மரித்தார். அவர் குற்றவாளியாக மரித்தார். அவர் ஏழை, அசட்டைபண்ணமாட்டார். மோசே அதிசய மரணமடைந்தான். தேவதூதர் அவன் சரீரத்தை அடக்கம் பண்ணினார்கள். இவ்விதமாய் மோசேயும் தேவதூதரிலும் சிறியவன். இயேசுவும்! இதுதான் அவர்களுக்கிருந்த இடறல்.

ஆகையால் தான் இந்த நிருபத்தை எழுதுகிறவர் இந்த விஷயத்தைப் பலமாய்ப் பேசுகிறார். இயேசு மரித்தது மெய்தான். ஆனால் எல்லா மனிதருக்காகவும் அவர் மரித்தார். மோசே தனக்காக மாத்திரம் மரித்தான். மேலும் இயேசு தேவ தீர்மானத்தின்படி மரித்தார். மனிதர் தேவசாயலாய் உண்டாக்கப்பட்டவர்கள். தேவனுடைய பிள்ளைகளை அவர்கள் ரட்சிப்பினால் மகிமைப்படுத்தத்தக்கதாக அவர்களுடைய ரட்சிப்பின் அதிபதியை உபத்திரவத்தினால் பூரணப்படுத்துவது அவருடைய சித்தமாயிருந்தது.

வ. 11, 13. நாம் தேவனுடைய புத்திரர், அதை அறியாதிருந்தோம். நாம் மகிமைக்கும் கனத்திற்குமுரியவர்கள், அதையும் அறியாதிருந்தோம். அல்லாமலும் நாம் உலகத்தோடு கட்டப்பட்டவர்களாய் நமது அடிமைத்தனத்திலிருந்து சுயாதீனம்பெற வாஞ்சியாதவர்களாயிருந்தோம். நாம் நம்மை ஆராய்ந்தபோது, பாவிகளும், மரணத்துக்குரியவர்களும், எத்தனை பலியும் காணிக்கைகளும் செலுத்தினபோதிலும் விடுதலைபெற ஏலாதவர்களாயுமிருந்தோம். குறைவு, வியாதி, மரணம் இவைகளே நமது பங்கு. மரிக்கும்போது இனஜனத்தார் கலக்கமடைந்தார்கள். வீடுகள் பாழாயின, இயேசுவோ நமது தலைவராக நியமிக்கப்பட்டு நம்முடைய நிலைமை இன்னதென்



றும் மரணம் எப்படிப்பட்டதென்றும் நமக்கு வெளிப்படுத்தவும், மரணத்தை ஒழித்து, மரணமானது பிதாவினிடத்தில் பிரவேசிக்கும் வழியென்று நமக்கு வெளிப்படுத்தவும் வந்தார். இதுதான் கிறிஸ்துமார்க்கத்தின் இரகசியம். யூதமார்க்கம் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொடுக்கவில்லை. எபிரேயக் கிறிஸ்தவர்கள் இவ்விரண்டையும் சமரசப்படுத்தக் கூடாதவர்கள். இயேசுவே இதற்கு நம்மை வழிநடத்தக் கூடியவர். அவரோடு ஐக்கியப்படுவதுதான் அதையடையும் வழி. அவரும் நாமும் ஐக்கியப்பட்டு தேவனுடைய சித்தத்துக்கு நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுக்கவேண்டும். நாமெல்லாரும் ஒரே பிதாவின்பிள்ளைகள். நாம் அறிவில்லாதவர்களும் [illegible]ருமாயிருந்தாலும் கிறிஸ்து நம்மைச் சகோதரரென அழைக்கவும் நமக்காகத் தம்மைப் பிரதிஷ்டைபண்ணவும் பிதாவின் வீட்டுக்கு நம்மை வழிநடத்தவும் அவர் வெட்கப்படவில்லை.

இந்தச் சத்தியம் பழைய ஏற்பாட்டாகமத்திலுள்ள சங்கீதங்களிலும் தீர்க்கதரிசனங்களிலும் சொல்லப்பட்டிருந்தபோதிலும் பழைய ஏற்பாட்டுப் பக்தர் இதின் பூரண கருத்தையறியாதவர்களாயிருந்தார்கள். மனுஷனை அவனுடைய பூர்வ நிலைமைக்கு வழிநடத்துபவர் மனுஷனைப்போலாக வேண்டுமென்பது மிகவும் அவசியமென்னும் உபதேசத்தை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆகையால் கிறிஸ்துவானவர் சிலுவையிலறையப்பட்டார் என்னும் சத்தியம் எபிரேயக் கிறிஸ்தவர்களுக்கு இடறலாயிருக்க அவசியமில்லை. அவர்கள் அதைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டியது. ஏனென்றால் அவர் தம்மை அவர்களிலொருவராகப் பாவித்து, அவர்களைக்காக்க சகலத்தையும் ஜெயித்து வெற்றி சிறந்தவராகும்போது, தமது பிதாவையும் அவர்களுடைய பிதாவையும் நோக்கி, இதோ நானும், நீர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும், என்று சொல்லக்கூடியவராவார்.

வ. 2. 14, 15. தேவனுடைய பிள்ளைகள் தங்கள் உன்னத நிலைமையையறியாமல் மரணபயத்தினாலே அடிமைப்பட்டிருந்தார்கள். அவர்கள் மாம்சத்தையும் ரத்தத்தையும் உடையவர்கள், தூதர்களோ மரணமற்றவர்கள். தாய் தன்பிள்ளைகளுக்கு இரங்கினதுபோல தேவன் அவர்களுக்கு இரங்கினார். மனுஷனுடைய அனுபவத்தில் மரணமும் பாதாளமுமே அவனுக்குத் திகிலைக் கொடுக்கக்கூடியவைகள். எப்படி மரணபயத்திலிருந்து விடுதலையடையலாம்? குமாரன் மற்றப்பிள்ளைகளைப்போல மாம்சத்தையும் ரத்தத்தையும் உடையவரானார். மனுஷனைப் பயப்படுத்துகிற மரணத்தையும் பாதாளத்தையும் அவரே ருசிபார்த்தார். இவ்விதமாய் மனுஷரை மரணபயத்துக்குள்ளாக்கி வேதனைப்படுத்தின பிசாசானவனை அவர் ஜெயித்து அவர்களை விடுதலையாக்கினார்.

வ. 16, 18. மனுஷாவதாரத்தின் அவசியம், [illegible] இந்த வாக்கியங்களில் பார்க்கிறோம். மனுஷருக்கு உதவிசெய்யும்படியாகக் கிறிஸ்து மனுஷனுடைய ஸ்தானத்தையடைந்தார். 'ஆபிரகாமின் சந்ததி' என்பது மாம்சத்தின்படியான சந்ததியைக் குறிக்காமல் விசுவாசத்தின்படியான சந்ததியைக் குறிக்கும். சிலர் 'அது ஆபிரகாமின் சந்ததியையே குறிக்கும். ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததியைக் கிறிஸ்து உண்டாகாமல் இயற்கையான ஆபிரகாமின் சந்ததிக்கு உதவிசெய்யவே வந்தார்' அவர்களுக்கு இவ்வித உதவி அவசியமாயிருந்தது. இது [illegible]

இந்த நிருபம் ஓர் எபிரேயனால் எபிரேயருக்கு எழுதப்பட்டதென்று சொல்லுகிறார்கள்.

மனுஷனுக்கு உதவிசெய்கிறவர் மனுஷனுக்குரிய சகல சோதனை, பாவம், துன்பம், துக்கம், பயம், மரணம் இவைகளில் பங்கு பெற்று அவைகளின் சகல பாரத்தையும் தாமே சுமக்கவேண்டியது. பிரதான ஆசாரியன் இவ்விதமாக மனுஷனின் பிரதிநிதியாகக்கூடும். ஆகையால் அவர் பரிதாபம் நிறைந்தவராய் மனுஷ ஜாதிக்கு உதவிசெய்ய வல்லவரான பிரதான ஆசாரியராயிருக்கிறார்.

## சீயோனுக்குத் திரும்பும் யூதருக்காகப் பணம் சேகரிக்கும் முறை.

யூதருடைய பழக்கமாகிய தசமபாகத்தையே கையாடிப் பணம் பிரிக்க வேண்டுமென்றும், யூதரில் ஐசுவரியவான்கள் தங்கள் ஆஸ்தியில் பத்திலொன்றும் மத்திய வகுப்பார் தங்கள் வரும்படியில் பத்திலொன்றும் கொடுக்கவேண்டுமென்று ஓர் யூதன் ஆலோசனை சொல்லியிருக்கிறான். பலஸ்தீனாவில் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்கள் அதிக அவசரமானபடியால் பணம் கூடிய சீக்கிரத்தில் சேர்க்கப்படவேண்டுமாம். கட்டட வேலைகளை நிறுத்திவைக்கமுடியாதாம். பன்னிரண்டு கோடி டாலர்கள் முதல் வகுப்பாரிடமிருந்து வசூலித்து அதை இருப்பு நிதியாக வைத்துக்கொள்ளவும் இதின் வட்டியையும் இரண்டாவது வகுப்பாரின் தசம பாகத்தையுமே செலவுகளுக்கு உபயோகிக்கவேண்டுமாம். இந்தப்பணம் சேகரிக்கும் விஷயத்தில் பூர்வத்தில் தேவாலயக் கூடாரத்துக்காக மோசேயிடம் எவ்விதம் காணிக்கைகளை இஸ்ரவேலர் கொடுத்தார்களோ, அதேபிரகாரம் யூதர்கள் இதற்குப் பண்டிகையாகச் செய்கிறார்களாம். அநேகர் தங்கள் சொந்தப் பொக்கிஷங்களையும் குடும்ப பொக்கிஷங்களையும் காணிக்கையாகப் படைக்கிறார்களாம். கிராமங்களிலுள்ள சமுசாரிகளான யூதர்கள் தங்கள் காணிக்கைகளை வண்டிகளில் ஏற்றி அந்த வண்டிகளை இலைகளால் அலங்கரித்துக் கொண்டுவருகிறார்களாம். ஓர் ஏழை மனுஷன் ஒருபடிப் பாலைக் காணிக்கையாகக்கொண்டுவந்தாலும், வந்தபின் ஆண்டவருக்கு அதிகம் கொடுக்க வேண்டுமென்று வெட்கப்பட்டு, கூலியாளை அனுப்பிப் பசுவையே காணிக்கையாகப் படைக்கப்போனானும். பசுவுடன் அதின் கன்றையும் கொண்டுவரச்சொல்லி இவைகளெல்லாவற்றையும் மீட்பின் பணமாகக் கொடுத்தானும். 75 வயதுள்ள ஓர் ஸ்திரீ ஐம்பது வருஷங்களாகத் தான் உபயோகித்துவந்த இரண்டு மெழுகுவர்த்தி விளக்குகளைக் காணிக்கையாகப் படைத்தாளாம்.

பார்த்தீர்களா? நாம் படைக்கும் காணிக்கைகள் இவ்வளவு உற்சாகமுள்ளவைகளா? நமது தவச உற்சவங்களிலும் ஸ்தோத்திரப் பண்டிகைகளிலும் சங்கக்காணிக்கைகளிலும் இவ்விதமாய்ச் செய்யப்பட்டால் எவ்வளவு உற்சாகம் காணப்படும்! எத்தனை சீக்கிரத்தில் சுய ஆதரவு உண்டாகிவிடும்!

Printed at The Palamcottah Prlnting Press Falamcottah and pnblished the Christian Brotherhood Association, Tinnevelly.

408

03 JUL 1921

June 1921. Registered No, M 136.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38,

Vol. XXII ஜூன் மீ 1921

## பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள். அப். 1: 8.

மனுஷனுடைய உள்ளமானது பெலத்துக்காக அல்லது வல்லமைக்காக வாஞ்சிக்கிறது. உலகக் காரியங்களில்போலவே, ஆவிக்குரிய காரியங்களிலும் அந்த ஆசையுண்டாகிறது. இது தெய்வீக சுபாவம். ஓர் உலகத்தைச் சிருஷ்டிக்கும் வல்லமை அல்லது சத்துருவை அழிக்கும் வல்லமை. பல நோக்கங்களுக்காக இவ்வித வல்லமையைப்பெற மனுஷர் விரும்பலாம். அந்தந்த நோக்கங்களுக்குத் தக்கதாக அது தெய்வீக தன்மையுள்ளதாய் அல்லது பிசாசின் தன்மையுள்ளதாய் விளங்கும். புதிய ஏற்பாட்டில் 'பெலன்' அல்லது 'வல்லமை' இரண்டு கருத்துள்ளதாய் உபயோகித்திருக்கிறது. ஒன்று 'அதிகாரம்' அல்லது 'சலாக்கியம்'. இன்னொன்று 'வல்லமை' அல்லது 'சக்தி'. இவ்விரண்டில் இரண்டாவது கருத்தைப்பற்றியே சில குறிப்புகள் கவனிப்போம்.

உலகப்பிரகாரமான அதிகாரத்துக்காக வாஞ்சித்த பலர் உலகத்தில் மேலான நிலைமையயடைந்து, அவ்வித அதிகாரம் அல்லது வல்லமையைப் பெற்றுக்கொண்டு உலக சரித்திரத்தில் நாம் அறிந்திருக்கிறபடி மிச்சமான இரத்தம் சிந்தப்படுவதற்குக் கருவிகளாயிருந்திருக்கிறார்கள். ஆவிக்குரிய விஷயங்களிலும் வல்லமை அல்லது அதிகாரத்தைத் தேடுதலே சாத்தானுடைய குற்றம் என்று சொல்லலாம். மாயவித்தைக்காரனாகிய சீமோன் இவ்வித பாவத்துக்கு ஓர் திருஷ்டாந்தம். அவனும் தனக்கு ஓர் அதிகாரம் வேண்டுமென்றே விரும்பினான். கிறிஸ்தவர்கள் அதிகாரத்தைத் தேடாவிட்டாலும் அவர்களில் பலரிடத்தில் காணப்படும் சுயநயம், பெருமை, வீண்சிந்தை, வஞ்சகம் இவையெல்லாம் அவ்வித சிந்தைக்கு இனமானவைகளே. வல்லமை அல்லது அதிகாரம் சிலருக்குத் தேவனுடைய வரமாக

அல்லது ஈவாகக் கிடைத்தபோதிலும் அதைச் சுயநயத்துக்கும் சுயஆதாயத்துக்கும் கருவியாக உபயோகிக்கும்போது அதுவே அவர்களுக்குக் கண்ணியும் சோதனையுமாகிறது. நமது ஆண்டவரைச் சோதித்த சாத்தானுடைய மோசமும் அதுவே. ஆகவே, தேவ ஈவாகக் கிடைக்கும் வல்லமை அல்லது அதிகாரம் அதிகப் பயப்பக்திக்குரியதென்று பார்க்கிறோம்.

திருச்சபையானது தன் எஜமானுக்காகச் செய்யும்படி நியமிக்கப்பட்ட ஊழியத்துக்கு வல்லமை இன்றியமையாததென்று ஆண்டவர் கண்டு அதை வாக்களித்திருக்கிறார். 'பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது பெலன் அடைவீர்கள்.' ஆண்டவர் தமது சீஷர்களிடத்தில் பேசின வார்த்தைகளில் இது மிகவும் அருள்நிறைந்த வசனம். செம்படவராகிய அவர்கள் செய்யும்படி நியமிக்கப்பட்ட ஊழியத்தைக் கவனிக்கும்போது இந்தப் பெலன், வல்லமை அவர்களுக்கு அத்தியாவசியம் என்பதை நாம் உணரலாம். சீஷர்களை முதல்முதல் அழைத்து அவர்களை ஊழியத்துக்கென்று அனுப்பும்போதும், 'சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து' அனுப்பினார் (லூக். 9: 1). எழுபதுபேரும் சந்தோஷத்தோடு திரும்பிவந்தபோதும் 'இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்' என்றார் (லூக். 10: 19).

சீஷர்கள் இவ்வித வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்றிருந்தபோதிலும் ஓர்சமயம் அதை இழந்தவர்கள்போல் காணப்பட்டார்கள். அசுத்த ஆவி பிடித்த ஓர் பிள்ளையின் தகப்பன் தன் பிள்ளையை மறுரூபமலைக்குப் போகாத ஒன்பது சீஷரிடத்தில் கொண்டுவந்தபோது அவர்களால் அந்த அசுத்த ஆவியைத் துரத்தக்கூடாமற்போயிற்று என்று பார்க்கிறோம். வல்லமையைப் பெற்றுக்கொண்ட அதே அதிகாரத்தில் வல்லமையை இழந்து போனதாகப் பார்க்கிறோம். இதைக் கவனித்த ஆண்டவருக்குத் துக்கமும் வெட்கமும் உண்டாயிற்று. 'விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே, எவ்வளவுகாலம் நான் உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன்' என்றார். வல்லமையை இழந்த சீஷர்களும் ஆண்டவரிடத்தில் வந்து 'அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று' என்று கேட்டார்கள். உங்கள் அவிசுவாசத்தினாலேயே என்றார். ஆகவே வாக்குப்பண்ணப்பட்ட வல்லமை அதைக் கையாடுகிறவர்களுடைய விசுவாசத்தைப் பொறுத்திருக்கிறது என்று பார்க்கிறோம்.

பரிசுத்த ஆவியானவர் தமது வல்லமையை நம்மில் விளங்கப்பண்ணுமுன் ஆயத்தம் அவசியம் என்று பார்க்கிறோம். முதலாவது, தேவன் உபயோகிக்கும் பாத்திரம் சுத்தமாயிருக்கவேண்டும். பரிசுத்த பவுல் தீமோத்



தேயுவுக்குச் சொல்லுகிறபடி 'ஒருவன் இவைகளைவிட்டுத் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால் அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உபயோகமானதும் எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்' (2 தீமோ. 2: 21). கொரிந்து சபைக்கு எழுதியிருக்கிற பிரகாரம், எஜமான் வல்லமையோடு நம்மை உபயோகிக்க வேண்டுமானால் மாம்சத்திலும் ஆவியிலுமுள்ள சகல அசுசியும் நீங்கச் சுத்திகரிக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும். இரண்டாவது, வல்லமை பெறும் நோக்கம் சுத்தமானதாயிருக்கவேண்டும். தற்புகழ்ச்சிக்காக, சுயஆதாயத்துக்காக வல்லமையைப்பெற விரும்புவோமானால் வல்லமை கொடுக்கப்படமாட்டாது. அல்லது திருச்சபையில் நடக்கும் வேலைகள் சுயஇஷ்டப்படி, சுயசித்தத்தின்படி, தன் சொந்த அபிப்பிராயத்தை ஸ்தாபிக்க நடக்கவேண்டுமென்று விரும்பினால் வல்லமை கொடுக்கப்படமாட்டாது. சுத்த மனதோடும் உத்தம இருதயத்தோடும் நமது மகிமைக்காகவல்ல, தேவமகிமைக்காகவும், நமது பிரயோஜனத்துக்காகவல்ல மற்ற ஆத்துமாக்களின் பிரயோஜனத்துக்காகவும் வல்லமையை விரும்புவோமானால் பரிசுத்தாவியின் பெலனைப் பெறுவோம். மூன்றாவது, தேவனுடைய வல்லமையைமட்டும் பெற்றுக்கொள்ள ஆசிக்காமல், அவரையே நமது இருதயத்தில் வாசமாயிருக்கப் பெற்றுக்கொள்ள ஆசிக்கவேண்டும். அவரையல்லாமல் வல்லமை கிடைக்காது. கிறிஸ்துவே நமது இருதயத்தை நிரப்பவேண்டும். அவர் நமது இருதயத்தை நிரப்புமுன், அவர் தமது வல்லமையை நம்மில் உபயோகிக்குமுன் நமது சொந்த வல்லமை முற்றிலும் நீங்கி நமது இருதயம் வெறுமையாகி அவர் நமது இருதயம் முழுவதையும் நிரப்பத்தக்கதாக அவருக்கு முற்றிலும் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

தமது வல்லமையை நம்மில் உபயோகிக்கவேண்டியவரும் அவரே. வல்லமையை அவரைவிட்டுப் பிரிக்கமுடியாது. நீராவியால் இயக்கப்படுகிற ஓர் யந்திரசாலையைத் திருஷ்டாந்தமாய்ப் பார்ப்போம். அந்த யந்திரசாலையின் ஒவ்வொரு பாகமும் நீராவியால் நடத்தப்படும். நீ அதின் ஓர் பாகத்தில் வேலை செய்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். உனக்குக் குறிக்கப்பட்ட வேலைக்கும் யந்திரத்துக்கும் எவ்வளவு நீராவி அவசியமோ அவ்வளவுதான் உனக்குக் கிடைக்கும். நீராவியின் முழுவல்லமையும் இருந்தால் நல்லதென்கிற ஆசையுண்டாகும். ஆனால் அது அவசியமில்லை. உன்னுடைய யந்திரத்தைப் பிரித்துக்கொள்ளவும், பிரித்தபின் உனக்குப் பிரியமானபடி வேலைசெய்யவும் கூடாது. ஆகவே அந்த நீராவியந்திரத்தின் வல்லமை உனக்கு வேண்டுமானால் நீ யந்திரத்தை நடத்தும் அதிகாரிக்கு அடங்கியிருக்கவேண்டும். அதேபிரகாரம் நாம் தேவவல்லமையை அவரைவிட்டுப் பிரிக்கவும் முடியாது. பிரித்து நமது இஷ்டப்படி வேலைசெய்ய

வும் முடியாது. தேவனுடைய வல்லமை உனக்குக் கிடைக்கவேண்டுமானால், வேலை அவருடையதாயிருக்கவேண்டும். வேலை அவருடைய சித்தத்தின்படி நடக்கவேண்டும்.

கிறிஸ்தவர்களில் அநேகர் பரிசுத்தாவியின் வரத்திற்காகவும் வல்லமைக்காகவும் வேண்டிக்கொள்ளும்போது இவ்வித நோக்கத்தோடு வேண்டிக்கொள்ளுகிறார்களோவென்பது சந்தேகம். ஏனென்றால் அவர்கள் பல முறை பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தும் பெற்றுக்கொள்ளாமற் போகிறதற்குக் காரணம் இதுவேயென்று சொல்லக்கூடியதாயிருக்கிறது. நம்மிலும் எத்தனையோபேர் பரிசுத்தாவியானவர் தமது நிறைவோடும் வல்லமையோடும் நமக்குள் வரவேண்டும் என்று விரும்பி ஜெபித்தும் இன்னமும் அந்த ஜெபம் கேட்கப்படாமலும் அந்த வல்லமை அருளப்படாமலும் இருக்கிறது என்பது நம்மில் பலருடைய அனுபவமில்லையா? காரணமென்ன? அருமை ரட்சகர் சொன்ன உத்தரவே நமக்கும் ஏற்கும். நீங்கள் கேட்கிறது இன்னதென்று அறியாமலிருக்கிறீர்கள்.

பரிசுத்த ஆவியின் பெலன் நமக்கு அருளப்படுமானால் நமது ஊழியத்தில் காணப்படவேண்டிய பலன் என்னவென்பதைக் கவனிப்போம். இது விஷயத்தில் தேவனுடைய வழிகள், ஏற்பாடுகள், முறைகளுக்கும் மனுஷனுடைய வழிகள், ஏற்பாடுகள், முறைகளுக்குமுள்ள வித்தியாசத்தை நாம் நன்குணராதபட்சத்தில் பல வேளைகளில் வஞ்சிக்கப்படுவோம். பரிசுத்தாவியாலுண்டாகும் பலன்களல்லவென்று இரண்டு காரியங்களைக் குறித்துச் சொல்லலாம். ஒன்று, புறம்பான பலத்த அதிசய மாறுதல்கள் எப்பொழுதும் காணப்படுகிறதில்லை. இன்னொன்று, உலக மனுஷரும் இருநிலையுள்ளவர்களும் அதின் பலன்களைக் காணமாட்டார்கள்.

வேதாகமத்தில் ஆவியின் பலத்தையடைந்த பலருடைய சரித்திரங்கள் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்களில் விளங்கிய ஆவியின் வல்லமை நாம் நினைக்கிறபடி சகலத்தையும் அவர்களில் நிறைவேற்றினதாக நாம் பார்க்கிறதில்லை. எலியா கர்மேல் பர்வதத்தில் பலத்த கிரியையை நிறைவேற்றுகிறான். இன்னொரு சமயம் சூரைச் செடியின்கீழ்ப் படுத்திருக்கிறான். யோனா நினிவேப் பட்டணத்தார் யாவரும் மனந்திரும்பி இரக்கத்துக்காகக் கெஞ்சும்படி வல்லமையாய்ப் பிரசங்கிக்கிறான், அதே யோனா ஆமணக்குச்செடி பட்டுப்போனதற்காகவும் தன் மதிப்புக் கெட்டுப்போமென்ற பயத்தினாலும் தேவனோடே வாதாடுகிறான். புதிய ஏற்பாட்டு வீரர்களைப் பார்ப்போம். பரி. பேதுருவை அந்தியோகியாவிலும், பரி. பவுலைச் சிறைச்சாலையிலும், பரி. யோவான் தீவில் துரத்தப்பட்டவனாகவும் இருந்ததைப் பார்க்கும்போது



என்ன சொல்லுவோம்! ஆவியானவரின் வல்லமை எங்கே? கர்த்தருடைய கரம் குறுகிப் போயிற்றோ?

மறுபக்கத்தைப் பார்ப்போம். பெந்தெகொஸ்தே நாளில் பரி. பேதுரு திவ்ய பலத்தை விளங்கப்பண்ணுகிறார். பரிசுத்தாவிக்குத் தன்னைக் கீழ்ப்படுத்தினபடியால் அவருடைய உதடுகளின் வார்த்தைகள் பெலனுள்ளவைகளாயிருந்தன. பரி. பவுல் சிறைச்சாலையிலிருந்தபோதிலும் தன்னை முற்றிலும் பரிசுத்த ஆவியின் நடத்துதலுக்கு ஒப்புக்கொடுத்திருந்தபடியால் அவருடைய வாயின் வார்த்தைகள் இன்னொருவனால் எழுதப்பட்டிருப்பவைகளானபோதிலும் அவைகளின் வல்லமை எப்போதும் விளங்கி நிற்கின்றன. பத்மு தீவில் கைதியாயிருந்த பரி. யோவான் மனுஷருடைய பார்வைக்குத் தூரமாயிருந்தபோதிலும் உலகத்தை ஜெயிக்கிறவர்களில் ஒருவனாய் விளங்குகிறார். இவர்களில் காணப்பட்ட வல்லமை மறைந்து விளங்கினது. தேவனுடைய சித்தம் நிறைவேற அவர்களுடைய வல்லமை பிரயோகிக்கப்பட்டது. அதின் பலன்கள் உலகத்துக்குக் காணப்படாதவைகளாயிருந்தபோதிலும் அவைகளை அளந்து கணக்கிட நம்மால் முடியாது.

இன்னும் பார்ப்போம். யோவான்ஸ்நானகன் பலஸ்தீனாவில் தன் ஜனத்தாருடைய வழக்கங்களுக்கு விரோதமாய் நடந்து ஆறுமாச காலம் மேசியாவின் வருகையை முன்னறிவித்தான். ஸ்தேவான் தன் விசுவாச அறிக்கையைப் பலமாய்ப் பிரசங்கித்து யேசுவைக் குறித்துப் பிரசங்கிக்கும்போதே முடிவடைந்தான். செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு தன் ஊழியத்தின் ஆரம்பத்திலேயே ஏரோதால் கொலையுண்டான். இவர்களெல்லாரும் பரிசுத்தாவியின் வல்லமையைப் பெற்றவர்கள்தான்.

நமது ரட்சகரின் ஜீவிய சரித்திரத்தைப் பார்ப்போம். அவர் ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியைப் பெற்றார். இந்த விசேஷித்த சமயத்தில் ஆவியானவர் அவர்மேல் இறங்கினதின் நோக்கம் எப்படியிருந்தபோதிலும், அவர் இப்பூமியில் சஞ்சரித்துவந்த காலம் முழுவதிலும் பரிசுத்த ஆவி அவர்மேலிருந்தார். ஆனால் அவருடைய பன்னிரண்டாம் வயது முதல் முப்பதாம் வயதுவரையிலுமுள்ள அந்தப் பதினெட்டு வருஷ கால சரித்திரமும் மௌனமாயிருக்கின்றன. ஒன்றும் எழுதப்படவில்லை. ஆனால் அந்தக்கால முழுவதிலும் பரிசுத்தாவியின் வல்லமை அவரில் தரித்திருந்தது. அதின் பலன்கள் சொல்லப்படவில்லை. அவர் வெளியரங்கமாய் ஊழியம் செய்த மூன்று வருஷங்களிலும தேவாவியின் வல்லமை அவரில் பூரணமாய் விளங்கிற்று. என்றாலும் எவ்வளவு போராட்டம்! எவ்வளவு துன்பம்! ஊழியத்தின பலன் காணப்பட்டதுபோல் காணப்பட்டது. மனுஷர் பார்க்கத்தக்கதான வெளியரங்க பலனில்லை. அதினால் நாம்

கற்றுக்கொள்வதென்ன? தேவவல்லமை தேவசித்தத்தின்படி விளங்கினது. மனுஷருக்கு அது விளங்காமலிருக்கிறது.

நாமும் சிலவேளைகளில் இவைகளைப்பற்றிய போதிய அறிவில்லாததால் மனங்கலங்குகிறோமல்லவா? அதிகத் துக்கமும் சஞ்சலமும் மேலிடுகிறதல்லவா? தேவவசனத்தின் போதனையையும், தேவதாசரின் ஜீவிய அனுபவங்களையும் ஏற்றபடி அறிந்துணராததினாலல்லவா? தேவ ஆவியினால் நிறைந்த பிள்ளை அல்லது மனைவி மரித்துப்போகிறது. நாமும் சில வேளைகளில் கிரியாப்பிரகாரம் வியாதிப்படுகிறோம். நமது வேலைகளின் மத்தியில் அவைகளைச் செய்ய ஏலாதபடி பெலவீனமடைகிறோம் அல்லது நமது வேலையில் சித்திகாணப்படுவதற்குப் பதிலாக விரோதமும் துன்பமும் நேரிடுகிறது. தேவன் நம்மை உபயோகிக்கச் சித்தமில்லாதவர்போல் காணப்படுகிறது. காரணமென்ன? வல்லமையை இழந்துவிட்டோம். வல்லமையுடையவர் தமது பரிபூரண சித்தத்தோடு நம்மில் வாசம்பண்ணவில்லை. நாமும் நம்மைப் பூரணமாய் அவருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுக்கவில்லை.

பரிசுத்தாவியின் வல்லமையைப் பெற்றவர்கள் செய்யவேண்டிய கடமைகளைப் பார்ப்போம். அவர்கள் சாட்சிகளாயிருக்கவேண்டும். அந்த வல்லமையை நிறைவாய்ப் பெறும் வரைக்கும் இந்தக் கட்டளை நமக்குக் கொடுக்கப்படமாட்டாது. அல்லது அந்தக் கடமையை நாமாய் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அப்படிப் பெற்றுக்கொண்டால் கொடுக்கவேண்டிய சாட்சியென்ன? கண்ணாரக் கண்டவைகளுக்குச் சாட்சி. சொந்த அறிவுக்கும் அனுபவத்திற்கும் சாட்சி, அந்த அறிவை அனுபவத்திற்குக் கொண்டுவந்த அதன்பேரில் கொடுக்கும் சாட்சி. இவ்வித சாட்சிதான் பெலனுள்ளது. அதுதான் மற்றவர்களுக்குச் சாட்சியாய் எழுதிவைக்கத் தகுந்தது. இவ்வித உத்தம சாட்சியத்தின் வல்லமையே பரிசுத்த ஆவியினாலுண்டாகும் பெலன்.

இவ்விதமான சாட்சியின் பிரசங்கம் என்ன பலன் உண்டாக்கும்? ஆத்துமாக்கள் உடனே குணப்படுவார்களா? அனுதினமும் இரட்சிக்கப்படுகிறவர்கள் இவ்வித சாட்சியினால் சபையில் சேர்க்கப்படுவார்களா? யார் சொல்லக்கூடும்? என்றாலும் இந்த சுவிசேஷம் உலகமெங்கும் சாட்சியாக அறிவிக்கப்படவேண்டும். அப்போது முடிவு வரும். அந்த முடிவு வரும் காலத்தில் அநேகர் ஆயத்தமில்லாதவர்களாயிருப்பார்கள். அநேகர் விரோதிப்பார்கள். அவிசுவாசிகள் பலரும் உண்டு. சபை அனலற்றுப்போகும், சிலர் மாத்திரம் ஜெபம்பண்ணி விழித்திருப்பார்கள். விசுவாசிகளான சிலர் பரிசுத்த ஆவியின் பெலனையுடையவர்களாயிருப்பார்கள். அவர்களுடைய சாட்சி உலகத்தின் முடிவு பரியந்தம் கூறப்படும்.



கடைசியாக, பரிசுத்தாவியின் பெலனைப் பெற்றுக்கொள்ள நாம் வாஞ்சிக்கிறோமா? வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியின் பெலன் நமக்கும் கிடைக்கும் என்று விசுவாசிக்கிறோமா? அதன் நிறைவைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்களாகும்படி நம்மைச் சுத்திகரித்துக் கொள்ளுகிறோமா? அந்தப் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்று உண்மையுள்ள சாட்சிகளாய் விளங்குவோமா?

---

## அஸிஸிப்பட்டணத்துப் பிரான்சிஸ்

## 5-ம் அதிகாரம்

### சகோதர ஐக்கிய கூட்டத்தை ஸ்தாபித்தல்

மனோராச்சியம் செய்வதும், நினைத்தகாரியத்தைச் செய்து முடிப்பதுமாகிய இவ்விரண்டு அரிதான தன்மைகளும் பொருந்திய சொற்பத் தலைவருக்குள் பிரான்சிஸ் என்பவர் ஒருவர். தமது சிறு கூட்டத்தார் [illegible]றத்தக்கதாய் வேலை செய்யவேண்டுமானால், எல்லாரும் ஒன்றாய் அநுசரிப்பதற்கேதுவான சட்டமொன்று ஏற்படுத்துவது அவசியமென்று கண்டார். அவர் தமக்கென்று கண்டுபிடித்த சட்டமானது முதல் முதல் அவரை எழுப்பிவிட்ட வேதாகம பாகமே. தம்மைப் பின்பற்றுவோருக்கென்று அவர் நியமித்த சட்டமும் அப்பாகத்தையே அஸ்திபாரமாகக் கொண்டிருந்தது. ஆகவே தரித்திரமானது வெகு சிறப்புற்றதாய்ப் பேசப்பட்டது. அத்தியாவசியமான உடைமைத்தவிர, ஒரு சகோதரனாவது சொந்தமான சொத்தையுமுடையவனாயிருக்கக்கூடாது. மனுஷ சுபாவத்தை அறிந்தவராய், பிற்காலத்தில் அவரது வார்த்தைகளுக்குப் புது அர்த்தம் கற்பிப்பார்கள் என்பதைப் பயந்து, இந்தக் கட்டளைக்கு எவ்வித பூச்சும் பூசாமல் அதின் சொற்படிக்கே அர்த்தம் எடுக்கவேண்டுமென்று மிகுந்த கவலையோடு எழுதிவைத்திருந்தார். இந்தக் கட்டளையில் வெளிப்படையாய்த் தோன்றும் அர்த்தத்தைப் பார்க்கிலும் அது சுலபமானது என்று சொல்லத்தக்க சிலபேர் எழும்பினதை அவர் முன்னமே கண்டுகொண்டார். பிற்கால அனுபோகம் அவரது ஞானத்தை ரூபித்துக் காண்பித்துவிட்டது. சின்னஞ்சிறிய காரியங்களைச் சொந்தங்கொள்ளுமவனையும் அந்தக் கட்டளையைச் சற்று மாற்றி தளர்ச்சியாக்க வேண்டுமென பலர் பலமுறை எத்தனித்தபோதிலும் முடிவுபரியந்தமும் உறுதியாகவே இருந்துவிட்டார் பிரான்சிஸ் மகான். அவர்கள் பொதுவாய் வைத்திருப்பதற்கான காரியங்களுங்கூட வெகு சாதாரணமானவைகளாயிருக்க வேண்டியதாயிருந்தது. கரடு முரடான பலகைகளும், கோப்பைகளும், சில புஸ்தகங்களுமே அவர்கள் உடைமைகளாயிருந்தன. இவைகளுங்கூட அவைகளினாலுண்டாகும் உள்ளான பிரயோஜனத்திற்கன்றி, அவைகளின் விலையினிமித்தம் மதிப்பாய்

எண்ணப்படலாகாது. அவர்கள் தங்கியிருக்குங் கட்டடங்களும் அவர்களுக்குச் சொந்தமாயிருக்கக்கூடாது. ஓர் சமயத்தில் அந்தச் சகோதரர் தங்கியிருந்த வீடு, "சகோதரரின் வீடு" என்றழைக்கப்பட்டதைக் கேள்வியுற்றவுடன் அவர் தீவிரித்தோடி அங்கு கூடியிருந்த கூட்டத்தாரெல்லாரையும், வியாதிக்காரரையுங் கூடச்சேர்த்து வெளியே துரத்திவிட்டார். வீட்டுச்சொந்தக்காரன் வந்து எல்லாருக்கும் முன்பாக அது தன்னுடைய வீடுதான் என்று அறிவிக்கும்வரைக்கும் அவர்களெல்லாரும் வெளியேதான் உட்கார்ந்திருக்க வேண்டியதாயிருந்தது. பிரான்சிஸ் இவைகளெல்லாவற்றிலும் ஓர்வித போக்குடையவராயிருந்தார். தனக்கென்று தனிமையாய்ச் சொத்து வைத்திருப்பது சண்டைக்கு நல்ல காரணமென்று அவர் அறிந்திருந்தார். சங்கீத புஸ்தகமொன்று தனக்கு வேண்டுமென்று கேட்ட ஒரு மனுஷனைப் பார்த்து, "உனக்குச் சங்கீதப் புஸ்தகம் கிடைத்தபிறகு பக்திக்குரிய புஸ்தகமொன்று வேண்டுமென்று விரும்புவாய்; பின்பு நீ ஒரு கனவான்போல நாற்காலிமேல் உட்கார்ந்துகொண்டு உன் சகோதரனைப்பார்த்து 'எனக்கு பக்திக்குரிய புஸ்தகத்தைக் கொண்டுவா' என்று சொல்லுவாய்" என பிரான்சிஸ் மொழிந்தார்.

அவர் இவ்வளவு கண்டிப்பாயிருந்ததற்குக் காரணம் சித்திபெற வேண்டுமென்ற விருப்பமே. உலகப் பொருட்களற்றவர்களாயிருந்தால் அந்தச் சகோதரர் உலகப் பொருட்களை இழந்துவிடுவோமென்கிற பயமற்றிருக்கலாம். ஆகவே, யாதொரு மனக்கலக்கமும் கவலையுமின்றி தாங்கள் செய்ய வேண்டிய அந்த ஒரே ஊழியத்தில் ஊக்கமுள்ளவர்களாயிருக்கக்கூடும். சித்திபெறவேண்டுமென்ற அதே விருப்பம், ஒரு சகோதரனாவது முற்றிலும் உபவாசமாயிருந்து தன் சரீரத்தைக் கெடுத்துக்கொள்ளாதவண்ணம் பார்த்துக்கொள்ளும்படியாக அவரை ஜாக்கிரதையுள்ளவராக்கிற்று. ஆதியிலுள்ள அன்பின் உற்சாகத்தினால் அவரைப் பின்செல்வோர் அந்தக் கட்டளையைக் கைக்கொள்ளுவதில் வெகு கவலையாயிருந்து தங்களையே கொன்றுகொள்ளக்கூடியவர்களாயிருந்தபடியால் இப்படிச் செய்வது அவசியமாயிருந்தது. அப்படிப்பட்டவர்களுடன் பிரான்சிஸ் மன இரக்கங்கொண்டு, தங்களையே அதிகக் கடினமாய் நடத்திக்கொள்பவர்களில் யாராகிலும் ஒருவனைத் தன்னுடன் சாப்பிடும்படி அழைத்துக்கொள்வார். எந்தச் சகோதரன் அஞ்சாமல் சாப்பிட்டுக்கொண்டு, ஜெபிக்கவும், ஊழியஞ்செய்யவும் யாசிக்கவும் பிரியமற்றிருப்பானோ அந்தச் சகோதரனிடத்தில் அவர் அப்படி இரக்கமுள்ளவராயிருக்கவில்லை. அவ்வாறு மனதுடையவனைப் பார்த்து 'உன் வழிகளைப் பார்த்துப்போ, சகோதரனே, தாமதிக்காமல் பறந்தோடிவிடு' என்றுரைத்தார் பிரான்சிஸ் மகான். அவனைப்போலொத்தவனுக்குச் சகோதரர் கூட்டத்தில் ஓர் இடமுமில்லை. பிரான்சிஸ் தம்மைப் பின்



செல்வோர் முற்றிலுமாய் யாசகஞ்செய்து ஜீவிக்க வேண்டுமென்ற கருத்துடையவர் என்று இதிலிருந்து உத்தேசிக்கலாகாது. ஒவ்வொரு சகோதரனும் ஒவ்வொரு வேலை படித்துக்கொண்டு, அதைச் செய்யக்கூடிய சமயங்களிலெல்லாம் அதைச் செய்து பிழைக்கவேண்டியது. வேலை கிடையாத பட்சத்தில்தான் அவர்கள் கர்த்தருடைய மேஜையைச் சேரவேண்டியவர்களாயிருந்தார்கள். இதிலும் மற்றநேக காரியங்களிலும் வழிகாட்டி நடத்தினவர் பிரான்சிஸ் மகான்தான்.

வேறொரு சிறந்த நற்குணம் கீழ்ப்படிகையே. இதைக் குறித்து அவர் கொடுத்த கட்டளை யாதெனில், 'நான் அதிகமாய் நேசிக்கும் என் சகோதரர்களே! என் கட்டளையை முதல்வார்த்தையிலேயே நிறைவேற்றிவிடுங்கள். நான் அதைத் திரும்பச் சொல்லும்படி காத்திருக்கவேண்டாம். கொடுக்கப்படும் கட்டளையைப்பற்றி, அது சரியோ தப்பிதமோ என்று நியாயஞ் சொல்லி வழக்காடவும் வேண்டாம். ஏனென்றால் அதில் செய்யமுடியாத காரியம் ஒன்றுமிருக்காது.' என்பதே. ஆனால் பிரான்சிஸ் தயவாய்க் கேட்டுக்கொள்ளுதல் போதுமானதென்று கண்டால், அதைக் கட்டளையாய்க் கொடுக்கச் சற்றுத் தாமதிக்கத்தான் செய்வார். 'கையானது கத்தியைப்பிடிக்க அளவிற்கு மிஞ்சி ஆயத்தமாயிருக்கக்கூடாது' என்றுரைத்தார் அச்சன் மார்க்கன்.

தாழ்மை என்ற சிறந்த குணமும் வற்புறுத்தப்பட்டது. சில சகோதரர், தங்களுடைய சித்தி பெறுதலைக் கண்டு, தங்களை வெகு கெட்டிக்காரர் என நினைத்து, தாங்கள் உதவிசெய்யும்படியாகப் போயிருக்கும் குருவை அசட்டைசெய்ய எத்தனித்தனர். ஆனால் பிரான்சிஸ் புத்திமான், தாம் எந்த சிந்தையோடு அவர்கள் ஊழியஞ்செய்யவேண்டுமென்று விரும்பினாரோ அந்தச் சிந்தைக்கு அது முற்றிலும் எதிரிடையானதென்று அவர்களுக்குக் காண்பித்தார். அவர்கள் உதவிசெய்யவேண்டியதுதான். குறைவு கண்ட இடத்தில் குறைவை நிவிர்த்திசெய்யவேண்டியதுதான். ஆயினும் அதினிமித்தம் அவர்கள் மென்மேலும் தாழ்மையுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்பதுதான் அவரது விருப்பம்.

இவைகளெல்லாவற்றிலும் பிரான்சிஸ் தம்மைப் பின்சென்றோரை நடத்திவந்தனர். கஷ்ட துன்பங்களை அனுபவிப்பதிலும், அவர்களது நோக்கத்தில் உறுதியாய் நிலைத்திருப்பதிலும், தாழ்ந்த சிந்தையாயிருப்பதிலும், அவரே எப்பொழுதும் முன்னின்று நடத்தி முன் மாதிரியாயிருந்தார். ஒவ்வொரு காரியத்திலும் அவருடைய சகோதரர்கள் அவரை உபாத்தியாயராகவும் முன் மாதிரியாகவுமே நோக்கிப் பார்த்தனர்.

இப்படிப்பட்ட பக்தியுள்ள கூட்டத்தார், எவ்வளவு தாழ்மையுள்ளவர்களாயிருந்த போதிலும், அவர்களுக்கும் சத்துருக்கள் இருந்தேவந்தனர்.

மற்றவர்கள் நன்மைசெய்வது சிலருக்குக் கோபத்தை எழுப்பக்கூடியதே. புறங்கூறும் நாவுகள் அவருடைய குணத்தையும் நோக்கங்களையும்பற்றி பற்பலவிதமாய்ப் பேசுவதைக் கண்டுபிடித்துக்கொண்டார் பிரான்சிஸ் பக்தன். தமது வேலைக்கு இடையூறு உண்டாகாதவண்ணம், அக்காலத்துத் தலைநகரியான ரோமாபுரி பட்டணத்திலிருந்து தாம் தொடங்கிய வேலை தடையின்றி நடைபெற்று வருவதற்காக ஓர் உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தனர். ஆகவே யாதொரு கஷ்டமின்றி அவர் ரோமாபுரி சென்று தாமும் தம்மைப் பின்சென்றோரும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், சங்கை அதிகாரம்பெற்ற சகோதர ஐக்கிய கூட்டமொன்று ஸ்தாபித்துக்கொள்ளவும் அனுமதி பெற்றுக்கொண்டு திரும்பிவந்தனர். வேறு அநேக சகோதர ஐக்கிய கூட்டங்களிருந்தமையால், தமது கூட்டத்திற்கு ஓர் தனித்த பெயரளிக்க விருப்பமுடையவராய் யோசித்துக்கொண்டிருக்கையில் 'சகோதரர் மற்றவர்களைவிட தாழ்ந்தவர்களாயிருக்கவேண்டும்' என்ற பாகத்தைக் கண்டார். அதைக் கண்டவுடனே ஆவியிலே ஏவப்பட்டவராய் அதே அர்த்தத்தைக் கொடுப்பதற்காக, 'இளைய சகோதர ஐக்கிய கூட்டம்' என பெயர் அளித்தார். இந்தப்பெயரே அநேக வருஷங்களாக வழங்கிவந்தது.

அநேக ஸ்திரீகள் அவருடைய பிரசங்கத்தினால் குணப்பட்டபோதிலும், இதுவரை பிரான்சிஸைப் பின்சென்றவர்கள் ஆண்மக்கள் மட்டுமே. அந்நாட்களிலே ஒரு ஸ்திரீ செய்யக்கூடிய உண்மையான பக்தியுள்ள ஜீவியம் யாதெனில், ஒருவரையும் காணாமலும், ஒருவர் பேசுவதையுங் கேளாமலும் அடைபட்டிருக்கும் சந்நியாசி மட ஜீவியமே. பிரான்சிசுடைய புதியதும் வெகு சேர்க்கியானதுமான வழி வருமுன்னே, மனிதரும் ஸ்திரீகளைப்போலவே அப்படிப்பட்ட எண்ணத்தில் நிலைகொண்டிருந்தனர்.

பிரான்சிசுடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களுக்குள், உயர்குலத்தில் பிறந்த கிளாரா என்ற பெண் ஒருத்தி, அவள் உபயோகமற்ற சந்நியாசிமட ஜீவியத்தை விரும்பாமல், மெய்யான ஊழியத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுக்க விரும்பி, பிரான்சிசும் அவரைப் பின்சென்றோரும் செய்யும் ஊழியத்தைக்கண்டு, அக்கூட்டத்தைச் சேர்ந்திருந்த தன் இனத்தான் ஒருவனிடத்தில் ஆலோசனை கேட்கத் தீர்மானித்தாள். அவன் அவளை அக்கூட்டத்தில் சேர்ந்துகொள்ளும்படி யோசனை சொல்லிக்கொடுக்கவே, அவ்வாறே அவளும்போய் அக்கூட்டத்தைச் சேர்ந்துகொண்டாள். அந்தச் சகோதரர் அவளை ஏற்றுக்கொண்டு, கூட்டத்தின் சட்டங்களை அவளுக்கு வாசித்துக் காண்பித்துப் பின் தற்சமயத்திற்கென்று ஒரு சந்நியாசிமடத்தில் தங்கியிருக்கச் செய்தனர். இதினின்று 'ஏழைப் பெண்களின் கூட்டம்' என்று இரண்டாவது கூட்டம் எழும்பிற்று. பிரசங்கம்பண்ணுவதைத்



தவிர, மற்றெல்லா விஷயத்திலும் அவர்கள் ஜீவியம் முதல் ஐக்கிய கூட்டத்தைப்போலவே இருந்தது. முதலாவது பிரான்சிஸ் பழுதுபார்த்த கோவில் அவர்களுக்களிக்கப்பட்டது. அதிலே அவர்கள் வியாதிக்காரரைப் பராமரித்து, மற்றவர்களுக்குப் பல உதவிசெய்து வந்தனர். கிளாரா பிரான்சிசுக்கு உண்மையான சிநேகிதியாயிருந்து, கூட்டத்துக் கட்டளைகளுக்கு உண்மையாய்க் கீழ்ப்படிந்து, மனஞ்சோர்ந்து போகும் சமயத்தில் பிரான்சிஸினிடம் ஆலோசனைக்குச் சென்று தன் காலத்தைக் கழித்துவந்தனள். பிரான்சிஸ் சகோதரருக்கு எவ்விதமாயிருந்தாரோ அவ்விதமாகவே கிளாராவும் சகோதரிகளுக்கு இருந்தனள்.

## யூதனான ஓர் மிஷனெரி

இவர் பேர் சால்மன். இவர் ஒலாந்து தேசத்திலுள்ள ராட்டர்டம் என்னும் பட்டணத்தின் வழியாய் அமெரிக்காவிலுள்ள நியுயார்க் என்னும் பட்டணத்துக்குப் பிரயாணம் செய்தார். யூதருக்குள் வேலைசெய்யும்படி இவர் தன்னை ஒப்புவித்து வேலைசெய்து வருகிறார். கிறிஸ்து மார்க்கத்தைப் பகைக்கிற யூதரால் இவர் மிகவும் துன்பப்பட்டார். இவர் முதல் முதல் தமது வேலையை ஆரம்பித்தபோது மைதானங்களில் கூட்டம் கூட்டமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் யூதரண்டைபோய் அவர்களோடு சம்பாஷிப்பது வழக்கம். தமது சொந்த ஜனங்களால் கொடிய துன்பமடைந்தார். யூதர்கள் இவரை மேல்வீட்டிலிருந்து செங்குத்தான படிக்கட்டுவழியாய் கீழே பலதடவைகளில் பிடித்துத் தள்ளியிருக்கிறார்கள். ஒருதடவை இவரைக் கழுத்தைச் சுற்றி ஓர் கயிற்றினால் கட்டித் தெருக்கள் வழியாய் இழுத்துக்கொண்டுபோய் அப்புறம் அவிழ்த்துவிட்டார்கள். தன்னை அவர்கள் அவிழ்த்துவிட்ட உடனே அவர்களை அன்பாயழைத்துத் தன்னோடு அவர் தேயிலைப்பானம் அருந்த வரும்படி கூப்பிட்டார். இவருடைய அன்பின் அழைப்பைக் குறித்து அவர்களில் பலர் பிரமிப்படைந்து, அவர்களில் பதின்மூன்று பேர் அவரோடுகூடப்போனார்கள். அவர்களைத் தமது வீட்டிலுள்ள சிறந்த அறையில் கூட்டிக்கொண்டு வைத்து, யூத முறைப்படி அவர்கள் கைகளைக் கழுவி அப்புறம் அவர்கள் சாப்பிடக்கூடியவைகளை அவர்களுக்கு முன் படைத்தார். சாப்பிட்டானதும் அவர்களில் ஒருவர் எழுந்து மிஷனெரிக்கு நன்றியறிதலான வார்த்தைகள் சொல்ல எழுந்து நின்று, "நாங்கள் ருஷியாவிலிருந்து புறப்பட்டு வருகிறோம், வழியில் அநேக கஷ்டங்கள் அடைந்தோம். இப்போது மாராவிலிருந்து ஏலீமுக்கு வந்திருக்கிறோம், நமது சிநேகிதர் நமக்குத் தண்ணீரூற்றைத் தந்திருக்கிறார்" என்று சொல்லி மிஷனெரியின் வேதாகமப் புஸ்தகத்தைச் சுட்டிக்

காட்டி "இதுவே தண்ணீருற்று" என்றார். அவர் பேசின உபசரணை வார்த்தைகள் மிஷனெரிக்குப் பிரியமில்லாததால் அவர்களைச் சீக்கிரம் வழி விட்டனுப்பித் தமது ஜெப அறைக்குள் பிரவேசித்து ஆயிரக்கணக்காய் இப்பட்டணத்தின் வழியாய் வரும் யூதப் பிரயாணிகளுக்கு இவ்வித உபசரணை செய்யப் போதுமான வீடும் வசதிகளும் தரும்படி கேட்டார். அப்படியே ஏலிம்! என்னும் ஓர் பெரிய வீடு பலருடைய உதவியால் கட்டப்பட்டு நாளது வரை வேலை நடந்துவருகிறது.

## சீன ஸ்திரீயான தாய்

ஓர் சீன தேசத்து ஸ்திரீயின் புருஷன் குணப்பட்டுக் கிறிஸ்தவனாகிச் சபையைச் சேர்ந்துகொண்டான். மனைவியும் பிள்ளைகளும் அவனோடே சேரச் சம்மதிக்கவில்லை. சிலகாலம் மனைவி தனிமையாயிருந்தபின் ஒரு நாள் தன் புருஷன் போய்ச் சேர்ந்திருக்கும் மார்க்கத்தாரைப் பார்க்கும்படி தன் குழந்தையோடு முதல் தடவை வந்தாள். போய்விட்டு சில வாரங்களுக்குப்பின் குழந்தையில்லாமல் வந்தாள். உபதேசினி அவளைப் பார்த்து 'உன் கையிலிருந்த அழகான குழந்தை எங்கே' என்று கேட்டார்கள்' அதை எறிந்துவிட்டேன் என்றாள். முன் வரும்போது நல்லசுகத்தோடிருந்ததே இதற்கிடையில் என்ன வியாதி வந்தது? 'என்று கேட்டார்கள். அவள் மாறுத்தரமாகப் பின்வரும் விபரத்தைச் சொன்னாள்.' பிள்ளைக்கு வியாதி ஒன்றுமில்லை. அதிகக் குளிராயிருந்த ஓர் இரவு ஓர் செங்கல் படுக்கையில் கிடத்தியிருந்தேன். அந்தக் கட்டிலிலிருந்து உருண்டு தரையில் படுத்துக்கிடந்தது. செங்கல் தரை அதிகக் குளிராயிருந்தது. பிள்ளையைத் துணியால் போர்த்தாமலிருந்தது. நான் அதை என்னண்டையில் எடுத்துப்போடாதபடி சும்மா கிடக்கட்டும் என்று விட்டுவிட்டேன். காலையில் குழந்தையை எடுக்கப்போனேன். அது செத்துக்கிடந்தது. எனக்கு அநேகம் பிள்ளைகளுண்டு 'என்று சிரித்துக்கொண்டு சொன்னாள். சுபாவ அன்பு சீனருக்குள் எவ்வளவு குறைவாயிருக்கிறது.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.



July 1921. Registered No. M 136.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

22 OCT 1921 MADRAS

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவனுடைய உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38,

Vol. XXII ஜூலை 1921

## ஜெபத்தியானம்

என் கைகளை உமக்கு நேராக விரிக்கிறேன். வறண்ட நிலத்தைப் போல் என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது' சங்: 143: 6

முதலாவது. விரித்திருக்கிற கைகள். ஊக்கமான ஜெபம் செய்யும்போது கைகள் விரிக்கப்பட்டிருக்கும். தேவாலயப் பிரதிஷ்டை செய்யும்போது ஜெபித்த சாலோமோனைப்பாருங்கள் அல்லது யுத்தம் நடக்கும்போது ஜெபித்த மோசேயைப்பாருங்கள். ஊக்கமான ஜெபம் அல்லது பலனுள்ள ஜெபம் செய்யும்போது கைகள் விரித்திருக்கிறதாகப் பார்க்கிறோம். விரிக்கப்பட்டகை உள்ளான ஆத்துமதாகத்தைக் காட்டுகிறது. விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் விண்ணப்பங்கள் செய்யப்படும்போது ஆண்டவருடைய ஆசீர்வாதங்கள் ஏராளமாய்ப் பெருகிக் கொண்டே வருகின்றன. ஜெபிக்கும்படியான வாஞ்சையையும் கிருபையையும் அவர் அருளுகிறார். மோசே தன்சொந்த அவசரங்களுக்காக அல்ல ஜனங்களுக்காகப் பரிந்துபேசும் விண்ணப்பம்செய்தான். இளைத்துப்போன பிள்ளை தன் கைகளை விரித்துத் தன் தாயின் மடியில்சேர விருப்பத்தோடு தன்கைகளை விரிக்கும்வண்ணம் விசுவாசி தன்கைகளை தேவனுக்கு நேராக விரிக்கிறான். ஆகவே, ஜெபத்தியானமானது தேவனைப்பற்றிய வாஞ்சையை நம்மில் அதிகரிக்கச்செய்கிறது. இளைத்துப்போன ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிடுகிறது. மற்றவர்களுக்காக விண்ணப்பம்செய்ய நம்மை ஏவுகிறது.

இரண்டாவது. ஆத்துமதாகம். கைகள் விரிக்கப்படுவது ஆத்தும தாகத்தைக் காட்டுகிறது. அது வெளியடையாளமாயிருந்தபோதிலும் இருதயத்தின் தன்மையை அது விளக்குகிறது. மோசேயும், யோசுவாவும் பரிசுத்தஸ்தலத்திற்கு வந்தவுடன் தங்கள் பாதரட்சைகளைக் கழற்றும்படி

உத்தரவுபெற்றார்கள். பழைய ஏற்பாட்டில் போலவே புதிய ஏற்பாட்டிலும் இவ்வித புறம்பான அடையாளங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் தேவனுடைய சமுகத்தையும் பிரசன்னத்தையும் உணராத ஆத்துமா எத்தனை புறம்பான அடையாளங்கள் காட்டினாலும் பிரயோஜனமில்லை. அதுமாத்திரமல்ல, அவர் சமீபத்திலிருக்கிறதையும் அவருடைய வல்லமையையும் மகத்துவத்தையும் அன்பையும் அவருக்குமுன் நாம் காட்டவேண்டிய தாழ்மையையும் உணரவேண்டும். இவைகளின் நிச்சயத்தை உணராத ஆத்துமாக்கள் காட்டும் புறம்பான அடையாளங்கள் மாய்மாலமே. கூட்டங்களில் செய்யப்படும் ஜெபங்கள் ஊக்கமாயிருக்கின்றன. தனி ஜெபங்களும் அப்படியிருந்தால் அல்லவோ அவைகள் உண்மையானவைகள். நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று ரட்சகர் வாக்களிக்கிறார் இப்படிப்பட்ட தாகம் மெய்யாகவே பாக்கியமுள்ளது தான்.

மூன்றாவது. வறண்டநிலம். இதுவும் ஆத்துமாவின் தாகத்தைக் குறிக்கிற வார்த்தைதான். தரையானது உஷ்ணத்தினால் வெடிப்புண்டாகித் தன் வாயைத் திறந்துகொண்டு எப்போது மழைபெய்யும் என்று வானத்தைநோக்கிக் காத்திருக்கும் பாவனையை உவமானமாகக் காட்டுகிறது. இதை நாம் வயல் வெளிகளிலும் குளங்களின் உள்வாய்களிலும் அதிகமாய்ப் பார்க்கிறோம். வறண்டதரையின் வெடிப்புகள் மேல்நோக்கித் தண்ணீருக்காக ஆவலோடு காத்திருக்கும் வண்ணம் என்னுடைய ஆத்துமா உமது சகாயத்துக்காகக் காத்திருக்கிறது. நமது ஜீவியத்தில் நேரிடும் குறைவுகளினால் இளைப்படைந்து தாகத்தால் தேவனுக்காகத் தவிக்கிறோமா? நமக்குச் சகாயம் உண்டு. முற்றிலும் தவித்தவர்களானால் மேலேநோக்கிப் பார்ப்போம். தன்னில்தானே நம்பிக்கையற்று சுயபிரயாசத்தால் ஒன்றும் வாய்க்காமல், கீழேயும் உள்ளேயும் நோக்காமல் மேலே நோக்கிப்பார்ப்போம். உன்னதத்திலிருந்து ஆவியின் மழைபெய்யும், அங்கிருந்து ஆசீர்வாதமட்டுமல்ல, அதிகமான தாகமும உண்டாகும். தேவனுடைய கிருபை பூர்வகாலத்து இஸ்ரவேலருக்குத் திரும்பத திரும்பப் புதுப்பிக்கப்பட்ட வண்ணம் இப்போதும் புதுப்பிக்கப்படும். அவருடைய பூர்வதயைகளை உணருகிறோமா? நமது சொந்தத்தவறுதல்களினிமித்தம் நமது உள்ளம் சோர்படைந்து தவிக்கிறதா? மெய்யாகவே அவருடைய தயை புதுப்பிக்கப்படும். ஜெபத்தின் மூலமாய் அவரை நோக்கிக் கெஞ்சு. உன் தவறுதல்களினால் உண்டாகும் தவிப்பையும் அங்கலாய்ப்பையும் அவர் மெய்யாகவே நீக்குவார்.

வறண்ட நிலத்தின்மேல் மழைபெய்தால் எப்படியிருக்கும்? மழை தான் ஏன்பெய்கிறது? அந்தநிலத்தின் அவசரத்தைத் திருப்திப்படுத்தும்



அதினாலுண்டான வெறுமையை நீக்கிச் செழிப்பையும் அலங்காரத்தையும் கொடுக்கும். அதுமாத்திரமல்ல, வறண்ட நிலமே பலன்கொடுக்கும்படிசெய்யும். தனக்காக அல்ல, தேவமகிமைக்காக, மனுஷருடைய நல்வாழ்வுக்காக. அந்தநிலத்தின் வாஞ்சை அல்லது தாகம் இதுவே. இதேபிரகாரம் நமது ஆத்துமா மெய்யான தாகம்கொண்டிருக்குமானால், அந்தத் தாகம் திருப்தியாவது நமதுசொந்த சந்தோஷத்துக்காகவல்ல, நம்மை திருப்திப்படுத்தவல்ல, தேவநாமம் மகிமைப்படவும், மற்றவர்களுடைய ஆத்துமா வாழ்வடையவுமே தேவன் இவ்வித தயைகாண்பிக்கிறார். அவர் ஒருவரே ஆத்துமாவின் தாகத்தை இவ்விதமாய்த் தீர்க்கக்கூடியவர். அவர் தீர்க்கும் தாகத்தின்பலன் தாகமுடையவன்மட்டில் அடங்கிப்போகாமல் அநேகருக்கு நன்மையளிக்கும் வாய்க்காலாக மாற்றுகிறார். ஆவியின் அருள்மாரி பெய்யும்போது தேவநாமம் மகிமைப்படும். ஜனங்கள் ஆசீர்வாதம்பெறுவார்கள். இவ்விதம் நடக்கும்போது தேவாவியின மழை மேலும்மேலும் பெய்துகொண்டேயிருக்கும்.

## கசப்பான பாத்திரம்

ஆர்ச்சார்ட் என்னும் பண்டிதர் 'கிறிஸ்துவின் வீரதீரம்' என்னும் பொருளினபேரில் தொடர்ச்சியான பிரசங்கங்கள்செய்தார். பிரசங்கங்களைகேட்டுக்கொண்டிருந்த ஓர் அம்மாளைப்பார்க்கப்போனார். அந்த அம்மாள் தன் ஐந்து குமாரரையும் யுத்தத்தில் சாகக்கொடுத்திருந்தார்கள். அந்த அம்மாள் பண்டிதரைப்பார்த்து, 'நீர் யேசுநாதரின் சிலுவை மரணத்தைக் குறித்துப் பேசினீரே. தன் ஐந்து குமாரரையும் சாகக்கொடுத்த தாயின் மனவேதனையை அவர் அறிவாரா? என்னுடைய பாடுகளைப்பார்க்கும்போது அவருடைய பாடுகள் எம்மாத்திரம்? என்று வெகுமூர்க்கத்தோடு பேசினாள். பண்டிதர் சற்றுதாமதித்து, அவளுடைய மூர்க்கம தணிந்தபின், 'அம்மா, உன்னுடைய குமாரர் யுத்தத்திலே சாகாமல் தங்கள் பாவத்திலே செத்திருப்பார்களானால் அப்பொழுது உன் துக்கம் கொஞ்சமாயிருக்குமா? அதிகமாயிருக்குமா? என்று கேட்டார். அப்போது அவள் அதிகமாய்த் துக்கப்படுவேன்' என்றாள். பண்டிதர் 'அதுதான் கிறிஸ்துவின் பாடுகளின நோக்கம்' என்றார். அப்போது அந்த அம்மாளுக்கு விளங்கிக் கொண்டது.

சிலுவையண்டையில் நாம் நின்றால் எத்தனை அருமையான படிப்பினைகளை நாம் கற்றுக்கொள்ளலாம். இரட்சிப்பைப் பூரணப்படுத்தும்நோக்கமான வெளிப்படையான கருத்துமட்டும் சிலுவையில் அடங்கவில்லை. (எபி. 9: 26–28). நமக்கு அளவற்ற உள்ளான ஆசீர்வாதங்களையும்

கொண்டுவரும் கருவியாயிருக்கிறது. கிறிஸ்துவின் பாடுகளாலும் மரணத்தாலும் பாவம்சாகிறது (ரோ. 6: 10, 11). சுயநயம், நான் என்னும் அகங்காரம் முடிவடைகிறது (கலா. 2: 20). மற்றவர்களுடைய காரியங்களுக்காகக் கவலைப்பட வைக்கிறது (ரோ. 14. 7—9). கர்த்தருக்கென்று ஜீவிக்க வல்லமையளிக்கிறது (2 கொரி. 5: 14, 15). அன்புக்குரியவர்கள் மரிப்பதால் உண்டாகும் துக்கத்துக்கு ஆறுதல்படுத்தும் ஊழியஞ்செய்ய வைக்கிறது (1 தெச 4: 14—17). சுயவெறுப்பை யுண்டாக்குகிறது பிலி. 2: 17) ஈகைக்குணத்துக்கு மாதிரியாயிருக்கிறது (2 கொரி.8—9) உலகத்தினின்று விடுதலையளிக்கிறது (கலா. 1: 4) ஒருவரையொருவர் நேசிக்க வல்லமைகொடுக்கிறது (1 யோ. 3:16). அநியாயத்துக்கு நம்மைவிலக்குகிறது (தீத்து 2—14 R. V.) கர்த்தருக்கென்று நம்மைப் பிரதிஷ்டைசெய்ய வைக்கிறது (எபே. 5: 25). மற்றவர்கள் தப்பிதத்தை மன்னிப்பதில் முன்மாதிரிகாட்டுகிறது. (எபே. 5: 1, 2). நம்மைத் தேவனுக்கென்று பூரணமாயத்தத்தம்செய்ய வைக்கிறது (ரோ, 12: 1).

*　　*　　*　　*

சாதுசுந்தர்சிங்சொன்ன வசனம். 'கிறிஸ்துமார்க்கம் இக்காலத்தில் செய்யவேண்டியது பிரசங்கமல்ல, சாட்சிபகர்தலே' யாரும் பிரசங்கிக்கலாம். ஆனால் தன் விசுவாசத்தினிமித்தம் பரீட்சிக்கப்பட்ட மெய்க் கிறிஸ்தவனே சாட்சிபகரக்கூடும். நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது சொற்பபலன் காணப்பட்டதுண்டு. ஆனால் நான் சாட்சிபகர ஆரம்பித்தது முதல் அநேகருக்குப் பிரயோஜனமுள்ளவனானேன்' கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளின் பலனைப்பார்க்கும்போது அஞ்ஞானதேசங்களில் பிரசங்கிப்பதற்குப்பதிலாகச் சாட்சிகள் சொலலப்பட்டிருக்குமானால் எத்தனைமாட்சிமையான பலன் காணப்பட்டிருக்கும்.

## மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்தார். கொலோ. 2: 13.

இதிலே இரண்டுவகையான நிலைமை குறிப்பித்திருக்கிறது. மரணம், ஜீவன்; ஆத்துமமரணம், ஆத்துமஜீவன், பழையது மரணம், புதியது ஜீவன்; பெத்தானியா ஊரில் ஒரு வீட்டிலே ராஜவிருந்து நடக்கிறது. அங்கே கிறிஸ்துநாதரும் இருக்கிறார். அவருடைய சீஷரும் இருக்கிறார்கள் இன்னும் வேறே விருந்தாளிகளுமிருக்கிறார்கள். பந்தியிருந்த ஜனங்களில் பாக்கியவான் ஒருவனிருக்கிறான். ரக்ஷகரோடு பேசுகிறான். கூடவே புசிக்கிறான். சந்தோஷங்கொண்டாடுகிறான். அவனைப் பார்க்கும்படி திரளான ஜனங்கள் வந்திருக்கிறார்கள். பிரமிப்போடு அவனைப் பார்க்கிறார்கள்.



பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். அவன் யாரென்றால் மரித்தும் உயிரோடே எழுப்பப்பட்ட லாசரு. அற்புத மல்லவா? மரித்தான், ஆனாலும் உயிரோடிருக்கிறான். மரித்தவனாயிருந்த லாசருவை அருள்நாதர் உயிர்ப்பித்தார். அதற்குமுன் அந்த ஊரில் அப்படிப்பட்ட அற்புதக் காட்சியை ஒருவரும் கண்டதுமில்லை, கேள்விப்பட்டதுமில்லை. திரளான ஜனங்கள் இயேசுவினிமித்தம் மாத்திரமல்ல, அவர் மரித்தோரிலிருந்து எழுப்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள்" யோ. 12: 9. அந்தத் திசையெங்கும் அதுதான் சமாச்சாரம். லாசரு செத்துப்போனான், அடக்கம்பண்ணப்பட்டான், நாலுநாள் கல்லறையில் இருந்தான். அவன் பிரேதம் நாறிப்போனது. என்றாலும் புதுமனுஷனை, அற்புதஜீவியாக, உயிரோடே எழுப்பப்பட்டான். ஜீவனோடிருக்கிறான், பேசுகிறான், நடக்கிறான் அவனை வந்து பாருங்கள் என்று பேசிக்கொள்வார்கள். மரித்தவனாயிருந்த லாசரு உயிர்ப்பிக்கப்பட்டதினாலே உண்டான நன்மை என்ன? 'லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்' யோ. 12: 10. ஆம், இறந்தும் உயிரோடெழுப்பப்பட்ட அந்த மனிதனைப் பார்த்தவர்களில் அநேகர் இயேசுவை நம்பி விசுவாசிகளானார்கள். சகோதரரே, எந்த நிலைமையிலிருக்கிறீர்கள்? உங்கள் பாவங்களினாலேயும் உங்கள் மாம்சவிருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருக்கிறீர்களா? கிறிஸ்துநாதராலே உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறீர்களா? ஐயோ! எத்தனையோ சபையார் பொய் சொல்லுகிறார்கள். தூஷணம் பேசுகிறார்கள், குடி வெறியினாலே கெட்டுப் போகிறார்கள், சண்டை போடுகிறார்கள், களவுசெய்கிறார்கள், உலகப்பொருளை நாடி, ஈட்சிப்பை அசட்டைசெய்கிறார்கள். இவர்களெல்லாரும் செத்தவர்கள், மரித்தவர்கள், பெரிய மோசத்துக்கு ஏதுவானவர்கள், உங்களில் எத்தனை பேர் இயேசுவோடேகூட உயிர்ப்பிக்கப்பட்டவர்கள்? ஆ, ஜனங்களே, நாம் பாவத்துக்கும் செத்து; உலகத்துக்கும் செத்து, பிசாசுக்கும் செத்து, தேவனுக்கென்று பிழைப்போமானால், நமது நிமித்தமாக அநேகர்போய் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

இயேசுவோடேகூட உயிர்ப்பிக்கப்பட்டவனிடத்தில் காணப்படும் குறிப்புகள்.

I. புதுஜீவன். ஸ்திரீகள் ஆண்டவருடைய கல்லறையண்டையில் நின்று அதிலே எட்டிப்பார்க்கும்போது தேவதூதனுடைய சத்தம் கேட்டது. 'அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்' மத். 28: 6) 'உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?' ஆ, அன்றைக்கு நடந்த விசேஷத்தை யாரால் விவரிக்கக்கூடும். 'பூமி மிகவும் அதிர்ந்தது' (மத். 28: 2) பெரிய கல் தன்னாண்டு போயிற்று. கிறிஸ்துநாதர் புதஜீவனடைந்தவராக, மரணத்தை ஜெயித்

தவராக, என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவராக, எழுந்தருளினார். புது ஜீவன், உயிர்த்தெழுதலின ஜீவன், ஒருபோதும் அழியாத ஜீவன், அந்தப் புது ஜீவனைத் தடுப்பாருமில்லை, கெடுப்பாருமில்லை.

II. புதுச்சாயல். உயிரோடே எழுந்த ரக்ஷகருக்கு புதுச்சாயலும் ஒரு மறுரூபமும் இருந்ததாம். (மாற். 16: 12) இரண்டு பேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிறபொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார். மாறாத ரக்ஷகர் என்றாலும் உயிர்த்தெழுந்தபின்பு மறுரூபமுள்ளவராய்க் காணப்பட்டார். ஆண்டவர் கரையிலே வந்து நிற்கையில், 'அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள் ஏன்?, மரணத்தைவென்று உயிரோடெழுந்த புண்ணியநாதருக்கு புதுச்சாயலும் மறுரூபமுமிருந்தது. பற்பல சமயங்களில் அவருடைய சொந்த சீஷர்கள் கூட அவரை அறியாதவர்களாயிருந்தார்கள். ஆ, சிநேகிதரே, ஆவிக்குரிய பிரகாரமாய் நாமும் புதுச்சாயலும் மறுரூபமுமுடையவர்களாயிருக்கவேண்டும். இங்கிலாந்து தேசத்தில் ஒரு குரு இருந்தார். அவர் நல்லவர். குணப்பட்டார். ஆனாலும் சமயாசமயங்களில் கோபப்படுவார். விசனமாய்ப் பேசுவார். சமுசாரத்தை அதிகமாய் கடிந்துகொள்வார். ஒருகாலத்தில் தேவ கிருபையினாலே பெரிய மாறுதலை அடைந்தார். 'என் பழைய மனுஷன் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டது, அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டது, இனி நான் அல்ல, கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார். நான் அவரால் உயிர்ப்பிக்கப்பட்டு முற்றிலும் புதுமனுஷனாய் ஜீவிக்கவேண்டும் என்று உணர்ந்துகொண்டார். கோபகுணம் நீங்கிவிட்டது, விசன வார்த்தைகள் போய்விட்டது. அவருடைய குணம், நடக்கை எல்லாம் மாறினதாகக் காணப்பட்டது. அவருடைய மனைவி பார்த்துப் பயப்பட்டாள். நம்முடைய புருஷன் இவ்வளவு தூரம் மாறிப்போனாரோ, மகாசாந்தமாய், மெத்தப் பரிசுத்தமாய் நடக்கிறாரோ. அவருடைய சிந்தை புதுசிந்தை, வார்த்தை புதுவார்த்தை என்னமோ! ஒருவேளை இந்த மாறுதல் அவருடைய மரணத்துக்கு முன்குறிப்பாயிருக்கிறதோ? கர்த்தர் அவரை இவ்விதமாய் பரிசுத்தப்படுத்தி சீக்கிரத்துக்குள் எடுத்துக்கொள்வாரோ என்று சந்தேகம் அடைந்தாள். அவரோ அப்படியல்ல, மரிக்கத்தக்கதாக அல்ல, நாம் ஜீவிக்கத்தக்கதாகவே தேவன் இவ்விதமாய்க் கிருபையளிக்கிறார் என்று அவளுக்குப் போதித்தார். பார்த்தீர்களா? சாகும் சமயத்தில் மாத்திரமல்ல, எந்த சமயத்திலும் நாம் மறுரூபமுடையவர்களாய் விளங்க வேண்டும் என்பதே தேவசித்தம். சகோதரனே, சகோதரியே, உன் புதுச்சாயல் எங்கே? மறுரூபம் எங்கே?

III. புதுவேலை. உயிர்த்தெழுதலுக்குப்பின் நம்முடைய அருமை ரக்ஷகர் புதுவேலை செய்தார் என்று நாம் சொல்லலாம். வேதத்திலுள்ள சத்தி-



யங்களை விளக்கிக்காட்டினார். பூலோகம் எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வகைசெய்தார். மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். (லூக். 24: 27) அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதைத் திறந்தார் (லூக். 24: 45) நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசினார் (அப். 1: 3) இப்படிப் பார்த்தால் அந்த நாற்பது நாட்களில் புண்ணியநாதர் வேதவாக்கியங்களைப் போதித்து அவைகளின் கருத்தை விளக்கிக் காட்டி வந்தார் என்று அறியலாம். ஆ, அந்தச் சீஷர்களுக்குக் கர்த்தருடைய வேதம் புதுவேதம்போலாயிற்று. தாங்கள் முன் அறியாத சத்தியங்களை இப்பொழுது அறிந்துகொண்டார்கள். அந்த நாற்பது நாட்களில் வேத ஆராய்ச்சி அதிகம், புதுப்போதனை அதிகம், புது ஆசையோடு வாசித்தார்கள், தியானித்தார்கள், தேர்ச்சியடைந்தார்கள், உயிரோடெழுந்த ஆண்டவருடைய கையிலும் வாயிலும் வேதவசனங்கள் அடிக்கடி காணப்பட்டதென்று பார்க்கிறோம். சகோதரரே, நாம் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கப்பட்டோமென்றால் வேதபுஸ்தகத்தை அதிகமாய் வாசிப்போம், அதிலே புதுச் சத்தியங்களையும், அருமையான விசேஷங்களையும் கண்டுபிடிப்போம்.

அதோடுகூட உலகமெங்கும் சுவிசேஷத்தை அனுப்ப ஜாக்கிரதை செய்தார். 'நீங்கள் புறப்பட்டுப்போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் (மத். 28: 19), நீங்கள் உலகமெங்கும் போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மாற். 16: 15) மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவேண்டியது (லூக். 24: 47) குணப்படாத பாவிகள் பேரில் உயிரோடெழுந்த ரக்ஷகர் எத்தனை ஆசையுள்ளவராய் விளங்குகிறார், தம்முடைய புது ஜீவனையும் அதிகாரத்தையும் வல்லமையையும் அதற்கென்றே உபயோகப்படுத்துகிறார். சகோதரரே, பிறருடைய ஆத்துமாவைக் குறித்து கவலைப்படுகிறீர்களா? கவலையில்லாதிருக்கிறீர்களா?

IV. புதுபெலன் அந்தப் புதுவேலைக்குப் புதுபெலன் வேண்டுமே. 'அவர் பெலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும் தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார். நாங்களும் அவருக்குள் பெலவீனமாயிருந்தும் உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம்' (2கொரி. 13: 4) உயிரோடே எழுந்தருளின நேரமுதல் கிறிஸ்துநாதர் புதுவல்லமையால் நிறைந்தவராக விளங்குகிறார் 'வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது' என்று திருவுளம்பற்றினார், (மத். 28: 18)

மரித்தேன், ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன். 'நான் மரணத்துக்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்' என்று விளம்பரம் செய்கிறார் (வெளி. 1: 19). உன்னத பெலனைக் கொடுக்கிறவராகவும் தம்மைக் காட்டுகிறார். சீஷர்கள் பேரில் ஊதி 'பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று வரம் கொடுக்கிறார். (யோ. 20: 22) 'பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள்' என்று வாக்களிக்கிறார் (அப். 1: 8) 'என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள் சர்ப்பங்களை எடுப்பார்கள்......' என்று வாக்குத்தத்தம் செய்தார். (மாற் 16 17, 18) இவ்விதமாக தாம் அளவற்ற பெலனால் நிறைந்தோடுகூட மற்றவர்களுக்கும் அற்புதமான வல்லமையை அளிக்கிறவராகவும் உயிர்த்தெழுந்தரட்சகர் விளங்குகிறார். அந்த வல்லமையில் மெய் விசுவாசிக்குப் பங்கு உண்டு. அவரோடேகூட எழுந்தேன் ஆனால் நானும் உன்னத பெலனால் நிரப்பப்படலாம், நிரப்பப்படவேண்டும். பாவம் செய்து செய்து, இது என் பெலவீனம் என்று ஜனங்கள் சொல்லுகிறதற்கு முகாந்தரம் என்ன? அவர்கள் இன்னமும் ஆண்டவரோடு உயிர்த்தெழும்பவில்லை. இன்னமும் பாவத்தில் மரித்திருந்து உயிர்ப்பிக்கப்படாதவர்களாய் இருக்கிறார்கள். சகோதரனே, சகோதரியே, அந்தப் பாவத்தை ஜெயிக்க உனக்குப் பெலன் உண்டா? இயேசுவின் சாட்சியாக பெலன் அடைந்தாயா? பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறாயா? பவுல் அப்போஸ்தலனுடைய சாட்சியைக் கேளுங்கள். அவர் பொய்சொல்லி, வஞ்சகம்பண்ணி அநியாயம் செய்து, பின்பு 'இது என் பெலவீனம்' என் சாக்குப்போக்கு சொல்லவில்லை. 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு' என்று உறுதி விசுவாசத்தோடும் தைரியமாகவும் சொல்லுகிறார் (பிலி. 4: 13) என்ன? குடிவெறியை விட்டுவிடப் பெலனுண்டா? ஆம் நான் முற்றிலும் பெலவீனன் என்றாலும், 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் விட்டுவிட எனக்குப் பெலனுண்டு. இந்தப் புதிய ஜீவன், சாயல், ஆவல், பெலன் நம்மிடத்தில் விளங்குகிறதா? இல்லையென்றால் குணப்படாதவர்களாயும் பாவங்களிலே செத்தவர்களாயுமிருக்கிறோம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மகிமையில் நமக்குப் பங்குமில்லை, பாகமுமில்லை. குணப்படாத சிநேகிதரே, காலம் சுருக்கம், ரக்ஷண்ய நாள் கடந்துபோகிறது. பாவத்தில் தூங்க வேண்டாம். தாம்பிரவருணி நதியிலுள்ள மண்டபங்கள் ஒன்றில் வழிப்போக்கன் ஒருவன் பிரயாணத்தால் இளைத்துக் களைத்துப்போய் நித்திரை செய்தான். நதியில் திடீரென்று வெள்ளம் வரும் சாரல்காலம். அவன் படுத்து நித்திரைசெய்த நேரத்துக்குள்ளாக ஆற்றில் பெருவெள்ளம் வந்தது. மண்டபத்தை மூடத்தக்கதான பெருவெள்ளம். நித்திரை மயக்கமாயிருந்த



அவன் வெள்ளம் திடீரென்று வரவே, விழித்துச் செய்வதின்னதென்றறியாமல் வெள்ளத்தால் வாரிக்கொள்ளப்பட்டு மாண்டுபோனான். அவன் புத்தியீனன். 'அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான்'. (நீதி.(29: 1).

## போதனா திருஷ்டாந்த இரத்னக் கோர்வை

### 8. அற்புதங்கள்

ஆலயத்துக்கு ஆராதனைசெய்ய ஜனங்களை அழைக்கும்படி மணி அடிக்கப்படுகிறது. அதுபோல கிறிஸ்துமார்க்கமாகிய நூதன சபைக்கு ஆத்துமாக்களை அழைக்கும்படி பகிரங்கமாய் தேவன் பேசும்சத்தம் அற்புதங்கள் என்று சொல்லவேண்டியது; ஆலயத்தில் ஆராதனைக்கு ஆட்கள் வந்து ஆராதனை ஆரம்பித்தபின் மணிச்சத்தம் நிறுத்தப்படுகிறது. ஒரு குழந்தை நடக்கப்படிக்குமட்டும் தாயின்உதவி அவசியம். பின்பு அவசியமல்லை. ஒரு வீட்டுக்குச்சுவர் கட்டிமுடியுமட்டும் சாரம் அவசியம். பின்பு அவசியமில்லை. இப்படியே கிறிஸ்துமார்க்கத்துக்கு அற்புதங்களுமிருக்கின்றன—தற்சமயம் உலகத்தில் கிறிஸ்தவர்கள் தொகை மற்றெந்த மதஸ்தரையும்விட ஜாஸ்தி. ஆகையால் கிறிஸ்துமார்க்கத்தின விர்த்தியே அற்புதம்.

ஒரு தஸ்தாவேஸ் எழுதி ரிஜிஸ்தர் ஆபீசில் தாக்கலாகி கையொப்பமும் முத்திரையுமவைத்து முடித்தபின்பு தஸ்தாவேஸ் எழுதிக் கையொப்பமிட்ட ஆள் வருஷந்தோறும் அல்லது மாசந்தோறும் ஒரு லாயரிடம் வந்து அதிலுள்ள ஸ்டேற்றுமெண்டுகளைத் திரும்பத் திரும்பச் சொல்லவேண்டியதில்லையே. அதுபோல கிறிஸ்து மார்க்கத்தின் அற்புதங்களும் திரும்பத் திரும்பச் செய்யப்படவேண்டியதில்லை. முன்னமே செய்யப்பட்டு சுவிசேஷத்தில் எழுதிவைத்திருக்கிறவைகள் போதுமானவைகள். ஒரு தோட்டக்காரன் ஒருசெடி அல்லது மரக்கன்றை நட்டு மரமாகும் விஷயத்தில் நடப்பட்டசெடி வேரூன்றி தழைத்து பலப்படுமட்டும் ஒரு தாங்கு தூணை நிறுத்தி தண்ணீர் வார்த்து வருகிறான். மரம் வேரூன்றிப் பலப்பட்டபின் தண்ணீர் ஊற்றுவதை நிறுத்திவிடுவதும் தவிர தாங்கு தூணையும் அகற்றிவிடுகிறான். அதுபோல கிறிஸ்துமார்க்கமாகிய செடி வேரூன்றி பலப்பட்டு மரமாகுமட்டும் கிறிஸ்துநாதரின் சுதாவான போதனையாகிய தண்ணீர் ஊற்றுவதும், தாங்கு தூணாகிய அற்புதம் நடப்பதும் அவசியமாயிருந்தது; ஆனால் இப்போது அப்படி அவசியமில்லை.

## 9. அனுபவசித்தி

அனுபவமில்லாமல் வெறும் அறிவைமாத்திரம் உடைத்தாயிருப்பதைக் குறித்துக் கெர்வங்கொள்வது பிஞ்சிலே பழுக்கத் தொடங்கி உதிர்ந்துபோகிற காய்க்குச் சமானமாயிருக்கிறது.

அனுபவசித்தியடைந்த முதியோர் அனுபவசித்தியில்லாத வாலிபர் பார்வையில் மூடராகக் காணப்படுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட வாலிபர்களில் அநேகர் மூடராயிருக்கிறார்கள் என்னும் விஷயத்தை முதியவர்கள் தங்கள் அனுபவத்தால் அறிந்திருக்கிறார்கள். ஆகையால் முதியோர் இளமையான வாலிபரின் மனோராஜ்யங்களைக் குறித்து ஆச்சரியப்படுகிறதில்லை.

ஒரு குருவானவர் சில வருஷங்களாக கொடோமான வியாதியினால் பீடிக்கப்பட்டு பின்பு சுகமாகி பெலப்பட்டார். அப்போது அவர் சிநேகிதன் ஒருவன் அவரைப் பார்க்கும்படிப்போய அவரைப் பார்த்து 'மரண வாசலிலிருந்து தாங்கள் தூக்கி யெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். என்றாலும் முன்போல பிரசங்கிப்பதற்கேற்ற பெலனும் உற்சாகமுமுண்டாவதற்கு வெகுநாட் செல்லுமே' என்றான். அதற்கு அவர் 'சிநேகிதனே இந்த ஆறுவாரங்களுக்குள் என் அனுபவத்தினால் நானறிந்துகொண்ட தேவசத்தியங்கள் நான் பத்துவருஷங்களாக நடப்பித்துவந்த வேலையின் மூலமாய் முதலாய் எனக்குத் தெரிந்ததில்லை. நான் என் சொந்த புத்தியை தேவசித்தத்துக்கு அடக்கி வைப்பதே சரியென்று இந்த என் அனுபவத்தால் அறிந்துகொண்டேன்' என்று மாறுத்தரம் சொன்னான்.

## 10. அன்பு (நேசம்)

ஆத்துமா முழுவதையும் நடத்துகிற வண்டிக்கு அன்பு என்பதே முதலாவது சக்கரம். மனிதனுடைய சகல நற்கிரியைகளையும் இதுவே நடப்பிக்கிறது.

சபைக்குள்ளே இருக்கவேண்டிய அன்பாகிய இலட்சணம் வானராசிகளுக்குள் ஒன்றுக்கொன்றிருக்கிற கவர்ச்சிபோலிருக்க வேண்டியது. அவ்வித கவர்ச்சியல்லாத பட்சத்தில் முழுவதுமே ஒழுங்கீனமும் கேடுமாகிவிடும்.

சுத்தாங்க அன்பானது மற்றவர்களால் தீமை நேரிட்டபோதிலும் கெட்டுபோகிறதாயிராது. காலாகாலத்துக்கு அவசரமான மழைபெய்துவந்தபோதிலும் புஷ்பங்கள் அதினால் கெட்டுப் போகிறதில்லை.

அன்பாகிய ஒரே ஒரு நூலுக்கு இருக்கத்தக்க அத்தனைபெலன் ஒரு கயிற்றுக்கு அல்லது வடத்துக்கு இருக்காது என்று ஒரு மகான் சொல்லுகிறார். பராக்கிரமம் அநேகத்தின்மேல் ஜெயம் பெறும். தந்திரம் பராக்கிரமத்



தையும் மேற்கொள்ளக்கூடியது. அன்போ சகலத்தையும் ஜெயித்துவிடும். வாஸ்தவத்தில் அன்பே—ஞானம் என்று இன்னொருவர் அபிப்பிராயப்படுகிறார்.

தேவன் பேரில் அன்புகூருவதென்றால் அவரோடு சம்பாஷிப்பதையும் அவரண்டை நெருங்கி சவகாசம் செய்வதையும் அவருக்கடுத்த விஷயத்திலேயே கண்ணும் கருத்துமாயிருப்பதையும் குறிக்கும். கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பதே அன்பின் புஷ்பமாயிருக்கிறது.

தேவன் பேரிலுள்ள அன்பே நமது விருப்பத்துக்கெல்லாம் பொருளாகவும். நமது கிரியைகளுக்கெல்லாம் முடிவாகவும் நமது அபேட்சைக்கெல்லாம் பிரமாணமாகவும் நமது முழு ஆத்துமத்துக்குமுரிய ஒரு சத்தாகவுமிருக்கவேண்டியது.

சிசிலி நாட்டுக்கு அரசனாயிருந்த தயானிஷியு மகா நிஷ்டூரமுள்ள மனிதனாயிருந்தான். அவன் காலத்தில் பிரபலமான கவிராயன் என்று பேர் விளங்கிய பிதியாஸ் என்னும் ஒருவன் தன் சுயதேசமாகிய கிரேக்கு தேசத்தைவிட்டு சிரேக்கியூஸ் என்னும் பட்டணத்தில் குடியிருந்தான்.

நிஷ்டூரனான தயானிஷியு பிதியாஸ் என்ற அக்கவிராயன்பேரில் நிர்நிமித்தமாய் துவேஷங்கொண்டு அவனை குரூரமாய் நிர்ப்பந்திக்கும் நோக்கமாகப் பல இம்சைகள் செய்துவந்ததுமல்லாமல் கடைசியாக அக்கவிராயன்பேரில் மரண தண்டனையும்விதித்து தூக்கிப்போடும்படி நாளும் மணி நேரமும் குறிப்பிட்டிருந்தான். இதண்டனை நிறைவேற்றப்படு முன்னதாக தன் சுயதேசம்போய் திரும்பும்படி தனக்கு உத்தரவுகொடுக்கவேண்டுமென்று மன்றாடினதின்பேரில் குறிப்பிட்டநாளில் குறித்த மணி நேரத்தில் பிதியாஸ்வரத் தவறிவிட்டால் தனக்குப்பதிலாக பிராணாக்கினை யடையும்படி பிணையாக எவராவது ஏற்படக்கூடுமானால் போய்வரலாமென்று குரூரநெஞ்சனான தயானிஷியு சொன்னான். பிதியாஸுக்குதாமான் என்னும் ஒரு சிநேகிதனிருந்தான். அவன் தன் சிநேகிதன் பேரிலுள்ள மாறாத அன்பினால்பொங்கி அவனுக்காகத்தானே பிணைப்பட்டுநின்றான் அப்படியே பிதியாஸ்தன் சுயதேசம்போய் தன் மனைவி மக்களிடம் விடைபெற்றுக்கொண்டுவரும்படி பயணம்புறப்பட்டபின்பு காற்றும் புசலுமடித்து அவன் ஏறிச்சென்ற கப்பல் குறித்த நாளுக்குள்வந்து சேந்துகொள்ளாதோவென்று பயப்படும்படி காரியம் சம்பவித்துவிட்டபடியால் அவனுக்குப்பதிலாக தாமானை தூக்குமரத்தில்போடும்படி தீர்மானித்து தூக்குமரமேடையில் அவனையேற்றி கழுத்தில் கயிறும்போட்டு பலகையைத் தட்டுவதற்கு அரைநிமிஷமாத்திரமிருந்தது. இப்படியிருந்த காட்சியைப்பார்க்க திரளான ஜனங்கள்வந்து கூடி கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும்போது திடீரென்று திரளானகூட்டத்தை நெறித்து நுழைந்து ஓடி

வந்துசாடின ஒரு குதிரையில் சவாரிசெய்து 'திறந்த திறந்த' என்று பெரும் கூச்சலிட்டுக்கொண்டு பிதியான்வந்து சாடித்தன் அருமைச் சிநேகிதன் நின்றயிடத்தில் குதித்து எறி கயிற்றைத் தன் கழுத்தில்போட்டுக் கொண்டான். இந்தமகா ஆச்சரியமான காட்சியைக் கண்ணுற்ற திரள் ஜனங்களும் பிரமித்துக்கொண்டிருக்கையில் மிகக்கன்னெஞ்சனான தயாநீஷியு என்பவனும் இவ்வதிசய சிநேகத்தைக்குறித்துப் பிரமைகொண்டு இரண்டுபேருக்குமே தண்டனையின்றி விடுதலைசெய்துவிட்டான். நாம் சத்துருக்களாயிருக்கையில் நமக்காகத் தமதுயிரைக்கொடுத்த இயேசு நாதரின் அன்பு இதைப்பார்க்கிலும் பேரன்பும், உன்னத அன்புமாயிருக்கிறது.

பாரசீகதேசத்திலுள்ள ஒரு சிற்றூரில் வாலிபனான மகமதியப்பையனொருவனிருந்தான். கூடியவாறு அன்பும் பக்தியுமுள்ளவன். இராக்காலங்களில் எழுந்திருந்து தன் மார்க்கமாகிய மகமதுமார்க்கத்துக் கோரான் புஸ்தகத்தை வாசித்துக்கொண்டிருப்பது வழக்கம். இப்படி ஒருநாள் சாமநேரத்தில் தியானம் பண்ணிக்கொண்டிருக்கும்போது, நற்குணசாலியான அவன் தகப்பனும்பார்த்தான். மகன் தன் தகப்பனைப்பார்த்து 'ஐயா உமது பிள்ளைகளில் மற்றவர்கள்யாவரும் தூங்கிக்கொண்டிருக்கும்போது நான் ஒருவன்மாத்திரம் அல்லாவைத்துதிக்கும்படி விழித்திருக்கிறேன் பாரும்' என்றுசொன்னான் அதற்குத்தகப்பன் 'மகனே உன் சகோதரர்கள் பேரில் குற்றங்காணும்படி நீ விழித்திருப்பதைப் பார்க்கிலும் நீயும் நித்திரைசெய்வதே நலமாயிருக்கும்' என்று விடை பகர்ந்தான். அன்பு தன்னைப் புகழாது என்பது பரிசுத்த வேதசத்தியம்.

D. S.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

325

August 1921. Registered No. M 136

22 OCT 1921 MADRAS

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XXII ஆகஸ்ற்று மீ 1921

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். பிலி. 4: 6, 7.

இந்த வாக்கியத்தில் ஓர் கட்டளையும், ஓர் அட்டவணையும், ஓர் வாக்குத்தத்தமுமிருக்கிறது.

I. கட்டளை. ஒன்றுக்குங் கவலைப்படாதேயுங்கள். மனுஷன் பிறந்ததுமுதல் சிறுபிராயமோ, வாலிபமோ, முதிர்வயதோ எக்காலத்திலும் கல்லறைக்குப் பிரவேசிக்கும் வேளை வரும்பரியந்தம், கவலையாயிரு, ஜாக்கிரதையாயிரு என்கிற வசனம் அவனுக்கு சகஜமாயிருக்கிறது. ஆனால் பவுலப்போஸ்தலனோ 'கவலைப்படாதே, ஒன்றுக்குங் கவலைப்படாதே' என்று சொல்லுகிறார். கவலையாயிருக்கவேண்டியது சில சமயங்களிலும சில விஷயங்களிலும் நியாயந்தான். ஞானமாய், விவேகமாய், பைத்தியக்காரர்போல் நடவாமல், வீண்போக்காமல், டம்டாச்சாரித்தனம செய்யாமலிருக்கவேண்டியதுதான். ஆனால் கவலைகொள்வதோ பாரமாயும், அதிக ஜாக்கிரதையாயிருப்பது ஜாஸ்தி கவலைகொள்வதற்கும் இடமாகி ஜீவியத்தின் காரியாதிகளையும் கெடுத்துப்போடும்.

'ஒன்றுக்குங் கவலைப்படாதேயுங்கள்'. இது ஒரு சட்ட வாக்கியமாகப் பரி. பவுல் சொல்லாமல் கட்டளையாகச் சொல்லுகிறார். கவலைகொள்வது ஞானமில்லாத ஓர் காரியமட்டுமல்ல, அது ஒரு பாவம். மனுஷன் தன் ஜீவியத்தை நடத்தவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிற ஒழுங்குக்கு விரோதம். கோபம், துக்கம் எவ்விதம் மனுஷனுக்கு வேதனையுண்டாக்குகிறதோ

அதே பிரகாரம் கவலையும் வேதனையுள்ளது. கவலையென்பது மற்ற மனுஷரோடு கூட்டுறவாயிருப்பதைக் கெடுக்கிறது. மேலும் பின்வரும் காரியங்களை நினைத்து அதிலிருந்து தனக்குக் கஷ்டத்தை வருவித்துக்கொள்ளுகிறது. 'அந்தந்த நாளுக்கு அதனதன் பாடு போதும்' என்பது அருள்நாதரின் வாக்கு. ஆனால் கவலைகொள்பவனோ 'எனக்கு இந்த நாளுக்குரிய பாடு போதாது. நாளைக்குரிய காரியங்களையும் யோசித்து அதற்குரிய கவலைகளையும் இன்றைக்குரியவைகளோடு சேர்த்துக்கொள்வேன்' என்கிறான்.

கவலையாகிய இந்தச் சாபத்தினின்று விடுதலையாக்க நாம் அனுசரிக்கிற மார்க்கம் கூடாதகா? பரி. பவுல் 'கூடும்' என்கிறார். அவர் தாமும் இவ்வசனங்களை ஓர் சிறைச்சாலைக்குள்ளிருந்து எழுதுகிறார். அவரைக் கவலையும், துக்கமும் உள்ளவராக்கத்தக்க பல காரணங்களுண்டு. ஆனாலும் 'ஒன்றுக்குங் கவலைப்படாதேயுங்கள்' என்று சிறையிருப்பின் நிலைமையிலிருந்து சந்தோஷமாய் எழுதுகிறார். நேரோ ராயனும் கெடுத்துப்போடக்கூடாத சந்தோஷம் அவருக்கிருந்தது. உலகம் கொடுக்கக்கூடாததும் எடுத்துப்போடக்கூடாததுமான சமாதானம் அவருக்கிருந்தபடியால் தாம் கவலைப்படாமல் சந்தோஷப்பட்டது மாத்திரமல்ல, தமது சபையாரும் கவலைப்படாமலிருக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறார்.

II. அட்டவணை. உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். இந்த அட்டவணையில் முதலாவதானது தேவசமுகம். மனதில் கவலை, விசாரம் கொண்டவர்கள் அதை யாரிடமாவதுசொல்லி ஆற்றிக்கொள்ள விரும்புவார்கள். இது இயல்பு. அப்படிச்சொல்வது சரிதான். 'ஆனால் ஏற்ற ஆளிடத்தில் சொல்லவேண்டும். வசனத்தில், தங்கள் கவலைகளைக்குறித்து உங்கள் அயலகத்தானிடத்தில் சொல்லுங்கள், அல்லது குருவானவர் போதகரிடத்தில் சொல்லுங்கள் என்று சொல்லவில்லை. குருவானவர் நமது சிநேகிதன்தான், அவரிடத்தில்சொல்லி ஆலோசிக்கவேண்டிய பல காரியங்கள் உண்டு. ஆனால் கவலையுள்ளவனோ அதைத் தேவனிடத்தில் சொல்லும்படி கட்டளை பெறுகிறான். ஆகையால் சந்தோஷங்கிடைக்கத்தக்க ஏற்ற இடம் தேவனே. இந்த அட்டவணையில் கவனிக்கவேண்டிய இரண்டாவது விஷயம் 'எல்லாவற்றையுங் குறித்துத் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்'. என்பதே. பெரியகாரியங்களைக் குறித்துமட்டும் நாம் இப்படி எண்ணுவோம். ஆனால் 'எல்லாவற்றையுங்குறித்து' என்று வாக்கியம்சொல்லுகிறது. ஐசுவரியவானான ஒருவர் இருந்தார். ஒருநாள் இரவில் அவருடைய வியாபாரசாலையில் நெருப்புப்பற்றி எரிந்து சில மணிநேரத்துக்குள் அவருடைய ஆஸ்தி முழுவதும் அழிந்துபோயிற்று. அவர் மரக்கடை வியாபாரி. ஏராளமான மரங்கள் கடையில் அடுக்கிவைக்



கப்பட்டிருந்தன. நெருப்பில் அவ்வளவும் நாசமாய்ப்போயின. மறுநாள் அவருக்கு அனுதாபங்காட்டும்படி சிநேகிதன் ஒருவர் வந்து, சகோதரனே, நஷ்டத்துக்காக அனுதாபப்படுகிறேன் என்றார். வியாபாரியோ எழுந்திருந்து, தமது கையைநீட்டிக் கைகொடுத்து எல்லாஞ் சரிதான். என் பரமபிதா ஒருக்காலும் தப்பிதமாய்ச்செய்யார், என்றார். பார்த்தீர்களா? கவலைகொண்டு, துக்கம் நிறையக்கூடியவேளையில் அவர் கர்த்தரிடத்தில் தைரியமுள்ளவராயிருந்தாரென்று பார்க்கிறோம். ரகசியமென்ன? நெருப்புப் பற்றியெரிந்து முடிந்ததுமுதல் மறுநாள்காலை போஜனஞ்சாப்பிடும்வரை தமது அறையை அடைத்துக்கொண்டு எல்லாவற்றையும் பரமபிதாவினிடத்தில் தெரிவித்ததினால் தைரியமடைந்தார்.

தென் அமெரிக்காவின் மலைப்பிரதேசத்தில் போடப்பட்டிருக்கிற ரஸ்தாக்களிலெல்லாம் பத்துமைல் தூரமான ஓரிடத்திலுள்ள ரஸ்தா பிரயாணிகளுக்கும் வண்டிகளுக்கும் மெத்தச் சங்கடமானது. அதில் மேடு பள்ளம் அதிகமில்லை. குண்டு குழிகள் அதிகமில்லை. தரை சரிசமமானதுதான் ஆனால் இடைக்கிடையே சிறுசிறு பாறைகள் ரஸ்தாவில் அங்குமிங்கும் எழும்பிக்கொண்டிருக்கும். இந்தப் பத்து மைல் ரஸ்தாவிலுமிருக்கப்பட்ட சொல்லிமுடியாத கஷ்டங்களினால், அந்தப் பத்து மைல் பாதைக்கும் 'கஷ்ட பாதை' (troublesome) என்று பெயர். இந்த பிரகாரம் நமது ஜீவியத்தின் பாதையிலும் நேரிடும் அற்பசொற்ப வருத்தங்களே பெருங் கஷ்டமாகும். இவைகளையும் ஆண்டவரிடத்தில் கொண்டுபோகவேண்டும்.

இந்த அட்டவணையில் மூன்று பாகமுண்டு. முதல் பாகம் ஜெபம் இது தன் அவசரங்களைத் தெரியப்படுத்துவதாம். நமது சொற்ப அவசரங்களையும் குறைவுகளையும் குறித்து ஆண்டவரை நோக்கி ஜெபம்பண்ண வேண்டும். ஜெபத்தினால்தான் நாம் அவைகளை அவரிடத்தில் சொல்லலாம். சிலருக்கு ஜெபம் செய்வது வழக்கமல்ல, ஜெபிக்க அறியாதவர்களாயிருக்கிறார்கள். குடிகாரனான ஒரு மனுஷன் இருந்தான். அவன் ஒருநாள் நன்றாய்க் குடித்து குடிவெறியோடே ஓர் குருவானவர் வீட்டிற்குள் போனான். குருவானவர் வெகுநேரம் அவனுக்குப் புத்திசொல்லிக் கடைசியாய் அவன் அந்தக் குடியை விட்டுவிடும்படி ஏவி அவனை வாக்குக் கொடுக்கும்படி சொன்னார். அப்படியே வாக்களித்துக் கையொப்பமிட்டான். குருவானவர் மறுபடியும் அவனைப் பார்த்து, 'இதை நீ உன் சொந்த பெலத்தால் நிறுத்தமுடியாது. உனக்குத் தேவ ஒத்தாசை வேண்டும். அதற்காக நாமிருவரும் முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணுவோம். நான் முதலில் ஜெபம் செய்தபின் நீயும் உனக்காக ஜெபம்பண்ணு' என்று சொல்லி முழங்கால்படியிட்டார்கள். குருவானவர் அவனுக்காக ஊக்கமாய் ஜெபித்தார். ஜெபித்தபின் சற்றுநேரம் காத்திருந்தார். அவன் ஜெபிக்கவில்லை. மறுபடியும் அவனைப் பார்த்து 'இப்போது ஜெபம்பண்ணு' என்

றார். அவன் ஜெபம் செய்யப்போகிறவன்போல தன் தொண்டையை ஆயத்தப்படுத்தினான். இன்னும் சற்றுநேரம் தாமதித்தும் ஜெபிக்கவில்லை. அப்புறம் அவன் முழங்காலைவிட்டு எழும்பி குருவானவனைப் பார்த்து 'எனக்கு ஜெபம்பண்ண முடியாது, அது எனக்குப் பழக்கமில்லை' என்றான். பார்த்தீர்களா? ஒருபோதும் ஜெபிக்க அறியாத இவன் எப்படிச் சந்தோஷப்படுவான்? எப்படி இவன் தன் அவசரங்களைப் பரமபிதாவுக்குத் தெரிவிப்பான்?

அட்டவணையின் இரண்டாம்பாகம்—வேண்டுதல். இது நாம் மற்றவர்களுக்காகச் செய்யும் விண்ணப்பம். நாம் நம்மையே குறித்துக் கவலைப்படாமல் மற்றவர்களுக்காகக் கவலைப்பட்டால் எத்தனை நன்றாயிருக்கும். மற்றவர்களுடைய காரியங்களைக் குறித்துக் கவனித்ததினாலேயே அநேகருடைய சந்தோஷம் அவர்களைவிட்டு எடுபடுகிறது. மற்றவர்களுக்கிருக்கும் பெரிய துன்பங்களைவிட உன்னுடைய சிறு துன்பத்தைப் பெரிதாய் எண்ணாதே. மற்றவர்களை சந்தோஷப்படுத்துமளவும் உனக்கு சந்தோஷம் கிடைக்கவேகிடையாது. ஓர் ஏழைப்பெண் இருந்தாள். அவளுக்கு இடுப்புக்குக்கீழ் முழுவதும் திமிர்வாதம் உண்டாகிக் கட்டிலிலே படுத்திருப்பாள். ஆனால் அவள் நாள்முழுவதும் தையல் வேலைசெய்வாள் நற்கருணை மேசைக்கு வேண்டிய அலங்காரமான சித்திரத் தையல்வேலை செய்துகொடுப்பாள். ஆலயம் அவளுக்கு மெத்தப் பிரியம். எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பாள். துக்கமாயிருந்ததே கிடையாது. காரணம் என்ன? மற்றவர்களை சந்தோஷப்படுத்தத்தக்க வேலைகள்செய்வதே அவளுக்குப்பிரியம்.

அட்டவணையின் மூன்றாம்பாகம்—ஸ்தோத்திரம். நாம் ஸ்தோத்திரம் செலுத்தத்தக்க பலகாரியங்கள் உண்டு. நம்முடைய குறைவுகள் அதிகம்தான். ஆனாலும் நாம் பெற்றுக்கொண்ட நன்மைகள் அதிலும் அதிகம். பரிசுத்த பவுல் அப்போஸ்தலனைப் பாருங்கள். அவர் சொல்லுகிறார் 'எனக்குச் சத்துருக்கள் அநேகர், கர்த்தர் எனக்கு அனுகூலமான கதவைத் திறந்துவைத்திருக்கிறார், அல்லேலூயா' என்பதே அவருடைய அனுபவத்தின் சாட்சி. இவ்வுலகத்தில் துன்பங்களும் கஷ்டங்களும் தொல்லைகளும் இருக்கிறதினிமித்தம் இளைகரித்துப்போகவேண்டியதில்லை. துன்பங்களின மத்தியில் சந்தோஷப்படுங்கள். நன்றியறிதலுள்ளவர்களாயிருங்கள். சந்தோஷப்படுகிறதினாலும் ஸ்தோத்திரம் செலுத்துகிறதினாலும் நம்மை மேற்கொள்ளத்தக்க துன்பங்களையும் கவலைகளையும் ஜெயிக்கலாம்.

III. வாக்குத்தத்தம். 'எல்லாபுத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்'. எல்லாவற்றையும் தேவன் அறிந்திருக்கிறார்



என்னும் நிச்சயமும், எல்லாவற்றையும் நாம் அவருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம் என்னும் உறுதியும் நமது காரியங்களை லகுவாக்கும். நமது கவலைகளைத் தேவனுக்குத் தெரியப்படுத்தின நிமிஷத்திலேயே தேவனுடைய தூதன் நமக்குச் செய்திகளைக்கொண்டு வருவான். தேவனுக்குத் தெரியும், அவர் என் பரமபிதா, ஆகையால் எனக்கு நேரிட்டிருக்கிற இந்தக் காரியம் எனக்கு விளங்கினாலும் சரி, விளங்காவிட்டாலும் சரி, அது என் நன்மைக்காகவே இருக்கும். ஏனென்றால் 'தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரில் அன்புகூறுகிறவர்கள் எவர்களோ அவர்களுக்குச் சகலமும் நன்மைக்காகவேயிருக்கும்' என்பது வேதசத்தியம். தேவன் நமக்குத் தரும் முதற்றரமான நன்மைகளே நமக்கு வருத்தத்தையுண்டாக்கும்.

ருஷியாவின் வடபாகத்திலுள்ள ஓர் ஊரிலுள்ள ஓர் ஸ்திரீ தன் கைக்குழந்தையை எடுத்துக்கொண்டு ஒருநாள் காலையில் வீட்டைவிட்டுப் புறப்பட்டாள். வழியில் ஓர் வண்டிக்காரனைக் கண்டு தன்னை அடுத்த ஊருக்குக் கொண்டுபோகும்படி கெஞ்சினாள். அந்தஊர் 25 மைல் தூரமுள்ளது. அங்கே அவளுடைய புருஷன் மோசமான வியாதியாய் இருந்தான். வண்டிக்காரன் அவளை ஏற்றிக்கொண்டு கொஞ்சத்தூரம் போனபின் வண்டிக்காரன் திரும்பிப்பார்த்தபோது அந்த ஸ்திரீ தன்னறிவற்ற நிலைமைக்குவரக்கூடியவளாயிருக்கக்கண்டான். குளிரினால் அவள் கைகால்கள் மரத்துப்போகிறவைகளாயிருந்தன. அவன் கேட்ட கேள்விகளுக்கு அவள் உத்தரவு சொல்லவில்லை. அவள் தூங்காமல் விழித்திருக்கும்படி பலபிரயத்தனங்கள் செய்தும் பயனில்லை. அவனுக்கு வேறுவழியொன்றும் தென்படாமல் வண்டியைவிட்டுக் குதித்து, அந்த ஸ்திரீயையும் வண்டியை விட்டிறக்கி, அவள் கையிலிருந்த குழந்தையைப் பலவந்தமாய்ப் பிடுங்கிக்கொண்டு வண்டியில் ஏறி வண்டியை ஓட்டினான். அவள் புத்தி தெளிந்து அந்த மனுஷன் வண்டியின் பின்னால் ஓடிச் சத்தமிட்டு அலறி, 'என் பிள்ளையைத்தா, என் பிள்ளையைத்தா' என்று கூவிக்கொண்டு போனாள். அவளுக்குப் பூரண ஸ்மரணையுண்டாகி, அவள் தூக்கமயக்கம் நின்றுபோயிற்றென்று நிச்சயித்த பின்பு அவளை மறுபடியும் வண்டியில ஏற்றிக்கொண்டு பிள்ளையை அவள் கையில் கொடுத்தான். தன் ஜீவனையும் தன் குழந்தையின் ஜீவனையும் காப்பாற்றும்படி வண்டிக்காரன் இப்படிச் செய்தான் என்பதை அவள் அறிந்துகொண்டாள்.

தேவன் நமது விஷயங்களில் சிலவேளை இப்படிச் செய்கிறதில்லையா? நமக்கு பொக்கிஷமும் அருமையுமானதை நம்மிடத்திலிருந்து பிடுங்குகிறார். நம்மை வெறுமையாக்கவல்ல, நம்மையும் நமக்கருமையானதையும் தற்காக்கவே அப்படிச் செய்கிறார். அவர் கொடுக்கிறது உலகச் சமாதானமல்ல;

தேவன்தாமே அனுபவிக்கிற தம்முடைய சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அருளுகிறார். இது நமது புத்திக்கு எட்டாதது, ஆச்சரியமானது தேவசமாதானம் எவ்வளவென்பது நமக்குத் தெரியாது. விளங்காது; ஆகிலும், நமக்கு விளங்காத அந்தத் தம்முடைய சமாதானத்தையே நமக்குத் தருவேனென்று வாக்களிக்கிறார். 'காத்துக்கொள்ளும்' என்னும் பதம் பட்டாளத்துக்குரியது. அதாவது சமாதானமே யுத்த ஆயுதம் தரித்து நமது சந்தோஷத்தைக் கெடுக்கும் காரியங்களுக்கு விரோதமாய்ப் போராடி நம்முடைய சந்தோஷத்தையும் சமாதானத்தையும் யாரும் பறிக்கொள்ளாதபடி அது காவல்காக்கும் என்பது கருத்து. அதாவது, தேவசேனையே தேவசமாதானம் நம்மை ஆளும்படி நமக்கு உதவிசெய்யும். நாம் இழந்துபோவோமென்று பயப்படத் தேவையில்லை. பாரீஸ் நகரமானது கடந்த பெரிய யுத்தத்தில் பிடிக்கப்படக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. ஜெர்மானியர் பன்னிரண்டு மைல் தூரத்துக்குள் வந்துவிட்டார்கள். பிரான்சுக்காரர் செய்ததென்ன? இரண்டு நாள் இரவில் வெளிச்சம் யாதொன்றுமில்லாமல் பாரீஸ் நகரத்திலுள்ள சகல வண்டிகளையும் சேர்த்து, பட்டணத்திலுள்ள பட்டாளமனைத்தையும் இந்தப் பன்னிரண்டு மைல் தொலை ஒழுங்குபடுத்தி இவ்விதமாய் முன்னணியைப் பெலப்படுத்தினார்கள். சத்துருக்கள் பின்னடைந்தார்கள். தேவனும் இவ்விதமாகவே நமக்கும் செய்கிறார். பரலோக சந்தோஷத்தின் சேனைகள் நாம் போராடுகிற முன்னணியத்தில் நமக்காக வந்து நின்று நமது யுத்தங்களில் ஜெயம் அளிக்கிறது. தேவசமாதானமானது நமது கைகளையும் கால்களையுமல்ல நமது இருதயங்களையும் சிந்தைகளையுமே காத்துக்கொள்ளும். கவலை இருதயத்துக்குரியது. நமது கவலைகளை நமது இருதயத்தை, நினைவை, சிந்தையைவிட்டு அப்புறப்படுத்துவோமானால், நாம் எவ்வளவு சந்தோஷமுள்ளவர்களாயிருப்போம். மேலும் தேவன் நம்மைக் 'கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக்' காத்துக்கொள்ளுகிறார். கிறிஸ்துவுக்குள் நாம் இருக்கிறோம். கிறிஸ்து நம்மைச் சூழ்ந்திருக்கிறார் ஆகவே நம்மைச் சூழ்ந்திருக்கிறவை நமது கவலைகளல்ல, நமது சந்தர்ப்பங்களல்ல, கிறிஸ்துவே நம்மைச் சூழ்ந்திருக்கிறார். நமது சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கெடுக்கும் சத்துரு நம்மைத் தொடான். கிறிஸ்துவண்டை வரும்வரை மும்முரித்து வருவான். அவரைக் கண்டமாத்திரத்தில் விலகிப்போவான். பாறையை மோதியடிக்கும் அலைகள் பாறையைச் சேதப்படுத்தாமல் தாங்களே சிதறிப்போகும்வண்ணம் நமது கவலைகள் நம்மை சேதப்படுத்தக்கூடாதபடி நமது கன்மலையாகிய கிறிஸ்து நம்மைச் சூழ்ந்திருக்கிறார். நாம் அவருக்குள்ளிருக்கிறோம். ஒன்றும் நம்மைச் சேதப்படுத்தாது.

---





## 11. ஆவிக்கடுத்த விஷயத்தில் குருட்டாட்டம்

சத்தியத்தைக்குறித்து அறியாதிருப்பதுதான் ஆவிக்குரிய குருட்டாட்டம். அதுதான் அகந்தையென்று ஒருவர் சொல்லுகிறார். செல்வரான பெற்றாருக்கு அந்தகரான குழந்தைகள் இருந்தால் அவ்வீடு எத்தனை நிர்ப்பந்தமானதென்று சொல்லத்தக்கது. குருடான ஒரு பிள்ளையை தகப்பன் தன் மடியில் வைத்துக்கொண்டும் தாய் கண்தெரியாத தன் பிள்ளைக்குப் பாலூட்டிக்கொண்டிருப்பதும் எவ்வளவோ பரிதாபமாயிருக்குமே. அறிவின்கண் குருடாயிருப்பதோ இதைப்பார்க்கிலும் பரிதாபமான காரியம். எரிகோவுக்கருகிலிருந்த இரண்டு குருடர்களும் ஏசுநாதரைக் கூவியழைத்துத் தட்டுத்தடுமாறி விழுந்து சாடிப்போகிலும் ஜனக்கூட்டத்தை நெருக்கித் தள்ளிக்கொண்டு அவரிடம் வந்து சேர்ந்துவிட்டபடியால் அவர்களின் அறிவாகிய கண் திறந்திருந்ததென்று நிதானித்துக்கொள்ளலாம்.

இரண்டு வகையான குருட்டாட்டமுண்டு. ஒன்று கண் பார்வைக் குறைவு. இன்னொன்று நியாயமான காரியங்களையும் சத்தியமான சங்கதிகளையும் அறிய மனதில்லாமல் கண்ணை மூடிக்கொண்டு பார்க்கமாட்டோமென்று பிடிவாதமாய்ச் சாதிப்பதே. பிந்தினவகைக் குருட்டாட்டமே மகா பயங்கரமானது.

சில மனிதர் தேவ வாக்குத்தத்தங்களை அருமையாக எண்ணுகிறதில்லை. கிறிஸ்துநாதர்பேரில் களிகூறுகிறதில்லை, மீட்பின் மகிமையைக் குறித்து ஆனந்தமடைகிறதில்லை. பாவத்தைப்பற்றிப் பேசும்போது அவர்கள் பரியாசம்பண்ணுகிறார்கள். தேவ எச்சரிப்பை இகழ்ந்து பேசுகிறார்கள். அப்படியே கிறிஸ்துநாதரின் திரு இரத்தத்தைக் குறித்தும் இலேசாக எண்ணுகிறார்கள். இதற்குக் காரணமென்ன? அவர்கள் குருடாயிருக்கிறார்கள். வேதமும் அப்படியே சாட்சியிடுகிறது. நித்தட்டைக் கண்ணாடியானது சூரியனுடைய அழகிய கிரணங்களை ஒன்றுகச் சேர்த்துக் காண்பித்தபோதிலும் குருட்டாட்டமுள்ள கண் அக்காட்சியைக் காண்கிறதில்லை. சாத்தம் என்னும் பேருடைய பிரபு ஒரு தடவை ஆலயத்துக்குப் போயிருந்தார். அங்கு செசில் என்னும் ஒரு போதகர் பிரசங்கம் செய்தார். செசில் ஒரு பக்திமான். இவரைப் பார்த்து 'ஆவியின் வல்லமையைக் குறித்து தாம் பிரசங்கித்த விஷயம் எனக்கு விளங்குகிறதில்லை' என்று சாத்தம் சொன்னார். அதற்குப் போதகர் வாசிப்பறியாத பெண்பிள்ளைகளும் சிறு குழந்தைகளும்கூட இதையறிந்து சந்தோஷப்படுகிறார்கள். உமக்கு ஏன் விளங்குகிறதில்லை? உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது' என்று மாறுத்தரம் சொன்னார்.

## 12. ஆவிக்குரிய ஒளி.

கீழ் திசையிலே மேகங்களெல்லாம் விலகி மாசு மறுவில்லாதிருந்த போதிலும், சூரியோதயத்தின் மாட்சிமையை எல்லாருடைய கண்களும் பார்க்கமுடியாது. அதற்கு அவசியமானது கண் பார்வைதான். அப்படியே இருதயமாகிய கண் ஏற்றவகையாய் ஆயத்தப்பட்டு நீதியின் சூரியனாகிய ஏசுநாதரைப் பார்ப்பதற்கு பரிசுத்தாவியின் ஒத்தாசை அவசியமானது. யுத்தி புத்தியினால் அல்லது சாமர்த்தியத்தினாலிது ஆகத்தக்கதில்லை, ஆவியின் வல்லமையினாலேயே ஆகவேண்டியது.

இரவில் பார்க்கக்கூடியதைவிட பகற்காலத்தில் கண்பார்வைக் குறைவுள்ளவர்கள் சற்று நன்றாய்ப் பார்க்கக்கூடும். ஆனால் கண் முற்றிலுமே தெரியாதவர்கள் பகற்காலத்திலுங்கூட பார்க்கமுடியாது. இப்படியே படிப்பறியாத பேதைகள் முதலாய் ஆவிக்குரிய சத்தியங்களை பகற்காலத்தில் நன்றாய்ப் பார்க்கக்கூடிய மனிதரைப்போல, அறிந்துகொள்ளுகிறார்கள். எவ்வளவு உலகக் கல்வியறிவுதானிருந்தபோதிலும், ஆவிக்குரிய விஷயத்தில், உலக ஞானிகளான அநேகர் இராவில் தடவிக்கொண்டு திரிகிறவர்கள்போல அந்தகாரிருக்கிறார்கள். கிறிஸ்தவனிடத்திலிருக்கவேண்டிய ஒளி தனக்குமாத்திரம் பிரகாசத்தைக்கொடுக்கிற மேசை விளக்கைப்போலிருக்கக்கூடாது. மற்ற மனிதர் வழிதவறி மோசத்துக்குள்ளாகாதபடிக்கு பிரகாசம் கொடுத்துக்கொண்டிருக்கிற தீபஸ்தம்பத்து விளக்கைப்போலிருக்கவேண்டியது. லற்றிமர் ஒரு தடவை ரிட்லி பென்டவரைப் பார்த்து 'ரிட்லியே தைரியமாயிரும், புருஷத்துவமுடையவராயிரும், இன்று நாம் பொருத்துகிற தீபமானது இங்கிலாந்து தேசத்தில் ஒருபோதும் அணைந்துபோகமாட்டாது என்று கர்த்தருடைய கிருபையை முன்னிட்டு நம்புகிறேன்' என்றார்.

தீபஸ்தம்பத்தில் தீபம் வைக்கும் வேலையிலிருந்த ஒரு மனிதன் தன்னுடைய பொறுப்பிலிருந்த ஸ்தம்ப விளக்கு எதுகாரணத்தினாலோ பழுதாகிவிட்டதினால், சுற்றிக்கொண்டுவரவில்லையென்று கண்டான். நடுச் சமுத்திரத்திலிருந்த அத்தீபம் அணைந்துபோய்விட்டால் சமுத்திர யாத்திரை செய்கிறவர்கள் இராவில் திசைதப்பி மோசத்துக்குள்ளாகவேண்டியதிருக்குமென்று நினைத்து, அந்த விளக்கை இராமுழுதும் தன் சொந்தக் கையினாலே சுற்றிக்கொண்டிருக்க நேரிட்டது. இதைக் கவனித்த இன்னொரு மனிதன், 'ஒருநாள் தீபம் அணைந்துபோனால் என்ன? நீரேன் உமது கைகடுக்க இப்படிச்செய்கிறீர்' என்று விசாரித்தான். அதற்கவன் 'நூற்றுக் கணக்கான கப்பல்கள் சமுத்திர கோஷ்டத்திலும் புசலுக்குள்ளும் அகப்பட்டு இருட்டில் திசைதப்பித் திரிகையில் எத்தனையோ மோசம் நேரிட்டுவிடுமே என்றான்.



இருட்டான அறையில் உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருக்க நேரிட்டால் சன்னலைத் திறந்துவைத்து அதின்மூலமாய் வருகிற வெளிச்சத்தில் வாசிக்கும்படி நாம் ஆசைப்படுவதுண்டு. அதுபோல பிரகாசமுள்ள தீபமாகிய பரிசுத்த வேத வசனமாகிய வெளிச்சத்திலே நடக்கும்படி ஒவ்வொருவரும் கரிசனையுடையவர்களாயிருக்கவேண்டும்.

D. S.

---

## 'கொடிய அருவருப்புகள்' எசேக். 8: 9.

கர்த்தருடைய ஜனங்கள் செய்கிற அருவருப்பான பாவங்கள். 'அருவருப்புகள்' என்னும் பதம் இந்த அதிகாரத்திலேயே ஐந்து விசை சொல்லப்படுகிறது. வ. 6, 9, 13, 15, 17.

கர்த்தருடைய தேவாலயத்தில் கண்ட அருவருப்புகள். உலகத்தில் அல்ல, சபையிலே நடந்த காரியம். எசேக்கியேல் தீர்க்கதரிசி தேவாவியால் எருசலேம் தேவாலயத்துக்குக் கொண்டுபோகப்பட்டான். அதிக அருவருப்பான நாலு காரியங்களை அங்கே கண்டான். பரிசுத்தமான ஆலயம் என்று எண்ணப்பட்ட அந்த ஸ்தலத்தில கொடிய அருவருப்புகளைக் கண்டு துக்கப்பட்டான். (1) தேவாலயத்தின் வாசலில் ஒரு பெரிய விக்கிரகம பலிபீடத்துக்கு எதிரே வாசலில நின்றது. எரிச்சலுண்டாக்கும் விக்கிரகம். தேவனுக்கு விசனமூட்டும அருவருப்பான விக்கிரகம். அந்த விக்கிரகம் அங்கே இருக்குமட்டும் பலிபீடத்தினாலே பிரயோஜனம என்ன? தேவாலயத்தினாலும பிரயோஜனம் என்ன? (2) அப்புறம் பிராகாரத்தின் சுவரிலே ஒரு துவாரம். அந்தத் துவாரத்தால் கையை விட்டபோது அந்தரங்கமான வாசல் தெரிந்தது. உள்ளேபோய்ப் பார்க்கும்போது அறைவீடு, அந்தரங்கமான ஓர் இடம். அதின் சுவரில் சகலவித ஊரும்பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்கள் சுற்றிலும் சித்திரந்திரப்பட்டிருந்தன. எழுபது மூப்பர் தூபகலசங்களைப் பிடித்துக்கொண்டு அந்தச் சுரூபங்களுக்குத் தூபங்காட்டினார்கள. (3) தேவாலயத்து வடக்கு வாசலுக்குப் போனான. அங்கே ஸ்திரீகள் அங்கே அழுது கொண்டிருந்தார்கள. தங்கள் பாவத்துக்காக அல்ல, தம்மூசுக்காகக் கண்ணீர்விட்டார்கள். தம்மூசு என்றால துன்மார்க்கமாய் நடந்து அப்புறம் செத்துப்போன ஒரு மனுஷன். விபசாரக்காரன. அவன் காட்டுப்பன்றியாலே செத்துப்போய் பின்பு ஒரு தெய்வமாகக் கொண்டாடப்பட்டான். (4) மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும நடுவே ஆசாரியர்கள் நின்று ஜெபம் செய்யவேண்டிய இடத்தில் 25 மனிதர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குத் தங்கள் முதுகைக் காட்டிக் கீழ்த்திசையை நோக்கி சூரியனை நமஸ்கரித்துக் கொண்டிருந்தார்கள். தேவாலயத்தின் கேவலமான நிலைமையைப் பார்த்

தீர்களா? (1) வாசலில் அவலட்சணமான ஓர் விக்கிரகம். (2) உள்ளே அந்தரங்கமான அருவருப்புகள். (3) வடவாசலில் பாவத்தை நேசிக்கிற சுபாவம். (4) பலிபீடத்தில் தேவனுக்கு முதுகைக் காட்டின நாணம் இது பாவியினுடைய இருதயத்தின் படம். நமமுடைய இருதயம் தேவனுடைய ஆலயமாயிருக்கவேண்டியது. சீர்கெட்ட நிலைமையைப் பாருங்கள்.

1. எரிச்சல் உண்டாக்குகிற விக்கிரகம்—பெருமை. வாசலில் நிற்கிறது. தேவன் உள்ளே வருகிறதற்குப் பெரிய தடை. காவலாளன் போல பிசாசு அதை வாசலில் நிறுத்தியிருக்கிறான். அது ஒரு விக்கிரகம். மனுஷர் அதைக் கும்பிடுகிறார்கள். தேவனைவிடத் தங்கள் சொந்த கனத்தையும் பெருமையையும் மதிக்கிறார்கள். கான எனகிற ஆணவம், அகங்காரம். அந்தப் பெருமையை விட்டுவிடவேண்டும். அது நீங்குமட்டும் தேவன் வரமாட்டார். ரட்சிப்பும் கிடையாது.

2. அந்தரங்க ஸ்தலத்துப் பிராணிகள்—அந்தரங்க பாவங்கள் உன் ஆத்துமாவில் மறைவிடங்களுண்டு. அவைகளைத் திறந்து பார்க்க எனனால முடியாது. தேவனே ஊடுருவிப் பார்க்கிறார். அசுத்தமான மிருகங்கள், அருவருப்பான பூச்சிகள் அங்கேயுண்டு. 'அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம நித்தமும் பொல்லாததே (ஆதி. 6: 5). வெளிப் பார்வைக்கு எல்லாம் சோதனை, உள்ளேயோ அக்கிரமம். ஐயா! மனிதனுடைய இருதயம் அசுத்தமும அருவருப்புமுள்ள பறவைகளின் இருப்பிடம் கள்ளர் குகை (எரேமி. 7: 11), கூடு (வெளி. 18: 2). அந்தரங்கத்தைப் பார்த்தால பேபோகள்ளது. அசுத்தமாகிய பன்றிகள், வஞ்சனையாகிய பாம்புகள், பொருளாசையாகிய பருந்துகள், துர்ச்சையாகிய புழுக்கள்.

3. தம்மூசின் வணக்கம்—உலக நேசம். பாவமுள்ள ஸ்திரியைப் போல இயேசுவானவருடைய பாதத்தில் கண்ணீர்விடவேண்டிய பெண்கள் இதோ! பாவத்தை நேசித்து உலகத்தைப் பின்பற்றி அதின் ஆசாபாசங்களில சிக்கிக்கொள்ளுகிறார்கள். தேவன்பேரில அன்பை வைக்கவேண்டியதிருக்க பாவத்தின்பேரிலும் உலகத்தின்பேரிலும் அதை வைக்கிறோம். உலகத்திலும உலகத்திலுள்ளவைகளிலும அன்பு கூராதிருங்கள் (1 யோ. 2: 15).

4. தேவனுக்கு முதுகைக்காட்டுதல்—கீழ்ப்படியாமை. சுயாதீன சித்தமுண்டு. அதினாலே மனிதன தேவனைநம்பி அவருடைய உத்தரவின் படி நடக்கவேண்டியதிருக்க அப்படி நடக்கமாட்டேன் என்று தீர்மானித்து தேவனுக்கு முதுகைக்காட்டிக் கலகம் செய்கிறான்.



## பரி: பவுலின் பழைய ஜீவியம்

1. அவருடைய குலம். (அப். 21: 39; 22: 3). பிறப்பின்படி யூதன். பென்யமீன் கோத்திரத்தான். அவருடைய பெற்றோர் பெயர் சொல்லப்படவில்லை ஒருவேளை கிறிஸ்தவனானபின் அவரைத் தங்கள் குடும்பத்தை விட்டுத் தள்ளிவிட்டார்களோ? பிறந்தகாலம் தெரியாது. ஆனால் கி. மு. 4–க்கும் கி. பி. 4–க்கும் இடையிலிருக்கலாம். அவருடைய எபிரேயப் பெயர் சவுல். இவர் பெயரையுடைய இஸ்ரவேலின் முதல் அரசனும் பென்யமீன் கோத்திரத்தான். 'நான் யூதன்' என்று பிற்காலத்தில் பெருமையாய்ப் பேசிக்கொள்வார். அதினாலே யூதரோடு கலந்துகொள்ளவும், ஜெப ஆலயங்களில பேசவும் இடமிருந்தது.

2. அவர் பிறந்த இடம். (அப். 21: 39; 22: 3). தர்சுப்பட்டணம் அக்காலத்தில் வியாபாரம் கல்வி இவற்றிற்கு மத்தியஸ்தானம். நாணயங்களில் 'கிழக்கத்தித்தலைநகர்' (Metropolis of the East] என்று அதற்குப் பெயரிட்டிருந்தது. உள்நாட்டிலிருந்துவரும் மர வியாபாரம், வெள்ளாட்டு ரோமம் எல்லாம் இப்பட்டணத்துவழியாய் ஏற்றுமதியாயின. இப்பட்டணத்திலுள்ள சுதேசவாசிகள் சிலிசியர், வியாபாரிகள் கிரேக்கர், அதிகாரிகள் ரோமர். இது சுய அதிகாரமுள்ள ஓர் பட்டணம். அத்தேனே அலெக்சந்திரியா இவ்விடங்களிலுள்ளவைகளைவிடச் சற்றுக்குறைவான ஓர் சர்வகலாசாலையுமிருந்தது. ஆகவே பரி: பவுல் யூதமார்க்கத்தில் பிறந்து கிரேக்கபழக்க வழக்கங்களில் வளர்ந்து, ரோம ராஜாங்கமுறைகளில் தேர்ந்தவராயிருந்தார். பட்டணவாசியென்பது அவருடைய வேலைகளிலும் நிருபங்களிலும் விளங்குகிறது. அதினாலே பற்பல ஜாதியாரோடு பழகவும் அவர்களுடைய பழக்கவழக்கங்களுக்குத் தக்கதாக நடந்துகொள்ளவும் கூடியவராயிருந்தார். நாகரீகம், வியாபாரம், கல்வி, ராஜாங்கம இவைகளுள்ள பட்டணங்களிலேயே அதிகமாய் வேலைசெய்தார். அவருடைய திருஷ்டாந்தங்கள் பட்டணத்துக்குரியவைகளாகவேயிருந்தன.

3. அவருடைய சலாக்கியம். (அப். 21: 39; 22: 28). ரோமசலாக்கியம் பிறப்பினால், அல்லது பணத்தால் கிடைக்கிறது. அல்லது அது ஓர் ஈவாகவுமிருக்கும். பரி: பவுலின் தகப்பன் அல்லது முன்னோருக்கு எப்படிக்கிடைத்ததென்று தெரியாது. பரி. பவுல் தமது சொந்தப்பட்டணத்தைக்குறித்தும் தமது ரோமசலாக்கியத்தைக் குறித்தும் மேன்மைபாராட்டினார். அது அவருக்குப் புகழ்ச்சியாகவும் பிரயோஜனமாகவும் இருந்தது.

4. அவருடைய கல்வி (அப். 22: 3; 2 தீமோ. 3: 14). யூதப் பிள்ளைகளுக்குரிய பாடங்கள் இவருக்கும் கிடைத்தன. தேவனைப்பற்றிய சரித்திரம், அவர் யூத ஜனங்களை நடத்தினவிதம், பழைய ஏற்பாட்டாகமம்

களில் சில பாகங்களை மனப்பாடம்பண்ணுதல் ஆகிய பாடங்கள் இவருக்கும் கிடைத்தன. அதன்பின் ஜெப ஆலயப் பள்ளிக்கூடத்துக்குப்போய் அங்கே எழுத வாசிக்கக் கற்று அப்புறம் எருசலேமிலுள்ள சர்வகலா சாலைக்கு அனுப்பப்பட்டார். எபிரேய வேதாகமமே அவர் படித்த புஸ்தகம். கமாலியேலின் கீழ் அவர் வேதவாக்கியங்களை மனப்பாடம்பண்ணி அவைகளின் வியாக்கியானத்தைக் கற்றுக்கொண்டார். கடைசியாக இவரும் ஓர் போதகரானார். இவ்விதக் கல்வியால் பழைய ஏற்பாட்டாகமங்களில் தேர்ச்சியும், அவைகளைப்பற்றிய வாஞ்சையும் வைராக்கியமும், ரபிகளின் போதனை முறைகளில் பாண்டித்தியமும் உண்டாயின. நன்றாய்ப் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டார். எபிரேயு, அரமெயிக், கிரேக்கு இப் பாஷைகளிலும் தேர்ச்சியடைந்தார். சுவிசேஷ ஊழியத்தில் இவைகளெல்லாம் அவருக்குப் பிரயோஜனமாயிருந்தன.

5. அவருடைய தூணிசயம் (அப். 22: 3). தேவனைப்பற்றிய வைராக்கியம் அவருக்கிருந்தது. அதைக் குறித்து மேன்மைபாராட்டினார். உத்தம மனச்சாட்சியிருந்தது. மார்க்க பக்தியுமிருந்தது. பூரண அறிவில்லாத வைராக்கியம். மேசியாவாகிய இயேசுவைப்பற்றிய அறிவு உண்டாகவில்லை. தீமோத்தேயுவை ரட்சப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கின பரிசுத்த வேத எழுத்துக்கள் அவனுடைய கிறிஸ்தவ தாயும் பாட்டியும் போதித்தவண்ணம பரி. பவுலுக்குப் போதிக்கப்படவில்லை.

---

## புஸ்தக அறிவிப்பு

திருநெல்வேலி **C. M. S.** நூற்றாண்டு சரித்திர சங்கீத ஜாவளி என்ற நூலின் முதலாம்பாகம் அடியிற்கண்ட விலாசதாரால் இயற்றப்பட்டு வெளிவந்திருக்கிறது. இதில் நூறு வருஷங்களாய் C. M. S. சங்கத்தார் செய்துவந்த ஊழியத்தால் உண்டான மாட்சிமையான சலாக்கியங்களும், 2 தடவையாகப் பாளையங்கோட்டையில் கொண்டாடின நூற்றாண்டுற்சவ வைபவங்களும், திருநெல்வேலியில் கிறிஸ்துமார்க்கம் ஆரம்பமான சரித்திரமும், கனம் ரேனியஸ் ஐயரவர்கள் சரித்திர சம்பவங்களும் யாவருக்கும் தெரியக்கூடிய இராகங்களாலமைந்த பாடல்களால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

பிரதி ஒன்றுக்கு விலை அணா 1½. ஒரு டசனுக்கு விலை ஒரு ரூபாய்.

J. PONNUSWAMY,
*C. M. S. Catechist, Palamcottah*

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.



7 JAN 1922
162002
600 003

October, 1921. Registered No. M. 136.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

Vol. XXII அக்டோபர்மீ 1921

## 'விசுவாசத்தினாலே பாவமன்னிப்பும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரமும்'. அப். 26: 18

மனுஷன் தனக்குத் தேவையானதையெல்லாம் விசுவாசத்தினாலே பெறலாம் என்பது வேதப்பிரமாணம். இந்த வசனத்தில் நமக்குத் தேவையானவைகளின் மொத்தப்பொருளையும் அதைப்பெறும் வகையையும் சொல்லியிருக்கிறது. 'உனக்குத் தேவையானது என்ன'? என்று யாராவது என்னிடத்தில் கேட்டால் 'பாவமன்னிப்பும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரமுமே' என்று உத்தரவு சொல்லுவேன். இவைகளைப் பெறுவது எப்படி? என்ற கேள்விக்கு 'என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பெறலாம்' என்று யேசு சொல்லுகிறார்.

1. விசுவாசத்தால் பாவமன்னிப்பு. யேசு எல்லா மனுஷருக்காகவும் மரித்தார். ஆதலால் எனக்காகவும் அவரே மரித்து மன்னிப்பை உண்டாக்கினார் என்று விசுவாசிப்பது மிகவும் அவசியம். ஆனாலும் எல்லாருக்காகவும் அவர் மரித்ததுண்டானால் நியாயத்தீர்ப்பு நாளில் நரகத்துக்குப் போவாரில்லையோ? என்று ஒரு கேள்வி வருகிறது. இதற்கு உத்தரவு விசுவாசித்தவர்கள் இரட்சிப்பைப் பெறுவார்கள் என்பதே. அப்படியானால் எல்லாருக்காகவும் அவர் மரித்ததின் அர்த்தம் என்ன? விசுவாசமாவது என்ன? எல்லாருக்காகவும் அவர் மரித்தது தாயானவள் வியாதிப்பாயிருக்கிற குழந்தைக்காக மருந்து சாப்பிட்டது போன்ற செய்கை. அமுதை உண்கிற குழந்தைகள் மாத்திரமே சுகமடைவார்கள். அதுபோல விசுவாசிக்கிறவர்கள் மாத்திரமே அவருடைய புண்ணியபலனைப் பெறுவார்கள்.

அந்த விசுவாசமாவது என்ன? நமக்குப் புத்தி இருக்கிறபடியால் அவர் மரித்த காரணத்தை எவ்வளவோ உணர்ந்து என் பாவம் அவர் மரணத்தால் நீங்கிப்போயிற்று என்று நிச்சயப்படுத்தும் விசுவாசம். இனி நான் பாவஞ்செய்யச் சம்மதத்தால் அது அவரை மறுபடியும் பாடுகளுக்குள்ளாக்க

குவது போலிருக்கும் (எபி. 6: 6) என்பதை உணர்ந்து பாவத்தைவிட்டுப் பூரணமாய் மனந்திரும்பி அவரை விசுவாசிக்கிறவனே பாவமன்னிப்பைப் பெற்றிருக்கிறான்.

2. விசுவாசத்தினாலே பரிசுத்தம். இந்த விஷயத்திலும் சிலர் பெரிய தப்பிதம் செய்கிறார்கள். தங்களிடத்தில் பாவம் அதிகம் இருந்தும் அதை உணராமல் 'என்னிடத்தில் பாவம் இல்லை என்றும், இயேசு என்னை முழுதும் பரிசுத்தமாக்கிவிட்டார்' என்றும் மனோபாவனை பண்ணிக்கொள்ளுகிறார்கள். இது பெரிய மோசம்.

'பரிசுத்தம்' என்ற வார்த்தைக்கு 'பிரித்தெடுத்தல்' என்று அர்த்தம் இயேசுவுக்காக மாத்திரமே பிழைப்பேன், உழைப்பேன் என்று தன்னைப் பிரித்தெடுத்துக்கொள்ளுதலும் அது நிறைவேறப்பெறுவதுமே பரிசுத்தம் ஆதலால்:—

முதலாவது மேலே நாம் கவனித்தபடி இயேசு எனக்காக மரித்தார் என்ற சத்தியத்தை தியானிக்கும்போது பாவமென்று நான் அறிந்திருக்கிற எல்லாவற்றையும் வெறுத்துச் சன்மார்க்கமாய் ஜீவிக்கிறேன் இது பரிசுத்தமாகுதலின் முதற்பங்கு.

இரண்டாவது தேவனுக்கேற்ற சன்மார்க்கம் எது என்று அறியும்படி நான் என் மனதையும் மற்றவர்கள் போதகத்தையும் கவனியாமல் இயேசுவின் சித்தமாகிய திருவசனத்தையே கவனித்து அதற்கேற்றதாக என் நடக்கையைச் சீர்ப்படுத்துகிறேன்.

மூன்றாவது, முந்தின இரண்டு காரியங்களிலும் நான் முயற்சியாயிருக்கையில் இதுவரையும் என் பக்கமாயிருந்து கிரியைசெய்த ஆவியானவர் எனக்குள்ளேவந்து வசித்து என்னில் மறுபிறப்பின் ஜீவியம் வளரும்படி செய்கிறபடியால் அவருடைய போதகத்தினாலும் வல்லமையினாலும் என் பரிசுத்தம் நாளடைவில் வளருகிறது. இதுவே பரிசுத்தமாகுதலின் மூன்றாம் பங்கு.

தேவன் ஒரு ஆத்துமாவில் இரட்சிப்பின் கிரியை தொடங்கினவுடனே 'கிறிஸ்துவுக்குள்' அவர் அவனைக் காண்கிறபடியால் அவன் ஜீவியத்திலிருக்கிற பாவங்களை அவர் அவனுக்குகேடுண்டாக நினையாமல் அவன் பரிசுத்தமாக்கப்பட்டவன் என்று எண்ணுகிறார். இது நமக்குப் பெரிய ஆறுதல். அப். 15: 9. மேலேகாட்டிய மூன்று காரியங்களும் நம்முடைய முயற்சிக்குச் சம்பந்தப்பட்டவைகளாயிருப்பதால் 'கிரியைகளினாலல்ல, விசுவாசத்தினாலே' என்று அப்போஸ்தலன் போதிப்பதற்கு விரோதமாயிருக்கிறதென்று சிலர் நினைக்கலாம். ஆனாலும் நான் வேதத்திற்கு விரோதமாய்ப் பேசவில்லை. நம்முடைய முயற்சியால் நமக்கு இரட்சிப்பு உண்



டாகாதென்பது வாஸ்தவம்தான். விசேஷமாய் (1) நம்முடைய நற்கிரியைகளெல்லாம் அவராலே உண்டாகிறது நமக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை. (2) நம்முடைய நீதியைவிடப் பாவமே அதிகம். 'அன்பு கூருவாயாக' என்கிற பிரமாணத்தில் எந்தப் பாகத்தை நிறைவேற்றுகிறோம்? (3) நம்முடைய விசுவாசமும் தேவனாலேயே உண்டாயிற்று. ஆதலால் முயற்சியாலல்ல, விசுவாசத்தால் பிழைக்கிறோம்.

ஆனாலும் முயற்சியாகிய கிரியை நமக்கு அவசியம்தான். சொந்தக் கிரியைதான் ஆகாது தேவனுடைய ஜீவனால் நாம் செய்யும் கிரியைகள் விசுவாசத்தின் ஓர் பாகமாகவே இருக்கிறது' இவைகள் இல்லாவிட்டால் விசுவாசம் செத்துப்போம். இதை இன்னும் விளக்கிக்காட்டுகிறேன் நாடோடிய ஜீவியத்தில் பெரும்பாலும் விசுவாசத்தினாலேயே பிழைக்கிறோம். அனுபவத்தைப் பார்ப்பதினால் விசுவாசம் உண்டாகிறது. நெல் விளையும் என்கிற விசுவாசத்தோடு விதைக்கிறோம். உயிர் பிழைக்குமென்று நம்பி மருந்து உண்கிறோம். சம்பளம் கிடைக்குமென்று விசுவாசத்தோடு வேலை செய்கிறோம். மற்றவைகளும் இப்படியே.

அன்றாடகம் உலகத்துக் கடுத்தவைகளில் நமது விசுவாசம் நமது முயற்சிகளுக்குக் காரணமாயிருப்பதுபோல இரட்சிப்பின் விஷயத்திலும் விசுவாசமே முயற்சிக்குப் பலத்த காரணமாயிருக்கவேண்டும். இந்தக் கருத்தின்படி 'இயேசுவை விசுவாசிக்கிறவன் நித்திய ஜீவனைப் பெறுவான்' என்பதின் அர்த்தம் வேறெந்த விஷயத்தையும் ஜீவியத்துக்கு நோக்கமாய்க் கொண்டிராமல் இயேசுவுக்கு ஏற்ற விசுவாச முயற்சியிலேயே ஜாக்கிரதையாயிருக்கிறவன் இரட்சிப்படைவான் என்பதே. தேவனுக்கேற்ற மனந்திரும்புதல் இயேசுவின் கட்டளைகளுக்கும், ஜெபதோத்திர விதிகளுக்கும் முழு இருதயத்தோடும் கீழ்ப்படிதல், குறிக்கப்பட்ட பாவமில்லாத எந்த வேலையையும் ஜாக்கிரதையாய்ச் செய்தல் ஆகிய இவைகளே இயேசுவுக்கு உகந்தவைகள். ஆதலால் இவைகளில் நிலைத்திருப்பதுதான் இயேசுவை விசுவாசிப்பதின் பொருள். நமது பிரசங்கவாக்கியத்தின் பொருளும் இதுவே.

நாம் இப்படி முயற்சிசெய்து வருங்காலத்தில் நம்முடைய நற்கிரியைகள் நம்முடையவைகளல்ல தேவனாலுண்டாகிறவைகளென்றும் இக்காலத்திலும் நம்மிடத்தில் காணப்படுகிற ஏராளமான பாவங்களை இயேசுவானவர் மன்னித்து நம்மை மோட்சத்தில் சேர்த்துக்கொள்வார் என்றும் நாம் விசுவாசிக்கவேண்டியது தீராத அவசியமாயிருப்பதினிமித்தம், கிரியைகளினாலல்ல விசுவாசத்தினாலே என்ற சத்தியத்தைப் பவுல் அப்போஸ்தலன் மிகவும் அழுத்திப் பேசுகிறார்.

## விசுவாசத்தின் பிரயோகம். எபி. 11.

எல்லாப் பெரிய காரியங்களும் விசுவாசத்தினாலேயே நடக்கிறது. இந்த அதிகாரத்தில் விசுவாசத்தினாலே நடந்த அநேக ஆச்சரியமான காரியங்களைச் சொல்லியிருக்கிறது. விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று நமது கர்த்தரும் சொல்லியிருக்கிறார். மாற். 9: 23. அதுமாத்திரமல்ல விசுவாசத்தினால் வராத யாவும் பாவமாயிருக்கிறது என்பதும் கிறிஸ்துமார்க்கத்தின் போதனை. ரோ. 14: 23. ஆதலால் நாம் செய்யவேண்டியது என்ன? விசுவாசத்தில் தேவன் நமக்குப் பகிர்ந்த அளவை எப்படியாவது பெற்று அதினாலே செய்யவேண்டிய எல்லாக் கிரியைகளையும் செய்துதீர்ப்பதுதான் அவசியம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு பாவமன்னிப்பும் நித்திய ஜீவனாகிய சுதந்தரமும் முக்கியமாயிருக்கிறது. இவைகளை விசுவாசத்தினால் பெறுவதைக்குறித்து முந்தின பிரசங்கத்தில் சொன்னேன். இப்பொழுது அவைகளைக் குறித்த என் அனுபவத்தில் கொஞ்சம் சொல்லுகிறேன்.

1. மனோபாவனைகளெல்லாம் மெய் விசுவாசமல்ல. ஒருவன் பாவமன்னிப்பையும் பரிசுத்த ஆவியின் ஈவையும் பெறாமலிருக்கையில் இவைகளைப் பெற்றுக்கொண்டேன் என்று நினைத்துக்கொள்வது மனோபாவனை. உள்ளபடியே இவைகளைப் பெற்றுக்கொண்டவன் பெற்றுக்கொண்டதாக நினைத்தால் அதுவே மெய்விசுவாசம். இதை அநேகர் உணராமல் பொதுவாக மனந்திரும்புதல், ஜெபம் முதலியவைகளைப்பற்றிய சில போதனைகளைச் சொல்லிப் பின்பு சபையாரை உட்காரவைத்துக்கொண்டோ முழங்காலில் விட்டுக்கொண்டோ 'பாவமன்னிப்பையும் பரிசுத்த ஆவியின் ஈவையும் பெற்றுக்கொண்டோமென்று உடனே விசுவாசியுங்கள் அப்பொழுது இந்த நிமிஷமுதல் நீங்கள் அவைகளைப் பெற்றுக்கொண்டது வாஸ்தவமாயிருக்கும்' என்று முன்னும் பின்னும் பாராமல் போதிக்கிறார்கள். இப்படிப்பட்ட போதனையினால் பெரிய தீமைகள் விளைந்திருக்கிறது. நானும் வஞ்சகமில்லாமல் இந்தப் போதகத்தை ஏற்றுக்கொண்டிருந்தேன். பின்பு சிறிதும் பெரிதுமான பாவங்களில் விழுந்தபோது 'தேவன் என்னைக் காக்கிறார்' என்பதை உறுதியாய் விசுவாசியாதபடியால் பாவத்தில் விழுந்தேன் என்றும் எண்ணிக்கொண்டேன். சிலவேளை தேவனுக்கு என்னைப் பிரதிஷ்டைபண்ணி ஜெபம்செய்து, பின்பு அவர் பாவத்தில் விழாமல் காப்பார் என்று விசுவாசித்துக்கொண்டிருந்தேன். அதன்பின்னும் பாவங்களில் விழுந்தேன். இப்படி ஒருதரம் மாத்திரமல்ல பலதரமும் நடந்தது. எனக்கு இதைக்குறித்து சத்தியத்தைப் போதிப்பார் ஒருவரும் இல்லை. பின்பு தேவன் என் மனதில் அறிவுண்டாக்கினார். அப்பொழுது பிரதிஷ்டை, விசுவாசம் என்பவைகளின் சரியான அர்த்தத்தைக் கண்டுகொண்டேன். பிரதிஷ்டை என்பது பட்டாளத்தில் சேவகம் எழுதிக்கொள்ளு



தலுக்கு ஒப்பாயிருக்கிறது. சேவகன் பிரயாசப்படாமல் சும்மா இருப்பதனால் அல்ல தன்னைச் சேவகம் எழுதிக்கொண்டவனுக்கு உற்சாகமாய் ஊழியம் செய்வதற்கு தக்கதாக மகிமையின் விருதுகளைப் பெறுவான். அப்படியே தன்னைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கிறவனும் அவருடைய சித்தத்தை அறிந்து ஜாக்கிரதையாய் வேலை செய்வதற்குத் தக்கதாக கிருபையும் மகிமையும் பெறுவான்.

விசுவாசமென்பது எபி. 11–ம் அதிகாரத்தில் சொல்லியபடி மிகுந்த போராட்டமும் வீரதீரமும் சுயவெறுப்புமுள்ளதாயிருக்கிறது. மேலும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற பரிசுத்தவான்கள் தாங்கள் மாம்சத்திலிருக்கையில் 'வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள்' என்று சொல்லியிருக்கிறது. (வா. 39). நமக்குமாத்திரம் விசுவாசம் என்பதற்கு வேறே அர்த்தம் என்னத்திற்கு? கிறிஸ்துவின் மேல் நாம் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் அவர் வாக்குப்பண்ணினவைகளாகிய பூரண பரிசுத்தம் நித்தியஜீவன் முதலியவைகளை எப்படியாவது பெற்றுக்கொள்வோமென்கிற நிச்சயத்தைக் கொண்டு போராட்டம் பண்ணுகிறவர்களாயிருப்போம். இந்த அதிகாரத்தில் சொல்லிய பரிசுத்தவான்களுக்கும் நமக்கும் கொஞ்சம் வித்தியாசமுண்டு. அவர்கள் 'வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள்'. நாமோ சுவிசேஷத்தின் சலாக்கியமுள்ள காலத்திலிருக்கிறபடியால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளின் அச்சாரத்தைப் பெற்றிருக்கிறோம். ஆதலால் மனத்திருப்தியோடு விசுவாசத்தின் போராட்டத்தைப் போராடுவோமாக. வீண் மனோபாவனைகளைப் பண்ணிக்கொண்டு தன்னிடத்தில் பாவமில்லை என்று ஒருவனும் சொல்லவேண்டாம். அப்படியே பரிசுத்த ஆவியின் ஈவைப் பெற்றதைக் குறித்து நிச்சயமில்லாமல் ஆவியைப் பெற்றேன் என்றும் சொல்லவேண்டாம். நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

2. விசுவாச தத்துவத்தை வீண்செலவு செய்யப்படாது. விசுவாசிக்கிறவன் மலையைப் பெயர்த்துக் கடலிலே போடக்கூடுமென்பது நிசந்தான். ஆனாலும் இதைச் சொன்ன நமது ஆண்டவர் மாம்சத்திலிருக்கையில் ஒரு மலையையாவது பெயர்த்துக் கடலிலே போட்டதாகச் சரித்திரமில்லை. அவர் இப்படிச் செய்யாத காரணம் என்ன! பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். அவர் வந்த நோக்கத்தை நிறைவேற்றினார். வேறொன்றையும் செய்யவில்லை. நம்மொவ்வொருவருக்கும் தேவன் விசுவாசத்தைப் பகிர்ந்துகொடுத்திருக்கிறார் (ரோ. 12: 3) விசுவாசம் சிறந்த ஒரு தாலந்து. அதை நாம் வீண்செலவு செய்யாமல் நற்பிரயோகம் செய்யவேண்டும். விசுவாசம் கிணற்றுத்தண்ணீர்போலிருக்கிறது. அதைப் பயிர்

செலவும் தானம் பண்ணவும் உபயோகிக்கவேண்டியதே அன்றிக் கிணற்றைத் தூர்த்துப்போடப்படாது; தண்ணீரை வெட்டவெளிக்கு இறைத்து வீணாக்கவும் படாது. விசுவாசம் எண்ணெய்போலிருக்கிறது. அதை விளக்கில் எரிக்கவேண்டியதேயன்றி அடுப்பில் எரிக்கப்படாது. ஆதலால் விசுவாச தத்துவத்தைப் பிரயோகிக்கவேண்டிய இடத்தில் பிரயோகிக்க வேண்டும். வேடிக்கைக்காகவும் உலக இன்பங்கள் வசதிகளுக்காகவும் தற்பெருமைக்காகவும் பிரயோகிக்கப்படாது.

சிலர் அற்புதங்களைச் செய்யவும், பல பாஷைகளைப் பேசவும்தக்க வரம் வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஒருவனுக்குத் தேவன் மனப்பூர்வமாய் இந்த வரங்களைக் கொடுக்கும்போது அவைகளை அவன் பிரயோகிக்கவேண்டியது அவசியந்தான். ஆனாலும் தேவன் அவனுக்குச் சாதாரணமான வரங்களைமாத்திரம் கொடுக்க சித்தமாயிருக்கும்போது அவன் மற்றவைகளுக்கு ஆசைப்பட்டால் அவன் விசுவாச தத்துவத்தை வீண்செலவு செய்கிறான். சிலர் தேவனிடத்தில் சில காரியங்களுக்காக விண்ணப்பம் பண்ணுகிறார்கள். தேவன் அவைகளை கொடுக்கச் சித்தமில்லாதிருக்கிறார். பின்னும் பிடிவாதமாய் ஜெபம் செய்து அவைகளைப் பெற்றுக்கொண்டு மேன்மைபாராட்டுகிறார்கள். இவர்களும் விசுவாசத் தத்துவத்தை வீண்செலவு செய்கிறவர்கள். பிலேயாமின் திருஷ்டாந்தத்தைப் பாருங்கள். அவன் தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தை மறுபடியும் கேட்டு அதை நிறைவேற்றப் பிரயாசப்பட்டுச் சாபத்தை அடைந்தான். பிடிவாதம் ஜெபம் எல்லாம் தப்பிதமென்று நான் சொல்லவில்லை. தேவன் தடை செய்யாவிட்டால் ஒரு ஆத்துமாவை இரட்சிக்கும்படி பிடிவாத ஜெபம் பண்ணலாம். அதற்குச் சம்பந்தமில்லாத காரியங்களைக் குறித்து பிடிவாத ஜெபம் பண்ணலாகாது. (சங். 106: 15).

விசுவாச தத்துவத்தைப் பிரயோகிக்கவேண்டிய இடம் எது? நம்முடைய இரட்சிப்பு நிறைவேறவேண்டுமென்கிற ஒரே நோக்கம் தான் அதற்குக் குறிக்கப்பட்ட இடம். இதற்காக அதைப் பிரயோகிக்கையில் தேவன் நமக்குச் சிறந்த வரங்களைத் தந்தால் அவைகளைக் குறித்து நமது கடமையை நிறைவேற்ற வேண்டுமே என்ற கருத்தோடு அவைகளைப் பிரயோகிக்கவேண்டும். இன்ன வரம் நமக்கு வேண்டுமென்று குறித்துக் கேட்டுக்கொள்ளப்படாது. தேவன் ஒரு வரத்தை நமக்குத் தரும்போது அது வேண்டாம் என்று சொல்லவும் படாது. அவர் கொடுத்த தாலந்துகளை அவர் காட்டுகிற வெளிச்சத்தில் பிரயோகித்து மனத்தாழ்மையோடு நம்முடைய ஜீவகாலத்தைக் கழிக்கவேண்டும்.

திட்பமாய் இந்தக் காரியத்தைக் கவனித்துப் பேசப்போனால் எல்லாரும் பெரிய தப்பிதம் செய்தவர்களென்று விளங்கும். சாதாரணமாய் ஒரு



வனுடைய மனதில் படுகிற அநேக காரியங்கள் விசுவாசத்தைக் கவர்ந்துகொள்ளுகிறது. பலர் கூடி ஒரு காரியம் நடக்குமென்று சொன்னால் அடிக்கடி அது நடக்கிறது. முகாந்தரமில்லாமல் ஒருவனைப் பயமுறுத்திச் செத்துப்போவாய் என்று சொல்ல அதை விசுவாசித்துச் செத்துப்போகிற மனுஷருமுண்டு. குறிகாரர் முதலானவர்கள் ஒன்றைச் சொல்லும்போது அந்தக் குறியின் உண்மையாலல்ல, அதைக் கேட்கிறவன் அதை விசுவாசிப்பதினால் சிலவேளை அந்தக் குறியின்படி நடக்கிறது. விக்கிரகக் கோயில்கள் பேய்கள் முதலியவற்றுக்கு நேர்ச்சைசெய்து நிறைவேற்றுவதால் சிலவேளை வியாதி முதலியவை தீருவதும் வேறு சில அனுகூலங்கள் நடப்பதும் இது விக்கிரகங்கள் முதலியவற்றின் வல்லமையாலல்ல, அவைகளை விசுவாசிக்கிறவனுடைய உள்ளத்திலிருக்கிற விசுவாச பெலத்தால் ஆகிறது. அப்படியே ஜெபம்செய்து வியாதிகளைச் சுகமாக்கிற இடங்களிலும் அடிக்கடி தெய்வ கிருபையின் ஏற்பாட்டின்படி அல்ல வியாதிகள் தீருகிறது. உலகத்தில் மதிப்புள்ளவர்கள் அநேகர் தங்கள் விசுவாச தத்துவத்தை இப்படிப் பெரிது பாராட்டி மற்றவர்களுடைய விசுவாசத்தையும் தங்கள் வார்த்தைகளால் கவர்ந்துகொள்ளுகிறபடியால் ஆத்தும இரட்சிப்பின் விஷயமாய்ப் பெரிய நஷ்டத்தை உண்டாக்குகிறார்கள். இதன்றி hypnotism முதலியவைகளைப் படித்துக் கையாடுகிறவர்கள் அடிக்கடி தங்கள் ஆத்துமாக்களை அபாயத்துக்குட் படுத்திக்கொள்ளுகிறார்கள்.

எந்தக் காரியத்திலும் நமது இரட்சிப்பும் மற்றவர்களுடைய இரட்சிப்பும் நிறைவேறவேண்டுமென்பதே நமது முதற் கவலையாயிருக்கவேண்டும். ஆத்துமாக்களுக்கு இடறலுண்டாக்காமல் குணமாக்கும் வல்லமையின் பிரயோகத்தால் இயேசுவின் இரட்சிப்பினிடத்திற்கு அவர்கள் இழுக்கப்படும்படி தேவன் அதைக் கையாடச் சித்தமாயிருக்கிறாரென்று கண்டால் அதைக் குறித்து ஜெபிக்கவேண்டும். எந்த விஷயத்துக்கும் கர்த்தராகிய இயேசுவே நமக்கு முன்மாதிரி. அவர் சர்வவல்லமை உள்ளவராயிருந்தும் அற்பமாய்க் காணப்படுகிற அற்புதங்களைத்தானே செய்தார். (மத். 26: 53). சிலவேளை பசியாயும் தாகமாயுமிருந்தார். சில இடங்களில் சரியான விசுவாசத்தைக் காணாதபோது, அற்புதங்களை அவர் செய்யவுமில்லை. அவருடைய ஜீவன் மனுஷர் இரட்சிக்கப்படவேண்டுமென்கிற கருத்திலே பூண்டிருந்தது. நாமும் இந்தப் பாடத்தைப் படிக்குமுன் தேவன் மனப்பூர்வமாய் வரங்களை நமக்குத்தரமாட்டார். அவர் மனப்பூர்வமாய் வரங்களை நமக்குத் தரும்போதுதான் நமக்கும் ஆசீர்வாதமுண்டாகும்.

## அறியவேண்டிய பிரகாரம் அறிதல். 1 கொரி 8: 2.

மனுஷர்களுக்குள் அறிவாளிகள் அநேகர் உண்டு. அறிவில்லாதவர்கள் என்று எண்ணப்படுகிறவர்கள் அவமதிக்கப்படுகிறார்கள். ஆனாலும் எல்லாரும் ஒன்றுபோல அறிவாளிகளாயிருப்பது கூடாது. அறிவாளிகளின் உதவி பேதையருக்கு வேண்டியதுபோல பேதையரின் உதவியும் அறிவாளிகளுக்கு வேண்டுமென்பதை அநேக திருஷ்டாந்தங்களால் காணலாம். (உ-ம்.) நமது தேசத்தில் படிப்பாளிகளில் அநேகர் கலப்பை பிடித்து உழுகிறதில்லை. சமுசாரிகளுடைய பிரயாசத்தின் பலனை எப்படியும் அவர்கள் உணவுக்கு வேண்டும். அதுபோல கிருஷி சாஸ்திரம் அறியாத பேதைகளுக்குப் படித்தவர்கள் அறிவைப் புகட்டி சமுசாரித்தொழிலை விருத்தி செய்கிறதுமுண்டு.

கர்த்தருடைய வேதம் அறிவைக் குறித்து என்ன சொல்லுகிறது? பிர. 2: 13. இருளைப்பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ அவ்வளவாய் மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமம் என்று சொல்லுகிறது. ஆனாலும் மற்றோரிடத்தில் (1 கொரி 8: 1) அறிவு இறுமாப்பை உண்டாக்கும் என்று சொல்லுகிறது. ஆகலால் அறிவை அடைய விரும்புகிறவன் இறுமாப்பைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். எந்தச் சாஸ்திரத்தையும் கரை கண்டவன் ஒருவனுமில்லை. ஆதலால் அறிவை அடைந்து பிரயோஜனப்படுத்திக் கொள்வதுடன் தன்னை அறிவாளி என்று பாராட்டாமலிருக்கவேண்டியது நமது கடமை

ஒருவேளை ஐரோப்பியரைப் பார்க்கிலும் இந்த தேசத்திலுள்ளவர்கள் சில விஷயங்களில் அதிக ஞானமுள்ளவர்களாயிருக்கலாம். ஆனாலும் தாங்களே எல்லாம் படித்தவர்களைப்போல இறுமாப்படைந்ததினால் தேசம் ஐரோப்பியர் கைவசமாயிற்று. நமது ஜோஷியங்களும், மாந்திரீக வித்தைகளும், 64 கலைக்கியானங்களும் நம்மை அவர்கள் கைக்குத் தப்புவிக்கவில்லை. இப்படியே ஐரோப்பியரும் கர்த்தருடைய வேதத்தைவிடத் தங்களுக்கு அதிக அறிவு உண்டென்று பாராட்டினபடியால் இப்பொழுது நடந்த பயங்கர யுத்தத்தில் அகப்பட்டு அழுந்துகிறார்கள். அவர்களாவது நாமாவது இன்னும் ஒன்றையும் அறியவேண்டிய பிரகாரம் அறியவில்லை.

இனிக் கர்த்தருடைய வேதத்துக் கடுத்தவைகளைக் கவனிப்போம். பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடுமாகிய நம்முடைய வேதம் ஆதியில் தேவனால் அருளப்பட்ட பிரகாரம் நம்முடைய கைகளில் இல்லை. பூர்வீக நகல்கள் ஒன்றுக்கொன்று பேதப்படுகின்றன. மூலபாஷைகளின் அர்த்தத்தைக் குறித்து சாஸ்திரிகள் ஒருவருக்கொருவர் வித்தியாசமான அபிப்பிராயப்படுகிறார்கள். பொதுவான தேவனுடைய கட்டளைகளைக் கவனித்தால் ஐசுவரியமுள்ள ஒரு வாலிபனைக் கிறிஸ்துவானவர் ஆஸ்திகள் அனைத்



தையும் விற்கும்படி கட்டளை கொடுத்தார். அவன் அப்படிச் செய்யாதபடியால் தேவனுடைய ராஜ்யத்துக்கு அபாத்திரனாய்ப் போனான். சகேயுவுக்கோ அப்படிப்பட்ட கட்டளை கொடாமலே இரட்சிப்புக் கிடைத்ததென்று சொன்னார், பேதுருவைப் பார்த்து 'நான் உன் கால்களைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை' என்றார். இப்படி அவர் வேறு யாரையாவது பார்த்துச் சொல்லியிருக்கிறாரா? இப்படி இருக்கிறபடியால் மனுஷன் இரட்சிக்கப்படுவதைக் குறித்தும், வேறெந்தக் காரியங்களைக் குறித்தும் சத்தியத்தை அறியவேண்டிய பிரகாரம் அறிந்திருக்கிறேனென்று ஒருவனும் சொல்லாதிருக்கக்கடவன்.

சில காரியங்களைக் குறித்து ஒன்றும் சொல்லாமலிருப்பதே புத்தி. நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்களென்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். பன்னிரண்டு அப்போஸ்தலருக்குள்ளும் எவன் பெரியவன் என்று அவர் வெளிப்படுத்தவில்லை. யோவானுடைய பிற்கால நடபடிக்கையை அவர் பேதுருவுக்கு வெளிப்படுத்தச் சித்தமில்லாதிருந்தார் அப்படியே நமக்கும் நாம் அறிய விரும்புகிற காரியங்களில் அநேகத்தை அவர் நமக்கு வெளிப்படுத்தமாட்டார். அவர் வெளிப்படுத்தாதவைகளில் அநேகம் நமது புத்திக்கும் மனசாட்சிக்கும் அவர் கொடுத்த வெளிச்சத்துக்குள் அடைபடாது. இதனாலேதான் பத்து கன்னியாஸ்திரிகளின் உவமையில் எண்ணெய் மற்றவர்களுக்கு கொடுக்கக் கூடாதென்று ஐந்து கன்னியாஸ்திரிகள் சொன்னதாக நமதாண்டவர் சொல்லுகிறார்.

ஆதலால் மற்றவர்களைக் குறித்துத் தேவன் உனக்கு வெளிப்படுத்தினாலொழிய இன்னார் இரட்சிப்பைப் பெறுகிறவர்கள் இன்னார் பெறாதவர்கள் என்று சொல்லாதே. உனக்குத் தேவன் கொடுத்திருக்கிற எண்ணெய் நீ மணவாளனை அழைத்து வீட்டுக்கு வருவதற்கு மாத்திரம் போதுமானது. மற்றவர்களுக்கு உன் தீவட்டி பிரகாசித்தால் அது உன் கடமையேதவிர மிச்சப் புண்ணிய கிரியை அல்ல. மற்றவர்களைக்குறித்து நீ தீர்ப்புச் சொல்லவேண்டாமென்று வேதத்தில் திட்டமாய்ச் சொல்லியிருக்கிறது. 1 கொரி. 4: 5. உன்னைக்குறித்தோ 'நம்மை நாமே நிதானித்தறிந்தால் நியாயம் தீர்க்கப்படோம்' என்று சொல்லியிருக்கிறது. 1 கொரி. 11: 31. ஆதலால் மற்றவர்கள் விஷயத்தில் நிதானிக்கப்படாதென்று கண்டிப்பான பிரமாணம் ஏற்பட்டிருக்கிறதுபோல நம்மை நிதானிக்கவேண்டும் என்பதும் பிரமாணந்தான். இதுவே தனக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும் வழி.

விசுவாசத்துக்கும் அறிவுக்குமுள்ள சம்பந்தத்தையும் கொஞ்சம் கவனிக்கவேண்டும். யோவா. 6: 69ல் இயேசுவானவர் ஜீவனுள்ள தேவனு

அங்கே ரக்ஷாபெருமான் இருக்கிறார். போதிக்கிறார். ஞானோபதேசம் செய்கிறார். 'அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார்'. பிரசங்கத்தைக் கேட்க வந்தார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷம் மகா வல்லமையுள்ளது. ஜனங்களை இழுத்துக்கொள்ள வல்லமையுள்ளது. அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்துகொள்ள வல்லமையுள்ளது. 'நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்', (யோ. 12: 3.) என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடி வருவோம்'. (பிர. 1. 13). நம்முடைய சபைகளில் இப்படிப்பட்ட ஆவல் ஆசையுண்டா? இல்லாவிட்டால் காரணம் என்ன?

2. அங்கே பாவங்கள் மன்னிக்கப்பட்டுப்போகிறது. வா. 5. 'மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது'. அந்த ஜனக்கூட்டத்தில் ஓர் மனிதன். அவனுடைய சங்கதிதான் இங்கே முக்கியமாய்க் காட்டப்படுகிறது. பெரிய சபை என்றாலும் அங்குள்ள ஒவ்வொரு மனிதனுடைய நிலைமையும் ஆண்டவருக்குத் தெரியும். அவன் பிராணியில்லாதவன், ரோகஸ்தன், கிருபையைத் தேடக் கொண்டுவரப்பட்டான். ஆத்திரம் அதிகம். அவன் சரீரப்பாடு மற்றவர்களுக்குத் தோன்றினபோதிலும் அவன் ஆத்துமவியாதியும் பாவத்திரளும் அவர்களுக்குத் தோன்றவில்லை. அவன் செய்த கொடிய பாவங்கள் கர்த்தருக்கோ தெரியும். பாவத்தைத் தூண்டிக்காட்டினார். பாவத்தை மன்னித்து நீக்கிப்போட்டார். பாவம் நீங்காத கிறிஸ்தவன் என்ன கிறிஸ்தவன்? பாவத்தை விட்டுவிடாத மிஷன் ஆசாமி என்ன ஊழியக்காரன்? சகோதரனே! உன் பாவம் நீங்கியிருக்கிறதா? தேவனோடு சமாதானமாயிருக்கிறாயா? நீங்கள் குணப்பட்டவர்களானால் உங்கள் சபைகளில் ஜனங்கள் குணப்படுகிறார்களா?

(இன்னும் வரும்)

## ஓர் அறிக்கை

செப்டெம்பர் மாசமுதல் நாலாவதுவரையுள்ள பத்திரிகைகள் பிந்திப்போனதற்காக அன்பர் மன்னிக்கும்படி கெஞ்சுகிறேன். ஜனுவரி தொடக்கு முன் சகலமும் அனுப்பப்படும். பத்திரிகையும் நடைபெறும்.

R. V. Asirvadam.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association Tinnevelly.



7 - JAN 1922

September, 1921. Registered No. M. 136

# The Water of Life

# ஜீவ தண்ணீர்

Vol. XXII செப்டெம்பர் மீ 1921

## 6-ம் அதிகாரம்

## மூன்றாவது சகோதர ஐக்கியக் கூட்டம்

பிரான்ஸிஸ் என்பவரின் பேர் பிரஸ்தாபம் நாடுநகரம் எங்கும் எட்டவே, அவர் பிரசங்கிக்கப்போகிறார் என்று கேட்டவுடன் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய்க் கூடினர். கிரமமாய்க் காரியங்களை நடத்துகிறதில் மிகவும் சித்திபெற்றவர். மனிதரின் இரட்சிப்புக்குரிய வைராக்கியத்திலும் குறைந்தவரல்லவே, அவர் பிரசங்கித்த சமயத்தில் எல்லாம் பிரசங்கத்தைக் கேட்டவர்களில் சிலராவது அந்தப்புது ஜீவியத்தில் பிரவேசிக்கத் தீர்மானித்துக்கொண்டே வந்தனர். பற்பலவிடங்களிலிருந்து வந்து குணப்பட்டவர்களில் அநேகர் இந்த சகோதர ஐக்கிய கூட்டத்தைச்சேர்ந்து, தங்களுக்கு நன்மையாகவிருந்த நற்செய்தியை மற்றவர்களுக்கும் அறிவிக்க தங்கள் ஜீவியங்களைத் தத்தம் செய்தனர். ஆயினும் எல்லாரும் அப்படிச் செய்யக்கூடியவர்களல்ல. புருஷரும், மனைவிகளும், பெற்றோரும், வீட்டிலேயே தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள். இன்னும் சிலர் அச்சகோதர ஐக்கிய கூட்டத்தில் சேர ஆசித்தும் அதிற் சேரமுடியாதவராயிருந்தனர். இப்படிப்பட்டவர்களை மேல்விசாரணைசெய்து விசாரிக்க ஏதாகிலும் செய்ய வேண்டியது அவசியமே. தாங்கள் செய்யும்படி ஏதாவது வேலை குறிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். குணப்பட்டோரில் நூற்றுக்கணக்கானோர் முன் ஏற்படுத்தப்பட்ட இரண்டு சகோதர ஐக்கிய கூட்டங்களில் ஏதாகிலும் ஒன்றில் தங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். அவர்களை அமர்த்திவைக்கும் பொருட்டு அவர்கள் தங்கள் சொந்தக்கடமைகளை நிறைவேற்றிக்கொண்டே வேலைசெய்யும்வண்ணம், ஓர் புதிய சகோதர ஐக்கிய கூட்டத்தை ஸ்தாபிப்பதாக வாக்களித்தார் பிரான்ஸிஸ் பக்தன். ஓர் சமயத்தில்

அவர் பிரசங்கம் செய்துகொண்டிருந்த மாளிகையில் கூடியிருந்த அனைவோரும் மனச்சாட்சியில் குத்துண்டவர்களாகி, சீமான்கள், சீமாட்டிகள். போர்வீரர். வேலைக்காரர் அனைவோரும் பிரான்ஸிஸ் போகும் இடமெல்லாம் அவரைப் பின்செல்வதாகக் கூறினர். இது கூடியகாரியம் அல்லவென்பது பிரத்தியட்சமே. அவ்வாறே சொன்னார் பிரான்ஸிஸ் மகானும்.

அப்படியானால் நாங்கள் என்ன செய்வோம்? எவ்வாறு ஜீவிப்போம்? 'நான் உங்களை நினைத்து தேவனுடைய உதவியினால் உங்களால் செய்யக்கூடிய ஜீவியமொன்றைக் கண்டுபிடிக்க வகை தேடுவேன்.'

இந்த சமயத்தில்தான் தெய்வபக்தியுள்ள ஜீவியம் செய்யப் பிரயாசப்பட்ட ஒரு மனிதன், அந்த ஜீவியம் எவ்விதமாய்ச் செய்யவேண்டுமென்று ஆலோசனை கேட்க வந்தான். என்ன நேரிடினும், பணம் சம்பாதித்து ஐசுவரியவானாகவேண்டுமென்பதிலேயே தன் மனதைச் செலுத்தின ஓர் வாலிப வியாபாரியே அம்மனிதன். அவன் அங்குள்ள கோதுமையை யெல்லாம் தன் கடையிலேயே சேர்த்துவைத்துக் கொண்டு தகாதவிதமாய் ஆஸ்தி சேகரித்து வெகு மனதிருப்தியுடனே வாழ்ந்துகொண்டிருக்கையில் அவன் அநியாயவிலை ஏற்படுத்தி இவ்வளவு பொருள் சம்பாதித்ததினால், அவன் மனச்சாட்சி அவனை வாதிக்கத் தொடங்கிற்று. அவன் மனதிலிருந்த அந்த எண்ணத்தினால் அவனுக்குச் சற்றென்கிலும் சமாதானமேயில்லை. அதுவுமன்றி, அவன் ஜீவன் போனபிறகு தான் சேர்த்துவைத்திருப்பதில் தனக்கு யாதொரு பிரயோஜனம் இல்லை என்ற எண்ணம் வரவே அவனுடைய நிற்பந்த நிலைமையைச் சகிக்கமுடியாமற் போயிற்று. அவன் மன்னிப்பைத்தேடி அதைக் கண்டுபிடித்தான். அந்நேரமுதல் அவன் வேறு மனுஷனானான். தன்னால் உண்டான துன்பத்தை மட்டுப்படுத்த தன்னால் இயன்றமட்டும் நஷ்டங்கட்டிக்கொடுத்தான். ஆயினும் அவன் பிரான்ஸிஸைச் சந்தித்த போது இன்னமும் மனத்திருப்தியற்றவனாகவே யிருந்தான். இதற்கு மேல் தாம் நடத்திக்கொண்டுபோகக் கூடாதென்று உணர்ந்தார் பிரான்ஸிஸ் மகான். மூன்றாவது சகோதர ஐக்கியக்கூட்டம் ஒன்று ஆரம்பிக்கலாம் என்ற எண்ணத்தை அவர் விளக்கினபோது, அவ்வாலிப வியாபாரியும், அவன் மனைவியும், அக்ஷணமே தங்கள் பெயரை அக்கூட்டத்தில் எழுதிச் சேர்ந்துகொண்டனர். பின் அவர்களும் அவர்களைப்போலொத்த மற்றவர்களும் ஓர் பெரிய சபைக்கு முன்பாக அக்கூட்டத்தில் சேர்க்கப்பட்டனர்.

இந்த ஐக்கிய கூட்டத்தின் சட்டங்கள் சுலபமானவைகளாயும், கிறிஸ்தவ ஜீவியத்திற்கு முற்றிலும் பொருந்தியதாயும் இருந்தது. அச்சட்டங்கள் மலைப்பிரசங்கத்தை அஸ்திபாரமாகக்கொண்டு, அந்தக் காலத்திற்கேற்ற சிற்சில மாறுதல்களுடையதாயிருந்தன. அக்கூட்டத்தைச் சேர்ந்தோர் முதலாவதாக தாங்கள் செய்த தீமையை நிவிர்த்திசெய்ய பதில் உபகாரம் செய்து பகையை முற்றிலும் நீக்கிவிடவேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் சாதாரண உடை தரித்து, சாதாரண ஜீவியம் செய்து, தங்களாலியன்றமட்டும் பிறருக்கு ஊழியஞ்செய்யவேண்டியவர்களே.

இந்த ஐக்கிய கூட்டம் ஸ்தாபகமான மாத்திரத்தில் ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த ஆண்களும் பெண்களும் வெகு ஆவலோடே அதில் சேர்ந்தனர். இத்தாலியா தேச முழுமையும் இது பரம்பிற்று. இக்கூட்டம் நாளுக்குநாள் அதிகரிக்கிறதைக் கண்ட குருக்களும் கண்காணிகளும் வெகுவாய்ப் பயந்து அக்கூட்டத்தை அடக்கும்படி மேலதிகாரிகளுக்கு மன்றாட்டெழுதி யனுப்பினார்கள்.

இது நன்றாய் நடைபெறவே, முதல் சகோதர ஐக்கிய கூட்டத்தார், ஆடுகளின் நன்மையைக் கருதி அவற்றை மேல்பார்க்கும்பொருட்டு சந்திப்புக்காரராக ஏற்படுத்தப்பட்டனர்.

ஓ! இது ஓர் பெரிய ஆச்சரியமன்று என்று யாராகிலும் நினைக்கலாம். சில கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி, கிறிஸ்துவைப்போன்ற ஜீவியம் செய்யவேண்டுமென அங்கீகாரம் செய்துகொண்டதுதானே. அவ்வளவுதானே. அது பெரிய காரியமோ? ஆனால் இப்பொழுதுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் உண்மையாய் அவ்வாறே செய்தால் என்ன நடக்கும் என்று நீர் நினைக்கிறீர்?

## கிறிஸ்துவின் ஆவி

'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல' என்று பரிசுத்த பவுல் ரோமாபுரியாருக்குச் சொல்லுகிறார். இது பயபக்தியோடு கவனிக்கத்தக்க வார்த்தை. நமது அவசரமான அலுவல்களின் மத்தியில் சற்று தாமதித்து, என்னிடத்தில் கிறிஸ்துவின் ஆவியிருக்கிறதா? என்று கேட்கவேண்டியது அவசியம். நமது ரட்சகருடைய ஆவி இன்னதென்பதைக் கவனிப்போம்.

முதலாவது, தாழ்மையின் ஆவி. இந்தச் சிந்தை நமது ரட்சகரில் விளங்கிற்று. அவருடைய மனுஷாவதாரத்தில் விளங்கினது தாழ்மையே. 'கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளைபாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகித் தம்மைத் தாமே தாழ்த்தினார்

வேண்டுமோ அவைகளை யெல்லாம் வெறுத்துவிடுவதே கிறிஸ்துவின் ஆவி.

## வேதபாடக் குறிப்புகள்

### இயேசுவின் சத்தங்கள்

1. ரட்சகரின் சத்தம். 'என்னிடத்தில் வாருங்கள்'. மத். 11. 28.
2. மேய்ப்பனின் சத்தம். 'என்னைப் பின்பற்றுங்கள்'. யோ. 10. 27.
3. எஜமானின் சத்தம். 'வியாபாரம் பண்ணுங்கள்'. லூக். 19. 13.
4. போதகரின் சத்தம். 'என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்'. மத். 11. 29.
5. மணவாளனின் சத்தம். 'கதவைத் திற'. உன். 5. 2.
6. சிநேகிதனின் சத்தம். 'ஆலோசனை சொல்லுகிறேன்' வெளி. 3. 18.
7. வைத்தியனின் சத்தம். 'சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?' யோ. 5. 6.

### உடைந்த அல்லது முறிந்துபோனவைகள்

1. உடன்படிக்கை. ஏசா. 24. 5.
2. இருதயம். சங். 34. 18. (நொறுங்குண்டது).
3. கண்ணி. சங். 124. 7. (தெறித்தது).
4. நுகம். ஏசா. 9. 4.
5. தொட்டிகள். எரே. 2. 13. (வெடிப்புள்ளது),
6. கோல். எரே. 48. 17. (உடைந்தது).
7. பானைகள். நியாயாதி. 7. 19.

### ஏழு 'எதாகிலும்' அல்லது 'எதுவோ'

1. எதுவோ. யோ. 14. 13. ஜெபம்.
2. போதெல்லாம். மாற். 14. 7 ஏற்ற சமயம்.
3. எங்கெங்கே. மத். 26. 13. சாட்சி.
4. எதிலே. 2 கொரி. 11. 21. துணிவு.
5. எங்கேயாகிலும். மத். 8. 19 சேவிக்குதல்.
6. எவன். லூக். 12. 48. உத்தரவாதம்.
7. எவனோ. அப். 2 21. இரட்சிப்பு.

### போகும்படி தேவ கட்டளை

1. உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டுக்கு போ. மாற். 5. 19.
2. பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போ. லூக். 14. 23.
3. நீங்கள் தேவாலயத்துக்குப் போங்கள். அப். 5. 20.
4. இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்திற்குப்போ. மத். 21.28.

### சுவிசேஷ பிரசங்கம்

1. அழைக்கிறவர் யார்? தேவன். நீதி. 8. 4.
2. யாரை அழைக்கிறார்?
   (a) பாவிகளை. மாற். 2. 17.
   (b) குறைவுள்ளவர்களை. ஆதி. 21. 17.
   (c) தூங்குகிறவர்களை. 1 சாமு. 3. 4.
   (d) குருடரை. மாற்கு 10. 49.
3. எப்படி அழைக்கிறார்?
   (a) தமது கிருபையினால். கலா. 1 15.
   (b) சுவிசேஷத்தினாலே. ii தெச. 2. 14
   (c) பேர்சொல்லி ஏசா. 43. 1.
4. எதற்காக அழைக்கிறார்?
   (a) ஜீவனைப்பெற. ii தீமோ. 6 12.
   (b) ஒளியினிடத்திற்கு. i பேதுரு 2. 9.
   (c) சமாதானமாயிருக்க. i கொரி. 7. 15.
   (d) பரிசுத்தத்திற்கு. i பேது. 1. 15.
   (e) கிறிஸ்துவைப் பின்தொடர. i பேது. 2. 21.
   (f) கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட. i கொரி 1. 9.
   (g) இரட்சிப்புக்கு. i தெச 2. 14.
   (h) நித்திய சுதந்தரத்துக்கு. எபி. 9 15
5. தள்ளிவிட்டால் என்ன? நீதி 1. 24-33.

### பரி. லூக்கா சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் மூன்றுபேர்கள்

1. பாவிகளை ஏற்றுக்கொள்ளுகிறவர். 15. 2.
2. பாவிகளின் சிநேகிதர். 7. 34.
3. பாவிகளோடு விருந்துண்பவர். 19. 7.

### கிறிஸ்துநாதரும் தனி ஆட்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | நிக்கோதேமு. | மறுபிறப்பு | யோ. 3. 1-16 |
| 2. | சமாரிய ஸ்திரீ | வெளிப்படுத்தல் | யோ. 4. 2. |
| 3. | பாவியான ஸ்திரீ | ஆக்கினைத் தீர்ப்பில்லை | யோ. 8. 11 |
| 4. | குருடன் | தேவகுமாரன் | யோ. 9. 35-38 |
| 5. | மார்த்தாள் மரியாள் | | யோ. 11-25 |
| 6. | ஐசுவரியவனான வாலிப நியாயசாஸ்திரி | நித்திய ஜீவன் | மாற். 10. 17. |
| 7. | சகேயு | இரட்சிப்பு | லூக். 19. 9. |

## ஓர் பல்லவி

Grace, there is my ev'ry debt to pay
Blood to wash my ev'ry sin away
Power to keep me holy day by day
In Christ—For me.

கடன்முற்றும் தீரக்ருபை யுண்டு
பாவம் யாவும் நீக்க ரத்தமுண்டு
சுத்தமுற்றும் பெறச் சக்தியுண்டு
கிறிஸ்தில்—எனக்கு.

## இயேசு கிறிஸ்து

மற்றெந்த மார்க்கங்களைப் பார்க்கிலும் கிறிஸ்து மார்க்கமானது தனி ஆளைப்பற்றினதாயிருக்கிறது. உலகத்திலுள்ள பெரிய மார்க்கங்கள் தனி ஆட்களைப்பற்றிப் போதிக்கிறது மெய்தான். என்றாலும் கிறிஸ்து மார்க்கத்தில்போல அவ்வளவு பெலமாயல்ல கிறிஸ்துவிலேயே சகலமும் நிற்கிறது. அவருக்குச் சொந்தமானவர்கள் யாரோ அவர்களுக்கு இது விளங்கும். நாம் அவருடையவர்கள் அவரைப்பற்றிப் பேசுகிறோம் அவரை நோக்கி ஜெபிக்கிறோம். அவரைப் பின்பற்றி நடக்கப் பிரயாசப்படுகிறோம். நமது ஜீவியத்தின் வாஞ்சை அவரைப்போலாக வேண்டுமென்பதே. ஆகவே சகலமும் ஒரு ஆளுக்குச் சம்பந்தப்பட்டது. ஆகையால் அவர் யார்? எங்கேயிருந்து வந்தவர்? அவரைப்பற்றி நமக்கு என்ன தெரியும்? இவைகள் முக்கியமான கேள்விகள். இந்த மூன்று கேள்விகளுக்கும் உத்தரவு அறியவேண்டியதும் அதைப் புத்திபூர்வமாயும் அநுபோக சாட்சியாயும் அறிந்திருப்பதும் கிறிஸ்தவன் ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாத அவசியம். சுவிசேஷங்கள்தான் அவைகளைப்பற்றி அறிவதற்குரிய சாதனங்கள். உலக சரித்திரத்தில் அவருடைய சரித்திரம் காணப்படுகிறது. ஆனால் அவைகள் போதுமானதல்ல. சுவிசேஷங்களே விபரங்களடங்கிய சரித்திரம்.

கிறிஸ்துவுக்குப்பின் 27-ம் வருஷ முதல் 93-ம் வருஷம் வரையிருந்த யூதசரித்திரக்காரனாகிய யோசேபுஸ் என்பவன் அவர் மெய்யாகவே உலகத்திலிருந்தார் என்று அவரைக்குறித்த விசேஷங்கள் எழுதியிருக்கிறான். கி. பி. 100 வருஷத்திலிருந்த டாசிடஸ் (Tacitus) என்னும் சரித்திரக்காரன் கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய சீஷர்களைப்பற்றியும் பிரியத்தோடல்ல, கசப்போடு எழுதியிருக்கிறான் கி. பி. 103-ல் இருந்த பிளினி (Pliny) என்னும் சரித்திரக்காரன் ரோம ராஜ்யத்தின் பல பாகங்களில் கிறிஸ்துவானவர் பிரயாணம்பண்ணிவந்தாரென்றும் கிறிஸ்துமார்க்கம் அக்காலத்திலுண்டாயிருந்ததென்றும் ரோமராயனுக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறான். அவன் எழுதினவைகளில் ஒரு விசேஷத்தை மாத்திரம்பார்ப்போம். 'யூதேயாவின் பாகங்களில் பிலாத்துவின் காலத்தில் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்து என்னும் ஒருவனுடைய சீஷர் ஓர் பெருங் கூட்டமாயிருந்தார்களென்றும் அவர்களைப்பற்றி இரண்டு காரியங்கள் தன் மனசில்பட்டதென்றும் எழுதுகிறான். ஒன்று அவர்கள் எப்போதும் கிறிஸ்துவைப்பற்றிப் பாடினார்களென்பதும், இரண்டாவது அவர்கள் வரிக்கொடுத்தார்கள் என்பதுமே. ஆகவே கிறிஸ்துநாதர் உலகச் சரித்திரத்தின்படி உலகத்திலிருந்த ஓர் வாஸ்தவமான ஆளென்பது திட்டமாயிருக்கிறது. கி. பி. 117ல் சியுடோனியஸ் (Suetonius) இவரைப்பற்றித் தன் சரித்திரத்தை எழுதுவதில் எழுதியிருக்கிறான். கி. பி. 128லும் அவரைப்பற்றி ஓர் சரித்திரக்காரன் எழுதியிருக்கிறான். ஆனால் அவருடைய சரித்திரத்தின் விபரமும், அவர் எங்கேயிருந்து வந்தவர், எதைப் போதித்தார்? எப்படி மரித்தார் என்பதும் சுவிசேஷ சரித்திரங்களிலல்லாமல் வேறெங்கும் தெரிகிறதில்லை. கிறிஸ்துமார்க்கத்தை ஸ்தாபித்தவரைக்குறித்து சுத்த மனதோடு ஆராய விரும்பும் யாரும் சுவிசேஷ சரித்திரத்தையே பார்க்கவேண்டியதிருக்கிறது. மேலும் அவரைப் பின்பற்றாதவர்களாயிருந்து கிறிஸ்துமார்க்க சத்தியங்களைக் குற்றப்படுத்தி ஆக்ஷேபிக்கிறவர்களும் இந்தச் சுவிசேஷ சரித்திரத்திலிருந்தே எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆகவே புகழவனாலும் இகழ்வானாலும் ஒப்புக்கொள்ளவானாலும் மறுக்கவானாலும் இந்நான்கு சுவிசேஷங்களே மூலசாதனங்கள். பரி. லூக்கா 24-25-ல வேதவாக்கியங்களை சீஷர்கள் அறிந்துகொள்ளும்படி யேசுநாதர் அவர்கள் மனதைத்திறந்தார் என்று சொல்லியபடி திறந்தமனதோடு கிறிஸ்துவின் சரித்திரத்தைப் பார்ப்போமாக.

ஆங்கில, அமெரிக்கப் புதுத் திருப்புதல்களிலும், ஜேம்ஸ் அரசனுடைய திருப்புதலிலும் இச்சரித்திரங்களுக்கு இடப்பட்ட பேர் மாறிமாறி வருகிறது. பரி. மத்தேயு சுவிசேஷம், பரி. மாற்கு சுவிசேஷம், பரி. லூக்கா சுவிசேஷம், பரி. யோவான் சுவிசேஷம் என்று முன் சொன்னவர்கள் அமெரிக்கன் திருப்புதலில் 'பரி. மத்தேயு என்பவர் எழுதின சுவிசேஷம்' என்று சொல்லியிருக்கிறது. முந்தினதின்படி நாலு சுவிசேஷங்கள் என்று பொருள்படலாம். பிந்தினதின்படி ஒரே சுவிசேஷம் ஆனால் அதை நால்வர் எழுதியிருக்கிறார்கள் என்று பொருள்படக்கூடியது. ஒரிஜன் என்பவர் இவைகளை 'நாலு மூலைகளுள்ள சுவிசேஷம்' என்றும் ஐரீனியஸ் என்பவர் 'நாலு பங்கான சுவிசேஷம்' என்றும் அழைக்கிறார்கள். ஆகவே ஒரே சுவிசேஷம் நாலு பேரால் எழுதப்பட்டு நாலு விதமாய்ச் சொல்லப்படுகிறது.

இந்தச் சுவிசேஷங்களை எழுதும்படி ஓர் கமிற்றி ஏற்பாடாகி, நாலு பேரை நியமித்து அவர்கள் நாலு வித்தியாசமான விதமாய் எழுதவேண்டுமென்று தீர்மானித்து இவ்விதமாய் இச்சுவிசேஷங்கள் எழுதப்படவில்லை. நாலு சுவிசேஷகரும் தான் கேள்விப்பட்டபடி அல்லது தன் அனுபவப்படி, தன் இயற்கையான போக்குப்பிரகாரமாய் பூரண யதார்த்தமாய் எழுதியிருக்கிறார்கள். நாம் ஒவ்வொன்றையும் தனித்தனியே வாசித்து வித்தியாசங்களைக் கவனித்து அறிந்துகொண்டபின் இந்நான்கும் சேர்ந்து கிறிஸ்துவின் சரித்திரத்தைப் பூர்த்தியாய் வெளிப்படுத்துகிறதென்று காணலாம்

ஆகவே கிறிஸ்துவின் சரித்திரத்தையறிய விரும்பும் எவரும் இந்நான்கு சுவிசேஷங்களையும் பூர்த்தியாய் வாசித்தறியவேண்டியது. இயேசுகிறிஸ்துவின் பூரண வெளிப்படுதல் இந்நான்கு சுவிசேஷங்களும் சேர்ந்த சரித்திரத்தில் அடங்கியிருக்கிறது. சுவிசேஷகர் நாலவரும் அவரவர் இயற்கையின்படியும் தன்தனக்கு அனுபவமாய்த் தெரிந்த சத்தியத்தின்படிக்கும் இயேசுவின் சரித்திரத்தை எழுதுகிறபடியால் சரித்திரத்தை அறியுமுன் எழுதினவர்களின் வரலாற்றை அறிவது அவசியம்

சுவிசேஷங்களின் நூலாசிரியரைப்பற்றி ஆக்ஷேபனைகள் எழும்பக்கூடும். ஆகிலும் பேர் காட்டிய இந்நால்வருமே எழுதினார்களென்று சாதிக்கப் போர்ந்த நியாயமுண்டு. முதலாவது பன்னிருவரிலொருவனாகிய மத்தேயு, இரண்டாவது யோவான் மாற்கு என்னும் பேர்வழங்கிய மாற்கு, இவன் பேதுருவின் சிநேகிதனும் இனத்தானுமாயிருக்கலாம். மூன்றாவது வைத்தியனும் பவுலின் தோழனுமாகிய லூக்கா நான்காவது, கலிலேயாக் கடலில் செம்படவனான யோவான். இவர்களைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? இவர்களெல்லாரும் மனுஷப் பிரகாரமாய் அவரவருக்குரிய விசேஷித்த லக்ஷணங்களுள்ளவர்களாதலால் அவர்களால் எழுதப்பட்ட சரித்திரம் ரட்சகரை வெளிப்படுத்துவதிலும் விசேஷித்த தன்மையுள்ளதாயிருக்கின்றது. திருஷ்டாந்தமாக, மாற்கும் லூக்காவும் யவீரின் மகளை உயிரோடேழுப்பின சரித்திரத்தைச் சொல்லும்போது, யவீரின் வீட்டுக்குப் போகும்வழியில் பெரும்பாடுள்ள ஸ்திரீ சுகமடைந்த விபரத்தைச் சொல்லுகிறார்கள். சரித்திரம் ஒன்றே. வித்தியாசமில்லை. திரள்கூட்டம், அதே ஸ்திரீ. அவள் வியாதியும், அவசரமும், சுகமான விதமும், கிடைத்த சுகமும் எல்லாம் ஒன்றே. ஆனால் லூக்கா சொல்லுகிறார். 'தன ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும் ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஸ்திரீ' என்கிறார். மாற்கோ 'அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும் சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்பட்டவள்' என்று சொல்கிறார். எந்த வைத்தியனும் இவ்வாறு சொல்லமாட்டான்.



**நான்கு சுவிசேஷகர்கள்.** பரி மத்தேயு அப்போஸ்தலன். பரி. யோவானும் அப்போஸ்தலன். மாற்குவும் லூக்காவும் அப்போஸ்தலரல்ல. முதலாம், நான்காம் சுவிசேஷங்கள் இயேசுவால் தெரிந்துகொள்ளப்பட்டுத் தம்மோடிருக்கும்படி நியமித்தவர்களால் எழுதப்பட்டன. இவர்கள் இயேசுவோடிருந்து அவரைப்பார்த்து அவருடைய உபதேசத்தையெல்லாம் கேட்டு அவருடைய ஊழியத்தில் முழுவதும் அவரோடிருந்தவர்கள். அப்போஸ்தலரல்லாத இருவர் சுவிசேஷங்களை எழுதியிருக்கிறார்கள். மாற்கு இயேசுநாதரை நேரில் பாராதவரா? சிலுவையிலறையப்படு முன் அவருடைய சீஷர்களாயிருந்தவர்களில் ஒருவரா? சொல்லமுடியாது. நேரான ரூபகாரம் இல்லை. பரி. பேதுருவின் போதனையினால் சுவிசேஷத்தை எழுதினதாக பப்பியா முதலிய சபைப் பிதாக்கள் சொல்லுகிறார்கள்.

**பரி. மத்தேயு.** இவர் எபிரேயன். தீர்க்கதரிசனங்களை நன்றாய் வாசித்தறிந்தவரும் ஓர் ராஜா யூதருக்குப் பிறப்பார் என்று விசேஷமாய் உணர்ந்தவருமான ஓர் யூதன். தீர்க்கதரிசன வசனங்களிலிருந்து அதிகமாய்க் கூறுகிறார். முன்னறிவித்தவைகள் அநேகம் கிறிஸ்துவில் நிறைவேறுதலடைந்ததென்று சொல்லுகிறார். இவர் ஒரு ஆயக்காரன். ரோமராஜ்யத்தின் கீழமைந்து எபிரேயரிடம் வரி வாங்கிக்கொண்டிருந்தவன், சர்க்கார் உத்தியோகஸ்தன். அக்காலத்தில் ரோமராஜ்யம் உலகத்துக்கெல்லாம் தலைமையாகவிருந்துகொண்டு உலகத்தை அடக்கியாண்டுவந்தது. ராஜ்யம், அதிகாரம் இவைகளை அதிகமாய் அறிந்துவந்தவனாதலால் இயேசுகிறிஸ்துவை 'ராஜாவாக' மதித்து சரித்திரம் எழுதியிருக்கிறான். ஆகையால் ஒருவன் மத்தேயு எழுதின சுவிசேஷத்தை மாத்திரம் வாசித்தால், அவன் இயேசுவை ராஜாவாகப் பார்ப்பான். புறக்கணிக்கப்பட்டவர்தான், தள்ளப்பட்டவர்தான், என்றாலும் அவர் எவ்விஷயத்திலும் ராஜாவாகவே விளங்குகிறார்.

**பரி: மாற்கு.** பேதுருவின் சிநேகிதன். கலிலேயாவிலுள்ள செம்படவர்களில் ஒருவன். தாய் எருசலேமிலுள்ள ஓர் ஐசுவரியமுள்ள ஸ்திரீ. ஆதிச்சபை இவளுடைய வீட்டில் கூடினது. ஐசுவரியமுள்ள ஓர் ஸ்திரீயின் மகனுக்குச் சோதனைகளிருக்கும். எல்லாரும் கெட்டுப்போவார்களென்பது என் கருத்தல்ல. இச்சுவிசேஷம் கிரேக்குப்பாஷையில் எழுதப்பட்டது. பரி. லூக்காவின் கிரேக்குப்பாஷை மிகவும் சிறந்ததும் அலங்காரமானதுமானது. பரி. மார்க்குவின் கிரேக்கோ மிகவும் குறைவானது. மாற்குவின் குணவிசேஷம் ஸ்திரமானதல்லவென்பர் சிலர். திட்டமாய்ச் சொல்லமுடியாது. பவுலும் பர்னபாவும் இவனிமித்தமாகவே ஒருவரோ

டொருவர் கோபித்துக்கொண்டார்கள். இரண்டாவது மிஷனெரி, பயணம் ஆரம்பிக்கும்போது பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு போக விரும்பினான். பவுலோ ஆக்ஷேபித்தார். மாற்கு முதலாம் பிரயாணத்தில் கடமையை நிறைவேற்றுவதில் பின்வாங்கினபடியால் ஆக்ஷேபித்தார். பர்னபாவோ அப்படிப்போனதற்குக் காரணம் இருக்கவேண்டுமென்றே அல்லது மாற்குவுக்கு இன்னொரு தவணை கொடுக்கவேண்டுமென்றே அவனைக் கூட்டிக்கொண்டுபோக விரும்பினான். என்றாலும் பரி. பவுல தீமோத்தேயுவுக்கு எழுதும் கடைசி நிருபத்தில் 'மாற்குவை உன்னோடு கூட்டிக்கொண்டுவா. அவன் எனக்குப் பிரயோஜனமானவன்' என்கிறார்.

மாற்கு ஐசுவரியமுள்ள ஓர் ஸ்திரீயின் மகன். செம்படவரோடு கூட்டாளியானவன். அவர்கள் பேச்சைக் கற்றுக்கொண்டான. இவனுக்கு அதிகாரம், ராஜரீகம் பெரிதாகத் தோன்றவில்லை. அரண்மனைகள், உத்தியோகங்கள் இவனுக்குக் காரியமில்லை. தொழிலாளிகள், வேலைக்காரர், கட்டளை பெற்றுக் கீழ்ப்படிகிறவர்கள இவர்களுடைய காரியமே இவனுக்குக் காரியம். புதுத்திருப்புதல்படிக்குள்ள புதிய ஏற்பாட்டில் மாற்கு சுவிசேஷத்தை எடுத்து 'உடனே என்னும் வார்த்தை 80 தடவை வருகிறதைப் பார்க்கலாம். இநத சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்துவின் ராஜரீகமேன்மை விளங்காமல் அவர் 'ஊழியக்காரனாக' விளங்குகிறார்.

**பரி. லூக்கா.** ஓர் கிரேக்கன், கல்விமான், வைத்தியன். இவருடைய ஆரம்பத்தில் சாஸ்திரமனேயான போக்குண்டு அதோடு எதையும் திட்டவட்டமாய் வர்ணிக்கிற திறமையுண்டு. இவ்விரண்டும் சேர்ந்திருப்பது கஷ்டம். கிரேக்கர் தங்கள் யோசனைகளையெல்லாம் சித்திரந் தீர்ந்துவைக்கும் வழக்கமுள்ளவர்கள். லூக்கா தனது சுவிசேஷத்தை கிரேக்கனாகிய தேயோப்பிலுவுக்காக எழுதினான். இவ்விருவரும் பூரண புருஷத்துவத்தின் தன்மையை அறிய விரும்பினவர்களாகும். இதை இயேசுகிறிஸ்துவில் கண்டார்கள். ஆகையால் அவரை 'பூரண மனுஷனாக' நமக்குக் காட்டுகிறான்.

**பரி. யோவான்.** பேதுருவோடு மீன் பிடிப்பதில் கலிலேயாக்கடல் கூட்டாளி. மீன்பிடிக்கும் காலத்திலேயே மனோபாவனை செய்வதில் தேர்ந்தவன். தூரத்திலுள்ளவைகளை அறிய ஆசைப்பட்டவன். ஞானி. மாற்கு தமது சுவிசேஷத்தை எழுதினார். மத்தேயுவும் எழுதினார். லூக்காவும் முடித்துவிட்டார். இவர் இம்மூன்றையும் வாசித்திருப்பார். இம் மூன்றில் கடைசியான சுவிசேஷம எழுதி 50 வருஷத்துக்குபின் தாமும் இயேசுகிறிஸ்துவின் சரித்திரம் எழுத ஆரம்பித்தார். ஆகவே அவரை தேவனாக நமக்குக் காட்டுகிறார்.

நாலு சுவிசேஷகரும் கிறிஸ்துவைத் தம்தம் அறிவு, அனுபவத்திற்குத்தக்கதாக ஒருவர் 'ராஜா' வென்றும், ஒருவர் 'ஊழியக்காரன்' என்றும் ஒருவர் 'மனுஷன்' என்றும் ஒருவர் 'தேவன்' என்றும் காட்டுகிறார்கள். ஆகவே, இயேசுகிறிஸ்து ராஜாவும் ஊழியக்காரனும் மனுஷனும் தேவனுமாக விளங்குகிறார்

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

December, 1921. Registered No. M. 136.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

Vol. XXII டிசம்பர் 1921

## II. அவர் வருவார்

முந்தின மாதத்தில வரப்போகிற இராஜாவின் மகிமையையும் மகத்துவத்தையும்பற்றிப் பார்த்தோம். அவருடைய ராஜ்யத்தின் சிறப்பையும் சமாதானத்தையும் கவனித்தோம். அவர் மனுஷாவதாரத்தில் வருவதையும் அவர் மகிமையில் வெளிப்படுவதையுங்குறித்துப் பேசியிருக்கிறது. இவ்விரண்டுமே இரண்டு வித்தியாசமான வருகைகளைக் குறிக்கும் என்றாவது இவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசங்களைச் சமாதானப்படுத்தவாவது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் பிரயத்தனப்படுகிறதில்லை. ஓரிடத்தில் பாடுபடுகிற மேசியாவைக்குறிததும் இன்னோரிடத்தில் இராஜாவாக விளங்கும் மேசியாவைக்குறித்தும் பேசுகிறது. நமக்குப் பிறக்கப்போகிற பாலகன் எவ்வாறு 'வல்லமையுள்ள தேவனும் நித்திய பிதாவாகவும் இருப்பார்'. (ஏசா. 9: 6) என்பது சொல்லப்படவில்லை. நமக்கு இந்தத் தீர்க்கதரிசனங்கள் தெளிவாயிருக்கின்றன. ஆனால் வேதம் ஒன்றுக்கொன்று நேர் விரோதமாயிருக்கிறதென்று அக்காலத்து யூதர்கள் சொல்வாரானால் ஒப்புக்கொள்ளத்தக்கதே. ஆகவே அத்தீர்க்கதரிசனங்களை புதிய ஏற்பாடு எடுத்துக்காட்டி அவைகள் ஒருவாறு நிறைவேறியிருக்கின்றன வென்பதைத தெரிவிக்கிறது. நாம் புதிய ஏற்பாட்டாகமத்தை வாசிக்கும்போது 'ஓர் கன்னிகை கர்ப்பவதியாகி ஓர் குமாரனைப் பெற்றாள் அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிட்டார்கள்' என்று காண்கையில் ஏசாயாவின் தீர்க்கத்தரிசனம் (ஏசா. 7: 14) நிறைவேறிற்று என்று அறிகிறோம. உலகமெங்கும் குடிமதிப்பெழுதப்பட்டபோதிலும் (பரி. லூக். 2. 2) கிறிஸ்து பெத்லேகேமில் பிறந்தார என்று நாம் அறியும்போது மீகாவின் தீர்க்கதரிதனம் நிறைவேறிற்று என்று பார்க்கிறோம்( மீகா. 5. 2) அகுஸ்துராயன் குடிமதிப்பெழுதக் கட்டளை பிறப்பித்தபோது தான் தீர்க்கத்தரிசனம் நிறைவேறக் கருவியாயிருப்பேனென்பதை நினைத்திருக்கமாட்டான. மேசியா தமக்குரியவர்களோடு சங்கரிக்கப்படுவார்' என்னும் (தானி. 9. 26

புறத்திருப்புதல்) தீர்க்கதரிசனம், எல்லாரும் அவனைவிட்டு ஓடிப்போனார்கள் என்பதில் நிறைவேறுதலடைந்தது எவ்வளவு ஆச்சரியம்! சங்கீதம் 22-ல் சொல்லிய தீர்க்கதரிசனங்களில் இருபது கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டிருந்த 48-மணி நேரங்களுக்குள் நிறைவேறின. என்றாலும் 22-ம் சங்கீதம் எழுதப்பட்டபோது சிலுவை மரணம் என்பதே கிடையாது.

இவைகளின் கருத்து நமக்கு விளங்கவேண்டும் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் இவைகள் நிறைவேறுகிறதற்கு நூறு வருஷங்களுக்கு முன் இவைகளை முன்னதாகத் தமது தீர்க்கதரிசிகளுக்கு முன்னறிவித்திருக்கிறார். நாம் விழித்துக்கொண்டு எதிர்நோக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். வருகிறவரான ராஜாவும் தமது இரண்டாம் வருகையைக்குறித்து அடிக்கடி பேசியிருக்கிறார், தாம் வருவேனென்றும் தமது வருகைக்கு நாம் காத்திருந்து விழித்திருந்து வேலைசெய்யவேண்டுமென்றும் தீர்க்கதரிசனமாகவும் உவமையாகவும் கட்டளையாகவும் தமது வருகையைக்குறித்து நமக்குப் போதிக்கிறார். புதிய ஏற்பாட்டில் 300 வசனங்கள் அவருடைய வருகையின் சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த விஷயமே அதிகமாய் வற்புறுத்திப் பேசப்பட்டிருக்கின்றன.

'நான் உங்களுக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணப்போகிறேன' என்று ஆண்டவர் சொன்னார். மோக்ஷம் நமக்குப் போதுமான அதிசயத்தையும் அழகையும் கொடுக்கிற இடமல்லவா? அப்படியானால் ஆயத்தம் பண்ணவேண்டியதென்ன? கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற பாக்கியம் என்ன? கர்த்தரே நமக்கு வேண்டும். அவரில்லாமல் மோக்ஷம் வெறுமையானதே. ஆகையால் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன், நான்போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்' என்கிறார் (பரி யோ. 14. 2, 3) அவருடைய ஊக்கமான மன்றாட்டும் இதுவே. பிதாவே, உலகத்தோற்றத்துக்குமுன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியால் நீர் எனக்குத்தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்' (பரி. யோ. 17. 24).

அவர் முன்னமே போய்விட்டாலும் திரும்பவும் வருவார். அவர் வரும்போது நம்மைத் தம்மிடம் சேர்த்துக்கொள்வார். அதுமாத்திரமல்ல அவர் வரும்போது உலக முழுவதிலும் அவருடைய மகிமை விளங்குவதோடு அவருடைய பூரண வெளிப்படுத்தலும் உண்டாகும் என்கிறார். 'மின்னல் கிழக்கிலிருந்துதோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்' (பரி. மத். 24: 27). இது அவர் திடீ



ரென்று வருவதைக் குறிக்காமல் அதின் அதிசய வெளிப்படுதலைக் குறிக்கிறது. நல்ல சமாரியனின் உவமையிலும் தமது வருகையைக் குறிப்பாய்ப் பேசுகிறார். "நான் திரும்பவரும்போது உனக்குக் கொடுப்பேன்" அவருடைய மரணத்துக்கு பரி. நற்கருணையை நியமித்தார். பரி. பவுல் பரிசுத்தாவியினால் ஏவப்பட்டு அவருடைய மரணத்தின் ஞாபகமாகிய இதை அவர் வருமளவும் நாம் கொண்டாடவேண்டுமென்று கற்பிக்கிறார் (1 கொரி. 11: 26)- பரிசுத்த நற்கருணை கொண்டாடப்படும்போதெல்லாம் நமது நினைவுகள் "அவர் மறுபடியும் வருவார்" என்னும் நிச்சய சம்பவத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. அவர் சிலுவையிலறையப்பட்டு மரித்து அடக்கம்பண்ணப்பட்டார். மகிமையோடு உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறினார். உடனே இரண்டு தூதர்கள் வெண்வஸ்திரம் தரித்தவர்களாய் பிரமிப்படைந்த சீஷர்களுக்குத் தேவனிடத்திலிருந்து செய்திகொண்டு வருகிறார்கள். தேவன் அனுப்பின செய்தி என்ன? "அவர் மறுபடியும் வருவார்" (அப். 1: 11).

வருஷங்கள் செல்லச்செல்ல, அப்போஸ்தலர் அவருடைய வருகையைக் குறித்து அடிக்கடி பேசியிருக்கிறார்கள். அவருடைய இரண்டாம் வருகையைக்குறித்துப் புதிதான சத்தியங்கள் அறிவிக்கப்படுகிறது. பரி. பவுல் அதைக்குறித்து வெளிப்படுதல்பெற்று, உயிரோடிருக்கிறவர்களும் மரித்தோருமான விசுவாசிகள் அவரோடுகூட ஆகாயத்தில் அவரைச்சந்திக்க எடுத்துக்கொள்ளப்படுவார்களென்று சொல்லுகிறார். பரி. யோவான் "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாக நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம்" (1. யோ. 3: 2). என்று சொல்லுகிறா. அப்போஸ்தலரும் பரிசுத்தவான்களுமான யாவரும் தங்கள் ஆண்டவரும் எஜமானுமாகிய இயேசு மெய்யாக மறுபடியும் வருவார் என்னும் மகத்துவ சம்பவத்தை எதிர்நோக்கிக்கொண்டேயிருந்தார்களென்று நாம் வேதத்தில் பார்க்கிறோம். மனுஷரும், தேவதூதர்களும் இயேசுநாதர் தாமும் "அவர் மறுபடியும் வருவார்" என்னும் சத்தியத்தை சாட்சியாக அறிவித்திருக்கிறார்கள்.

1900வருஷங்களுக்குமுன் மரித்துப்போன பக்தருடைய எதிர்நோக்கும் விசுவாசத்தைக் கவனிக்கும்போது, அவர் வந்துவிட்டாரோவென்னும் எண்ணம் உண்டாகலாம். பரி. பவுலின் காலத்திலுள்ள சில கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று (2 தீமோ. 2: 18) என்று எண்ணினது போல இக்காலத்து விசுவாசிகளிலும் சிலர் அவர் வருகை முன்னமே நடந்தாயிற்று என்பதுபோல எண்ணுகிறார்கள். கர்த்தருடைய பக்தர்களில் சிலர், அவருடைய வருகையென்பது திட்டமாய் அவர் இனிமேல் வரும் ஓர் சம்பவத்தைக் குறிக்காமல் அடிக்கடி நடக்கும் சம்பவங்களைக் குறிக்கும்

என்று நினைக்கிறார்கள். திருஷ்டாந்தமாக, ஞானஸ்நானம், திடப்படுத்தல், பரி. நற்கருணையாகிய இவைகளை அனுசரிக்கிறதில் வருகிறார் என்றும், விசேஷித்த சந்தோஷம், துக்கம் ஆகிய இச்சம்பவங்கள் நடைபெறும்போது வருகிறார் என்றும், இன்னும் விசேஷமாய் மரணத்திலும் அவர் வருகிறார் என்றும் சொல்லுகிறார்கள்.

புதிய ஏற்பாட்டில் அவருடைய வருகை நாம் எதிர்நோக்கவேண்டிய ஓர் காரியம் என்று அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. மரணத்தைக் குறித்து அப்படிச் சொல்லவில்லை. நமது கர்த்தர் சிநேகிதன், மரணமோ சத்துரு. பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு. மரணம் ஜெயிக்கப்பட்ட சத்துரு. மரணத்தை ஜெயித்தவனையே நாம் எதிர்நோக்கவேண்டும். முன் சொன்ன சம்பவங்களில் தேவனுடைய வல்லமையும் அவருடைய மகிமையும் வெளிப்படுகிறதாக நமக்குத் தெரிகிறதில்லை. மரணம் ஒன்றில்தவிர, மற்றச் சம்பவங்களில் நாம் அவரிடத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறதில்லை (பரி. யோ. 14: 3). ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துஇயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம். கிறிஸ்துவின் அவயவங்களானோம். ஆனால் தாம் மறுபடியும் வருவதான வாக்கைப்பெற்றவர்கள் அவருக்குச் சொந்தமானவர்களான அவருடைய சீஷர்களே. அவர் வருகையைப்பற்றி எழுதின நிருபங்களெல்லாம் ஞானஸ்நானம் பெற்று விசுவாசிகளானவர்களுக்கே எழுதப்பட்டன. ஆகவே ஞானஸ்நானம் இரண்டாவது வருகையல்ல. திடப்படுத்தல் என்று சொல்லப்பட்ட கைகளை வைக்குதலானது புறஜாதிகளுக்கும் பரிசுத்தாவியின் வரம் அருளப்படுவதைக் குறிக்கும். ஆனால் இது இரண்டாம் வருகையல்ல. ஏனென்றால் இந்தத் திடப்படுத்தலைப் பெற்றவர்களே அவருடைய வருகைக்காகக் காத்திருக்கவேண்டும் என்ற கட்டளை பெற்றார்கள். பரி. பவுல் பரிசுத்த நற்கருணை அவருடைய வருகையைக் குறிக்கும் என்று சொல்லவேயில்லை. ஏனென்றால் அவர் தாமே "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரி. 11: 26) என்று சொல்லுகிறார். கிறிஸ்துவின் வருகையைக்குறித்து மேலே சொல்லப்பட்ட பல அபிப்பிராயமுடையவர்கள் நிருபங்களில் 'இயேசுகிறிஸ்து நமது இருதயங்களில் வாசம்பண்ணுகிறார், அவரே நம்முடைய ஜீவன், ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் அவயவம்' என்னும் சத்தியங்களை பெரிதாய்ப் பாராட்டுகிறதில்லை. நாமோ இந்தச் சத்தியங்களை மறந்துபோகாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அவர் நமது உள்ளத்தில் வாசம்பண்ணுகிறார் என்கிற சத்தியத்தோடேகூட அவர் மனுஷர் காணத்தக்கவிதமாய் வெளியரங்கமாய் மெய்யாகவே சரீரப்பிரகாரமாகத் தம்மை வெளிப்படுத்த



இரண்டாந்தரம் வருவார் என்கிற சத்தியம் எவ்வளவு ஆறுதலான மகிமை நிறைந்தது. துன்பப்படும் காலங்கள் கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கின்றனவென்பது ஆச்சரியம், கர்த்தரால் சிட்சிக்கப்படுதல் பாக்கியமான நம்பிக்கையாகுமா? பெந்தெகோஸ்திலும், எருசலேமின் அழிவிலும் கிறிஸ்து வந்தார் என்று சிலர் எண்ணுகிறார்கள். பெந்தெகோஸ்தில் வேறொரு தேற்றரவாளன் வந்தார். பெந்தெகோஸ்தேக்குப் பின்தான் சீஷர்களுக்குக் கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய மிகுந்த ஆவலுண்டாயிற்று. இரண்டாம் வருகையைப்பற்றிய மிகுதியான போதனை பெந்தெகோஸ்தே நடந்து வெகுகாலத்துக்குப்பின் உண்டாயிற்று. வெளிப்படுத்தலின் ஆகமத்தில் சொல்லப்பட்ட சத்தியம் எருசலேமின் அழிவுக்கு வெகுகாலத்துக்குப் பின்னானது

ஆகவே, பிரதானமான சம்பவங்களைக் கிறிஸ்துவின் வருகையோடு குழப்பக்கூடாது. அவர் வரும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். உயிரோடிருக்கிற பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இவ்விரண்டும் இன்னும் நடக்கவில்லை. ஒருவகையாய்ப் பார்த்தால் அவர் எப்பொழுதும் வந்துகொண்டேயிருக்கிறார். கிறிஸ்துவே எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருக்கிறார் (கொலே. 3. 11). சகலமும் அவருக்குள் சிருஷ்டிக்கப்பட்டன. அவர் சகல சிருஷ்டிக்கும் முந்தினவர், அவருக்குள் சகலமும் நிலைத்திருக்கிறது (கொலோ. 1. 16, 17). இவ்விதமாய்க் கிறிஸ்து எப்போதும் நம்மோடிருக்கிறார். புதிது புதிதாய்த் தம்மை வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கிறார். ஆனால் 'அவர் மறுபடியும் வருவார்' என்னும் தீர்க்கதரிசனம் இவைகளின் மூலமாய் நிறைவேறுதலடைந்தது என்று சொல்லக்கூடாது. இந்தப் பெரிய சம்பவத்துக்காக நாம் விழித்திருந்து காத்திருக்கிறோம்.

கிறிஸ்து தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக வெளிப்பட்டார் (எபி 9: 26) என்று நாம் அறிவோம். நமக்காகத் தேவசமுகத்தில் பிரவேசித்திருக்கிறார் (எபி 9. 24). கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு ரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபி. 9. 28). இந்தப் பிரத்தியட்சமான வெளிப்படுதலுக்காகவே நாம் காத்துக்கொண்டிருக்கிறோம்.

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் பல ஆச்சரியமான நிறைவேறுதலடைந்தன. இந்தத் தீர்க்கதரிசனமும் ஏற்ற காலத்தில் நிறைவேறும். ரட்சகரின் மகிமையான வெளிப்படுதல் சமீபமாயிருக்கிறதென்ற நிச்சயத்தால் அவர் வெளிப்படும்போது சகலரும் ஆயத்தமாயிருக்கவேண்டு

மென்று ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம். 1923-ம் வருஷத்தில் அல்லது 1934-ம் வருஷத்தில் அவர் வருவாரென்ற நிச்சயம் நமக்கிருக்குமானால் நாம் அசைதலாயிருப்போமா? கெட்டுப்போன ஆத்துமாக்களை அழிவினின்று ரட்சிக்க ஆத்திரப்படுவோமல்லவா? ஆனால் வேதத்தில் நிபுணனான எந்தச் சாஸ்திரியும் அந்த முடிவின் காலத்தைக் குறிப்பிடத் துணியான். என்றாலும் நமது ஆண்டவர் அடையாளங்களை நோக்கிப்பார்த்துக் கவனிக்கும்படி நம்மை எச்சரிக்கிறார். 'அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால் நீங்கள் நிமிர்ந்துபார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள்.' (லூக். 21: 27, 28). 25 நூற்றாண்டுகளுக்குமுன் 'முடிவுகாலத்தில் அறிவு பெருகிப்போம், ஞானவான்கள் உணர்ந்துகொள்வார்கள்' (தானி. 12. 4, 10) என்று மீகாவேல் தானியேலிடம் சொல்லியிருக்கிறான். ஆகையால் வரப்போகிற சம்பவங்களின் காலத்தைக் குறிக்க நாம் துணிவுகொள்ளாமல் கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறதென்ற நிச்சயமுடையவர்களாய் விழித்திருப்போமாக.

(இன்னும் வரும்)

## வேதபாடக் குறிப்புகள்

தூங்குகிற கிறிஸ்தவர்கள் (எபேசி. 5. 14).
தங்கள் பெலனை இழந்துபோகிறார்கள் (நியாயாதி. 16. 19).
தங்கள் ஆயுதத்தை இழந்துபோகிறார்கள் (1 சாமு. 26. 7-12).
சாட்சிகொடுக்கும் சமயத்தை இழந்துபோகிறார்கள் (யோ. 1. 5).
கிறிஸ்துவின் பாடுகளின் ஐக்யத்தை இழந்துபோகிறார்கள் (மத். 26. 40).
அவருடைய மகிமையின் வெளிப்படுத்தலை இழந்துபோகிறார்கள் (லூக். 9. 32).
கிறிஸ்துவின் நம்பிக்கையை அசட்டைசெய்கிறார்கள் (மத். 13 25).
மோக்ஷத்தை இழந்துபோகிறார்கள் (மத். 25. 5).

### இருபத்துமூன்றாம் சங்கீதம்

அவர் போஷிக்கிறார் (வ. 1).
அவர் நடத்துகிறார் (வ. 2).
அவர் தேற்றுகிறார் (வ. 3) உயிர்ப்பிக்கிறார்.
அவர் தேற்றுகிறார் (வ. 4) ஆறுதல்படுத்துகிறார்.
அவர் உயர்த்துகிறார் (வ. 5).
அவர் அபிஷேகம்பண்ணுகிறார் (வ. 5).



## ஜீவனில் எனக்கு மேய்ப்பர், மரணத்தில் என் நம்பிக்கை, நித்தியத்தில் என் வீடு

பூரண திருப்தி—நான் தாழ்ச்சியடையேன்.
பூரண இளைப்பாறுதல்—என்னைத் தண்ணீர்களண்டையில் விடுகிறார் (Maketh me to lie down)

பூரண அமைதி—அமர்ந்த தண்ணீர்கள்.
பூரண தேறுதல்—ஆத்துமாவைத் தேற்றுகிறார்
பூரண நடத்துதல்—என்னைக் கொண்டுபோய்விடுகிறார்.
பூரண பிரதிஷ்டை—என் தலையை அபிஷேகம்பண்ணுகிறார்.
பூரண சந்தோஷம்—என் பாத்திரம் நிரம்பிவழிகிறது.

நீதியின் பாதைகள் (வ. 3).
நீதியின் சால்வை ஏசா 61. 10.
நீதியின் பலிகள். உபா. 33. 19.
நீதியின் வாசல்கள் சங். 118. 19.
நீதியைத் தரித்துக்கொள்ளல். சங். 132. 9.
நீதியின் பாதை. நீதி. 12. 28.
நீதியின் கிரியை, பலன். ஏசா. 32. 17.
நம்முடைய நீதி அழுக்கான கந்தை. ஏசா. 64 6.

### 23-ம் சங்கீதம்

எனக்குக் கீழே—புல்லுள்ள இடங்கள்.
என் பக்கத்தில்—அமர்ந்த தண்ணீர்கள்.
என்னோடு—மேய்ப்பர்.
எனக்கு முன்—பந்தி
என்னைச் சுற்றிலும்—சத்துருக்கள்.
எனக்குப் பின்—நன்மையும் கிருபையும்.
எனக்கப்பால்—கர்த்தருடைய வீடு.
கிறிஸ்தவன் மாத்திரம் 23-ம் சங்கீதத்தைத் தன்னுடையதென்னலாம்.

### 22, 23, 24-ம் சங்கீதங்கள்

கர்த்தர் என் இரட்சகர். சங் 22
கர்த்தர் என் மேய்ப்பர். சங். 23.
கர்த்தர் என் இராஜா. சங். 24.
சிலுவை, கோல், கிரீடம். சங். 22, 23, 24.
நேற்று, இன்று, என்றும், சங். 22, 23 24.
நல்ல மேய்ப்பர் மரித்தார். யோ. 10. 11.

பெரிய மேய்ப்பர் உயிர்ப்பித்தார். எபி. 13. 20.
பிரதான மேய்ப்பர் வெளிப்படுவார். 1 பேதுரு 5. 4.
விசுவாசத்தின் நோக்கம். சங். 22.
அன்பின் நோக்கம். சங் 23.
நம்பிக்கையின் நோக்கம். சங். 2
சமாதானம் தரும். ரோ. 5. 1.
கிருபை கிடைக்கும். ரோ. 5. 2.
மகிமையடைவோம். ரோ. 5. 2.

## நரிகள். உன். 2. 15

கவலைகள். லூக். 8. 14.
ஐசுவரியம் ,, 18. 23.
இன்பங்கள். 2 தீமோ. 3. 4.
வேதத்தை அசட்டைசெய்தல். கொலோ. 1 10.
அவரிடத்தில் அன்புகூராமை. யோ. 21. 15.
அசுத்த இருதயத்தோடுள்ள தேவபக்தியின் வேஷம். ரோ. 6. 20, 21.
சுயவெறுப்பில்லாத நான். யோ. 5. 6.

## மறுபடியும் பிறந்தவன்

1. பாவஞ்செய்தவன் மறுபடியும் பிறந்தவனல்ல. 1 யோ. 3. 9 5-18. தேவனால் பிறந்தவன் எவனும் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியால் பாவஞ்செய்யமாட்டான். இது தேவசத்தியம். எப்படி ஆகும் என்று சொல்லவேண்டாம். சத்தியமே சத்தியம் என்று காட்டும் படிக்கு ஒரு விசைமாத்திரமல்ல, இரண்டு விசையும் இப்படிச் சொல்லியிருக்கிறார். இது கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார்கள் என்று சொல்லுவீர்களோ (யோ 6. 60). அப்படிச் சொல்லவேண்டாம். பாவம் செய்து, செய்து, தேவனுடைய பிள்ளையாயிருக்கிறேன் என்று நினைப்பது விருதா. 'தேவனால் பிறந்தவன் எவனும் பாவஞ்செய்யமாட்டான் மனமறியவேண்டுமென்று, வழக்கமாய் பாவஞ்செய்யமாட்டான் இங்கே சொல்லப்பட்ட உபதேசத்தை நன்றாய்ச் சிந்தித்துப்பார்த்தால் இலேசாய் விளங்கும். இரண்டு தகப்பன்மார், தேவன், பிசாசு. இரண்டுவகையான பிள்ளைகள் தேவனுடையபிள்ளைகள், பிசாசின் பிள்ளைகள் (வ. 10) பிசாசு பாவஞ்செய்கிறான். அவன் செய்வதெல்லாம் பாவம். பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான். (வ. 8) தேவனோ பாவமில்லாதவர். பிசாசின் பிள்ளைகள் பாவஞ்செய்வது வழக்கம். தங்கள் தகப்பனைப்



போலவே பொய் சொல்லுகிறார்கள். கோபம் கொள்ளுகிறார்கள் திட்டுகிறார்கள். பொல்லாப்புச் செய்கிறார்கள். அவர்கள் செய்வதெல்லாம் பாவம் தேவனுடைய பிள்ளைகளோ அப்படித் துணிந்து பாவஞ்செய்யமாட்டார்கள். தங்கள் பரமதகப்பனைப்போலவே பரிசுத்த ஜீவியஞ்செய்வது அவர்களுடைய வழக்கம். பாவஞ்செய்யாமலே தங்களைக் காக்கத் தேவன் வல்லவராயிருக்கிறார். எப்போதாவது, ஏகதேசம் அஜாக்கிரதையினாலே ஒரு பாவம் செய்தார்களானால் உடனே மனங்கசந்து துக்கப்பட்டு ரக்ஷகரிடத்தில் ஓடி அதை அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு இனிமேல் பாவஞ்செய்யாதபடிக்கு அவருடைய பெலனைக் கேட்டு விழிப்போடு நடந்துகொள்வார்கள். அப்படியானால் உங்களுடைய நிலைமையை லேசாய் அறிந்து கொள்ளலாம் நீ தேவனுடைய பிள்ளையா? பிசாசின் பிள்ளையா? பாவத்தை வெறுத்து அதை ஜெயிக்கிறவனோ பாவத்தில் நிலைத்திருக்கிறவன் தேவனுடைய பிள்ளையல்ல. கூடாதகாரியம். இந்த லக்ஷணத்தைக் கொண்டு உன் ஜீவியத்தைச் சோதித்துப்பார். ஆலமரத்தின் வித்திலிருந்து ஆலமரம் உண்டாகுமேயல்லாமல் வேம்பு உண்டாமோ? அவருடைய வித்து எனக்குள் இருந்தால் அந்தப் பரிசுத்த வித்திலிருந்து பாவம் உண்டாகுமா? ஒருபோதுமில்லை. ஆகையால் பாவஞ்செய்கிறவனுடைய இருதயத்தில் அந்த வித்து, ஆவி, இல்லையென்றறியலாம். பாவஞ்செய்கிற சபையானே, நீ இன்னும் பிறக்கவில்லை. எலிசா தீர்க்கதரிசி எரிகோ பட்டணத்தில் தங்கும்போது அந்தப் பட்டணத்து ஜனங்கள் அவனிடத்தில் வந்து, இந்தப் பட்டணம் குடியிருப்புக்கு நல்லது. தண்ணீரோ கெட்டது நிலமும் பாழ் நிலம் என்று தெரியப்படுத்தினார்கள். பார்த்தீர்களா? கெட்ட தண்ணீர் பாழ்நிலம்; என்ன செய்தான்? நீரூற்றண்டைக்குப்போய் உப்பை அதிலேபோட்டு, இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன் இனி இதனால் சாவும் வராது. நிலப்பாழுமிராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான் (ii ராஜா. 2. 19–21) ஊற்று சரி என்றால் அதிலிருந்து ஓடும் தண்ணீரும் நன்றாயிருக்கும். ஆண்டவரே! இந்த ஜனங்கள் சீர்வந்து வாசஞ்செய்கிறதினாலே குடியிருப்புக்கு ஏற்றவர்கள். அவர்கள் சுபாவம், செய்கைகளோ கெட்டது. இருதயமும் பாழ் நிலம். உம்முடைய கிருபையாகிய உப்பைக் கொண்டுவாரும் மறுபிறப்பைக் கட்டளையிடும்.

3. அன்பில்லாதவன் மறுபடியும் பிறந்தவனல்ல. 1. யோ. 4. 7 'அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவேயிருக்கிறார். கிறிஸ்துநாதர் அன்பின் சுரூபியாக விளங்குகிறார். தேவனுடைய சுபாவம் அன்பு அவருடைய தன்மை அன்பு, அவருடைய சிந்தை கிரியை எல்லாம் அன்பு ஒரு மனுஷன் அறிவாளி, மார்க்கத்தில் மெத்த வைராக்கியமுள்ளவன், மார்க்

கம் பாம்புப்படி அதிகப் பணங்களைச் செலவழிக்கிறான். பிரசங்கம்பண்ணினான். அன்பில்லை, மறுபடியும் பிறந்தவனோ? சந்தேகம். கிறிஸ்தவர்களே! அன்புள்ளவர்களாயிருக்கிறீர்களா? இதோ ஒரு குடும்பம். அண்ணனுக்கும் தம்பிக்கும் மனஸ்தாபம், அன்பில்லை மறுபடியும் பிறந்தவர்களோ? இன்னொரு வீடு, மாமிக்கும் மருமகளுக்கும் சண்டை. அன்பு எங்கே? மறுபடியும் பிறந்தவர்களோ? இன்னமும் அந்த வீட்டுக்காரருக்கும் இந்த வீட்டுக்காரருக்கும் பேச்சு வார்த்தையில்லை. மறுபடியும் பிறந்தவர்களோ? அப்புறம் ஒரு மனுஷன் சபையான் என்றாலும் சரி, மிஷன் ஆசாமி என்றாலும் சரி, அவனைச் சூழ ஏராளமான ஜனங்கள் பாவத்தினாலே கெட்டுப்போகிறார்கள். அவர்கள்மேல் மனதுருகி அவர்கள் குணப்பட விரும்பாமலும் முயற்சிசெய்யாமலும் இருந்தால் அன்பு எங்கே? மறுபடியும் பிறந்தவனோ? மோசம் போகாதேயுங்கள். அன்பில்லாதவன் தேவனை அறியான்.

4. மெய்விசுவாசமற்றவன் மறுபடியும் பிறந்தவனல்ல. 1யோ. 5:1 'இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான். இதைக் கேட்டவுடனே சிலர் ஆறுதலடைந்து, சரி, ஒருவேளை எனக்கு அவ்வளவு பரிசுத்தமும் அன்பும் இல்லாதேபோனாலும் எனக்கு நல்ல விசுவாசமுண்டு என்று சொன்னாலும் சொல்லுவார்கள். சற்று பொறுங்கள். உன் விசுவாசம் எப்படிப்பட்டது? இரண்டு வகையான விசுவாசமுண்டு. உயிருள்ள விசுவாசமுண்டு. செத்த விசுவாசமுண்டு (யாக். 2: 17). 'விசுவாசம் கிரியைகள் இல்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்'. செத்தவிசுவாசம் வெறும் விசுவாசம். உதவாத விசுவாசம். அந்த விசுவாசம் உன்னை ரட்சிக்குமா? இயேசுவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லுகிற சகோதரனே, சகோதரியே, உன் விசுவாசம் உயிருள்ள விசுவாசமா? செத்த விசுவாசமா? இங்கே வாசிக்கிறோம். பிசாசுக்கும் விசுவாசமுண்டு. ரொம்ப விசுவாசமுண்டு. 'பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன' (யாக். 2: 19). சொல்லவேண்டுமானால் பிசாசுக்கு இருக்கிற அவ்வளவு விசுவாசம் அநேக கிறிஸ்தவர்களுக்கு இல்லை. அவன் விசுவாசித்து நடுங்குகிறான். நீ எப்போதாகிலும் நடுங்கினதுண்டா? உன் பாவத்தை உணர்ந்து நடுங்குகிறாயா? வரப்போகிற தண்டனையை உணர்ந்து நடுங்குகிறாயா? ஆ! அந்தச் செத்த விசுவாசம் வேதனையைக் கொடுக்குமேயல்லாமல் ரக்ஷிக்காது. 'இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்' அதாவதென்ன? இயேசுவானவரே தனக்குக் கிறிஸ்து, அபிஷேகம்பண்ணப்பட்ட ரக்ஷகர், ராஜா, ஆண்டவர் என்று மெய்யாய் விசுவாசித்து, அந்த ரக்ஷகர் தன் இருதயத்தில் வந்து அங்கே ஆளும்படி இடம் கொடுக்கிறவனே தேவனால் பிறந்திருக்கிறான். இயேசுவானவரே கிறிஸ்து என்று



சொல்லியும் அவர் சித்தத்துக்கு நேரே விரோதமாய் நடந்தால் என்ன விசுவாசி!

5. இவ்வுலகத்தை நேசிக்கிறவன் மறுபடியும் பிறந்தவனல்ல. 1 யோ. 5: 4. 'தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்' நீ உலகத்தை ஜெயிக்கிறவனா? ஆ! உண்மை சொல்லவேண்டுமானால் உலகமானது அநேக கிறிஸ்தவர்களை ஜெயிக்கிறது. ஏன்? அவர்கள் தேவனால் பிறந்தவர்களல்ல, அநேகருடைய நினைவு, பேச்சு எல்லாம் கூலி, நிலம், கணை, கொடுக்கல் வாங்கல், வழக்கு, பிராது, வியாச்சியம், இவ்வுலகத்தை நேசிக்கிறார்கள். இங்கேதானிருக்க விரும்புகிறார்கள். ஸ்திரீகளுடைய பேச்சு, நகைநட்டு, பணம் சாப்பாடு முதலானது. ஐயோ, உலகத்தை ஜெயிக்கிற சபையார் எங்கே? சிலர் உண்டு. 'தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்.' பவுலப்போஸ்தலன் சொல்லுகிறதுபோல 'அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. நானும் உலகத்துக்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன் (கலா. 6: 14). எந்நேரமும் ஜெயம், பூரண ஜெயம், ரக்ஷகரால் ஜெயம்.

## II. பரிசேயனாகிய சவுல் (தொடர்ச்சி)

1. வைராக்ய வாழ்க்கையுள்ளவர். பரிசேயருடைய கொள்கைகளில்சில நன்மைகளிருந்தபோதிலும் மிச்சமான தீமைகளுண்டு. தேவனையும் பூர்வ மார்க்கத்தையும்பற்றிய வைராக்யம் புறம்பான சடங்காசாரங்களிலும் பாரம்பரியங்களிலும் முடிவுபெற்றது. மார்க்கம் இருதயத்துக்கடுத்ததாயிராமல் வெளித்தோற்றமாயிருந்தது. ரட்சகருக்கும் பரிசேயருக்கும் கடைசிபரியந்தம் ஒற்றுமையிருந்ததில்லை. யூதர்கள் மாத்திரம் தேவனுடைய ஜனங்கள், மற்றவர்களெல்லாரும் புறம்பானவர்கள் என்பதும், குரூரசிந்தையாலல்ல தேவ வைராக்யத்தினாலேயே மற்றவர்களை அழித்து நாசம்பண்ணுவதுமே பரிசேய வைராக்யம். யூதர்கள் ஸ்தேவானைக் கொலைசெய்ததும் இந்த வைராக்ய ஆவியினாலேயே.

2. துன்பப்படுத்துகிறவர். ஸ்தேவானைக் கொலைசெய்கையில் கல்லெறியும்படி சனதரிம் சங்கத்தாரை நடத்தினவர் சவுலே. இந்தச்சம்பவத்திலிருந்துதான் துன்பப்படுத்தும் ஆவி அவரைப் பிடித்து வீடுகள்தோறும் நுழைந்து கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்த ஆரம்பித்தார். இதே சம்பவத்தில், பரிசுத்தவானாகிய ஸ்தேவானுடைய சாட்சியும், பொறுமையும் ரத்தமும், மரணமும் இவருடைய உள்ளத்தில் குணப்படுதலுக்குரிய விதையைப் போட்டதென்றும் சொல்லலாம். கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துவது பரிசேயனாகிய தன்னுடைய கடமையென்றும் அவர்களை அழித்து நாசம்பண்ணுவது தேவனுக்குப் பிரியமும் மகிமையுமான வேலையென்றும்

அவர் தமது மனச்சாட்சியோடு எண்ணினார். பிரதான ஆசாரியர் மிகுந்த சந்தோஷத்தோடு உத்தரவு கொடுத்தார்கள்.

3. மனஸ்தாபப்பட்டவர். இது பாவம் என்று பிற்காலத்தில் உணர்ந்தார். இந்த ஞாபகம் அவரை அதிகமாய் வருத்தப்படுத்தினது. என்றாலும் தான் அறியாமல் செய்தபடியால் தேவன் தமக்கு இரக்கம் காட்டினார் என்று சாட்சியிடுகிறார், இது அவருக்குள் மிகுந்த தாழ்மையையும் அபாத்திரத்தன்மையையும் உணர்த்திற்று (1 கொரி. 15: 9).

## திருஷ்டாந்தங்கள்

திமிங்கலம் பிடிக்கும் கப்பலை நடத்தின கப்பல் தலைவன் தன் கப்பலை ஓர் துறைமுகத்தில் நிறுத்திவிட்டுப் பட்டணத்துக்குள்ளேபோய் ஓய்வுநாள் காலை ஆராதனைக்கு ஓர் ஆலயத்துக்குப்போனான். ஆராதனை முடிந்தபின், குருவானவர் கப்பல் தலைவனோடு வெகு நேரம் மார்க்கவிஷயத்தைக்குறித்துச் சம்பாஷித்தும் அவன் மனதில் ஒன்றும்பட்டதாகத் தெரியவில்லை. சற்றுநேரத்துக்கப்பால், கப்பல் தலைவன் குருவானவரைப்பார்த்து, ஐயா, நீர் சொன்னதொன்றும் என் மனதில்படவில்லை ஏனென்றால் நீர் பிரசங்கம்செய்த நேரமெல்லாம் நான் திமிங்கலம் எந்த இடத்தில் அகப்படும் என்பதையே யோசித்துக்கொண்டிருந்தேன். திமிங்கலம் தவிர வேறொன்றுக்கும் என் மனதில் இடமில்லை என்றான்.

பாரசீகருடைய வேதத்துக்கடுத்த பூர்வ ஆகமங்களில் பின்வரும் காரியம் சொல்லப்படுகிறது. 'ஓர் நல்லமனுஷனுடைய ஆத்துமா மரணநதியண்டை சேரும்போது அலங்காரமும் பிரகாசமுமான ஓர் ஆண் உருவம் காணப்படுமாம். அந்த உருவமானது அந்த மனுஷனைப்பார்த்து, 'நானே உன் மெய்யான உருவம்? நான்தான். வேறல்ல. உன்னுடைய தீர்மானங்கள், போராட்டங்கள், நற்கிரியைகளின் உருவம் நானே. நான்தான் நீ நாமிருவரும் ஒன்றாகி ஒரே ஜீவனாகி ஒரே ஜீவனானோம்' என்று சொல்லுமாம்.

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

251

November, 1921. Registered No. M. 136.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

Vol. XXII நவம்பர் 1921

19 APR 1922

## I அவர் வருவார்

மேல் ஆப்பிரிக்காவிலுள்ள ஓர் பட்டணத்தில் பெரும்புசலுண்டாயிற்று. அப்பட்டணத்திலுள்ள அஞ்ஞானிகளான எளியவர்கள் மிஷன் காம்பவுண்டுக்குள் ஓடி ஒழித்தார்கள். அவர்களில் ஒருவன் மார்க்க ஆராய்ச்சி செய்கிறவன. அவன் வானம் முழுவதும் மேகத்தால் மூடியிருப்பதைப் பார்த்துத் தன் சிநேகிதனிடம் சொல்லுவான். 'அதோ, மேகத்தில் யேசு வருகிறார்போலிருக்கிறது' என்றான். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்திருக்கிறார்கள். மகமதியரின் நம்பிக்கையும் அதுவே. எருசலேமிலுள்ள சாலோமோன் கட்டின ஆலயமே தற்சமயம் ஓமாரின் பள்ளிவாசலாயிருக்கிறது. அலங்கார வாசலின் தூண்கள் ஷேபாவின் ராஜஸ்திரியால் சாலோமோனுக்கு அளிக்கப்பட்ட நன்கொடையாம். அந்த வாசலை இப்போது செங்கலால் அடைத்திருக்கிறார்கள். அடைக்கப்பட்ட இந்த வாசலை யேசுநாதர் திறந்து உட்பிரவேசித்துத் தாம் யூதரின் ராஜாவாக வருவார் என்பது மகமதியனுடைய விசுவாசம். அவர் வருவதைத் தடுக்கவே அவ்வாசலை அடைத்திருக்கிறார்களாம். கிறிஸ்து வருவார் என்பதும் 42 மாதம் தங்களுடைய ராஜாவாயிருப்பார் என்பதும் அதன்பின் மகமதுவே வருவார் என்பதும் மகமதியருடைய விசுவாசம். யூதரும் தங்கள் மேசியா வருவார் என்று எதிர்நோக்குகிறார்கள். ஆகவே கிறிஸ்தவனும், மகமதியனும், யூதனும் கிறிஸ்து வருவார் என்று ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

ஆதாம் பாவமற்றவனாய்த் தேவசாயலில் உண்டாக்கப்பட்டான் அவன் சிருஷ்டிகனோடு ஐக்யப்பட்டு அவரைச் சந்தோஷப்படுத்தும்படியாகவே உண்டாக்கப்பட்டான். ஆனால் பாவத்தில் விழுந்தான். ஸ்திரீவித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்றும் மனுஷன் மீட்கப்படுவான் என்றும் தேவன் வாக்களித்தார். ஆகிலும் பாவம் பெருகிற்று. ஜலப்பிர

யத்தால் அதைச் சுத்தம்பண்ணினார். நோவாவும் அவன் குடும்பமும் உலகத்தைப் புதுப்பிக்கவில்லை. அப்புறம் ஆபிரகாமைத் தமது சிநேகிதனாகத் தேவனே தெரிந்துகொண்டார் (ஏசா. 41: 8). அவனைப் பெரியஜாதியாக்கி நீலாதிமுதல் ஐப்பிராத்து நதிவரையுள்ள தேசத்தை அவன் சந்ததிக்குக் கொடுப்பேனென்று வாக்களித்தார். யோசபாத் இதைக் குறித்து 'எங்கள் தேவனாகிய நீர் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இந்தத் தேசத்துக் குடிகளைத் துரத்திவிட்டு இதை உம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமுடைய சந்ததிக்கு என்றைக்குமென்று கொடுக்கவில்லையா?' என்று சொல்லுகிறான் (2 நாளா. 20-7). ஆபிரகாமின் சந்ததியும் தவறிப்போயிற்று. அவர்கள் தேவனைத் தள்ளிவிட்டு உலகப்பிரகாரமான ஓர் ராஜா வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தேசம் தீட்டுப்பட்டது. அது மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என்றைக்குமல்ல. தேவனுடைய கிருபை வரங்களும் அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே' (ரோ. 11: 29). தேவனுடைய கிருபை வரத்தின்படி பலஸ்தீனா யூதருடையதே. உலகத்தின் ராஜ்யங்களெல்லாம் சேர்ந்து யுத்தம் செய்ததின் பலனாகப் பலஸ்தீனா தற்சமயம் யூதருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. துருக்கி ராஜ்யத்தோடு சமாதானம் ஆரம்பித்த பதினோராம் நாளில் ஜெர்மன் யுத்தம் முற்றுப்பெற்றதென்று சொல்லவேண்டும்.

உலக சரித்திரம் யூத ஜாதிக்குச் சம்பந்தப்பட்டது. யூதன் தன் தேசத்துக்குப் போவான் என்பதும் இயேசுகிறிஸ்து திரும்பவும் வந்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பார் என்பதும் தேவவாக்கு. யூதன் தன் தேசத்திற்குத் திரும்பிப் போய்க்கொண்டிருக்கிறான். யூதருடைய ராஜா வருவார். இவர் வருகையைப்பற்றிப் பழைய ஏற்பாட்டில் 1500 வசனங்கள் சொல்லுகின்றன. பாடுபட்டும் ஜெயிக்கிறவராக வருவார். தீர்க்கதரிசன வசனங்களின் பொருளடக்கம் மேசியாவே. சர்ப்பத்தின் தலை நசுக்கப்படவேண்டும் (ஆதி. 3. 15). தீர்க்கதரிசிகளால் முன்னுரைத்த அநேக சம்பவங்கள் நிறைவேறுதலாயின. தேவனுடைய ராஜ்யம் வல்லமையோடும் மகிமையோடும் பூமியில் ஸ்தாபிக்கப்படவேண்டும். நாமும் இப்படியே ஜெபிக்கிறோம். 'உம்முடைய ராஜ்யம் வருவதாக'. என்னைக் கேளும் அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும் பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்' (சங். 2. 8). இது நிறைவேறிற்றா? இல்லையே. நிறைவேறுமா? ஆம். எப்பொழுது? அவர் வரும்போது. இரண்டு வருஷங்களுக்குமுன் டிசம்பர்மீ 17உயன்று உலகம் முடிவடையப்போகிறதாகப் பத்திரிகைகள் பிரசுரப்படுத்தின. பொய்யாயிற்று.

நாளது வருஷம் ஆகஸ்ற்மீ 17உ ஓர் பத்திராதிபர் எழுதினார். மனுஷ ஜாதிக்கு என்ன நேரிடுமோ? ஏதோ ஓர் புதுமை, அற்புதம் நேரி



டும்போல் தோன்றுகிறது என்றார். மெய்தான் உலகத்தின் ஜாதிகளுக்கு ஓர் அதிசயம் காணப்படும். 'பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்' (ஏசா. 11: 9). 'கர்த்தர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறு ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று (மீகா. 4: 3). 'அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடு தங்கும். புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும். கன்றுக்குட்டியும் பாலசிங்கமும் காளையும் ஒருமித்திருக்கும். ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான் (ஏசா. 11. 6). 'வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து கடுவெளி களித்து புஷ்பத்தைப்போல செழிக்கும். .........வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும் வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும். .........அங்கே பெரும்பாதையான வழியுமிருக்கும். அது பரிசுத்த வழி என்னப்படும். தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை...... அங்கே சிங்கம் இருப்பதில்லை. துஷ்ட மிருகங்கள் அங்கே போவதுமில்லை. .........கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும். சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் (ஏசா. 35). இவைகள் நிறைவேறினவா? இல்லையே. தேவன் பூமியில் ஸ்தாபிக்கப்போகிற ராஜ்யத்தின் மகிமை இம்மட்டுமல்லவே. இது மோக்ஷத்தின் மகிமையல்ல. ஆனால் நூற்றாண்டுகளாய் எண்ணுக்கடங்காத பேர்கள் 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்று ஜெபிக்கிறார்களே. அதின் நிறைவேறுதலைக் காட்டுகிறது. 'இனி ஒருவன் தன் அயலானையும் ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி, கர்த்தரை அறிந்துகொள்' என்று போதிப்பதில்லை. அவர்களில் சிறியவன் முதல் பெரியவன்மட்டும் எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 31. 34). இவைகள் இன்னும் பூமியில் அறியப்படவில்லை.

ஆகிலும் தேவன் நமக்குத் திட்டமான வாக்குகள் அளித்திருக்கிறார் அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும் இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன். என் ஆலோசனை நிலைநிற்கும். எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன். அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன், அதைத் திட்டம்பண்ணினேன், அதைச் செய்துமுடிப்பேன்' (ஏசா. 46: 10, 11). தேவனே இதை நிறைவேற்றக்கூடியவர். நாகரீகம் இதைச்செய்து முடித்ததுமில்லை. முடிக்கவும் ஏலாது. என்றாலும் பூமியெங்குமுள்ள எக்காலத்து ஜனங்களும் பாக்கிய

யான ஓர் காலம் வருமென்று எதிர்நோக்கிக்கொண்டேயிருக்கிறார்கள். யுத்தத்துக்கு முன் பகிரங்கமாக ஆயிரம் வருஷ அரசாட்சி வந்துவிட்டது என்று சொன்னார்கள்.

மேற்சொன்ன தீர்க்கதரிசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. இனி மேல் நிறைவேறும் 'அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்' என்று கர்த்தர் தாமே சொல்லியிருக்கிறார். ஓர் ராஜ்யம் வருமென்றால், ராஜாவும் வரவேண்டும். தேவவசனத்தை நம்பின யூதர்கள், 'என்றென்றைக்கும் தாவீதின் சந்ததியை நிலைப்படுத்தி தலைமுறை தலைமுறையாக அவன் சிங்காசனத்தை ஸ்தாபிப்பேன்' என்ற வார்த்தைகள் மேசியாவில் நிறைவேறும் என்று எதிர்நோக்கினார்கள். ஏசாயா அவரைக்குறித்து 'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். தாவீதினுடைய சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி அதை அதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை என்று சொல்லுகிறான் (ஏசா. 9: 6, 7). எரேமியாவும் தெளிவாய்ச் சொல்லுகிறது என்னவென்றால், 'இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன், அவர் ராஜாவாயிருந்து ஞானமாய் ராஜரீகம்பண்ணி பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்' என்று சொல்லுகிறான். அவர் பிறக்கிற இடமும் தெரியப்படுத்தியிருக்கிறது (மீகா 5: 2).

இந்தத் தீர்க்கதரிசனங்களெல்லாம் மேசியாவாக வந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே குறிக்கின்றன. ஆனால் அவர் தாவீதின் சிங்காசனத்தில் இராஜாவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சிலுவையில் அவர் ராஜாவென்று விளம்பரம்பண்ணப்பட்டது. ஆகவே 2500 வருஷங்களாகத் தாவீதின் சிங்காசனம் வெறுமையாகவேயிருக்கிறது. நூற்றாண்டுகளாக யூதருக்கு ராஜாவுமில்லை, ராஜ்யமுமில்லை. அந்த ஜாதியார் பூலோகமெங்கும் சிதறடிக்கப்பட்டும் துன்பப்படுத்தப்பட்டும் முற்றிலும் அழிந்துபோகவில்லை. ஆச்சரியம்! இப்போது அவர்கள் தங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்புகிறார்கள். வாக்குத்தத்த தேசத்துக்குப் போகிறார்கள். அவர்கள் தள்ளிவிட்ட ராஜா மறுபடியும் வரப்போகிறார்.

(இன்னும் வரும்)



# நோவா தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தான்

ஆதி. 6: 9

கிறிஸ்து இயேசுவுக்குள் அவருடைய மெய் அடியாராக விரும்பும் யாவரும் நோவாவைப்போல கிறிஸ்துவுக்கும் தங்களுக்குமுள்ள உன்னத ஐக்யத்தை அனுபவிக்க அறியவில்லையென்றால் இன்னும் நாம் கிறிஸ்துவுக்குச் சற்று தூரமானவர்கள்தான். அறிவு என்றால் வேதவாக்கியத்தை வாசித்தறிந்துகொள்ளும் அறிவுமட்டும்போதாது. அந்த அறிவு கிறிஸ்துவுக்கும் நமக்கும் ஐக்யத்தை உண்டாக்கமாட்டாது. மற்றவர்கள் சொல்ல நாம் கேட்டுவைத்திருக்கும் அறிவும் தேவ இன்ப ஐக்கியத்தை நமக்குள் உண்டாக்கமாட்டாது. தன்தன் சொந்த அனுபவத்தில் நோவா, ஏனோக்கு தாவீது என்பவர்களைப்போல நிமிஷாநிமிஷம் தேவனுடன் உறவாடும்படி உண்டாகும் பழக்கமே உலகத்தையும் அதின் ஆசையிச்சைகளையும் மறக்கப்பண்ணி நம்மைக் கிறிஸ்துவுக்குள் பிரியாத ஐக்யத்தை உண்டாக்கிவிடுகிறது.

பாவமில்லாத காலத்தில் தேவன் ஆதாமோடு உலாவியதுபோல இந்தப் பக்தனாகிய நோவாவும் தமது மனக்கண் காணத்தக்கதாகத் தேவனோடு சஞ்சரித்துப்பேசிச் சகவாசம் செய்து ஒரு நிமிஷங்கூடத் தேவனைவிட்டுப் பிரியாதிருந்தார் என்று சொல்லலாம். இந்த மாதிரி கிறிஸ்துவோடு ஜீவிப்பதுதான் ஐக்ய ஜீவியம். நாம் தேவனுடன் ஐக்யமாகத்தான் கிறிஸ்து இயேசுவும் மனித அவதாரம் எடுத்து ஐக்யஜீவியத்துக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். நோவா என்னும் பக்தனைச் சற்று கூர்ந்து கவனிப்போமானால் அவர் தமது காலத்திலிருந்த எல்லாரையும்விட நீதிமானாயிருந்தார் உத்தமனாயிருந்தார் என்று வாசிக்கிறோம். எப்படியென்றால் 1. தன் சொந்தக் குடும்பத்திலும் நீதி, 2. வெளியிலும் நீதி, 3. அடிமைகளுக்கும் நீதி, 4. பொல்லாதவர்களுக்கும் நீதி, 5. நல்லவர்களுக்கும் நீதி, 6. சிநேகிதரிடத்திலும் நீதி, 7. தேவனிடத்திலும் நீதி காண்பித்தார் எனக்கண்டறியலாம். அன்பர்களே நம்மிடத்தில் இவ்வித நீதி காணப்படுகிறதா? காணப்படாவிட்டால் நாம் இன்னும் கிறிஸ்துவின் ஐக்யத்தை அனுபவிக்கவில்லை என்று சொல்லவேண்டும்.

நோவா தேவனோடே ஐக்யமாயிருந்தார் என்பதை ஆதி. 6: 5-8 வரை வாசித்துப் பார்த்தால் ஜனங்கள் பொல்லாதவர்களும் துன்மார்க்கரும் அசுத்த தருமநீதிக்கேடருமாய் நடந்துகொண்டிருக்கும்போது பரிசுத்த தேவாதிதேவன் இவனை ஒரு சிநேகிதனிடத்தில் பேசுவதுபோல தமது திருச்செயலையும் தாம் செய்யப்போகும் காரியங்களையும் வெளிப்படுத்துகிறார். என்ன ஆச்சரியமான காரியம்! எவ்வளவு ஐக்யம்! என்ன மேன்மை கவனிப்போமாக. நோவா நீதிமானாயிராவிட்டால் தேவன் அவரோடு எதா

திலும் பேசியிருப்பாரா? மேலும் உத்தமராயிருந்தார்: 1. சொந்தக் குடும்பத்தை நடத்துவதிலும், 2. அடிமைகளை நடத்துவதிலும் 3. அன்னியரை உபசரிப்பதிலும் 4. தேவனுக்குக் கீழ்ப்படிவதிலும் 5. தேவ உத்தரவை நிறைவேற்றுவதிலும் உத்தமராயிருந்தார். ஆகையால் தேவன் இவரிடத்தில் மகத்துவமான பெரிய ஊழியத்தை ஒப்புவிக்கிறார். 1. பேழையின் மூலமாய் இரட்சிப்பின் ஊழியம். 2. பேழைக்குள் சகலத்தையும் சேர்க்கும் ஊழியம். 3. ஆதரித்து நடத்தும் ஊழியம், மொத்தமாய்ச் சொன்னால் இரண்டாம் உலகத்தை விர்த்தியாக்கவேண்டிய சகலத்தையும் நடத்தும் ஊழியத்தையும் ஒப்புவித்தார். நோவா தேவனோடு ஐக்யமுள்ளவரானபடியால் மேற்காட்டிய ஊழியத்தைச் செய்ய சக்தியுடையவராகவுமிருந்தார். எப்படியென்றால் 1. பரியாசம் நிறைந்த பொல்லாதவர்கள் இருக்கிற பழைய உலகத்தில் பேழையை உண்டுபண்ணுவது லேசான வேலையா? 2. அதிலும் நீதியைப் பிரசங்கிப்பதினால் எப்படிப்பட்ட சற்குணராயிருக்கவேண்டும். 3. காட்டு ஜீவன்களையும் நாட்டு ஜீவன்களையும் கூட்டிச் சேர்ப்பதினால் எத்தனை பொறுமையும் உத்தமமுமிருக்கவேண்டும். 4. ஆதி. 6: 22-ல் சொல்லியபடி தேவன் தனக்குச் சொன்னபடியெல்லாம் செய்தார் என்பதில் எவ்வளவு பொறுப்பு, கீழ்ப்படிதல், அன்பு, விடாமுயற்சி, அடங்கியிருக்கிறது என்பதைச் சிந்திப்போமாக. அவரைப் போல் நடக்கப் பிரயாசப்படுவோமாக. தேவ ஐக்யத்தை அடையும்படி முயற்சிப்போமாக. இவ்விதமாய் நோவாவினிடத்தில் உத்தமமும் நீதியும் காணப்பட்டபடியால் தேவன் அவருக்குச் சிநேகிதன்போலாகி அவரிடத்தில் அன்புகூர்ந்து உன்னை இந்தச் சந்ததியில் நீதிமானாகக் கண்டேன் என்று அவரைப் புகழ்ந்து தாம் செய்யப்போகிற உலக அழிவைப்பற்றிய சகல காரியத்தையும் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். 1. மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது 2. அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது. 3. நான் அவர்களை பூமியோடேகூட அழித்துப்போடுவேன். 4. நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு. 5. உன் குடும்பத்தையும் பேழைக்குள் சேர்த்துக்கொள். 6. மாம்சமான சகல ஜீவஜெந்துக்களிலும் ஆணும் பெண்ணுமாகப் பேழையில் சேர்த்துவை. 7. அவைகளுக்கும் உனக்கும் ஆகாரத்துக்குவேண்டியவற்றைச் சவதரித்து வைத்துக்கொள் என்று உடலும் உயிருமான சிநேகமுறையான அன்போடு சொல்லுகிறார். மேலும் உன்னோடு என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்று தைரியமும் கூறுகிறார். ஆதி. 6: 18.

அன்பர்களே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்ட நாம் அனைவரும் நோவாவின் தேவ ஐக்யத்தையும் ஜீவியத்தின் மேலான பரமரகசியத்தையும் மனதில் வைத்துக்கொண்டு நம்மை நாமே சோதித்துப் பின்வரும் கேள்விகளைக் கேட்போமாக 1. நான் கிறிஸ்து பகவானுடன் ஐக்யப்பட்டு அவருடன்



சஞ்சரிக்கிறேனா? 2. கிறிஸ்து நேசர் தமது ஆலோசனைகளை எனக்கு வெளிப்படுத்திவருகிறாரா? 3. என்னைக்கொண்டு தமது ஊழியத்தை நடத்துகிறாரா? 4. கிறிஸ்தவாகிய பேழையினிடத்தில் நான் யாரையெல்லாம் சேர்த்திருக்கிறேன்? 5. நோவாவுக்கும் தேவனுக்கும் உடன்படிக்கை நடந்ததுபோல கிறிஸ்து ரட்சகர் என்னுடன் தமது உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறாரா? என்று இப்படி நம்மை உற்றாராயும்போது மேற்சொன்ன கேள்விகளுக்கு உத்தரவு சொல்லுகிறவர்களானால் நாம் இயேசுநாத சுவாமிக்கு தொண்டரும் மெய் அடியாரும் அன்பான சிநேகிதரும் அவருக்குள் சஞ்சரித்துவருகிற உத்தமர்தான் என்று நிச்சயிக்கலாம். இல்லையானால் நாம இன்னும் கிறிஸ்து பகவானுக்கும் அவருடைய திருச்செயலுக்கும் தூரமானவர்களும் அன்னியருமாயிருப்போம். ஏனென்றால் பேழையை உண்டுபண்ணின தச்சர் அதில் பிரவேசித்துக் காக்கப்பட்டார்களா? இல்லை அல்லவா? இது பயங்கரமான காரியமல்லவா?

ஆனால் பேழையைச் செய்த நோவா தேவ ஐக்யமுடையவரானபடியால் அவரும் அவர் குடும்பமும் பேழைக்குள் பிரவேசித்தார்கள். அதுபோல் கிறிஸ்துவும் நமக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்திருக்கிறார யோவா. 14: 2–3. அதில் பிரவேசிக்கவேண்டுமானால் கிறிஸ்துவுடன் நமக்கு ஐக்கியமும் பிதாவாகிய தேவனுக்குள் கிறிஸ்துவுடன் சகோதரருமானால் மோக்ஷ ஸ்தலத்தில் பிரவேசிப்போம். நோவாவினிடத்தில் நீதி, உத்தமம் என்னும் லட்சணங்கள் குடிகொண்டிருந்தமையால் (1) தேவாதி தேவனுக்குத் தொண்டரானார். (2) மேலான ஊழியத்தைப் பெற்றார் (3) தன் குடும்பத்தை ரட்சித்தார். (4) தன்னுடன் பேழைக்குள் சேர்த்துக்கொண்டவைகளையும் மீட்டுக்கொண்டார். அன்பர்களே நம்மிடத்தில் இவ்வித நீதியுண்டா? உத்தமம் காணப்படுகிறதா?

தற்காலம் கிறிஸ்துவின் ஐக்யத்தைப்பற்றிப் போதிக்கிறவர்கள் ஜீவியத்திலும் நடக்கையிலும், அனுபவத்திலும் ஒன்றையுங் காணோம். அன்பைப்பற்றிப் போதிக்கிற எத்தனையோ சகோதரர் அநேக வம்புகளைச் செய்வதைப் பார்க்கிறோமே. இது எவ்வளவு மோசமான நிலைமை. இரட்சிப்பின் ஊழியத்தை நடப்பிக்கிறோம் என்கிறவர்கள் கொஞ்சமேனும் இரட்சிப்பைப் பற்றிச் சொல்லாமலும் வீட்டைவிட்டு வெளியேறாமலும் இருப்பது எவ்வளவு துக்கமான காரியம். மேலும் தங்கள் குடும்பத்தைச் சகல தாறுமாறான காரியங்களில் நடக்கவிட்டுக் கவனியாதபடியிருக்கிற தேவ ஊழியரும் சபையாரும் கிறிஸ்துவுடன் ஐக்யமுடையவர்கள்தானா?

தேவவசனத்தைப் போதிக்கிற நாமே உத்தமராகாவிட்டால் மற்றவர்களை எப்படி உத்தமத்தில் நடத்தமுடியும்? நம்மிடம் கிறிஸ்துவின் ஐக்யமில்லை என்றால் மற்றவர்களுக்கு எப்படி கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லக்கூடும்? ஊமையர்போலவும், வாத்தியப்பெட்டிபோலவுமிருப்போமல்லவா?

மேலும் நோவாவைப்போல பேச்சிலும் நடக்கையிலும் உத்தமம் உண்டா? ஆதி. 6: 22. மனுஷரிடத்திலும் தேவனிடத்திலும் நீதி காணப்படுகிறதா? ஆதி. 7: 1. தேவனுக்குள் ஐக்ய நேசம் உண்டா? ஆதி. 6: 9. நோவா குடும்பத்தில் உத்தம பக்தன். எபி. 11: 7. மற்றவர்களுக்கு நீதியின் போதகன். 2 பேது. 5: 2. இவைகளைக் கவனிப்போமாக. சங்கீதக்காரனைப்போலப் பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு, பூலோகத்தில் உம்மைத் தவிர வேறே விருப்பமுமில்லை என்று நடந்தால் (சங். 73: 25.) தேவஐக்யத்தைப் பெற்றுக்கொள்ளலாம். தாவீதைப்போலக் கர்த்தரை எப்போதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் சங். 16: 8 என்பதுபோல நாம் எப்போதும் கிறிஸ்து இயேசுசுவாமியை நமக்கு முன்னும் உள்ளத்திலும் வைத்துக்கொண்டால் நோவாவைப்போல உத்தமர்களாக ஜீவியத்திலும் ஊழியத்திலும் காணப்படுவோமே. அப்போது எத்தனை பாக்கியம், எவ்வளவு மேன்மை.

ஆத்துமா அருமையானது நமது ஆத்துமா ஜீவனுள்ள தேவனுடைய ஜீவசுவாசத்திலிருந்து வந்தது. ஆகையால் அதில் கிறிஸ்துவின் சிந்தையைத் தவிர வேறொன்றும் வாசம்பண்ண இடங்கொடுப்பது நமக்குத் தகுதியல்ல. அதில் தேவ ஆவியானவர்மட்டும்தான் வசிக்கலாம். அதில் உலகம் வாசம்பண்ண நியாயமில்லை. ஏனென்றால் ஆத்துமா உலகத்திலிருந்து வந்ததல்ல. நம்முடைய சரீரமுங்கூட அந்த ஆத்துமா வசிக்கும் வீடு. ஆகையால் அதுவும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்று வேதம் சொல்லுகிறது. மேலும் நாம் நமது ஆத்துமாவைக் கெடுத்தால் நம்மைத் தேவன் கெடுத்துப்போடுவாராம். ஆகையால் நாம் எவ்வளவு பயத்தோடு தேவஐக்யத்தைத் தேடி நோவாவைப்போல் நடக்க ஆசிக்கவேண்டும் என்பதைச் சிந்திப்போமாக. மற்றவர்களின் பாரம்பரிய வழிபாடுகளினின்று சடங்காசாரங்களில் மாத்திரம் திருப்தியுடையவர்களாயிராமல் கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல் மரித்தோர்கள் உயிர்த்தெழுதல் நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல் பூரணராகும்படி நடந்துபோவோமாக. எபி. 6: 1-2. நோவாவும் பரிசுத்தவான்களும் இப்படித்தான் ஜீவித்தார்கள். நாமும் இப்படியே செய்வோமாக.

பரிசுத்த பவுலைப்போல இடைவிடாமல் போக்கிலும் வரத்திலும் நித்திரையிலும் விழிப்பிலும் வேலையிலும் சம்பாஷணையிலும் கிறிஸ்து இயேசுவையே முன்வைத்துப் பார்த்துக்கொண்டு அவர் செய்கை, அவர் வசனம், அவர் சிந்தை இவைகளை நம் ஞாபகமாயும் தியானமாயுமிருக்குமானால்



நமது இருதயத்தில் சட்டமாயும் அவர் வாசம்பண்ணுவார். அப்போது தேவ ஐக்கியம் நமக்கு வெளிப்படுத்தப்படும். நாம் விடும் மூச்சுங்கூட கிறிஸ்துவின் ஞாபகத்திலேயே போகவேண்டும். உள் வாங்கும் மூச்சும் அவர் மூச்சாகவே யிருக்கவேண்டும். அப்போது தியானமும் ஜெபமும் ஐக்யமும் தானே வந்துவிடும், தேவ ஆவியும் நம்மை இடைவிடாமல் நிரப்பித் தேற்றுவார், நம்மை தீமைக்கு விலக்கிக் காப்பார், எப்பக்கத்திலும் கிறிஸ்து நம்மோடிருப்பார், இணைபிரியா சிநேகமாய் நம்மை நேசிப்பார், ஊழியத்தை நடத்தும்படி ஆலோசனை தருவார், பெலன் கொடுப்பார். அப்போதுதான் நாமும் நோவாவைப்போல தேவனோடு சஞ்சரிக்கலாம். அவரைப்போல் பெரிய ஊழியம் செய்யலாம்.

நாற்பது நாள் பூமியின்மேல் மழை பெய்தாலும் நோவா பயப்படவில்லை. பூமியின் ஊற்றுக்கள் எல்லாம் திறவுண்டாலும் அஞ்சவில்லை. காரணமென்ன? தேவஐக்யமுடையவராய் அவருடைய ஆலோசனைப்படி நடந்ததினால் தான் என்று விளங்கும்.

## வேதாகமக் குறிப்பு

### ஐக்யம்

1. கிறிஸ்துவுடன் ஐக்யமாயிருப்பதற்கே தேவன் நம்மை அழைத்தார். 1 கொரி. 1: 9.

2. கர்த்தருடைய ராப்போஜனம் நம்மைக் கிறிஸ்துவுடன் ஐக்யப்படுத்துகிறது. 1 கொ. 10: 16.

3. தேவன் நம்மிடத்தில் வாசம்பண்ணி நம்முடன் ஐக்யமாயிருந்து நமது தேவனாயிருக்கிறார். 2 கொரி. 6: 16.

4. நம்மோடு ஐக்யமாயிருப்பதற்கே பரிசுத்த ஆவி தந்தருளப்பட்டிருக்கிறார். 2 கொரி. 13: 14.

5. தேவனுக்குள் மறைந்திருந்த ஐக்யம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. எபே. 3: 11.

6. நாம் கிறிஸ்துவுடன் ஐக்யமாவதற்கு உலகத்தை வெறுக்கவேண்டும். பிலி. 3: 10.

7. தேவன் ஒளியாயிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் சகோதரரோடும் கிறிஸ்து இயேசுவோடும் ஐக்யமாயிருப்போம். 1 யோ. 1: 7.

### கிறிஸ்துவில் நிலைத்திருத்தல்

1. என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத்திருக்கிறேன் யோவா. 6: 56.

2. நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். யோவா 8: 31.

3. என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன் யோவா. 15: 4.

4. நீங்கள் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள். யோ. 15: 4.

5. நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். யோவா 15: 10.

6. நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய். ரோ 11: 22.

7. நாம் மறுரூபப்படுத்தப்படுவோம் ஆகையால் கர்த்தருக்குள் நிலைத்திருங்கள். பிலி. 3: 21, 4: 1.

8. ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால் நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள். 1 யோவா. 2: 24.

9. அவர் வெளிப்படும்போது அவருக்கு முன்பாக வெட்கப்பட்டு போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள். 1 யோவா. 2: 28

10, அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவம் செய்கிறதில்லை. 1 யோ. 6: 6.

11. அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். 3: 24.

12. நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார். 1 யோவா. 4: 12.

13. இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான். 1யோ. 4: 15.

14. அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான் தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்

15. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன் 2 யோ. 9.

## 'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால்' யோ. 3. 3.

### மறுபடியும் பிறந்தவன் எதனால் அறியப்படுவான்?

மறுபடியும் பிறவாதவனுக்குப் பாவமன்னிப்புமில்லை. தேவகிருபையுமில்லை. மோட்சமுமில்லையென்றால் இந்தக் காரியத்தைப்பற்றி நாம் நிச்சயங்கொள்வது எவ்வளவோ முக்கியம். ஆனாலும் அநேகர் இதைக் குறித்துக்கவலைப்படாமல் 'நான் கிறிஸ்தவன், ஆகையால் மோசம் வராது' குணப்படுதலைப்பற்றி எனக்கு நன்றாய்த் தெரியாது. என்றாலும் மற்றக் கிறிஸ்தவர்கள் நடக்கிறதுபோல நானும் நடக்கிறேன். என் காரியம் சரியாய்த்தானிருக்கும் என்று மோசம் போகிறார்கள், முடியாது. தேவன் உங்கள் எல்லாரையும் இரண்டு வகுப்பாகப் பிரித்து அறிகிறார். மறுபடியும் பிறந்தவர்கள் மறுபடியும் பிறவாதவர்கள். மனிதனுடைய பார்வைக்கு நீங்கள் ஒன்றுபோலக் காணப்பட்டாலும் தேவனுடைய பார்வையில் அப்படியல்ல. திருஷ்டாந்தம் ஒரு வீட்டுக்குப் பக்கத்தில் இரண்டு வகையான மரங்கள் இருந்தன. ஒரு பையன் இந்த இரண்டு மரங்களையும் பார்த்தபோது ஒன்றுபோலத்தான் தெரிந்தது. வளர்ச்சியில் வித்தியாசமில்லை அளவில் வித்தியாசமில்லை. தோற்றத்தில் வித்தியாசமில்லை. இலைகள் ஒன்றுபோலிருந்தது. காய்கள் ஒன்றுபோலிருந்தது. காயின் நிறமும் ஒன்றுபோலிருந்தது. சிவப்புக்காய். ஆனாலும் இவ்விரண்டு மரத்திற்கும் பெரிய வித்தியாசம் இருந்தது. என்னவென்றால் ஒரு மரத்தின் காய் புசிப்புக்கேற்ற காய், நல்ல காய், சாப்பிடத்தக்க காய், மற்ற மரத்தின் காய் புசிக்கத்தகாத காய், கெட்ட காய், விஷக்காய், சாப்பிட்டால் மோசம். பார்த்தீர்களா? அந்த இரண்டு மரமும் ஒன்றுபோலக் காணப்பட்டாலும் அதின் தன்மை வேறே இதின் தன்மை வேறே. ஒரு மரம் நல்ல மரம், இன்னொரு மரம் கெட்ட மரம். ஒரு மரத்தின் காயைச் சாப்பிட்டால் மோசம். அடுத்த மரத்தின் காயைச் சாப்பிட்டால் சுகம். கிறிஸ்தவர்கள் காரியம் அப்படித்தான். இரண்டு புருஷர் ஒன்றுபோல் கோவிலில் வந்து உட்காருவார்கள். ஒருவன் குணப்பட்டவன், மறுபடியும் பிறந்தவன், தேவனுடைய பிள்ளை, நித்திய ஜீவனையுடையவன் மற்றவன் குணப்படாதவன், மறுபிறப்படையாதவன், பிசாசின் பிள்ளை, நித்திய ஜீவனைப் பெறாதவன். வித்தியாசம் இப்போது தெரியாவிட்டாலும் இயேசுநாதர் வரும்போது நன்றாய்த் தெரியவரும். (மல்கி. 3: 18). இப்போது ஆராய்ந்துபார்த்தால் தெரியும், அவர்களுடைய கனியினாலே அவர்களை அறிவீர்கள் (மத். 7: 16).



நீதியைச் செய்யாதவன் மறுபடியும் பிறந்தவனல்ல. 1 யோ. 2. 29. நீதியைச் செய்கிறவன் எவனும் அவரில் பிறந்தவன் என்று அறிந்திருக்கிறீர்கள். அப்போஸ்தலன் சொல்லுகிற நியாயத்தைக் கவனித்துப் பாருங்கள். பிள்ளை தகப்பன் ஜாடையாயிருக்கவேண்டும். மகன் தகப்பனுடைய சாயலாயிருக்கவேண்டும். 'அவர் நீதியுள்ளவராயிருக்கிறார் என்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால்' . . . . பரமபிதாவுடைய சாயல் என்ன? நீதி, பரிசுத்தம்—நீதியைச் செய்கிறவர். மகா பரிசுத்தமுள்ளவர்; பாவத்தைப் பகைக்கிறவர். தேவன் ஒளியாயிருக்கிறார் (1. 5). கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர் (சங். 145. 17). கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார் அவருடைய முகம் செம்மையானவனை நோக்

னியிருக்கிறது'. (சங். 11. 7). அவருடைய நினைவு எல்லாம் நீதி, வார்த்தை எல்லாம் நீதி, கிரியை எல்லாம் நீதி. மறுபடியும் பிறந்தவன் பரிசுத்தமுள்ளவனாய் நடப்பான்; நீதியைச் செய்வான், அவனில் தேவசாயல் விளங்கும். இல்லாவிட்டால் அவன் மறுபடியும் பிறந்தவனல்ல. எவ்வளவு தூரம் அவன் நீதியைச் செய்வான்? பரிசுத்தமாய் நடப்பான்? (2. 6, 3: 3, 7). யேசுரக்ஷகரைப்போலவே, பரிசுத்தமாய் நடக்கப் பெலனைத் தேடுவான். அப்படியானால் உன்னுடைய நிலைமை எப்படி? 'நான் தேவனுடைய பிள்ளை மறுபடியும் பிறந்தவன்' என்று நினைக்கிறாயாக்கும். யேசுவைப்போல நடக்கிறாயா? பரமபிதாவானவர் பூரண சற்குணராயிருக்கிறதுபோல நீ பூரண சற்குணனாயிருக்கிறாயா? பொய் சொல்லுகிறது நீதியா? அவஷணம் பேசுவது நீதியா? அந்தரங்கத்தில் அசுத்த பாவங்களைச் செய்வது நீதியா? குடிக்கிறதும் பொய்ச்சாட்சி சொல்லுகிறதும் நீதியா? நீதியைச் செய்கிறவன் மாத்திரம் தேவனில் பிறந்தவன் என்று அறிந்திருக்கிறோம். தேவனே, நீர் எங்களை ஆராய்ந்துபாரும். எங்களில் எத்தனைபேர் மறுபடியும் பிறந்திருக்கிறோம்? நீரே பார்த்து அறியும். எங்கள் மோசமான நிலைமையை எங்களுக்கு உணர்த்திக்காட்டும். வேதத்தில் ஒரு சரித்திரத்தைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இரவில் ஒரு பெண்பிள்ளை நித்திரை செய்துகொண்டிருக்கையில் அவள் பக்கத்தில் தூங்கிக்கிடந்த மற்றவள் குழந்தையை எடுத்து அதற்கு பதிலாகச் செத்துப்போன தன் குழந்தையை வைத்துவிட்டுப் போனாள். காலையில் அந்தத் தாயானவள் நித்திரை தெளிந்து தான் பெற்ற பிள்ளைக்குப் பால் கொடுக்க எழுந்திருக்கும்போது, ஐயோ! பக்கத்தில் பிள்ளை செத்துக்கிடந்தது. அதை உற்றுப்பார்க்கும்போது தான் பெற்ற பிள்ளையல்ல என்று கண்டாள் அவள் மனசுக்கு எவ்வளவோ வருத்தம் இருக்கும். ஆ! பாருங்கள். நம்மைத் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லி இந்த ஆலயத்தில் வந்திருக்கிறோம். தேவன் பார்க்கும்போது செத்துக்கிடக்கிற பிள்ளைகள் எத்தனை! ஞான உயிர் இல்லாதவர்கள் எத்தனை? பொய் சொல்லுகிறவர்கள் எத்தனை? பார்க்கிறார். இவன் நான் பெற்ற பிள்ளையல்ல என்று நிச்சயமாய்ச் சொல்லுகிறார். மோசம் போகாதிருங்கள். செத்த பிள்ளைகள் தேவனுக்கு உதவாது. பரிசுத்தமில்லாத பிள்ளைகளை ஒப்புக்கொள்ளவேமாட்டார்.

(இன்னும் வரும்)

T. W.

162002

Printed at The Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.